THAIVEEDU MARCH 2024 மார்ச் www.thaiveedu.com

# தாய்வீடு



## உறைய முடியாக் காலம் சேரனின் 50 ஆண்டுகாலக் கவிதை வெளி

– கருணாகரன்

## யாழ்ப்பாணத்தில் தாய்வீடு கலந்துரையாடலும் விமர்சனமும்

## காலந்தோறும் தமிழிலக்கியம் கட்டமைக்கும் பெண்ணின் பிம்பங்கள்

– மைதிலி தயாநிதி

## செங்கடலில் ஹூத்தியினரின் தாக்குதல்கள் : பின்னணியும் விளைவுகளும்

– ரூபன் சிவராஜா

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா,
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## பொன்விழாக்காணும் பெண்கள் நாள்

2024-ஆம் ஆண்டு கொண்டாடப்படும் அனைத்துலகப் பெண்கள் நாள், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மார்ச் 8-ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக முதன்முதலில் அறிவித்ததிலிருந்தான ஐம்பதாவது நிகழ்வாகும். 1975-இல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அறிவிப்பதற்கு முன்னரே உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆண்டுதோறும் மார்ச் 8, பெண்கள் நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் ஐக்கிய நாடுகளின் அங்கீகாரமே புதுவலுவூட்டி, உலகெங்கும் பரவச்செய்து, பிரபலமாக்கி, அந்நாளை உலக நாடுகளின் நாட்காட்டியில் ஒரு முக்கியமான நாளாக்கியது.

ஒவ்வோர் ஆண்டும் அனைத்துலகப் பெண்கள் நாளுக்கென ஒவ்வொரு கருப்பொருளை அறிவித்து வந்துள்ள ஐக்கிய நாடுகள், 2024-இன் கருப்பொருளாக 'உள்வாங்கலை அகத்தூண்டு' எனும் தலைப்பை அறிவித்திருக்கிறது. பெண்களின் பங்களிப்புகளையும் பலங்களையும் அறிந்துகொள் ளவும் அவற்றின் பெறுமதியை உணர்ந்துகொள்ளவும் அனைவரும் விழையும்போது சிறப்பானதோர் உலகை உருவாக்க முடியும் என்றும், தாம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலே பெண்களே அகத்தூண்டல் அடையும்போது அவர்களின் உணர்வுகளில் உரிமைப்பாடும், பொருத் தப்பாடும் வலுப்படுத்தலும் மிகும் என்றும் இவ்வாண்டின் கருப்பொருளுக்கான விளக்கம் வழங்கப் பட்டுள்ளது. 'உள்வாங்கலை அகத்தூண்டு' என்ற கருப்பொருளையொட்டிய செயற்பாடுகள், பெண் களையும் உள்வாங்கியதோர் உலகை உருவாக்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாண்டின் கருப்பொருளானது, 'பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை அற்றிடும் காணீர்' என்ற பாரதியின் வரிகளை நினைவூட்டுவதாய் உள்ளது. கணினியையே கண்டறியாத காலத்தில் வாழ்ந்து, இற்றைக்கு நூறாண்டுகளுக்கும் முன்னர் இறந்துபோன ஒரு தமிழ்க் கவிஞனின் 'மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்' என்ற குற்றச்சாட்டு இன்றைய செயற்கை அறிதிறன் யுகத்திலும் உண்மையாய் இருப்பதென்பது மனித குலத்தையே வெட்கமடை யச்செய்வது.

இன்றும் பாலியல் துன்புறுத்தலென்பது பெண்கள் எதிர்கொள்ளும் அன்றாட நிதர்சனமாய் உள்ளது. இந்த வன்முறைக்குள்ளாவதற்கு ஒருவர் உலகின் எந்த மூலையில் வாழ்கிறார் என்பது முக்கிய மில்லை. அவர் பெண்ணாய் இருப்பதொன்றே போதுமானது. பரந்த பசுபிக் சமுத்திரத்திலுள்ள ஒரு சிறுதீவான பப்புவா நியூ கினி நாட்டின் தலைநகரான மோர்ஸ்பித்துறை நகரில் வாழும் இளம் பெண்களுள் 90 விழுக்காட்டினரும், மேற்கு ஐரோப்பாவின் முக்கிய தலைநகர்களுள் ஒன்றான நவ நாகரிக இலண்டன் மாநகரில் வாழும் இளம் பெண்களுள் 43 விழுக்காட்டினரும் பொது இடங் களிலே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானதாகத் தெரிவித்ததாக ஐக்கிய நாடுகள் ஆய்வொன்று கூறுகிறது. லெபனானின் அகதி முகாங்களில் வாழும் சிரியப் பெண்களுக்கெதிராகச் சொல்லொணா வகையிலான பாலியல் துன்புறுத்தல்கள் கட்டவிழ்த்து விடப்படுவதாக அதே ஆய்வு கூறுகிறது. ஈழத்தில் போரின் இறுதிக்கட்டத்திலும், அதற்குப் பின்னரும் தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கிய வன் முறைகள் பற்றி நன்கறிந்த எமக்கு இது அதிர்ச்சி தரும் தகவலாக இல்லை.

நாகரிகமடைந்த சமூகங்களிலே பெண்களுக்கெதிரான வன்முறையென்பது இன்று பொதுவெ ளியிலே கண்டனத்துக்குரியதொரு விடயமாக உருவாகியிருக்கிறது. எனினும், கனடா என்ற வளர்ச் சியடைந்த நாட்டிலே வாழும் பெண்களுள் மூன்றில் ஒரு பங்கினர் தமது வாழ்வில் ஏதோவொரு வகையில் வன்முறையை எதிர்கொள்வார்கள் என்ற புள்ளிவிபரம், இந்த வன்முறைகள் திரைம றைவில் தொடர்வதையே சுட்டுகின்றது. கனடாவிலே இடம்பெறும் பெண்களுக்கெதிரான வன்முறை களிலே பத்து விழுக்காடானவை மட்டுமே காவற்றுறைக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன என்ற தக வலையும் இதனோடு சேர்த்துக்கொள்ளும்போது பெண்களுக்கெதிரான வன்முறை என்பது எவ்வளவு தூரம் எமது சமூகத்திலே புரையோடியுள்ளது என்பதை நாம் உணரலாம்.

கடந்துபோன கோவிட் பெருந்தொற்றுக்கூட பெண்களையே அதிகம் பாதித்தது. அதற்கு முக்கிய காரணங்களாக இரண்டு விடயங்களைக் கூறலாம். முதலாவது, வறுமைநிலை அதிகரிக்க அதிக ரிக்கப் பெருந்தொற்றால் பாதிக்கப்படும் சாத்தியப்பாடும் அதிகரிக்கிறது. உலகளாவிய அளவிலே, ஆண்களைவிடப் பெண்களே அதிகம் வறுமையை எதிர்கொள்கிறார்கள். இரண்டாவது, உலக ளாவிய வகையில் உளநலப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுள் 70 விழுக்காட்டுக்கும் அதிகமானவர்கள் பெண்கள்.

இந்தப் பின்னணியிலே, இந்த ஐம்பதாவது அனைத்துலகப் பெண்கள் நாளானது கடந்துபோன காலங்களில் பெற்றுவிட்ட அடைவுகளைக் கொண்டாடுவதாக மட்டுமே இருந்துவிடமுடியாது. அடைந்தவற்றைவிட அடையவேண்டியவை அதிகம் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கவேண்டும்.

## தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


பொன்விழாக்காணும் பெண்கள் நாள் 3

புட்டினிசமும் அலெக்சீ நவால்னியின்
கொலையும் 5
- ரதன்

செங்கடலில் ஹூத்தியினரின் தாக்குதல்கள்:
பின்னணியும் விளைவுகளும் 11
- ரூபன் சிவராஜா

சாந்தன்:
மிகப்பெரிய ஜனநாயகத்தின் குருதி வெறி 16
- கந்தசாமி கங்காதரன்

மதவாதத்தை நோக்கி
இந்தியா பயணிக்கிறதா? 18
- நெல்லை ஜெயசிங்

மார்ச் 08
சர்வதேசப் பெண்கள் நாள் 22
- சி. நற்குணலிங்கம்

காலந்தோறும் தமிழிலக்கியம்
கட்டமைக்கும் பெண்ணின் பிம்பங்கள் 24
- மைதிலி தயாநிதி

மலையகத்தின் புதுக்கவிதை முன்னோடி:
சிவபாக்கியம் குமாரவேல் 29
- மீனாள் நித்தியானந்தன்

ஈழத்து முதன்மைப்
பெண் நாவலாசிரியை ந. பாலேஸ்வரி 33
- வே. விவேகானந்தன்

வகுப்பறை முகாமைத்துவத்தில்
ஆசிரிய மனோநிலை 35
- அகமட் பிஸ்தாமி

முன்பள்ளி வகுப்புகளும்
பெற்றோரின் தயக்கமும் 38
- த. சிவபாலு

அங்காதிபாதம் 400
கன்ம நிவர்த்தி 40
- பால. சிவகடாட்சம்

வலியை அளவிட வழியுண்டா? 42
- சுப்ரமணியம் ஜெயசீலன்

பயணக் காப்புறுதி: சில தகவல்கள் 46
- செந்தூரன் புனிதவேல்

வீட்டில் ஈரப்பதன் பேணல் 48
- வேலா சுப்ரமணியம்

தொழும் கரங்கள் 50
- குமார் புனிதவேல்

நீண்டகாலத் தலைமைப்பதவி:
தனிமனித ஆதிக்கமும் அதிகார மீறலும் 52
- ரூபன் சிவராஜா

விழா நிகழ்த்தும் கலை 54
- வேதநாயகம் தபேந்திரன்

அமெரிக்க ஆபிரிக்கர்களின் வரலாறு 56
- குரு அரவிந்தன்

தமிழக அரசியலில் நடிகர்கள் 59
- ஓவியர் ஜீவா

யோம் கிபூர் போரில் கோல்டா மேயர் 62
- ரதன்

எட்டியந்தொட்டை எம். கருணாகரனின்
‘அவமானப்பட்டவனின் இரவு’ 66
- மல்லியப்புசந்தி திலகர்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த
‘அன்புள்ள ஆரியசிங்க...’ 69
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

உறைய முடியாக் காலம்
சேரனின் 50 ஆண்டுகால கவிதை வெளி 72
- கருணாகரன்

மரணம் எனும் விடுதலை
ஷேக்ஸ்பியரின் கவிதை அனுபவம் 83
- ஜிஃப்ரி ஹாசன்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்களின்
மெய்யியல்: ஓர் அறிமுகம்: 85
- கந்தையா சண்முகலிங்கம்

காலனித்துவச் சமூக வரலாற்று ஆவணப்பதிவு:
தமிழ்நதியின் ‘தங்க மயில்வாகனம்’ 89
- சின்னராஜா விமலன்

எம்.எஸ். கல்யாணசுந்தரத்தின்
‘பொன்மணல்’ 96
- சு. வேணுகோபால்

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய – வெளியீட்டாளருக்கான
கைந்நூல் 99
- என். செல்வராஜா

ஹோண்டுராஸ் கானகத்தை அழிக்கும்
நார்கோஸ் கோக்கைன் 102
- சதீஸ் செல்வராஜா

நங்கை சானி 107
- த. ஜீவராஜ்

குருந்தனூர் தொல்லியல் தடயங்கள் பற்றிய
வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துகள் 110
- நெடுங்கேணி சானுஜன்

தஞ்சைப் பெருங்கோவிலுக்குக்
காணிக்கை கொடுத்த
கொட்டியாரப்பற்று 113
- வி. துலாஞ்சனன்

யாழ்ப்பாணத்தில் தாய்வீடு
கலந்துரையாடலும் விமர்சனமும் – 2024 116

சிங்களப் பண்பாட்டில்
சிறுதெய்வ வழிபாட்டு மரபு பற்றிய
சில குறிப்புகள் 120
- என். சரவணன்

ஜாதி 128
- குகன் சங்கரப்பிள்ளை

லெனினின் நூற்றாண்டை நோக்கி
லெனினும் நூலகங்களும் 132
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தருமமிகு சென்னையில் குருவும் சீடரும் 142
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 146
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் 149
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

வாழ்வுரிமை 156
- மா. சித்திவினாயகம்

இடம் 160
- உஷாதீபன்

அரசன் 163
அ. கந்தசாமி

வெளியேறுதல் 168
- எம்.ஜி. வசஞ்ஜி
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



# புட்டினிசமும் அலெக்சீ நவால்னியின் கொலையும்

- ரதன்

புட்டின், கிரெம்ளின் ஐந்து சிகரிகள், அதாவது கோபுரங்கள் (Kremiln Five Towers) அமைத்து அரசாட்சி செய்கின்றார். முதலாவது சிகரி தனியார் இராணுவம் (The Private Military Tower). இந்த சிகரியின் கீழ் தனியார் இராணுவ நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. ஒரு கம்யூனிச நாடு இராணுவத்தை தனியார் நிறுவனமயமாக்கியது ஆச்சரியமான விடயம். வாக்னர் அமைப்பு, Gazprom, Transneft ஆகிய நிறுவனங்கள் தனியார் இராணுவ சேவையில் செயற்பட்டன. உக்ரேன் போரின் போது பிறிகோசன் கைதிகளை போரிடச் செய்தார். அவர் புட்டினின் கொன்கோட் நிறுவனத்தை மேற்பார்வை செய்துவந்திருந்தார். இந்நிறுவனம் வீழ்ச்சியில் சென்றமை குறிப்பிடத்தக்கது.



இரண்டாவது சிகரி - இராணுவம். இந்தச் சிகரி, உக்ரேன் போரில் இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதுடன் இராணுவ ஆயுத ஏற்றுமதியையும் செய்கின்றது. ஆயுத ஏற்றுமதியில் மட்டும் 10 பில்லியன் டொலர்களை ரஷ்யா வருமானமாக பெற்றுள்ளது. இவற்றை விட புதிய ஆயுத கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் செய்கின்றது. குறிப்பாக T50 Stealth Jet Fiter போன்றவற்றின் உற்பத்தியையும் மேற்கொள்கின்றது.

மூன்றாவது சிகரி - கடுந் தீவிர தேசியம் (Ultra – Nationalist Tower). இச் சிகரியின் முக்கியமானவர்களில் ஒருவர் Konstantin Malofeev. இவர் ஒரு மரபுவழிச் சிந்தனைவாதி. உக்ரேன் போருக்கான பிரதான காரணகர்த்தா. ரஷ்யாவின் தொலைத் தொடர்புத் துறையின் மிக முக்கியமானவர்களுள் ஒருவர். கிழக்கு உக்ரேனில் Patriot தனியார் இராணுவத்தை செயற்படுத்துகின்றார். இச் சிகரியில் பழைய சோவியத் யூனியனை மீளக் கட்டியமைக்க வேண்டும் என்ற நோக்குடன் இயங்கும் Valdimir Yevtushenkov உள்ளார். இவர்களே புட்டினின் பல கொள்கைகளை தீர்மானிக்கின்றார்கள்.

நான்காவது சிகரி - பாதுகாப்பு படைகள். இச் சிகரியின் கீழ் பல ஊடக நிறுவனங்கள் உள்ளன. போரைப் பற்றிய பல விடயங்களை இவ்வூடகங்களே வெளிப்படுத்துகின்றன. இவற்றை விட Rosneft அரச எண்ணெய் நிறுவனமும் உள்ளது. இயற்கை வாயு மற்றும் வளங்களையும் இச் சிகரியே கட்டுப்படுத்துகின்றது.

ஐந்தாவது சிகரி The Cooperative Lake Tower. இது நேரடியாகவே புட்டினின் கீழ் உள்ளது. மிகவும் முக்கியமான சிகரி. தனியார் நிறுவனங்கள், பிராந்தியக் கட்சிகள் அமைப்புக்கள் இதன்கீழ் உள்ளன.

புட்டின் ரஷ்யாவை இந்த ஐந்து சிகரிகளினூடாகவே ஆட்சி செய்கின்றார். சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த பின்னர் இன்று வரை ரஷ்யாவை முன்னாள் சோவியத் யூனியன் அரசியல்வாதிகளே ஆட்சி செய்து வருகின்றார்கள். இவர்களிடம் பழைய சோவியத் தேசிய உணர்வு உள்ளது. மேலே குறிப்பிட்ட கடுந் தீவிர தேசியமே இன்றைய ரஷ்யாவாகவுள்ளது. சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த போது, மேற்கு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டன. சோவியத் யூனியன் மற்றும் அதன் ஆதரவு கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக தொடங்கப்பட்ட நேட்டோ அமைப்பு கலைக்கப்படவில்லை. நேட்டோ தனது புதிய எதிரியாக ரஷ்யாவை உருவாக்கிக் கொண்டது. ரஷ்யா தனது எதிரியாக நேட்டோவை கருதாமல் இருந்தபோதும், அமெரிக்கா நேட்-



Vladivostok, Russia - September 9, 2018: A political action against raising the retirement age organized by Alexei Navalny.

டோவை ரஷ்யாவிற்கு எதிராக தொடர்ந்தது. Munich Security Conference-இல் 2007-ம் ஆண்டு புட்டின் மேற்கை நோக்கி கேள்வி கேட்டிருந்தார்.

'நேட்டோ யாருக்கு எதிராக இயங்குகின்றது? யுரேசியா நாடுகளை ஏன் நேட்டோ இணைக்கின்றது? Warsaw pact உடைக்கப்பட்ட போது நீங்கள் வழங்கிய வாக்குறுதி எங்கே?' என, புட்டின் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமெரிக்கா 'சோவியத் யூனியனுக்கே வாக்குறுதியளித்தோம். ரஷ்யாவிற்கல்ல.' என்றது. இங்கிருந்தே புட்டினிசம் ஆரம்பமாகின்றது. புட்டினின் வளர்ச்சிக்கு மேற்கு நாடுகளே பிரதான காரணம். புட்டினின் நிர்வாகத் திறமையும் முன்னாள் சோவியத் யூனியன் உளவு நிறுவனத் தலைமையில் ஏற்பட்ட அனுபவங்களும் இவரை ஒரு சிறந்த நிர்வாகியாக மாற்றியுள்ளது.

உக்ரேன் போரையொட்டி பல பிரசாரப் பாடல்கள் ரஷ்ய யூரியூப் தளத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. பல பாடல்கள் பல மில்லியன் மக்களைச் சென்றடைந்துள்ளன. ரஷ்ய மக்களிடம் இயல்பாகவேயுள்ள தேசிய உணர்வு, அமெரிக்க எதிர்ப்பு உணர்வு போன்றவை மேலும் தேசிய எண்ண அலையை எழுச்சியடையச் செய்கின்றது. Let's Stand up for the dead Russian Heroes, I am Russian ஆகிய பாடல்கள் 50 மில்லியன் பார்வையாளர்களைச் சென்றடைந்துள்ளன. குறிப்பாக ஒரு பாடலின் வரிகள் இவை:

***I am Russian, I go till the end***
***I am Russian, my blood is from my father***
***I am Russian and I am lucky to be so,***
***I'm Russian, in spite of the whole world I'm Russian***

புட்டின் ஒவ்வொரு நிர்வாக அமைப்பிலும் கவனம் செலுத்துகின்றார். அதனால்தான் மக்களை போர்மயப்படுத்த அவரால் முடிகின்றது. புட்டினுக்கு ரஷ்யாவில் எதிர்ப்புக்கள் தோன்றினாலும் ரஷ்ய மக்கள் உக்ரேன் போரை தங்களது தேசியப் போராக கருதுகின்றார்கள். உக்ரேன் தங்களது நாட்டின் ஓர் அங்கம் என ரஷ்ய மக்களை புட்டினும் தீவிர தேசியவாதிகளும் கருதவைத்துவிட்டார்கள். மக்களை தீவிர தேசியவாத மயப்படுத்தியமையே புட்டினிசத்தின் வெற்றியாகும். ஆனாலும் போரில் இராணுவ வீரர்கள் இறக்கும் பொழுது, மக்கள் மத்தியில் சலசலப்புக்களும் எதிர்ப்புக்களும் தோன்றாமல் இல்லை. இதனால்தான் அமெரிக்கா வெளிநாடுகளில் அமெரிக்க வீரர்கள் இறந்தால் அவர்களது உடல்கள் விமானம் மூலம் அமெரிக்காவிற்கு வரும் பொழுது அவற்றை ஊடகங்கள் ஒளிபரப்புவதை தவிர்க்கச் சொல்கின்றார்கள்.

புட்டினின் ஆட்சி செசினிய யுத்தத்துடன் ஆரம்பமாகின்றது. (1999-2009 செசினிய யூத்தம்). அந்த யுத்தத்தின் வெற்றி ரஷ்யாவை உலகரங்கில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது. புட்டின் ரஷ்யாவை இயற்கை சக்தி வளம் கூடிய நாடாக மாற்றினார். இயற்கை வாயு உற்பத்தி, எண்ணெய் கிணறுகள் என ரஷ்யா மாற்றங்கண்டது. இத்துடன் புட்டின் நின்று விடவில்லை. அருகில் உள்ள ஜோர்ஜியாவை 2008-ம் ஆண்டில் ரஷ்ய படைகள் ஆக்கிரமித்தன. Abkhazia, South Ossetia ஆகிய பிரதேசங்களை தனிப் பிரதேசங்களாக (நாடாக) ரஷ்யா அறிவித்தது. இதனை ஜோர்ஜியா ஏற்றுக்கொள்ளவில்லை. ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் இவ்விரு பிரதேசங்களும் உள்ளன. இந்த ஆக்கிரமிப்பினூடாக புட்டின் தனது சக்தியை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

2014-ம் ஆண்டில் கிறீமியாவை ரஷ்யா கைப்பற்றியது. 2015-ஆம் ஆண்டில் ரஷ்யா சிரியாவின் அரசுக்கு ஆதரவாக சிரியாவில் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டது. சிரியப் போரில் அமெரிக்கா பின்வாங்கியமைக்கு ரஷ்யாவே பிரதான காரணம். இது புட்டினின் மற்றொரு வெற்றி. 2018-ம் ஆண்டில் புட்டினும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ரம்பும் மிக நெருக்கமானார்கள். டொனால்ட் ரம்ப் புட்டினை 'extremely strong and powerful in his denial' எனப் பாராட்டினார். 2022 பெப்பிரவரியில் புட்டின் (ரஷ்யா) உக்ரேன் மீது தாக்குதலை மேற்கொண்டார். ரஷ்யா இரண்டு வருடப் போரில் உக்ரேனின் பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. தொடர்ந்து கொண்டிருக்கும் போர் உக்ரேனுக்கு மிகப் பெரிய இழப்புக்களைக் கொடுத்துள்ளது. உக்ரேனின் பொருளாதாரம் வரலாறு காணாத வீழ்ச்சியை அடைந்துள்ளது. நேட்டோ

வும் அமெரிக்காவும் உக்ரேனுக்கு இராணுவ உதவிகளைச் செய்தும், உக்ரேனால் குறிப்பிட்டளவிற்கு வெற்றியை பெற முடியவில்லை.

புட்டின் சீனாவுடன் கைகோர்த்துள்ளார். BRICKS அமைப்பின் முக்கிய நாடாக ரஷ்யா உள்ளது. இவ் அமைப்பு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக்கு மாற்றீடாகவுள்ளது. எனினும், இதன் ஆரம்பக் கட்டம் இது எனலாம். இந்தியா விற்கு எண்ணெயை குறைந்த விலையில் கொடுக்கின்றது. அதே போல் பல நாடுகளுடன் வணிக உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அமெரிக்க டொலரை தவிர்த்து சர்வ தேச வணிகத்தை புட்டின் செய்கின்றார். ரஷ்யாவின் பொரு ளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது. அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தும் ரஷ்யா வளர்ச்சியடைவது புட்டினின் வெற்றியாகும்.

சர்வதேச அரங்கில் அரசியல்-இராணுவம்-பொருளாதாரம் போன்ற முக்கிய விடயங்களில் புட்டின் மிக முக்கியமானவ ராக உள்ளார். புட்டின் கடந்த 24 வருடங்களாக ரஷ்யாவின் தலைவராகவுள்ளார். இவருக்கு எதிராக போட்டியிட எதிரி யில்லை. தனிக்காட்டு இராசாவாக வலம் வருகின்றார். ரஷ்யா பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்திருந்தாலும் அமெரிக்கா வைப் போன்று வறுமையான மக்களும் நிரம்பிக் காணப்படு கின்றனர். செல்வந்தருக்கும் சாதாரண மக்களுக்குமிடையி லான இடைவெளி மிக அதிகமாகவேயுள்ளது. புட்டினின் பொருளாதார முறையான பழைய சோவியத் யூனியனைப் போல் சமத்துவப் பொருளதாரம் அல்ல. முதலாளித்துவம் மற் றும் அரச உடைமையாக்கப்பட்ட பொது நிறுவனங்கள், நவ-தாராளம் தாராளமயம் என ஒரு கலவையான பொருளாதா ரமே அங்குள்ளது.

நவம்பர் 2023-ல் ஒக்ரோபர் புரட்சியின் நினைவாக மக்கள் திரண்டபோது போரில் இறந்த இராணுவ வீரர்களின் துணை விகள் 'Bring back our husbands.' எனக் கோசமிட்டனர். இங்கு கலந்து கொண்ட Muscovites, 'Some go to the front to defend the Motherland, while others continue to shamelessly trade in the riches of our land and reap huge profits' எனக் கூறினர். பல கார்களின் 'Bring back my husband. I'm fucking tired' சுலோகங்கள் ஒட்டப்பட்டுள்ளன. ஆர்ப்பாட் டக்காரர்களின் சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. போருக்கு எதிரான அமைப்புக்கள் ரஷ்யாவில் பலம் பெற் றுள்ளன. 'Committee of Mothers and Wives' என்ற அமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் போரில் பங்காற்றும் இரா ணுவ வீரர்களுக்காக குரல் கொடுக்கின்றது. லெனின் கூறிய (இவரை அங்கு தாத்தா லெனின் எனவும் விளிக்கின்றார்கள் 'As Grandpa Lenin') ஒரு கூற்று முக்கியமானது. 'every cook must learn to govern the state'. புட்டின் இதனை ஏற்கத் தயா ராகவில்லை. புட்டினைப் பொறுத்தவரை புட்டினுக்கும் ரஷ்யா விற்கும் அடிபணிபவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அவர்க ளுக்கு சலுகைகள் வழங்கப்படும்.

கடந்த 24 வருடங்களில் ரஷ்யா பல போர்களைக் கண்டுள் ளது. தொடர்ந்து போரிடுகின்றது. இதனைத் தான் மேற்கு நாடுகளும் செய்கின்றன. ரஷ்யா ஒன்றும் மேற்குலகுக்கு விதி விலக்காக அமையவில்லை. புட்டின் தனது அபிலாசைகளை செயல்படுத்துவதற்கு தனது எதிரிகளை களைபிடுங்குகின் றார். இதனையே அமெரிக்கா லத்தீன் அமெரிக்காவிலும் மத் திய கிழக்கிலும் செய்ததது. செய்து வருகின்றது. மத்திய கிழக்கெங்கும் அமெரிக்க படைகள் உள்ளன. வணிகம் செய் வதற்கு படைகள் ஏன்? கட்டாயப்படுத்தி வளங்களை சுரண்டு வதற்கு படைகள் தேவை. புட்டினால் பிடுங்கப்பட்ட ஒரு க ளையே அலெக்சீ நவால்னி. இவர் இறுதியாக ஒதுக்குப்புற மான நகரில் உள்ள சிறை ஒன்றில் இறந்திருந்தாலும் அவ ருக்கு ஏற்கனவே நஞ்சூட்டப்பட்டுள்ளது. எனவே, அது கொலை. வல்லரசுகள் கொலையின்றி வாழமாட்டா.

அலெக்சீ நவால்னி (Alexei Navalny) ஆறு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிட விரும்பினார். ஆனாலும் இவரால் போட்டியிட முடிய வில்லை. ரஷ்யாவின் பொருளாதாரக் கொள்கைகளை மற் றும் அரசியல் தீர்மானங்களை மாற்றுவதற்கு முயன்றார். மிக வும் இளம் வயதில் அரசியல் களத்தில் குதித்த இவர் ரஷ்யா-வில் மலிந்து காணப்பட்ட ஊழல்களை எதிர்த்தார். செல்வம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற சமத்துவக் கொள்கையை தனது கொள்கையாகக் கொண்டிருந்தார். ரஷ்ய மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகள் வழங்கப்பட வேண்டும் என விரும்பினார்.

'Russia will be free', 'Russia will be happy' ஆகிய சுலோகங் களை முன்வைத்து ஓர் அரசியல் இயக்கத்தை அலெக்சீ நவால்னி ஆரம்பித்திருந்தார். இவருக்கும் புட்டினுக்குமான முரண்நிலை கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாகவே ஆரம்பமாகி இருந்தது. உக்ரேன் ஆக்கிரமிப்பை எதிர்த்தார். ஒரு வகையில் இவர் டொனால்ட் ரம்ப்பையும் விமர்சித்திருந் தார். ஓகஸ்ட் 2020-ல் விமானத்தில் பயணமானபோது அலெக்சீ நவால்னிக்கு நஞ்சூட்டப்பட்டது. பின்னர், விமானம் அவசரமாக தரையிறங்கி, இவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டார். இந்த விமானத் தில ரஷ்ய உளவாளிகள் இருந்தாக உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. ஒஸ்காரின் சிறந்த விவரணத்திரைப்பட விருதைப் பெற்ற 'Navalny'-ல் இச்சம்பவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன. நவால்னி யூரியுப்பில் இச் சம்பவங்களை பதிவு செய் துள்ளார். டிசம்பர் 2020-ல் இப் பதிவு யூரியுப்பில் வெளியாகி னது. இந்த வீடியோவில் புட்டினின் ஆடம்பர வாழ்க்கையை வெளிப்படுத்தியுள்ளார். இதனை சுமார் 25 வீதமான ரஷ்யர் கள் பார்த்தாக கூறுகின்றனர்.

(Navalny's video told the story of a hideous $1.3 billion Black Sea villa containing every luxury that a dictator could imagine: a hookah bar, a hockey rink, a helipad, a vineyard, an oyster farm, a church. The video also described the eye-watering costs and the financial trickery that had gone into the construction of the palace on behalf of its true owner, Vladimir Putin.) -

சைபீரியாவிலிருந்து ரஷ்யாவிற்கு சென்று கொண்டிருந்த விமானத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றது. பின்னர் இவரை சிகிச்சைக்காக ஜேர்மனிக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டது. ஜேர்மனியில் வைத்தியர்கள் novichok என்ற நஞ்சே இவருக்கு கொடுக்கப்பட்டதாக தெரிவித்தனர். இவர் மீண்டும் ரஷ்யாவிற்கு வராமல் வேறு சில நாடுகளுக்கு சென்றதாக



குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார். இவர் ரஷ்யாவிற்கு திரும்பிய போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவரை மீண்டும் ரஷ்யாவிற்கு வரவழைப்பதற்காக, பழைய அரசர்கள் பாணியில் இவரது தம்பியார் Oleg கைது செய்யப் பட்டார்.

அலெக்சீ நவால்னி பெப்பிரவரி 16-ல் ரஷ்யச் சிறையில் இறந்தார். அன்று உலகின் பிரபல்யமான மியுனிக் பாதுகாப்பு மாநாடு ஆரம்பமானது.

2007-ல் இதே மாநாடு ஆரம்பமான நாள் புட்டின் மேற்குக்கு எதிரான தனது யுத்தத்தை அறிவித்திருந்தார். இவ்வருட Munich Security Conference 2024 அறுபதாவது மாநாடாகும். உலகின் முக்கிய நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகள் கொள்கைவகுப்பாளர்கள் கலந்து கொண்டு உலக பாதுகாப்பைப் பற்றி கலந்தாலோசிக்கும் மாநாடே இது. நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம், லத்தீன் அமெரிக்க நாடுகள், இந்தியா, ஈரான், ரஷ்யா போன்ற நாடுகள் அனைத்தும் இதில் பங்கேற்கும். முதன்முதலில் இம் மாநாடு 1963-ல் ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்றுவரை மியுனிக்கிலேயே இம் மாநாடு நடைபெறுகின்றது.

## புட்டின் ஆட்சியில் நடைபெற்ற கொலைகள் சில:

Yevgeny Prigozhin ரஷ்யாவின் தனியார் இராணுவத்தின் தலைவர். புட்டினின் நெருங்கிய நண்பர். புட்டினுக்கு எதிராக தனது இராணுவத்தை திருப்பியவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர். இவர் விமான விபத்தில் இறந்தார். புட்டினுக்கும் இவருக்குமான பகை ஆரம்பமாகி 2 மாதங்களுக்குள் இது நடைபெற்றது. 2006-ல் லண்டனில் வைத்து புட்டினின் மற்றொரு எதிரி Alexander Litvinenko 'பொலனியம் 210' என்ற நஞ்சினால் கொல்லப்பட்டார். 2018-ல் ரஷ்ய உளவாளியாகவிருந்து, பின்னர் பிரிட்டனுக்கு உளவாளியாகவிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு ரஷ்யாவில் 13 வருடங்களை சிறையிலிருந்த பின்னர் பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்த Sergei Skripal-க்கும் அவரது மகளுக்கும் நஞ்சூட்டப்பட்டது. இவருடன் இவரது மகளும் பாதிக்கப்பட்டார். பிரித்தானிய மருத்துவர்கள் இவர்களை காப்பாற்றிவிட்டார்கள். Dawn Sturgess என்ற உள்ளூர் வாசி கொல்லப்பட்டார். இவர்கள் மூவருக்கும் மணிக்கட்டு பகுதியில் novichok நஞ்சு தெளிக்கப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்தாக பிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்தன.

Dmitry Bykov, Pyotr Verzilov ஆகிய இலக்கியவாதிகளும் நஞ்சினால் கொல்ல முயற்சிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவற்றை விட, ஜேர்மனியிலும் ஜோர்ஜியாவிலும் வைத்து மேலும் மூன்று ஊடகவியலாளர்களை கொலை செய்ய முயற்சித்ததாக அந்த நாடுகள் ரஷ்யா மீது குற்றஞ்சாட்டியுள்ளன. இந்த ஊடகவியலாளர்கள் ரஷ்யாவிற்கு எதிராக கருத்துக்களை கூறியதாக கூறப்படுகின்றது. Anna Politkovskaya ரஷ்ய மனித உரிமைகளுக்கு எதிராக குரல் கொடுத்த ஊடகவியலாளர். 2006-ல் இவர் தங்கியிருந்த தொடர்மாடிக் கட்டடத்தின் முன்னால் வைத்து கொல்லப்பட்டார். கிரம்பிளினின் முன்னால் வைத்து ரஷ்யாவின் Boris Nemtsov சுட்டுக் கொல்லப்பட்டார்.

செசினிய போரில் ரஷ்யாவிற்கு எதிராக செயல்பட்ட ஜோர்ஜிய பிரசை Zelimkhan Khangoshvili 2019-இல் மத்திய பேர்ளின் பங்கர் ஒன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலையைச் செய்ததாக ரஷ்ய FSB (Federal Security Service)ஐச் சேர்ந்த Vadim Krasikov சிறையிலடைக்கப்பட்டார். இவ்வழக்கை விசாரித்த பேர்ளின் நீதிபதி இது ஒரு painstakingly

planned கொலை எனத் தெரிவித்தார்.

Boris Berezovsky கிரெம்பிளினின் முக்கியஸ்தர் (Kremlin insider). 2013-ல் இவர் லண்டனில் உள்ள தனது வீட்டின் குளிய றையில் தூக்கில் தொங்கி இறந்துள்ளார். விசாரணைகள் இவர் தற்கொலை செய்யவில்லை என்பதனை உறுதிப்படுத் தின. Boris Berezovsky-இன் நண்பர்கள், ஆதரவாளர்கள் பலர் மர்மமான முறையில் இறந்துள்ளனர். இவர்களில் பலர் லண்டனிலேயே இறந்துள்ளனர். Badri Patarkatsishvili - Georgian oligarch, Nikolai Glushkov – தொழிலதிபர், Yuri Golubev – எண்ணெய் நிறுவன அதிபர் ஆகியோரே அவ்வாறு இறந்துள்ளார்கள்.

RT என அழைக்கப்படும் ரஷ்ய தொலைக்காட்சி மற்றும் இணைய நிறுவனத்தை ஆரம்பித்தவர் Mikhail Lesin. இவர் கிரம்பிளினின் முக்கியஸ்தர். இவர் வோசிங்டன் டிசி-யில் உள்ள விடுதி ஒன்றில் இறந்துள்ளார். வோசிங்டன் பாது காப்பு அதிகாரிகள் இதனை கொலை எனத் தெரிவித்துள்ள னர். இவருக்கும் புட்டினுக்குமிடையில் முரண்பாடுகள் இருந் துள்ளன.

1999-ல் Moscow-வில் நடைபெற்ற தொடர்மாடி தொடர் கொலைகளில், ரஷ்ய Federal Security Service (FSB)-ன் பங்களிப்பை விசாரிக்கக் கோரிய ரஷ்ய எதிர்க்கட்சியின் பிர தான தலைவர்களில் ஒருவர் Sergei Yushenkov. இக் கொலைகளை செசினிய தீவிரவாதிகளே செய்தார்கள் என ரஷ்யா தெரிவித்து வந்திருந்தது. இவர் 2003-ல் கொலை செய் யப்பட்டார். Boris Nemtsov என்பவர் உதவிப் பிரதமர் மற்றும் மாநில கவர்னர். இவர் புட்டினுக்கு எதிராக போராட்டங்களை ஒழுங்குபடுத்தியிருந்தார். மிக வேகமாக மக்கள் ஆதரவைப் பெற்று வளர்ச்சியடைந்திருந்தார். 2015-ல் இவரும் கொல்லப் பட்டார். Natalya Estemirova 2009-ல் கொல்லபட்ட ஒரு மனித உரிமைகள் போராளி ஆவார். Igor Domnikov எனும் ஊடகவி யலாளர் எண்ணெய் நிறுவனங்களில் நடைபெற்ற ஊழலை வெளிப்படுத்தியமைக்காக கொல்லப்பட்டார். இக்கொலை 2000-ம் ஆண்டு நடைபெற்றது. Sergey Novikov என்பவரும் 2000-ம் ஆண்டே கொல்லப்பட்டார். இவர் ஒரு வானொலி நிறு வன உரிமையாளர்-தயாரிப்பாளர் ஆவார். அரச ஊழல்களை வெளிப்படுத்தியமையே இவரது குற்றமாகும்.

Sergey Ivanov வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு வாகன ஓட்டியாக இருந்தமைக்காக 2000-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதி கொல்லப்பட்டார். Eduard Markevich, Novy Reft, Natalya Skryl, Nashe Vremya போன்ற பல ஊடகவியலாளர் கள் கொல்லப்பட்டனர்.

## தனிநபர் கொலைகளால் சாதிக்கப்பட்டவை எவை?

அண்மையில் ரஷ்யாவின் சிறையில் மரணமான எதிர்க் கட்சித் தலைவரின் குருதி உறைய முன்னரே, மேற்கு உலகின் சிறந்த ஊடகங்கள் கொலையாக அறிவித்து விட்டன. பல ஊடகவியலாளர்கள் தங்களது ஆய்வில் தனி நபர் கொலை களைப் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. தனி நபர் கொலை கள் எமக்கும் புதிதல்ல.

அமெரிக்காவினதும் மேற்கினதும் கொலைகள் பல. லிபியா-வில் கடாபியை கொலை செய்ததன் மூலம் அந்த நாட்டையே சீரழித்தார்கள். இன்று பல துண்டுகளாக போராடுகின்றன. அலெக்சீ நவால்னியின் கொலையை கண்டிக்கும் மேற்கு நாடுகள் மல்கம் X, பொப் மாலி, கென்னடி சகோதரர்கள் ஜோன். எப். கென்னடி - அமெரிக்க ஜனாதிபதி றொபர்ட் கென்னடி, ஜனநாயகக் கட்சியின் பிரதம மற்றும் முன்னனி வகித்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர், Patrice Lumumba, மார்ட்டின் லூதர் கிங் Slobodan Milosevic, Salvador Allende என பலரை மேற்குலகு கொன்றுள்ளது.

நவால்னி சிறையில் இருந்தபோது Yulia Navalnaya நவால்னி யின் விடுதலைக்காக போராடினார். இன்று மேற்கு நாடுக ளுக்கும் ரஷ்ய எதிர்க்கட்சிகளுக்கும் பிரபல்யமான ஒரு தலை வர் தேவை. மேற்கு நாடுகள் புட்டினுக்கு மாற்றீடாக நவால்னி யின் துணைவி யுலியாவை முன்நிறுத்துகின்றனர்.

புட்டினசத்தை தோற்றுவித்தது அமெரிக்காவும் நேட்டோவுமா கும். நேட்டோவின் இருப்பே ரஷ்யாவினால்தான் சாத்தியப்படு கின்றது. நேட்டோவின் ஒரேயொரு எதிரி புட்டின். புட்டினின் வளர்ச்சிக்கு பில்கிளின்டனும் ஒரு காரணம். இவரே சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த போது அமெரிக்கா கொடுத்த வாக் குறுதியை காப்பாற்றத் தவறியவர். அமெரிக்காவிற்கு ஒரு எதிரி தேவை. புட்டின் இல்லாத ரஷ்யா மேற்கின் அடிமையா கிவிடும்.

2024-ல் உலகில் 50 நாடுகளில் தேர்தல் நடைபெறவுள்ளது. குறிப்பாக, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுடன் கனடாவிலும் தேர்தல் நடைபெறலாம். அமெரிக்காவில் டொனால்ட் ரம்ப் மீள ஆட்சி அமைத்தால் ரஷ்யாவிற்கு பல வழிகளில் உறவுப் பாலம் அமைப்பார். உக் ரைன் போரை முடித்துவிடுவார். அது மட்டுமல்ல மீண்டும் அமெரிக்க நிறுவனங்களில் ரஷ்ய செல்வம் குவிக்கும். இதுவே ரம்ப்பின் முக்கிய நோக்கம். புட்டினுக்கும் ரம்ப்பின் தேவை அதிகம். ஆனால், புட்டின் சீனாவை விட்டு மெல்ல மெல்ல விலகத் தொடங்கலாம். பிரிட்டினில் ஆட்சி மாற்றம் என்பது உறுதி. தொழிற்கட்சி புட்டினசத்தை வரவேற்கலாம். இவை நடைபெற்றால் புட்டினசம் மேலும் வலுப்பெறும்.

லெனின் ரஷ்ய மக்களின் நலனில் அக்கறை கொண்டவர். அவர் ரஷ்ய மக்களுக்கான தலைவராகவே செயற்பட்டார். இதனையே, லெனின் பின்வந்த சோவியத் யூனியன் தலைவர் கள் கடைப்பிடித்தனர். புட்டின் ரஷ்யாவை தனது நாடாகவே கருதுகின்றார். இதனைத்தான் மோடியும் டொனால்ட் ரம்ப்பும் செய்கின்றார்கள். புட்டினும் மோடியும் ரம்ப்பும் 'ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா ஆகிய தேசங்கள் மக்களுக்கானவை' எனக் கருதவில்லை. இதனால்தான் எதிர்க்கட்சித் தலைவர்க ளையும் விமர்சிப்பவர்களையும் அழிக்க முற்படுகின்றார்கள். புட்டினசத்தின் பலவீனமும் இது தான். இப் புள்ளியில்தான் புட்டினசத்தின் வீழ்ச்சியும் ஆரம்பமாகின்றது.

ஆயுதங்களால் மக்களை அழிக்கலாம்.
மௌனிக்க முடியாது.



rathan@thaiveedu.com



# செங்கடலில் ஹூத்தியினரின் தாக்குதல்கள் : பின்னணியும் விளைவுகளும்

– ரூபன் சிவராஜா

**செங்கடல் தாக்குதல்கள் பாலஸ்தீனர்களின் பாதுகாவலர்கள் என்ற பிம்பத்தினை ஹூத்தியினருக்குக் கொடுக்கின்றது. ஏனெனில், கடந்த நான்கு மாதங்களாகத் தீவிரப்படுத்தப்பட்டுவரும் இஸ்ரேலின் இனவழிப்புப் போரைத் தடுத்துநிறுத்தத் திராணியற்று முழு உலகமும் கைகட்டி நிற்கின்றது. இந்நிலையில் இஸ்ரேலுக்கும் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கும் சவாலாக, அவற்றின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த வன்முறைச் செயலுக்குப் பின்னால் போருக்கெதிரான ஓர் அரசியல் இருக்கின்றது.**

மத்திய கிழக்கின் இஸ்லாமிய ஆயுதக் கிளர்ச்சி அமைப்பான ஹூத்தி - 'Houthi' காசா மீதான இஸ்ரேலின் போர் தொடங்கிய 2023 ஒக்ரோபரிலிருந்து செங்கடல் ஊடாகப் பயணிக்கும் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி




வருகின்றது. இது உலகளாவிய பெரிய செய்தியாக மட்டுமல்லாது, யார் இந்தக் ஹூத்தியினர் என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளது. ஹூத்தியினர் மத்தியகிழக்கின் அரேபியத் தீபகற்பத்தின் தெற்கில் அமைந்துள்ள ஜெமன் (Jemen/ Yemen) நாட்டினைச் சேர்ந்த ஆயுதக் கிளர்ச்சி அமைப்பாகும்.

### செங்கடலில் சர்வதேச இராணுவக் கூட்டு!

கடற் போக்குவரத்து உலகப் பொருளாதாரத்தின் ஆணிவேர். உலகமயமாக்கலின் தவிர்க்க முடியாத அங்கமுமாகும். அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் உலகப் பொருளாதாரம் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இதுவரை 23-ற்கும் மேற்பட்ட விநியோகக் கப்பல்கள் மீது இவ்வமைப்பு தாக்குதல்களை நடத்தியுள்ளது. பதிலடியாக அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட்டாக ஜெமன் நாட்டிற்குள் வான்வழி மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை ஜனவரியிலிருந்து நடத்தி வருகின்றன. அவுஸ்திரேலியா, நெதர்லாண்ட், கனடா, பஹரைன் ஆகிய நாடுகளும் தாக்குதலுக்கு உதவியுள்ளன. செங்கடல் கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கென 'Operation Prosperity Guardian' என்ற பெயரிடப்பட்டு சர்வதேச இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஹூத்திகளின் ரேடார்கள், ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை அழிக்கும் முயற்சியில் அமெரிக்கா ஏறக்குறைய நாளாந்தம் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளது.

அத்தோடு அமெரிக்கா, பிரித்தானிய அணியோடு கனடா, அவுஸ்ரேலியா, பஹரைன், தென்-கொரியா, டென்மார்க், ஜேர்மன், நியூசிலாண்ட் உட்பட்ட 14 நாடுகள் கூட்டாக ஹூத்தியினருக்கு எதிரான அறிக்கை ஒன்றினையும் அண்மையில் வெளியிட்டுள்ளன. செங்கடலில் அவர்கள் தாக்குதல்களைத் தொடர்ந்தால் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. காசா மீதான இஸ்ரேலின் இனவழிப்புப் போர் நிறுத்தப்படும் வரையிற் தமது தாக்குதல்கள் தொடரும் எனவும், தமது தாக்குதல்கள் தார்மீக அடிப்படையிலானவை எனவும் ஹூத்தியினர் கூறியுள்ளனர். அந்த அமைப்பின் அரசியற் பிரிவின் பேச்சாளர் Mohammed al-Bukhaiti பெப்ரவரி 8 அன்று நோர்வேயின் Klassekampen/Class Struggle-இற்கு வழங்கிய நேர்காணலில் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

### யெமன்:
### வரலாற்றுப் பின்னணி / உள்நாட்டுப் போர்:

2019-ல் ஜெமன் நாட்டில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தது. அயல்நாடான சவுதி அரேபியா ஜெமன் நாட்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக ஹூத்தியினர் மீது போர் தொடுத்தது. அதற்கு முதல் 2015-ல் அமெரிக்க ஆதரவுடன் சவுதி அரேபியா ஹூத்தியினர் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியது. ஈரானின் ஆதரவுடன் பலமடைந்து வந்த ஹூத்தியினரைப் பலவீனப்படுத்தும் நோக்கிலேயே அத்தாக்குதல்கள் நடத்தப்பட்

டன. பலவீனப்படுத்துவதற்கு வெளிச் சக்திகளான சவுதி மற்றும் அமெரிக்கா ஆகியன நேரடியான போரில் இறங்கியும் அந்தப் போர்களிலிருந்து தன்னைப் பலப்படுத்தி வெளிவந்துள்ளது ஹூத்தி அமைப்பு. கடந்த பத்தாண்டுகளில் மத்திய கிழக்கின் வறிய நாடான ஜெமனின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்துவந்த பல தரப்புகளுக்கு மத்தியில் அந்நாட்டில் ஒரு நிழல் அரசாங்கத்தையும் அது நடத்தி வருகின்றது.

யெமன் நாடு அரேபியத் தீபகற்பத்தின் தெற்கில் அமைந்துள்ளது. ஏடன் வளைகுடாவிலுள்ள சொகோட்ரா மற்றும் செங்கடலிலுள்ள ஹனிஷ் தீவுகள் உட்படப் பல தீவுகளையும் உள்ளடக்கியது. வடக்கில் சவுதி அரேபியா மற்றும் வடகிழக்கில் ஓமன் ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா இடையேயுள்ள பாப் அல்-மண்டேப்ட (Bab el-Mandeb) மீதான யெமனின் கட்டுப்பாட்டு, ஒரு கேந்திர முக்கியத்துவத்தையும் மூலோபாய வகிபாகத்தினையும் அதற்கு அளிக்கின்றது. யெமன் நாட்டின் மக்கட் தொகை 29 மில்லியன்கள்.

பனிப்போரின் போது, யெமன் வடக்குத் - தெற்காகப் பிளவுபட்டிருந்தது. வட யெமன் மேற்குலகிற்கு ஆதரவாகவும், தெற்கு யெமன் சோவியத்துடன் வலுவான தொடர்புகளையும் கொண்டிருந்தது. 1990-ல், வடக்கும் தெற்கும் ஒரு குடியரசாக இணைந்தன. இருப்பினும், மக்கள் குழுமங்களின் பின்னணிகள் இரு பகுதிகளையும் ஒருங்கிணைப்பதைச் சிக்கலானதாகவும் சவாலானதாகவும் ஆக்கியிருந்தன. பல்வேறு மதப் பின்னணிகள், குறிப்பாக ஷியா மற்றும் சன்னி முஸ்லிம்களுக்கிடையே பிளவுகளையும் பதற்றச் சூழல்களையும் உருவாக்கியிருந்தது. 1994-ல், முழு அளவிலான உள்நாட்டுப் போர் வெடித்தது. மீண்டும் பிரிந்துசெல்ல விரும்பிய தெற்கு யெமனின் முயற்சி தோல்வியடைந்து, தொடர்ந்தும் ஒரே நாடாக இருந்து வருகின்றது.

## செங்கடலில் பாலஸ்தீனருக்கு ஆதரவான ஹூத்தியினரின் நடவடிக்கையும் விளைவுகளும்:

2015-ம் ஆண்டு ஹூத்தியினர் யெமன் ஜனாதிபதி Abdo Rabbo Mansour Hadi-இன் ஆட்சியைக் கவிழ்த்து, நாட்டின் 80 வீதமான மக்கள் வாழும் ஆள்புலத்தினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஒக்ரோபர் 2023-ல் காசா மீதான இஸ்ரேலின் போர் தொடங்கிய காலப்பகுதியிலிருந்து Bab el-Mandeb நீரிணை மீது தமக்கிருந்த கட்டுப்பாட்டினைப் பயன்படுத்தி பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். இந்த நீரிணை செங்கடலை ஏடன் வளைகுடாவுடனும் இந்துமா சமுத்திரத்துடனும் இணைக்கின்றது. இந்தக் கப்பற் போக்குவரத்துப் பாதை, எகிப்தின் சுயஸ் கால்வாய் ஊடாகப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்குச் சர்வதேசப் பெரு நிறுவனங்கள் பயன்படுத்தும் ஒரேயொரு பாதையாகும். இதற்கு மாற்றான பாதை எனும்போது அது ஆபிரிக்கத் தென்முனையைச் சுற்றிவருகின்ற பாதையாகும். அது இரண்டு வாரங்கள் மேலதிக காலத்தை எடுப்பதோடு அதிக செலவையும் ஏற்படுத்துகின்ற பாதையாகும். ஹூத்தியினரின் தாக்குதல்கள் ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கிடையிலான கப்பற் போக்குவரத்தின் 40 வீதத்தினைச் செங்கடலுக்கு மாற்றாக ஆபிரிக்காவின் தென்முனைக்கு மாற்ற நிர்ப்பந்தித்துள்ளன.

இஸ்ரேலுக்குப் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துவது தமது இலக்கெனவும் Bukhaiti கூறுகிறார். ட்ரோன், இயந்திரப் படகு ஆகியவை மூலம் ஹூத்தியினர் செங்கடலில் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைத் தாக்கியுள்ளனர். இஸ்ரேலுக்கும் இஸ்ரேலிலிருந்தும் பொருட்களை ஏற்றி இறக்குகின்ற மற்றும் இஸ்ரேலுக்குச் சொந்தமான கப்பல்களே தமது இலக்காக இருந்தது. இஸ்ரேலுடன் தொடர்பில்லாத வேறு கப்பல்கள் உரிய ஆவணங்களைக் காண்பிக்கும் பட்சத்தில் அவை பாதுகாப்பாகப் பயணிக்கமுடியுமெனத் தாம் அறிவித்ததாகவும், ஆனால் அவ்வாறு செய்யவேண்டாமெனக் கப்பல் நிறுவனங்களுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்ததாகவும் கூறுகின்றார்.

## ஹூத்தியினருக்கெதிரான சர்வதேச நடவடிக்கைகள்:

சர்வதேச அழுத்தங்களுக்கு ஹூத்தியினர் அடிபணிந்துபோக வாய்ப்பில்லை, சவுதி அரேபியாவுடனான போரில், சவுதியின் கடுமையான வான்வழித் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து நின்றுபிடித்துள்ளது. ஹூத்தியினர் மீதான அமெரிக்கா, பிரித்தானியக் கூட்டுத்தாக்குதலில் ஐரோப்பிய நாடுகள் பலவும் கைகோர்த்துள்ளன. இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு ஹூத்தியினர் தூண்டப்படுவர். ஹூத்தியினரின் கடற்படைத் தாக்குதல் வலுவை இழக்கச் செய்யும் நோக்கில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

ஜெமன் நீண்டகாலமாக உள்நாட்டுப் போரால் சூழப்பட்டுள்ளது. செங்கடலில் பொருட் போக்குவரத்துக் கப்பல்கள் மீது ஹூத்தி இயக்கம் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இப்போது ஜெமன் விவகாரம் மீண்டும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் வந்துள்ளது. ஹூத்திகள் என்பது இனக்குழுவினையோ அல்லது சிறுபான்மையினரையோ குறிக்கும் சொல்லல்ல. அவர்கள் ஷியா முஸ்லீம் பின்னணியைக் கொண்ட ஆயுதக் கிளர்ச்சிக் குழுவினர்.

## யார் இந்த ஹூத்தியினர்?

1992-ல் Hussein Badreddin al-Houthi இளைய நம்பிக்கையாளர்கள் (al-Shabab al-Mumin) எனும் பெயரில் ஓர் அமைப்பினைத் தொடங்கினார். வட யெமனில் பெரும்பான்மையாக வாழ்ந்த ஷயா முஸ்லீம் பிரிவான Zaidi-இனை அடிப்படையாகக் கொண்டு அவ்வமைப்புத் தொடங்கப்பட்டது. காலப்போக்கில் அந்த அமைப்பு ஆயுதந்தரித்த அமைப்பாகவும் மேற்கிற்கெதிரான போக்குடையதாகவும் வளர்ந்துவந்தது. அதன் நிறுவனரான Al-Houthi 2004-ல் அரசபடைகளுடனான மோதல் ஒன்றிற் கொல்லப்பட்ட பின்னரும், அவ்வமைப்பு தன்னைத் தக்கவைத்துக்கொண்டது. அதன் உத்தியோகபூர்வப் பெயர் Ansar Allah என்பதாகும். கடவுளின் பற்றாளர்கள் என்பது அதன் பொருள். ஆனாலும் ஊடகங்களிலும் நாளாந்தப் பிரயோகத்திலும் அந்த அமைப்பானது, அதன் நிறுவனரின் (Hussein Badreddin al-Houthi) பெயரால் 'Houthi' என விளிக்கப்படுவது வழமையானது.

இந்தக் குழு அடிப்படையில் ஒரு இறையியற் குழுவாக ‘al-Shabab al-Mumin (இளைய இறை நம்பிக்கையாளர்கள்)’ எனும் பெயரில் வட யெமனின் சாடா (Saada) மாவட்டத்தில் நிறுவப்பட்டது. ஷியா முஸ்லீம் பிரிவின் சைதி (Zaidi) பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் அதுவாகும். ‘சைதி’- நம்பிக்கையை இளைஞர்களிடையே வலுப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, கலாசாரப் பார்வையை அடிப்படையாகக் கொண்ட சகிப்புத்தன்மையையும் ஆதரித்தது.

சைதி என்பது முஹம்மது நபியின் மருமகனான அலியின் கொள்ளுப் பேரனான சைய்த் பின் அலியின் (Zayd bin Ali) பெயரைத் தழுவியது. சைதிய இமாம்களின் தலைமையில் சைதிய இஸ்லாம் மதத்தினைப் பின்பற்றுபவர்கள் ஒன்பதாம் நூற்றாண்டில் வடக்கு யெமனில் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டனர். முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஒட்டோமான் பேரரசின் சரிந்தபோது, சைதிய முடியாட்சி வடக்கு யெமனின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. 1962-ல் எகிப்தின் இராணுவத் தலையீட்டினால் முடியாட்சி அகற்றப்படும் வரை, வடக்கு யெமனில் சைதிய முடியாட்சி நிலவியது.

ஹூத்திகள் அடிப்படையிற் ஷியா முஸ்லீம்கள் என்றபோதும், ஷியா-ஈரானின் ஆதரவைக் கொண்டிருப்பினும், ஈரான் மற்றும் லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா போன்றவை பரிந்துரைக்கும் மதப் போதனைகளுக்கும் இவர்களுடைய மதப் போதனைகளுக்குமிடையில் வேறுபாடு இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஹூத்தி இயக்கம் பாலஸ்தீனத்திலுள்ள ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய இரண்டிற்கும் அரசியல் ஆதரவை வெளிப்படுத்துகிறது. இந்த இயக்கங்கள் அனைத்தும் ஈரானால் ஆதரிக்கப்படுகின்றன.

## மத இயங்குநிலையிலிருந்து சமூக இயக்கமாக மாற்றம்:

யெமன் உள்நாட்டுப் போரினதும், 2003-ல் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவாகவும், ஹூத்திகள் ஒரு மத ரீதியான இயங்குநிலையிலிருந்து ஒரு சமூக இயக்கமாக உருவெடுத்தனர். இது வடக்கு யெமனில் சைதியினரின் நலன் சார்ந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. ஹூத்தியினர் போராட்ட அமைப்பு என்பதைத் தாண்டி அரேபியத் தீபகற்பத்தின் தென் பகுதியின் இராணுவ சக்தியாகவும், பிராந்திய முரண்பாடுகளின் தவிர்க்கமுடியாத அங்கமாகவும் மாறியுள்ளனர்.

ஹூத்தி இயக்கம் ஊழல் மற்றும் சமூக அநீதிகளுக்கெதிராகப் போராடியது என்றும், அதிக பிரதிநிதித்துவ ஆட்சியமைப்பு முறையே அவர்களின் இலக்கு என்றும் கூறப்படுகிறது. பொருளாதார மேம்பாட்டுக்கான மக்களின் கோரிக்கைகளையும் அது ஆதரிக்கிறது. அரேபியத் தீபகற்பத்தில் காலூன்றியுள்ள அல்-கைடாவிற்கு எதிராகவும் போராடுகிறது. நாட்டின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி சைதி மத போதனைகளின் அடிப்படையில் மதச் சட்டங்களை அமுல்படுத்துவதே ஹூத்திகளின் இலக்கு என யெமன் அரசாங்கத் தரப்பு குற்றம் சுமத்தி வருகின்றது.



## அமெரிக்க – இஸ்ரேல் எதிர்ப்பு நிலைப்பாடு:

2003-ல் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பும்; யெமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவின் அதற்கான ஆதரவும் ஹுத்தி இயக்கத்தின் மத்தியில் ஓர் கொள்கை மாற்றத்திற்கு வழிவகுத்தது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கெதிராக அரசியல் நிலைப்பாட்டினை எடுத்ததோடு முக்கிய இராணுவ சக்தியாகவும் வளர்ந்தது. மத்திய கிழக்கின் பிராந்திய சூழ்நிலை மாற்றங்கள், ஹுத்தி இயக்கம் வலுவான அமெரிக்க, இஸ்ரேலிய, யூத எதிர்ப்புச் சொல்லாட்சிக்குட் செல்ல வழிவகுத்தது. அவர்கள் மத்தியில் நீண்ட காலமாக நிலவிவந்த அமெரிக்க-இஸ்ரேலிய எதிர்ப்பு, 2023 இறுதியில் காசா மீதான இஸ்ரேலின் போரின் விளைவாக இராணுவ ரீதியான எதிர்வினையாற்ற லாக மாறியுள்ளது.

தற்போது இந்த அமைப்பினை நிறுவிய Hussein Houthi-இன் சகோதரரான Abdul-Malik al Houthi தலைமையில் இவ்வமைப்பு இயங்குகின்றது. இவரது தலைமையில் இவ்வமைப்பு கனரக ஆயுதங்களைக் கொண்ட பெரிய இராணுவ அமைப்பாக உருவெடுத்துள்ளது. இவர் பொதுவெளியில் மிக அரிதாகவே தன்னைக் காண்பித்துக் கொள்பவர். ஒரே இடத்தில் நீண்டகாலம் தங்கியிருக்க மாட்டார். 2009-ல், சவூதியின் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகப் பொய்யான செய்தி வெளிவந்திருந்தது.

2004-லிருந்து யெமன் அரச தரப்புடன் ஆயுத முரண்பாடு நிலவி வந்துள்ளது. 2011-ல் நிகழ்ந்த அரபு வசந்த எழுச்சிகளில் யெமன் அரசுக்கெதிரான கிளர்ச்சிகளில் ஹுத்தியினர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து படிப்படியாக ஒரு வலுவான அமைப்பாக வளர்ந்ததோடு, நாட்டின் பெரும் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிலும் கொண்டு வந்தனர். செங்கடலையண்டிய கடற்கரையோரங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். 2015-ல், ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றி, பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய அரசாங்கத்தை நிறுவினர். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தலைநகர் சானாவை (Sanaa) விட்டு வெளியேறித் துறைமுக நகரமான ஏடனில் மீண்டும் அரசாங்கத்தை நிறுவியது. அந்த அரசாங்கமே சர்வதேச அளவில் இன்னமும் நாட்டின் சட்டபூர்வமான அரசாங்கமாகக் கருதப்படுகிறது. அமெரிக்கா தலைமையிலான மேற்கு, சவூதி அரேபியாவின் செல்வாக்கிற்குட்பட்ட மத்திய கிழக்கின் பல நாடுகள், ஹுத்திகளால் வெளியேற்றப்பட்ட யெமன் அரசாங்கத்தையே அதிகாரபூர்வமாக ஆதரிக்கின்றன. கடற்படை சார் உதவிகளை யெமன் அரசாங்கத்திற்கு வழங்குவதனூடாக அமெரிக்காவுடன் எகிப்தும் அதன் முக்கிய ஆதரவு சக்திகளாக இருந்து வருகின்றன.

## உள்ளக, வெளியக முரண்பாட்டுத் தரப்புகள்:

இறுதிக் காலங்களில் பல தீவிர இஸ்லாமியக் குழுக்கள் யெமனில் தஞ்சம் புகுந்து காலூன்றியுள்ளன. அரச கட்டமைப்பும் அதன் அதிகாரமும் பலவீனமாக இருந்ததோடு, நாட்டின் கூர்மையான முரண்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாத சூழல் நிலவிய பின்னணியிலும் காலூன்றி இஸ்லாமியப் பயங்கரவாத அமைப்புகளில் ஒன்று அரேபியத் தீபகற்பத்தின் அல்கைடா (Al-Qaeda in the Arabian Peninsula AQAP) ஆகும். ஏடன் வளைகுடாவில் ஒக்ரோபர் 2000-ம் ஆண்டு 'யுஎஸ்எஸ் கோல்' (USS Cole) மீது நடத்தப்பட்ட தாக்குதல் அல்கைடா நடத்திய மிகவும் அறியப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் ஒன்றாகும். ஏடன் துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்தபோது, அமெரிக்கக் கடற்படையின் ஏவுகணை அழிப்புத் தளத்தின் மீது அல்கைடா நடத்திய தற்கொலைத் தாக்குதல் இதுவாகும். 2015-ல் மீண்டும் உள்நாட்டுப் போர் முழு அளவில் வெடித்த பிறகு, யெமனில் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பும் வலுவாகக் காலூன்றியது. அல்கைடா மற்றும் ஐ.எஸ் ஆகிய இரண்டும் சன்னி முஸ்லிம் பயங்கரவாத அமைப்புகள்.

உள்நாட்டின் பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கெதிராகவும் வெளிச் சக்தியான சவுதி அரேபியாவுக்கெதிராகவும் ஹுத்தியினர் போரிட்டு வருகின்றனர். 2015-ம் ஆண்டு சவூதித் தலைமையிலான கூட்டணி யெமனில் ஹுத்திகளுக்கெதிராக 'Operation Decisive Storm' எனும் பெயரிட்டு இராணுவத் தாக்குதலை மேற்கொண்டது. வான், கடல் மற்றும் தரை என முப்படைகளையும் ஏவிய போர் அது. நாட்டின் பெரும் பகுதிகளுக்குப் பரவி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியது. மிக மோசமான மனிதாபிமானப் பேரழிவுகளை உருவாக்கிய போராகக் கருதப்பட்டது. 'உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி' என்று ஐ.நா அதனைச் சித்தரித்திருந்தது.

## பல முனைகளாலான களங்கள்:

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த நிலையில் பல முனைகளாலான களங்களையும் அது திறந்துள்ளது. பிராந்திய வல்லரசுகளான ஈரானும் சவூதி அரேபியாவும் இதில் தீவிரமாக ஈடுபடும் தரப்புகளாகவுள்ளன. கவிழ்க்கப்பட்ட யெமன் அரசாங்கத்திற்குச் சவூதி அரேபியா நேரடியான இராணுவ உதவிகளைப் பெருமளவில் வழங்கி வருகின்றது. ஹுத்தி அமைப்பிற்கு ஈரான் உதவிகளை வழங்கிவருவதாகக் கூறப்படுகின்றது. 2021-ல் மூலோபாய மற்றும் சர்வதேசக் கற்கைகளுக்கான மையம் (Center for Strategic and International Studies - CSIS) வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், அமைப்பிற்கு ஆயுதங்கள், தொழில்நுட்ப வளங்களை ஈரான் வழங்குவதாகக் கூறியது. கடற் கண்ணிவெடிகள், ட்ரோன்கள், ஏவுகணைகளை வழங்கியதாகவும் கூறப்பட்டது. சவுதி நாட்டினை இலக்குவைத்து நேரடித் தாக்குதல்களும் நடந்துள்ளன. சவுதியின் எண்ணெய் ஆலைகளை இலக்குவைத்து ட்ரோன்கள் மூலம் தாக்குதல்களை ஹுத்தியினர் நடத்தியுள்ளனர்.

யெமனின் அமைவிடமும் அந்நாட்டில் நிலவும் முரண்பாட்டுச் சூழலும் சர்வதேச வணிகக் கப்பற் போக்குவரத்துக்குத் தொடர்ந்து பெரும் இடையூறாக இருக்கும் என்ற பெரும் அச்சம் நிலவுகிறது. அத்தோடு ஏடன் வளைகுடா பாரிய கடற்கொள்ளைக்கான தளமாகவும் இருந்து வருகிறது. அமெரிக்காவினால் ஹுத்தியினரை இதுவரை பலவீனப்படுத்தவோ, செங்கடலில் அவர்கள் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தவோ முடியவில்லை. 2021-ல் மனிதாபிமானக் காரணங்களுக்காக அவர்களைப் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து நீக்கிய பைடன் நிர்வாகம் அண்மையில் மீண்டும் பட்டியலிற் சேர்த்துள்ளது.

## அமெரிக்காவின் இரகசியச் சலுகைப் பொதி:

ஓமான் நாட்டின் ஊடாகக் ஹுத்தியினருக்கு ஒரு சலுகைப் பொதியினை வழங்க அமெரிக்கா முன்வந்ததாகத் தகவல்



கள் வெளிவந்திருந்தன. செங்கடல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான சமரச முயற்சியாக அனுப்பப்பட்ட அந்தத் தூதினைத் தாம் நிராகரித்ததாகவும் ஹுத்தியினரின் பேச்சாளர் கூறியுள்ளார். கடந்த பத்தாண்டுகளாக அமெரிக்க அனுசரணையுடன் சவுதி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (United Arab Emirates) ஆகியனவற்றின் வணிகத் தடையினால் யெமன் பாரிய மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. செங்கடலில் சர்வதேச வணிகக் கப்பல்கள் மீதான தங்கள் தாக்குதல்களை ஹுத்திகள் நிறுத்தினால், பொருளாதார-வணிகத் தடைகளை நீக்குவதோடு, ஹுத்திகளின் அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகரிக்கத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்கா தூதனுப்பியதாகச் சொல்லப்படுகின்றது. காஸாவில் நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே தாம் செங்கடல் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைப்போமென ஹுத்தியினர் தெரிவித்துள்ளனர். ஷியா மற்றும் சன்னி முஸ்லீம்களுக்கிடையே மத முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி வளர்ப்பதில் அமெரிக்கா நீண்டகாலமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டுகின்றார் ஹுத்திகளின் பேச்சாளர்.

## புதிய போருக்குள் அமெரிக்கா?

செங்கடல் மற்றும் யெமனில் மட்டுமல்லாமல் சிரியாவிலும் ஈராக்கிலும் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்கள் மீதும் அவற்றின் இலக்கு மீதும் இறுதிக் காலங்களில் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகின்றது. மத்திய கிழக்கில் ஓர் இராணுவ விரிவாக்கத்தினையும் போர் முரண்பாடுகளையும் அமெரிக்கா விரிவுபடுத்தி வருகின்றமைக்கு எடுத்துக்காட்டாக இவை அமைகின்றன. ஹுத்தியினருக்கெதிரான ஒரு நீண்ட போரினை அமெரிக்கா திட்டமிடுவதாக வோசிங்ரன் போஸ்ட்டினை மேற்கோள் காட்டிச் செய்தியொன்று வெளிவந்துள்ளது. புதிய தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் மத்திய கிழக்கில் மற்றுமோர் புதைகுழிக்குள் அமெரிக்கா இழுக்கப்படுகின்றதென்ற அச்சத்தினைப் பைடனின் அரசாங்கம் மற்றும் உட்கட்சி மட்டத்திற் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்கத் தாக்குதல்களில் ஹுத்தி இயக்கத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தாம் யெமனுடன் போரில் ஈடுபடவில்லை எனவும் சர்வதேசப் பொருள் விநியோகப்பாதை சார்ந்த உரிமைக்கான தற்பாதுகாப்புத் தாக்குதல் வகையினைச் சேர்ந்தவை தமது தாக்குதல்கள் என்கிறது அமெரிக்கா. எனினும், தற்போதையத் தமது இராணுவத் திட்டம் வெற்றியளிக்காது என்பதை உணர்ந்துள்ள அமெரிக்கா, உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பில் நீண்டகாலப் போர் பற்றிய ஆலோசனைகளை நடத்தியுள்ளதாகவும் அறியப்படுகிறது. அத்தோடு ஈராக், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கப் போர்களைப் போல, யெமன் மீதான போர் நீண்டகாலம் நீடித்துச் செல்லாது என்று அமெரிக்கா நம்புவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

## காசா மீதான போரை நிறுத்தவேண்டிய அவசியம்:

காசாவில் மக்களைக் கொன்று குவிப்பதை இஸ்ரேல் தொடர்வதற்கு ஏதுவாகப் பைடன் மத்திய கிழக்கில் மேலும் புதிய போர் ஒன்றினைத் தொடங்குகிறாரென Quincy Institute எனும் அமெரிக்க வெளியுறவுச் சிந்தனையாளர் குழாமின் உப தலைவர் Trita Parsi அண்மையில் ரிவிட்டர் (x) தளத்திற் பதிவுசெய்துள்ளார். காசாவில் போர் நிறுத்தத்தினைக் கொண்டுவருவதே ஹுத்தியினரின் தாக்குதல்களை நிறுத்துவதற்கான வழி. ஆனால், பைடன் போரைத் தேர்வுசெய்துள்ளாரென Parsi மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செங்கடல் சிக்கலில் அமெரிக்காவைவிட ஐரோப்பாவே அதிகம் பொருளாதார ரீதியிற் பாதிக்கப்படுகின்றது. பைடனின் முடிவு பொருளாதார மதிப்பீடுகளின் அடிப்படையில் அல்லாமல், சித்தாந்த மற்றும் உலக வல்லரசு என்ற அமெரிக்க அதிகார மேலாண்மையினால் இயக்கப்படுகின்றதென்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

## ஹூத்தியினரின் அனுகூலம்:

செங்கடல் தாக்குதல்கள் ஹூத்தியினருக்கு அனுகூலமானவை என்பதோடு அவர்களின் நடவடிக்கைகளைத் தொடர்வதற்குச் சாதகமான காரணங்களையும் கொண்டுள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவீதத்தினர் வசிக்கும் பிரதேசங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ளன. இப்போது பாலஸ்தீனியர்களின் பாதுகாப்பு மற்றும் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிரான அவர்களது எதிர்ப்பு ஆகியவை சொந்த மக்களிடையே அவர்களுக்கு நற்பெயரை உண்டுபண்ணக் கூடியவை. தமது தாக்குதல்களைத் தொடர்வதற்குரிய உந்துதலைக் கொண்டிருப்பதோடு, அமெரிக்காவை விடக் குறைந்தளவு ஆயுதத் தளபாடச் செலவுகளுடன் நடவடிக்கைகளை அவர்களால் மேற்கொள்ள முடியும். தொடரவும் முடியும். அமெரிக்காவின் எதிர்த் தாக்குதல்கள் பெரும் இராணுவச் செலவீனங்களை ஏற்படுத்தக் கூடியது.

தற்போதையச் செங்கடற் சிக்கலில் அவர்களின் தாக்குதல்களை அமெரிக்காவினாற் தடுக்க முடியவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை. மத்திய கிழக்கில் இஸ்ரேல் மற்றும் மேற்கைச் சேர்ந்த அதன் நட்பு சக்திகளின் இயலாமையை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் நிகழ்வாகவும் அமைந்துள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் அதிகாரம் சரிவை நோக்கிச் செல்கின்றமையை அங்குள்ள சமகால நிலைமைகள் உணர்த்துகின்றன.

இந்தத் தாக்குதல்கள் பாலஸ்தீனர்களின் பாதுகாவலர்கள் என்ற பிம்பத்தினை ஹூத்தியினருக்குக் கொடுக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில் கடந்த நான்கு மாதங்களாக நாளுக்குநாள் தீவிரப்படுத்தப்பட்டுவரும் இஸ்ரேலின் இனவழிப்புப் போரைத் தடுத்து நிறுத்தத் திராணியற்று முழு உலகமும் கைகட்டி அல்லது இஸ்ரேலுக்குச் சேவகம் செய்து நிற்கின்றது. இந்நிலையில் இஸ்ரேலுக்கும் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கும் சவாலாக, அவற்றின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த வன்முறைச் செயலுக்குப் பின்னால் ஓர் அரசியல் இருக்கின்றது, அது அழுத்தம் கொடுக்கும் அரசியல். மனிதப் பேரழிவுகளை நிறுத்து, மனிதாபிமான உதவிகளை அனுமதி, பொருளாதாரத் தடையை நீக்கு' போன்ற நீதியான கோரல்கள் அவை.



**உசாத்துணை:**

- *Klassekampen, 22.01.2024 & 08.02.2024*
- *Aftenposten, 07.01.2024 & 12.01.2024*
- *Folk og forsvar, 19.01.2024*
- *BBC, 05.02.2024*
- *Aljazeera, 22.02.2024*
- *https://snl.no/Houthi-bevegelsen*





rooban.s@thaiveedu.com



# சாந்தன்:

## மிகப்பெரிய ஜனநாயகத்தின் குருதி வெறி

### -கந்தசாமி கங்காதரன்

சாந்தன் என்ற சுதேந்திரராஜா கொடுஞ்சிறைகளிலிருந்து மீண்டு ஈழத்துக்கு வரும் சூழ்நிலை கைகூடி வந்தவேளை யில் உடல் நலக்குறைவால் காலமாகிவிட்டார்.

ஈழத்தில் வடமராட்சி - உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் சாந்தன். அவுஸ்திரேலியா செல்லும் நோக்கில் தமிழ்நாட்டுக்குச் சென் றிருந்தார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகநபர்களைத் தேடித்தேடி வேட்டையாடிக்கொண்டிருந்தது காவல்துறை. காவல்துறையால் தேடப்படுவோருள் சாந்தனும் இருந்தார்.

ஜுன் 1991-இல் கைதாகி, குற்றஞ்சாட்டப்பட்டு, கொடும் சித் திரவதைகளுக்குள்ளாகி, பின்னர் நீதிமன்றத்தால் மரண தண் டனையும் விதிக்கப்பெற்றார் சாந்தன்.

குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை. பின்னர் நால்வருக்கு மரண தண்டனை, ஏனையோருக்கு ஆயுள் தண் டனை. அதற்குப்பின்னர் மூவருக்கு மரண தண்டனை என் றெல்லாம் தீர்ப்புகள் மாறிக்கொண்டிருந்தன.

குடியரசுத் தலைவர்களாக இருந்த கே.ஆர். நாராயணன், ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட கருணை மனுக்கள் முடிவெடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட் டன. இவர்களுக்குப் பிறகு குடியரசுத் தலைவராக இருந்த பிரதீபா பாட்டீல் 2011-ஆம் ஆண்டு கருணை மனுக்களைக் தள்ளுபடி செய்தார்.

தொடர்ந்து, 2014-இல் இந்திய உயர்நீதிமன்றம் மரண தண்ட னையை இரத்துச்செய்தது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட சில நாட்களுக்குள் அப்போதைய தமிழ்நாட்டு முதல்வர் ஜெய-லலிதா, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கிய கைதிகள் விடுதலை செய்யப்படுவதாக அறிவிக்க, அப்போது மத்தி யில் இருந்த காங்கிரஸ் அரசு உயர் நீதிமன்றத்தை நாடி விடு தலைக்குத் தடை பெற்றது.

இவ்வாறு பல்லாண்டுகளாகத் தொடர்ந்த இழுத்தடிப்புகள், அலைக்கழிப்புகளுக்குப் பிறகு 2018 மார்ச் 6-ஆம் நாள், அதுவரையில் சிறையிலிருந்த ஏழு பேரையும் விடுவிப்பது தொடர்பாக ஆளுநர் முடிவெடுக்கலாம் என ரஞ்சன் கோகாய் அமர்வு தீர்ப்பளித்தது. 2018 டிசம்பர் 6-ஆம் நாள் ஆளுநர் இறுதி முடிவு எடுக்க உயர்நீதிமன்றம் அதிகாரம் வழங்கியது.

அதனைத் தொடர்ந்து பேரறிவாளன் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நிலையில் சாந்தன், முருகன் - நளினி இணையர், இராபர்ட் பயஸ், ஜெயக்குமார், இரவிச்சந்திரன் ஆகியோர் 2022-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டனர்.

இருப்பினும், அவர்களுள் பேரறிவாளனைத் தவிர மற்றவர்கள் ஈழத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர்கள் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

‘சிறப்பு முகாம் சிறையைவிடக் கொடுமையானது. இங்கு எந்த சட்டதிட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும் மாவட்ட ஆட்சியரும் முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கின் றார்களோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டதிட் டங்களாகவும் ஆகின்றன. மருத்துவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம் வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச்சிறை என்று இவர்கள் முடிவு எடுத்தால் தனிமைச்சிறை. யாரும் கைதிகளைப் பார்க்கக்கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால், யாரும் மனுக் கொடுத்து முகாமி லுள்ளோரைப் பார்க்க முடியாது.’ என்று திருச்சியில் உள்ள இந்தச் சிறப்பு முகாம் பற்றி சாந்தனோடு சிறையிருந்த இன்னோர் ஈழத்தவரான இராபர்ட் பயஸ் எழுதி பெப்பிரவரி 29, 2024-இல் ஊடகங்களில் பகிரப்பட்ட திறந்த மடலில் விப ரித்திருக்கிறார்.

இந்தச் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல மாதங்கள் அறைகளிலேயே கைதிகள் தங்கவைக்கப்பட்டதால் பல நோய்களுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில் சாந்தனை ஈழத்துக்கு அனுப்பிவைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படவில்லை. ஓராண்டு கடந்தபின்னர் ஒருவாறு இலங்கைக் கடவுச்சீட்டு சாந்தனுக்கு வழங்கப்பட, இந்தியத்தரப்பிலும் சாந்தன் இந்தி யாவிலிருந்து வெளியேறுவதற்கான அனுமதியும் கிடைத்தது.



ஆனால், கல்லீரல் பாதிப்புக்குள்ளான சாந்தன் சென்னையில் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி, பெப்பிரவரி 28, புதன்கிழமை காலை சாந்தன் காலமானதாக அறிவிக்கப்பட்டது.

உடுப்பிட்டியில் வாழும் சாந்தனின் அன்னை, தன் மகனை எப்பாடு பட்டேனும் பார்த்துவிடவேண்டும் என்று அலையாத அலைச்சல் இல்லை. சிறப்பு முகாமில் இருந்தவாறு சாந்தனும் எழுதாத மனுக்கள் இல்லை. மகன் தன் அன்னையைப் பார்ப்பதற்கும் அன்னை தன் மகனைப் பார்ப்பதற்கும் கொண்டிருந்த ஏக்கம் நிறைவேறவேயில்லை.

“33 ஆண்டுகளாக தனது மகனைப் பிரிந்து, கண்பார்வை குன்றி, வயது முதிர்ச்சி அடைந்து, கடைசியாக ஒரு முறையாவது தனது மகனைப் பார்த்து விடவேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத்தான் கொண்டு போய்ச் சேர்க்கப்போகின்றோம். கடைசியாக தனது கையால் தன் மகனுக்கு ஒரு பிடி உணவு கொடுக்கமாட்டோமா என்று இயங்கிய அந்தத் தாய். அந்த மகனுக்கு கடைசியாக வாய்க்கரிசி கொடுக்கத்தான் வாய்க்கப்பெற்றிருக்கிறார். இதோ இன்று என் மகன் வந்து விடுவான்’ என்று எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தத் தாயிடம், உன் மகன் வரவில்லை; அவரின் உயிரற்ற உடல் தான் வருகின்றது என்கின்ற செய்தியை யாரால் சொல்லியிருக்க முடியும்?” என்றும் இராபர்ட் பயஸ் தன் வேதனையையும் மேற்சொன்ன திறந்த மடலில் கொட்டியிருக்கிறார்.

## சாந்தன் எப்படி இந்த வழக்கில் சிக்கினார்?

‘இந்த வழக்கில் தேடப்பட்ட குற்றவாளி குண்டு சாந்தன்தான். அவர்தான் முக்கிய நபர் என்பதால் தேடினோம். எங்களுக்கும் குண்டு சாந்தன் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. அப்போதுதான் சாந்தன் என்ற பெயரில் ஒருவர் வந்து தங்கியிருக்கும் தகவல் கிடைத்தது. அந்த (சின்ன) சாந்தன் வெளிநாட்டுக்கு போய் வேலை தேட முறைப்படி விசா வாங்கி விமானத்தில தமிழ்நாட்டுக்கு வந்திருந்தவர். சுங்கப்பிரிவில் இருந்துதான் அந்த சாந்தன் என்ற பெயர் கிடைத்தது. உடனே அவரைப் பிடித்து வாக்குமூலம் வாங்கி குற்றவாளியாகச் சேர்த்துவிட்டோம். எல்லோருக்கும் 1998-இல் தண்டனையும் வாங்கிக் கொடுத்துவிட்டோம். அதற்குப் பிறகு எட்டு ஆண்டு கழித்து உண்மையான குண்டு சாந்தன் திருச்சியில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இது வெளியே தெரிந்தால் சி.பி.ஐ.-க்குப் பெரிய அவமானமாகிவிடும். உலகமே சிரிக்கும். என்ன செய்வதென்று சி.பி.ஐ. அதிகாரி ரகோத்தமனிடம் கேட்க, அவர்தான் குண்டு சாந்தனைக் கொன்றுவிடச் சொன்னார். அதன்படி நான் குண்டு சாந்தனைச் சுட்டுக்கொன்றுவிட்டேன்’ என்று சி.பி.ஐ. ஆய்வாளராக இருந்து வெளியேறிய ஜெபமணி மோகன்ராஜ் ஒரு தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியொன்றில் போட்டுடைத்தார்.

‘கீழ்தரமான செயலைச் செய்துவிட்டு, அதுதான் தேசப்பற்று என்றால் அந்த தேசப்பற்று ...க்குச் சமானம்தானே!’ என்று ஜெபமணியை நோக்கிக் கேள்வி எழுப்பியிருந்தார் ஊடகவியலாளர் பா. ஏகலைவன்.

சாந்தனின் மரணம் கொலையாக இருக்கலாம் என்று பல்வேறு தரப்புகளிலிருந்தும் ஐயம் வெளியிடப்படுகின்றது. அந்த ஐயங்களைப் புறந்தள்ளுவதற்கில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்று பீற்றிக்கொள்ளும் நாட்டின் நீதித்துறையைப் பார்த்து உலகே கைகொட்டிச் சிரிக்கிறது.

சுதேந்திரராஜா என்ற சாந்தனுக்கு எம் இறுதி வணக்கம்.



gangatharan.k@thaiveedu.com




இந்தியா 3,287,263 சதுர கிலோ மீட்டர் பரப்பும் 141 கோடி மக்கள் தொகையும் கொண்ட உலகளவில் மிகப்பெரிய ஜனநாயக நாடு. உலகில் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத பல சிறப்பம்சங்கள் நிறைந்து காணப்படும் நாடு. குறிப்பாக நூற்றுக்கணக்கான இன, மத, மொழி, கலை, கலாசாரமுடைய மக்கள் இணைந்து நல்லிணக்கத்துடன் வாழும் நாடாக பெயர்பெற்று வரும் நாடு. இந்தியச் சுதந்திரத்திற்காக அனைத்து வேறுபாடுகளையும் புறந்தள்ளி இணைந்து போராடிய பெருமையும் இம்மக்களுக்கு உண்டு. 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் எனப் பிரிக்கப்பட்டு கூட்டாட்சி முறையில் ஒன்றிணைந்த ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்திய மக்கள் தொகையில் இந்து மதத்தவர்கள் 79.8%, இஸ்லாமியர்கள் 14.2%, கிறிஸ்தவர்கள் 2.3%, சீக்கிய மதத்தவர்கள் 1.7%, ஏனையவர்கள் 2% எனப் பல மதத்தினர் இருந்தபோதும் 1976 அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இந்திய மக்கள் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்ற பெருமையுடன் மத நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்பதே இந்தியாவின் தாரக மந்திரம். இந்தியாவின் பன்முகத்தன்மை உலக நாடுகளை வியக்க வைக்கிறது. 1947-ல் சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரை இந்தியா மதச்சார்பற்ற நாடு என்றே உலக அரங்கில் அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் அனைத்து அடிப்படை உரிமைகளும் எந்தவிதப் பாகுபாடும், பாரபட்சமும் இல்லாது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அரசியலமைப்பின் பல்வேறு சட்ட விதிகள் ஊடாக அரசியல் அமைப்பின் பிதா மகன் திரு. அம்பேத்கர் உறுதிபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அரசியலில் மதம்:

இந்தியா சுதந்திரம் பெற்ற 1947 முதல் 2014 வரை அரசியலில் மதம் பெரியளவில் கலக்காமல் இருந்து வந்துள்ளது. ஆனால் 2014-ல் மோடி தலைமையிலான பாஜக ஆட்சிக்கு வந்தது முதல், மதவாதம் என்பது எல்லா அரசியல் நடவடிக்கைகளிலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக, இந்துத்துவக் கொள்கைகளை நிலைநிறுத்தி, ‘இந்து ராஷ்டிரிய’மாக இந்தியாவை மாற்றுகின்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதைக் காணமுடிகிறது. இந்து அல்லாத சிறுபான்மையினர் மீது வெறுப்புணர்வு பரவத் தொடங்கியிருக்கிறது. குறிப்பாக இஸ்லாமியர்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். 2019-ல் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தது முதல் காங்கிரஸ் உட்பட எதிர்க் கட்சிகள் பலவீனமடையச் சிறுபான்மையினர் மீதான வெறுப்பரசியல் வேகமெடுக்கத் தொடங்கியிருப்பதைக் காணலாம்.

2019 பொதுத் தேர்தலின் போது மக்கள் தொகையில் 20 கோடிக்கு மேல் இஸ்லாமியர்கள் இருந்தும் பாஜக-வின் 303 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஓர் இஸ்லாமியர் கூட இல்லை என்பதிலிருந்து வெறுப்பு மத அரசியலைப் புரிந்து கொள்ளலாம். இதே போன்று இன்றைய ஒன்றிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இஸ்லாமிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒருவர் கூட இடம்பெறவில்லை. அதே போன்று மாநிலச் சட்டமன்றத் தேர்தலின் போதும் கூட சிறுபான்மை இஸ்லாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க பாஜக தயக்கம் காட்டி வருவதைக் காணலாம். உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்திற்கான தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இந்து, இஸ்லாமிய மக்களை மனதிற் கொண்டு 80-க்கும் (உ.பி.யில் இந்து மக்கள் விகிதம்) 20-க்கும் (இஸ்லாமிய மக்கள் விகிதம்) போட்டி எனப் பாஜக-வினர் மதவாதப் பக்கம் நின்று பிரச்சாரம் செய்ததை நாட்டு மக்கள் அனைவரும் அறிவர்.

இஸ்லாமியர்கள் மீதான வெறுப்புணர்வு மட்டுமல்லாமல் அவர்கள் மீதான தனிமனிதத் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. பெரும்பான்மை இந்து மக்களின் வாக்குகளைப் பெறும் எண்ணத்துடன் பசுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பசு இறைச்சிக்குக் கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்டன. சில பகுதிகளில் இஸ்லாமியர்களின் பிரதான உணவான மாட்டிறைச்சிக்குத் தடை விதிக்கப்பட்டது. இதன் காரணமாகச் சில இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டனர். மாடுகளைக் கொண்டுசெல்வோர் தாக்கப்பட்டனர். மாட்டிறைச்சி விற்பனையும் கட்டுப்படுத்தப்பட்டது.

இஸ்லாமியர்களைப் பாகிஸ்தானுக்கு விரட்ட வேண்டும்



எனச் சில தீவிரவாத ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள், அரசியல் வாதிகள் பேசி வருவதையும் காணலாம். இதன் ஒரு பகுதி யாக 2019-ல் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றிய பாஜக அரசு பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் சட்டவி ரோதக் குடியேறிகள் எனவும், அவர்கள் அடையாளம் காணப் பட்டு வெளியேற்றப்பட வேண்டும் எனவும் கூறிவருகிறது. மேலும் 2014-க்கு முன் பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கா னிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய இஸ்லாமியரல்லாதவர்கள் குடியுரிமை பெறலாம் எனச் சட்டத் திருத்தம் செய்த அரசு இஸ்லாமியர்களை உள்ளடக்க மறுத் துவிட்டது. மனித உரிமைகளைக் கவனத்தில் கொள்ளாத அரசு, குடியுரிமை விடயத்தில் மதமென்ற ஒன்றை மட் டும் அளவுகோலாகக் கொள்ள முன் வந்திருப்பது மனிதாபி மானமற்ற செயலாகும்.

முத்தலாக் தடைச் சட்டத்தின் மூலம் இஸ்லாமியர்களின் தனிப்பட்ட மத நம்பிக்கையில் அரசு தன் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது. அத்துடன் முஸ்லிம்கள் மிகப் பெரும்பான் மையாக வாழும் காஷ்மீர் மீது 370 சட்டத்தைக் கொண்டு வந்து அம்மாநிலத்துக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்கியது டன், மாநிலத்தையும் ஒன்றிய அரசு துண்டாடியுள்ளது. அதே நேரம் வடகிழக்கு மாநிலங்களில் நடைமுறையிலுள்ள விசேட அந்தஸ்தைக் குறிக்கும் 371-வது சட்டத்தை நீக்க முன்வர வில்லை. அவர்களின் நோக்கம் இஸ்லாமியர்களின் தனி அதி காரத்தை இல்லாமல் செய்வதாகும். இந்நிலையில் பாஜக இந்து மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறத் தேர் தல் மேடைகளில் காஷ்மீர் துண்டாடப்பட்டதை முக்கிய சாத னையாகக் கூறி வருகிறது.

## ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மதவாத அரசியல்:

இந்தியாவில் எல்லா மதங்களும் தத்தமக்கெனத் தனித்தனி அமைப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றன. அவைக ளின் நோக்கம் இன்னொரு மதத்தை அழிப்பதாக அமையக் கூடாது. மத நல்லிணக்கம் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் என்ற (RASHTRIYA SUAYAM SEVAK SANGH) அமைப்பானது இந் துத் தேசிய வாதிகளால் உருவாக்கப்பட்ட வலதுசாரி இந்து மத அமைப்பாகும். 1925-ல் நாக்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு உருவான இந்த அமைப்பின் நோக்கம் இந்து என்ற மத அடையாளத்துடன் இந்திய மக்களை ஒன்று திரட்டுவதா கும். நேரடி அரசியலில் ஈடுபடாத இவ்வமைப்பு பாஜக, சங்ப ரிவார் போன்ற நூற்றுக்கணக்கான அமைப்புகளைப் பின்னா லிருந்து இயக்கி வருகிறது.

இந்துத்துவம் என்ற பதாகையின் கீழ் இந்து தேசியவாதம் என்ற நிகழ்ச்சி நிரலை அமுலாக்க முயல்வதால் இந்தியா வின் பன்முகக் கலாசாரம் அழிக்கப்படுகிறது. இந்து ராஷ்டி-ரம் என்பதே அவர்களின் கனவு. இன்று ஆட்சிபுரியும் பாஜக-வின் மூலவேர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பாகும். எனவே அதன் சித்தாந்தத்தின் கீழ் பாஜக தனது பங்களிப்பை அரசியல் நட வடிக்கைகள் ஊடாக நிறைவேற்றி வருகிறது. இன்று இந்தி யப் பிரதமர் பாஜக முதலமைச்சர்கள் உட்பட உயர்மட்ட ஆட் சியாளர்களை இயக்குவது இவ்வமைப்பாகும். இந்து மக் களை ஒருங்கிணைத்து அவர்களின் வாக்குகளைப் பாஜக பக்கம் திருப்புவதன் வாயிலாக இந்துத்துவ நாடாக இந்தி யாவை மாற்றுவதே இவர்களின் நோக்கமாக இருக்கிறது.

இந்தியா இந்துக்களின் நாடு என்பதைப் பல வழிகளிலும் நிறுவ முயற்சிப்பதைக் காணலாம். மத ரீதியான நடவடிக்கை களில் ஈடுபடுவதே ஆர்.எஸ்.எஸ், மற்றும் பாஜக-வின் கொள் கையாக இருக்கிறது. கரசேவை என்ற பெயரில் 1992-ல் இஸ் லாமியர்களின் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்க இவ்வமைப்பு காரணமாக இருந்துள்ளது. பாபர் மசூதியிருந்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்டி அதனை இந்து மக்கள் முன் வைத்து அவர்களை அரசியல் ரீதியாக ஒருங்கிணைப் பதே அவர்களின் நோக்கமாகவுள்ளது. இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்பதை மறந்து அல்லது மறுத்து வரும் சங் பரிவாரத்தின் மதவெறி நகர்வுகள் மதப் பிளவைக் கூர்மைப்ப

டுத்தி வருகின்றன. மத நல்லிணக்கம் நோக்கி நாட்டு மக்களை நகர்த்த அவர்கள் முன்வராமை நாட்டுக்கு மிகப்பெரும் கேடாக அமையும். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாமிய அரசர்கள் இந்துக் கோவில்களை ஆக்கிரமிப்புச் செய்ததை மட்டுமே அவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் திப்பு சுல்தான் ஆட்சியில் பல நூறு இந்துக் கோவில்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதை நினைவில் கொள்ள மறந்து விடுகின்றனர்.

## அயோத்தியில் இராமர் கோயில்:

இன, மத, மொழி, சாதிப் பாகுபாடு கூடாது என்கிறது இந்திய அரசியலமைப்பு. அனைத்து மதத்தினரும் சமமானவர்கள் என்கிறது அரசியலமைப்பு. ஆனால், அவற்றையெல்லாம் புறந்தள்ளி அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டிய அரசாங்கமே குறிப்பிட்ட பெரும்பான்மை மதஞ்சார்ந்த கோயில் உருவாகக் காரணமாக இருக்கும் நிலை மிகப் பெரிய சனநாயக நாடான இந்தியாவில் நிகழ்ந்துள்ளது. இராமர் கோயில் கட்டுவதை அரசியலாக்கி அதன் மூலம் தேர்தல் இலாபம் பெறுவதே அவர்களின் நோக்கம். பாபர் மசூதியை இடித்து அங்கே இராமர் கோயில் கட்டியதை நாட்டின் பெருமையாக உலக சாதனையாகக் கூறி வருகின்றனர்.

1992 டிசம்பர் 6-ம் நாள் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் 2.7 ஏக்கர் நிலத்தில் 57,400 சதுர அடியில் 1800 கோடி செலவில் கட்டப்பட்ட இராமர் கோயிலானது இவ்வருடம் ஜனவரி 22-ம் நாள் மதச்சார்பற்ற இந்திய நாட்டின் பிரதமர் திரு. மோடி அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் பொதுவானவராகச் செயலற்பட வேண்டிய பிரதமர் பதினொரு நாள் விரதமிருந்து நாட்டின் பல்வேறு இந்துக் கோவில்களை வலம் வந்து இராமர் கோயில் கும்பாபிஷேகத்தை நடத்தியுள்ளமை அப்பட்டமான அரசியல் ஆதாயத்திற்கானதாகும். திறப்பு விழாவிற்குப் பல ஆயிரம் கோடி செலவழிக்கப் பட்டுள்ளது. பக்தி என்பதைவிட இது ஒரு அரசியல் நாடகம் என்பதால் நாட்டின் எதிர்க் கட்சிகள் கலந்து கொள்ள வில்லை.

நாட்டில் லட்சக்கணக்கான இந்துக் கோவில்கள் இருக்கின்றன. உலகப் புகழ்பெற்ற இந்துமத வழிபாட்டுத் தலங்கள் இந்திய நாட்டில் இருக்கின்றன. கட்டடக்கலைக் கட்டமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கோவில்கள் இருக்கின்றன. வாரணாசி கோணார்க், ஒடிசா பூரி, உத்தரகாந்த் கேதரி-நாத், குஜராத் சோம்நாத், உபி காசி விஸ்வநாத், வைஷ்-ணோதேவி, திருப்பதி கோவில், மதுரை மீனாட்சியம்மன், திருவனந்தபுரம் பத்மனாபா என ஏராளமான உலகப் பிரசித்தி பெற்ற இந்துக் கோவில்கள் இருக்கும் நிலையில் மக்கள் நம்பிக்கையை அரசியல் இலாபத்துக்காகப் பாஜக அரசு இராமர் கோயிலைக் கட்டி அதனைத் தேர்தல் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வருவது மலிவான மத அரசியலாகவே பார்க்கப்படுகிறது.

இந்திய மக்களில் குறிப்பாக வட இந்தியாவிலிருக்கும் பெரும்பான்மை இந்து சமயம் சார்ந்த மக்கள் கல்வியறிவிலும் பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கியவர்களாவர். கடவுள் மீது அறிவியல் கடந்து அதிக நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களின் அறியாமையை மத உணர்வு வழியில் அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்துவதில் பாஜக, ஆர்.-எஸ்.எஸ் அமைப்புகள் அண்மைக் காலங்களில் வெற்றி கண்டு வருகின்றன. அதன் ஓர் அம்சமாக இராமர் கோயில் காட்டப்பட்டது. வரவிருக்கும் பொதுத் தேர்தல் வெற்றிக்காக இராமர் கோயிலைச் சாதனையாக முன்நிறுத்தி நாடெங்கும் பிரச்சாரம் செய்யும் போக்கு காணப்படுகிறது.

மத அரசியலின் உச்சக்கட்டமாக மேலும் இரு மசூதிகளில் முன்னைய காலங்களில் இந்துக்கோயில் இருந்ததாகவும் அவற்றை இடித்து மீண்டும் அங்கு கோயில் கட்டவேண்டும் என்ற கோஷத்தை ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் பாஜக-வும் முன் நிறுத்தி வருகின்றன. உத்தரப் பிரதேசத்தில் ஞானவாபி மசூதியும் மதுராவிலுள்ள ஈத்கா மசூதியும் இவர்களின் அடுத்த இலக்காக இருக்கிறது. அவ்விரு இடங்களிலும் இந்துக் கோயில்கள் கட்டப்பட வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது. 1991-ம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் அதன் பின்னணியையும் மதவாத அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

## பொருளாதார வளர்ச்சி:

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது மற்ற நாடுகளில் இல்லாத அளவிற்கு மனித வளம், மண் வளம் என எல்லா வளங்களும் இந்தியாவில் இருக்கிறது. ஆனால் அதற்கேற்ற வளர்ச்சி இந்தியாவில் இல்லை என்பதே யதார்த்தம். உலகில் மிகப்பெரிய பொருளாதார நாடென்றும் பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டோம் எனக் கூறுவதும் ஏட்டில் மட்டுமே இருக்கிறது. நடைமுறை வாழ்க்கையில் பல்வேறுபட்ட உலக வளர்ச்சிக் குறியீடுகளில் இந்திய மக்களும் இந்தியாவும் மிகவும் பின்தங்கியிருப்பதை இந்திய ஆளும் கட்சி புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் மொத்த வருமானம் பற்றிப் பேசும் அரசாங்கம் தனிமனித வருமானத்தில் மிகவும் பின்தங்கியிருப்பதை மறைத்து வருகிறது. ஐ.நா மனித வளர்ச்சி அட்டவணைப்படி, 187 நாடுகளில் 135-வது இடத்தில் இந்தியாவிருந்து வருகிறது. கோடிக்கணக்கானவர்கள் இன்றும் வறுமையில், ஒரு வேளை உணவுடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

இந்தியா எதிர்பார்த்த வளர்ச்சியை எட்டாததற்குப் பிரதான காரணம் மதமும் சாதியமும் ஆகும். தேர்தல் வாக்குகளை முழுமையாக நம்பியிருக்கும் பாஜக போன்ற பெரும்பாலான அரசியல் கட்சிகள் மதக் கண்ணோட்டத்துடன் அரசியல் செய்ய முற்படுவதும், மக்களும் மத நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் பின்னடைவுக்குக் காரணமாகிறது. இன்றைய பாஜக அரசு பெரும்பான்மை இந்து மக்களின் வாக்குகளை முழுமையாகப் பெறும் எண்ணத்துடன் அரசியல் செய்து வருகின்றன. அண்மைக் காலங்களில் மத வழிபாடுகளும் அதிகரித்து வருகின்றன. இந்தியாவின் இன்றைய அரசாங்கம் பொருளாதாரச் செயற்பாடுகளில் அதிக அக்கறை காட்டாது மத அரசியலில் அதிக கவனம் செலுத்தி வருவதைக் காண முடிகிறது.

## மத வெறுப்புணர்வு:

அண்மைக் காலங்களில் மத வெறுப்புணர்வும் அதிகரித்து வருகின்றது. ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் - குறிப்பாக பாஜக-வினர் இதனைக் கடைப்பிடித்து வருகின்றனர். தேர்தல் நேரங்களில் சிறுபான்மையினர் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். 80% மத வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் பாஜக ஆளும் மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன. 17 மாநிலங்களில் 42% மத வெறுப்புப் பேச்சுக் கூட்டங்கள் நடந்துள்ளன. மணிப்பூர் வன்முறையில் 254 கிறிஸ்தவத் தேவாலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துக்கும் மதமே அளவுகோலாக மாறியுள்ளது. மத நல்லிணக்கம் தேய்ந்து வருவதற்கு அரசியலே காரணமாகி விடுகிறது.

பெரும்பான்மை இந்து மக்களின் வாக்குகளை முழுமையாகப் பெறும் நோக்குடன் தேர்தல் காலங்களில் தரந் தாழ்ந்த மதங் கலந்த அரசியல் பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன. பிரதமர் தொடங்கிச் சாதாரண கிராமத்துக் கவுன்சிலர் வரை இதனைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. கடந்த வருடம் கர்னாடகச் சட்டமன்றத் தேர்தலின் போது பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்து வாக்காளர்களிடம் வாக்களிக்கும் போது 'பஜ்ரங்பலி கி ஜெய்' என்ற கோஷத்துடன் வாக்களிக்கக் கேட்டுக் கொண்டதை நாடே அறியும்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இராமர் கோயில் என்ற அஸ்திரம் மட்டுமல்லாது CAA எனப்படும் குடியுரிமைச் சட்டமும் அமுல் நடத்தப்படும் எனப் பாஜக அரசின் உள்நாட்டு அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் எச்சரிக்கைப் பாணியில் பேசி வருவதைக் காணலாம். இதனால் பாதிக்கப்படும் இஸ்லாமிய மக்களுக்கெதிராக இந்துப் பெரும்பான்மையைத் தேர்தல் களத்தில் ஒன்று திரட்டுவதே இதன் அடிப்படை நோக்கமாகும். இதேபோன்று அண்மையில் உத்தரகாண்ட் மாநிலத்தில் பொதுச் சிவில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது நாடெங்கும் அமுல் நடத்தப்படும் எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் யூனியன் பிரதேசங்களும் தனித்துவமான கலை, கலாச்சாரம், மொழிப் பண்பாட்டைக் கொண்டுள்ள நிலையில் குறிப்பிட்ட மதஞ்சார்ந்த பொதுச் சட்ட நிர்வாக நடைமுறையைப் பொதுக் கருத்து எதுவும் கேட்காது திணிக்க முயல்வது மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிரானதாகும்.

பாபர் மசூதி இடித்து இராமர் கோயில் கட்டடம் கட்டப்பட்ட ஈரம் காய்வதற்கு முன், ஆக்கிரமிப்பு என்ற பெயரில் உத்தரகாண்ட் மாநிலத்தில் இஸ்லாமிய வழிபாட்டுத் தளங்கள், இஸ்லாமிய மதரஸாக்கள் புல்டோசர் கொண்டு இடிக்கப்பட்டு வருகின்றன. இச்செயல் காரணமாக மதக் கலவரம் ஏற்பட்டுச் சிலர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்த நிலையையும் காணமுடிகிறது. உத்தரப் பிரதேசத்திலும் இஸ்லாமியர்களின் வீடுகள் ஆக்ரமிப்பு இடம் என்ற பெயரில் இடிக்கப்பட்டதைக் காணமுடிகிறது. இந்தியாவெங்கும் இந்து வழிபாட்டுத் தலங்களும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை மதக் கண்ணோட்டம் கொண்ட ஆட்சியாளர்கள் கண்டுகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டுகளையும் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழ் நாட்டிலும் அண்மைக் காலங்களில் அரசியலில் மத நெடி அதிகமாக வீசுவதைக் காணமுடிகிறது. பெரியார் மண் என்ற நிலை ஆழமாகப் பதிந்துள்ள தமிழ் நாட்டை ஆன்மீகப் பூமியாக மாற்றும் முயற்சியில் தமிழக பாஜக தலைமை இறங்கியுள்ளதை அதன் நடவடிக்கைகளிலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது. ஆன்மீகத்தைக் கோயில் வழிபாடுகளில் முன்னிறுத்தினால் பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற அரசியல் நோக்கம் கொண்ட பாஜக அரசியலை மதத்துடன் இணைத்துப் பார்க்க முயல்வதைத் தமிழ் நாட்டில் காணக்கூடியதாக இருக்கிறது. பக்தி என்பதைத் தாண்டி அரசியல் பண்ணுவதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. பாஜக ஆளும் பல மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான கோவில்கள் அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. ஆனால் அதே பாஜக-வினர் தமிழ் நாட்டில் கோயில்களை அரசு அறநிலையத் துறை மூலம் நிர்வகிக்கக் கூடாது என்கின்றனர்.

இவ்வாறு பாஜக ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை உற்று நோக்கினால் அவர்கள் இந்தியாவை இந்து நாடாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயங்கமாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. பாஜக, ஆர்.-எஸ்.எஸ், இந்து மகாசபை, சிவசேனா போன்ற தீவிரவாத வலதுசாரி மத அமைப்புகள் இந்து மதத்தை அரசியலில் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. இது இந்திய மக்களுக்குப் பெரும் ஆபத்தாக முடியலாம். மதத்திலிருந்து அரசியல் விலகி இருப்பதோடு அரசாங்கமானது நடுநிலையோடு செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.



jeyasingh@thaiveedu.com





# மார்ச் 08
# சர்வதேசப் பெண்கள் நாள்

**- சி. நற்குணலிங்கம்**

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்றார் கவிமணி தேசிக விநாயம்பிள்ளை. பெண்களுக்கான முக்கியத்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், உலகம் முழுவதும் கொண்டாடப்படும் தினங்களில் பெண்கள் நாள் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததும், முக்கியத்துவம் வாய்ந்ததும் என்று சொன்னால் மிகையாகாது. இன்றைய காலகட்டத்தில் அந்நாளை வெறும் வார்த்தைகளால் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்ளும் நாளாக அல்லாமல், அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நாளாகக் காரணமாக இருந்தவர்களையும், அதன் முக்கியத்துவம் மற்றும் வலிகள் நிறைந்த வரலாற்று பின்னணியையும் நினைவிற் கொள்ள வேண்டும். மனிதகுல வரலாற்றின் ஆரம்பத்தில் பெண்ணடிமைத்தனம் என்ற ஒன்று இருந்ததில்லை. அது பெண்களுக்கான அனைத்து உரிமைகளையுமுடைய தாய்வழிச் சமூகமாகவே இருந்தது. மெல்ல, மெல்ல நிலவுடமை சமூக அமைப்பு உருவெடுத்தது. இதன் விளைவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேலைப் பிரிவினை தோன்றியது. பெண்கள் வாரிசுகளுக்காகவும் குடும்ப அமைப்புக்காகவும் மட்டும் என்ற தோற்றம் உருவெடுத்தது.

கி.பி.1789-ல் பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரிஸ்ப் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். பெண்களும் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெறவேண்டும் என்றும், உழைப்புக்கேற்ற ஊதியம், 16 மணிநேர வேலையைக் குறைக்க வேண்டும், வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. நாட்கள் செல்லச் செல்ல பெண்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது.

18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நியூயோர்க்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் ரஷ்யா, இத்தாலி, போலந்து போன்ற நாடுகளிலிருந்து பணிக்காகக் குடிபெயர்ந்து வேலை செய்து வந்தனர். மணிக்கணக்கில் வேலை, குறைந்த ஊதியம் என்பவற்றுடன் அவர்கள் வேலை செய்வதற்கு பயன்படுத்தும் ஊசி, நூல், உட்காருவதற்கான நாற்காலி தொடங்கி அனைத்திற்கும் வரியும் கட்ட வேண்டும் என்ற அவலநிலை. அத்துடன் வேலையில் ஏற்படும் பாதிப்பு, கழிவறையை அதிக நேரம் பயன்படுத்துவது போன்றவற்றுகெல்லாம் அபராதத்தொகையும் வசூலிக்கப்பட்டது. அந்நாட்களில் தொழிலாளர் போராட்டம் என்பது ஆண்களை மையப்படுத்தியே இருந்தது. பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தாங்களே களம் காண முடிவு செய்தனர். 18-ம் நூற்றாண்டில் பெண்களென்றால் வீட்டு வேலைகளுக்கு மட்டும் பொருத்தமானவர்கள் என்று முடக்கி வைக்கப்பட்டார்கள். இந்த நிலை மெல்ல, மெல்ல மாறித் தொழிற்சாலை, அலுவலகம் உள்ளிட்டவைகளில் பெண்கள் கால்பதிக்கத் தொடங்கினர். ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பணியில் கால் பதித்தாலும் அவர்களுக்கான ஊதியத்தில் தொடர்ந்து பாகுபாடு காட்டப்பட்டது. ஊதியத்தில் மட்டுமன்றி உரிமையிலும் அநீதி இழைக்கப்பட்டது. 1820-ம் ஆண்டில் முதன்முதலில் நியூ இங்கிலாந்துப் பகுதியில் தையல் நிறுவனப் பெண்கள் இணைந்து முதல் வேலை நிறுத்தம் செய்தனர். இவற்றில் புகழ் பெற்றது மசாச்சூசெட்ஸிலுள்ள பருத்தி ஆலையில் நடைபெற்ற வேலை நிறுத்தம். வெறும் மூன்று டொலருக்கு 81 மணிநேர வேலை. அதிலும் ஒன்றேகால் பணத்தை விடுதிக்கும், உணவுக்கும் கழித்துக் கொள்வார்கள். இந்தப் பின்னணியில்தான் உழைக்கும் பெண்கள் சங்கம் உருவானது. இப்படியான சங்கங்கள் பல வளரத் தொடங்கின.

1908-ம் ஆண்டில் குறைந்த வேலை நேரம், உழைப்புக்கேற்ற ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி 15,000 பெண்கள் அணிதிரண்டு நியூயோர்க் நகரை ஸ்தம்பிக்கச் செய்தனர். அப்போது படையினரால் கொடூரமாகப் பெண்கள் தாக்கப்பட்டனர். அதைத் தாங்கிக்கொண்ட பெண்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அவர்களின் இலக்கு தெளிவாக இருந்தது. அதன் விதைகள் வேரூன்றப்பட்டன. பல ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விடியலை மனதில் ஏற்று வீறுநடை போட்டனர். விழிப்புணர்வு மேலும் அதிகரித்துப் போராட்டம் தீவிரமடைந்தது. உழைக்கும் பெண்களைத் தாண்டி, நடுத்தர, மேல்தட்டு வர்க்கப் பெண்களும் போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டதன் மூலம் போராட்டம் வலுப்பெற்றது. பெண்களின்

அடிப்படை உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் இயக்கமாக மட்டும் இயங்காமல் சமூகத்தில் நிலவும் அவலங்களுக்கும் சேர்த்தே போராடத் துணிந்தனர். ஒரு வருடம் கழித்து அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சி முதல் தேசிய பெண்கள் நாளை அறிவித்தது. இந்த நாளைச் சர்வதேச மயமாக்கவேண்டும் என்ற எண்ணம் கம்யூனிஸ்ட் ஆர்வலர் மற்றும் பெண்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் கிளாராஜெட்சின் என்ற பெண்ணிடம் இருந்து வந்தது.

1910-ம் ஆண்டில் டென்மார்க்கின் தலைநகரம் கோப்பன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் கிளாராஜெட்சின் தனது அவ்வெண்ணத்தைப் பரிந்துரைத்தார். அங்கு 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் இருந்தனர். அவர்கள் கிளாராஜெட்சினது ஆலோசனையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். சமூகப் பிரச்சினைகள் பற்றிய சோஷலிசக் கண்ணோட்டத்துடன் பெண்கள் பிரச்சினை அனைத்துடனும் வாக்குரிமைக் கோரிக்கையை இணைத்து விவாதிக்கவேண்டும் என்கிற அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுதான் சர்வதேச பெண்கள் நாள் உருவாகக் காரணமாக இருந்தது. அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்த கம்யூனிஸ்ட் தலைவர் கிளாராஜெட்கின் என்பவருக்கே அப் பெருமை சேரும். 1911-ம் ஆண்டிலிருந்து ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, மற்றும் சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் பல தேதிகளில் சர்வதேச பெண்கள் நாள் கொண்டாடப்பட்டு வந்தது.


முதலாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, 1917-ல் ரஷ்யாவில் போர் வேண்டாம் ‘அமைதியும் உணவும்தான் தேவை’ என்று வலியுறுத்திப் புரட்சிப் போராட்டத்தைத் தொடங்கும்வரை பெண்கள் நாள், இந்த நாளில்த்தான் (மார்ச் 08-இல்) கொண்டாடப்பட வேண்டும் என்பது முறைப்படுத்தப்படவில்லை. அவர்களின் நான்கு நாள் போராட்டம் பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கியது. ரஷ்யாவில் அப்போது பயன்பாட்டிலிருந்த ஜீலியன் நாட்காட்டியில் பெண்கள் வேலை நிறுத்தம் தொடங்கிய திகதி பெப்ரவரி 23 ஞாயிற்றுக் கிழமையாக இருந்தது. கிரிகோரியன் நாட்காட்டியில் இந்த நாள் மார்ச் 08 ஆக இருந்தது. இதற்கமையவே சர்வதேச பெண்கள் நாளாக மார்ச் 08-ல் ஆண்டுதோறும் கொண்டாடப்பட வேண்டும் என்று 1921-ல் மாஸ்க்கோ நகரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலம் அமைப்பின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அதிலிருந்து உலகம் முழுவதும் மார்ச் 08-ம் திகதியில் சர்வதேச பெண்கள் நாள் கொண்டாடப்படுகிறது.

ரஷ்யாவில் ஜார் மன்னரின் ஆட்சிக்கெதிராக 1917 நவம்பர் ஏழு அன்று லெனின் தலைமையில் புரட்சி நடந்தது. நான்கு நாள் நீடித்த இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய முடி மன்னரான ஜார் அரியணையை விட்டு இறங்குவதற்கான அழுத்தத்தைத் தந்தது. முடியாட்சியும் முடிவுக்கு வந்தது. முடியாட்சிக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. இந்த மாற்றம்தான் 1917-ல் உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த புகழ்பெற்ற ரஷ்யப் புரட்சிக்கும் அதன் விளைவாக உலகெங்கும் சோஷலிஸ்ட் அரசுகள் தோன்றுவதற்கும் முன்னோட்டமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கெதிரான பாகுபாட்டை அகற்றுவதற்கான பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஐக்கிய நாடுகளின் பெண்களின் நிலை குறித்த ஆணையம் பல ஆண்டுகள் பணியாற்றிய பிறகு 1965-ல் பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு பிரகடனத்தைப் உருவாக்குவதற்கு ஆர்வத்துடன் பணியாற்றத் தொடங்கியது. கல்வி, வேலைவாய்ப்பு, வாரிசு உரிமை, தண்டனைச் சீர்திருத்தம் மற்றும் பிற சிக்கல்களை உள்ளடக்கிய பதில்களைத் தொகுத்து அரசாங்கம், தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா ஊழியர்களிடமிருந்து இதன் பிரதிநிதிகள் பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை அகற்றுவதற்கான பிரகடனத்தை விரைவாகக் கொண்டுவந்தனர். 07.11.1967 அன்று இது பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்டது. பிரகடனத்துக்கு ஆதரவு கிடைத்தவுடன் அடுத்த கட்டமாக இது குறித்த ஒரு மாநாட்டிற்குத் தயாராக வேண்டியிருந்தது. தாமதங்கள் இருந்தபோதிலும் 1972-ல் ஐக்கிய அமெரிக்கப் பேரவை இதில் ஒரு தலைப்பை இயற்றியது. கூட்டாட்சி நிதியைப் பெறும் எந்த ஒரு நிறுவனத்திற்கும் கல்வியில் பாகுபாட்டை நீக்கியது. இதற்கிடையில் பெண்கள் சர்வதேச ஜனநாயகக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பெண்களின் சமத்துவம் இன்மையை நிவர்த்தி செய்ய ஒரு சர்வதேச பெண்கள் ஆண்டு மற்றும் மாநாட்டிற்கு நீண்ட காலமாக அழுத்தம் கொடுத்து வந்தனர். பின்னர் 1975-ம் ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐ.நா சபை பிரகடனப்படுத்தியது. மார்ச் எட்டாம் திகதி பெண்களுக்கான சிறப்பு நாளாகும். சர்வதேச பெண்கள் நாள் தொழிலாளர் இயக்கத்திலிருந்து வளர்ந்து ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புக்குரியதாகும்.

சர்வாதிகார அரசுக்கெதிராகத் தமது உரிமைகளை மீட்பதற்கான உழைக்கும் பெண்களின் புரட்சியை நினைவு கூர்வதற்காக உருவானதுதான் சர்வதேச உழைக்கும் பெண்கள் நாள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. உழைக்கும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதும் அனைத்துப் பணிகளிலும் அனைத்து நிலைகளிலும் பாலினச் சமத்துவத்தை உறுதி செய்வதும்தான் சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்டங்களுக்கு அர்த்தம் சேர்க்கும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அறிவிப்புக்குப் பின் வந்த முதல் சர்வதேசப் பெண்கள் தினத்தின் முதல் முழக்கம் ‘சமத்துவத்தை யோசி, அறிவுபூர்வமாகக் கட்டியெழுப்பு, மாற்றத்திற்காகப் புதுமையாகச் சிந்தி’ என்பதாகும். 2023-ம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் கருப்பொருள் ‘பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்’ ஆகும். இந்தக் கருப்பொருள், தொழில்நுட்பம் மற்றும் இணையவழிக் கல்விக்குப் பெண்கள் ஆற்றிவரும் பங்களிப்பை அங்கீகரித்துக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதுமைப் பெண்களை உருவாக்கவும், பெண் என்றால் தாழ்வு என்ற எண்ணம் மறையவும் பாரதி தனது படைப்புகளில் தடம் பதித்தான். ஆடவர் செய்கிற அனைத்துப் பணிகளையும் பூவையர் செய்ய வேண்டும் என்ற அவரது அவா இன்று நிறைவேறியிருக்கிறது. பெண்கள் அனைவரும் தங்கள் ஒருமைப்பாட்டைக் காண்பிக்கும் பொருட்டு அந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பெண்கள் பல சாதனைகள் படைத்து வெற்றி நடை போட்டாலும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளும் அதனால் பெண்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் சவால்களும் தொடர்ந்தவண்ணமே இருப்பது வருத்தத்திற்குரியதாகும்.



natkunalingam@thaiveedu.com




தமிழ் இலக்கிய மரபைப் பெண்ணியக் கோட்பாட்டு விமர்சனத்திற்கு உட்படுத்தும் இக்கட்டுரை, தமிழிலக்கிய வரலாற்றின் முக்கிய கால கட்டங்களில் தோன்றிய பிரதான சில நூல்களை ஆதாரமாகக் கொண்டு, ஆணாதிக்க சமூகம் (patriarchy) கட்டமைக்கும் பெண் பிம்பங்களைச் சுருக்கமாக நோக்குகின்றது. காலந்தோறும் சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப தமிழிலக்கியம் கட்டமைக்கும் பெண்ணின் பிம்பங்கள் வெவ்வேறானவையாகத் தோற்றமளிப்பினும், உண்மையில் அவற்றிற்கிடையே வேறுபாடுகள் பெரிதாக ஏதுமில்லை எனும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆணின் உடைமையாகவும், அவன் போகத்திற்குரிய பொருளாகவும், அவனின் வாழ்க்கைக் குறிக்கோள்களை நிறைவேற்றுதற்குத் துணையான சாதனமாகவுமே பெண் கருதப்பட்டமையால் அந்நோக்கங்களுக்கு இயைவாகவே அவளது இயல்பும், பண்புகளும், அறமும் வரையறுக்கப்பட்டன. இவற்றின் அடிப்படையில் சமூகம் வகுத்த ஒழுக்கம், விதிமுறைகளைப் பின்பற்றுபவர்கள் நல்ல பெண்கள் எனக் கருதப்படலாயினர். தமிழிலக்கியத்தில் காணப்படும் நல்ல பெண்ணின் பிம்பங்கள் பெண்களின் நடத்தைக்கு வழிகாட்டிகளாக படைக்கப்படுள்ளன. இதன் மூலம், பெண்ணை ஆணாதிக்க சமூகத்துள் ஆற்றுப்படுத்தி, அதில் அவளை அமிழ்த்து தலைத் தமிழிலக்கிய நூல்கள் காலங்காலமாகச் செய்து வந்துள்ளன. எனவே, விமர்சனப் பார்வையுடன் இலக்கியத்தை அணுகல் வேண்டும் என்பது முக்கியமானதாகின்றது. பெண்ணிய நோக்குநிலையூடாக இங்கு இலக்கியத்தை அணுக முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. பெண்களுக்கு முன்மாதிரியான பாத்திரங்களைத் தமிழிலக்கியம் கூறவில்லையா என்ற வினாவைக் கட்டுரையின் முடிவில் எழுப்பி, எனது கருத்துகளைக் கூறியுள்ளேன்.

தமிழிலக்கியம் காட்டும் சமூக அமைப்பானது ஒரே மாதிரியாக இருக்கவில்லை என்பதும், மாறிக்கொண்டே வந்துள்ளது என்பதும், மாறிவரும் அச்சமூக அமைப்பில் செல்வாக்கும், அதிகாரமும் படைத்தவர்கள் தம் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள பிராமணியம், ஜைன, பௌத்த மதங்கள், கிறிஸ்தவ மதம் என்பவை துணையாக இருந்திருக்கின்றன என்பதும் நினைவில் கொள்ள வேண்டியவை. ஆணாதிக்கக் கருத்தியலை இலக்கியத்தில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் மதங்கள் புகுத்தியுள்ளன என்பது நிதர்சனம்.

ஆணாதிக்க சமூகத்தில், ஆணின் மற்றமையாகப் பெண் கட்டமைக்கப்படுகின்றாள் (women are constructed as other). அவள் எவ்வாறு ஆணிலிருந்து வேறுபடுகிறாள், ஆணிடம் இருப்பன எவையெல்லாம் அவளிடம் இல்லை என்பவற்றினால் பெண்ணின் அடையாளம் வரையறுக்கப்படுகின்றது. இதனால் அவள் வெறும் பொருளாக மட்டும் பார்க்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும், ஒதுக்கப்படுவதும் சாத்தியமாகின்றன.

அறிவு, நிறை, ஓர்ப்பு (ஆராய்ந்துணர்கை), கடைப்பிடி (உறுதி அல்லது நன்றென அறிந்த பொருளை மறவாமை) என்பன ஆணின் குணங்களாகவும் (பிங்கல நிகண்டு), அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன பெண்ணிற்குரிய குணங்களாகவும் (இறையனார் அகப்பொருள் உரை) தமிழிலக்கியத்தில் கருதப்படுகின்றன. இங்கு அறிவு என்பது ஆணுக்கு மட்டும் உரித்துடையதாகக் கொள்ளப்படுவது கவனத்திற்குரியது. எனவே, அறிவிலி என்ற பொருள் தரும் பேதை எனும் சொல் பெண்பாலாரைக் குறிக்க நூல்களில் பயின்று வந்துள்ளது.

இவ்வாறு பண்புகளால் ஆணின்று வேறாகக் கணிக்கப்பட்ட பெண் எவ்வாறு தமிழிலக்கியத்தில் காலம் காலமாகச் சித்திரிக்கப்படுகின்றாள் என்பதை சங்காலம், சங்க மருவியகாலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், நவீன காலம் என்னும் காலப் பிரிவுகளின் கீழ்ச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

### சங்ககாலம்:

முதலில் எமக்குக் கிடைக்கும் இலக்கியங்களுள் மிகப் பழமையானவை என்று கருதத்தக்க சங்க இலக்கியத்தை எடுத்துக் கொள்ளலாம். இதன் ஆரம்ப காலகட்டங்களில் குலக்குழுக்கள் கொண்ட சமத்துவ சமூகமாகத் தமிழ்ச் சமூகம் திகழ்ந்தது என்று சில ஆய்வாளர் கூறுவர். சித்திரலேகா மௌனகுரு; ‘சங்கால இலக்கியம் சித்திரிக்கும் சமூகம் இனக்குழு நிலைமையைக் கொண்டதாகும்... அரசு, நிலவுடைமை,

சமயம் போன்ற நிறுவனங்கள் அதிகளவு வளர்ச்சி பெறாத சமூகமாக அது அமைந்திருந்தது. பொதுவாக இனக் குழுச் சமூகத்தில் பெண்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தின் சில அம்சங்களைச் சங்க இலக்கியப் பெண் பாத்திரங்களிலே காணுதல் முடியும்' என்று கூறுகிறார் (பெண்களும் தொடர்பு ஊடகங்களும், பக்கம் 2). திணைப்புனத்திலும், தனியிடங்களிலும் தாம் விரும்பியவருடன் புணர்ந்து மகிழும் பெண்கள், இல்லத்திற்குள் தம் நடமாட்டத்தைக் குறுக்காது பொது வெளிகளில் நடமாடும் பெண்கள், உற்பத்தியிற் பங்கெடுக்கும் பெண்கள் எனச் சங்க காலப் பெண்ணின் பன்முகதரிசனம் கிட்டுகின்றமையால் அவள் பிற்கால பெண்களிலிருந்து வேறுபட்டவளாக விளங்குகின்றாள் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

எனினும் சங்க இலக்கியம் குலக்குழுச் சமூக நிலையை முற்றுமுழுதாகப் பிரதிபலிக்கின்றது என்று கூறமுடியாது. குலக்குழுச் சமூகமாக இருந்து தனியுடைமைச் சமூகமாக மாறி வருகின்ற காலகட்டத்தையே சங்க இலக்கியத் தொகுப்பு நூல்கள் பிரதிபலிக்கின்றன. எனவே, சங்காலப் பெண்டிர் சுதந்திரமாக இயங்கினர் எனக் கூற இயலாது. காதலனைக் களவாகச் சந்தித்து அவனுடன் மகிழ்ச்சியுற்றிருக்கும் தருணங்கள் சமூக அங்கீகாரம் பெற்றன அல்ல. காதலிக்கிறாள் என்று தெரிந்ததும், வீட்டினுள் பூட்டி வைத்து இற்செறிப்பு மூலம் அவளின் வெளி நடமாட்டத்தைப் பெற்றோர் முடக்குகின்றனர். ஊர் அலருக்குப் பெண்கள் அஞ்சுகின்றனர். சேர்ந்து வாழ முடியாது எனும் தருணத்தில் உடன்போக்கில் காதலனுடன் சென்று விடுகின்றனர். இவை பெண் சுதந்திரம் மட்டுப்பட்டுத்தப்பட்டிருந்தமையைக் காட்டுகின்றன.

**ஆடவர் மனதில்**

**பெண்ணைக்குறித்து ஆசை எழுந்தால்**

**அது பெண்ணின் பிழையே அன்றி**

**ஆணின் பிழை அன்று என்ற கருத்தும்**

**எடுத்துரைக்கப்படுகிறது.**

**பிற ஆடவர் மனதில் ஆசையைத்**

**தூண்டாதிருத்தலைக் கற்புடை மகளிரின்**

**சிறந்த பண்புகளுள் ஒன்றாக**

**சமண முனிவர்களால் இயற்றப்பட்ட**

**நாலடியார் எனும் அறநூல் கூறுகின்றது.**

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்ற புறநானூற்றில் வரும் பொன்முடியார் பாடல் தாய்தந்தையர் கடமைகளைக் கூறுகிறது. பிள்ளைகளைப் பெறுதல் எனும் தனிப் பெருங்கடமையுடன் பெண்ணின் அடையாளம் நிறைவுறுகிறது. 'இம்மை மாறி மறுமை ஆயினும் நீ ஆகியர் எம் கணவனை' எனும் கருத்துச் சிறப்பிக்கப்பட்டமையால் சுவையற்ற உணவு, பருக்கைக் கற்கள் மேல் பாயற்ற படுக்கை எனப் பெண்கள் கடுமையான கைம்மை நோன்பு அனுட்டித்தமை பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியத்தில் காணலாம். கொடுமையான கைம்மை விரதத்தைக் கைக்கொள்வதை விட, கணவனை எரித்த சிதையில் வீழ்ந்திறப்பேன். என்னைத் தடுக்காதீர்கள் என உடன் கட்டை ஏறத்துடிக்கும் பெருங்கோப்பெண்டு என்ற பெண்ணின் பாடலும் புறநானூற்றில் (246) உண்டு.

அத்துடன் பெண் போகப் பொருளாகக் கணிக்கப்பட்டமைக்கும் சங்க இலக்கியத்தில் காணப்படும் பரத்தமை பற்றிய குறிப்புகள் சான்று. இத்தகைய ஆடவரைப் பொறுத்துச் செல்லலே பெண்ணுக்கு அழகு எனக் கருதப்பட்டது.

### சங்கமருவியகாலம்:

சங்காலத்திற்கு அடுத்த 4-ம், 5-ம் 6-ம் நூற்றாண்டுகளை உள்ளடக்கிய சங்க மருவிய காலத்தில் சமூகத்தின் உற்பத்திப் பெருக்கம், வர்க்கப் பிரிவினை காரணமாகப் பெண்களின் நிலைமை இன்னும் கடினமாகின்றது. இக்காலத்தில் எழுச்சி பெற்ற வணிகர் குலத்தினரால் ஆதரிக்கப்பட்ட ஜைன, பௌத்த மதங்களின் செல்வாக்கால் தோன்றிய அறநூல்கள் பெண்ணிற்குக் கடுமையான ஒழுக்க வரையறைகளை வகுக்கின்றன. கற்புக் கோட்பாடு அறநூல்களில் கருத்துருவம் பெறுகிறது. இல்லற மகளிருக்குக் கற்பு வலியுறுத்தப்படுகின்றது. இக்காலப்பகுதில் எழுந்த திருக்குறள்

***'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்***
***திண்மையுண் டாகப் பெறின்'***

என்றும்,

***'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை'***

என்றும், கற்பினைப் பேணும் பெண்ணின் மாண்பினை எடுத்துரைக்கிறது. கணவனே தெய்வமாதலால் பெண்ணிற்கு வேறு தெய்வம் தேவையில்லை என்ற கருத்தும் குறிப்பால் பெறப்படுகின்றது.

மேலும், ஆடவர் மனதில் பெண்ணைக்குறித்து ஆசை எழுந்தால் அது பெண்ணின் பிழையே அன்றி ஆணின் பிழை அன்று என்ற கருத்தும் எடுத்துரைக்கப்படுகிறது. பிற ஆடவர் மனதில் ஆசையைத் தூண்டாதிருத்தலைக் கற்புடை மகளிரின் சிறந்த பண்புகளுள் ஒன்றாக சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியார் எனும் அறநூல் கூறுகின்றது: *'விரும்பிப் பெறுநசையால் பின்னிற்பார் இன்மையே பேணும் நறுநுதலாள் நன்மைத் துணை'* ( 381)

கணவனின் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளல் என்பது கற்புடை மகளிரின் பெருஞ் சிறப்பு என்பதை இக்காலகட்டத்தில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் காட்டுகிறது. இன்னொரு பெண்ணிடம் சென்று விட்டுத் திரும்பிய கணவன் கோவலனை எவ்விதக் கேட்டுக் கேள்வியுமின்றி ஏற்றுக்கொள்வதுடன் அவன் பொருளீட்டத் தனது சிலம்பையும் கொடுத்து கற்புடைய மாதருக்கு இலக்கணமாகிறாள். *'கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணார் மங்கை மாதர் பெருங்கற்பு என்று அறிந்தேன் வாழி காவேரி'* என்று கானல் வரியில் கோவலன் பாடுவதையும் இங்கு குறிப்பிடலாம்.

அதே சமயம் வரைவின் மகளிர், பொருட்பெண்டிர் என்று அற நூல்கள் இழித்துரைக்கும் பரத்தையர் அல்லது கணிகை குலத்தினர்க்கு மாற்று வாழ்க்கை முறையை மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கிறது. இதில் மாதவி எனும் கணிகைக்கும், கண்ணகியின் கணவன் கோவலனுக்கும் பிறந்த மணிமேகலை தன் குலத்தொழிலைக் கைவிட்டுத் துறவு பூண்கிறாள். அமானுஷ்ய ஆற்றல்கள் பல பெறுகிறாள். எனினும் பெண்ணாக இருத்தல் அவள் சமயப் பாதையில் முன்னேறுவதற்

**கண்ணகியின் கணவன் கோவலனுக்கும் பிறந்த மணிமேகலை தன் குலத்தொழிலைக் கைவிட்டுத் துறவு பூண்கிறாள். அமானுஷ்ய ஆற்றல்கள் பல பெறுகிறாள். எனினும், பெண்ணாக இருத்தல் அவள் சமயப் பாதையில் முன்னேறுவதற்குத் தடையாகவே இருக்கிறது.**

குத் தடையாகவே இருக்கிறது. வெவ்வேறு சமயத்தினரின் கொள்கைகளை அறிய அவள் வேற்றுருக் கொள்ளவேண்டியுள்ளது. மாதவன் அதாவது ஆண் துறவி வடிவு கொண்டே சமயவாதிகளை அணுகுகின்றாள். மேலும், பௌத்த தத்துவத்தின் பிரகாரம், சம்சார விடுதலைக்கு பெண் பிறப்பினள் ஆகிய அவள் அருகதை உடையவள் அல்லள். அதனால் அந்நூலில் வருவது உரைக்கும் கந்திற்பாவை *'காஞ்சி மாநகரிலே நினது உயிர் பிரிந்த பின்னர் வடமகத நாட்டிலே நீ அடையும் பிறப்புகள் எல்லாம் ஆண் பிறப்பாகத் தோன்றி புத்தனின் முதன் மாணாக்கனாய்ப் பற்றுகளை அறுத்து நிருவாணம் அடைவாய்'* என்று மணிமேகலைக்கு கூறுகிறது. (21:172-179). துறவு நிலையிலும் பெண் ஆணுக்கு நிகராக மாட்டாள்.

**பல்லவர் காலம்:**

அடுத்து, நிலவுடைமையாளர்களும் வைதிகப் பிராமணர்களும் ஒன்று சேர்ந்து முன்னெடுத்த பக்தி இலக்கிய காலமான பல்லவராட்சிக்காலம் பிராமணியக் கருத்துகள் வேரூன்றத் தொடங்கிய காலமாகும். ஒரு பக்கம் காரைகாலம்மையார், ஆண்டாள் எனப் பக்தி இலக்கியத்தைப் பெண்கள் படைத்த காலகட்டம். இறைவனை ஆண் பெண்ணாகப் (அர்த்தநாரீஸ்வரர்) பார்த்த காலம். எனினும் இவற்றையும் மீறி பெண்ணிருப்பும் அவள் பேச்சும் இகழப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

***கண்ட பேச்சினில் காளையர் தங்கள் பால்***
***மண்டி ஏச்சுணும் மாதரைச் சேராதே***
***சண்டி ஈச்சரவர்க்கு அருள் செய்தவக்***
***கொண்டி ஈச்சுரவன் கழல் கூறுமே***

*'காளையர்களைத் தம்பால் ஈர்க்கும் பொருட்டு கண்ட கண்ட பயனில் சொல் பேசி, அவ்வாடவர்களாலேயே கடியப்படும் பெண்களுடன் சேராதீர்கள்'* என்று அப்பரின் இத்தேவாரம் அறிவுறுத்துகிறது. இங்கு பெண்ணின் பேச்சையும், நடத்தையையும் சீர்மை செய்பவர் ஆண்களே என்ற கருத்துக் குறிப்பாற் பெறப்படுகிறது.

அத்துடன், சிவ-சக்தி தத்துவத்தை நிலைநாட்ட எழுந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தை அப்பர் பாடும்போது அவ்வடிவின் ஒருபக்கம் வேதமோதுகிறது, மற்றப்பக்கம் புன்னகைத்துக் கொண்டிருக்கிறது எனப் பாடுகின்றார்.

***புதுவிரி பொன்செ யோலை யொருகா***
***தொர்காது சுரிசங்க நின்று புரள***
***விதிவிதி வேத கீத மொருபாடு மோத***
***மொருபாடு மெல்ல நகுமால்*** (4.8.10)

**இதன் பொருள்:** புதிதாகச் சுருள் பொன்னால் செய்யப்பட்ட ஓலை ஒரு காதிலும் வளைந்த சங்கு மற்றக் காதிலும் காதணிகளாக அமைந்து தோள்கள் மீது புரள, வலப்பாகம் (சிவன்) முறைப்படி வேதப்பாடலை ஒருபக்கம் ஓத, இடப்பக்கமாகிய பார்வதி பாகம் மென்மையாக முறுவல் செய்யும்.

வேதமோதும் உரிமை சமூகத்தில் பெண்களுக்கு இராததால், அந்த உரிமை இறைவிக்கும் மறுக்கப்படுகின்றது. அதே சமயம் இவ்வருணனையானது சிவனும் உமையும் ஓர் உருவினராக இருப்பதால் அவர்களுக்கிடையே சமத்துவம் உண்டு என்று கொள்ளவியலாது என்பதையும் புலப்படுத்தி நிற்கிறது.

**சோழர் காலம்:**

அடுத்து, நிலமானிய சமூகம் உச்சநிலையுற்றிருந்த சோழர் சாம்ராஜ்ய காலமான 10-14-ம் நூற்றாண்டுகளில் ஆணாதிக்க சமூக எதிர்பார்ப்புகளால் பெரும் இடருறும் பெண் பாத்திரங்களை இலக்கியத்தில் சந்திக்கின்றோம். முதலில் கம்பராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். அங்கு அசோகவனத்தில்

இராவணனால் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் சீதை. கடல் தாண்டித் தன்னைக் கண்டைந்த அனுமனிடம் அவள், ‘இலங்கை மட்டுமல்ல; எல்லையற்றுக் கிடக்கும் உலகங்க ளைக் கூட எனது சொல்லினாலே எரித்து விடும் சக்தி எனக் குண்டு; ஆனால் எனது அச்செயல் என் கணவனின் வீரத் திற்கு பங்கம் விளைவித்து விடுமே என வாளா விருக்கிறேன்’ என்கிறாள்.

***அல்லல் மாக்கள் இலங்கை அது ஆகுமோ?***
***எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்***
***சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்***
***வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்.*** (48)

கணவன் புகழ் நிறுவத்தான் அரக்கன் சிறையில் வருந்து வதை ஏற்றுக் கொண்ட சீதையை, இராமன் இராவணனைக் கொன்ற பின்னர் ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். சீதை தீக்கு ளித்துத் தன் புனிதத்துவத்தை நிரூபிக்கும் செயலானது, இவ் வாறு தசரதனால் நியாயப்படுத்தப்படுகின்றது:

***பொன்னைத் தீயிடைப் பெய்தல் அப்பொன்னுடைத் தூய்மை***
***தன்னைக் காட்டுதற்கு’ என்பது மனக்கொளல் தகுதி;***
***உன்னைக் காட்டினன், ‘கற்பினுக்கு அரசி’ என்று, ‘உலகில்***
***பின்னைக் காட்டுவது அரியது’ என்று எண்ணி இப்பெரியோன்.***

**பொருள்:** பொன்னை நெருப்பில் இடுவது அப்பொன் தூய பொன் என்பதைக் காட்டத்தான். அது போன்று பெரியோனா கிய இராமன் இச்சமயத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடை யாது என்று கருதி உன்னைக் கற்பிற் சிறந்தவள் என உலகத் தார்க்குக் காண்பித்தான்.

12-ம் நூற்றாண்டில் தோன்றிய பெரிய புராணத்திலும் பெண் ணிற்கு எதிரான வன்முறையைக் காண்கிறோம். ‘பொதுவாகப் பெரியபுராணத்தில் வரும் பெண்கள் அனைவரும் ஏதோ வகையில் தியாகம் செய்பவர்களாகவே காட்டப்படுகிறார்கள். ஒன்றில் இளமையையும் தமது வாழ்வையும் தியாகம் செய்ப வர்களாயிருப்பர். அல்லது, தங்கள் சொந்த விருப்பு வெறுப்பு களையோ அல்லது தமது அழகிய உடல் உறுப்புகளையோ தியாகம் செய்பவர்களாயிருப்பர். ‘பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் பெரும் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்’ என்று பாரதியார் பாடியது பெரியபுராணத்தில் வரும் பெண்க ளுக்கும் பொருந்தும் போல தெரிகிறது’ என்று ‘பெரியபுரா ணத்தில் பெண்கள்’ எனும் கட்டுரையில் சந்திரலேகா வாம-தேவா கூறுகின்றார்.

தமது மனைவி வீட்டிற்கு வந்த சிவனடியாரின் பாதம் கழுவச் சற்றுத் தயங்கியமையால் கலிக்கம்ப நாயனார் மனைவியின் கையை வெட்டுகிறார். இல்லையே என்னாத இயற்பகையார் தனது மனைவியைக் கேட்டு வந்த சிவனடியாருக்கு அவ ளைத் தானமாக அளித்து விடுகிறார். செருத்துணை நாய-னார் ஆலயத்தில் கீழே கிடந்த பூவை முகர்ந்து பார்த்ததால் அரசியின் மூக்கை அறுக்கின்றார். பூவை முகர்ந்த அவ்வரசி யின் கணவர் கழற்சிங்க நாயனார், கைதானே அப்பூவை முத லில் தீண்டியது என்று மூக்கறுபட்ட அவ்வரசியின் கையை வெட்டி விடுகிறார். அப்பொழுது ‘தெய்வ வாசமலர் மழை பொழிந்ததன்றே’ என்று பெரியபுராணம் கூறுகிறது.

### நாயக்கர் காலம்:

அடுத்து, 15-ம் நூற்றாண்டில் தொடங்கும் நாயக்கர்களின் ஆட்சிக்காலத்தில் பெண்களின் முக்கியத்துவம் இலக்கியங்க ளில் குன்றத் தொடங்குகின்றது. அவர்கள் துணைப் பாத்தி ரங்களாகவே அமைகின்றனர். அதாவது, தலைவனது பெரு மையை எடுத்தோதுவதற்காகவே பெண் பாத்திரங்கள் புகுத் தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இக்காலத்தில் எழுந்த இலக்கிய வகைகளுள் ஒன்றான உலாவைக் குறிப்பிடலாம். உலாச் செல்லும் தலைவனை ஐந்து வயது முதல் 40 வயது வரையிலான ஏழு பருவ மகளிரும் கண்டு காதல் கொள்வ தாக இவ்விலக்கியவகை அமைந்துள்ளது. இது பற்றி சித்திர லேகா மௌனகுரு பின்வருமாறு கூறுகின்றார்.

‘ஆணினுடைய அழகு, வீரம், புகழ் இவற்றில் தங்களை இழந்து அவனை அடையத் துடிக்கும் பேதைகளாகப் பெண் கள் சித்திரிக்கப்பட்டனர். இந்த ஆணில் கொண்ட விருப்பத்தி னால் பெண்கள் தங்கள் சுயநினைவை இழந்து செயற்படு வார்கள். நாணம், பயிர்ப்பு போன்ற பெண்மைக்குரிய குணங் களைப் பற்றி இச்சந்தர்ப்பங்களில் எவரும் அலட்டிக் கொள் வதில்லை. தெருவினால் உலா வரும் தலைவனைக் கண்டவு டன் காதலுற்று, மெலிந்து கைவளைகள் கழன்று விழவும், இடையிலிருந்து ஆடை தளரவும் ஏக்கமுறும் பெண்களை இப்பிரபந்தங்களிற் காணலாம். இப்பாத்திரங்கள் தலைவ னின் புகழைத் துலக்கிக் காட்டும் துணைப் பாத்திரங்களேயா கும். ஆண்களது பெண் பற்றிய கனவுருவப் புனைவாற்றலின் (Male Fantasy) இலக்கிய வெளிப்பாடுகளாக இவை அமைந் துள்ளன.’

கற்புடைய மகளிர் காதல் கொண்டனர் எனப் பாடுவது தமிழ் மரபுக்கு ஒவ்வாதது. எனவே, இவ்வாறு பாடப்பட்ட உலாவில் காதல் கொண்டவர் பொதுமகளிர் என உரையாசிரியர்கள் அமைதி கண்டனர்.

### நவீனகாலம்:

இறுதியாக 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் இலங்கை, இந்திய நாடுகளில் காலனித்துவ ஆட்சியும், தந்தை இறையாண்மைக் கொள்கை கொண்ட கிறிஸ்தவமத பரப்புகையும் சமூகத்தில் பெரு மாற்றங்களைக் கொணர்ந்தன. சமூகத்தில் பெண்ணின் இடம் என்ன என்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்தது. மரபு, பண்பாடு என்பன மீளுருவாக்கம் செய்யப்பட்டன. புதிய சூழல் ஏற்படுத்திய புறவெளியில் ஆங் கிலக் கல்வி, உத்தியோகம் மூலம் காலூன்றிய ஆண்கள், அகவெளியாகிய வீட்டைப் புறவெளியால் பாதிப்புறாத ஒன் றாய்க் கட்டமைத்து, மீளுருவாக்கம் செய்யப்பட்டதும், ஒற் றைத்தன்மையினதுமான (monolithic) பண்பாட்டின் சின்ன மாக்கினார். இப்பண்பாட்டுச் சின்னத்துடன் பெண்களை இணைப்பதன் மூலம் பண்பாட்டைக் கட்டிக்காக்கும் சுமையை அவர்கள் மீது ஏற்றினர். எனவே, பெண்கள் இலக்கி யங்களில் பண்பாட்டுக் காவிகளாக இடம் பெற்றனர். மேலும், பெண்கள் பற்றிய பிரச்சினைகளுக்கு ஆண்களே தீர்வு கண் டனர். பெண்ணுக்கு நவீன கல்வி வேண்டுமா? எவ்வளவு படிக்க வேண்டும்? எதைப் படிக்க வேண்டும்? வேலைக்குப் போக அனுமதிப்பதா? இல்லையா? என்பதை ஆண்களே முடிவு செய்தனர்.

பாவலர் துரையப்பா பிள்ளை இவ்வாறு பாடுகின்றார்:

***ஆண்களைப் போலவே***
***பெண்களுக்குச் சரியாக***
***உயர்கல்வி வேண்டும்மெனும்***
***வீண்கதையாற் சில***
***பெண்கள் படும் பாடு***
***விள்ளற்கரிதடி சங்கமின்னே.***

***வீட்டினில் சீவியம்***
***இன்பம் நிறைந்து***
***விளங்குதற்கேற்ற***
***சுகிர்தகலை***
***ஊட்டுதல் போதும்***
***பீஏ எம் ஏ பட்டம்***
***உதவாது பெண்கட்குச் சங்கமின்னே.***

பழமைவாதக் கருத்துகள் கூறும் நூல்களும், கற்பு குறித்த வாதங்களும் கதைகளும் எழுந்தன. பெண் சுதந்திரம் பற்றி பாரதி போன்ற ஆண் கவிஞர்கள் கற்பனை செய்தனர்.

இவ்வாறு ஆண்கள் கையிலிருந்த பெண் வாழ்வை மீட்டெடுக்கும் வகையில் பெண்ணிய இயக்கம் தோன்றியது. காலங்காலமாக தம்மைப் பிணைத்த தளைகளை அவர்கள் அடையாளம் கண்டனர். அத்தளைகளை உதறத் துடித்தனர். 'சொல்லாத சேதிகள்' எனும் கவித்தொகுப்பில் உள்ள அ. சங்கரி எழுதிய 'விடுதலை வேண்டினும்' எனும் தலைப்பில் இடம் பெறும் கவிதை ஒன்றை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

***எனது-***
***ஓராயிரம் சிறகுகளை***
***விரிக்கவும்***
***விண்ணிற் பறக்கவும்***
***ஏங்கினேன்.***

***வானின்***
***நட்சத்திரங்களையும்***
***சூரியனையும்***
***தொட்டுப் பார்க்க***
***அவாவிற்று என் ஆன்மா.***

***பூமியின் பரப்புக்கு***
***அப்பால்***
***அண்ட வெளியில்***
***ஸ்பேஸ் ஒடிசியின் விண்கலம் போல***
***எல்லையின்றிச் சுழலவும்***
***எண்ணினேன்.***

***வானிற் பறக்கும்***
***புள் எல்லாம் நானாக***
***மாறாவும் எண்ணினேன்.***

***ஆனால்--***
***காலிற் பிணைத்த***
***இரும்புக் குண்டுகள்***
***அம்மியும் பானையும்***
***தாலியும் வேலியும்***

***என்னை--***
***நிலத்திலும்***
***நிலத்தின் கீழே***
***பாதாள இருட்டிலும்***
***அழுத்தும்.***

பெண்ணியம் சார்ந்து இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் இன்றும் எம்மத்தியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது,

நிறைவாக, இதுகாறும் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது தமிழிலக்கியம் முன்மாதிரியான பெண் பாத்திரங்களைத் தரவில்லையா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே. ஆணாதிக்கத்திற்குச் சவால் விடும் சில குரல்கள், எடுத்துக்காட்டாகச் சங்க இலக்கியத்தில் பெண்பாற்புலவர் சிலரின் பாடல்கள், தமிழிலக்கியத்தில் அடையாளம் காணப்பட்டு இன்று கொண்டாடப்படுகின்றன. அத்துடன், தமிழிலக்கியப் பெண் பாத்திரங்கள் பலவீனங்களும், பலமும் ஒருங்கே பொருந்தியவை என்பதையும் நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். எனவே, இவை நுண்ணாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை. கண்ணகியின் நீதிக்காகப் போராடும் துணிவினையும், வழக்குரை திறனையும் விட்டு விட்டு அவளை வெறுமனே கற்புக்கரசியாகப் மட்டும் ஏன் பார்க்க வேண்டும்? மாற்று வாழ்க்கை முறைக்கு (alternative life styles) மணிமேகலையும், காரைக்கால் அம்மையாரும், ஔவையாரும் முன்னுதாரணங்கள் என நாம் கொள்ளின் அது தவறில்லை. தமிழிலக்கியம் பேசும் கதைகளைப் பெண்ணிய நோக்கில் மீளச்சொல்லுதல், பெண்பாத்திரங்களைப் பெண்ணிய நோக்கில் வடிவமைத்தல் என்பன பெண் படைப்பாளிகளால் செய்யப்பட வேண்டியவை. ஏனெனில், வேற்று இலக்கியங்களிலிருந்து எமக்குரிய முன்மாதிரிகளைப் பெற்றுக் கொள்ள இயலாது.



maithilithayanithy@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***



# மலையகத்தின் புதுக்கவிதை முன்னோடி : சிவபாக்கியம் குமாரவேல்

– மீனாள் நித்தியானந்தன்

சிவபாக்கியம் குமாரவேல் அம்மையார் (1923-2019) சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தையும் பிற்பட்ட காலத்தையும் இணைக்கும் ஒருவராகத் தெரிகிறார். கலஹாவைச் சேர்ந்த காங்கிரஸ் தொழிற்சங்கவாதியான என்.எம். பழனிச்சாமியின் புதல்வியாக 1923-ம் ஆண்டு சிவபாக்கியம் பிறந்தார். அவரது குடும்பம் மிகப்பெரியது. கஷ்டங்களுக்கு மத்தியிலேயே அவர் வளர்ந்திருக்கிறார்.

தனது 96 வயதில் மறைந்தாலும், அவரைப்பற்றிய விரிவான குறிப்புகள் எதுவும் நம்மிடமில்லை. யாரும் அவரிடம் சென்று, அவரின் அனுபவத்தைப் பதிவு செய்திருப்பதாகவும் தெரியவில்லை. ஆக, 60 ஆண்டுகளுக்கு முன்னால் சி.வி. வேலுப்பிள்ளை அவரைப்பற்றி எழுதியுள்ள குறிப்பு மட்டுமே நமக்குக் கிடைக்கிற ஒரே ஆதாரமாக உள்ளது.

பிற்காலத்தில் அவர் சீரடி பாபாவின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராகவே தன் வாழ்க்கையைக் கொண்டு நடத்தியிருக்கிறார். அவர் எழுதிய கடவுள் மீதான பக்திப் பாடலின் எழுத்துப் பிரதி நமக்குக் கிடைக்கிறது.

5 ஆண்டுகளாக 'பெண்ணுலகு' என்ற பத்திரிகையை சிவபாக்கியம் குமாரவேல் நடத்தியிருக்கிறார். ஆனால், அந்தப் பத்திரிகையை எங்கும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இலங்கையின் ஆவணக் காப்பகத்தில் அந்தப் பத்திரிகைகள் கிடைக்கின்றனவா என்றும் தெரியவில்லை.

மலைநாட்டில் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பித்த நாளிலிருந்தே சிவபாக்கியம் குமாரவேல் அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்து வந்திருக்கிறார். இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமுகமாக, 1939-ஆம் ஆண்டு நேரு இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கை அரசியல் தலைவர்களுடன் நேரு நடத்திய பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது.

இலங்கையில் இந்திய தேசிய காங்கிரஸ் போல, இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்குமாறு நேரு ஆலோசனை கூறினார். பத்து நாட்களே நேரு கொழும்பில் தங்கியிருந்தார். அதற்குள் அவர் மேற்கொண்ட நடவடிக்கை அது. இலங்கை வாழ் சகல இந்தியர்களையும் 'இலங்கை இந்திய காங்கிரஸ்' அமைப்பின் கீழ் கொண்டுவருமுகமாக, இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் பிரதிநிதிகளை கொழும்பில் ஒன்று கூட்டினார். இக்கூட்டத்தில் இலங்கை இந்திய காங்கிரசின் உருவாக்க பத்திரத்தில் நேரு சாட்சியாகவும் உறுதிப்படுத்துபவராகவும் கைச்சாத்திட்டார்.

இதனை அடுத்து 1941-ம் ஆண்டு இலங்கை இந்தியர் மாதர் ஐக்கிய சங்கம் உருவாக்கப்பட்டது. முதலில் அந்த மாதர் அமைப்பிற்கு லக்ஷ்மி இராசரத்தினம் தலைவியாக இருந்திருக்கிறார். அவருக்குப் பின் சிவபாக்கியம் தலைவியானார்.

மாதர் சங்கத்தின் தலைவியாக சிவபாக்கியம் அமையார் திகழ்ந்த காலத்தில், 1944-ம் ஆண்டில் பெண்களுக்கு 8 மணித்தியால வேலை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடியிருக்கிறார். இச்செயல் அவரை மலையகத்தின் மகத்தான போராளியாக முன் நிறுத்துகிறது.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் கழித்து, அட்டனில் 1992-ம் ஆண்டிலும் பெண்களுக்கு 8 மணித்தியால வேலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதென்றால், சிவபாக்கியம் அம்மையாரின் தொலைநோக்குப் பார்வையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இன்றும் ஒரு நாளைக்கு 18 கிலோவிலிருந்து 22 கிலோ தேயிலைக் கொழுந்து எடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில், மலையகப் பெண்கள், ஆண்களை விட இரண்டு மடங்கு நேரம் உழைக்கவேண்டியிருக்கிறது என்று அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கையின் யுத்தகாலத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் தோட்டத்துப் பெண் தொழிலாளர்களின் உழைப்பினைப் பற்றி சகோதரி மைத்ரி ஜெகதீசன் எழுதியுள்ள Tea and Soli-




darity என்ற நூல் அண்மைக் காலத்தில் வெளிவந்த அருமை யான நூலாகும். இன்று மலையகப் பெண்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வு தோன்றியிராத ஒரு காலப்பகுதி யில், சிவபாக்கியம் குமாரவேல் அம்மையார் ஆற்றியிருக்கும் சேவை காலத்தை மீறிய முற்போக்கான செயற்பாடாகும்.

காங்கிரஸ் மேடைகளில் நின்றுகொண்டே, தோட்டங்களில் பெண்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றி சிவபாக்கியம் அம் மையார் முறையிடுவார். தனது பேச்சில், தோட்டப் பெண் களை அன்புடனும் ஆதரவோடும் அனுதாபத்துடனும் நடத் தும்படி ஆண்களுக்கும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் அவர் வேண்டுகோள் விடுப்பார். ஆண்கள் புன்முறுவல் செய் வார்கள். பெண்களோ ஆச்சரியத்துடனும் மௌனமாகவும் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

காங்கிரசின் வருடாந்த மாநாடு நடைபெறும் நாள் தான் அவருடைய மகத்தான நாளாயிருக்கும். இளம் பெண்களை எல்லாம் திரட்டி, அவர்களுக்கு வெள்ளை சாரியும் ரவிக்கையும் அணிவித்து, கோஷங்களை முழங்கியவண்ணம் ஊர்வலத்தில் முன்வருவார்.

'அப்பெண்கள் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, கை கால்களைக் கஷ்டத்துடன் அசைத்துக்கொண்டு அவருடன் நடந்து செல்லும்போது, ஆண்கள் அதைப்பார்த்துச் சிரித்தவண்ணம் 'பட்டாளத்தைப் பாரு' என்று கூறுவார்கள்' என்று சி.வி. வேலுப்பிள்ளை எழுதுகிறார். அந்தப் பெண்களின் சார்பில் சிவபாக்கியம் குமாரவேலின் குரல்தான் மேடையில் ஒலிக்கும்.

காங்கிரசின் மாதர் மாநாட்டைத் தொடர்ந்து நடத்துவதில் அவர் பெரிதும் முன்னின்று உழைத்தார். மாதர் மாநாட்டிலும் ஆண்களின் ஆதிக்கமே நிலவியது. ஆனால், பெண்களை முதன்மைப்படுத்தி, பெண்களையே பேச்சாளர்களாகவும் பாடகிகளாகவும் அமைத்து, அதனைப் பெண்கள் மாநாடாகவே நடத்தினார். சிவபாக்கியம் குமாரவேல் பிரச்சினைகளை அணுகும் முறை எப்பொழுதும் அனுதாபத்தை எழுப்பியது.

புறக்கணிக்கப்பட்ட தமது சகோதரிகளின் நலனை வளர்ப்பதற்காக அவர் அந்தரங்கசுத்தியுடன் செய்த சேவை சிந்தனா சக்தி படைத்த எல்லோரையும் கவர்ந்தது' என்கிறார் சி.வி. வேலுப்பிள்ளை.

அவருடைய பணிகளில் அவருக்குப் போதிய ஊக்கம் அளிக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. இந்த மாதர் அமைப்பில் அவர் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் சேவை செய்தார் என்றாலும், காங்கிரசில் இருந்த ஆண்கள் அவரை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. தனது சேவையைத் தொடர, அவருக்குப் போதிய பண வசதி இல்லாத காரணத்தால், அதிலிருந்து அவர் விலகிக்கொண்டார். ஆனால், எளிமையும் விசுவாசமும் அந்தரங்கசுத்தியும் பொருந்திய சிவபாக்கியம் அம்மையாரின் அர்ப்பணிப்பிலேயே தோட்டத்துப் பெண்கள் புதிய விழிப்பைப் பெற்றனர்.

'திருமதி சிவபாக்கியம் பேராற்றல் வாய்ந்த ஒரு பெருந்தலைவராயில்லாதிருக்கலாம். ஆனால், தோட்ட மாதர் இயக்கத்தில் முன்மாதிரியான சேவை செய்த முன்னோடியாகத் திகழ்ந்த மூத்த சகோதரியாக அவர் என்றென்றும் ஞாபகத்தில் வைக்கப்படுவாரென்பதில் சந்தேகமில்லை' என்று மூத்த தொழிற்சங்கவாதியான சி.வி. அவர்கள் கணிக்கிறார்.

**ம**லையக நாட்டார் பாடல்களைப் பதிவு செய்த பெரும் பணியினையும் சிவபாக்கியம் குமாரவேல் அம்மையார் செய்திருக்கிறார். மறைந்த மலையகத் தலைவர் எஸ்.எஸ். சோமசுந்தரம் அவர்களின் தாயாரும் சிவபாக்கியம் அம்மையாரின் அத்தையுமான திருமதி கற்பகம்பாள் அவர்களுடைய வீட்டில் லெச்சுமி என்ற பெண்மணி வீட்டுவேலை பார்த்து வந்தார். திருகைக்கல்லில் லெச்சுமி உளுந்து அரைத்துக்கொண்டிருந்தபோது, நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்திருக்கிறார். அந்தப் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த சிவபாக்கியம் அவர்களுக்கு அப்பாடல்கள் துயரமானதாயும் இனிமையானதாயும் இருந்திருக்கிறது. அவர் லெச்சுமியிடம் அப்பாடல்களை அமைதியாகப் பாடும்படி கேட்டு, அவர் பாடிய 24 பாடல்களைப் பதிவு செய்திருக்கிறார்.

மாவரைத்ததை விட்டுவிட்டு, அழுது கொண்டே, மூக்கைச் சிந்திக் கொண்டு லெச்சுமி அந்தப் பாடல்களைப் பாடியிருக்கிறார்.

***நாங்க வந்த கப்ப***
***நல்லதொரு கப்ப***

***ஆழக்கடலிலே***
***ஆடி அசைஞ்சதடி***
***நீலக்கடலிலே***
***நிக்காமே வந்ததடி***

***கடல் காத்து வீசையிலே***
***கண்ணு ரெண்டுஞ் சுத்திச்சடி***
***குடிச்சு வந்த கஞ்சியும்***
***குமட்டி வெளியாச்சுதடி***

என்று மலையக மக்கள் கடல் கடந்து வந்த அவலத்தைப் பாடுகிறார்.

***நாடுவிட்டு நாடு வந்தோம்***
***நாதியத்த மக்க நாங்க***
***ஊருவிட்டு ஊரு வந்தோம்***
***ஓடி ஒழைக்கவந்தோம்***

***கூடை குடுத்தாங்க***
***குனிஞ்சு கொழுந்தெடுக்க***
***கூடை தலைமேலே***
***கொழந்தைங்க மடுவத்திலே***

***அடியும் ஒதையும் வாங்கி***
***அடிமைகளா வாழுகிறோம்***
***கங்காணி கணக்கப்பிள்ளை***
***காலாலே ஒதைக்கிறாங்க***

***மலையேறிப் புல்லுவெட்டி***
***மாச்சப்படுறோங்க - எம்***
***மதிகலங்கி நிற்கிறோங்க***
***மண்ணாய்ப் போவாஞ் சீமையிலே***

இந்த நாட்டார் பாடல்கள் நமக்குப் புதியவை.

'மாமன் மகளே' என்று சி.வி. வேலுப்பிள்ளை தொகுத்த மலையக நாட்டுப் பாடல்கள், 1976-ம் ஆண்டு வெளியானது. சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் இந்த நாட்டார் பாடல்களை 1940-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி, தனது 18-வது

வயதில் பதிவு செய்திருக்கிறார். மலையக நாட்டார் பாடல்க ளைத் தொகுத்த முன்னோடியாக சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் திகழ்ந்திருக்கிறார்.

இன்றுபோல் நாட்டார் பாடல்கள் பற்றிய முக்கியத்துவம் உணரப்படாத ஒரு காலப் பகுதியில், மலையக நாட்டார் பாடல்களின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து சிவபாக்கியம் இந்தப் பதிவினைச் செய்திருக்கிறார்.

'லெச்சுமி தந்த மலையக வாய்மொழி இலக்கியம்' என்ற தலைப்பில், சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் பதிவு செய்த நாட்டார் பாடல்களை, 83 ஆண்டுகள் கழிந்த நிலை யில், இந்நூல் 'கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழு வின்' வெளியீடாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

சிவபாக்கியம் குழந்தைவேல் அவர்கள் வசன கவிதை என்று பெயரிட்டு எழுதிய கவிதை இது.

***'அதோ! கானகத்திலே பட்சிகளின் கீதம் ஜொலிக் கின்றது! உனது ஒளியைக் கண்டுதான் அவைகள் ஆனந்த நர்த்தனம் புரிகின்றன! நான் மட்டும் வாடி வதங்கி, அம்மரச் சோலைகளுக்கிடையே ஏன் உறங் கிக்கிடக்கவேண்டும்? அப்பட்சிக் கூட்டங்களின் இத யகீதமும், மல்லிகை மொட்டுகளின் சிலிர்ப்பும் என்னை வெட்கித் தலை குனியவைத்தன! அதனால் மனம் வெதும்புகின்றேன். இந்நேர வேளையில் தேவி! நீ கால் சலங்கைகள் ஒலிக்க, நினது மணிமுடி பிரகாசிக்க வந்து எனை ஒரு தரம் ஆசிக்கின்றாயா?'***

இந்தக் கவிதையை தாகூரின் கவிதையுடன் ஒப்பிட்டுப் பார்க் கும்போது, சிவபாக்கியம் குமாரவேலின் கவிதைகளில் தாகூ ரின் அழுத்தமான தாக்கத்தைக் காணமுடிகிறது.

தாகூரின் கவிதை இது.

***மேகங்கள் குவிந்து வானம் இருள்கிறது. என் இன்பமே! என்னை ஏன் வீட்டுக்கு வெளியே தனிமையில் நிறுத்தி வைக்கின்றாய்? பகல் வேளையின் அவசர வேலைகளில், நான் ஜன நெருக்கடியில் இருக்கிறேன். ஆனால், இந்த இருண்ட நிசப்தமான நாளில், உன் வருகைக் காகவே காத்திருக்கிறேன். உன் முகத்தை நீ காட்டாமல், என்னைத் தனியே விட்டுவிட்டால், இந்த நீண்ட மழைப் பொழுதை எப்படிக் கழிப்பது என்று தயங்கி நிற்கின்றேன்.***

தாகூரின் இந்தக் கவிதை 'கீதாஞ்சலி'யில் வரும் கவிதை. வி.ஆர்.எம். செட்டியார் ஆங்கிலத்திலிருந்து 1945-ம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்த கவிதையாகும்.

சிவபாக்கியம் குமாரவேல் தனது 25-ம் வயதில் 'ஹிதய தீபம்' அல்லது 'என் அஞ்சலி' என்ற வசன காவியத்தை 1948-ம் ஆண்டு எழுதி வெளியிட்டுள்ளார். சென்னை அருட் பெருஞ் சோதி அச்சகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

'இந்நூலில் மிளிர்வனவெல்லாம், எனது சிந்தனை அரும்பு களே. இந்நூலில் தளகர்த்தன் இறைவன். அவனை நேரி லேயே கண்டுவிட்டதாகவும், வணங்குவதாகவும், அவனது மகிமைகளை வர்ணிப்பதாகவும் எவ்விடத்தும் இறைவனைக் காண்பதாகவும், அவன் கிருபை புரிவதாகவுமே என் இளஞ் சிந்தனைகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் 54 பாடல்களையுடைய இந்நூல், 'ஹிதய தீபம் அல்லது என் அஞ்சலி' எனும் நாமத்தைக் கொண்டதாக வெளிவருகிறது' என்று சிவபாக்கியம் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார். கலகா, சிலோன் என்று முகவரியிட்டு இந்நூல் வெளியாகியுள்ளது.

நோபல் பரிசுபெற்ற கவி தாகூரின் 'கீதாஞ்சலி'யின் தாக்கம் சிவபாக்கியத்தின் வசன கவிதையில் தென்படுகிறது. கீதாஞ் சலியின் கவிதை வைப்பு முறையிலேயே சிவபாக்கியமும் தனது வசன கவிதையையும் அமைத்திருக்கிறார். அக்கால கட்டத்தில் தாகூரின் இலக்கிய ஆளுமையில் பாதிக்கப்படாத எழுத்தாளர்களே இல்லை எனலாம். சிவபாக்கியத்திற்கு 9 வயது மூத்தவரான சி.வி. வேலுப்பிள்ளை, தாகூரின் இலங்கை விஜயத்தின்போது அவருக்குச் சமர்ப்பிப்பதற்கா கவே தனது கவிதை நூலை எழுதியவர்.

'இந்நூலை அவர் எழுதிய காலம் துன்பமயமானது. இந்நாட்டி லுள்ள தமிழர் வழிபாட்டு மரபில் இது புதிரானது. பாடுபடும் ஏழைகள் சமூகத்தின் அனுபவங்களை மையப்படுத்தி, வழ மையான சமய வழிபாடுகளை விமர்சிக்கும் முறை.

மலர் சொரிந்து, நீர் பரவி இறைவனை வழிபடுவது வழக்கம். அதுவும் இன்ப உணர்வுகளோடு நடைபெறுவது. ஆனால், நூலாசிரியர் முன்வைக்கும் சிந்தனை மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்டது. நன்னீரோடும் அவலத்தோடும் வழிபடும் மக்கள் மீதும் ஏன் நீ கருணை காட்டுவதில்லை. அவர்களிடம் நறும லர்கள் இல்லை. தெளிந்த, பரிசுத்தமான நீருமில்லை. எனவே அவர்களின் கண்ணீரையும் துன்பங்களையும் காணிக்கை யாக வைத்து வழிபடுகின்றேன். நின் கண் திறக்கட்டும், அவர் கள் மீதான அருள் பொழியட்டும் என்பது அடிப்படைச் சிந்த னையாகும்' என்று சிவபாக்கியம் அம்மையாரின் கவிதைக்கு விளக்கம் தருகிறார் வரலாற்றுப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள்.

சிறுவயதிலிருந்தே கடவுள் பக்தி மிக்கவராக வளர்ந்த சிவ பாக்கியம் அவர்கள் கண்டியில் ஹந்தன 3-ம் கட்டையில் சீரடி பாபாவின் தேவஸ்தானம் கட்டும் பணியில் தனது வாழ் வின் இறுதிக்கட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவ ரைப் போற்ற மலையகம் தவறிவிட்டது.



meenal.n@thaiveedu.com



# ஈழத்து முதன்மைப் பெண் நாவலாசிரியை ந. பாலேஸ்வரி

– வே. விவேகானந்தன்

ஈழத்து இலக்கியத் துறையில், பெண் எழுத்தாளர்களுள், நாவல் இலக்கியத்தில் கால் பதித்த முதன்மைப் பெண் எழுத் தாளர் என்ற பெருமைக்குரியவர், ந. பாலேஸ்வரி அவர்கள். அத்துடன் பெண்மையின் தனித்துவத்தை வெளிக்கொண ரும், அதிக நாவல்களை எழுதிய ஈழத்துப் பெண் எழுத்தாளர் என்ற தனிச்சிறப்பும் இவருக்குண்டு.

பாலேஸ்வரி அவர்கள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பிரதேச செய லாளர் பிரிவில், மனையாவழி கிராம சேவகர் பிரிவில் வாழ்ந்து வந்த முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம், பா. கம லாம்பிகை இணையருக்கு மகளாக 1929-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07-ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல் வியை திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் கற் றார். இடைநிலை மற்றும் உயர்கல்வியை சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருகோண மலை புனிதமரியாள் கல்லூரி ஆகியவற்றில் நிறைவு செய் தார். பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல் லூரியில் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட தமிழாசிரியராக, வெளியேறினார். புனிதசேவியர் மகாவித்தியாலயம், புனித மரி யாள் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரி, புனித வளனார் வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணி புரிந்து, திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தி யாசாலையில் உப அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற் றார். அத்துடன் ஆங்கில மொழியிலும் விசேட தேர்ச்சியைப் பெற்றிருந்தார். இவர் தனது சேவைக்காலத்தில் பல திறமை மிக்க மாணவர்களை உருவாக்கியதுடன் தமிழ் மொழி வளர்ச் சிக்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

பாலேஸ்வரி அவர்கள் தனது தாயாரது வழிகாட்டலாலும் ஊக்குவிப்பாலும் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே, திறமைமிக்க மாணவியாக விளங்கியதுடன், வாசிப்புத் துறை யிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். எழுத்துத் துறை யில் பிரகாசிக்க அவரது பெரிய தந்தைமார் தி.த. கனகசுந்- தரம்பிள்ளை, ஈழத்து முதல் தமிழ் நாவலாசிரியர் தி.த. சரவ ணமுத்துப்பபிள்ளை ஆகியோருடன் அவரது கணவர் நல்ல ரெட்ணசிங்கன் அவர்களும் பக்கபலமாக இருந்தனர். அத்து டன் ஆசிரியைகளான திருமதி நாகம்மா, பண்டிதை இராஜ லட்சுமி, பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ்.டி. சிவநாயகம் ஆகி யோரின் அரவணைப்பும் அதிகமாகவே இருந்தது. இத்த கைய பின்னணியில் பாலேஸ்வரி அவர்கள் எழுத்துத் துறை யிலும் கால்பதித்தார். சிறு வயதிலேயே தினகரன் சிறுவர் மல ரில் கதைகள், கட்டுரைகள் என அவர் எழுதிய போதும், 'வாழ்



வளித்த தெய்வம்' என்னும் தலைப்பில் 1957-ம் ஆண்டு தின கரன் பத்திரிகையில் எழுதிய சிறுகதையுடனேயே அவர் எழுத் தாளர் என அடையாளப் படுத்தப்பட்டார். 'பாப்பா', 'ராஜி', 'நரேசி', 'ந.பா', என்னும் புனைபெயர்களிலும் இவரது படைப்பு கள் வெளிவந்தன.

பெண்மையின் தனித்துவத்தையும் சிறப்பையும் வெளிக்கொ ணரும் வகையில் ஈழத்தில் முதலாவதாகத் தமிழில் நாவல்

படைத்த பெண் எழுத்தாளராகப் பிரகாசித்தார். இவர் எழுதிய முதலாவது நாவலாகிய 'சுடர் விளக்கு' 1966-ம் ஆண்டு வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. மித்திரன் பத்திரிகையில் தொடர்கதையாகப் பிரசுரமான இவரது இரண்டாவது நாவலாகிய 'பூசைக்கு வந்த மலர்' 1972-ம் ஆண்டு நூலாக வெளிவந்தது. வாசகர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற இந்த நாவல் மூன்று மாதங்களின் பின்னர் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. அத்துடன் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் மித்திரன் பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டு பெருமை கண்டது.

இவரது ஏனைய நாவல்களான 'உறவுக்கப்பால்' 1975-ம் ஆண்டும், 'கோவும் கோயிலும்' 1980-ம் ஆண்டும், 'உள்ளக் கோயிலில்' 1983-ம் ஆண்டும், 'பிராயச்சித்தம்' 1984-ம் ஆண்டும், 'உள்ளத்தினுள்ளே' 1990-ம் ஆண்டும் 'தந்தை விடு தூது' 1992-ம் ஆண்டும், 'மாது என்னை மன்னித்துவிடு' 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' என்பன '1993-ம் ஆண்டும், 'நினைவு நீங்காதது', 'அமலா உனக்காக' என்பன 2003-ம் ஆண்டும் வெளிவந்தன. இவற்றுள் 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு', 'அமலா உனக்காக' என்பன தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டன. 'சுமைதாங்கி', 'தெய்வம் பேசுவதில்லை' என்பன இவரது சிறந்த சிறுகதை நூல்களாகும். 'தெய்வம் பேசுவதில்லை' என்னும் சிறுகதை நூல், முப்பது ஆண்டுகளாக அவருடன் வாழ்ந்த, அவரது துணைவர் நல்லரெட்ணசிங்கன், 2000-ம் ஆண்டு மறைந்து, முதலாம் ஆண்டு நிறைவு நினைவு நாளில், வாசகர்களின் ஆன்ம திருப்திக்காக வெளியிடப்பட்டது.

பாலேஸ்வரி அவர்கள் ஏராளமான சிறுகதைகளையும், மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, சமூக சீர்திருத்தம் தொடர்பான பல கட்டுரைகளையும், எழுதியுள்ளார். இவரது பல கட்டுரைகள் இலங்கையில் வீரகேசரி மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் கற்பகம் சஞ்சிகையிலும், தமிழ் நாட்டில் கல்கி, குமுதம், குங்குமம், உமா, பூந்தொட்டி, உறவு, தமிழ்ப் பாவை போன்ற சஞ்சிகைகளிலும், இத்தாலியில் 'உலகம்', பிரான்சில் 'ஈழநாடு', மலேசியாவில் 'தமிழ்மலர்' போன்ற சர்வதேச சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. 1997-ம் ஆண்டு அஞ்சலி என்னும் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பாலேஸ்வரி அவர்கள் எழுதிய 'நான் எழுதவே மாட்டேன்' என்னும் சிறுகதை முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் சுதந்திர சுற்றாடல் பிரிவு தெரிவு செய்து வெளியிட்ட, சிறுகதைத் தொகுதியில், அச்சிறுகதை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பாலேஸ்வரி அவர்கள் விளம்பரமோ, வேறு எந்த ஆரவாரமோ இன்றி எழுத்துப் பணியில் உச்சம் தொட்டவர். அத்துடன் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து நம்பிக்கை ஊட்டியவர். குறிப்பாக சிறுகதைத் துறையில் பிரபல்யம் பெற்ற மாதுமையின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்துள்ளார். மாதுமையின் 'தூரத்து கோடை இடிகள்' என்னும் சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கி ஊக்கமளித்துள்ளார்.

பாலேஸ்வரி அவர்களின் இலக்கியப் படைப்புகள் பற்றி, பல்கலைக்கழக மட்டத்தில் மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். 1999 - 2000 கல்வியாண்டில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த் துறையிலே இளங்கலைமாணிப் பட்டத்தினை நிறைவு செய்ய, திருகோணமலையைச் சேர்ந்த செல்வி அப்துல்ரஹீம் சர்மிலா என்பவர் 'பாலேஸ்வரியின் நாவல்களில் பெண்கள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பித்திருந்தார். அதே கல்வியாண்டில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில், தமிழ்த் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டப்படிப்பை நிறைவு செய்ய செல்வி சிவகௌரி சிவராசா என்பவர் 'பாலேஸ்வரியின் தமிழ் நாவல்கள் பற்றிய ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பித்திருந்தார். 2001 - 2002 கல்வி ஆண்டில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் இளங்கலைமாணிப் பட்டப் படிப்பினை நிறைவு செய்ய செல்வி கச்சி முஹம்மது சில்மியா என்பவர் 'ந. பாலேஸ்வரியின் சமூக சிறுகதைகள் ஒரு நோக்கு' என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பித்திருந்தார்.

ந. பாலேஸ்வரி அவர்கள், ஆசிரியராக, உப அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னரும், எழுத்துத் துறையில் ஈடுபட்டதோடு, பல பொது நிறுவனங்களிலும் தொண்டர் அடிப்படையில் சேவை ஆற்றியுள்ளார். திருகோணமலை பெண்கள் நலன்புரி மன்றத்தின் செயலாளராக செயற்பட்டு, பொதுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கலைகளில் அதீத ஆர்வம் கொண்ட இவர் திருகோணமலை 'தட்ஷண கான சபா' என்ற அமைப்பின் தலைவராக அரும்பணி ஆற்றினார். திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய 'சக்தி நிலைய வாசிகசாலை'யின் போஷகராகப் பணியாற்றி திறம்பட இயங்கச் செய்தார்.

ந. பாலேஸ்வரி அவர்களின் தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, பல்வேறு சமூக சமய அமைப்புகள் மதிப்பளித்துள்ளன. 1992-ம் ஆண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, சாஹித்ய விழாவில் 'தமிழ் மணி' என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது. 1996-ம் ஆண்டு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, முத்தமிழ் மன்றம் 'சிறுகதைச் சிற்பி' என்ற பட்டமளித்துப் பெருமை கொண்டது. 1999-ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, இவரது சேவையைப் பாராட்டி 1999-ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதினை வழங்கியது. 2002-ம் ஆண்டு இலங்கை கலாசார அமைச்சு 'கலாபூசணம்' விருதை வழங்கி சிறப்பித்தது. கலை இலக்கிய சஞ்சிகையான 'ஞானம்' தனது 2006-ம் ஆண்டு ஜனவரி மாத இதழின் முன் அட்டையில் பாலேஸ்வரியின் படத்தினைப் பிரசுரித்து சிறப்பித்தது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தோன்றி, தனது எழுத்துகளால் பெண்ணியத்துக்குப் பெருமை சேர்த்த, தனித்துவம் கொண்ட பாலேஸ்வரி அவர்கள் 2014-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 27-ம் திகதி இவ்வுலக வாழ்வை விட்டு இயற்கை எய்தினார். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியத் துறையில் அவர் ஆற்றிய பணிகளும், அவரது படைப்புகளும் அவரது பெயரை என்றும் நிலைபெறச் செய்யும் என்ப தில் ஐயமில்லை.



vivekananthan.v@thaiveedu.com




சமகால உலகில், ஒரு நாட்டின் போக்கு வகுப்பறைகளில் தான் தீர்மானிக்கப்படுகின்றது. எதிர்கால தலைமுறையையும் தலை சிறந்த ஆளுமைகளையும் உருவாக்குவது ஆசிரியர்களின் பொறுப்பும் வகிபங்குமாகும். வகுப்பறைகளின் தன்மைக்கு ஏற்பவே ஆளுமைகள் உருவாக்கப்படும். நாட்டை நேசிப்போரும் நாட்டை விருத்தி செய்ய அரும்பாடுபடுவோரும் வகுப்பறைகளில் இருந்துதான் உருவாக்கப்படுகின்றனர். அதேபோல நாடு விரும்பாத சமூக விரோதிகளும் போதைப் பொருளுக்கு பகுதியாகவும் முழுமையாகவும் அடிமைப்படுவோரும் பாடசாலைகள் வழியாகவே உருவாக்கப்படுகின்றனர் என்றால் அது பிழையாகாது. ஆசிரியரின் உடன்பாடானதும் எதிர்மறையானதுமான ஆளுமையும் கற்பித்தல் முறைகளும் முன்மாதிரிகளும் இவற்றை சாத்தியப்படுத்திவிடுகின்றன. மாணவர்களைப் பொறுத்தளவில் அவர்களின் ஒளி விளக்குகள் ஆசிரியர்களே.

ஓர் ஆசிரியர் செய்யும் பணி உலகில் மிகவும் மகத்தான பணி. மாற்ற முகாமையின் பணி. இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளில் அதற்கான மவுசும் கிராக்கியும் மரியாதையும் கடுகதி வேகத்தில் குறைந்து வருகிறது. வணிகமயமான கல்விமுறைமை, போதிய சம்பளமின்மை, இறுக்கமான சட்டங்கள் போன்றன இதற்கான காரணங்களாகும். மன அழுத்தம் குறைந்து மகிழ்வுடன் இருக்க வேண்டிய ஆசிரியர்கள் இன்று மன அழுத்தங்களால் பாதிக்கப்பட்டு பரிதாபகரமான நிலைக்கு ஆளாகியுள்ளனர். இதனால் கற்பித்தலிலும் அடைவுகளிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது வகுப்பறையையும் மாணவர்களையும் பெற்றோர்களையும் பாட அடைவுகளையும் ஏன் பரிட்சை முடிவுகளையும் கூட பாதிப்புக்குட்படுத்துகின்ற பயங்கர அம்சமாகும்.

வகுப்பறை முகாமைத்துவம் மிகவும் சிக்கலான ஓர் அம்சம். பலதரப்பட்ட மாணவர்கள் பல்வேறு வகைப்பட்ட சூழலில் இருந்து வேறுபட்ட சிந்தனைகள், மன எழுச்சிகள் சகிதம் வகுப்புக்குள் நுழைகின்றனர். தனியாள் வேறுபாடுகள் ஏராளம். வகுப்பில் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்களும் பல்வேறு சிக்கல்கள் அழுத்தங்கள் சகிதமே வகுப்பில் நுழைகின்றனர். தனது வீடு, குடும்பம், பிள்ளைகள், கணவன் - மனைவி - பெற்றோர், கடன் சுமை, நோய்கள், இயலாமைகள் இப்படி அனைத்து வகைப்பட்ட வெளிக்காரணிகள் மனதிலும் சிந்தனையிலும் குவிந்து, அவை குறித்தும் சிந்தித்தவாறு, இன்னோரென்ன பிரச்சினைகள் சகிதமே வகுப்பறையை முகாமை செய்ய ஆரம்பிக்கின்றனர்.

மேல்வகுப்பு மாணவர்களை விடவும் ஆரம்ப வகுப்பு மாணவர்களை உளவியல் ரீதியாக கையாள்வதும் அணுகுவதும் புரிந்துகொள்வதும் மிகவுமே சவால் மிக்க சாதனைக்குரிய அம்சம் என்றே சொல்லிவிடலாம். பிள்ளை வளர்ப்பு அந்தளவு சிக்கலுக்குள்ளாகியுள்ளது. பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் வேறுபட்டது. சுமார் நாற்பது மாணவர்களை அவர்களது குழந்தைத்தனத்துடன் எதிர்கொள்வது ஆபத்து மிக்கது போலவே அனர்த்தங்களும் நிறைந்தவை. மாணவர்கள் தமது இன்னோரன்ன கைங்கரியங்களை, சாகசங்களை, சாதனைகளை அடக்கியும் அழுத்தியும் வைக்கப்பட்ட ஆசைகளை வெளியில் காண்பிக்கையில் அவை விநோதங்கள் போலவே விபத்தாகவும் மாறிவிடுவதுண்டு. மாணவர்கள் ஓடி விளையாடும் போது விழுந்து கை கால்கள் உடைந்து முறிவது, தலை அடிபடுவது... இப்படியாக சத்திர சிகிச்சை வரைக்கும் சென்ற நிகழ்வுகளும் உண்டு.

இங்கு பிரச்சினை என்னவெனில் இத்தகைய அசம்பாவிதங்கள் வீட்டுச் சூழலில் நடைபெறுகையில் வீட்டார் அவற்றினை அணுகி கையாள்வதற்கும் பாடசாலை சூழலில் அத்தகைய அசம்பாவிதம் ஒன்று நடக்கையில் அதனை கையாளும் விதத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு. மாணவர்களதும் ஆசிரியர்களதும் தனியாள் வேறுபாட்டுக்கமைய வித்தியாசமான போக்குகளை அன்றாடம் பாடசாலை நிகழ்வுகளில் காண்கின்றோம்.

அன்றாட பாடசாலை வகுப்பறை முகாமை, எழுத்து வேலைகள், இதர கணிப்பீட்டு வேலைகள், பயிற்சிகளை திருத்தும் வேலைகள் என்பவற்றுக்கு அப்பால் இப்படி ஓர் அனர்த்தம் நடக்கையில் அது மொத்தப் பாடத்தையும் விழுங்கிவிடுகின்ற இராட்சத நிகழ்வாக மாறுவதுண்டு. ரிலீப் போடுவதற்கு கூட ஆளில்லாத பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களில் இப்படி ஒரு நிகழ்வு நடந்தால்... வகுப்பறை அல்லோலகல்லோலப்படும். பெற்றோருக்கு உடனடியாக அறிவித்து அவர்களிடம் ஏச்சுப்பேச்சு வாங்கி, அவர்களை சமாளித்து வீட்டுக்கோ வைத்தியசாலைக்கோ அனுப்பிவிட்டு வருகையில்... வகுப்பு அமர்க்களமாகி இன்னொரு யுத்தத்துக்கான வாயிலை திறந்து வைத்திருக்கும்.



இதற்குள், வகுப்பில் எதுவும் செய்ய முடியாத மாணவர்களுக்கு கொஞ்சம் அதட்டிச் செய்ய வைத்தால், அவர்களது பெற்றோரின் கெடுபிடிகள் வந்து குவிகிறது. இடையில் வரும் மேலதிகாரிகள் இத்தகைய பின்தங்கிய மாணவர்களை குறிப்பாக எழுப்பி இவர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று ஆசிரியரைப் பார்த்து அசத்தலாக வினவுகையில், விசாரிக்கையில் ஓர் ஆசிரியர் படும் அவஸ்தையை இன்னொரு ஆசிரியரால் மட்டும் தான் உணர முடிகிறது. மேலதிகாரிகள் அவர்களது கடமையை சரிவரச் செய்கின்றனரா என்று வினவ, விசாரிக்க, விமர்சிக்க யாரும் இல்லை. நடப்பதெல்லாம் மேலிருந்து கீழாக பந்துகள் ஆளுக்காள் மாற்றி உருட்டப்படுவது ball passing மட்டுமே.

இது ஒருபுறமிருக்க, ஓர் ஆசிரியர் தனது வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்களுக்கு நியாயமாகவோ அநியாயமாகவோ அடித்து விட்டு, தனது பணியை இயல்பாக கொண்டு செல்கிறார். ஆனால், தனது பிள்ளைக்கு அவரது ஆசிரியர் நியாயமாக தண்டிக்கும் போது அல்லது வழிகாட்டும் போது கொதித்தெழுவது எவ்வளவு மோசமான கீழ்த்தரமான விடயம். இந்த நிலைமையும் மாற வேண்டும்.

இது அன்றாடம் ஒவ்வொரு பாடசாலையிலும் நடக்கின்ற மிகப்பெரும் பூதாகரமான விடயம். இவை குறித்தும் உரியவர்கள் சிந்திக்க வேண்டும். எந்த ஆசிரியரும் குழப்படி மாணவர்களை விரும்புவதில்லை, அங்கீகரிப்பதில்லை, புகழ்வதில்லை, பாராட்டுவதில்லை, பரிசளிப்பதில்லை, பரிவு காட்டுவதுமில்லை. தண்டனை வழங்குவது - ஒன்றில் பாய்ந்து விழுவது, காரியாலயத்தில் கையளிப்பது, ஒழுக்காற்று குழுவில் முறையிடுவது, அல்லது பெற்றோரிடம் புகார் செய்வது போன்றவற்றைத்தான் தீர்வாக விரும்பித் தெரிவு செய்வர். குழந்தை உளவியல் கட்டிளம் பருவ உளவியல், வகுப்பறை முகாமை, கோப முகாமை, இடர் நெருக்கடி நிலைமைகளை கையாளல் போன்ற கலைகள் குறித்து தெரியாவிட்டால் இந்த விபத்துகள் நிகழும்.

எமது பரீட்சை மைய கலைத்திட்டமும் பாடசாலை நிர்வாக கட்டமைப்பும் கிளிப்பிள்ளைகளை, செல்லப்பிள்ளைகளை, உயிரோடு அடக்கமாகி உணர்விழந்த பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக கருதி பாராட்டிவிடுகிறது. தூக்கி வைத்து கொண்டாடுகிறது. சொல்வார்த்தை கேட்போரை பளிச்சிட்டு மிளிர வைக்கிறது. மனனமிட்டு அச்சுப் பிசகாமல் உள்வாங்கி பரீட்சைத்தாளில் வாந்தி எடுப்பவர் திறமைசாலி. தெய்வாதீனமாக அஜீரணமாகாமல் வாந்தியோ வயிற்றோட்டமோ விடையாக வராமல் வயிற்றிலும் மூளையிலும் சிக்குண்டால், அவர் முட்டாள். தோல்வியடைந்தவர் பெற்றோரை ஏமாற்றியவர். பாடசாலையின் பெயரைக் கெடுத்தவர். இது தான் நிலை என்றால், நீங்கள் வகுப்பில் ஆண்டாண்டு காலம் அப்படியே அலுப்பின்றி உதிர்க்கும் வார்த்தைகளை பத்திரமாக பக்குவமாக அவர்களது மனங்களில் சேகரிக்க கற்றுக்கொடுங்கள். விழுங்கிய வார்த்தைகளை பரீட்சைத்தாளில் வாந்தியெடுக்கப் பழக்குங்கள். நாடு வளமாகும். கொஞ்சம் பச்சைக்கிளிகளை பஞ்சவர்ணக்கிளிகளை வாடகைக்காவது கொண்டு வந்து வகுப்பறைக் கூண்டில் அடைத்து வைத்து கற்பிக்க ஆரம்பியுங்கள். இப்படியாக வகுப்பறைச் சுவர்களைத் தகர்த்து, துளைத்து விமர்சனப் பார்வையுடன் நகர்ந்து முன்னோக்கி சென்றால் ஓரளவு மனத்திருப்தியுடன் வகுப்பறையை அதன் சவால்களை வென்றெடுக்கலாம்.

பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையில் உயிர்த்துடிப்புள்ள நிலையான, முறையான இணைப்பை ஏற்படுத்த முனைப்புடன் முழு முயற்சியுடன் மூச்சிறைக்க ஓடவேண்டிய காலம் கனிந்துள்ளது. இருபக்க முரண்களை களைந்து ஒரு புள்ளியை நோக்கி பார்வைக் கோணங்களை பத்திரமாக குவியப்

படுத்த வேண்டியுள்ளது. பாடசாலைகளின் பணி, அதில் ஆசிரியர்களின் எல்லையற்ற தியாகம், புனித நிலை பாரம்பரியமாக பேசப்படுமளவு நவீன 21-ம் நூற்றாண்டுக்கு ஒத்துப்போகும் இசைவாக்கம் கொண்ட நெகிழ்வான பண்புகள், வகுப்பறை முகாமை நுட்பங்கள் நுணுக்கங்கள் விதிகள் குறித்து ஆசிரியர்கள் அலட்டிக்கொள்வதில்லை. பாரம்பரிய பரம்பரை சார்ந்து ஆசிரியர்களை நோக்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று எண்ணுகின்ற எதிர்பார்க்கின்ற அளவு 21-ம் நூற்றாண்டுக்குரிய 'ஜெனரேஷனின் குரோமோசோம்களை', இயல்புகளை புரிவதாக இல்லை, தயாருமில்லை.

அதே நான்கு சுவர், அதே பிரம்பு, அதே walk, அதே chalk, அதே talk, எப்படி மாறும் வளருந் தலைமுறை ? எப்படியாகும் இந்த அழகு நிறைந்த தேசம் ? மாணவர்களுக்கு விருப்பமற்ற கவர்ச்சியற்ற சூழல், ஒத்துப்போகாத அழுத்தம், பாடம், பயிற்சி, பம்பரம் போல ஓடி ஆடி சுழல வைக்கும் கலைத்திட்டம், இடைவெளியற்ற மேலதிக வகுப்புகள். ஓய்வில்லை, ஒய்யாரமில்லை, விளையாட்டில்லை, வேடிக்கையில்லை, கலையில்லை, கற்பனையில்லை, ஆகமொத்தத்தில் பரிட்சை தவிர வேறு ஒன்றுமில்லை. பாடசாலைகளில் இவை தவிர ஒன்றுமேயில்லை என்றானால் மானுட உருவாக்கம், ஆளுமை உருவாக்கம் சவால்களை வெல்லும் திராணி கொண்ட தலைவர்களை உருவாக்கும் செயற்பாடுகள் எப்படி சாத்தியமாகும் ?

ஆக மொத்தத்தில் ஒன்றுமேயில்லாத அமைப்பொழுங்கில் எல்லாமாக ஆகிவிடவேண்டுமென்ற ஆகாயக்கோட்டை மட்டும் எட்டா உயரத்தில் கட்டப்படுகிறது பாடசாலைகளில். மாணவர்களை திண்டாடவைத்து பரீட்சையின் பின் புள்ளிகளை வைத்து தம்பட்டமடித்து ஆசிரியர்கள் கொண்டாடி மகிழ என்னதான் மீதமிருக்கிறது இங்கு ?

பாடசாலை மீது கண்ணிருக்க வேண்டும். விமர்சனக் கண்ணும் வியாக்கியானக் கண்ணும். குரு ஷிஷ்யன் எனும் பெயரளவில் நெருங்கியுள்ள அகன்ற பெருத்த இடைவெளியை நீக்கி, அகற்றி, அன்பை அடித்தளமாகக்கொண்ட, சுவர்கள் அற்ற, சுவர்கள் தகர்க்கப்பட்ட வகுப்பறைச் சூழல் வரும் வரை கலைத்திட்டமோ கல்விக் கொள்கையோ நிரந்தர மாற்றங்களை தந்துவிடுவதில்லை, தரப்போவதுமில்லை.

சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் ஒன்றை கொண்டு செல்ல ஆசிரியர்களின் மனோ நிலை ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த ஆரோக்கிய மேம்பட்ட நிலையை தக்க வைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட சகலரதும் தார்மீக கடப்பாடாகவே அமைகிறது. ஆரோக்கியமான ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகளும் நாடுகளும் தான் ஆரோக்கியமான மனிதர்களை, ஆரோக்கியமான சிந்தனைகளை உலகிற்கு பரிசாக தரும் அருகதை பெற்றவை.



bisthamy.ahamed@thaiveedu.com


**யோர்க் பிராந்திய மாவட்ட கல்விச் சபை**

**தனது தணிக்கைக் குழுவிற்கான தன்னார்வ சமூக உறுப்பினரைத் தேடுகிறது**

York Region DISTRICT SCHOOL BOARD

**York Region District School Board Seeks Volunteer Community Member for Audit Committee**

செப்ரெம்பர் 13, 2024ல் ஆரம்பித்து, அடுத்த மூன்று ஆண்டு காலத்திற்கு அதன் தணிக்கைக் குழுவில் பணியாற்றுவதற்காக, யோர்க் பிராந்திய மாவட்ட கல்விச் சபை நிதியியலில் நிபுணத்துவமும் வணிக அறிவும் கொண்ட ஒரு சமூக உறுப்பினரைத் தேடுகிறது.

நிர்வாகம் மற்றும் மேற்பார்வை தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதில் அறங்காவலர் சபைக்கு உதவுவதே தணிக்கைக் குழுவின் முதன்மையான பணியாகும். தணிக்கைக் குழுவின் கடமைகள் பின்வரும் முக்கிய பகுதிகளின் கீழ் அடங்குகின்றன:

- நிதி அறிக்கைச் செயல்முறை
- உட்கட்டுப்பாடுகளுக்கான கட்டமைப்பு
- இடர் மேலாண்மை நடைமுறைகள்
- குழுவின் உள்ளக மற்றும் வெளிப்புற தணிக்கையாளர்களின் செயல்திறன் மற்றும் செயல்பாடுகள்
- சட்டத்தின் கீழான தன் கடமைகளுக்கு உட்பட்டு கல்விச் சபை இயங்குதல்

விண்ணப்பதாரர்கள் யோர்க் பிராந்தியத்தில் வசிப்பவராக இருப்பதோடு, கணக்கியலில் தொழில்சார் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன், பொதுத்துறைக் கணக்கியலையும் தணிக்கை நெறி முறைகளையும் புரிந்துகொள்வதற்குப் போதுமான கணக்கியல் மற்றும் மேல்நிலை நிதி மேலாண்மை நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மார்ச் 8, 2024 வெள்ளிக்கிழமை மாலை 4:00 மணிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

மேலதிக தகவல்களுக்கும், விபரங்களுக்கும்: www.yrdsb.ca



# முன்பள்ளி வகுப்புகளும் பெற்றோரின் தயக்கமும்

**- த. சிவபானு**

குழந்தையை முன்பள்ளிக்கு அனுப்பிவைக்க வேண்டியது அவசியமா? என்ற கேள்வி பல பெற்றோர்கள் மத்தியில் இன்று எழுகின்றது.

ஒரு குழந்தை தனது முன்பள்ளியில் அறிவு வளர்ச்சிக்கான சிறந்த ஓர் அடித்தளத்தைப் பெறுகின்றது. கல்வி உளவியலாளரான ஜீன் பியாஜே (Jean Piaget's) அது குறித்து ஆய்வு செய்து, அதன் முக்கிய பயன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் மிகுந்த ஆர்வத்தோடு செயற்படுவது வழமை. எனினும், வழமைக்கு மாறாக, இன்றைய காலத்தில் முன்பள்ளி வகுப்பில் குழந்தைகள் சேர்க்கப்படும் வீதம் குறைவடைந்து வருவதைக் காணமுடிகின்றது. முன்பள்ளி வகுப்பில் பிள்ளைகளை எழுத வைப்பது மிகக் கடினமானதாக உள்ளது என, சில பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமன்றி அந்த பருவத்தில் எழுதவும், படிக்கவும் பிள்ளைகளது உடல் - உள வளர்ச்சி போதாது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

முன்பள்ளிக்குச் செல்லாமல், ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் எழுத்துப் பயிற்சியோ அல்லது எண்கள் சார்ந்த அடிப்படைப் புரிதலோ இல்லாமல் காணப்பட்ட நிலையை, நாம் சிந்தித்துப் பார்க்கலாம்.

ஒரு குழந்தை முன்கூட்டியே, முன் திட்டக் கல்வியை ஒரு மாற்றுக் கல்வி நிலையத்தில் பயிலாமல், பொதுப் பாடசாலையில் சேர்த்தபோது அவருக்கு வயது 6. ஆனால் பென்சிலை எப்படிப் பிடிக்கவேண்டும், எப்படி எழுத வேண்டும் என்பதில்கூட பரிச்சயமில்லாது இருந்துள்ளார். அதனை ஆசிரியர் காட்டிக் கொடுத்துள்ளார். ஆனால், அவரால் பென்சிலை விரல்களால் பிடிப்பது கடினமாக இருந்துள்ளது. பாடசாலை முன்வகுப்பில் விரல்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படாமையே இச் சிக்கலுக்கான காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. பென்சிலைப் பிடித்து எழுதுவது மிகக் கடினமாக இருப்பதாக அக்குழந்தை தனது தாயிடம் முறையிட்டுள்ளார். இதனையடுத்து அந்த தாய் தனது பிள்ளையைப் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தியுள்ளார். தனது குழந்தை படிப்புத்திறனை வளர்க்கும் செயற்பாட்டுக்கு தயாராவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது என, அந்த தாய் குறிப்பிட்டுள்ளார்.

கோவிட்-19 தொற்றுநோய்களின் போது, பொதுப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தமையைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கோவிட் பற்றிய பயம் அல்லது இணையவழிப் பள்ளிச் செயற்பாடுகளைத் தவிர்க்க விரும்புவதால், பெரும் தொகையான குடும்பங்கள் தங்கள் சிறு குழந்தைகளுக்கான பள்ளியைத் தொடங்குவதைத் தாமதப்படுத்தின. பெரும்பாலானவர்கள் தங்கள் குழந்தைகளை தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பத் தொடங்கியுள்ளனர். ஆனால், தொற்றுநோய் பரவி பாடசாலைகள் மூடப்பட்ட மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னருங்கூட, மழலையர் பாடசாலையில் சேர்வது பின்தங்கிய நிலையிலேயே உள்ளது என்பதைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பெருந்தொற்று காலத்தில் பின்பற்றப்பட்ட கல்விமுறையில், புதிய சூம் செயலியின் பயன்பாடு அதிகரித்தது. இது பெற்றோருக்கு நல்வாய்ப்பாகவும் திருப்தியானதாகவும் அமைந்தது. பெருந்தொற்று காலம் முடிவடைந்த பின்னருங்கூட குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் ஆர்வம் காண்பிக்காமல் இருப்பதற்கு இந்நிலையும் ஒரு காரணமாக சொல்லப்படுகின்றது. ஆரம்ப வகுப்புக் குழந்தைகளுக்குப் பாடசாலைகளில் தூங்குவதற்கும் ஓய்வுக்கும் வாய்ப்புகள் கொடுத்திருந்த போதும், அவற்றைப் புறந்தள்ளி, தங்கள் பிள்ளைகளைத் தொற்றுநோய்களிலிருந்து தவிர்ப்பதற்கே பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகின்றார்கள்.

வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதற்கு குழந்தைகளைப் பழக்குதல், அவர்களது வாழ்க்கையை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வருதல், அவர்களைக் கற்றலுக்குப் பழக்கப்படுத்துதல் முதலானவற்றுக்கு பாலர் வகுப்பு மிக முக்கியமானது. தொடக்கப் பாடசாலையைத் தவறவிடுவது, ‘குறிப்பாகக் குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் மற்றும் முதல் மொழி



ஆங்கிலமல்லாத குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும்' என்று ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் கல்விக்கான பட்டப்படிப்புகள் துறையின் முன்னாள் பீடாதிபதியான Deborah Stipek கூறியுள்ளார். அத்தோடு 'அந்தப் பிள்ளைகள் சில சமயங்களில் எழுத்துகளை அடையாளம் கண்டுகொள்வதிலும், பள்ளியைத் தொடங்குவதற்கு முன்பே 10 வரை எண்ணுவதிலும் பின்தங்கியிருக்கிறார்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றலுக்கு அடித்தளம் இடப்படுவது மிக முக்கியமானது. இது பல பெற்றோருக்குத் தெரிந்திருப்பதில்லை. ஒரு பிள்ளையைப் பார்த்து மற்றப்பிள்ளை பழக, ஒழுக, பின்பற்ற முனைவதும் இந்த முன்பள்ளிக் காலத்திலேயாகும். மழலையர் பாடசாலைகளே பிள்ளைகளின் வாழ்க்கைக்கான அடித்தளம் என பல பெற்றோர் கருதுவதில்லை. அவர்களுடைய இந்த மனமாற்றத்திற்குக் கோவிட் பெருந்தொற்றுக் காலமும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

பிள்ளைகளின் வாழ்க்கைக்கு முன்பள்ளி வகுப்பில் பழகும் பழக்கம் அவசியமானது என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்வதில்லை என்னும் ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

ஆரம்பகாலக் குழந்தைப் பருவம் தொடர்பான கல்விக் கோட்பாடுகள் சரியாகப் பிரயோகிக்கப் படும் போது, அறிவாற்றல் மற்றும் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன. அத்துடன் குழந்தைகளின் ஆளுமை மற்றும் நடத்தையையும் அவை வடிவமைக்கின்றன. குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியை ஆதரிக்கும் ஒரு முக்கிய அங்கம் விளையாட்டு ஆகும். முன்பள்ளிக்காலத்தில் விளையாட்டுச் செயற்பாடுகளே கற்பித்தலில் அதிக பங்கை வகிக்கின்றன. குழந்தையின் பிறப்பு முதல் எட்டு வயதிற்கிடையிலான காலப்பகுதி உணர்திறன் கற்றல் காலம் என அழைக்கப்படும். இக்காலத்தில் பெரும்பாலும் குழந்தைகளின் முயற்சி அல்லது செயலூக்கம் விரிவடையும். இத்தன்மையானது எதிர்கால கண்டுபிடிப்பு, படைப்பாற்றல், மகிழ்ச்சி மற்றும் பயிற்சிக்கான முதன்மைப் படியாகும்.

இவ்விடயங்களை பெற்றோர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இது தொடர்பில் ஏற்படும் தமது தயக்கங்களையும் மனத்தடைகளையும் அவர்கள் விலக்கிவைக்க வேண்டியது இன்றியமையாதது.

முன்பள்ளியில் குழந்தை பயிலும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதில் பெற்றோர் முழு முனைப்பாக ஈடுபட வேண்டியது மிக முக்கியமானதாகும்.



sivapalu@thaiveedu.com

# அங்காதிபாதம் 400

## கன்ம நிவர்த்தி

### - பால. சிவகடாட்சம் -

***‘ஊழ்வினைத் தொடர்பினாலே நோய்பல உண்டாம் என்க***
***சூழும்அந்நோய்கள் எல்லாம் தொந் தமாய் வாதை பண்ணும்***
***வாழுறு வாணாள் போக்கு மருந்தினால் தீர மாட்டா***
***பாழுறும் உடம்பை வாட்டும் பற்றிய கன்மத் தாலே’*** - 375

முற்பிறப்புகளில் செய்த பாவங்களின் தொடர்பினால் இப்பிறப்பில் நோய்கள் பலவும் உண்டாகும் என்று உணர்க. அவ்வாறு வந்து சூழ்கின்ற நோய்கள் எல்லாம் தொடர்ச்சியாக உபாதைகளை ஏற்படுத்தும். வாழ்நாளில் எந்த மருந்தினாலும் அந்தக் கன்ம நோய்களைக் குணப்படுத்த முடியாது. தொடர்ந்துவரும் கன்ம வினையினாலே கெட்டுப்போகும் இந்த உடம்பை வருத்தும்.


***‘கன்மத்தால் வந்த நோய்கள் காலனுக்(கு) இரைய தாகும்***
***கன்மத்தை நிவிர்த்தி செய்தால் நோய் எலாம் கலங்கிப் போகும்***
***கன்மத்தின் பகுதி தன்னைக் கண்டிடல் அரிய தாகும்***
***கன்மத்தைத் தீர்க்க மாட்டார் கன்ம சண் டாளர் தாமே’*** - 376

கன்ம வினையினாலே வந்த நோய்கள் மரணத்தை ஏற்படுத்தும். அந்தக் கன்ம வினைக்குப் பரிகாரம் செய்தால் நோயெல்லாம் விலகிப்போகும். கன்ம வினையின் பங்கு பற்றி அறிந்து கொள்வது கடினம். பிறவிச் சண்டாளர்கள் கர்ம வினையைத் தீர்க்கமாட்டார்கள்.

***‘சண்டாளப் பிறப்பினோர்க்குத் தான்கன்ம வினை தீராது***
***மண்டியே வளர்ந்து கொல்லும் மற்றவர் செய்கை யாலே***
***அண்டிய கன்மம் தானே அவர்க்குறு பகையாய் நிற்கும்***
***கொண்டிடு கன்மம் எல்லாம் கூட்டிய வினையான் மேவும்’***-377

சண்டாளப் பிறப்பினோர்க்குப் பூர்வஜன்ம வினை தீராது. அது அடர்ந்து வளர்ந்து கொல்லும். மேலும் இப்பிறவியில் அவர்களின் செய்கையால் வந்துசேரும் வினை அவர்க்கு உற்ற பகையாய் நிற்கும். எல்லாப் பாவங்களும் சேர்ந்து தீங்கை விளைவிக்கும்.

(முந்திய பிறவிகளில் செய்த பாவச் செயல்களால் எற்பட்ட நோய்களைத் தீர்க்கும் வண்ணம் செய்யவேண்டிய தியானம், கிரியைகள், யந்திரங்கள் பூசைகள், செபங்கள் குறித்து அடுத்துவரும் பாடல்களில் பேசப்படுகின்றது)



***‘வினையறு சூட்சம் தன்னை விதிமுறை விளம்பக் கேளாய்***
***கனியுறு நாத விந்தைக் கருதும் ஓம் காரத் தாலே***
***நனியுற வளையச் சூழ்ந்து நடு நேராய்த் தலையில் ஏற்றி***
***முனையதில் சூலம் இட்டு மேல் இனி மொழியக் கேளே’*** - 378

முற்பிறவியின் கர்மவினையினைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றிக் கூறக் கேட்பாயாக. மகிழ்ச்சி தருகின்ற சக்தி சிவத்தினைக் கருதுகின்ற ஓம்காரத்தால் சிறப்புற வளைந்து சூழ்ந்து சரி நடுவாக உச்சியிலேற்றி அதன் நுனியில் சூலக்குறியிடுக. இதன்மேல் செய்யவேண்டியதைச் சொல்லக்கேட்பாயாக.

*'மொழியுறு சூலத் துள்ளே மூலமாம் விட்டெ ழுத்தோ(டு)*
*அழகுற விடா தெழுத்தும் இரண்டையும் அட்சரித்தே*
*வழுவற நுனி அதன் மேல் வயங் கிடச் சுத்தியிட்டு அங்(கு)*
*எழுதும் இச்சூட்சுமத் தைச் சூழ்ந் திட ஒரு வளையம் போடே'*-379

சொல்லப்பட்ட சூலத்தின் உள்ளே மூலமாகிய விட்டெழுத்து மற்றும் முறையாக விடாத எழுத்து இரண்டையும் எழுதிவைத் துக்கொண்டு குற்றமில்லாத நுனி வளைந்திடாமல் சுத்தமாக எழுதும் இந்தச் சூட்சுமத்தைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போடு வாயாக.

*'போட்டிடு வளைய மீதில் பொருந்திய தளம் ஈரெட்டுக்*
*காட்டியே சோட சத்தைக் கதிக்கவோர் வளையம் இட்டுத்*
*தீட்டிடும் இதழ்கள் எட்டில் திக்குப் பாலகரைப் போற்றி*
*நாட்டிடும் சதுர வாயில் நாலு திக்கினும் எடாயே'* - 380

போட்டுவைத்த வட்டத்தின்மேல் பொருந்தும் வகையில் பதி னாறு தளங்களில் பதினாறு பூசைகளைக் காட்டும் ஒரு வளையமிட்டு வரைந்த எட்டு இதழ்களிலும் எட்டுத் திக்குப் பாலகரைப் போற்றி நான்கு வாயில்களை நான்கு திக்கிலும் எடுப்பாயாக.

*'எடுத்தநால் வாயில் தோறும் எழில் பெறு கணேசன் கந்தன்*
*வடுத்தவிர் காளி வீர வாகு நால் வரையும் பூசித்*
*தடுத்திடு வெள்ளி செம்பொன் ஆனதோர் தகட்டில் கீறித்*
*தொடுத்திடு கிரிகை தன்னைச் சொல்லுவன்*
*தொகுத்துக்கேளே'* -381

அவ்வாறு எடுத்த வாயில் தோறும் அழகிய விநாயகன், முரு-கன் குற்றமில்லாத காளி, வீரவாகு ஆகிய நால்வரையும் வணங்கி வெள்ளி, செம்பொன்னாலான ஒரு தகட்டில் கீறித் தொடங்கிடும் கிரியைகள் பற்றித் தொகுத்துக் கூறுவேன் கேட்பாயாக.

*'தொகுத்திடு மண்ட பம்தான் சொல்லிய சதுர மாக*
*வகுத்து நால் வாயில் போக்கி மரபாகக் கோல மிட்டுப்*
*பகுத்தமேற் கட்டி மாவின் இலை தூக்கிப் பண்பி யாவும்*
*மிகுத்தமண் டபத்தில் நாப்பண் விளங்கவோர்*
*மேடை போடே'* - 382

செய்யப்படும் மண்டபம் மேற்சொல்லிய சதுரமாக வகுத்து நான்கு வாசல்களுக்குப் போகும் முறைமையாய் கோலம் போட்டு அதற்கு மேலாகப் பிரித்தெடுத்த மாவிலையைக் கட் டித் தூக்கி அனைத்துப் பண்புகள் நிறைந்த மண்டபத்தின் நடுவில் ஒரு மேடையைப் போட்டுவை.

*'மேடையின் உயரம் எட்டு விரல் நீளஞ் சதுர மாகப்*
*போடுவாய் முழம் இரண்டு பொருந்தவே சுத்த மாக்கித்*
*தேடுநெல் லரிசி பாசிப் பயறோடு திலம்பரப்பி*
*வீடருள் இயந்திரத்தை மேல் வைத்துப் பூசிப் பாயே'* - 383

மேடையின் உயரமும் எட்டுவிரல் அளவில் சதுரமாகவும் போட்டு இரண்டு முழம் அளவில் சுத்தம் செய்து அதில் நெல் லரிசி, பாசிப்பயறு, எள்ளு என்பவை பரப்பி மோட்சத்தைத் தருகின்ற இயந்திரத்தை அதன் மேல் வைத்துப் பூசைகள் செய்வாயாக.

*'பூசிப்பாய் மஞ்ச னந்தான் புனுகுடன் பஞ்ச சுத்தி*
*ஆசிப்பாய்த் தூப தீபம் அரியசந் தொடு சுகந்தம்*
*நேசிப்பாய் புட்ப சாதி நிவேதனம் பலவும் ஆக்கி*
*வாசிப்பாய் வாயில் தோறும் வைத்திடு நாலு கும்பம்'*-384

புனுகு போன்ற வாசனைத் திரவியங்களை இட்டு நீராட்டி, அருமையான வாசனை தரும் தூபம், தீபம் இட்டு, மிக விருப் போடு மலர் வகைகள், நிவேதனங்கள் பலவும் செய்து திசை கள் தோறும் நான்கு கும்பங்களை வைத்து ஓதவேண்டும்.

*'கும்பத்திற் சலம் பூரித்துக் கூர்ச்சம் இட்டு ஆடை சாத்திப்*
*பம்புற்ற சூத பத்ரம் பரப்பி நல் தேங்காய் வைத்து*
*நம்புற்று மாலை சாத்தி நறிய தாம் பூலம் வைத்து*
*வம்புற்ற மலர் தூய்ப் போற்றி வயங்கும்*
*எண்திக்கில் தானே'* - 385

கும்பத்தில் நீர் நிரப்பி, தர்ப்பை இட்டு, துணி சாத்தி, வாழை யிலை பரப்பி நல்ல முடியுடைய தேங்காய் வைத்து, நன்றா கப் புனையப்பட்ட மாலையைப்போட்டு, வெற்றிலை பாக்கு வைத்து புதிதாகப் பறிக்கப்பட்ட மலர் தூவி வழிபட எட்டுத் திக்கும் வசப்படும்.

*'திக்கினில் அட்டகும்பம் தெய்வீக மாக வைத்து*
*முக்கியம் உடைய அட்ட பாலரை முறையாய்ப் போற்றிப்*
*புக்க தோர் இரவிவாரம் புலரியில் தானம் பண்ணித்*
*தக்க வெக்கிய ஓமத் தோடு உரு லட்சம் தாக்கிடாயே'* - 386

எட்டுக் கும்பங்களைத் திசைதோறும் தெய்வீகம் சேர வைத்து முக்கியமான அட்டபாலகரை முறையாக வணங்கி ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் புண்ணியதானம் செய்து அக்கினிக் குண்டத்தில் சூடேற ஹோமத்தோடு மந்திரத்தை ஒரு லட்சம் முறை உருவேற்றுவாய்.

*'தாக்கியே பிணியா ளன்றன் சரீரத்தைச் சுத்தி செய்து*
*நீக்கரும் பிணியை நீக்கு நியமமாய் முன்பு வைத்துத்*
*தேக்கிய வன்பிற் பூசை செய்வன வெல்லாஞ் செய்து*
*பாக்கிய நீறு சாத்தப் பவப்பிணி பறந்து போச்சே'* - 387

நோயாளரின் உடலைச் சுத்தமாக்கி நீக்கமுடியாத நோயை நீக்கும் முறையாக அதனை முன்வைத்து உள்ளத்தில் நிறைந்த அன்போடு செய்யவேண்டிய பூசையெல்லாம் செய்து அதனில் வருகின்ற நீறை அணிவிக்க முற்பிறவிப் பாவவினைகள் உடலை விட்டு ஓடும்.

*(சில பாடல்களுக்கு உரைகாண உதவிய சிவபாலு மாஸ்டர் அவர்கட்கும், அப்பாடல்களில் கூறப்படும் ஓமகுண்டம் யந்திரம் என்பவை பற்றி விளக்கும் வரைபடத்தைத் தந்து தவிய டாக்டர் இலம்போதரன் அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகுக.)*



Sivakadadcham@thaiveedu.com




மருத்துவ விஞ்ஞான உலகம் விஸ்வரூப வளர்ச்சிப் பாதையில் நாளொரு தடத்தை பதித்து வீறு நடை போடுகின்றது என்பதில் ஐயமில்லை. எனினும் இன்னும் விளக்கப்பட முடியாத மருத்துவ உலகின் விந்தைகள் ஏராளம் காணப்படுகின்றன. ஒருவருக்கு ஏற்படக் கூடிய வலியை அளவீடு செய்து



அதன் அடிப்படையில் சிகிச்சைகளுக்கு முன்னுரிமை அளிப்பது மனித நேயமாகும். ஆனால் வலியை துல்லியமாக அளவீடு செய்து கொள்ளக்கூடிய கருவிகளோ முறைமையே இன்றளவிலும் மருத்துவ விஞ்ஞான உலகில் எட்டப்படாத இலக்காகவே காணப்படுகின்றது என்பது எம்மில் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். வலி தொடர்பான ஓர் ஊடாடலாக இந்த பத்தி அமைகின்றது.

வலியை எவ்வாறு அளவிடுவது? அது எவ்வளவு வலிமையானது? அது எவ்வளவு வேதனை மிக்கது? என்பவை குறித்த கேள்வி விஞ்ஞான உலகில் மிக எளிமையான ஒரு கேள்வியாக இருக்கும் என நம்மில் பலர் ஊகிக்கக்கூடும், எனினும், பாரியளவு வளர்ச்சியடைந்த மருத்துவ விஞ்ஞானத்துறையில் ஒருவருக்கான வலி எவ்வளவு ஆழமானது என்பதனை அளவீடு செய்து துல்லியமாக கூறும் முறைமை இதுவரையில் கிடையாது என்றால் நம்ப முடிகின்றதா? எனவே, வலி எவ்வளவு பலமானது என்ற கேள்விக்கு பதிலளிப்பது சற்றே சவால் மிக்க விடயமாகும்.

இரண்டு நோயாளிகளுக்கு தமக்கு ஏற்பட்ட வலி தொடர்பில் தெளிவுபடுத்த முனைகின்றனர் என வைத்துக் கொள்வோம். ஒரே விதமான வசனங்களை இரண்டு நோயாளர்களும், மருத்துவர்களிடம் கூறும் சந்தர்ப்பத்தை நினைத்துப் பாருங்கள். இந்த இரண்டு பேரும் ஒரே அளவிலான வலியை உணர்கின்றனர் என, மருத்துவரினால் உறுதிப்படுத்த முடியுமா? ஒருவர் வலியை மலினப்படுத்தும் பழக்கத்தை உடையவர் என்றால் என்ன செய்ய வேண்டும்? ஒருவர் நீண்ட காலமாக வலியினால் பாதிக்கப்பட்டு அதற்கு பழக்கப்பட்டு இருந்தால் என்ன செய்ய வேண்டும்? ஏதாவது ஒரு காரணத்திற்காக மருத்துவர் முன்னனுமானத்தின் ஊடாக ஒரு நோயாளியை விட, மற்றொரு நோயாளியை நம்புவதற்கான சாத்தியம் உண்டா?

வலி என்பது போராட்டமான விடயமல்ல. அதனை அளந்து பார்ப்பதற்கு முடியாத நிலையில் சிகிச்சை அளிப்பதிலும் சவால்களும் சிரமங்களும் ஏற்படும். வலி ஒரு முக்கியமான சமிக்ஞையாகும். அத்துடன் அது தொடர்பில் கண்டறிவதற்கு காலம் தாழ்த்துவதானது ஒருவரின் உயிரை காப்பதற்கான சந்தர்ப்பத்தை நழுவச் செய்யக்கூடிய சூழ்நிலையையும் ஏற்படுத்தலாம். எனினும் சில வேளைகளில், வலிகள் மிகவும் சிறிய விடயமாகவும் இருக்கலாம் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

இவ்வாறான காரணிகளினால் வலி இன்னமும் மர்மமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ஒருவர் எவ்வளவு வேதனையில் இருக்கின்றார் என்பதனை தீர்மானிப்பது முடியாத காரியமாகிறது. எமக்கு அது பற்றிய போதிய புரிதல் கிடையாது என கலிபோர்னியாவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் (stanford university) வலி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள கணினி விஞ்ஞானி எமா பியர்சன் (Emma Pierson) குறிப்பிடுகின்றார். குறிப்பாக நோயாளி ஒருவரின் வலி தொடர்பில் மருத்துவர்கள் அடிக்கடி பதற்றம் அடைவதன் மூலம், வலி தொடர்பில் தற்போதைய மருத்துவ விஞ்ஞானத்திற்கு போதிய புரிதல் கிடையாது என்பது புலனாகின்றது

வலிக்கான நிவாரணத்தை வழங்கும் முதலாவது நடவடிக்கை

யாக வலியை அளவீடு செய்தல் காணப்படுகின்றது. அது ஒரு சவால் மிக்கதும் வியாகூலமானதுமான ஒரு விடயமாகவே மருத்துவ விஞ்ஞானத்துறை கருதுகின்றது என அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தின் கிலிவ்லேன்ட் (Cleveland Clinic) மருத்துவமனையில் வலி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் குழுவின் பிரதானி கார்ல் ஷாபி தெரிவிக்கின்றார்.

தற்பொழுது நோயாளி ஒருவரின் வலி தொடர்பிலான அளவீட்டு நடவடிக்கைகள் அவசர சிகிச்சை பிரிவுகளில் காணப்படும் சிரித்த முகங்களின் (smiley face) அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. இது சிறுவர்கள் மற்றும் தொடர்பாட முடியாத நோயாளிகளுக்கு பிரச்சினையாக அமைந்துள்ளது என அவர் தெரிவிக்கின்றார்.

தங்களுக்கு ஏற்படக்கூடிய வலி தொடர்பில் நோயாளிகள் வழங்கும் அளவீட்டு தரப்படுத்தல்கள் நம்பகமானதா என்ற கேள்வி எழுகின்றது. மனிதர்கள் தங்களுக்கு ஏற்படும் நோயை பெரிதுபடுத்தி காண்பிக்க நாட்டம் காட்டுவதாகவும் ஒரு நிலைப்பாடு பொதுவாக காணப்படுகின்றது எனவும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. எனினும் இது வழமையான நிலைமை எனக் கூறுவதற்கு போதிய அளவு சாட்சியங்கள் கிடையாது.

வலியை அளவீடு செய்வதற்கு ஓர் அளவீட்டு கருவியோ அளவீட்டு முறையோ கிடையாது. மருத்துவ ரீதியான காரணிகளின் அடிப்படையாக மருத்துவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும். குறைந்த வருமான வசதிகளுடைய மக்களுக்கு வலி பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். எனினும், அவ்வாறான வலிகளை அவர்கள் உதாசீனம் செய்யும் சாத்தியங்கள் உண்டு என பியர்சன் தெரிவிக்கின்றார்.

துரதிஷ்டவசமாக வலி தொடர்பான பிழையான நம்பிக்கை மருத்துவர்கள் மத்தியில் பொதுவாக காணப்படுகின்றது என்பது 2016-ம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளைத் தோலுடைய மருத்துவர்கள் மற்றும் பிரஜைகள், கறுப்பினத்தவர்களுக்கு ஏற்படும் வலியை உதாசீனம் செய்வதாகவும் இது ஒருபயங்கரமான நிலை எனவும் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ மாணவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் கறுப்பின மக்கள் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களை கேட்டு அறிந்து கொண்டதனால், மாணவர்கள் இன பக்க சார்பு நிலையின் அடிப்படையில் செயல்படுவதாகவும், பயிற்சியின் முதல் நான்கு ஆண்டுகளிலும் இவர்கள் இவ்வாறான ஒரு நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான போலிக் கருத்துகள் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தும் ஒரு வரலாற்று முயற்சியாகவே கருதப்படுகின்றது. கறுப்பினத்தவர்கள் மற்றும் மாநிறத்தவர்கள் முதலானோர் மாறுபட்ட நரம்பு மண்டலத்தை கொண்டவர்கள் என்ற பிழையான தகவல் பரப்பப்பட்டிருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெள்ளை இனத்தவர்களை விட கறுப்பினத்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பது 40% குறைவானதாக காணப்படுகின்றது. வெள்ளை இன மக்களுடன் ஒப்பீடு செய்யும் போது மத்திய மற்றும் தென் அமெரிக்கா பூர்வீகத்தைக் கொண்ட நோயாளிகளுக்கு வலிகளுக்கான நிவாரணங்கள் வழங்கும் வீதம் 25% குறைவானதாகிறது.

இன ரீதியான பேதம் மட்டும் சிகிச்சை முறைமைகளில் காணப்படும் ஒரு பாதகமான நிலைமை கிடையாது. மனப்பிறழ்வினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பிலான சிகிச்சை முறைமைகளிலும் வேறுபாடு காணப்படுகின்றது. தனித்தனி



யாக மேற்கொள்ளப்பட்ட 77 ஆய்வுகளின் போது, பெண்களின் வலி தொடர்பில் அறிக்கை தயாரிக்கும் போது 'உணர்வு பூர்வமான', 'முறைப்பாடு செய்தல்' போன்ற வார்த்தை பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டமை தெரிய வருகின்றது. 981 பேரிடம் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் போது வலி காரணமாக அவசர சிகிச்சைகளுக்காக சிகிச்சை நிலையங்களுக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை குறைவு எனவும் 33 வீதமான பெண்கள் சிகிச்சைக்காக ஆண்களை விடவும் நீண்ட காலம் காத்திருக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரே விதமான வலிகள் ஏற்படும் போது ஆண்களுக்கு வலுவான மருந்து வழங்கப்பட்டுள்ளது.

சுவீடனின் கோதம்பார்க் (gothenburg) பல்கலைக்கழகத்தில் ஆண், பெண் பால்நிலை சமத்துவம் தொடர்பிலான ஆய்வு

ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பிலான ஆய்வினை ஆன்கே சமுவேலிடிஸ் முன்னெடுத்துள்ளார். ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பில் சமூகத்தில் நிலவும் கருதுகோள்களின் அடிப்படையில் நோய் சிகிச்சை முறைமைகளும் அமைந்துள்ளன என அவர் தெரிவிக்கின்றார். இது ஒரு பக்கச்சார்பான நிலைமை எனவும் சுகாதார நலன் சேவைகளில் பெண்கள் மற்றும் ஆண்கள் நடத்தப்படும் விதத்தில் பாரிய வேற்றுமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் ஒரு நோய் முறைப்பாட்டின் போது, பெண்களுக்கு மற்றும் ஆண்களுக்கு மாறுபட்ட சிகிச்சை வழங்கப்படுவதற்கு மெய்யான காரணங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டு இருக்கிறார். ஹோமோன் மற்றும் மரபணு மாற்றங்கள் காரணமாக சில வேளைகளில் வலி நிவாரணிகள் பெற்றுக் கொடுக்கும் போது மாறுதல்கள் ஏற்படக்கூடும் என அவர் குறிப்பிடுகின்றார். எனினும் வலி ஏற்படும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சிகிச்சை வழங்கும் போது அவதானிக்கப்பட்ட அனைத்து மாற்றங்களும் உயிரியல் விஞ்ஞானத்தின் மாற்றங்களின் அடிப்படையில் தெளிவுபடுத்த முடியாதவை என அவர் குறிப்பிடுகின்றார்.

மருத்துவ விஞ்ஞானத்தில் வலி தொடர்பான சிகிச்சை முறைமைகளின் போது பக்கச்சார்பான நிலைமைகளை மாற்றுவதற்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ள முடியுமா ? ஒருவர் கடுமையான வேதனையில் பாதிக்கப்பட்டு இருப்பது தொடர்பில் ஏதேனும் ஓர் அளவீட்டு முறையில் அதனை கண்டுபிடித்து அளந்து கொள்ள முடியுமாயின், சிகிச்சை முறைமைகளிலும் மாற்றங்களை கொண்டுவர முடியும் எனவும் அது தொடர்பான புத்தாக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புதிய தொழில்நுட்பங்கள் மூலம் வலியின் அளவினை அறிந்து கொள்ள முயற்சிக்கப்படுகின்றது. உயிரிக் குறியீடு (bio-marker) ஊடாக இந்த ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உயிரிக் குறியீடுகள் இன்றி எம்மால் வலியை சரியாக இனம் காண முடியாது எனவும் அதற்கு சரியான சிகிச்சை அளிக்க முடியாது எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கடுமையான இடுப்பு வலியில் அவதியுறும் ஒருவர் சிகிச்சையின் போது எவ்வாறு துலங்குவார் என்பதனை மதிப்பீடு செய்ய முடியாது. அதேபோன்று ஆய்வுகூட பரிசோதனைகளின் போது புதிய சிகிச்சை முறைமைகளின் போது நோயாளர்கள் துலங்கும் விதம் தொடர்பில் அனுமானங்களைச் செய்ய முடிவதில்லை.

உடலில் வேதனை ஏற்படும் போது செயல்படக்கூடிய மரபணுக்களை கண்டுபிடித்துச் சொல்லக்கூடிய குருதி பரிசோதனை ஒன்றை ஐக்கிய அமெரிக்காவின் இன்டியானா மாநில ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த உயிரிக் குறியீடு தொழில்நுட்பத்தின் ஊடாக நபர் ஒருவருக்கு ஏற்படக்கூடிய வலி மட்டுமின்றி அது எவ்வளவு பாரதூரமானது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மூளையின் செயல்பாட்டினை ஒரு பயன்தரக் கூடிய உயிரிக் குறியீடாக குறிப்பிட முடியும். மூளையின் தொழிற்பாடு அதிகரித்தல், குறைதல் முதலானவை குறித்து அளந்து சொல்லக் கூடிய கருவி ஒன்றை ஆய்வாளர்கள் உருவாக்கினர். இந்தக் கருவியில் மூளையின் தீட்டா அலைகளை (theta waves) அளவீடு செய்ய முடியும். வேதனை ஏற்படும் போது இந்த அலைகள் அதிகரிப்பதாகவும் வலி நிவாரணிகள் வழங்கும் போது இந்த அலைகள் சாதாரண அளவிற்கு மாற்றம் அடைவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வாளர்களின் ஆய்வு முறை வேறும் பல ஆய்வுக்கூடங்களில் சுயாதீனமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேதனையை அளவீடு செய்வதற்காக பிரதான முறையாக மூளை அலைகளை பயன்படுத்த முடியாது எனவும் அதனை ஓர் உசாத் துணையாக ஆய்வு முடிவாக பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருவருக்கு ஏற்படும் உணர்வு வலி மற்றும் ஏனைய உளவியல் நிலைமைகளை துல்லியமான அடிப்படையில் எம்மால் அறிந்து கொள்ளவே முடியாது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வலி தொடர்பில் நோயாளி கூறும் தகவல் உண்மையாக இருக்க வேண்டும். சிறுவர்கள், மனப்பிறழ்வடைந்த, வயதானவர்கள், வலி குறித்த தகவல்களை தொடர்பாட முடியாதவர்கள் குறிப்பாக வாய்மொழி மூலமாக தகவல்களை வெளிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் இந்த மேலதிக வழிமுறைகளை பயன்படுத்தி வலி குறித்த தீர்மானங்களை எடுக்க முடியும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கடுமையான வலி ஒரு எச்சரிக்கை சமிக்ஞையாகவே கருதப்பட வேண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறான வலிகளை நாம் ஒருபோதும் உதாசீனம் செய்து விடக் கூடாது எனவும் தெரிவிக்கின்றனர். சில வேளைகளில் வலிக்கான நிலைமை அல்லது காயத்தை அவதானிப்பதன் மூலமாக அதற்கு சாதகமான மற்றும் சிறந்த சிகிச்சை வழங்குவதற்கு முடிகின்றது.

1957-ம் ஆண்டு முதல் முறையாக கெல்கரன் மற்றும் லோரன்ஸ் (kellgren and lawrence system) கட்டமைப்பு ஆஸ்டியோ ஆர்தரைட்டிஸ் காரணமாக, முழங்காலில் ஏற்படக்கூடிய மாற்றங்களின் பாரதூரத் தன்மை குறித்து ஆராய்ந்தது. குறைந்த வருமானம் ஈட்டுவோர் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் முதலானோர் இந்த நோயினால் கூடுதல் வலியை எதிர்நோக்குவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலைமையானது குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு இரட்டிப்பு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. பாதிப்புக்களை அளவீடு செய்யும் இந்த முறையினால் வசதி குறைந்தவர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு கூடுதல் ஆர்வம் காட்டக்கூடும் என, ஆய்வாளர் எமா பியர்சன் தெரிவிக்கின்றார்.

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் எமா பியர்சன் மற்றும் அவரது சகாக்கள் புதிய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய முறைமையொன்றை உருவாக்கினர். எக்ஸ்ரே பரிசோதனைகளில் மூலம் மருத்துவர்களினால் முழங்காலில் ஏற்படக்கூடிய வலிகளை கண்டுபிடிப்பதில் ஏற்படக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆழக்கற்றல் (DeepLearning) முறை பயன்படுத்தப்பட்டது. மருத்துவர்களினால் சத்திர சிகிச்சை தேவையில்லை என பரிந்துரைக்கப்பட்டாலும் ஆழக்கற்றல் செயற்கை நுண்ணறிவு ஆய்வின் மூலம் நோயாளர்களின் வலிகளை அறிந்து கொண்டு அதன் அடிப்படை

யில் சிகிச்சை வழங்கப்பட முடியும் என ஆய்வாளர் குழு கண்டறிந்துள்ளது.

ஆழக்கற்றல் நெறிமுறைகளை (Deep Learning Algorithm) பயன்படுத்தி சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள முடிகின்றது. முழங்காலில் ஏற்படக்கூடிய வலியின் அளவினை கண்டறிந்து அதன் அடிப்படையில் சிகிச்சை அளிப்பதற்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடிவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் இந்த ஆய்வு மூலம் உடலின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படக்கூடிய வேதனைகளை அளவீடு செய்து சிகிச்சை அளிப்பது வரையில் வியாபிக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். பௌதீக ரீதியாக முழங்காலில் எவ்வித உபாதைகளும் இல்லாத நிலையிலும் எக்ஸ் கதிர்கள் மூலமாக மிகத் துல்லியமாக வலிகளை கண்டறிந்து அது குறித்து சமிக்ஞைகளை வெளிப்படுத்தக்கூடிய ஆழக்கற்றல் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சாதாரண பொதுமக்களில் சுமார் 20 வீதமானவர்கள் மத்திய அல்லது கடுமையான வலிகளை எதிர்நோக்குகின்றனர் எனவும் அவர்களில் பலர் அடிப்படைச் சிகிச்சைகளை மட்டுமே பெற்றுக்கொள்கின்றனர் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறானவர்களின் மூளையை ஸ்கேன் செய்து வலியை துல்லியமாக மதிப்பீடு செய்யப்படுமா அல்லது பக்கச்சார்பாக இனத்துவ அல்லது செல்வந்த அடிப்படையில் தெரிவு செய்து சிகிச்சை அளிக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

நோயாளி ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால் வெப்பமானி ஊடாக உடல் வெப்பநிலை அளவீடு செய்யப்படுகின்றது, இரத்த அழுத்தம் உடையவர்களாயின் இரத்த அழுத்தத்தை அளவீடு செய்ய கருவி உண்டு. எனினும், வலி ஏற்படுபவரின் வலி எந்த அளவில் காணப்படுகின்றது என்பதை கண்டறிவதற்கு எவ்வித அளவீட்டு முறைமைகளும் கிடையாது என்பது மருத்துவ உலகின் இன்றைய நிலைமையாக காணப்படுகின்றது.

நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய வலியின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிகிச்சை அளிப்பதன் மூலம் இனவாத, வர்க்கவாத அல்லது ஆண், பெண் பால்நிலை சமத்துவமற்ற நிலைமைகளுக்கு தீர்வு வழங்கப்பட முடிகின்றது. வலி தொடர்பில் ஆய்வுகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதி நவீன தொழில்நுட்ப முறைமைகளின் அடிப்படையில் ஒருவரின் வலியின் அளவினை துல்லியமாக மதிப்பீடு செய்யும் விந்தை மிகு தொழில்நுட்பத்தை மருத்துவ விஞ்ஞான உலகம் விரைவில் சாத்தியமாக்கி சாதனை படைத்திடும் என்ற நம்பிக்கையை மறுதலித்துவிட முடியாது.



jeyaseelan.s@thaiveedu.com



# பயணக் காப்புறுதி : சில தகவல்கள்

– செந்தூரன் புனிதவேல்

**தை** மாதம் பிறந்து, சூரியன் வடக்கு நோக்கி நகரத் தொடங்கியவுடனேயே, நண்பர்கள் பயணங்களுக்கு திட்டங்கள் தீட்டத் தொடங்கிவிடுவார்கள். பயணங்களுக்கும் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பலருக்கும் தெரியாத ஒரு விடயம். பயணக்காப்புறுதி குறித்த சில தகவல்கள் இங்கு விபரிக்கப்படுகின்றன.

ஜொடன் கதரீன் என்ற பெண்ணுக்கு இலங்கையில் ஏற்பட்ட அனுபவம், அனைத்து பயணிகளும் அறிய வேண்டியது. தாம் செய்த ஒரு சிறுதவறால் பெரும் இழப்பு ஏற்பட்ட கதையை, அனைவரும் பயனடையும் பொருட்டு இணையவெளியில் பகிர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

27 வயதான கதரீன் என்னும் இந்த பெண், பல நாடுகளுக்குப் பயணித்துள்ளார். அண்மையில் இலங்கைக்குச் சென்றபோது, அங்குள்ள கரையோர நகரமான மிடிகமவில் ஒரு மாலைவேளையில் மகிழ்ச்சியாக நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்தார். அப்போது ஒருவர் அங்கு வந்து, கதரீன் அமர்ந்திருந்த ஆசனத்தை தமது நண்பருக்கு விட்டுத் தருமாறு நிர்ப்பந்தித்தார். ஆசனத்தை விட்டுத்தர கதரீன் மறுக்கவே, அந்த நபர் தன் கையிலிருந்த கண்ணாடிக்குவளையினால் கதரீனின் முகத்தில் ஓங்கி அறைந்துள்ளார். அந்த கண்ணாடிக்குவளை கதரீனின் முகத்தில் பட்டு நொருங்கியது. இச்சம்பவத்தினால் அவருடைய கண், வாய் உட்பட முகத்தில் பல இடங்கள் காயத்திற்கு உள்ளாகின. இதனையடுத்து வைத்தியசாலையில் கதரீனுக்கு மூன்று மணித்தியாலங்கள் சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டு, காயம் ஏற்பட்ட இடங்களில் தையல்களும் இடப்பட்டன.

இந்நிகழ்ச்சியால் கதரீன் பெரும் வேதனை அடைந்தார். அதேவேளை பெரும் பண இழப்பும் அவருக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பயணத்துக்காக அவர் ஏற்கனவே பயணக்காப்புறுதியைக் கொண்டிருந்த போதும், இந்த தாக்குதல் நிகழ்வு இடம்பெற முன்னரே, துரதிஷ்டவசமாக அவருடைய பயணக் காப்புறுதியின் காலம் முடிவடைந்துள்ளது. 'பனையால் விழுந்தவரை மாடு ஏறி மிதித்தது' போன்ற நிகழ்வாக இது மாறியது.

இது போன்ற கதைகளும் இத்தகைய பெரும் பொருட் செலவுகளும் புதியவை அல்ல. 2019-ம் ஆண்டில் அமெரிக்காவில் நடந்த ஸ்கூட்டர் விபத்தால் பதின்ம வயதுடைய ஒருவருக்கு 140,000 டொலர் பொருட்செலவு ஏற்பட்டுள்ளது.

பயணக்காப்புறுதி என்பது ஒரு வீண்செலவு எனும் கருத்தே பயணிகள் மத்தியில் பெரும்பாலும் நிலைபெற்றிருப்பதை நாம் காணலாம். அண்மையில் இடம்பெற்ற ஒரு கணிப்புப்படி 38% பயணிகள் இக்கருத்தைக் கொண்டிருந்தனர் என்னும் நிலை வெளிப்பட்டுள்ளது. சில நாடுகளில் 'அவசர சிகிச்சை இலவசம்' எனும் வசதி இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் பிரித்தானியருக்கும், மேலும் சில ஐரோப்பிய நாடுகளின் பிரஜைகளுக்கும் இத்தகைய மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அதேவேளை, வைத்திய பராமரிப்புச்சேவைகள் தனியார் ஆளுகையின் கீழிருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறான பயணம் சார் பிரச்சினைகள் வரும் வேளையில், பயணிகளின் சொந்தப் பணத்தையே செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக நாம் என்ன செய்யவேண்டும்? பின்வரும் ஐந்து விடயங்களை கருத்தில் கொள்வது முக்கியமானதாகும்:

- பயணம் செய்வதற்கு பயணக்காப்புறுதி ஓர் அடிப்படைத் தேவை என்பதை உணர வேண்டும். ஒருபோதும் பயணக் காப்புறுதி குறித்து பின்னர் யோசிப்போம் என எண்ணக் கூடாது. அவ்வாறான எண்ணம் ஆபத்து நிலைக்கே வழிகோலும். குறித்த பயணத்திற்கு எவ்வளவு நாட்கள் முன்னதாக பயணக்காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள இயலுமோ, அப்போதே அதனைப் பெற்று வைத்துக் கொள்ளுதலே நலம்பயக்கும்.
- உங்கள் உடல் ஆரோக்கிய நிலை பற்றி முன்பே தெரிவித்து விடுங்கள். நீங்கள் பயணக் காப்புறுதி செய்யும் வேளையிலேயே உங்கள் ஆரோக்கியத்தின் நிறைகுறைகளை தெரியப்படுத்துங்கள். பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரே உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் உடல்நலக் குறைபாடுகளை நீங்கள் வெளிப்படுத்தாது விட்டால், பின்னர் தேவை ஏற்படும்போது உங்கள் காப்புறுதிக் கேட்பனவு மறுக்கப்படலாம். பொதுவாக உங்களுக்கு அஸ்துமா, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம் போன்றவை இருக்கலாம். அவற்றை பயணக்காப்புறுதி பெறும்போதே தெரியப்படுத்தாமல் விடுவது பிழையாகும். எல்லாவற்றையும்



தெளிவாக அறிவிப்பது தான் உங்கள் தாரக மந்திரமாக அமைய வேண்டும்.

- நீங்கள் எங்கு எங்கு செல்கிறீர்கள் என்பதனை காப்புறுதி அளிக்கும் நிறுவனத்தாரிடம் தெளிவாகத் தெரிவியுங்கள். சில நாடுகள் மற்ற நாடுகளையும் விட அதிக கட்டணங்களை அறவிடுவனவாக உள்ளன. உதாரணத்திற்கு போர்த்துக்கல் நாடு ஆனது, தனக்கு அருகே உள்ள ஸ்பெயின் நாட்டை விடவும் குறைவான வைத்தியச் செலவுள்ள நாடு எனக் கணிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் போத்துக்கல் நாட்டிற்கு செல்வதற்காக எடுத்த பயணக் காப்புறுதியானது ஸ்பெயின் நாட்டில் செல்லுபடி ஆகாது. நீங்கள் செய்த பயணக்காப்புறுதியானது நீங்கள் பயணிக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் செல்லுபடியாகுமா எனக் கவனிக்கத் தவறாதீர்கள்.
- பயணத் தடங்கலுக்கான கொடுப்பனவு எத்தகையது என்பதை தெளிவாக அறிந்திருங்கள். உங்கள் காப்புறுதி ஆவணத்திலிருந்து இதனை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக பயணக்காப்புறுதிகள், பயணத்தடையால் வரும் இழப்புகளை ஈடுசெய்யும். எனினும் நீங்கள் அதனை தெளிவாக அறிந்திருங்கள். பொதுவாக பயணத் தடை என்பது அரசியல், சுற்றாடல், விபத்து, நோய் முதலானவற்றால் ஏற்படலாம். ஆனால், அவற்றில் பல விதிவிலக்குகள் செய்யப்பட்டிருப்பதும் இயல்பாகும். உதாரணத்திற்கு மதுவால் ஏற்பட்ட ஒரு விபத்தால் உங்கள் பயணம் தடைப்படுகிறது என வைத்துக் கொள்வோம். இதற்கு காப்புறுதிக் கேட்பனவை நீங்கள் முன்வைக்கும் போது, பயணத்தடைக்கான அந்த காரணம் காப்புறுதி வழங்குநரால் ஏற்றுக்கொள்ளப்படாது போகலாம்.
- உங்கள் பயணத்தை நீட்டிக்குமிடத்து, மறக்காமல் உங்கள் பயணக் காப்புறுதி காலத்தையும் நீட்டிக்க மறக்க வேண்டாம். உதாரணத்திற்கு எம்மில் பலர் கோடை விடுமுறைக்கு தாயகத்திற்கு செல்கையில் அங்கு ஒரு நெருங்கிய உறவினர் திருமணம் அல்லது வேறு நிகழ்வுக்காக திட்டமிட்டதை விடவும் கூடியகாலம் தங்குவதானால், உங்கள் பயணக் காப்புறுதி அமைப்புடன் தொடர்பு கொண்டு, பயணக்காப்புறுதிக்கான காலத்தையும் அதிகரிக்கத் தவறாதீர்கள்.

பயணக் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு ஒரு தனிச் செலவு ஏற்படும்தான். அதனை பயணச்செலவின் ஓர் அங்கமாக கருதிக் கொள்ளுதல் அவசியமாகும். தமக்கு ஏற்பட்ட இழப்புப் போல் இன்னொருவருக்கு நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே, கதரீன் தமது துயரக்கதையை இணையவெளியில் பதிவு செய்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கோடைகால பயணங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.



senthuran.p@thaiveedu.com



# வீட்டில் ஈரப்பதன் பேணல் (Humidity Maintenance)

வேலா சுப்ரமணியம்


குளிர் காலத்தில் வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதனின் அளவு குறைவாகக் காணப்படுவதும், அதே வேளை கோடை காலத்தில் ஈரப்பதனின் அளவு அதிகரித்துக் காணப்படுவதும் இயல்பானது. எனவே காலத்திற்கேற்றவாறு ஒரு வீட்டிற்குத் தேவையான உத்தம அளவிலான ஈரப்பதனைப் பேணுவதி லேயே ஒரு சிறந்த வீட்டுப் பராமரிப்பின் வெற்றி தங்கியுள் ளது.

குளிர் காலத்தில் வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதனின் அளவு 30%-க்குக் குறையும் பட்சத்தில் வீட்டில் பாரியளவி லான பாதிப்புகள் எற்பட வாய்ப்புள்ளது. தளத்திற்குப் போடப்பட்டுள்ள hardwood-ல் சுருக்கங்கள் ஏற்பட்டு இடை வெளிகள் அதிகரிப்பது மட்டுமல்லாது அவற்றில் வெடிப்புக ளும் ஏற்படும். அது மட்டுமன்றி வீட்டிலுள்ள தளபாடங்கள், குசினி அலுமாரிகள், base board, dry wall, இதரப் பொருத்து கள் என்பவற்றிலும் வெடிப்புகள் ஏற்படும். சுவாசம், தோல் சம்பந்தமான வியாதிகள் எற்படவும் வாய்ப்புள்ளது. எனவே ஈரப்பதனை உயர்த்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமா கும்.

இங்கே தரப்படும் படங்கள் குளிர்காலப் பகுதியில் ஈரப்பதன் குறைந்ததன் காரணமாக வீடுகளில் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை நன்கு விளக்குகின்றன.

### Humidifier பராமரிப்பு:

காலநிலைக்கேற்றவாறு Humidifier-ன் தேவை ஏற்படும் சந் தர்ப்பத்தில் அதனைப் பயன்படுத்துவது கூடிய பலன் தரும். கோடை காலத்தில் இதனை முற்றாக நிறுத்திவிடவேண்டும். வருடம் ஒரு முறையாவது Filter-ஐ துப்பரவு செய்ய வேண் டும். தண்ணீரிலுள்ள கல்சியப் படிவுகள் அதிகரித்துத் துவா ரங்கள் அடைத்து விடுவதால் வெளியேற வேண்டிய தண்ணீர்




வழி தெரியாது, அது பொருத்தப்பட்டிருக்கும் இடமெல்லாம் கசிந்து, பின்னர் அந்தப் பகுதி முழுவதும் கறள் ஏறி இருப்ப தைப் பழைய வீடுகளில் கண்கூடாகப் பார்க்கலாம். அதிக



மான வீடுகளில் இவை இயங்காத நிலையிலேயே உள்ளன. பலரும் இதில் ஒரு Evaporator pad இருப்பதைக் கண்டு கொள்வதில்லை. வருடா வருடம் கிரமமாக இதனைச் சுத்திக ரிப்பதும் மேலதிக தண்ணீர் இலகுவாக வெளியேறுகிறதா என்று பார்த்துக்கொள்வதும் மிக முக்கியமாகும். Evaporator pad-ஐக் கழற்றிச் சுத்தம் செய்வது மிகவும் இலகுவானது. அதுபற்றி நினைத்துப் பயந்துகொள்ளவேண்டிய அவசியம் கிடையாது.

வீட்டின் தன்மை, எமது பழக்க வழக்கங்கள், உள்ளக வெளிப் புறக் காரணங்கள், பல வீட்டிலிருக்கக் கூடிய ஈரப்பதனின் அளவைத் தீர்மானிக்கின்றது. பல மணித்தியாலங்கள் சமைக் கும் எங்கள் சமையல், நீராவி மூலம் வீட்டிற்குள் அதிகளவு ஈரப்பதனை உருவாக்குகின்றது. பலமணி நேரம் வெந்நீரில் குளிப்பதிலுள்ள சுகம் மறுபுறத்தில் வீட்டிற்குள் அதிகளவு ஈரப்பதனையும் உருவாக்குகின்றது. கூட்டுக் குடும்பங்களா கப் பலர் வீட்டில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் இயற்கையாகவே ஈரப்பதன் அதிகரிக்கப்பட வாய்ப்பிருக்கிறது.

## அதிகரித்த ஈரப்பதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:

வெளியிலுள்ள உஸ்ண நிலைக்கு ஏற்றவாறு Humidistat-இன் அளவைச் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும்.

யன்னல் கண்ணாடிகளை அவதானித்து நீர்ப்படிவு இருந்தால் அதனைத் துணியால் துடைத்தெடுத்து விட்டு Humidistat-ஐக் குறைத்து விடல் அல்லது நிறுத்தி விடல் வேண்டும்.

தற்போதயப் புதிய வீடுகளில் Attic Fan அல்லது Ventilator எனப் பெயர் குறிப்பிடப்பட்ட Switch ஒன்று thermostat controller-க்கு மேலாகப் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக இது ஒரு குளியலறைக்குரிய Fan-க் கட்டுப்படுத்தும் இரட்டை வழி Switch-ஆக இருக்கும். இதனை நீண்ட நேரம் போட்டு விடுவதும் மேலதிக ஈரப்பதனை வெளியேற்ற உதவும். முக்கி யமாகக் குறிப்பிட்ட குளியலறைக்குரிய கதவுகளைத் திறந்து விட்டு அத்துடன் Furnace-க்குரிய Fan-ஐ auto-விலிருந்து ON-க்கு மாற்றி விடல் எதிர்பார்க்கும் பலனைப் பன்மடங் காக்க வழி வகுக்கும்.

குளியலறையிலிருக்கும் Fan, குளித்து முடிந்த பின் குறைந் தது 15 நிமிடங்களாவது இயக்கப்பட வேண்டும். ஈரப்பதன் முற்றாக அகற்றப்படும் வரை தானே இயங்கித், தாமாகவே நிறுத்திக்கொள்ளும் Fan-களும் switch-களும் அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளன என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

சமையலறையிலிருக்கும் Over hood Fan முறையாகப் பாவிக் கப்பட வேண்டும். சமையல் தொடங்குவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாகவும், சமையல் முடிந்தபின் குறைந்தது 15 நிமிடங் களாவது இந்த Fan இயக்கப்பட வேண்டும். ஈரப்பதனைக் கண்டதும் தானே இயங்கித், தாமாகவே நிறுத்திக்கொள்ளும் Over hood Fan-களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்ப தையும் கவனத்திற் கொள்ளவும்.

- கழுவப்பட்ட உடுப்புகளைக் கொடியிலோ அல்லது வேறு முறைகளிலோ வீட்டிற்குள் உலர்த்தப்படுவது தவிர்க்கப் பட வேண்டும்.
- துணி உலர்த்தும் இயந்திரத்திலுள்ள vent duct முறை யாக இணைக்கப்பட்டிருப்பதும், அடைப்புகள் இல்லாது இருப்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- அதிகளவிலான மரங்களோ அல்லது பூச்செடிகளோ வீட் டிற்குள் வளர்க்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வீடு சுத்தமாக வைத்திருக்கப்படவேண்டும் என்பதில் மாற் றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால், விரதம் என்ற பெய ரில் அடிக்கடி MOP செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.
- கதவுகளுக்குரிய weather stripes கசிவைத் தடுக்கும் நிலையில் உள்ளனவா என்பதும், யன்னல்கள் முறையாக Caulking செய்யப்பட்டு கசிவைத் தடுக்கும் நிலையில் உள்ளனவா என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வீட்டிற்குரிய insulation சரியாக இல்லாத பட்சத்தில் அதிக



ளவு ஈரப்பதன் பாரதூரமான பாதக விளைவுகளை ஏற்படுத் தும். குறிப்பாக Attic insulation குறைவாக இருந்தால் Ceiling மூலைகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக ஏற்படும் நீர்ப் படிமம் mold-ஆக மாறுவதைக் காணலாம்.

சிலர் யன்னல்களைச் சிறிதளவு காற்றோட்டம் வருமளவுக்குத் திறந்துவிட்டுச் சமப்படுத்துவார்கள். அதிகளவு திறந்து விட் டால் குளிர்கூடி வெப்பமாக்கும் செலவும் அதிகமாகும் என்ப தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வீட்டில் ஏதாவது கொண்டாட்டம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் humidifier-ஐ நிறுத்திவிட வேண்டியது அவசியம். மேலதிக சமையல், பலரது பிரசன்னம் அதிகளவு ஈரப்பதனை உரு வாக்கும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு Hygrometer வைத்திருக்க வேண் டியது மிக அவசியமானது. அத்துடன் ஈரப்பதன் அளவு 40% - 60% வரை இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஈரப்ப தன் அளவு 50%-ஆக இருப்பது உத்தமம்.

அதிகமாகவுள்ள ஈரப்பதனை அகற்ற Di-humidifier பாவிக்கப்பட வேண்டும்.



velasubramaniam@thaiveedu.com



# தொழும் கரங்கள்

குமார் புனிதவேல்

அண்மையில் நண்பன் சந்திரன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு அவனின் வீட்டு வரவேற்பறையில் ஒரு பிரமாண்டமான படம் இருந்தது. அதில் தொழுகின்ற கரங்களின் உருவம் காணப்பட்டது. நான் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். எனது ஆர்வத்தைக் கவனித்த சந்திரன்...,

'அந்தப் படம் சல்வேசன் ஆமி (Salvation Army) கடையில் கிடைத்தது. மலிவாக வாங்கினேன். உனக்குப் பிடித்ததா?' என்றான்.

'நான் இளம் வயதில் படித்த கொழும்பு வெஸ்லி (Wesley) கல்லூரி வகுப்பறையில் அதே போன்ற படம் தொங்கியது. அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் அழியாத கோலங்களாக பல நினைவுகளை அது மீட்டு வந்தது' என்றேன் நான்.

பொதுவாகப் பார்த்தால் அந்தப்படம் இறைவணக்கத்தை நினைவூட்டுவதாகத்தான் உள்ளது. அதன் பூர்வீகம் பற்றிய தகவல்களை வாசித்துத் தெரிந்து கொள்வதற்கு எனக்கு முன்பொருமுறை சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. என்னில் அது வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்தியது. உங்களுடன் அத்தகவல்களை பகிர்வது பயனுடையது என்று நினைக்கிறேன்.

முன்னைய காலங்களில் சிறிய வீட்டில் பெரிய குடும்பங்கள் வசித்தன. சராசரியாக ஒரு வீட்டில் ஆறு அல்லது ஏழு பிள்ளைகள் மற்றும் குடும்பத்தலைவன், தலைவி, அவர்களின் பெற்றோர்கள் என, அவ்வீடு நிறைந்து இருக்கும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டில் நூரம்பேக் (Nuremberg) எனும் நகரத்திற்கு அண்மையில் ஒரு தங்க நகை செய்பவர் குடும்பம் இருந்தது. அவர்களுக்கு பதினெட்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் வாழ்க்கையில் வறுமைதான் மிகையாக இருந்தது. அவர்களில் அல்பிரசிட் எனும் பையனுக்கும் அல்பேட் என்ற பையனுக்கும் தாங்கள் ஓவியர்களாக வரவேண்டும் எனும் விருப்பம் மிகுதியாக இருந்தது. இளம் வயதிலேயே அவர்கள் இருவரும் அழகாக படம் வரைவார்கள். ஆனால், வறுமையில் உள்ள தந்தையால் தங்களை ஓவியப் பாடசாலைக்கு அனுப்ப முடியாது என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அவர்களுடைய வீட்டில் இரவு வேளையில் படுக்கும் போது அந்த இரண்டு சகோதரர்களும் பேசிப்பேசி ஒரு திட்டம் தீட்டினார்கள். அதாவது நாணய சுழற்சி மூலம் யார் முதலில் ஓவியம் கற்பது என்றும், வென்றவர் நான்கு வருடங்களுக்கு பயில்வது என்றும் தீர்மானித்தார்கள். ஓவியம் பயில்பவருக்கு தேவையான பணம் முதலான செலவுகளை ஈடுகட்டுவதற்காக மற்ற சகோதரர் சுரங்கத்தில் வேலை செய்து உழைத்துக் கொடுக்க வேண்டும் என உடன்பாடு எட்டப்பட்டது. நான்கு வருடங்களின் பின் ஓவியம் பயின்றவர் திரும்பிவந்து சுரங்கத்தில் வேலை செய்ய, அவ்வளவு காலமும் உழைத்த சகோதரர் நான்கு வருடங்களுக்கு ஓவியம் பயிலச் செல்வது என்று அவர்களின் தீர்மானம் அமைந்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்துக்குச் சென்று வணங்கினார்கள். பின்னர் அங்கேயே நாணயத்தைச் சுழற்றினார்கள். மூத்தவனான அல்பிரசிட்டுக்கு வெற்றி கிடைத்தது. அவன் ஓவியம் கற்பதற்காக நூரம்பேக் நகருக்குச் செல்ல முடிவாகியது.

அதேவேளை தம்பி அல்பேட் ஆபத்துகள் மலிந்த சுரங்கத்தில் வேலை செய்யச் சென்றான். ஓவியப்பட்டறையில் அல்பிரசிட் சேர்ந்தவுடனேயே சிறப்பாக பலராலும் பாராட்டத்தக்க ஓவியனானான். அவன் எல்லா வகையான சித்திர வேலைப்பாடுகளிலும் சிறந்து விளங்கத் தொடங்கினான். பலது பாராட்டைப் பெற்றதுடன் ஓவியங்கள் வரையும் பல வேலைகளும்

அவனுக்குக் கிடைத்தன. காலம் செல்லச்செல்ல அல்பிரசிட் தனது ஆசிரியர்களை விடவும் சிறப்பாக ஓவியங்களையும் சிலைகளையும் உருவாக்கத் தொடங்கினான். இதனால் அவனிடம் செல்வம் சேர ஆரம்பித்தது.

நான்காவது வருட முடிவில் பிரசித்தி பெற்ற ஓவியானாக அல்பிரசிட் தனது ஊருக்குத் திரும்பினான். அவனுடைய வருகையைக் கொண்டாடுவதற்காக கிராமத்தில் பெரும் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். தன் வெற்றிக்கு அச்சாணியாகச் செயற்பட்ட தம்பி அல்பேட்டை அவன் தேடிச் சென்றார். தம்பிக்கு தனது நன்றியை பகிரங்கமாக தெரிவிக்க அல்பிரசிட் விரும்பியிருந்தான். ஆனால், தம்பியைச் சந்தித்த போது ஒரு பெரும் அதிர்ச்சியை அவன் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. அங்கு குனிந்த தலையடன் கண்களில் நீர் சொட்ட ‘என்னால் முடியாது! என்னால் முடியாது!’ என தம்பி அல்பேட் முனகினான்.

என்ன நடக்கிறது என்பது புரியாத அண்ணன் ‘நீ ஒன்றுக்கும் யோசியாதே! என்னிடம் ஏராளமான வருவாய் உள்ளது. உனது செலவுகள் அனைத்தையும் நான் பார்த்துக்கொள்வேன்’ என உற்சாகம் ஊட்டினான்.

ஆனால் தம்பியோ கண்களில் நீர் வடிந்தபடி ‘என்னால் முடி யாது அண்ணா! என்னால் முடியாது’ என முணுமுணுத்தான்.

‘நீ என்ன சொல்கிறாய் தம்பி’ என்று அல்பிரசிட் கேட்டபோது, தம்பி அல்பேட் தனது வலது கையை இடது கையால் தூக்கிக் காட்டினான்.

‘அண்ணா, எனது வலது கையில் உள்ள எல்லா எலும்புகளும் சுரங்கத்தில் வேலை செய்யும்போது முறிந்துவிட்டன. அது மட்டுமல்ல. எனது வலது கையில் பாரிசவாத நோய் வந்து தூக்க முடியாது இருக்கிறேன். இனி எனக்கு ஓவியமல்ல. எதுவுமே செய்ய முடியாது’ என்று வேதனைக் கண்ணீர் வடித்தான் அல்பேட்.

சகோதரனின் அழிந்து போன கனவைக்கண்டு அல்பிரசிட் பெரும் வேதனைப்பட்டான். தனது வளர்ச்சிக்காக தம்பி செய்த அளப்பரிய தியாகத்தினை எண்ணும்போது அவனது துன்பம் மென்மேலும் பெருகியது.

அவன் ஒரு நாள் தனது தம்பியின் இரு கரங்களையும் இணைத்து தொழுவது போல் வைக்கச் சொல்லி, மெல்லிய முறிந்த எலும்புகளாலான கைகள் வான் நோக்கி இருக்குமாறு வைத்து, அக்கரங்களை ஒரு படமாக வரைந்தான். காலத்திற்கும் அழியாத அந்தப் படம் அப்படித்தான் உருவானது. அதற்கு அல்பிரசிட் ‘கரங்கள்’ என்று பெயரிட்டான். ஆனால் காலப் போக்கில் அதற்கு கிடைத்த பெயர் ‘தொழும் கரங்கள்’ (Praying Hands).

இந்தப்படத்தின் பிரதிகள் உலகெங்கும் பயணப்பட்டன. நீங்களும் இந்தப்படத்தை பார்த்திருக்கலாம். மீண்டும் அந்த தொழும் கரங்களைக் கண்டால், அப்போது உங்கள் சகோத



ரங்களை நினையுங்கள் நண்பர்களே! அவர்கள் தான் உங்கள் கருவறைத் தோழன்/ தோழிகள். தொழும் கரங்களை பார்க்கும் வேளையில், ஏற்கனவே நடந்த தவறுகளை மன்னித்து மறந்து உங்கள் உறவுகளை மீண்டும் உயிர்த்தெழச் செய்யுங்கள்.



kumar.punithavel@thaiveedu.com




ஒரே நபர்கள் தொடர்ச்சியாகப் பல தவணைகள் நிர்வாகக் குழுவில் இடம்பெறும்போது, அது எளிதில் மூடுண்டதும் தனி மனித ஆதிக்கமும் வெளிப்படைத்தன்மை அற்றதுமான நிர்வாகக் கலாசாரத்தை வளர்த்துவிடும்.

பொதுவாகவே ஒரு நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் ஒரே நபர் பல ஆண்டுகள் நீடிப்பதென்பது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதன் தொலைநோக்குக்கும் எந்தவகையிலும் பங்களிக்காது. இது சாதாரணமாக எவரும் புரிந்துகொள்ளக்கூடியதுதான். இது விடயம் குறித்த பல்வேறு நடைமுறை உதாரணங்களும் ஆய்வுகளும் உள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் போன்ற ஆட்சியதிகாரப் பதவிகளிற்கூட இரண்டு தவணைகளுக்கு மேல் போட்டியிடமுடியாது. இரண்டு தடவைகளுக்கு மேல் இப்பதவிகளுக்குப் போட்டியிட முடியாதென்பது அரசியலமைப்புச் சட்டங்கள் வழியாகவே கட்டுப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான ஜனநாயக நாடுகளில், ஒரு கட்சி இரண்டு தவணைகளிற்கு மேல் தொடர்ந்து வாக்காளர்களாற் தெரிவுசெய்யப்படுவதில்லை. அதாவது 3-வது முறை ஆட்சிக்கு வருவது மிக அரிது.

அவை மட்டுமல்ல தொழில், சேவை, வணிகம் மற்றும் உற்பத்தி சார்ந்த பெருநிறுவனங்கள் எதுவாகவிருப்பினும் தலைமைப் பொறுப்பில் ஒருவர் நீண்ட காலம் நீடிப்பது வழமையல்ல. ஆகக்கூடியது ஐந்து - ஆறு ஆண்டுகள் என்பது நிறுவனத்தின் வளர்சிக்கான ஆரோக்கியமான காலமாகக் கணிக்கப்படுகின்றது - பரிந்துரைக்கப்படுகின்றது.

அப்படியிருக்க சமூக நலன், குழந்தைகள், சிறார்களின் கல்விச் செயற்பாடுகள் சார்ந்த புலம்பெயர் அமைப்புகளில் பத்தாண்டு, பதினைந்து ஆண்டுகளைக் கடந்தும் கூடத் தலைமைப் பொறுப்புகளிலும் நிர்வாகத் தலைமைகளிலும் பலர் உள்ளனர்.

புலம்பெயர் தமிழ்ச் சூழலிலும் அத்தகைய நிலைமைகள் உள்ளன. அதுவும் ஜனநாயகத்தின் பேரில் இத்தகைய பதவி இருப்புகள் நீடிக்கின்றன. ஒரு நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் ஒரே நபர் எக்காரணம் கொண்டும், ஆகக்கூடியது இரண்டு தடவைகளுக்கு மேல் தேர்வுசெய்யக்கூடாதென்பது யாப்பு மூலம் வரையறுக்கப்பட வேண்டும்.

ஜனநாயக ரீதியாக நிர்வாகங்கள் தெரிவுசெய்யப்படுகின்றன என்ற போர்வையில் ஒரே நபர் தலைமைப் பொறுப்பிற்கும், ஒரே நிர்வாக உறுப்பினர்கள் தொடர்ந்து பல தடவைகள் தெரிவுசெய்யப்படுவதும் யாப்பிலுள்ள மிகப்பெரும் குறைபாடு. நிறுவனத்தின் சேவைத் தரத்தினையும் வளர்ச்சியையும் பொருட்படுத்தாத போக்கு. அதிகாரத்தைத் தக்கவைக்கின்ற முழுமுனைப்பு.

'நீண்டகாலம் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களைவிடப் புதியவர்களிடம் புத்தாக்கவேகம் அதிகமிருக்கும். நீண்டகாலம் பதவியிலிருப்பவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்டத்திற்கு மேல் கற்றுக்கொள்வதை நிறுத்தி விடுவார்கள். காலவோட்டத்தில் அவர்களது உலகப்பார்வை மங்கியும் இடைவெளியுடையதாகவும் ஆகிவிடுகின்றது. தொலைநோக்கிலான தொடர்ச்சி, புத்தாக்கம், வளர்ச்சி ஆகியவற்றை உறுதிசெய்ய, நிர்வாகக் குழுவில் வெவ்வேறு நபர்களின் கலவை இருப்பதும் முக்கியம்' என்று ஆய்வுகளை மேற்கோள் காட்டிக் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தலைமைத்துவம் சார் ஆய்வு நிபுணரும் பேராசிரியருமான Jan Ketil Arnulf அவர்கள் நோர்வேயின் Aftenposten நாளிதழில் தெரிவித்திருந்தமை நினைவிற்கு வருகின்றது.

தலைமைப் பொறுப்பின் வகிபாகம் தொடர்பான தெளிவும் ஆரோக்கியமான பண்புமுடையவர்கள் மாற்றத்தின் தேவையை

உணர்ந்தவர்களாக இருப்பர். அவர்கள் பதவியைக் கட்டிப்பி டித்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

- தனியார் துறையோ, பொதுத்துறையோ, தன்னார்வத் துறையோ எதுவாக இருப்பினும் நிர்வாகத்தையும் நிர்வா கத் தலைமையையும் சீரான இடைவெளியில் மாற்றுவது குறித்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.
- பொறுப்பிலிருக்கும் பலருக்குத் தலைமைத்துவத்திற்கும் அதிகாரத்திற்குமிடையிலான வேறுபாடு புரிவதில்லை.
- பதவி நாற்காலியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்க ளால், புதிய தலைமைத்துவ ஆளுமைகளின் வரவு தடுக் கப்படுகின்றது.
- தலைமைத்துவத்தினால் உண்டாகும் அதிகார உணர்வை அவர்கள் சுகிப்பதில் இன்பமடைகின்றனர்.
- ஒரே நபர்கள் தொடர்ச்சியாகப் பல தவணைகள் நிர்வாகக் குழுவில் இடம்பெறும்போது, அது எளிதில் மூடுண்டதும் தனிமனித ஆதிக்கமும் வெளிப்படைத்தன்மை அற்றது மான நிர்வாகக் கலாசாரத்தை வளர்த்துவிடும்.
- பொதுநிறுவனம், மக்கள் சேவை போன்ற எண்ணங்கள் பின்தள்ளப்பட்டு, தனியுரித்து என்ற உணர்வே வளர்த்துச் செல்லப்படும்.

இத்தகு அதிகாரத் துஸ்பிரயோகம் நிகழாமலிருப்பதற்குரிய (குறைந்த பட்சம் நீடிக்காமலிருப்பதற்கும் மாற்றங்களைக் கொண்டு வரவுமான) உத்தரவாதத்தினை முழுமுதலாக யாப் பின் மூலம் வரையறுக்க வேண்டும்.

யாப்பு என்பதொன்றும் 'புனித ஏற்பாடு' அல்ல என்ற புரிதலும் அவசியம். காலமும் தேவைகளும் வளர்ச்சி சார்ந்த தொலை நோக்கு அடிப்படைகளின் மதிப்பீடுகளுக்கமைய யாப்பில் மாற்றங்களைக் கொண்டுவருவது இன்றியமையாதது.

நிர்வாகத் தெரிவு யாப்பிற்கு அமைய அங்கத்தவர்களின் உரிய பங்கேற்புடன் ஜனநாயக முறையில் சீராக மேற்கொள் ளப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். தகமையும், தலை மைப் பண்பும், செயலூக்கமும், அநுபவமும் கொண்ட தொலைநோக்குடையவர்கள் நிர்வாகத் தலைமைப் பொறுப் பிற்கும் நிர்வாகங்களுக்கும் வரவேண்டும்.



rooban.s@thaiveedu.com


# வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி

மார்ச் 24, 2024 ஞாயிறுக்கிழமை

Sunday March 24, 2024

3:00 P.M to 7:00 P.M

Scarborough Village CRC

3600 Kingston Road (@ Markham)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

For More Info: kalam@tamilbook.com, 416 731 1752

# விழா நிகழ்த்தும் கலை

– வேதநாயகம் தபேந்திரன்

தாயகத்தில் தற்போது விழாக்கள் கோலாகலமாகக் களைகட்டுகின்றன. ஒரு விழாவை வெற்றிகரமாகச் செய்வது எப்படி என்ற நுட்பம் தெரியாதோரது விழாக்கள் தோல்வியடைந்து அல்லது அரைகுறையாக முடிவடைந்து விடுகிறன. நேரம் என்பது மனிதர்களுக்கு விலைமதிப்பற்ற சொத்தாக உள்ளது. அதனால் விழா ஒழுங்கமைப்பை வெற்றிகரமாகச் செய்தல் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. கௌரவிப்பு விழா, புத்தக வெளியீட்டு விழா, அறிமுக விழா என்பவற்றை, எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பது குறித்து நாம் மீளச் சிந்திக்க வேண்டும். வெற்றிகரமான நிகழ்வு ஒன்றின் பின்னணியில் பின்வரும் செயற்பாடுகள் இருக்கும்.

## திகதியைத் திட்டமிடல்:

பெரும்பாலான வருகையாளர்களுக்கு வசதியான ஒரு திகதியைத் திட்டமிடல் வேண்டும். சமயப் பண்டிகைகள், விரதங்கள், அனுட்டான நிகழ்வுகள், குறித்த பிரதேசத்தின் விசேட நிகழ்வுகள், போரியல் வரலாற்றை நினைவு கூரும் நாட்கள் போன்றவற்றைத் தவிர்த்துத் திகதியைத் தீர்மானிக்க வேண்டும். அத்துடன் அத்திகதி கொழுத்தும் வெய்யில் இல்லாத, பெருமழை பொழியாத காலத்தில் அமைவது சிறப்பானது. அதேவேளை, ஓய்வு நாளான ஞாயிற்றுக்கிழமை பெரும்பாலும் எல்லோருக்கும் பொருத்தமானதாக இருக்கும்.

## நேரம்:

ஓய்வு நாளொன்றில் விழாவை வைத்து மதிய உணவைக் கொடுத்து நிகழ்வினை நிறைவு செய்வதாயின் காலை நேரம் பொருத்தமானது. மதிய உணவு கொடுக்காமல் சிற்றுண்டியுடன் விழாவை நிறைவு செய்வதாயின் பிற்பகல் 3 மணி பொருத்தமானது. இரவு உணவைக் கொடுத்து விழாவை நிறைவு செய்வதாயின் மாலை 4.30 மணி பொருத்தமானது. ஓய்வு நாட்களில் காலை நேரம் பலருக்கு வசதிக் குறைவானது. அதனால் பிற்பகலைத் தெரிவு செய்வது நன்று.

## விழாவுக்கான இடம்:

பங்குபற்ற வேண்டிய பெரும்பான்மையினர் இலகுவாக குறித்த முகவரிக்கு வரக் கூடியதாகவும், வாகனங்களைப் பாதுகாப்பாகத் தரித்து நிறுத்தக் கூடியதாகவும் இடம் இருத்தல் வேண்டும். குறிப்பாக பேருந்துப் போக்குவரத்தின் மூலமாக இலகுவாக வரக் கூடியவர்களின் வசதியைக் கருத்திற் கொண்டும் இடத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

## வரவேற்பும் உபசரணையும்:

நிகழ்வுக்கு வருகை தருபவர்களை ஒழுங்கமைப்பாளர்கள் இன்முகத்துடன் கைலாகு கொடுத்து வரவேற்பது தேவையானது. அது போல, உபசரணையான சிற்றுண்டிகள், தேநீர் அல்லது குளிர்பானம் அல்லது மதிய உணவு யாவருக்கும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும். உணவு, குடிபானங்களின் தரம் மிக உயர்வானதாக இருக்க வேண்டும். நிகழ்வின் வெற்றியைத் தீர்மானிப்பதில் உபசரணையின் தரம் முக்கியமானது. சக்கரை நோய் பெருகியுள்ள இக்காலத்தில் தேநீரில் அதிக சர்க்கரையைத் தவிர்த்தல் நன்று.

## விழாத் தலைமை:

விழாவுக்கு தலைமையேற்பவர் அந்நிகழ்வு தொடர்பான ஆழ்ந்தகன்ற அறிவுடையவராக இருத்தல் வேண்டும். மேடையில் அமரும் விருந்தினர்களை வசீகரத்துடன் வழிநடத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். தலைமையுரையை நீட்டல் அலட்டலின்றி கவர்ச்சிகரமாகச் செய்தல் வேண்டும். குறிப்பாகத் தலைமையுரையாற்றும் போது 8 முதல் 10 நிமிடங்களுக்குள் விடயதானத்துடன் உரையை நிறைவு செய்தல் வேண்டும்.

## நேரமுகாமைத்துவம்:

நிகழ்வைத் தொடங்குவதில் நேரமுகாமைத்துவம் கட்டாயமானது. தாயகத்தில் பிற்பகல் 3 மணி என்றால் 3.30 மணிக்குத் தான் வருவார்கள் என்பதும், அப்போது தான் தொடங்கலாமென்பதும் எழுதப்படாத மரபாக உள்ளது. அதனை உணர்ந்து திட்டமிடல் வேண்டும். அதே வேளையில், சரியான நேரத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டவர்களையும் மதிக்கக் கூடியதாக உரிய நேரத்தில் தொடங்குதல் நன்று.

### பேச்சாளர்களின் பேச்சு நேர முகாமைத்துவம்:

தலைமையுரை, வரவேற்புரை, ஏனைய உரைகள், நன்றியுரை ஆகியவற்றுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்படல் வேண்டுமென முதலிலேயே திட்டமிடல் வேண்டும். குறித்த நிமிடங்களுக்குள் உரைகளை நிறைவு செய்யக் கூடியதாக தலைவர் வழிகாட்ட வேண்டும். அவர் தனது தலைமையுரையிலும் இடையிலும் இவ்விடயத்தை வலியுறுத்த வேண்டும். தலைவர் முன்மாதிரியாக உரையாற்ற வேண்டும். பேச்சாளர்கள் அழைப்பிதழைக் கையில் வைத்துக் கொண்டு விருந்தினர்கள் அனைவரையும் அழைப்பதைத் தவிர்க்க வேண்டும். இதன் மூலமாகப் பெருமளவு நேரத்தை மீதப்படுத்த முடியும்.

### விருந்தினர்களை அல்லது பேச்சாளர்களைத் தீர்மானித்தல்:

நிகழ்வுக்குப் பொருத்தமானவர்கள், நிகழ்வு தொடர்பான அறிவு மிக்கவர்கள் ஆகியோரை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும். ஒரு நிகழ்வை ஒன்றரை மணி முதல் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்குள் நிறைவு செய்வதாகத் திட்டமிடல் வேண்டும். ஒரு பேச்சாளருக்குப் 10 நிமிடம் என்ற கணக்கில் தீர்மானித்தால் நிகழ்வு சிறக்கும். மிக நீண்ட நேரம் கதைப்பவர்களைத் தவிர்க்க வேண்டும். அல்லது கட்டுப்படுத்தக் கூடியதாகத் தலைவர் வழிநடத்த வேண்டும்.

### பேச்சு நாகரிகம்:

மேடையில் உள்ளோரையோ சபையில் உள்ளோரையோ மனம் நோகக் கூடியதாக பேச்சு இடம்பெறக் கூடாது. பேச்சாளர் தற்புகழ்ச்சி சொல்வதைத் தவிர்த்தல் வேண்டும். நிகழ்வின் விடயதானத்தை மையப்படுத்தியதாகப் பேச்சுகள் இடம்பெறுவதை உறுதி செய்தல் வேண்டும். நேர வரையறைக்குள் பேசுவதை உறுதி செய்தல் வேண்டும்.

### அறிவிப்பாளர்:

நிகழ்வின் தொடக்கத்தை அதாவது மங்கல விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை போன்றவற்றை நிறைவு செய்யும் வரையில் ஓர் அறிவிப்பாளரை வைத்திருக்கலாம். இவை நிறைவடைந்த பின்பாக தலைமையுரை நிகழ்ச்சி வரும். அப்போது அறிவிப்பாளர் 'தலைமையுரையை ஆற்றிய பின்பாக தலைவர் நிகழ்ச்சிக்குத் தொடர்ந்தும் தலைமை தாங்குவார்' என அறிவித்துவிட்டு விலகுவது நன்று.

அண்மைக்காலத்தில் அறிவிப்பாளர்களை மட்டும் வைத்து நிகழ்ச்சிகளை நடத்தும் போக்கு அதிகரித்து வருகிறது. இது முற்றிலும் தவறானது. நிகழ்ச்சியைச் சரிவர ஒழுங்கு செய்யும் ஆளுமைமிக்க ஒரு தலைவர் மூலமாக நிகழ்வை நடத்த வேண்டும். தலைவரைத் தலைமையுரையாற்றச் செய்துவிட்டு, அறிவிப்பாளர் தலைவரின் பொறுப்பை எடுப்பது கூடாது. அது தலைவரின் மதிப்பைக் குறைத்து விடும்.

தவிர்க்க முடியாத காரணத்தால் உரையாற்றத் தெரியாத தலைவர் ஒருவரை நிகழ்வுக்குத் தலைமையேற்க விடும் போது, அறிவிப்பாளர் தேவைப்படுகின்றார். அறிவிப்பாளர் சொற்சிக்கனம், நேரச்சிக்கனம் கொள்வது கட்டாயமானது. அறிவிப்பாளரும் நேரத்தை விழுங்கித் தொல்லைப்படுத்துவதும் உண்டு. நிகழ்வைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து வேறொரு திசையில் நகர்த்தியதும் உண்டு.

### முதன்மை விருந்தினர் அல்லது விழா நாயகன், நாயகி உரை:

நிகழ்வுகளில் விருந்தினர்கள் அல்லது பேச்சாளர்கள் நீட்டி முழக்கிப் பேசியதன் பின்பாக, முதன்மை விருந்தினர் அல்லது விழா நாயகன், நாயகி உரை நடைபெறும் சம்பிரதாயமே அதிகம். அப்போது அவர்கள் பெரும்பாலும் வெறும் கதிரைகள் பலவற்றைப் பார்த்துப் பேசுவதே பெரும்பாலும் நிகழும். அதனால் முதன்மை விருந்தினரை அல்லது விழா நாயகன், நாயகியை சபை ஈர்ப்புள்ள ஒரு நேரத்தில் உரையாற்ற விடுதல் நன்று. அதன் மூலமாக அவர்களது மதிப்புப் பேணப்படும்.




விழாக்களை, நிகழ்வுகளைப் பெறுமதி மிக்கதாக மாற்றும் நுட்பத்தைக் கற்றுக்கொண்டு, வாழ்வை வெற்றிகரமானதாக ஆக்குவோம்.



thabendran.v@thaiveedu.com



# அமெரிக்க ஆபிரிக்கர்களின் வரலாறு

**- குரு அரவிந்தன்**

கனடா ரொறன்ரோவிலிருந்து அமெரிக்கத் தலைநகரான வாசிங்டன் டி.சி-க்கு விமானத்தில் சென்றிருந்தேன். ரொறன்ரோவிலிருந்து விமானப் பயணத்திற்குச் சுமார் ஒரு மணி முப்பது நிமிடம் எடுக்கின்றது. டலெஸ் (Dulles) விமான நிலையத்தில் இறங்கி நாங்கள் தங்கவேண்டிய இடத்திற்கு வாடகை வண்டியில் சென்றிருந்தோம்.

அனேகமாகப் பார்க்க வேண்டிய இடங்கள் அருகருகே இருந்ததால் சில இடங்களுக்கு நடந்தும் சில இடங்களுக்கு வாடகை வண்டி எடுத்தும் சென்றோம். ஒருநாள் தனியாரின் சுற்றுலா வண்டியில் சென்றோம். 10 பேர் வசதியாக அமரக்கூடிய சிறிய பேருந்து போல அது இருந்தது. வண்டியோட்டி ஒவ்வொரு இடமாக நிறுத்தி அந்த இடங்களைப் பற்றிச் சுருக்கமான விபரங்களைத் தந்தார்.

ஒவ்வொரு இடத்திலும் இறங்கிப் பார்ப்பதற்கு 20 நிமிடங்கள் ஒதுக்கினார். போதுமானளவு தண்ணீர்ப் போத்தல்களையும் அவ்வப்போது தந்தார். சுமார் 5 மணி நேரத்தில் பல இடங்களைப் பார்க்க முடிந்தது. எங்களுடைய வண்டியில் சென்றிருந்தால் வாகனத் தரிப்பிடப் பிரச்சினையை நாங்கள் எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கும், அதை இப்படியான பயணத்தின் மூலம் தவிர்க்க முடிந்தது.

அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டனில் பலவகையான அருங்காட்சியகங்கள் இருக்கின்றன. இதில் அமெரிக்கக் கறுப்பின மக்களுக்காகவும் சில அருங்காட்சியகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சென்று பார்க்க நேரமும், சந்தர்ப்பமும் கிடைத்தது. அமெரிக்க ஆபிரிக்க மக்களின் வரலாற்றை ஓரளவு அறிந்து வைத்திருந்தாலும், இந்த அருங்காட்சியகத்தைப் பார்த்ததன் மூலம் மேலதிகமாகப் பல தகவல்களை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. ஆப்பிரிக்க அமெரிக்க வரலாறு மற்றும் கலாசாரத்தின் தேசிய அருங்காட்சியகமாக இது இருக்கின்றது. மேற்கு ஆபிரிக்க யோறூபன் (Yoruban) கலையின் மூன்றடுக்குக் கிரீடங்கள் போல இந்தக் காட்சியகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2003-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தக் காட்சியகத்தை 2016-ம் ஆண்டு ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

காலாகாலமாய் கறுப்பின மக்கள் அனுபவித்த கஸ்டங்களையும், படிப்படியாகத் திட்டமிட்ட போராட்டங்கள் மூலம் அவர்கள் வலிந்து பெற்றுக்கொண்ட சுதந்திர வாழ்க்கையையும் பார்த்தபோது, வியப்பாக இருந்தது. அவர்களின் போராட்ட முறை எம்மினத்திற்கும் சில பாடங்களைக் கற்றுத்தருவதாக அமைந்திருக்கிறது. நாங்கள் புலம்பெயர்ந்து இந்த மண்ணில் இன்று அனுபவிக்கும் எல்லாவகையான சுதந்திரத்திற்கும் வித்திட்டவர்கள் இந்தக் கறுப்பின மக்கள்தான் என்பதை ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

அடிமை முறை என்பது புராதன எகிப்து நாட்டில் பொ.ஆ.மு. 1400-களிலில் ஆரம்பமானது என்பதைப் பழைய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. போரில் கைப்பற்றப்பட்டவர்களை அடிமைகளாகக் கொண்டுவந்து எகிப்தில் வேலை வாங்கினார்கள். பொ.ஆ.பி.1619-ம் ஆண்டுதான் முதன் முதலாக ‘வைட் லயன்’ என்ற கப்பலில் அடிமைகள் அமெரிக்காவிலுள்ள வேர்ஜீனியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஸ்பானியர்கள் அடிமைகளை அமெரிக்காவுக்குக் கொண்டு வந்தனர். மேற்கு மத்திய ஆபிரிக்கப் பகுதிகளிலிருந்து அதாவது இப்போதுள்ள கொங்கோ, அங்கோலா போன்ற இடங்களிலிருந்துதான் அதிக கறுப்பின மக்கள் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டனர். அடிமைகள் சுமார் 300 மைல்கள் தூரத்தைக் கடக்க ஒருவரோடு ஒருவர் கட்டப்பட்ட நிலையில், கப்பல்கள் தரித்து நின்ற கடற்கரைவரை நடந்து வரவேண்டியிருந்தது. இந்தப் பயணத்தில் பலர் இறந்தும் போனார்கள். இளம் வயதுள்ள எல்லோரையுமே இவர்கள் வலுக்கட்டாயமாகப் பிடித்து வந்ததால் முதியோர்கள் சொந்த ஊரிலே தனித்து விடப்பட்டிருந்தனர். அதனால் இவர்கள் மட்டுமல்ல, அவர்களும் பிரிவுத்துயர் போன்ற கஸ்டங்களை அனுபவித்தனர்.

அமெரிக்கக் கறுப்பின மக்களின் வாழ்க்கை அடிமை முறையில்தான் அமெரிக்காவில் உருவானது. 17-ம் நூற்றாண்டில் கரீபியன் தீவுகளில் கரும்புத் தோட்டங்களும், வட அமெரிக்காவில் புகையிலைத் தோட்டங்களும், பருத்திச் செய்கையும்,




நெல், கோதுமை வயல்களும் பெருமளவில் வளர்ச்சி பெற்ற தால், இத்தோட்டங்களில் வேலை செய்ய மனிதவலு வேண்டி யிருந்தது. அதற்காக ஆபிரிக்காவிலிருந்து கறுப்பின மக் களை அடிமைகளாகக் கொண்டு வந்தனர். 1790-ம் ஆண்டு ஆபிரிக்கக் கறுப்பினத்தவர் தொகை அமெரிக்காவில் 760,000-ஆக அதிகரித்திருந்தது. அமெரிக்காவின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கினராகக் கறுப் பின மக்கள் அடிமைகளாக இருந்தனர்.

அடிமை வியாபாரம் என்பது மிகப்பெரிய அளவில் அக்கா லங்களில் இடம்பெற்றன. இந்த வியாபாரம் மிகப்பெரிய வரு மானத்தைப் பெற்றுக் கொடுத்ததால், போர்த்துக்கல் வியாபா ரிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வியாபாரம் வெகு விரைவில் ஏனைய ஐரோப்பிய நாடுகளாலும் தொடரப்பட்டன. குறிப்பா கப் போர்த்துக்கல், பிரித்தானியா, ஸ்பெயின், பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாட்டுக் கப்பல்களில், அடிமைகளை ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரங்களில் பிடித்து வந்து அமெரிக்காவில் நல்ல விலைக்கு விற்றார்கள். 1650-ம் ஆண்டுக்குமுன் போர்த்துக்கல் வியாபாரிகள்தான் சுமார் 130 வருடங்களாக 90 வீதமான அடிமை விற்பனையை மேற்கொண்டார்கள். காரணம் கப்பல் கட்டுவதிலும், கடல் போக்குவரத்திலும் அவர்கள் தான் முன்னின்றார்கள். அத னால் மேற்காபிரிக்காவிலிருந்து கறுப்பின மக்களைக் கப்பல் களில் கடத்தி வந்து அமெரிக்க வெள்ளையின மக்களுக்கு விற்றார்கள். அப்படிக் கொண்டுவரப்பட்டவர்கள் விவசாய நிலங்களில் பணிபுரிவதற்காக ஈடுபடுத்தப்பட்டனர். 1651-ம் ஆண்டுக்குப் பின் அடிமை வியாபாரத்தில் பிரித்தானியர் முதலிடத்தைப் பெற்று 19-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை அடிமை வர்த்தகத்தை மேற்கொண்டார்கள்.

அமெரிக்காவின் தென்கரோலினாவிலுள்ள ஜோர்ச் டவுனைச் சேர்ந்த ஜோசுவா ஜோன் வார்ட் என்ற நிலச் சொந்தக்காரர் தான் 1850-ம் ஆண்டு அதிக அடிமைகளை, அதாவது 1092 அடிமைகளை வைத்திருந்ததாக ஆவணங்கள் குறிப்பிடுகின் றன. தொடக்க காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த வர்களில் சுமார் 13 ஜனாதிபதிகளிடம் அடிமைகள் இருந்தார் கள். அதனால்தான் அடிமை முறையை ஒழிக்க அவர்கள் தயக்கம் காட்டினார்கள்.

1672-ம் ஆண்டிற்கும் 1731-ம் ஆண்டிற்கும் இடையே ரோயல் ஆபிரிக்க நிறுவனம் என்ற வியாபார நிறுவனம் 187,697 ஆபி ரிக்க மக்களை அடிமைகளாகக் கொண்டு வந்து அமெரிக்கா விற்கு விற்றார்கள். இதற்காக அவர்களது கப்பல்கள் 653 கடற்பயணங்களை அமெரிக்காவிற்கு மேற்கொண்டன. 1788-ஆம் ஆண்டு அமெரிக்காவின் அரசியலமைப்பின் ஒத்து ழைப்புடன் தெற்கே அடிமைத்தனம் உறுதியாக நிலைநிறுத் தப்பட்டது. அடிமைகளில் முதலாளி வீட்டு வேலையிலிருந்த வர்கள் முதலிடத்திலும், கைவினைஞர்கள் அடுத்த இடத்தி லும், தோட்டங்களில் வேலை செய்தவர்கள் கடை நிலையி லும் இருந்தனர்.

அடிமை வர்த்தகத்திற்காகச் சுமார் 45-க்கும் மேற்பட்ட கறுப்பு இனக்குழுக்கள் அமெரிக்காவிற்குக் கொண்டு செல் லப்பட்டனர். அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கே தரு கின்றேன். காங்கோ ஜனநாயகக் குடியரசின் பாகோங்கோ, அப்பர் கினியாவின் மாண்டே, டோகோ, கானா மற்றும் பெனின் போன், ஈவ், அட்ஜா, மினா, கானா மற்றும் ஐவரி கோஸ்ட்டின் அகான், செனகல் மற்றும் காம்பியாவின் வோலோப், தென்கிழக்கு நைஜீரியாவின் இக்போ, அங்கோ லாவின் அம்புண்டு, தென்மேற்கு நைஜீரியா மற்றும் பெனின் யோருபா, கேமரூனின் திகார் மற்றும் பாமிலேக், மொசாம்பிக் கின் மகுவா போன்ற இனமக்களே அதிகமாக அமெரிக்கா வில் அடிமைகளாக்கப்பட்டனர்.

1803-ம் ஆண்டு டென்மார்க் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் அடிமை வர்த்தகத்தை முதன் முதலாகத் தடை செய்தன. 1833-ம் ஆண்டு பிரித்தானியா அடிமை வர்த்தகத்தைத் தடை செய்தது மட்டுமல்ல, தனது கடற்படையின் துணையுடன் அடி

மைகளைக் கடத்துவதையும் தடைசெய்தது. 1834-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1-ம் திகதி சட்டப்படி அடிமை முறை கனடாவில் ஒழிக்கப்பட்டது. இதன் காரணமாகச் சுமார் 30,000 கறுப்பின மக்கள் அமெரிக்காவிலிருந்து கனடாவிற்கு இடம் பெயர்ந்தார்கள். கனடாவைக் கறுப்பினத்தவர் சுதந்திரமாக இருக்கக்கூடிய ஒரு பாதுகாப்பான நாடாக எண்ணியதால்



அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு இடம் பெயர்ந்தார்கள். இப்படி இரகசியமாகக் கூட்டுமுயற்சியால் இடம் பெயர்ந்ததை 'நிலத்தடித் தொடர்வண்டிப் பாதை' என அழைத்தனர்.

அமெரிக்காவிற்குக் கடைசியாக வந்த அடிமைக் கப்பலின் பெயர் க்ளோரில்டா (Clotilda) என்பதாகும். இந்தக் கப்பல் 1859-ம் ஆண்டில் அலபாமாவிலுள்ள மொபைல் நகரத்திற்குப் பல ஆபிரிக்கர்களைச் சட்டவிரோதமாகக் கடத்தி வந்தது. 1865-ம் ஆண்டு அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. 1935-ம் ஆண்டு இறந்த குட்ஜோ லூயிஸ், 1937-ம் ஆண்டு இறந்த ரெடோசி மற்றும் 1940-ம் ஆண்டு இறந்த மாரில்டா மெக்ரியர் ஆகியோரே கடைசியாக அமெரிக்காவில் வாழ்ந்த ஆபிரிக்காவிலிருந்து க்ளோரில்டாக் கப்பலில் கடத்திவரப்பட்ட அடிமைகள் என்பதைச் சமீபத்திய தேடுதல் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

1860 மற்றும் 1861-ம் ஆண்டுகளில் யூனியனை விட்டு வெளியேறிய அடிமை விடுதலையை எதிர்த்த பதினொரு தென் மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்து வடக்கேயிருந்த 'கொன்பெடரேட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா'-வை எதிர்த்துச் சண்டையிட்டன. இதுவரை காலமும் மாநிலங்களாக மாறாத பிரதேசங்களில் அடிமைத்தனத்தைத் தடைசெய்யும் தேசிய அரசாங்கத்தின் அதிகாரம் தொடர்பாகச் சுதந்திர மற்றும் அடிமை அரசுகளுக்கிடையிலான வேறுபாட்டைத் தீர்க்கக்கூடிய ஒரு சமரசம் இல்லாததால் உள்நாட்டுப் போர் தொடங்கியது. 'சிவில் வார்' என்று சொல்லப்பட்ட அமெரிக்க உள்நாட்டு யுத்தம் முடிவில் அடிமைகளுக்கு விடுதலையைத் தேடித் தந்தது.

அமெரிக்க அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தின்படி, 1863-ம் ஆண்டில், ஜனாதிபதி லிங்கன் அடிமைகளின் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார், அதில் 'எந்த மாநிலத்திலோ அல்லது ஒரு மாநிலத்தின் நியமிக்கப்பட்ட பகுதியினுள் அடிமைகளாக இருக்கும் அனைத்து நபர்களும், இனி, எப்போதும் சுதந்திரமாக இருப்பார்கள்.' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சுமார் 250 ஆண்டு காலமாக அமெரிக்காவில் நடைமுறையிலிருந்த அடிமைமுறை சட்டப்படி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் சட்டப்படி அடிமை முறையை ஒழிக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்தாலும், அடிமை முறை நீண்டகாலமாகச் சில வெள்ளையினக் குடும்பங்களிடையே தொடர்ந்து கொண்டேயிருந்தது. சில சமயங்களில் சுதந்திரமடைந்த கறுப்பர்களும் திட்டமிட்டுக் கடத்தப்பட்டு அடிமைப்படுத்தப்படும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சட்டப்படி தடை செய்யப்பட்டாலும், இன்றும் அடிமை முறை சில இடங்களில் மறைமுகமாக இருக்கத்தான் செய்கிறது.

அமெரிக்காவில் 1865-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகச் சுமார் நான்கு மில்லியன் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். 1868-ம் ஆண்டு 14-வது திருத்தம் ஆபிரிக்க அமெரிக்கர்களுக்குக் குடியுரிமை வழங்கியது. 1870-ம் ஆண்டு வாக்களிக்கும் உரிமையை அவர்களுக்கு உறுதி செய்தது. ஆனாலும் தென்பகுதி முதலாளிகளால் இந்த விதிமுறைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. 21-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 36 மில்லியனுக்கும் மேற்பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்கள் அமெரிக்காவின் தென்பகுதிகளில் வாழ்ந்தார்கள். சட்டத்தின் மூலம் கறுப்பின மக்கள் சுதந்திரம் பெற்றிருந்தாலும் சில நகரங்களில் இன, நிற வேற்றுமையை இப்பொழுதும் சிலர் காட்டத்தான் செய்கிறார்கள். கனடாவிலும் சில இடங்களில் சிலரிடம் இதை அவதானிக்க முடிகின்றது. 'பிறீடம் இஸ் நொட் பிறி' என்று அமெரிக்காவில் எழுதப்பட்டிருக்கும் வாசகம் போல, எமக்கான எல்லாவற்றையும் போராடித்தான் பெறவேண்டியிருக்கின்றது.

**உசாத்துணை:**


- https://washington.org/visit-dc/guide-to-smithsonian-national-museum-african-american-history-culture




kuruaravindan@thaiveedu.com



# தமிழக அரசியலில் நடிகர்கள்

– ஓவியர் ஜீவா

தமிழ்நாட்டு நடிகர்களில், சமீபத்திய அரசியல் பிரவேசம் நடிகர் விஜயுடையது. இந்தச் செய்தியைப் பார்த்தபோது நடிகர்கள் அரசியலில் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள் என்ற வியப்பைத் தந்தது. உலகளவில் பார்த்தால் கூட சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டப்பட்டவர். இந்திய ளவில் வடக்கே பால்ராஜ் சஹானி, உத்பல் தத், ஏ.கே. ஹங்கல் என்று அந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களாக இயங்கியிருக்கின்றனர். மெஹபூப் கான் தன் இலச்சினையாக அரிவாள், சுத்தியல் சின்னத்தையே உருவாக்கி, படத்தில் டைட்டில் காட்சிகளிலும் சுவரொட்டிகளிலும் பயன்படுத்தினார். இப்போதும் கூடக் காங்கிரஸ்க் கட்சியிலும் பாரதீய ஜனதாக் கட்சியிலும் நிறைய நடிகர்கள் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பக்கத்து மாநிலமான கேரளத்தில் அனைவருக்குமே அரசியல் ஈடுபாடு அதிகம். நடிகர்கள் எல்லோரும் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் கட்சிகளிலும், இப்போது பிஜேபி-யிலும் பெரும் ஈடுபாடு கொண்டவர்கள். ஆந்திராவில் என்.டி. ராமராவ் அரசியலில் பெரும் வெற்றிகண்டு ஆட்சியையே பிடித்தார். மாதள ரங்காராவ் போன்றவர்கள் பொதுவுடமைத் தோழர்களாகப் பரிணமித்து, நிறையச் செங்கொடித் திரைப்படங்களை எடுத்துத் தள்ளினர். தேசியளவில் IFTA, KPAC (கேரளம்) போன்ற அமைப்புகள் மேடை நாடகங்கள் தொடங்கி திரைப்படங்களிலும் ஆதிக்கம் செலுத்தினர். தோப்பில் பாசி போன்ற எழுத்தாளர்கள் புரட்சிகரமான மேடை நாடகங்கள் எழுதி அதைத் திரைக்கும் எடுத்துச் சென்றனர். மம்முட்டி, இன்னொசென்ட், முரளி போன்றவர்களை மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்களாகவும், சுரேஷ் கோபி போன்றவர்களை பிஜேபி முகாமைச் சேர்ந்தவர்களாகவும் மக்கள் கருதுகிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, நாடு சுதந்திரமடைவதற்கு முன்பே, நாடகமேடைகளில் கே.பி. சுந்தராம்பாள், விஸ்வநாத தாஸ் போன்ற கலைஞர்கள் தங்கள் புராண நாடகங்கள் மூலமே வெள்ளையர்களுக்கு எதிரான உணர்ச்சியைத் தூண்டிவிட்டு எழுச்சியை உண்டாக்கினார்கள். விஸ்வநாத தாஸ், ஜாலியன் வாலா பாக் படுகொலை போன்ற நிகழ்வுகளைப் புராண நாடகங்களில் மறைமுகப் பாடல் வரிகளாக நுழைத்து விடுவார். முருகன் வேடத்தில் மேடையில் நடிக்கும்போதே இவர் உயிர் பிரிந்தது. சுதந்திரம் கிடைத்த பிறகு, கலையுலகில் கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிடக் கட்சிகளும் ஆர்வம் காட்டினார்கள். தோழர்கள் கூட்டுறவு முறையில் தயாரித்த 'பாதை தெரியுது பார்' திரைப்படத்தில் அப்போது கட்சியில் தீவிரமாக இயங்கிய ஜெயகாந்தன், இசையமைப்பாளர் எம்.பி. ஸ்ரீனிவாசன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்றவர்கள் பணியாற்றினார்கள். புகழ்பெற்ற பாடல்களே இன்னும் இப்படத்தை நினைவூட்டுகின்றன. எம்.எஸ். சோலைமலை, கே.சி.எஸ். அருணாசலம் போன்ற பொதுவுடமைச் சிந்தனையாளர்களும் தங்கள் பங்குக்கு வசனங்களையும் பாடல்களையும் வழங்கினர்.

திராவிட இயக்கம் மிகத் திறமையாகத் திட்டமிட்டுப் பொது மக்களை மிகவும் கவர்ந்த கலைத்துறையைக் கைப்பற்றி அதன் மூலம் ஆட்சியையே கைப்பற்றியது, இன்னும் ஆட்சியைத் தக்கவைத்திருப்பதெல்லாம் உலகில் எங்கும் காணாத அதிசயம் என்றுதான் சொல்லவேண்டும். படக்காட்சிகள், பாடல் காட்சிகள், வசனங்கள் எல்லாவற்றிலும் மறைமுகமாக அரசியலைப் புகுத்தியவர்களில் இவர்கள் வல்லவர்கள். சிவாஜியின் முதல் படமான பராசக்தி உருவான காலத்திலேயே உருவான 'பணம்' படத்தின் இயக்குனரும் நடிகருமான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அதில் 'தீனா மூனா கானா' என்ற பாடலைப் பாடியிருப்பார். திருவள்ளுவர் முன்னேற்றக் கழகம் என்பது அதன் விரிவாக்கமாக இருந்தாலும், அது திமுக-வைத் தான் குறிக்கிறது என்று அனைவரும் புரிந்து கொண்டனர். 'பணத்தின்' வசனகர்த்தாவும் கலைஞர் மு. கருணாநிதிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிடக் கழகத்தில் இருக்கும்போதே அண்ணாத்துரை நாடகங்கள் எழுதி அதைக் கட்சி மாநாட்டு மேடைகளில் அரங்கேற்றம் செய்வது வழக்கமாக இருந்தது. அப்படி எழுதி மேடையேறிய நாடகம்தான் 'சந்திரமோகன் (அல்லது) சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம். இதில் சிவாஜியாக நடிக்க அப்போதைய இளைஞரான எம்ஜியாரை அழைத்ததாகவும், நீண்ட வசனங்களைக் கண்டு மிரண்டு அவர் பின்வாங்கிய போது, கணேசன் என்ற பையனைப் பிடித்து நடிக்க வைத்ததாகவும், அவன் நடிப்பைக் கண்டு வியந்து போன தலைவர் ஈவெரா, அந்தப் பையனுக்குச் சிவாஜி கணேசன் என்று புதிய

பட்டப்பெயரைச் சூட்டியதாகவும் ஒரு செய்தி உண்டு. பிறகு அண்ணாவும் திரைப்படங்களுக்கு எழுதத் தொடங்கினார். தமிழ்த் திரைப்படங்கள், பேசத்தொடங்கியபோது பெரும்பா



லும் ஒரு குறிப்பிட்ட சாயல் கொண்ட வசனங்களே இடம்பெற் றன. நாதா, ஸ்வாமி என்று பேசிக்கொண்டிருந்தவர்கள், நல்ல தமிழில் பேசத் தொடங்கியது வசனகர்த்தா இளங்கோவன் காலத்தில்தான். திராவிடக் கவிஞர் பாரதிதாசன் கூட அப் போது சில திரைப்படங்களுக்கு வசனம் எழுதினார். அண் ணாத்துரை அரசியல் கலந்து, அடுக்குமொழியில் எழுதிய நல்ல தமிழ் வசனங்கள் அப்போதைய இளைஞர்களைக் கவர்ந்தது. 'கத்தியைத் தீட்டாதே, புத்தியை தீட்டு', 'சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு' போன் றவை அவரது புகழ் பெற்ற வசனங்கள்! அவரைத் தொடர்ந்து திரையுலகில் எழுத வந்தவர் கருணாநிதி. எம்ஜியாருக்குச் சில படங்களுக்கு எழுதியிருந்தாலும், அவரைப் புகழின் உச் சிக்குக் கொண்டு சென்றது 'பராசக்தி!' சிவாஜி கணேசனின் முதல் திரைப்படம்! நீண்ட வசனங்களுக்கு உயிர் கொடுத்து சிவாஜி நடித்தது அவருக்குப் பெரும் புகழைத் தந்தது. 'அம் பாள் எப்போதடா பேசினாள்' போன்ற நாத்திக நெடி வீசிய வரிகள் உயிர்பெற்று எழுந்தன! படம் பெரும் வெற்றியடைந் தது. இதனால் கழகம் பெரும் எழுச்சி பெற்றது. சிவாஜியை யும் திராவிட நடிகர்கள் வரிசையில் சேர்த்துவிட்டார்கள்.

திமுக முகாமிலிருந்து ஏராளமான எழுத்தாளர்கள் திரையுல கில் குதித்தனர். ஏ.வி.பி. ஆசைத்தம்பி, சி.பி. சிற்றரசு, இராம. அரங்கண்ணல், முரசொலி மாறன் என்று பட்டியல் பெரிதா னது. அதே முகாமிலிருந்து வந்த நடிகர்கள் பட்டியலும் பெரிது. கே.ஆர். ராமசாமி, என்.எஸ். கிருஷ்ணன் நாடகக்குழு விலிருந்து நடிக்க வந்தவர். அவர் படங்களில் பாடவும் செய் வார். அவருக்கு 'நடிப்பிசைப் புலவர்' என்று ஒரு பட்டமும் வழங்கப்பட்டது. பராசக்தியில் அவர்தான் முதலில் நடிப்ப தாக இருந்தது. சிவாஜிக்குத் தயாரிப்பாளர் பெருமாள் முதலி யாரின் பலத்த ஆதரவு இருந்ததால் சிவாஜியே நடிக்கப் பட மும் பெரு வெற்றியடைந்தது. கே.ஆர். ராமசாமிக்காக எந்தப் படமும் பெரிதாக ஓடியதாக எனக்குத் தெரியவில்லை. சிவாஜி என்ற ஆளுமை தமிழ்த் திரையுலகத்தைக் கலக்கிய வேகத்தில், அவர் காணாமலேயே போய்விட்டார். இத்தனைக் கும் பின்னர் வந்த 'துளி விஷம்' படத்தில் அவர் கதாநாயக னாகவும் சிவாஜி வில்லனாகவும் நடித்து, கிளைமாக்ஸ் காட் சியில் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு மகா நீளமான வசனங்கள் பேசி அறுத்ததால், படமும் படுதோல்வியடைந்தது!

எஸ்.எஸ். ராஜேந்திரன் நல்ல தமிழ் உச்சரிப்புக்குப் புகழ் பெற்றவர். ஏற்கனவே ஒரு படத்தில் நடித்திருந்தாலும், பராசக் திதான் அவருக்கும் ஒரு நல்ல பிரவேசமாகத் திகழ்ந்தது. அதற்குப் பிறகு சிவாஜியுடன் சேர்ந்தும், தனியாகவும் ஏராள மான படங்களில் நடித்தார். சில படங்களை இயக்கவும் செய் தார். அவருக்கு 'இலட்சிய நடிகர்' என்றும் அவர் மனைவி விஜயகுமாரிக்கு 'இலட்சிய நடிகை' என்றும் பட்டங்கள் வழங் கப்பட்டன. சட்டமன்ற உறுப்பினரான முதல் தமிழ் நடிகர் என்ற பெருமையும், ராஜ்ய சபையில் உறுப்பினரான முதல் தமிழ் நடிகர் என்ற பெருமையும் பெற்றவர். காங்கிரஸ் முகாமி லிருந்து 'வீரபாண்டிய கட்டபொம்மன்' வெளியானபோது கழக முகாமிலிருந்து எஸ்.எஸ்.ஆர். நடித்த அற்புதப் படமான 'சிவ கங்கை சீமையும்' கிட்டத்தட்ட அதே சமயத்தில் வெளியா னது. வளையாபதி முத்துகிருஷ்ணன், என்.எஸ். நாராயண-சாமி போன்று வேறு சில திராவிட ஆதரவு நடிகர்களும் அப் போது கட்சியில் இயங்கிக்கொண்டிருந்தனர். இந்தக் காலகட் டத்தில் 'ரத்தக் கண்ணீர்' மூலம் தன் மறுபிரவேசத்தை நிகழ்த்திக் காட்டினார் எம்.ஆர். ராதா. திராவிடக் கழக பிரமு கர் திருவாரூர் தங்கராசுவின் புகழ்பெற்ற நாடகத்தை ஏற்க னவே மேடைகள் தோறும் நடித்துச் சாதனை புரிந்தவர் ராதா.



அவரது முரட்டு சுபாவத்தையும் எடுத்தெறிந்து பேசும் பாணி யையும், இரட்டைக்குரல் திறனையும் பயன்படுத்தி ரத்தக் கண்ணீரை ஒரு பெரும் வெற்றிப்படமாக்கிவிட்டார். 'நடிக-வேள்' என்றே ராதா அழைக்கப்படும் அளவுக்கு அவரது தனித்திறன் பேசப்பட்டது.

இன்னும் 'அந்த' முக்கியமான மனிதரைப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேனே!

எம்ஜிஆர், தமிழக அரசியலில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்வார் என்று யாரும் யூகித்திருக்க முடியாது. சிவாஜி கணேசன் திருப்பதிக் கோவிலுக்குச் சென்றார் என்ற ஒரு கார ணத்தை வைத்து திமுக அவரைத் திருப்பதி கணேசா என்று போஸ்டர் அடித்து ஒதுக்கி வைத்தது. அவர் நெற்றியில் சித்த

நாதன் திருநீற்றைப் பட்டையாக அடித்துக்கொண்டு காங்கிரஸ் கட்சிக்குச் சென்றுவிட்டார். அதுவரை பக்தராக வலம் வந்த எம்ஜிஆர் பழைய நண்பராம் கலைஞரைத் தேடி திமுக வந்துவிட்டார். எம்ஜிஆரின் வாள்வீச்சுக்கும் சண்டைக் காட்சிகளுக்கும், அவரது சிவந்த நிறத்துக்கும் ரசிகரானவர்கள் அனைவரும் திமுக அனுதாபியாகிவிட்டனர். பெண்கள் அவர் மீது பெரும் மோகம் கொண்டனர். திரைப்படங்களில் புகைப்பது, குடிப்பது போன்ற காட்சிகள் இல்லாமல் ஒரு சுத்தமான இமேஜை வளர்த்து, மக்களைத் தன் பக்கம் ஈர்த்தார். அவர் நாத்திக ஆதரவாளராகக் காட்டிக்கொண்டதில்லை என்பது இன்னொரு ஆச்சரியம். வாரி வழங்கும் வள்ளல் என்ற பெயரும் கிடைத்தது. எம்ஜிஆர் வருகிறார் என்றால் திமுகக் கூட்டங்களும் மாநாடுகளும் பெருந்திரளான மக்களைக் கவர்ந்தன. 1967 சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் எம்.ஆர். ராதாவுக்கும் எம்ஜிஆருக்கும் நடந்த ஒரு தகராறில் துப்பாக்கி வெடித்தது. எம்ஜிஆர் கழுத்தில் குண்டுகள் பாய்ந்தன. தமிழகம் அதிர்ந்த ஒரு நிகழ்வு அது. தி.மு.க. தேர்தல் சுவரொட்டிகளில் கழுத்தில் ஒரு பெரிய பேன்டேஜ் கட்டிக்கொண்டு கைகளைக் கூப்பி வாக்குக் கோரிய எம்ஜிஆரின் உருவம் அச்சடிக்கப்பட்டது. எம்ஜிஆர் மீதான அனுதாப அலை, இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற காரணங்களினால் திமுக பெரும் வெற்றியடைந்து ஆட்சியையும் பிடித்தது. திமுகவில் பெரும் சக்தியாகத் திகழ்ந்த எம்ஜியார் சில சச்சரவுகளுக்குப் பின் அண்ணாயிசம் என்ற ஒரு தத்துவத்தை முன்னிறுத்தி, அண்ணாத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தோற்றுவித்தார்.

திமுகவிலிருந்து பலர் பிரிந்து அதிமுகவிற்கு வந்தனர். எம்ஜியாருடன் பல படங்களில் ஜோடியாக நடித்த ஜெயலலிதா, கட்சியில் கொள்கை பரப்புச் செயலாளராக்கப்பட்டு பின்னர் எம்ஜிஆரின் அரசியல் வாரிசாக மறைமுகமாக அறிவிக்கப்



பட்டார். எஸ்.எஸ்.ஆர் கூட அதிமுகவில் சேர்ந்தார். விஜயகுமார், ஐசரி வேலன், திருச்சி சௌந்தரராஜன் என்று பல நடிகர்கள் கட்சியில் சேர்ந்து கிடுகிடு என்று வளர்ந்தனர். கூட இருந்த பலர் கல்வித் தந்தைகளாகினர். எம்ஜிஆர் மறைவுக்குப் பின் கட்சி இரண்டாக உடைந்தது. அவர் மனைவி ஜானகி ஒரு குறுகிய காலத்துக்கு முதலமைச்சராக இருந்ததும் கூட நிகழ்ந்தது. ஜானகியும் ஜெயலலிதாவும் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிட்டுப் பின்னவர் வென்று முதலமைச்சராகத் திகழ்ந்தார்.

சிவாஜி கணேசன் காங்கிரஸ் கட்சி மீது ஏற்பட்ட கசப்பினால், தனிக்கட்சி கண்டார். தமிழக முன்னேற்ற முன்னணி பிறந்து தேர்தலிலெல்லாம் நின்று பின்னர் அழிந்தும் போனது. நடிப்பில் சகாப்தம் கொண்டவருக்கு அரசியல் பெரும் அடியைத் தந்தது. சமீபத்தில் மறைந்த விஜய்காந்த் ‘தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம்’ என்று ஒரு கட்சியை ஆரம்பித்துத் தேர்தலில் கலந்துகொண்டு ஏராளமான தொகுதிகளிலும் வென்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தி



லும் இருந்தார். உடல் நலமற்றுப்போன பின், கட்சியும் தேய்ந்து சுருங்கிப்போனது. பெரும் நடிகரான கமல் ஹாசன் தன் பங்குக்கு ‘மக்கள் நீதி மையம்’ என்ற கட்சியைத் தோற்றுவித்து, கோவைச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியும் கண்டார். மீண்டும் முயற்சியில் இருக்கிறார். ‘அகில இந்தியச் சமத்துவ மக்கள் கட்சி’ என்ற ஒன்றை நிறுவிக் காத்து நிற்கிறார் சரத்குமார். ‘அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி’ என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? முத்துராமனின் மைந்தன் கார்த்திக் தொடங்கிய கட்சி. இயக்குனர் சீமான் ‘நாம் தமிழர்’ என்று ஒரு கட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார். பாக்யராஜுக்குக் கட்சி இருக்கிறதா தெரியவில்லை, ஆனால் டி. ராஜேந்தருக்கு ஒன்று இருக்கிறது! மன்சூர் அலிகான் தனக்கென்று ஒன்று ஆரம்பித்திருக்கிறார். ரஜினி ஒரு கட்சி ஆரம்பிப்பார், விஷால் ஒரு கட்சி ஆரம்பிப்பார் என்று அனைவரும் காத்து நிற்கும்போது திடீரென்று ‘தமிழக வெற்றிக் கழகம்’ என்று ஒரு கட்சியை ஆரம்பித்துத் தன் ரசிகர்களுடன் செல்ஃபீ எடுத்துக்கொண்டிருக்கிறார் தளபதி விஜய்!

நாற்காலிக் கனவுகள், சிலருக்கு மட்டுமே நிறைவேறும் என்பதைச் சாதாரண வாக்காளர்கள் அறிவார்கள்!



jeeva@thaiveedu.com




இஸ்ரேல் இது வரை நான்கு மிகப் பெரிய போர்களை சந்தித்துள்ளது. முதலாவது 1947-1948 காலப்பகுதியில் இஸ்ரேலின் உருவாக்கத்துக்கான போர். மேற்கு நாடுகளுடன் குறிப்பாக பிரிட்டனுடன் இணைந்து பாலஸ்தீனியர்களின் நிலத்தை அபகரித்து இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அப்போது அது இஸ்ரேல் என அழைக்கப்படவில்லை. அதன் பின்னர் 1967-ல் நடைபெற்ற ஆறு நாட்கள் போரில் இஸ்ரேல் மிகப் பெரிய வெற்றியை பெற்றது. சிரியாவிடமிருந்து கோலான் ஹைடஸ் பகுதியை அது கைப்பற்றியது. எகிப்திடமிருந்து அதன் ஆசியக் கண்டப் பகுதியான சினாய் பள்ளத்தாக்கையும் இஸ்ரேல் கைப்பற்றியது. இந்த பகுதியில் தான் சூயஸ் கால்வாயும் அமைந்துள்ளது.

மீண்டும் 1973-ல் இப்பகுதிகளை மீளக் கைப்பற்றுவதற்கு அரபு நாடுகள் திடீரென இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டன. முதல் இரண்டு போர்களும் இஸ்ரேலினால் உருவாக்கப்பட்டவை. மூன்றாவது போர் அரபு நாடுகள் ஏற்படுத்திய போர். அதன் பின்னரும் முன்னரும் பல தடவைகள் பாலஸ்தீனிய போராளிகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்குமிடையில் சிறிய தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தன. 2023 ஒக்ரோபர் ஏழு தாக்குதல்கள் ஹமாசினால் ஆரம்பிக்கப்பட்டன.

1973-ல் நடைபெற்ற போரை யோம் கிபூர் போர் (Yom Kippur War) என்பார்கள். இப்போர் 20 நாட்கள் நடைபெற்றது (Oct.6, 1973 – Oct.25, 1973). இப்போரின் போது இஸ்ரேலின் பிரதமர் கோல்டா மேயர். இவரை இரும்புப் பெண்மணி என அழைப்பார்கள். இஸ்ரேலின் ஒரேயொரு பெண் பிரதமர். பிரதமராக பதவியேற்ற போது இவருக்கு வயது 70.

### யோம் கிபூர் போர் (Yom Kippur War):

யோம் கிபூர் என்பது யூதர்களின் புனித நாள் (Day of Atonement). இது ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் இறுதிப் பகுதியில் அல்லது ஒக்ரோபர் முதல் பகுதியில் அனுஷ்டிக்கப்படும். 1973-ல் ஒக்ரோபர் ஆறு யூதர்களின் யோம் கிபூர் நாள்.

ஒக்ரோபர் ஆறு 1973 - சிரியா வட முனையிலும், எகிப்து தென் முனையிலும் இஸ்ரேலின் மீது தாக்குதலை மேற்கொண்டன. ஆரம்பத்தில் இஸ்ரேலுக்கு இது ஒரு பலத்த அடியாகவேயிருந்தது.

போரில் இஸ்ரேல் தோல்வியடைந்து கொண்டிருப்பதைத் தொடர்ந்து கோல்டா மேயர் அமெரிக்காவிடம் உதவி கேட்டார். அப்போதைய அமெரிக்க அதிபர் நிக்சன் சற்று பின் வாங்கினார். ஏனெனில், அரபு நாடுகள் எண்ணெய் விலையை அதிகரிக்கும் என்ற அச்சம் அமெரிக்காவிற்கு இருந்தது. சிரியாவிற்கும் எகிப்துக்கும் சோவியத் யூனியன் ஆயுதங்களையும் ஆலோசனைகளையும் தொடர்ந்து வழங்கி வந்தது. நிக்சனின் அமைச்சரான ஹென்றி கீசிங்கர் ஒரு யூதர். நிக்சன் கீசிங்கரையே பெருமளவு நம்பியிருந்தார். அவரது ஆலோசனைகளை நிக்சன் நிராகரிப்பதில்லை. கீசிங்கரின் வற்புறுத்தலால் அமெரிக்கா ஆயுதங்களை வழங்கத் தொடங்கியது. ஆனால், அமெரிக்க நட்பு நாடுகள் ஆயுதங்களை விநியோகிக்க தயக்கம் காட்டின. எகிப்திய படைகள் முன்னேறின. புதிதாக கிடைத்த அமெரிக்க ஆயுதங்களுடன் இஸ்ரேலிய இராணுவ ஜெனரல் ஏரியல் சரோன் (2001-ல் இவர் இஸ்ரேலின் பிரதமராகவும் பதவிவகித்தவர்) எகிப்தின் படைகளை உடைத்து முன்னேறினார்.

அதே சமயம் ஐ.நா. சபை தனது பாதுகாப்பு கவுன்சிலின் 338-வது தீர்மானத்துக்கு ஏற்ப, உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தியது. அத்துடன் இருபது நாட்கள் நீடித்த போர் முடிவுக்கு வந்தது. 1974 ஜனவரி 18-ல் இஸ்ரேல், எகிப்து ஆகிய நாடுகள் கையொப்பமிட்டு சமாதானமாகின. சினாய் பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் தனது படைகளை முற்றாக வெளியேற்றியது. சினாய் பிரதேசம் மீளவும் எகிப்துக்குச் சொந்தமானது. 1967 போரில் இழந்த கோலன் ஹைட்ஸ் பகுதியை சிரியாவால் மீட்கமுடியவில்லை. 1979 மார்ச்சில் இஸ்ரேல், எகிப்து ஆகிய நாடுகள் நிரந்தர சமாதான நாடுகளாயின.

இந்தப் போரில் 2,656 இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் காயமடைந்தன. இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட போது கடும் மழை பெய்து கொண்டிருந்தது. அந்த மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் அங்கு வந்த கோல்டா மெயரையும் அவரது அமைச்சர்களையும் நோக்கி கொலையாளிகள் எனக் கூச்சலிட்டனர். இப்போரில் இஸ்ரேலின் இழப்பிற்கு கோல்டா மெயரின் திட்டமிட்டமின்மை கார

ணம் என மக்கள் நம்பினர். அதே சமயம் பழமைவாத யூதர்கள் ஒரு 'பெண்' இஸ்ரேலின் பிரதமராக இருந்தமையே அதற்குக் காரணம் எனக் குற்றம் சாட்டினர். கோல்டா அரசியலில் இருந்து சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போதே Levi Eshkol திடீரென மாரடைப்பால் இறந்ததைத் தொடர்ந்து, இவரை பிரதமராக பதவி வகிக்குமாறு கட்சி அழைப்பு விடுத்திருந்தது. இவர் தனது பதவியை 1974-ல் இராஜினாமாச் செய்த பின்னர் The Agranat Commission அமைக்கப்பட்டு இவர் விசாரிக்கப்பட்டார்.

யோம் கிபூர் போரில் வெற்றி பெற்றவர் என்றால், அது அன்வர் சதாத் இஸ்ரேல் மீது என்ன நோக்கத்துக்காக தாக்குதலை மேற்கொண்டாரோ அது நிறைவேற்றப்பட்டது. பின்னர் இஸ்ரேலுடன் நிரந்தர சமாதானத்துக்கு சென்றமைக்காக எகிப்திய இஸ்லாமிய ஜிகாத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்



டார். ஹென்றி கீசிங்கருக்கும் இது ஒரு யூதராக பெரிய வெற்றி. போர் தொடர்ந்திருந்தால் இஸ்ரேல் மேலும் பல இழப்புக்களைச் சந்தித்திருக்கும். நிக்சனை சம்மதிக்க வைத்து, அமெரிக்க நட்பு நாடுகள் தயக்கம் காட்டிய போதும் ஆயுதங்களை வழங்கி, இஸ்ரேலின் இழப்பினை குறைத்ததுடன், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலினூடாக போர் நிறுத்தத்தையும் ஏற்படுத்தினார்.

1898-ல் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் உக்ரைன் பிரதேசத்தில் இருந்த கீவ் நகரில் கோல்டா மேயர் பிறந்தார். கீவ் இப்பொழுது உக்ரேனினுடைய தலைநகராகும். 1969 மார்ச் 7-ல் இவரை பிரதமராக தேர்வு செய்த போது, இவருக்கு நிணநீர்சுரப்பி புற்றுநோயிருந்தது. (lymphoma). அதற்கான சிகிச்சையை அவர் எடுத்துக் கொண்டிருந்தார். இவர் தொடர்ச்சியாக புகை பிடிப்பவர். தனது ஐந்தாவது வயதில் பெற்றோருடன் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார். முதலாம் உலகப் போரின் பின்னர் பாலஸ்தீனத்துக்கு குடிபெயர்ந்தார். அப்போது இஸ்ரேல் என்ற நாடு இருக்கவில்லை.

இவரது சுயசரிதையை எழுதிய Pnina Lahav, இவர் பிரதமராக தேர்வு செய்யப்பட்ட போது, சில நாட்கள் நித்திரையின்றியிருந்தாக குறிப்பிடுகின்றார். சிகரெட்டை புகைத்துத் தள்ளியதாகவும் பல கோப்பைகள் கோப்பியை அருந்தியதாகவும் மேலும் தெரிவிக்கின்றார். தனது பிள்ளைகளுடன் நீண்ட நேரம் கலந்தாலோசித்த பின்னரே பதவியேற்றதாகவும் The Only Woman in the Room: Golda Meir and Her Path to Power நூலில் குறிப்பிடுகின்றார். 1969 பெப்பிரவரி மாதம் அப்போதைய இஸ்ரேல் பிரதமர் Levi Eshkol இறந்ததைத் தொடர்ந்து இஸ்ரேலிய தொழிற்கட்சியின் மத்திய குழு கோல்டாவை பிரதமராக தெரிவு செய்கின்றது. இவர் 1948-ல் மொஸ்கோவிற்கான அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் இவர் தொழில் அமைச்சராக ஏழு ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

கோல்டா மெயரின் வாழ்வின் முக்கிய காலகட்டமான யோம் கிபூர் போர் காலப்பகுதியை (19 நாட்கள்) மையப்படுத்தி எடுக்கப்பட்ட திரைப்படம் கோல்டா (Golda) 2023 ஓகஸ்ட் 25-இல் இத்திரைப்படம் திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. திரைப்படம் வெளியாகி சரியாக 43 நாட்களில் ஒக்ரோபர் ஏழு போர் ஆரம்பமானது. இது தற்செயலானதாக இருக்கலாம்.

இயக்குனர் பல காட்சிகளை தலைக்கு மேலாக அல்லது உயரத்திலிருந்து பிரதமர் அலுவலக அறையை படமாக்கியுள்ளார். தட்டச்சுக் கருவியின் சத்தத்தின் பின்னணியில் அலுவலக மேசையில் சிகரெட் புகைத்த அடித்துண்டுகள் நிரம்பிவழிந்த கோப்பைகளைக் காணலாம். அடிக்கடி சிகரெட் பற்ற வைக்கும் 'லைற்றர்' கருவியின் சத்தம் கேட்கும். இஸ்ரேலிய உளவுப் பிரிவினர் ஏதோ நடைபெறப்போகின்றது என எதிர்வு கூர்கின்றனர். இதனைத் தொடர்ந்தே பிரதமரின் அலுவலகம் பரபரப்பாக இயங்குகின்றது. திரைப்படம் பெருமளவு அலுவலகக் காட்சிகளாகவே உள்ளது. போர்க் களத்திலிருந்து கிடைக்கும் ஒலி, ஒளிக் காட்சிகளையும் கேட்கலாம், காணலாம். போர் நடைபெறும் களக்காட்சிகள் தவிர்க்கப்பட்டுள்ளது. மாறாக பிரதமரின் அலுவலகம், போர் அலுவலகம் போன்றன கிடைக்கும் செய்திகளைக் கொண்டு எவ்வாறு முடிவுகளை எடுத்தன என்பதனையே படம் காட்டியுள்ளது.

திரைப்படத்தை இயக்கியிருப்பவர் இஸ்ரேலிய இயக்குனரான Guy Nattiv. இப் படம் ஓர் அமெரிக்க-பிரித்தானிய கூட்டுத் தயாரிப்பாகும். இங்கிலாந்தைச் சேர்ந்த நிக்லஸ் மார்ட்டின் திரைக்கதை அமைத்துள்ளார். கோல்டாவாக நடித்த Helen Mirren-க்கு 78 வயது. படத்தில் 75 வயது கோல்டா மெயராக

நடித்துள்ளார். ஹெலன் மிரனும் கோல்டா மெயரைப் போல் தொடர்ச்சியாக சிகரெட் புகைபிடிப்பவர். ஆனால் ஹெலன் மிரன் யூதரல்லாதவர். தன்னை இயக்குநர் தேர்வு செய்த போதே இதனைக் கூறியதாக குறிப்பிட்டுள்ளார். யூத ஊடகங்கள், இஸ்ரேலிய பத்திரிகைகள் கோல்டா மெயராக யூதரல்லாதவர் நடித்தமைக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

ஹெலன் மிரன் ஏற்கனவே Woman in Gold , The Debt ஆகிய படங்களில் யூதப் பெண்ணாக நடித்துள்ளார். இவர் The Queen  படத்தில் எலிசபெத் மகாராணியாக நடித்துள்ளார். அதற்காக ஒஸ்காரின் சிறந்த நடிகை விருதையும் பெற்றுள்ளார். இதனைத் தவிர ஒரு தடவை ஒஸ்காரின் சிறந்த நடிகைக்கும் இரு தடவைகள் சிறந்த துணை நடிகைக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். (Nominated). கோல்டாவாக நடித்த




மைக்கும் இவருக்கு ஒஸ்கார் தேர்வுப் பட்டியலில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஹெலன் மிரன் மிகச் சிறப்பாக நடித்திருந்தும் ஹெலன் மிரனை கோல்டா மெயராக மாற்றிய ஒப்பனைக் கலைஞரே ஒஸ்காரின் தேர்வுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். இதற்கு முன்னால் கோல்டா மெயராக Ingrid Bergman 1982-ல் வெளியான A Woman Called Golda தொலைக்காட்சித் திரைப்படத்தில் நடித்துள்ளார்.

Guy Nattiv கோல்டா படத்தினூடாக கோல்டா மெயரை ஒரு சிறந்த போராளியாகவும் நாட்டைக் காக்க துணிச்சலாக போராடுபவராகவும் காட்ட முற்பட்டுள்ளார். இஸ்ரேலின் பிரதமராக பதவி வகித்தவர்களுள் இவரே மிக மோசமானவர் என்ற கருத்து இஸ்ரேலிய மக்களிடமுண்டு. 1972 மியூனிச் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இதுவும் இவரது காலத்திலேயே நடைபெற்றது. கொலையாளிகளை கொலை செய்ய, நேரடியாக தனக்குக் கீழே ‘எக்ஸ்’ என்ற தனி உளவுப் படை அமைக்கப்பட்டது. ஒரு சிலரைக் கொன்றனர். எனினும் இதுவும் முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

திரைப்படம் போரினூடாக இவரை ஒரு சிறந்த தலைவராக நிறுவமுற்பட்டது. பல காட்சிகளில் இவர் பதட்டமாக காணப்பட்டார். உணர்வுபூர்வமாகவே செயற்பட்டார். சிறந்த சிந்தனைவாதியாகவோ, அல்லது திட்டமிட்டு செயல்படுபவராகவோ வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறு அவர் இல்லை என்பதும் உண்மை.

யோம் கிபூர் படம் போர் அழிவுகள் பற்றிய விசாரணையுடன் ஆரம்பமாகின்றது. இவர் விசாரிக்கப்படுகின்றார்.

இவர் பாலஸ்தீனியர்களையும் பாலஸ்தீனத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியொன்றுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ’It was not as though there was a Palestinian people in Palestine considering itself as a Palestinian people and we came and threw them out and took their country away from them. They did not exist’

1970-ல் பாலஸ்தீனிய கிராமமான Aqraba மீது பயிர்களை நாசப்படுத்தும் மருந்துகளை பரவவிட்டார். இதன் மூலம் அங்கிருந்த பாலஸ்தீனியர்களை வெளியேற்றி அக்கிராமத்தில் யூத குடியிருப்புக்களை ஏற்படுத்தினார். பாலஸ்தீனியர்களை அழிக்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தவர் கோல்டா மேயர். இன்று இவரை இஸ்ரேலே மறந்து விட்டது. இவரை மீள ஒரு சிறந்த தலைவராக வெளிப்படுத்த இயக்குனர் எடுத்த முயற்சியும் முறையாக பதிவாக்கப்படவில்லை.

The Agranat Commission விசாரணை முடிவுகள் கோல்டா மெயரின் அரசுக்கு சாதாகமாக அமையவில்லை. பல முக்கிய அமைச்சர்களும், உயர் அரச அதிகாரிகளும் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்தனர். தற்போதைய இஸ்ரேலிய பிரதமர் தனது சுயசரிதையில் கோல்டா மெயரின் கவலையீனமே யோம் கிபூர் போரின் அழிவுகளுக்கு காரணம் என குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் அவருக்கு எதிராகவும் ‘ஐப்பசி ஏழு’ தாக்குதல்களின் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதி Shimon Agranat கோல்டா மெயரில் தவறுகள் இல்லை என்று கூறிய போதும், அவரது அமைச்சர்களின் கவலையீனத்தையும் தவறுகளையும் நீதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். 1974 ஏப்ரல் மாதம் 'beyond my strength to continue carrying this burden' எனக் கூறி தனது பதவியை கோல்டா மேயர் இராஜினாமாச் செய்தார்.

இஸ்ரேலியர்களைப் பொறுத்தவரை இவர் இஸ்ரேலின் வரலாற்றில் மிக மோசமான பிரதமர். பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை, பாலஸ்தீனியர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையில் மற்றொரு பரிமாணத்தை இவரே ஆரம்பித்துவைத்தவர். இயக்குனரைப் பொறுத்தவரை இவர் ஒரு சாதனைப் பிரதமர். அதனை திரையில் இயக்குனரால் வெளிப்படுத்த முடியவில்லை. வரலாறு அவ்வாறு உள்ளது. இப் படம் ஒரு போர்த் திரைப்படமாகவும் இல்லை. ஒரு சுய வரலாறாகவும் இல்லை.



rathan@thaiveedu.com


Lower rates.
Exceptional service.
Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.
Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.
Senthooran Punithavel
Phone: 416-396-0707
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca
We've Moved
Our New Address
10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3
குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்
வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்
வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்
உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்
24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்
Home Auto Life Investments
Group Business Farm Travel
the co-operators
A Better Place For You

## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# எட்டியந்தோட்டை எம். கருணாகரனின் ‘அவமானப்பட்டவனின் இரவு’

### மல்லியப்புசந்தி திலகர்

கடந்த அத்தியாயத்தில் கண்டி, மாத்தளை மாவட்ட கவி ஞர்களின் படைப்புகள் குறித்து ஆராய்ந்தது போலவே இந்த அத்தியாயம் கோகாலை மாவட்டத்திலிருந்து வெளிவந்துள்ள மலையகக் கவிதைத் தொகுதியான எட்டியந்தொட்டை எம். கரு ணாகரனின் ‘அவமானப்பட்டவனின் இரவு’ நூல் குறித்து ஆராய்கிறது. இதற்கு முன்னரும் இந்தத் தொடர் கட்டுரை யில் இந்த நூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதும் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய முனைகிறது. மலையகம் என்றால் நுவரெலியாவை மையங்கொள்ளும் பார்வைகளில் வேறுபட்டு அதற்கு வெளியே ஏனைய மலையக மாவட்டங்களில் வெளி வரும் படைப்புகளில் மலையகம் எவ்வாறு பிரதிபலிக்கின்றது என ஆராய்வதும் அவசியமாகும்.

எட்டியந்தொட்டை எம். கருணாகரன் கோகலை மாவட்டம் எட் டியாந்தொட்டை எனும் பிரதேசத்தில் அமைந்த கந்தலோயா எனும் பாடசாலையின் அதிபர். தனியே பாடவிதானங்களுக் குள் மாத்திரமல்லாமல் இணைப் பாடவிதானங்களில் அதி கம் கவனம் செலுத்தி பாடசாலையைச் சமூகத்தோடு இணைத்து முன்கொண்டு செல்வதில் முற்போக்கான பல அம்சங்களை நடத்திக் காட்டிக்கொண்டு இருப்பவர். இந்த நாட்களில் இவ்வாறு அறியப்படும் ஒரு முன்மாதிரிப் பாட சாலை அதிபர் சுமார் 12 வருடங்களுக்கு முதல் எழுதி வெளி யிட்ட கவிதை நூலே ‘அவமானப்பட்டவனின் இரவு’.

‘மிகவும் கொடுரமாக அடக்கியொடுக்கப்பட்ட ஒரு சமூகத்தி லிருந்துகொண்டு எதிர்காலத்தைப் பற்றி நினைத்திடுகையில் அச்சமாகவே தென்படுகிறது. அப்படியென்றால் என்ன விடு தலை? இன்னும் எத்தனை காலம் இந்த அடிமை வாழ்க்கை? என்பதையெல்லாம் எண்ணும்போது யாருமற்ற ஒரு வெட்ட வெளியில் நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கத்தி யழ வேண்டும் போலிருக்கிறது. இருப்பதற்கும் இல்லாததற் கும் இடையிலிருந்துகொண்டுதான் இப்படியெல்லாம் சிந்திக் கிறோமா? என்று வேறு எண்ணத் தோன்றுகிறது’ எனத் தனது ஆதங்கங்களைத் தன்னுரையில் குறிப்பிட்டவாறே கவிதை களை முன்வைத்துள்ளார். எட்டியந்தொட்டை எம். கருணாக ரன். தேசத்தாய் எனும் தலைப்பில் அவர் எழுதியுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.

***‘கறைபடிந்த கரங்கள்***
***வெடிப்புக்குள்ளான விரல்கள்***
***கூடை சுமை சுமந்து***
***பள்ளம் படிந்த சிரசு***
***முகங்களில் சுருக்கம்***
***முதுகில் கூன்***
***இது***
***முதுமையின் அடையாளமில்லை***
***முன்னது வறுமை***
***பின்னது சுமை***
***வார்த்தைகள் மரணிக்கப்பட்டதால்***
***மழுங்கடிக்கப்பட்ட வாழ்க்கை***
***புயல் மழையிலும்***
***இடி மின்னலிலும் வரும்***
***அனர்த்தங்களுக்கு அஞ்சா இதயம்***
***மரண பயமுற்று***
***களமிறங்கும் போராளிக்கு***
***ஒப்பானது.***
***கணவன் மட்டுமல்ல***
***கங்காணியும் களவாட எத்தனிக்கும்***
***கற்பு!***
***குழந்தையை இறக்கிவிட்டு***
***கூடையைச் சுமக்கும்***
***நீதான்***
***நிஜமான***
***இந்தத் தேசத்தாய்.***
***தேசம் அணைக்கவில்லை***
***அங்கீகரிக்கவில்லை***
***ஆயினும்...***
***நேசம் கொண்ட தேசத்துக்காக***
***தேயிலை பறித்து***
***தேய்ந்த நிலவாகி***
***தேகத்தைக் கடுமையாக்கி***
***தேயிலைக்கே உரமாகிப் போனவளே!***
***நாளை உன் தியாகம்***
***உலகறியும் பட்சத்தில்***
***உன் தியாகமே***
***உன்னதம் பெறும்***
***அகிலமே ஆச்சரித்திடும்’***

கிழக்கிலங்கையின் பெண் கவிஞர் அனார் தனது அணிந்து ரையில் இவ்வாறு எழுதுகிறார்:

கிழக்கிலங்கைக் கவிதை இலக்கியத்தின் பாரம்பரிய வரலாற் றுக்கு ஒரு தனித்துவம் உள்ளது என்றால்... வடக்குத் தமிழ்க் கவிதை இலக்கியத்துக்கு இன்னொரு வரலாற்றுப் புலமும் தனித்துவமும் உள்ளது. அதேபோல மலையகக் கவிதைக ளுக்கென்று வேறொரு தனித்துவம் இருக்கின்றது. அவற்றுக் குரிய வரலாற்றுப் பதிவுகள் முற்றிலும் பிறவற்றை விட வித்தி யாசமானவை.

'பூச்சி, மிருகக்காட்சி சாலை' ஆகிய கவிதைகளைப் படிமங் கள் ஊடாக நல்ல முறையில் வெளிப்படுத்தியுள்ளார் எனக் கருணாகரனின் கவிதைகளில் காணப்படும் படிமச் சிறப்புகள் பற் ஸ்ரீறியும் குறிப்பிடுகிறார். 'பூச்சி' எனும் தலைப்பில் கரு ணாகரன் கவிதை இவ்வாறு அமைகிறது:

*'சவுந்தர்யமான தன் சிறகுதனை*
*அடித்த வண்ணம்*
*பறந்து வருகிறது*
*ஒரு*
*பட்டாம் பூச்சி*

*தான் வரும் வழியில்*
*சிலந்தியொன்று*
*வலை விரித்துக் காத்து நிற்பதைக்*
*கண்டிடாத பூச்சி*
*பறந்து வருகிறது.*

*சிலந்தி வலையில்*
*சிக்குண்ட பூச்சி*
*சிலமணி நேரத்துக்குள்*
*உருக்குலைந்து உருவமிழந்து*
*உயிரற்ற ஜடமாகிப்போனது.*

*இந்தப் பூச்சியைப் போல்*
*பின்வந்த பூச்சிகளனைத்தும்*
*சிலந்தி வலையில் சிக்கி*
*இறந்தேதான் போயின'*

இந்தப் படிமங்கள் ஊடாகக் கருணாகரன் முன்வைக்கும் மலையக அரசியல் பார்வை கூர்ந்து அவதானிக்கத்தக்கது.

'இந்த வெட்கம் எங்களுடையதல்ல' எனும் தலைப்பிலமைந்த கவிதை இவ்வாறு நேரடியாகவே அரசியல் விமர்சனத்தை முன்வைக்கிறது.

*'எல்லைகள் தாண்டிக்கேட்டிடும் வண்ணம்*
*உள்ளத்தின் உட்கிடங்கிலுள்ள வலிதனைச்*
*சுத்திடப் பேசுகிறேன்*
*மனிதர்களிடம் மறைந்து போன*
*மனிதம் மீது மாசு சொல்லப் போகிறேன்.*

*வகைக் கூறவேண்டியவர்களின்*
*மனசாட்சியில் ஊடுருவி*
*ஆழமாகவும் நேர்மையாகவும்*
*வினா தொடுக்கப் போகிறேன்.*

*வரலாற்றிற்கு எடுத்துச்சொல்லப் போகிறேன்*
*எழுத்தில் எழுதிக் கொடுக்கப் போகிறேன்*
*வரலாறு மறந்திடும் என்பதற்காகவல்ல*
*வரலாற்றில் மறைக்கப்பட்டிடும் என்பதற்காக*
*வெட்கம் விட்டு வேதனையுடன்*
*சொல்லிடப் போகிறேன்*
*இன்னும் எம்மில் பலர்*
*திறந்த வெளியில்தான் மலம் கழிக்கின்றனர்*
*தேசமே நீ வெட்கித்து நில்!*
*சமூகங்கள் அனைத்தும் சமமெனக் கூறும்*
*உன்னுடைய*
*சட்டவாட்சிக் கொள்கையைத் தயவு செய்து*




*சவக்குழியில் போட்டுப் புதைத்து விடு!*
*ஸ்ரீலங்கா ஜனநாயகச் சோஷலிசக் குடியரசே!*
*விடுதலை நிலமென இம் மண்*
*விதந்துரைக்கப்பட்ட நிமிஷம்*
*நின் நிலத்தின் நாங்களும் இருந்திடத்தானே செய்தோம்*
*எம்மைச் சூழவுள்ள அனைத்துச் சமூகத்தினரும்*
*உறுதியோடு உயர்ந்து நிற்க*
*உனது ஆட்புல எல்லைக்குட்பட்ட மக்களிடையே*
*எம்மால் மட்டும் எப்படி....*
*அதிக பட்சம்*
*ஆரம்ப*
*அடிப்படைக் கட்டுமானத்தைக் கூட*
*அத்திவாரமிட முடியாது போனது?'*

தலைப்புக் கவிதையான 'அவமானப்பட்டவனின் இரவு' கவிதை பின்வருமாறு அமைகிறது.

***'நீட்சியான இந்த ஈன வாழ்க்கையின்***
***முன்பொழுது நிகழ்வுகளை மீட்கிறேன்***
***அப்பட்டமான உரிமை மீறல்கள்!***
***என்றாவது எதிர்த்துப் பேசியதாகவும் தெரியவில்லை!***
***மக்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றார்கள்!***
***நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்!***
***சுரண்டலுக்கு ஆட்படுகிறார்கள்!***
***நீடிய நித்திரையிலிருந்து***
***கொஞ்சமேனும் கிளர்ந்தெழ என் மக்கள்***
***தொடர்ந்தும்***
***வலுவற்ற கட்டமைப்புகளை ஈர்த்துக்கொண்டு***
***ஆர்ப்பரிக்கிறார்கள்***
***மன்றாடல்கள், தாழ்வின் உச்சம்***
***இங்கிருந்தே ஊற்றெடுக்கின்றன***
***இன்னும் வரம் வலி சுமக்கிறது மனசு!***
***அநீதிகள் ஒவ்வொன்றையும்***
***சகித்துக்கொள்ள எவ்விதம் பழக்கப்பட்டோம்?***
***என்றைக்கும் இல்லாதவாறு துயருறுகிறது இரவு!***
***எல்லாவற்றையும் விட***
***துயரமாக இருக்கிறது மனசு!***
***ஒரு வாய்ப்புக்காக வாசலில் குந்தியிருப்பவன் நான்***
***இந்த நிலா கூட வேண்டாம்***
***தனி ஒருவனாகவே செல்கிறேன்***
***பிராயச்சித்தம் வெறும் பிரமையாக***
***படுத்த பாய்மீது மிரண்டு தரிசனம் கொள்கிறேன்***
***இந்த நீண்ட விரதம் தழைத்து வளரும் விருட்சமாக***
***மீள்பார்வை ஒவ்வொன்றினதும்***
***வன்ம ஜீவியத்து மனச்சிதறல்களின் விம்பங்கள்***
***ஸ்பரிசம் செய்து காயப்படுத்துகின்றன.'***

மேற்படி வரிகளில் கவித்துவத்தைவிட ஆதங்கமே நிறைந்து நிற்கிறது. இதனை அவதானிக்கும் கவிஞர் அனார் பின்வருமாறு தனது அணிந்துரையில் குறிப்பிடுகின்றார்.

'மலையக நடைமுறை அரசியல் பார்வைகள், மலையகத்தைப் பற்றிப் பத்திரிகைக் கண்ணோட்டங்கள் ஏற்கனவே எழுதப்பட்ட வழமையான எழுத்து வடிவங்கள்... இவற்றிலிருந்து விடுபட்டு புதுமையான கனவு மொழியுடன் புத்தம்புது அர்த்தங்களுடன் தங்கள் ஆற்றலை வளர்த்துக்கொள்ளலாம். அதாவது எங்களது அகக் கண்களைத் திறந்தவர்களாக மலையகப் பெண்களின் கூடைகளுக்குப் பின்னால் செல்ல வேண்டும். அவர்களது குழந்தைகளை விடும் பிள்ளை மடுவங்களுக்கருகே நின்று கனவித்துப் பார்க்க வெண்டும். கல்வி பயிலச்செல்லும் மாணவர்களின் வகுப்பறைகளில் நுழைய வேண்டும். வேலை செய்யும் பெண்கள் அங்கு கையாளப்படும் விதங்களை அவதானிக்க வேண்டும். ஆண்களின் பின்னும் பெண்களின் பின்னும் பிரிந்து சென்று வாழ்வின் கசகசப்பைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்விதமாகப் பார்க்கத் தவறிய விடயங்களை முன்வைப்பதும் ஏற்கனவே முன்வைத்த முறைமைகளிலிருந்து புதிய கோணங்களை இனங்கண்டு எழுத முற்படுவதும் வேறொரு கவிதைச் செழுமையைத் தரலாம். இவையெல்லாம் எதிர்கால மலையகக் கவிதைகளின் உக்கிரம் மாறாமல் வெளிப்படும்போது இலங்கைத் தமிழ்க் கவிதை எனும் இலக்கியம் இன்னும் மெருகும் கர்வமும் பெறுமானமும் கொண்டதாகி முழுமையடையும் என எதிர்பார்க்கிறேன்' எனக் குறிப்பிடுகிறார்.

கவிஞர் அனாரின் எதிர்பார்ப்பை நாம் ஆமோதிக்கவே வேண்டியிருக்கிறது. மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியை ஆய்வுக்குட்படுத்துகையில் சமகாலக் கவிதைப் போக்கில் கடந்த காலங்களில் இருந்ததை விட ஒரு செழுமைக் குறைவு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.



thilagar@thaiveedu.com



## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

# ‘அன்புள்ள ஆரியசிங்க...’

### – எஸ்.கே. விக்னேஸ்வரன் –



கடந்த ஆண்டு இலங்கைக்குப் பயணமாவதற்கு இரண்டொரு நாட்களுக்குமுன் நண்பர் ‘காலம்’ செல்வம் அவர்களது ‘ஊர்சுற்றும் வாகனக் கடையில்’ இந்த நூலை வாங்கிய போது, ஒரு சில மணிநேரத்துக்கான வாசிப்பாக இருக்கும் என்று தோன்றியதால், அதைப் பயணத்தின்போது எடுத்துச் செல்ல நினைத்திருந்தேன். ஆனால் அந்த நூலுக்குத் திரும்பவும் இலங்கைக்குச் செல்ல விருப்பமில்லையோ என்னவோ எனது பயணப்பையில் இடம்பிடிக்காமல் என்னை ஏமாற்றி விட்டது.

இலங்கையில் கவிஞரும் எழுத்தாளருமான நண்பர் கருணா-கரன் அவர்களுடன் இறுதி யுத்தம் நடந்த இடங்களைச் சுற்றிப் பார்க்கும் நோக்குடன் அலைந்து திரிந்த ஒரு நாளில் தற்செயலாக நூலின் ஆசிரியரும், அருட் தந்தையுமான அன்பு-ராசா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நூலின் ஆசிரியர் அவர்தான் என்று நண்பர் கருணாகரன் அறிமுகப்படுத்தியபோது, அவரது நூலை நான் இன்னமும் வாசித்திருக்கவில்லை என்று ஒருவகைக் குற்றவுணர்வுடன் குறிப்பிடவேண்டியதாகப் போய்விட்டது. மிகவும் துடிப்பான ஓர் இளைஞராகத் தோன்றிய அவர் இதுவரை, இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மதிப்புக்குரிய கலாநிதி சுனில் விஜெ-சிறிவர்த்தன அவர்கள் குறிப்பிட்டிருக்கும் தகவலின்படி, ஆங்கிலத்திலும் தமிழிலுமாக 22 நூல்களை எழுதியுள்ளார். இந்த நூல்களில் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட 10 நூல்களும் (தமிழில் ஐந்தும், சிங்களத்தில் ஐந்தும் அடங்கும்). சிறுவர்களுக்கான நூல்கள். ஆயினும், அவற்றில் எவற்றையும் நான் கேள்விப்பட்டிருக்கவோ வாசித்திருக்கவோ இல்லையென்பதைப் பெரும் கூச்சத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டியிருந்தது. வன்னிப் பிரதேசம் முழுவதும் ஓயாமல் அலைந்தபடி தனது ஆன்மீகப் பணிக்கு மேலாகச் சமூகச் செயற்பாட்டில் தீவிரமாக அவர் இயங்கிவருவதை நண்பர் கருணாகரன் மூலமாக அறிந்துகொண்டேன்.

நூல் வெளிவந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. நூல் எனக்குக் கிடைத்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. ஆயினும் இவ்வளவு நாட்கள் கழித்தும் இந்த நூல் பற்றி எழுதுவது அவசியம் என்றே தோன்றுகிறது. உண்மையில் 2022 மார்ச் மாதத்தில் நடந்த அறகலயப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட நூல் இது என்பது அதற்கான காரணமாக நிச்சயம் இல்லை. அதைவிட முக்கியமாக அது பேசிய விடயங்கள் தொடர்பாக இப்போதாவது பேசவேண்டும் என்ற எண்ணம் தான் காரணம்.

கடந்த 2022 மார்ச் மாதம், நாடு முழுவதையும் ஏன் அகில உலகையுமே திரும்பிப் பார்க்கவைக்கும் விதத்தில் வெடித்த, காலிமுகத்திடலில் நடந்த ‘அரகலய’ போராட்டம், இலங்கையின் வரலாரற்றில் நடந்த முக்கியமான அரசியல் நிகழ்வுகளில் ஒன்று மட்டுமல்ல, நாட்டின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை, வேறு வழியின்றி நாட்டைவிட்டு ஓடவும், அன்றைய அரசாங்கத்தின் முக்கியமான தலைவர்களைப் பதவி விலகவும் வைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு. சரியாகச் சொல்வதானால் 124 நாட்களாக நடந்த இந்தப் போராட்டம், அதன் ஆரம்பகட்டச் சுலோகமான ‘கோத்தா கோ கம’ (கோத்தா ஊருக்குப் போ) என்ற வலுவான கோரிக்கையை வென்றெடுப்பதில் நம்பமுடியாத பெரு வெற்றியைச் சாதித்தது. ஆயினும் அதன் அடுத்த கட்டமாகப், புதிய ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த ரணில் விக்கிரம சிங்கவையும் அவருக்கு வழங்கப்படும் நையாண்டிப் பட்டப்பெயரான ‘மைனா’ என்ற பெயரைக் குறித்த ‘நைனா கோ கம’ என்ற சுலோகத்துடன் தொடங்கப்பட்ட போராட்டம், புதிய ஜனாதிபதியால் கடுமையாக அடக்கப்பட்டதுடன் போராட்டக்காரர்களைக் காலிமுகத் திடலை விட்டு பலவந்தமாக வெளியேற்றியது. நடந்த அறகலயப் போராட்டத்துடன் இணைந்திருந்த மக்கள் சக்தியின் பல்வேறு பிரிவினர் மத்தியில், புதிய ஜனாதிபதிக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம் என்ற கருத்து நிலவியதும் இவ்வடக்குமுறை வெற்றிபெறுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

நடந்துமுடிந்த இந்தப் போராட்டத்தில் நாடு முழுவதிலும் இருந்து பெருமளவான இளைஞர்கள் கொழும்பு நோக்கி வந்து கலந்து கொண்டிருந்தபோதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியிலிருந்து - சரியாகச் சொல்வதானால் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து - இந்தப் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் விரல்விட்டு எண்ணக்கூ

டிய அளவில் மிகச்சிறிய அளவினரே. இலங்கை அரசிற்கெதி ரான தமது நீண்ட போராட்டத்தில் பேரழிவுகளைச் சந்தித்த அவர்களுக்கு, தாம் தமிழர்கள் என்பதற்காகவே பிரத்தியேக மாக நடத்தப்பட்ட அடக்குமுறைகளும், அவற்றால் அனுப வித்த, அனுபவிக்கின்ற வலிகளும் கொஞ்ச நஞ்சமல்ல என்ப தால், இந்தப் போராட்டத்தில் பங்கேற்பது இரண்டு விதத்தில் ஆபத்தானது என்ற கருத்துப் போக்கு அவர்களிடம் நிலவி யது. ஒன்று இலங்கை அரசாங்கங்களின் வரலாறே தமிழ் மக் களது அனைத்து உரிமைப் போராட்டங்களையும், பயங்கர வாதமாக மட்டுமே குறுக்கிச் சித்தரிப்பதாக இருந்து வருவ தால், போராட்டத்தில் தமிழ்ப் பயங்கரவாதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, இப்போராட்டத்தைக் கூடத் திசைதிருப்பும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் இறங்கிவிடுவது மட்டுமல்லாமல், தமிழ் இளைஞர்களை வகைதொகையின்றிச் சிறையில் அடைக்கவும் கூடும் என்ற நியாயமான சந்தேகம் இருந்தது. கூடவே, இப்போராட்டம், அப்போதைய அரசாங்கத்தின் மோசமான ஊழல் நிறைந்த



நிர்வாகம் காரணமாக ஏற்பட்ட அதிருப்தி காரணமாக நடந் ததே ஒழிய, பலதசாப்தங்களாக நடந்த தமிழ் மக்களது உரி மைக்கோரிக்கைகள் பற்றியோ, அவர்களையும் இணைக்கும் நோக்குடன் முழு நாட்டு மக்களதும் அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்கான கோரிக்கைகளையும் இணைத்து முன் வைத்த ஒன்றாகவோ நடத்தப்படவில்லை அல்லது அத்த கைய முழுமையான வேலைத் திட்டத்துடன் இப்போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. அதாவது, பிரதானமான சுலோக மாக இருந்த ‘கோத்தா கோ கோம்’ என்பது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை பற் றிய, திட்டங்களின் அவசியம் போராட்டக்காரர்களால் உண ரப்பட்டது. தமிழ் மக்களின் பங்கேற்புக் குறைவுக்கான கார ணங்களை உணர்ந்துகொண்ட அல்லது ஓரளவுக்காவது புரிந் துகொண்ட போராட்ட அணியிலிருந்த இளைஞர்கள் மத்தி யில் தமிழ் மக்களது, அரசியற் கோரிக்கைகள் சம்பந்தமான புரிதல் ஓரளவுக்கு வளரத் தொடங்கியிருந்தது உண்மையே. ஆயினும், ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்காகத் திரண்ட மக்கள் அதன் பின்னான அடுத்தகட்டப் போராட்ட முனைப்புக்குத் தயாராக இருக்கவில்லை, இதனால் தான் முன்வைக்கப்பட்ட ‘மைனா கோ ஹோம்’-க்கான ஆதரவும் அவ்வளவுக்கு இருக்கவில்லை என்பதுடன் அது தோல்வி யைத் தழுவும் நிலைக்கு வரக் காரணமாகவும் இருந்தது.

ஒரு போராட்டத்தின் இறுதி இலக்கு எது என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டு, அதை நோக்கிய படிப்படியான அடைவு கள் எவையாக அமையவேண்டும் என்பது குறித்த, உப திட் டங்கள் வகுக்கப்படாது ஆரம்பிக்கும் எந்தச் செயலும், பாதி வழியில் முறிவதன்றி, முழுமையடைவது சாத்தியமல்ல என் பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட உண்மை. இந்தப் போராட் டத்திலும் அதுவே நடந்தது. கோதா கோ ஹோம்-க்காகத் திரண்ட மக்கள், பின்னர் மைனா கோ ஹோம்-க்குத் தயாராக இருக்கவில்லை. அதனால் தான் இராணுவ அடக்குமுறையை ஏவியதும் அது உடனடியாகவே நசுக்கப்பட்டு விட்டது. உண் மையில் இறுதி இலக்குப் பற்றிய தெளிவான திட்டத்துடன், அதை நோக்கிய நடவடிக்கைகளில் மிக அவசரமானதும் உட னடியானதுமான கோரிக்கை இது என்ற முடிவுடன் நடத்தப்பட் டிருக்குமானால், ரணிலும் கூட ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்பு இருந்திருக்காது. ஆனால், அத்தகைய ஒரு திட்ட மும், செயற்பாடும் நாடு முழுவதற்குமான அறைகூவலாக அமைந்திருக்க வேண்டும். நாடு முழுவதும் கிளர்ந்தெழும் போது இராணுவப் பலம் அதை அடக்கப் போதுமானதாக இருக்க முடியாது. இது வரலாற்றில் நடந்த ஒரு பெரிய தவ றல்ல. ஆனால், வரலாற்றை உருவாக்கும் அரசியல் நடவடிக் கையில் ஒரு பிரதானமான படிப்பினையைத் தந்த அரசியல் அனுபவம். இத்தகைய அனுபவம் போராட்டத்தின் வழிமுறை பற்றிய அடுத்தகட்டச் சிந்தனைக்கு இட்டுச்செல்லக் கூடியது. இட்டுச்செல்லும்.

அத்தகைய சிந்தனைக்கான ஒரு முக்கியமான பங்களிப்பைப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மத்தியில் எடுத்துச் செல் கின்ற ஒரு முக்கியமான பங்களிப்பாக இந்த நூலைக் கொள் ளமுடியும். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பல அர்ப்பணிப் புள்ள இளந் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தமக்குச் சரிவர அறிமுகப்படுத்தப்படாத அல்லது தெரிய வந்திருக்க முடி யாத, அவர்களது போராட்டத்தின் இறுதி வெற்றிக்கு, அவசிய மான அடிப்படைகளில் ஒன்றான இன்னொரு முக்கியமான வரலாற்றை, அதாவது வடக்குக் கிழக்கு மக்களது நிலை பற் றிய முக்கியமான பக்கங்களை அறிந்துகொள்ள அவசிய மான பணியைச் செய்யும் ஒரு முக்கியமான நூல் இது. இந்த நூல், வெறுமனே தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும், சிங்க ளத்திலும் ஒரே நேரத்தில் வெளிவந்திருப்பதால் இந்தப் பணியை மிகவும் பரவலாக எடுத்துச் செல்லகூடியதாக இருக் கும் என்று நம்புகிறேன்.

இந்த நூல் 2022 ஏப்ரல் 14-ம் திகதி முதல் ஜூன் 16-ம் திகதி வரையான, காலப்பகுதிக்குள், அப்போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவராகக் கற்பிதம் செய் யப்பட்ட ஆரியசிங்க என்ற ஒரு சிங்கள நண்பருக்கு எழுது வது போல எழுதப்பட்ட 30 கடிதங்களைக் கொண்ட நூல். இக் கடிதங்கள், அங்கு நடக்கும் போராட்டங்கள் தொடர்பான தனது ஆதரவை வெளிப்படுத்தும் அதே வேளை இலங்கைத் தமிழ் மக்களது நிலை பற்றியும், போராட்ட காலத்தில் குறிப் பாக இறுதி யுத்தகாலத்தில் தொடர்ச்சியாக அவர்கள் அனுப வித்த நெருக்கடிகள், அவலங்கள் என்பவற்றைத் தனது சொந்த அனுபவங்களோடு கலந்து விபரிக்கும் ஒரு முக்கிய

மான ஆவணமாக மட்டுமல்ல, வாசிப்பவர் மனதை அள்ளு கின்ற ஒரு நல்ல இலக்கியப் படைப்பாகவும் அமைகின்றன. இக்கடிதங்கள் மேலே குறிப்பிட்டுள்ள இப்போராட்டத்தின் வரலாற்று முக்கியத்தை உயர்த்திப் பிடிப்பதுடன், ஜனாதிபதியைப் பதவியிலிருந்து இறக்கிய அதன் சாதனையை சிலாகிக்கும் அதே வேளை, அதன் பலவீனம் என்ன என்ற புரிதலை அப்போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் மிக எளிமையான மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. இந் நூலுக்கு அணிந்துரை தந்துள்ள கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன அவர்கள், திரைப்படக் கலைஞரான தர்மசிறி பத்திராஜா அவர்களது 'In search of a road' என்ற திரைப்படத்தையும் இந்த நூலையும் ஒப்பிட்டு, அவை இரண்டும் செய்யும் பங்களிப்பு 'தந்திரமான போர் வெற்றி என்ற மரணப் பொறியிலிருந்து விடுதலையாகி, பொது இலங்கையர் என்ற நிலையை நோக்கிச் செல்ல சிங்கள மக்களுக்கு வழிகாட்டுவது ஆகும் என்று குறிப்பிடுகின்றார். உண்மையில் இலங்கை மக்கள் அனைவரும் தத்தம் இனங்களுக்குரிய தனித்துவத்தைப் பேணவும் பரஸ்பர அங்கீகாரத்துடன் இணைந்து வாழ்வதற்குத் தடையாக உள்ள விடயங்களை அடையாளங்கண்டு களைவதையும் நோக்கமாகக் கொண்டு பயணிப்பதுமே நிரந்தர அமைதியைத் தரமுடியும் என்று இந்த நூல் தெரிவிக்கும் அடிப்படையான விடயத்தைத் தனது விரிவான அணிந்துரையில் விளக்கியுள்ளார்.

எழுதப்பட்ட கடிதங்கள் ஒவ்வொன்றும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களது போராட்டம் தொடங்கப்பட்டதன் தவிர்க்கமுடியாமையை விளக்குவதுடன் நில்லாது, நாட்டின் அனைத்து மக்களதும் நலனுக்கு எதிராக இயங்கும் ஆளும் தரப்பின் திட்டமிட்ட வகையில் இனப்பிளவை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் பற்றி சிங்கள வாசகரும் புரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் அமைந்துள்ளன. அவர் ஆரியசிங்கவிடம் கேட்கிறார்: 'இந்நாடு உய்யவும் உயிர்பெறவும் வேண்டுமென்றால், மீண்டும் மீண்டும் சிறுபான்மையின மக்கள் தாக்கப்படுவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் இடம்பெற்று, தீர்வுகள் நீதியான முறையில் முன்வைக்கப்பட்டு, அவை முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செயற்படுத்தப் படாவிட்டால், நாட்டில் பற்றியெரியும் தீ மேலும் மேலும் கொழுந்துவிட்டெரிந்து முழு நாடும் அழிந்துபோவதைத் தவிர்க்க முடியாது போய்விடும். இக்கலவர பூமியைத் தானா எமது பிள்ளைகளுக்குப் பரிசளிக்கப் போகிறோம், ஆரியசிங்க? இக்கலவர பூமியில் இருந்துகொண்டு நமது பிள்ளைகள் நாளை என்ன செய்யப் போகிறார்கள்?. அவர்களுடைய காலத்தில் அவர்களும் இதைத் தொடர்வதற்கா நாம் வழி செய்து வருகிறோம்? இன்னும் எத்தனை தடவைகள் நமது நாட்டை நாமே எரித்துப் பாடத்தைப் படிக்கப் போகிறோம், ஆரியசிங்க? இதுவரை படிக்காத பாடத்தையா இனியும் எரித்துப் படிக்கப் போகிறோம்?'

ஆம், இனங்களுக்கிடையேயான உறவு சிறப்பாக அமைவதற்கான முக்கியமான அடிப்படை அம்சம் என்பது, ஒவ்வொரு இனத்தவரும் தமது சனத்தொகை அடிப்படையிலான உயர்வு தாழ்வுகள் எதுவும் இன்றி, மற்றறைய இனங்களின் பண்பாடு, கலாசாரம், மொழி, வாழ்விடம் ஆகிய வாழ்வியல் அம்சங்களை மதிக்கவும், அவற்றைப் பேண அவர்களுக்குள்ள உரிமையைக் கௌரவிக்கவும் கூடிய பண்பாட்டைக் கொண்டிருத்தலாகும். இலங்கையின் அரசியல் வாதிகள் நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையான அந்த அம்சத்தைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்குப் பதிலாக, இனவாத மதவாத அடிப்படையில் பல்வேறு வேறுபாடுகளைக் கற்பிப்பதன் மூலம் இனங்களுக்கிடையேயான முறுகலைத் தொடர்ச்சியாக, இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னான காலத்திலிருந்து, பேணிவந்திருக்கின்றனர். இதன் விளைவாக நாம் கண்டது அடுத்தடுத்து நடந்த இனக்கலவரங்களும் சொத்து அழிப்புகளுமின்றி வேறென்ன என்று கேட்கும் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்:


'எனவே ஆரியசிங்க, இதுவரைகாலமும் அரசியல்வாதிகளின் மாய வலைக்குள்ளே சிக்குண்டு, சின்னாபின்னமாகியது போல், இனிமேலும் நாங்களும் நீங்களும் இவர்களது வலைக்குள் சிக்கிச் சிதைந்து போகாமல்' சீரியஸ்'ஆகச் சிந்தித்து செயற்படவேண்டிய மிக அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பயன்செய்வது நம் கடமையல்லவா?

ஆசிரியர் தனது கடைசிக் கடிதத்தில் தான் இந்தக் கடிதங்களை எழுதியதற்கான காரணத்தை இப்படி விளக்குகிறார்:

'உண்மையில் ஆரியசிங்க, யாரையும் எந்தவகையிலும், மனத்தளவில் கூட நாம் உடைப்பதோ காயப்படுத்துவதோ இவற்றை எழுதுவதன் நோக்கமன்று. மாறாக, எங்கள் போர்க்கால வாழ்வியலையும் அனுபவங்களையும் எங்கள் அபிலாசைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் ஊடாக நமக்கிடையில் புரிந்துணர்வை வளர்த்தெடுத்து வலுப்படுத்தி விரும்பியோ விரும்பாமலோ, அறிந்தோ அறியாமலோ அரசியல்வாதிகளின் தூண்டுதலாலோ அவர்களின் தூண்டுதல் இல்லாமலோ கடந்த காலங்களில் நாம் நமக்கிடையில் கட்டியெழுப்பிய பகைமைச் சுவரை எடுத்தெறிந்து, புரிந்துணர்வை ஏற்படுத்தி, நமது நீண்டகாலப் பிணக்குகளுக்குத் தீர்வைக் காணலாம் என்பதே இக்கடிதங்களை எழுதுவதன் பின்னணியாகும்'.

ஆம், உண்மையில் இது அந்தவகையில் ஓர் அருமையான நூல் தான். இந்த நூல் ஒரே நேரத்தில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருத்தல் என்பது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுடன் கூடிய ஒரு திறந்த உரையாடலுக்கான வாய்ப்பை வழங்குகிறது. நூலுக்கு முன்னுரை எழுதிய நண்பர் கவிஞர் கருணாகரன் இந்த நூலிலுள்ள முப்பது கடிதங்களையும் பற்றிக் குறிப்பிடும்போது, இவை 'இலங்கைத் தீவுக்கான சமூக, வரலாற்று, வாழ்க்கை, அரசியற் பாடங்களை மிகச் செழிப்பாகப் பேசுகின்றன. அந்த வகையில் இது மிகச் சிறந்த அரசியல் எழுத்தாகும்' என்று குறிப்பிடுகிறார்.

ஆம் முக்கியமான, முன்னுதாரணமான ஒரு நூல்தான்; நாட்டின் மிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஓர் அரசுத் தலைவரைப் பதவியிலிருந்து இறக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுடன் உரையாடுகின்ற நூல் என்றவகையில் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூல் இது.



vickneaswaran.sk@thaiveedu.com



# உறைய முடியாக் காலம் : 50 ஆண்டுகால சேரனின் கவிதை வெளி

கருணாகரன்

எழுதப்படும் காலத்திலும் அதற்குப் பிறகான காலவெளியிலும் உயிர்கொண்டிருக்கும் எழுத்துக்கு ஒளி அதிகம். அந்த ஒளி, அந்த எழுத்தையும் அதை எழுதிய எழுத்தாளரையும் அல்லது கவிஞரையும் காலநீட்சியில் உயிர்ப்போடு வைத்து விடுகிறது. கம்பன், வள்ளுவர், கபிலர், ஔவையார், சேக்ஸ்பியர், ஷெல்லி, பாரதி, தாகூர், ரோல்ஸ்ரோய், தஸ்தாயெவ்ஸ்கி, செகோவ், புதுமைப்பித்தன், பாப்லோ நெருடா, லாங்ஸ்டன் க்யூஸ், பெய்ஸ் அஃமத் பெய்ஸ், மர்முட் தர்விஷ் எல்லோரும் இந்த வகையில் அமைந்தவர்களே. அவர்களுடைய எழுத்துகளும் அவ்வாறு அமையப்பெற்றவையே. சிந்தனையின் வீச்சும் ஆழ்மனதில் உணரும் சத்தியமும் அதைத் தயக்கமின்றி வெளிப்படுத்தும் துணிவும் இதற்கு ஆதாரமானவை. 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்று பாரதி கூறுவதும் இதுவே. இந்த அடிப்படையில்தான் சேரனுடைய கவிதைகள் கால நீட்சியில் அழியாத, அழிக்க முடியாத உயிர்ப்புடன் நீடிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. அதன் வழியே சேரனும்.

1970-ன் முற்பகுதியில் எழுதத் தொடங்கிய சேரன், 80-களின் முற்பகுதியில் தீவிர கவனத்தைப் பெற்றார். அதற்குக் காரணம், அன்றைய சமூகக் கொதிநிலையைச் சேரன் எழுதினார். 'இரண்டாவது சூரிய உதயம்', 'யமன்' இரண்டும் அந்தக் காலத்தின் வெடிப்பு. இதனால் அப்போது எழுதிக்கொண்டிருந்த கவிஞர்களிடத்தில் அவர் முன்னிலையில் இருந்தார். தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக அவருடைய அந்த முன்னிலைப் பாத்திரத்தின் ஒளி மங்காமல் உள்ளது. காரணம், இன்னும் அவர் காலத்தின் கொதிப்பைப் பிரதிபலிப்பவராக,

அதில் இடையீடு செய்கின்றவராக இருப்பதேயாகும். அதற்குச் சிறந்த ஆதாரம், சேரனின் அண்மைய (டிசம்பர், 2023) தொகுதியான ‘காஞ்சி’.

102 கவிதைகளைக் கொண்டுள்ள காஞ்சி, தீராதது, இந்தத் தெருவில் எப்போதும், படையாள் பாடல், கடிதங்கள், கிளிப் பாட்டு, பழங்கள் என ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்தக் கவிதைகளும் வரலாற்றையும் வாழ்வையும் சமகாலப் பிழவையும் உலகின் அரசியற் சதுரங்க ஆட்டத்தையும் அகமும் புறமுமாக நின்றொலிக்கின்றன. சமகாலக் கவிதைப் பரப்பில் மொழி, மொழிதல் முறைமை, வடிவம், பொருள் போன்றவற்றில் தனக்குரிய முன்னிலையைப் பெறுவதே இதனுடைய சிறப்பு. காலத்தில் தன்னை வைப்பதும் தன்னுள் காலத்தை உள்ளெடுத்தொலிப்பதும் சேரனுடைய பண்பாகும் என்பதாலேயே சேரனுடைய இடம் தொடர்ந்தும் ஒளி கொண்டுள்ளது.

சேரனுடைய முதற்தொகுதியான ‘இரண்டாவது சூரியோதயம்’ ஈழத்துக்கப்பால் தமிழ்நாட்டிலும் பெருங்கவனிப்பை உண்டாக்கியது. தொடர்ந்து ‘யமன்’. இரண்டும் இலங்கைத்தீவில் கொதிப்படைந்திருந்த இன ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை என இரண்டுக்கும் தீவிர எதிர்க்குரலைக் கொண்டிருந்தன. இதனால்தான் ‘கணிப்புக்குரிய ஒரு கவிஞர் வந்து சேர்ந்துள்ளார்’ என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி சேரனைப் பற்றி எழுதினார். ஆக, சேரன் அந்த முதல்நிலைக்கு வந்தது, அன்றிருந்த சமூகப், பண்பாட்டு, அரசியல் வெளியை அவருடைய கவிதைகள் கூருடன் ஊடறுத்ததனாலேயே. அதற்கான மொழியையும் வெளிப்பாட்டு முறையையும் துணிவையும் சேரன் கண்டடைந்தார். அந்தக் கண்டடைதலானது, அன்று தமிழிலக்கியத்திலும் ஈழத் தமிழ்ச் சமூக, அரசியற் பண்பாட்டு வெளியிலும் உருவாகிக் கொண்டிருந்த கருத்துநிலை, இலக்கிய அணுகுமுறை, வெளிப்பாட்டு முறை மாற்றங்களைச் சேரன் கூர்மையாக உள்வாங்கியதனாலும் வெளிப்படுத்தியதனாலும் அமைந்தது. ஒரு முன்னிலைப் படைப்பாளிக்கான தகுதி இது. இதுதான் சேரனைத் தொடரக் கூடியதாகப் பின் வந்த பா. அகிலன், நட்சத்திரன் செவ்விந்தியன், றஷ்மி போன்ற கவியாளுமைகளிடத்திலும் செல்வாக்குச் செலுத்தியது. பெருங் கவிகளுக்கு இவ்வாறு அமைவதுண்டு.

இன்னொரு நிலையில் இது தலைமுறை மாற்றத்தின் வழியாகவும் ஆளுமை ரீதியாகவும் சேரனிடம் நேர்ந்தது. இதைப் புரிந்து கொள்வதற்கு ‘கைதடி 1979: கோபுரக் கலசமும் பனைமர உச்சியும்’ என்ற கவிதை ஒன்றே போதும் சேரனை, அவருடைய இதயத்தை, அது உற்பத்தி செய்யும் கவிதையை, அதனுடைய உள்ளார்ந்த மற்றும் வெளிப்போந்த குரலை உணர்ந்து கொள்வதற்கு. அப்பொழுது சுபத்திரன், புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட வேறு சிலரும் சாதியத்துக்கு எதிராகவும் சமூகநீதி மறுப்புக்கு எதிராகவும் தூக்கலான முறையில் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இடதுசாரி இயக்கப் பின்புலம் வேறு இருந்தது. சேரனுக்கு அப்படியான நேரடி அரசியற் பின்புலம் இல்லை. ஆனாலும் அவற்றிலிருந்து வேறுபட்ட தொனியில் சேரனுடைய கவிதைகள் அமைந்தன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உச்சமடைந்திருந்த சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான - ‘யாழ்ப்பாணத்தனம்’ என்று சொல்லப்படும் வேளாளப் பண்பாட்டு (அதிகார) அடையா





ளத்துக்கு எதிரான குரலின் அடையாளமாகி விட்ட கவிதை இது.

*'நிர்வாணம் கொண்டு*
*தமிழர்கள் அனைவரும்*
*தெருக்களில் திரிக...'*

என்று தொடங்கும்போதே கவிதை, 90°-யில் உக்கிரமடைகிறது. இன்னொரு விதமாகச் சொன்னால், மனிதக் கீழ்மைத்தனத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத உக்கிர கோபத்தின் வெளிப்பாடாகவே கவிதை உருக்கொள்கிறது. ஆனால், கவிதைக்கான மொழியில் இவை மிகச் சாதாரண வரிகளே. அதைமீறிக் கவிதையாக ஆக்குவது இதில் - இந்தக் கோபத்திலுள்ள சத்தியமாகும். இதுவே கவிதையின் ஒளி. அதுதான் இங்கே இந்தக் கவிதையை உயர்த்துகிறது. தொடர்ந்து வருகின்ற அடுத்த அடிகளைப் பாருங்கள்,

***'கவனியுங்கள்***
***நேற்று மாலை என்ன நடந்தது?***
***கைதடிக் கிராமத் தெருக்கள் முழுவதும்***
***மனித, விழுமியம் நாகரிகங்கள்***
***காற்றில் பறந்தன.***

***பனைமர உச்சியும் கோபுரக் கலசமும்***
***உயரவே உள்ளன.***
***அரசியல் பிழைப்பில் ஆழ்ந்து போயிருக்கும்***
***அனைவரும் உணர்க***
***உங்கள் முதுகுநாண் கலங்கள் மீதும்***
***சாதிப் பிரிவினைப் பூஞ்சண வலைகள்.***

***கங்கை கொண்டு***
***கடாரம் வென்று***
***இமய உச்சியில் விற்கொடி பொறித்துத்***
***தலை நிமிர்வுற்ற தமிழர் ஆளுமை***
***குனிந்த அலையுடன், அம்மணமாகத்***
***தெருக்களில் திரிக.***

***ஆலயக் கதவுகள்***
***எவருக்காவது மூடுமேயானால்***
***கோபுரக் கலசங்கள்***
***சிதறி நொறுங்குக.***

***யாழ்ப்பாணத்தின் சராசரி இதயமே***
***உனது உலகம் மிகவும் சிறியது***
***கிடுகு வேலி***
***வேலியில் கிளுவை***
***எப்போதாவது வேலியில் பூக்கும்***
***சிவப்பு முள்முருக்கு.***
***.....***
***ஆயிரம் ஆயிரம் கோயில் கதவுகள்***
***உன்னை உள்ளே இழுத்து மூடின.***

***நிர்வாணமாக***
***உயர்த்திய கையுடன்***
***தெருக்களில் திரிக***
***தமிழர்கள்***
***இந்தத்***
***தமிழர்கள்'***

கவிதையிலுள்ள சத்தியக் கோபம், தீயாக எரிகிறது. அது கவிதையைத் தீயாகவே மாற்றி விடுகிறது.

'இத்தகைய போக்கு பெரும்பாலான முற்போக்குக் கவிஞர்களிடத்தில் (குறிப்பாக வானம்பாடிக் கவிஞர்களிடத்தில்) அல்லது அரசியற் கவிதைகளில் வழக்கமாக இருக்கும் ஒன்றுதான். இதிலென்ன புதுமை உள்ளது? அரசியற் கட்சிகளின் துண்டுப் பிரசுரத்துக்கும் இதற்கும் என்ன வேறுபாடுண்டு?' என்று யாரும் கேட்கலாம். கவிதை அதற்கப்பால் பன்முகத் தன்மையோடு விரிந்து செல்வதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். கவிதை, மானுட அநீதிக்கெதிரான ஒரு தீர்க்கமான ஜனநாயக ரீதியான கலக அரசியற் குரலாக மேற்கிளம்புகிறது. மானுடத்துக்கெதிரான அநீதியை - ஒடுக்குமுறையை, அதை மேற்கொள்ளும் அதிகாரத்தை - கொண்டிருக்கும் பண்பாட்டையும் அந்தப் பண்பாட்டைக் கொண்டிருக்கும் சமூகத்தையும் கேலிப்படுத்தி எதிர்க்கிறது. முதலில் அது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தையும் அதனுடைய வீரயுகப் பண்பாட்டுப் பெருமிதங்களையும் கேள்விக்குள்ளாக்குகிறது. ஏறக்குறைய இதே தொனியில் ராஜராஜசோழனைப் பற்றியும் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றியும் இன்குலாப்பினுடைய கவிதை ஒன்றுண்டு. சற்று வேறான, ஆனால், இந்த இடத்தில் நினைவெடுத்துப் பேச வேண்டிய இன்னொன்று, மஹாகவியின் புகழ்வாய்ந்த கவிதையான 'தேரும் திங்களும்'. சேரனைப் போல மஹாகவியும்...

***முந்த நாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு***
***வந்தவனின் சுற்றம்***
***அதோ மண்ணிற் புரள்கிறது!***

எனக் கேலிப்படுத்துகிறார்.

மஹாகவி உலகளாவிய அளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி, நீங்கள் அதைப் புறக்கணித்து சிறுமையோடு மண்ணில் புரள்கிறீர்கள் என்கிறார். சேரனோ, வரலாற்றுப் பெருமைகளைச் சொல்லிக்கொண்டே சிறுமைப்பட்டுள்ளீர்கள் என்கிறார். ஆக அடிமை, குடிமைகளை வைத்துக் கொண்டு பண்பாட்டுப் பெருமிதங்களை நாம் பேசமுடியாது என்பதே இந்த மூன்று கவிதைகளினதும் சாராம்சமாகும்.

மேலும் 'யாழ்ப்பாணத்தின் சராசரி இதயமே, உனது உலகம் மிகவும் சிறியது' என விளித்து, யாழ்ப்பாணத்தின் மேலாதிக்கச் சமூகத்தை நேர்முகமாக விமர்சிக்கிறது சேரனின் கவிதை. சாதியின் பேரால் பெருந்தொகுதி மக்களுடைய உரிமைகள் மறுக்கப்படுதற்காக 'ஆலயக் கதவுகள் எவருக்காவது மூடப்படுமேயானால் கோபுரக் கலசங்கள் சிதறி நொறுங்குக' என்று சபிப்பதும் பிரகடனப்படுத்துவதும் அந்தச் சமூகத்திற்குள்ளிருந்து கலகம் செய்யும் வலுவானதொரு போர்க் குரலாகும். இந்தப் போர்க்குரல் சாதாரணமானதல்ல. 'தனியொருவருக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் குரலுக்குச் சமனானது. 'கவிஞன் பெருமூச்சு விட்டால் வானமும் தீப்பற்றும்' என்று சோலைக்கிளி சொன்னதும் ஏறக்குறைய இதையே. உண்மைதான். கவிஞர்கள் தம்முடைய குரலை, சுடரும் ஒளியாக வரலாற்றில் அழியாத முறையில் ஏற்றிவிடக் கூடியவர்கள். அது மகிழ்ச்சியோ, துயரமோ, எழுச்சியோ எதுவாயினும். அதற்குள் சுடரின் வெம்மையிருக்கும். பண்பாட்டின் வேர்களில் அவர்கள் மொழியாலும் சிந்தனையாலும் நிலைபெறுகின்றவர்கள் என்பதால் கவிஞர்களின் சீற்றத்துக்கு வலு அதிகம்.

வெளியே மட்டுமல்ல, தன்னுடைய சமூகத்திற்குள்ளிருக்கும் ஜனநாயக மறுப்புக்கெதிராக, அதனுடைய அதிகாரத்துக்கு எதிராக, மானுடக் கீழ்மைக்கெதிராகவும் கலகம் செய்வது எழுத்தாளரின் - கவிஞரின் - அறிஞரின் - முதற் பண்பாகும். 'விதியே விதியே தமிழ் சாதியை என் செய நினைத்தாய்? எவ்வகை விதித்தாய்?' என்று பாரதி குமுறுவது இந்தப் பண்பின் அடிப்படையில் என்பதையும் நாம் கவனிக்கலாம். இதையே சுந்தர ராமசாமி (ஜே.ஜே. சில குறிப்புகள்) ராஜ் கௌதமன், டானியல், என்.கே. ரகுநாதன், பழமலய், டொமினிக் ஜீவா, சக்கரவர்த்தி, ஷோபாசக்தி, இமயம் என அனைவரும் செய்தனர்; செய்து கொண்டிருக்கின்றனர். எதிர்த்தரப்பை மட்டுமல்ல, தங்களுடைய சமூகத்தின் கீழ்மைகளையும் குறைபாடுகளையும் கூட அவர்கள் விமர்சித்தனர். உலகம் முழுவதிலுமுள்ள சமூக அக்கறையுடைய எழுத்தாளர்கள், கவிஞர்களின் பொதுக் குணவியல்பு இது. நம்முடைய குறைகளையும் தவறுகளையும் குற்றங்களையும் களைவதும் அதற்கெதிராகப் போராடுவதும் அவற்றைச் சுயவிமர்சனத்துக்குள்ளாக்குவதும் முதற்பணி எனக் கருதுவதன் விளைவு இதுவாகும். அதைச் செய்யாமல், அவற்றைக் கண்டும் காணாமல் இருப்பது அநீதி. அப்படியிருந்து கொண்டு நமக்கு எதிரிலுள்ள தரப்பின் அநீதியைப் பற்றியும் ஒடுக்குமுறையைப் பற்றியும் பேசுவதற்கான தகுதியைப் பெற முடியாது. இதனால்தான் 'முதலில் எங்களுக்கு (சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களுக்கான) உரிமையைத் தாருங்கள். எங்களைச் சமமாக நடத்துங்கள். அதற்குப் பிறகு சிங்கள ஒடுக்குமுறையைப் பற்றி, அந்த அநீதியைப் பற்றி சேர்ந்து நாம் பேசுவோம். அதற்கெதிராகப் போராடுவோம்' என்று கே. டானியல் சொல்லவேண்டியிருந்தது.

அநீதியைப் பற்றியும் அறத்தைப் பற்றியும் பேசுவதற்கான முதற் தகுதியை நாம் பெறவேண்டுமானால் நாம் நீதி உடையவர்களாக இருக்க வேண்டும். ஒரு தரப்பினருக்கான நீதியை, உரிமைகளை மறுத்துக்கொண்டு நமக்கான நீதியை, உரிமையைக் கோரினால் அது கோமாளித்தனமாகும். சேரனுடைய எழுத்தியக்கம் இதை மிகத் துல்லியமாகச் சுட்டுகிறது. அவர் எப்போதும் சிங்களப் பெருந் தேசியவாத ஒடுக்குமுறையை எதிர்ப்பதைப்போல, தமிழ் சமூகத்துக்குள் நிலவிக் கொண்டிருக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளையும் கடுந்தொனியில் எதிர்த்துக் கொண்டிருக்கிறார். சாதிய ஒடுக்குமுறை, முஸ்லிம்கள் மீதான தமிழர்களின் ஒடுக்குமுறை, இயக்க அதிகாரம் - இயக்க ஒடுக்குமுறை, கருத்துரிமை மறுப்பு என அனைத்தையும். 'யுத்த காண்டம்', 'துப்பாக்கி பற்றிய ஒரு கவிதை', 'அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றபோது', 'எரிந்து கொண்டிருக்கும் நேரம்', 'காத்தான்குடி', 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' போன்ற கவிதைகள் இதற்கு உதாரணம். பெண்ணொடுக்குமுறையின் எதிர்ப்படையாளம், 'கானல் வரி'. இத்தகைய கவிதைகள் குறைவாயினும் தாக்கம் கூடியவை. கானல்வரி, ஒரு காவியமே.

ஒரு ஜனநாயகவாதியாக இதைச் செய்துகொண்டே, சிங்கள பௌத்த அரச ஒடுக்குமுறையைப் பற்றியும் அதற்கு அனுசரணையாக இருக்கும் சர்வதேச (வல்லாதிக்கத் தரப்புகளின்) ஒடுக்குமுறையைப் பற்றியும் பேசுகிறார். ஒடுக்குமுறையைப் பற்றிப் பேசுவதற்கான தகுதியை ஒருவர் பெறவேண்டுமானால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதைப் போல அவர்

அனைத்து ஒடுக்குமுறைக்கும் எதிரானவராகத் தன்னைப் பொதுவெளியில் நிறுத்த வேண்டும். அதற்கொரு துணிவு வேண்டும். எதையும் இழக்கவும் எந்த நெருக்கடியை எதிர் கொள்ளவும் கூடிய தயாரான வாழ்க்கை முறைக்குச் செல்ல வேண்டும். அந்தத் துணிவில்லை என்றால், கீழ்மைகளோடும் அநீதிகளோடும் அதிகாரத் தரப்புகளோடும் சமரசங்க ளையே செய்யவேண்டியிருக்கும். அது விடுதலைக்கு எதிரா னது. பாசாங்கானது.


நம்முடைய தமிழ்ச் சூழலில் (சிங்களச் சூழலிலும்தான்) அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கும் பண்பு மிகக் குறைவு. பலரும் சிங்கள பௌத்த ஒடுக்குமுறையை அல்லது அதனுடைய மேலாதிக்கத்தை எதிர்ப்பர். ஆனால், தம்மு டைய சமூகத்துக்குள் நிலவும் சாதி, பால், பிரதேச, மத ஒடுக் குமுறையையும் புறக்கணிப்பையும் எதிர்ப்பதில்லை. மட்டு மல்ல, அவற்றை மேற்கொள்வோராகவும் இருக்கின்றனர். 'நாம் விடுதலைபெற வேண்டுமானால், அதற்குத் தகுதியான வர்களாக நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்' என்று சு. வில் வரெத்தினம் சொன்னதை நாம் இங்கே மனதிற் கொள்ள வேண்டும். ஆக, அனைத்து ஒடுக்குமுறைகளுக்கெதிரான குரலாகவும் விடுதலைக்கான வேட்கையாகவும் இயங்குவதே சேரனின் ஐம்பது ஆண்டுகாலக் கவிதை உள்ளிட்ட எழுத்தி யக்கத்தின் அடிப்படை. இதுவே சேரனுடைய கவிதைகள் பெறுகின்ற மதிப்புமாகும்.

கைதடி 1979: கோபுரக் கலசமும் பனைமர உச்சியும் என்ற கவிதை எழுதப்பட்டபோது சேரனுக்கு ஏறக்குறைய 20 வய திற்குள்தான் இருக்கும். அவருடைய ஆரம்பகாலக் கவிதைக ளில் ஒன்றிது. இதுவோ அல்லது இப்பொழுது எழுதப்படு கின்ற கவிதையோ மட்டுமல்ல, இனிமேல் எழுதப்படுகின்ற கவிதை கூட மேற் சொல்லப்பட்ட அடிப்படையில் தான் அமையும். இதை மீறிச் சேரனால் சிந்திக்க முடியாது. அப்படி மீறியோ மாறியோ சிந்தித்தால் அது சேரனாக, சேரனுடைய கவிதையாக அல்லது அவருடைய எழுத்தாக இருக்க முடி யாது. அந்தளவுக்கு அவருடைய மனவமைப்பும் சிந்தனையும் ஒடுக்குமுறைக்கு, அநீதிக்கு, ஜனநாயக மறுப்புக்கு, மனித நாகரீகக் கேட்டுக்கு, அதிகாரத்துக்கு எதிரானதாக அமைந்து விட்டன. என்பதால்தான் சாதிய ஒடுக்குமுறை, இன ஒடுக்கு முறை, இயக்க அதிகாரம் அல்லது இயக்க ஒடுக்குமுறை, ஜனநாயக மறுப்பு, அரச ஒடுக்குமுறை, பெண்ணொடுக்கு முறை போன்றவற்றைத் தொடர்ந்தும் எதிர்த்துக் கொண்டிருக் கிறார். ஏறக்குறைய அரை நூற்றாண்டு எதிர்ப்புக் குரலையு டையவர் அல்லது மாற்றுக் குரலுடையவர் சேரன். இதற்கு அவருடைய வாழ்க்கை அனுபவங்களும் காரணமாக இருக்க லாம். இதைப்பற்றிச் சேரனே சொல்கிறார், 'என்னுடைய கவி தைகளோடும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்திருந்த ஏராளம் நெருங்கிய நண்பர்கள் ஒன்றில் கொல்லப்பட்டு விட்டார்கள் அல்லது காணாமல் போய் விட்டார்கள். எஞ்சியவர்கள் உல கம் முழுவதும் சிதறிப் போயிருக்கிறார்கள். இந்த நண்பர்கள் பற்றிய நினைவுகளும் பதிவுகளும் தொகுதியிலுள்ள கவிதை களில் துவப்பட்டுக் கிடக்கின்றன' - 'நீ இப்பொழுது இறங்கும் ஆறு' முன்னுரையில்.

ஒரு கவிஞருக்கு மட்டுமல்ல எந்த மனிதருக்கும் இத்தகைய நிலை ஏற்படக் கூடாது. என்பதால் சேரனால் தன் நெஞ்சறிந்த உண்மைகளை, அவற்றின் அவற்றுக்கான அறச்சூட்டினை விட்டு விலக முடியாமல் உள்ளார். இது அவருக்குள் தீராத தீவிரத்தை உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறது.

இத்தகைய தீவிரத் தொடர்ச்சியை அல்லது தொடர்ச்சியான தீவிர நிலையைத் தக்கவைப்பது கடினம். பொதுவாகவே பல ருக்கும் இளமையில் ஒரு தீவிரத்தன்மை இருக்கும். வயதேற, 'ரத்தம் கொதிக்கிற பருவத்தில்' உண்டாகிய வேகம் பின்னர் தணிந்து காணாமலே போய்விடும். இதற்கப்பால், கால ரீதியா கவும் உலகளாவிய அளவிலும் நிகழ்கின்ற மாற்றங்களும் (கருத்து நிலை, வெளிப்பாட்டு முறை, மொழி, வாழ்க்கை) சவால்களும் இந்தத் தீவிரத்தைக் குறைத்து விடும். அல்லது வேறொன்றின் மீது இடம் மாற்றி விடும். சேரனுடைய தீவிரம் துளியளவேனும் குறையவில்லை. அரசியற் கவிதைகளில் மட்டுமல்ல, அவருடைய காதற் கவிதைகளிலும்தான். அது முதிர்ச்சியடைந்து மேலும் கூராகிக் கொண்டிருக்கிறது. கூரா கும் அளவுக்கு உள்ளே ஆழமாக விரிந்தும் கொண்டுள்ளது.






என்பதால்தான் யுத்த அழிவைப் பற்றிய துயரத்தை 'காடாற்று', 'அஞர்' என எழுதும்போதும் அதற்குள் விடுத லைக்குரலின் ஒலிப்பைக் கேட்க முடிகிறது. அநீதிக்கெதிரான ஆக்ரோஷத்தைக் காண முடிகிறது. இப்பொழுது வந்திருக் கும், 'காஞ்சி' இவற்றுக்கு அப்பாலான இன்னொரு நிலையின் உச்சம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் அதிகமான அரசியற் கவிதை களை எழுதிய தமிழ்க் கவிஞர்களில் சேரன் முதல் நிலைக்கு ரியவர். அரசியற் கவிதைகளை எழுதாத எந்தவொரு ஈழக் கவிஞரும் இல்லை. அந்தளவுக்கு ஈழ அரசியல் ஈழக் கவிஞர் களிடத்திலே தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. ஆனால், இவர்களால் எழுதப்பட்ட அத்தனை கவிதைகளும் ஏற்புடைய வையா? விடுதலைக்குரியவையா? மக்களின் வாழ்வைக் குறித்த கரிசனையைக் கொண்டவையா? பிற சமூகத் துயரங் களையும் அவற்றின் நீதியையும் உள்ளடக்கியவையா? இலக்கியத் தகுதியையும் பண்பாட்டு நீட்சிக்குரிய தன்மை யையும் கொண்டவையா? என்று கேட்டால், உதட்டைப் பிதுக்கி மறுத்துத் தலையை அசைக்கவே வேண்டும். அநேக மானோருடைய பல கவிதைகள் ஒற்றைப்படைத் தன்மையு டையவை. அல்லது கறுப்பு - வெள்ளையாக இருப்பவை. இலங்கை அரசியல் இனவாதமாகச் சுருங்கியதன் விளை வாக எதையும் கறுப்பு - வெள்ளை அல்லது ஆதரவு - எதிர்ப்பு அல்லது தியாகி - துரோகி எனப் பார்க்கும்போக்குப் பலரிடத்திலும் செழிப்பாக வளர்ந்துள்ளது. அதனுடைய பிர திபலிப்பே இதுவாகும். இதைக் கடந்து நிற்கக்கூடிய பன் மைத்துவத்துக்கான குரல்கள் குறைவு. அப்படி நிற்கும் குரல்களில் ஒன்றே சேரனுடையது. அதற்கே காலப் பெறுமா னமும் உலக மதிப்பும் உண்டு.

சேரனுடைய அரசியற் கவிதைகளில் இலங்கையின் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தையும் ஈழப் போராட்டத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் வரைபடம்போலத் தெளிவுறக் காணலாம். கூடவே தமிழ்பேசும் மக்களின் கையறு நிலை மற் றும் நீதிக்கான ஓயாத குரலையும். இந்தச் சமநிலை முக்கிய மானது. ஏற்கனவே சொல்லப்பட்டதைப்போல அனைத்துப் பழிகளையும் தயக்கமின்றிப் பாரபட்சமின்றிப் பழித்துரைப் பது. பெருங் கவிகளிடத்தில் இத்தகைய பண்புண்டு. எளிய உதாரணம், பாரதி. அன்றைய பிரித்தானிய (அந்நிய) ஆட்சிக் கெதிராகக் குரலெழுப்பிய பாரதி, விடுதலைக்கான சங்கொ லியாகவும் இருந்தார். தமிழ்ச் சமூகத்தின், இந்தியப் பண்பாட் டின் பொருந்தாக் கூறுகளையும் அடிமை மனோபாவத்தை யும் சாடினார். கவிதையில் மட்டுமன்றி, பாரதியின் ஊடகத் துறை எழுத்துகள், செயற்பாடுகள் அனைத்தும் அப்படித்தா னிருந்தன. இவை உண்டாக்கிய நெருக்கடிகள், சமகாலப் புறக்கணிப்புகளைப் பற்றிப் பாரதி பொருட்படுத்தியதில்லை. ஏறக்குறைய இதே தன்மை சேரனிடத்திலும் உண்டு. கவிதை களோடு சேரனுடைய பத்திரிகைத் துறைச் செயற்பாடுகளும் (Saturday Reviw, சரிநிகர்) ஜனநாயகத்துக்கான குரலும் இணைந்ததாக. அதோடு இயற்கை, காதல், சமூக நீதி என அனைத்தின் மீதான கரிசனை கொண்டதுமாக.

'யமன்' இன ஒடுக்குமுறை, அதற்கெதிரான கொந்தளிப்பின் சித்திரம் என்றால் 'எரிந்து கொண்டிருக்கும் நேரம்', 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' இரண்டும் இயக்க அதிகாரத்துக்கு - ஒடுக்குமுறைக்கு எதிரான வெளிநடப்பு எனலாம். 'காடாற்று' யுத்த அழிவைப் பற்றியது. இதனால்தான் சேரனுக்குத் தொடர்ந்தும் நெருக்கடிகள் உண்டாகின. 1980-களின் நடுப் பகுதியிலிருந்து 2009-ல் ஈழப்போர் முடியும்வரையிலும் அதற் குப் பிறகும் கூட உயிராபத்துகளின் நடுவேதான் சேரன் வாழ வேண்டியிருந்தது என எண்ணுகிறேன். இதில் துயரமான வேடிக்கை என்னவென்றால் ஒடுக்குமுறையை மேற்கொள் ளும் அரசினாலும் நெருக்கடி. அதற்கெதிராகப் போராடும் விடுதலை இயக்கங்களாலும் நெருக்கடி. குறிப்பாக விடுத லைப் புலிகளினால் ஏற்பட்ட அச்சுறுத்தல். ஏறக்குறைய சேர னுடைய இளமைக் காலமானது கால்நூற்றாண்டு நெருக்கடி யிலேயே கழிந்தது. என்னதான் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அந்த நெருக்கடிகளை எதிர்கொண்டவாறே சேரன் இயங்கியி ருக்கிறார். இது கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான அம்சமாகும். இதற்காக அவர் பலரையும் போல வாழும் களங்களை மாற்ற வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் பிறகு கொழும்பிலிருந்து கனடாவுக்கும் என




மாற்றியிருக்கிறார். ஆனால், எங்கே சென்றாலும் தன்னுடைய குரலை - நிலைப்பாட்டை - எந்தச் சூழலிலும் சேரன் மாற்றியதில்லை; தளர விட்டதில்லை. இதேவேளை அவருடைய கவிதைகளின் மொழியிலும் மொழிதலிலும் (வெளிப்பாட்டிலும்) மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. பிந்திய கவிதைகள் செறிவும் அடர்த்தியும் கூடியவை. தொடக்ககாலக் கவிதைகளில் விவரிப்புத் தன்மை அதிகம். அறிக்கையிடல் தன்மை கொண்டவை. பிந்தியவை உணர்வாலும் கூடியவை. அதற்கான மொழியும் படிமங்களுமானவை. வடிவச் செழிப்புடையவை.

நிகழ்வுகளையும் நிகழ்களத்தையும் அல்லது சூழலையும் இவற்றில் இயங்கும் பாத்திரங்களையும் கொண்டு உருவாக்கப்படும் கவிதை அமைப்பையே நீண்டகாலமாகப் பின்பற்றி வந்தார் சேரன். 1980-களில் சேரனும் பங்கேற்றிருந்த 'கவிதா நிகழ்வு' இதற்கொரு உதாரணம். அந்தக் கவிதைகளைப் படிக்கும்போது நிகழ் தன்மையோடு காட்சிகள் விரியும். அன்றைய ஈழக் கவிதைகளில் இந்தத் தன்மை தூக்கலாக இருந்தது. கவிதையை ஒரு காலச் சாட்சியமாக்கும் அவசியத்தின் விளைவு இதுவாக இருக்கக் கூடும். அவற்றின் உள்ளும் வெளியுமாக படிப்போர் நிற்கும் வகையில் அவை உருவாக்கப்பட்டிருக்கும். 'எல்லாவற்றையும் மறந்து விடலாம்', 'அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றபோது' 'ஒரு கிராமத்துக்கு மின்சாரம் வருகிறது', 'மழை நாள்', 'சமாந்தரம் கொள்ளாத உலகங்கள்' போன்ற பல கவிதைகள் இதற்கு உதாரணம். ஆனால், பிந்திய கவிதைகள் இதிலிருந்து விலகிவிட்டன. இதற்குத் தாலாட்டு என்ற கவிதை நல்ல எடுத்துக்காட்டு.

***'காலற்றவளின்***
***ஒரு கையில் குழந்தை***
***மறுகையில் கணவனின் துண்டிக்கப்பட்ட தலை***
***தொடைகளுக்கு இடையில்***
***வன்புணரும் படையாளின் துர்க்கனவு.***

***ஓலமிட மனிதரற்றுப் புகை மண்டிய ஊர்ப்புறத்தே***
***பசி, தாகம், விரக்தி, குரல் கரையும் குருவி,***
***வாலற்ற நாய், வெறுப்பில் மிதக்கும் காயா மரம்,***
***புழுதியில் அலையும் இலவம் பஞ்சு,***
***இமைப்பொழுதில்***
***அற்ற குளம், கடம்பு உதிரச் சிவந்த***
***நிலம்.***

***அலையடிக்கும் காற்றில்***
***அகல் விளக்குச் சிந்தும்***
***ஒளித் துளியில்***
***குழந்தைக்கு ஒரு தாலாட்டு'***

இந்தக் கவிதையைப் படித்து முடிக்க முடியாதளவுக்கு மின்னதிர்வு நமக்குள் உண்டாகிறது. கொடுமையின் உக்கிரத்தைப் படிமமாக்கி அளிக்கிறது கவிதை. இதில் நேரடியான காட்சி விவரிப்பில்லை. ஆனால், கவிதையின் தொடக்கத்தில் அப்படியொரு மங்கலான தோற்றமுண்டு. 'காலற்றவளின் / ஒரு கையில் குழந்தை / மறுகையில் கணவனின் துண்டிக்கப்பட்ட தலை' என, ஓர் அதிர்ச்சியளிக்கும் நொடிப் பொழுதுக் காட்சி மனதில் எழுகிறது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருத்தியின் அவலநிலை அப்படியே நம்முடைய அகத்துள் தகிக்கும் கூரீட்டியாக இறங்குகிறது. இந்தக் காட்சி நிலையைச் சட்டென முறித்து, 'தொடைகளுக்கு இடையில் / வன்புணரும் படையாளின் துர்க்கனவு' எனக் கருத்து நிலைப் படிமத்தை உண்டாக்குகிறார் சேரன். கவிதை இன்னொரு தளத்துக்கு உயர்ந்து விரிகிறது. அந்தப் பெண்ணின் அவலம் மேலும் கூராகிறது. அப்படியே கூராகிச் செல்லும் கவிதையின் இறுதிப் பகுதி, இந்த அவலத்திலும் அவள் தன்னுடைய அந்தக் குழந்தைக்குத் தாலாட்டுப் படிக்கிறாள். தாலாட்டுப் பாடுவதைக் கவிதை காட்சிப்படுத்தவில்லை. ஆனால், அந்த நிலையை (அது சாதாரணமானதல்ல) நம்முடைய அகத்திற்குள் படிமமாக்குகிறது.

இத்தகைய அவலப் பரப்பை விரிக்கும் இன்னொரு பழைய பாடல் இங்கே நினைவில் எழுகிறது.

***ஆவீன மழைபொழிய***
***இல்லம் வீழ***
***அகத்தடியாள் மெய்நோக***
***அடிமை சாக***
***மாவீரம் போகுதென்று விதைகொண்டோட***
***வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள***

***கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க***
***குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்க***
***பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்க***
***பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே***

- ராமச்சந்திரக் கவிராயர்

இரண்டும் வெவ்வேறு சூழல், வேறு வேறான நிலைகள், யதார்த்தத்தைப் பிரதிபலிப்பவை என்றாலும் அவலத்தினது -துயரத்தினது கூர்முனை ஒன்றே. பெருங் கவிகள் ஒன்றிணை கின்ற புள்ளிகள் எப்போதும் ஒன்றாகவே இருக்கும். இலக் கிய வரலாற்றை ஆழ்ந்து நோக்கினால் எதுவும் புதிதல்ல என்று தோன்றும். அடிப்படைகள் என்றும் ஒன்றுதான். அவற்றை அணுகும் விதமும் வெளிப்படுத்தும் விதமும்தான் ஆளுக்காள், ஆளுமைக்கு ஆளுமை வேறுபடுகிறது. அது அவரவர் தனித்திறன், வாழ் களம், வாழ் காலம், உணர்நிலை அல்லது நோக்கு போன்றவற்றின் சேர்க்கையினாலும் உரு வாகிறது.

இலங்கை அரசியலில் நிகழ்ந்த இன வன்முறை, போராட்ட எழுச்சி, போர் என எல்லாப் பெரு நிகழ்வுகளையும் சேரனு டைய கவிதைகள் அநேகமாகப் பிரதிபலித்துள்ளன. அதற் காக அவை ஏதோ செய்தியறிக்கை - பத்திரிகைச் செய்தி என்றளவில் உலர்ந்து போகுமாறு அமையவில்லை. இந்த நிகழ்வுகள் இலக்கியத்தில் கலையாக்கமாகியுள்ளன. அதுவே இவற்றின் பேசக் கூடிய - கவனிக்கக் கூடிய பெறுமதியாகும். அதற்கான சத்திய மொழியைக் கையாண்டு இவற்றை நிலை பெறச் செய்திருக்கிறார் சேரன். இதனால் அந்த நிகழ்வுகள் ஒரு காலகட்டத்துடன் முடிந்து போனாலும் இலக்கிய சாட்சி யமாக, அறத்துக்கான குரலாக கால நீட்சியில் இடம்பெற்று விட்டன. இதனால்தான் இவற்றைக் குறித்து இப்பொழுது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை ஊக்கப்படுத் தியதில் சேரனுடைய கவிதைகளுக்கு முக்கியமான பங் குண்டு.

***‘எனது நகரம் எரிக்கப்பட்டது***
***எனது மக்கள் முகங்களை இழந்தனர்***
***எனது நிலம் எனது காற்று***
***எல்லாவற்றிலும்***
***அன்னியப் பதிவு.***

***கைகளைப் பின்புறம் இறுக்கிக்கட்டி***
***யாருக்காகக் காத்திருந்தீர்கள்?***
***முகில்களின் மீது நெருப்பு***
***தன் சேதியை எழுதியாயிற்று***
***இனியும் யார் காத்துள்ளனர்?***

***சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து***
***எழுந்து வருக!’***

(இரண்டாவது சூரிய உதயம்)

என்று, 1983-ல் தமிழ்ச் சமூகத்தை நோக்கி அழைப்பு விட்டார் சேரன். மட்டுமல்ல, ஏறக்குறைய இதே காலப்பகுதியில் (1985-இல்) ‘மரணத்துள் வாழ்வோம்’ என்ற கூட்டுக் கவிதைத் தொகுதியின் தொகுப்பாளராகவும் இருந்திருக்கிறார். இது அன்றைய சூழலில் பெரும் பணியாக இருந்தது. ஆனால், இன்று? இந்தத் தொகுப்பில் இறுதியாகவுள்ள ‘பாப்பாக்க



ளின் பிரகடனம்' சிறார் போராளிகளின் பிரசன்னத்தை ஊக்கப்படுத்தியது. பின்னாளில் இதுவே தமிழ்ச் சமூகத்தின், தமிழரின் விடுதலை அரசியலில் பெருந் துயராக மாறியது. சிறுவர்கள் படையணியாகிக் கொல்லப்பட்டதும் சிறுவர்கள் போரில் கொல்லப்பட்டதுமாக வரலாறு உருவாகியது. 'மரணத்



துள் வாழ்வோம்' தொகுதிக் கவிஞர்களைக் காலத் துயரும் காலப் பழியும் சூழுமளவுக்கு வரலாறு திரும்பியது.

ஒரு காலகட்டத்தின் புளகாங்கிதம், இன்னொரு காலகட்டத்தின் குற்றவுணர்ச்சி. இப்பொழுது 2024. இடையில் 40 ஆண்டுகள் பெரும் புயல், துயர்க் கடல், படுகுழி, மயான வெளி, அலைச்சற் பரப்பு, இரத்த ஆறு எனக் கடந்து விட்டன. இதற்குள் கொலையும் கொல்லப்படுதலும் எவ்வளவோ நடந்தேறியும் விட்டது. ஈழப் போராட்டம் இனயுத்தமாகக் குறுகிச் சிதைந்து, அழிந்து விட்டது. சேரனே அதையும் எழுத வேண்டிய அவல நிலை.

*'உயிர் இருந்த இடம் கூற*
*ஒரு குறிப்பும் இல்லை*
*கரையில்*
*விரிந்திருந்த பனையின்மீது*
*கிழிந்து தொங்கும் சேலை*
*நிலத்தின் கீழ்*
*குழந்தைகளின் அலறல் ஒலி கேட்டேன்*
*தாழை மர வாசம் இன்று*
*காற்றினில் இல்லை.*

*என் இயலாமையின் கண்ணீரில்*
*தீ வளரும் நாடற்ற நாடு*

என்றும்

*வெந்து தணியாத*
*காடற்ற காட்டுக்குச் சென்றோம்*
*ஒரு குருவி கிடையாது*

எனவும்

*... முற்றிற்று என்று சொல்லி*
*காற்றிலும் கடலிலும் கரைத்து விட்டுக்*
*கண்மூட*
*காற்றும் கிடையாது*
*கடலும் கிடையாது*
*காடாற்று எப்போது?*

என்பதாகவும்

*உள்ளும் வெளியும் தீ மூள*
*இருளின் அலறல்*
*குழந்தைகளை மனிதர்களை*
*வெள்ளம் இழுத்து வந்து*
*தீயில் எறிகிறது*

என்றும்

*காயம் பட்ட*
*இரண்டரை வயதுக் குழந்தையின் கைகளை*
*மயக்க மருந்தின்றி அறுக்கின்ற மருத்துவன்*
*இக்கணம் கடவுள்*
*நீரற்ற விழிகளுடன் அலறும் தாய்*
*ஒரு பிசாசு'*

எனவும் கையறுநிலைப் பெருந் துயரோடு எழுதப்பட்ட கவிதைகளே 'காடாற்று' உள்ளிட்ட பிந்திய தொகுதிக் கவிதைகள். எல்லாம் முடிந்துவிட்ட வெறுமை. மயான வெளியில் உறைந்திருக்கும் அமைதியில் மெல்லிய காற்றுக்கு எழுந்து பறக்கின்ற சாம்பல். அந்தச் சாம்பல் வேறொன்றுமில்லை. அதுதான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த விடுதலைக் கனவு. இன்று நெருப்பு, புகை, கண்ணீர், இரத்தம், பிணம், பிணவாடை, அழிந்துபோன நிலம். தோல்வி, குற்றவுணர்ச்சி எல்லாமாக மிஞ்சிய சக்கை. சேரனுடைய கவிதைகளை வாசிக்கும்போது நம்முடைய மனதில் மிஞ்சுவது இதுவே. கவிதைகளில் அதிகமாக இடம்பெறும் காட்சிகளும் சொற்களும் கூட இவைதான். இவற்றில் பெண்களும் குழந்தைகளுமே சேரனுடைய கவலையை அதிகரிக்கின்றனர். ஏனென்றால் ஈழப் போராட்டம் போராகச் சுருங்கி, அழிவாக முடிந்தபோது அதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான். இவை சேரனுக்குள்ளே கவிஞர் என்ற வகையில் குற்றவுணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர் ஆறுதலின்றி, அமைதியின்றி உழன்று கொண்டிருக்கிறார். அதற்கு

எப்படியாவது பரிகாரம் காண வேண்டும் என்று கவிமனம் தவிக்கக் கூடும். அதுவே உலக நீதியைக் குறித்த சேரனு டைய அவாவுதலாகும். ஆனால் அந்த நீதி அவரும் பிறரும் எதிர்பார்ப்பதைப் போல நியாயமான முறையில் கிடைக்குமா என்பது கேள்வியே. அதுவும் அவருடைய சமகாலத்தில் கிடைக்குமென்பது இரட்டைக் கேள்வியாகும்.

சேரனின் முதற் கொதிப்புக் காலம் அடக்குமுறை, ஒடுக்குமு றைக்கெதிரான கொந்தளிப்பு என்றால், பிந்திய கொதிப்புக் காலம், முடிவற்ற துயரினால் நிகழ்வது. காடாற்று, அஞர், காஞ்சி தொகுதிகளிலுள்ள பெரும்பாலான கவிதைகள் இத் தகையன.

'காஞ்சி'-யில் ஒரு கவிதை - போர் முடிந்து, நீண்ட அஞ்ஞான வாசத்துக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்கு வரும் சேரனுக்கு,

**'யாழ்ப்பாணம்'**

***'என்னுடைய பட்டினத்துக்கு***
***மீண்டுள்ளேன்***
***பல்லாண்டு காலக் கண்ணீர்***
***என்னை இங்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.***

***என் நெல்லி மரத்தை***
***அவர்கள் வெட்டி விட்டார்கள்***
***மலைவேம்புகளையும் கமுகையும் இளம் பூவரசையும்***
***அவர்கள் விற்று விட்டார்கள்***
***அற்றோம் நாம்.***

***என் கவிதைகளுக்கு மணற்றிடரையோ***
***கடலோரக் காணித்துண்டையோ பரிசளிக்க வேண்டாம்***
***ஒரு முள்முருக்கம் பூவைத்தான் கேட்டேன்***

***முடிய மறுக்கும் கொட்டாவியிலும்***
***எரிய மறுக்கும் வாழைத்தண்டிலும்***
***உப்பு நீர்க் கிணறுகளிலும்***
***செயற்கை மருந்துகளால்***
***வீங்கி எழுந்த ஆண்குறிகள்***
***போன்ற கோயிற் கோபுரங்களிலும்***
***நாங்கள் தற்கொலை செய்கிறோம்.'***

இப்போது சொல்லுங்கள், 'கைதடி 1979: கோபுரக் கலசமும் பனைமர உச்சியும்' என்ற கவிதைக்கும் இந்தக் கவிதைக்கும் இடையிலுள்ள வேறுபாடென்ன? என்று. யாழ்ப்பாணம் மாற வேயில்லை. ஆம், தமிழ்ச் சமூகம் மாறவில்லை. இலங்கை மாறவில்லை. நம்முடைய முட்டாள்தனங்கள் அப்படியே உரு வமாற்றம் அடைந்துள்ளன. அவ்வளவுதான். கவிஞருக்கு இது சீற்றத்தைத் தருகிறது. என்ன செய்வார் அவர்? பாவம், கவிதையில் பொரிந்து தள்ளுவதைத் தவிர. மாறிலிகளின் முகத்தில் ஓங்கிக் குத்திக் காறி உமிழ்வதை விட.

ஐம்பது ஆண்டுகளாக ஒரு கவிமனதை ஒரு சமூகம் இப்ப டியே கொந்தளித்து அலைய விட்டால், அது கொடுமை. அப் படி நெடுங்காலமாகக் கொந்தளித்து அலையும் கவிமனம் பைத்தியமாகவோ பிசாசாகவோதான் மாறமுடியும். இதுதான் நம்முடைய நிலையும் கதையும்.




இதற்கு மறுதலையாக இன்னொரு நிலையில் நின்று சேரன் எழுதிப் பார்க்கிறார். 'காஞ்சி'-யில் 'படையாள் பாடல்' என்ற தலைப்பில் ஐந்து கவிதைகள் உண்டு. அவை போரில் ஈடு பட்ட படையினரின் உளநிலையைப் பிரதிபலிப்பவை. இன் னும் சரியாகச் சொன்னால் காலந்தோறும் உலகெங்கும் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரின் உள்ளத்தைச் சித்தரிப்பவை.

*‘எப்போதும் என்னைத் தொடர்ந்து வருகிறது*
*மாதவிடாய்க் காலத்திலும்*
*நாங்கள் வன்புணர்ந்த பெண்களின் குருதித் துளி*
*சிந்திய கண்ணீரின் வெப்பக் காற்று*
*அவற்றில் எரியுண்ட*
*நம் விந்தும் பேரண்டமும்.’*

- படயைாள் பாடல்-02

ஆனாலும் இதெல்லாம் கவிமனத்துக்குச் சமநிலையை அளிப்பதில்லை. அது அலையடங்காக் கடல். இருந்தாற் போலென்று பொங்கிச் சீறும். ‘காஞ்சி’-யில் மேலும் ஒன்று -

*‘… … …*
*புரட்சிக்காகவும் விடுதலைக்காகவும்*
*கண்ணீர் சிந்தியவர்கள் மிகப் பலர்*

*எப்படி வரலாற்றை எழுதுவது?*

*தொலைதூரம் போய் விட்ட பிற்பாடு*
*பிடரியில் இரண்டு கண்கள் முளைக்கின்றன*
*அவற்றால் வரலாற்றைப் பார்க்கிறோம்*
*தயங்காமல் எழுதுகிறோம்*
*புனைவும் வாழ்வும் கதையும் பச்சாதாபமும்*
*குறுக்குச் சால்களாக ஓடுகின்றன.*

*சவப் பெட்டிகளிலும்*
*அதற்குள் அடங்காத உடல்களாலும்*
*எழுதலாம்.*

*வேறு வழியில்லை.’*

ஆம், வேறு வழியில்லைத்தான். இப்படி முடிவற்றுக் கொந்தளித்துக் கொண்டேயிருக்கும் அரசியற் கவிதைகளுக்கு அப்பால் மிகுந்த கவனத்திற்குரியவை சேரனுடைய காதற் கவிதைகள். அரசியற் கவிதைகளிலுள்ள தீவிரத்தைப் போல சேரனுடைய காதற் கவிதைகளும் தீவிரமுடையவையே. பாப்லோ நெருடாவைப் போன்று அரசியல், காதல், காமம் என மூன்றிலும் தீவிரம் குன்றாத கவிதைகளின் பிரதிநிதியாகவே சேரனும் இருக்கிறார். அது அவருடைய அடையாளங்களில் ஒன்றாகும்.

வழமையான காதற் கவிதைகளில் உள்ளதைப் போல பிரிவேக்கமுள்ள கவிதைகளும் உண்டு. ஆனால், அவை புலம்பலாக உதிர்ந்து விடாமல், உறவை நோக்கித் தவித்து விரிவதாக அமைந்தவை. பலருடைய காதற் கவிதைகளிலும் பிரிவென்பது குற்றப்படுத்தலாக அமைந்து விடுவதுண்டு. அது எதிர்த் தரப்பை மேலும் தூரப்படுத்துவது. சிலருடைய கவிதைகளில் முறையீடு இருக்கும். சேரனுடைய தொடக்ககாலக் காதற் கவிதைகளிலிருந்தே அன்பையும் காமத்தையும் இணைத்துக் குழைக்கும் (இளமையிலிருந்தே) பண்புள்ளது. காலம் செல்லச் செல்ல இது இன்னும் செழுமையாகியிருக்கிறது.

என்னுடைய ஆழ்ந்த அவதானிப்பின்படி, சேரன் சற்றேனும் ஆறுதலடைவது அல்லது அவர் சமனிலை கொள்ள எத்தனிப்பது காதற் கவிதைகளில்தான் என. காதலும் காமமுமான கொண்டாட்டமே சேரனுடைய காதற் கவிதைகள் அன்பின் ஊற்று, அன்பின் உருக்கம் என்பதைக் கடந்து காமத்தையும் இணையாகக் கொண்டவை. ‘காமமற்ற காதலுண்டா?’ என்று சேரனே கேட்கலாம். எப்படியோ அவர் காதலிலும் காமத்திலும் தன்னுடைய காலக் கொந்தளிப்பையும் குற்றவுணர்ச்சியையும் ஆற்றுப்படுத்திக் கொள்ள முற்படுகிறார் எனத் தோன்றுகிறது. இது ஒரு வகையில் அவர் கண்டறிந்த விடுதலையாக இருக்கக் கூடும். அல்லது அவ்வாறானதொரு பழக்க இயல்பில் வந்து இந்த இடத்தைச் சேர்ந்திருக்கலாம். அப்படியானாலும் இது ஒரு ஏய்ப்புத்தான். தன்னைத் தானே சமனிலைப்படுத்திக் கொள்வதற்காகக் கொள்ளும் ஒரு தற்காலிக நிழல். ஆனால், இந்த நிழலும் ஒரு போது தீப்பற்றி எரியும். அது இன்னொரு குற்றவுணர்ச்சியிலும் கொந்தளிப்பிலும் போய் விழுந்து இன்னொன்றாக மூண்டெரியும். ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல சேரனுடைய மன அமைப்பு அப்படியானது. அது தன்னைச் சிலுவையேற்றம் செய்யத் துணிவது. அதில் விடுதலையைக் காண முயல்வது. இதில் இன்புற்றிருப்பது. திளைப்பது. அல்லது உழல்விலிருந்து மீளத் துடிப்பது.

இதனால்தான் உறையமுடியாக் காலமாய் அலையடிக்கும் நினைவுகளில் தத்தளித்துக் கொண்டேயிருக்கும் சேரன் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்பப் பாடுவது -

**களப்பலி**

*‘பின்மாலை, பாலை வெளி, அழகு*
*அழைத்துச் சென்றார்கள்.*

*மணலும் கானல் நீரும்*
*இளம் பச்சை நிறத்தில் இடையிடை படர்கொடிகள்*
*எப்படி முளைத்தன எனத் தெரியாது.*

*தாகத்துக்கு மற்றவர்களைக் கொன்று*
*குருதி குடிப்பதே ஒரே வழி.*

*எல்லோருக்கும் ஒரே இறைவன்*
*எல்லா இறைவருக்கும்*
*ஒரே களப்பலி’*

- காஞ்சி

எனவாக உள்ளது. மேலும் சேரன் சொல்கிறார் -

*‘அவலத்தை எழுதித் தோற்று விட்டது*
*என் மொழி*
*அதற்கு ஒளியில்லை*
*எல்லா ஓவியங்களிலும் சாம்பர்*
*எனக் கூவ விரும்புகிறேன்….’*

இந்தத் துயரத்துக்கு முடிவேது?



karunagaran@thaiveedu.com




ஆங்கில இலக்கிய உலகில் தன் படைப்புகளில் புதுமையையும் உச்ச சிந்தனையையும் வெளிப்படுத்தியவர்கள் ஷேக்ஸ்பியர் அளவுக்கு வேறு யாருமில்லை. ரொமாண்டிச இலக்கியப் படைப்புகளிலும் அதன் இயல்புக்கேற்ப உச்சமான படைப்புகளைக் கொடுத்தார். யதார்த்தவாத (Realism) படைப்புகளும் அதே வீச்சுடன் அவரிடமிருந்து கிடைக்கின்றன. அதுதான் எந்த நூற்றாண்டிலும் நினைவுகூரத்தக்க படைப்பாளியாக அவரை நிலைப்படுத்துகிறது. யதார்த்தவாத சிந்தனைகளையும், வாழ்வின் நெருக்கடிகளிலிருந்தும், துயரங்களிலிருந்தும் மனிதரை மீட்கும் வகையிலான இயற்கைவாத கருத்துகளையும் தன் படைப்புகளில் முன்வைத்தார். இத்தகைய கருத்துகளை அவர் தனது Sonnet என அழைக்கப்படும் ஈரேழ்வரிப்பாக்களில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அவரது 'Fear no More the Heat o' the Sun' எனும் கவிதை மரணத்தை ஒரு விடுதலையாகக் கொண்டாடும் கவிதை. இந்தக் கவிதையின் மையமே மரணம்தான். மரணம் ஒரு தவிர்க்க முடியாத இழப்பு. ஆன்மாவின் நித்திய உண்மை அது. ஆனாலும் இந்த உண்மையை இலகுவில் மனம் ஒப்புக்கொண்டுவிடாது ஆற்றாமையில் அலைக்கழிகிறது. எனினும் அந்த உண்மையை, அந்த நித்திய விதியை ஒப்புக்கொள்ளும் மனநிலையை நோக்கி நம்மை மிக நுணுக்கமாக இந்தக் கவிதையில் ஷேக்ஸ்பியர் கொண்டு வந்து சேர்த்துவிடுகிறார். மரணம் நமக்கு எந்தவகையில் ஆறுதலாக இருக்கிறது என்பதைப் பற்றி அற்புதமாக இந்தக் கவிதையில் ஷேக்ஸ்பியர் விபரிக்கிறார். மனித அச்சங்களுள் மிகவும் தலையானது மரணம்தான். நாம் உயிருக்காக மற்ற எதனையும் இழந்துவிடுவோம். இந்தளவு இங்கு கொண்டாட்டத்துக்குரியதும், பெறுமதியானதும் வாழ்வுதான். நெருக்கடியான வாழ்விலிருந்து மரணம் ஒரு விடுதலையாக இருந்தாலும் மனித மனம் அதனை இலகுவில் ஏற்றுக்கொள்வதில்லை. மரணம் மிகப் பெரும் அச்சுறுத்தலாகவே மனிதரால் நோக்கப்படுகிறது. ஆனால் ஷேக்ஸ்பியர் இந்தக் கவிதையில் மரணத்தை தழுவிக்கொள்ளும் மனநிலையை மனிதருக்குக் கொடுக்க முற்படுகிறார். மரணத்தை பெரும் விடுதலையாகக் கொண்டாடுகிறார். மனித வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து, அதன் மாறாத் துயரங்களிலிருந்து, நெடிதுயிர்க்கும் அதன் குற்றவுணர்ச்சிகளிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளும் ஓர் உபாயமாக அவர் மரணத்தைச் சித்தரிக்கிறார்.

ஓர் இறப்பைக் குறித்த நமது கவலைகள் எந்த அக்கறைக்கும் உரியவை அல்ல என்பதை இதைவிட மிக எளிதாக, நமக்கு நெருக்கமாக சொல்லிவிட முடியுமா என எனக்குத் தெரியவில்லை. இறப்பை ஒரு சாமான்ய நிகழ்வாக ஏற்றுக்கொள்ளும் இடத்துக்கு நம்மைக் கொண்டுவந்து நிறுத்துவதற்கு ஷேக்ஸ்பியருக்கு மிக எளிய காரணங்களும், சம்பவங்களும், சொற்களுமே போதுமானதாக இருக்கிறது. மரணம் எனும் மிகப்பெரிய இழப்பை மிகச் சாதாரண நிகழ்வுகளால் சமநிலைப்படுத்திக்கொள்ளும் போது அது மிக இயல்பானதாகவே தோன்றுகிறது. மரணம் என்னென்ன வகையில் நமக்கு ஆறுதலாக இருக்கிறது என்பதற்கு ஷேக்ஸ்பியர் இந்தக் கவிதையில் முன்வைக்கும் காரணங்கள் எவ்வளவு எளிமையானவையாக இருக்கின்றன. அதேநேரம் ஆழமானவை. நாம் ஒவ்வொருவரும் அந்த வட்டத்துள்தான் தினமும் சுழன்று கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை முதல் வாசிப்பிலேயே நாம் ஒத்துக்கொண்டு விடுகிறோம். நிஜ உலகம் மனிதரிடம் கோரும் அனைத்துவிதமான பொறுப்புகள், பணிகளிலிருந்து மரணம் அவரை முதலில் விடுதலை செய்கிறது. அதிகாரத்திலிருப்பவர்களிடமிருந்து கிடைக்கும் தண்டணைகளையோ அல்லது ஏதேனும் விதிகளைப் பற்றியோ அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஒவ்வொருவருக்குமான மாறாத நிஜம் அது என்பதை எடுத்த எடுப்பிலேயே ஒப்புக்கொள்ள அது ஊட்டம் தருகிறது. மனிதருக்கு நேரும் மரணத்தின் மூலம் அவர் எந்தெந்தத் தடைகளிலிருந்தெல்லாம் விடுதலைபெறுகிறார் என்பதை ஷேக்ஸ்பியர் மிக எளிமையாக வெளிப்படுத்துகிறார்.

***Fear no more the heat o' the sun,***
***Nor the furious winter's rages; Thou thy worldly task hast done,***
***Home art gone, and ta'en thy wages:***
***Golden lads and girls all must,***
***As chimney-sweepers, come to dust.***

***கோடையின் வெப்பத்திற்கு இனிப் பயப்பட வேண்டாம்,***
***சீற்றமான குளிர்காலத்தின் கொடுமையும் இனி இல்லை;***
***நீ உன் உலகப் பணியை செய்துவிட்டாய்,***
***உன்னைத் தாங்கி நின்ற பூமிக்குத் திரும்பி விட்டாய்.***

கோடையின் உஷ்ணமும், குளிர்காலத்தின் கொடுமையும் ஷேக்ஸ்பியர் காலத்து இங்கிலாந்தில் அத்துணை இலகுவாக சகிக்கக்கூடியதல்ல என்று நினைக்கிறேன். இந்தக் கால நிலையின் கொடுமையிலிருந்து மரணம் ஒரு மகத்தான விடுதலையைக் கொடுக்கிறது.

*Golden lads and girls all must,*
*As chimney-sweepers, come to dust.*

இந்த வரிகள் சொல்வது உயர் குடிகள் தொடக்கம் சாமான்யர்கள் வரை எல்லோருக்கும் மரணம் ஒரு நித்திய உண்மை என்பதைத்தான்.

'come to dust' 'புழுதிக்கு வா' என்கிற சொற்றொடரில், நிச்சயமாக, ஒரு சிறிய வார்த்தை விளையாட்டு உள்ளது: chimney-sweepers எனும் புகைபோக்கி துப்புரவாளர்கள் அதாவது ஈமச்சடங்கில் ஈடுபடுபவர்கள் போன்றே உயர்குடியிலிருந்து சாமான்யர்கள் வரை 'தூசிக்கு வர வேண்டும்'. இந்த நிகழ்வைத்தான் ஷேக்ஸ்பியர் கவிதையில் 'சாம்பரில் இருந்து சாம்பருக்கு எனும் அர்த்தத்தில், தூசிக்கு தூசி', என்கிற சொற்றொடரில் கவனப்படுத்துகிறார்.

*Fear no more the frown o' the great;*
*Thou art past the tyrant's stroke;*
*Care no more to clothe and eat;*
*To thee the reed is as the oak:*
*The scepter, learning, physic, must*
*All follow this, and come to dust.*

***பெருமானின் முகச்சுழிப்பிற்கு இனி அஞ்சேல்***
***கொடுங்கோலர் தாக்குதலையும் நீ கடந்துவிட்டாய்***
***உணவுக்கும் உடைக்கும் இனி தேவையில்லை கவனம்***

கவிதையின் இந்த இரண்டாவது செய்யுளில், இறப்பைப் பற்றிய மற்றொரு நல்ல பக்கத்தை ஷேக்ஸ்பியர் பதிவு செய்கிறார். மரணத்தின் பின் நீங்கள் ஒரு கொடுங்கோலரின் ஆட்சிக்கு அப்பாற்பட்டவர், உங்களுக்கோ அல்லது பிறருக்கோ உணவளித்து, உடுத்துவதைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த விடுதலையை நமக்கு ஈட்டித் தருவது எது ? மிக இலகுவான பதில் மரணம்.

மூன்றாவது பந்தியில், இறந்தவர்கள் தங்களைப் பற்றி ஏன் கவலைப்படத் தேவையில்லை என்ற பட்டியலைத் தொடர்கிறார். இடி, மின்னல் போன்ற இயற்கையின் மற்றொரு சீற்றத்துக்கும் மரணித்துவிட்டால் நாம் ஆட்படத் தேவையில்லை. மக்கள் நம்மைப் பற்றி தவறான அல்லது பொய்யான விஷயங்களை நமது முதுகுக்குப் பின்னால் பரப்பும் அவதூறு, வசை, வம்புகளுக்கெல்லாம் இனி அஞ்சத்தேவையில்லை மரணம் எனும் ஆடையை அணிந்து கொண்டால்.

*Fear no more the lightning flash,*
*Nor the all-dreaded thunder stone;*
*Fear not slander, censure rash;*
*Thou hast finished joy and moan:*
*All lovers young, all lovers must*
*Consign to thee, and come to dust.*

***இனி மின்னலுக்கோ***
***இடிக் கற்களுக்கோ அஞ்ச வேண்டாம்***
***அவதூறுகளுக்கும், கண்டனங்களுக்கும்***
***அஞ்ச வேண்டாம்***
***நீங்கள் உங்கள் மகிழ்ச்சியையும்,***
***முணுமுணுப்பையும்***
***வாழ்ந்து முடித்துவிட்டீர்கள்***

*No exorciser harm thee!*
*Nor no witchcraft charm thee!*
*Ghost unlaid forbear thee!*
*Nothing ill come near thee!*
*Quiet consummation have;*
*And renown`d be thy grave!*

இந்தக் கவிதையை ஷேக்ஸ்பியர் 1611-ல் எழுதினார். ஆனால் ஒரு மரணவீட்டு மனிதரை அது இன்றளவிலும் ஆட்கொள்ளும் ஆழமான உள்ளடக்கத்தோடு நிற்கிறது. முதல் செய்யுளின் வரிகளே மரணத்தை எதிர்கொள்ளப் போகிறவருக்கு அல்லது ஒரு மரணத்தால் உழல்ந்து துயருறுபவருக்கு மிகப்பெரிய ஆறுதலான தொடக்கமாக அமைகிறது.

மரணம் மனிதரை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தும், விடுதலையற்ற ஒரு பெருந்துயரம் எனும் பார்வை ஷேக்ஸ்பியரிடம் இல்லை. மரணத்தை ஒரு விடுதலையாகவே அவர் கொண்டாடுகிறார்.


இதுபோன்றதொரு பார்வையை பின்னாட்களில் மலையாளக் கவிஞர் கல்பற்றா நாராயணனின் முரண்டு என்கிற கவிதையில் கண்டடைந்தேன். மரணத்தை விடுதலையாகக் கொண்டாடும் ஷேக்ஸ்பியரின் அதே மனநிலையை கல்பற்றா நாராயணனின் இந்தக் கவிதையிலும் காணலாம்.

### முரண்டு

***இறந்தவர்கள்***
***பிடிவாதக்காரர்கள்.***
***கங்கைநீர் வாயில் விட்டாலும்***
***விழுங்க மாட்டார்கள்.***
***நாம்***
***சுவரில் தலைமுட்டி உடைத்துக் கொண்டாலும்***
***அவர்கள் பொருட்படுத்துவதில்லை.***
***அவர்களின் மடக்கிய விரல்களை***
***உடைக்காமல் பிரிக்க முடியாது நம்மால்.***
***மண்ணால் விழுங்கப்படுகையில்***
***தீ எரிந்து ஏறுகையில்***
***சற்று முகம் சுளிப்பதுகூட இல்லை.***
***அவர்கள் செய்யமாட்டோம் என்று முடிவெடுத்தால்***
***முடிவெடுத்ததுதான்.***

jiffry.hassan@thaiveedu.com






# கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்களின்

# மெய்யியல் : ஓர் அறிமுகம்

- கந்தையா சண்முகலிங்கம்

**கலாநிதி. சோ. கிருஷ்ணராஜா (1947 – 2009) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையின் பேராசிரியராகப் பணியாற்றியவர். இவர் தனது இளங்கலைமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தினை மாஸ்கோப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மெய்யியல் தொடர்பான பல நூல்களை தமிழில் எழுதிப் பிரசுரித்தவர். அவர் காலமாகி ஈராண்டுகள் கழித்து 'மெய்யியல் ஓர் அறிமுகம்' என்னும் நூலினை 2011–ஆம் ஆண்டில் குமரன் புத்தக இல்லம் (கொழும்பு – சென்னை) வெளியிட்டது.**

மெய்யியல் என்னும் கல்வித்துறையின் விடயப்பரப்பை மூன்றாக வகுத்துக்கூறுவர்; அவை:

- அறிவாராய்ச்சியியல் (Epistemology)
- உள்பொருளியல் (Ontology) அல்லது பௌதீகவதீதவியல் (Metaphysics)
- மதிப்பியல் (Axiology)

மேற்குறித்த மூன்று பிரிவுகளுள் அறிவாராய்ச்சியியல், உள்பொருளியல் ஆகிய இரண்டினைப் பற்றிய ஆழமான ஆய்வுரையாக 'மெய்யியல் - ஓர் அறிமுகம்' என்னும் இந்நூல் விளங்குகின்றது. மூன்றாவதான மதிப்பியல் உண்மை, நன்மை, அழகு என்ற மதிப்பீடுகள் அல்லது விழுமியங்கள் சார்ந்ததாலும், அறவியல், அழகியல், அரசியல் மெய்யியல் போன்ற தனித்தனித் மெய்யியல் துறைகளாக விரிவுபெறும் என்பதாலும் இச் சிறுநூலின் எல்லைக்குள் மதிப்பியலை உட்படுத்தல் பொருத்தமற்றது என்று பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா கருதியிருத்தல் வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

பக்க அளவில் இந்நூல் சிறியதே ஆயினும், கருத்தாளம் மிக்கதாகவும் மெய்யியல் பற்றிய முழுமையான விளக்கத்தைத் தருவதாகவும் அமைந்துள்ளது. இந்த நூலின் ஆறு கட்டுரைகளின் தலைப்புக்கள் பின்வருவன:

- மெய்யியல் என்றால் என்ன ?
- அறிவாராய்ச்சியல்
  - பிளேட்டோவும் டேக்காட்டு
- அறிவாராய்ச்சியல்
  - அறிஸ்ரோட்டில், லொக், பார்க்ளி, ஹியும்
- உள்பொருளியல்
- சமயமெய்யியல்
- நிர்ணயவாதமும் சுயாதீன சித்தமும்


பட்டப்படிப்பு மாணவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்ட இந்நூல் உயர்தரத்தினதாய் அமைந்துள்ளது. மெய்யியல் பற்றி எழுதப்பட்ட தமிழ் பாடநூல்களில் காணமுடியாத பல விடயங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இந்நூல் வித்தியாசமானதாயும், தனித்துவம் மிக்கதாயும் மிளிர்கிறது. பெரும்பாலான மெய்யியல் நூல்கள் மெய்யியலை வரலாற்று முறையில் விளக்குவனவாக உள்ளன. அவற்றின் நூல் தலைப்பிலும் 'வரலாறு' என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பதையும், சில நூல்கள் 'சாக்கிரடீஸ் முதல் சார்த்தர் வரை' என்றோ 'பிளேட்டோ முதல் ஹெகல் வரை' என்றோ குறுந்தலைப்பு இடப்பட்டிருப்பதையும் காணலாம்.

இந்நூல் வரலாற்று முறையைப் பின்பற்றாது மெய்யியலின் பிரதான பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு வெவ்வேறு கோட்பாடுகளின் ஊடாக மெய்யியலின் அடிப்படைகளை விளக்குகிறது. இது நூலின் இன்னோர் சிறப்பு அம்சம்.

மெய்யியல் பற்றி ஆரம்ப அறிவு எதுவும் இல்லாத ஒருவர் 'ஐரோப்பிய மெய்யியல் வரலாறு' என்ற தலைப்பில் அமையும் நூல் ஒன்றின் விடயப்பொருளை கிரகித்தல் மிகவும் கடினமானதொரு முயற்சியாகும். 'மெய்யியல் - ஓர் அறிமுகம்' நூல் மெய்யியல் என்னும் பாடத்துறையுள், இலகுவில் பிரவேசிக்கவும், அடிப்படைக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

## மெய்யியல் – வரைவிலக்கணம்:

வரலாற்று முறையில் மெய்யியலை விபரிக்கும் நூல்கள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் என்று ஒவ்வொரு சிந்தனையாள ராக எடுத்து அவர் மெய்யியலை எப்படி வரைவிலக்கணம் செய்தார்? அறிவாராய்ச்சியல் பற்றிய அவர் கருத்து என்ன? உள்பொருளியலிற்கு அவர் பங்களிப்பு யாது? என்றவாறாக விளக்கங்களை எடுத்துச் சொல்வதைக் காணலாம். இந்நூ லாசிரியர் மெய்யியல் என்றால் என்ன? என்ற முதலாவது கட் டுரையில் வரைவிலக்கணம் குறித்த வரலாற்றை மட்டும் எடுத் துரைப்பதன் மூலம் மெய்யியல் சிந்தனையின் பரிணாமத்தை




தெளிவுற எடுத்துக் கூறுகிறார். சில நூல்கள் மெய்யியல் பற் றிய பல்வேறு வகையான வரைவிலக்கணங்களை அட்டவ ணையாக நிரல்படுத்திய பின் ஒவ்வொரு வரைவிலக்கணத் தின் குறை, நிறைகளை மதிப்பீடு செய்யும் முறையில் விளக் கங்களைக் கூறிச் செல்வதுண்டு. இதுவும் பயனுடையதொரு எடுத்துக் கூறல் முறையே. ஒரு விடயத்தைப் பலகோணங்க ளில் எடுத்துக்கூறும் வெவ்வேறு வகை நூல்களைப் படிப்ப தன் மூலமே சூச்சுமமான கருத்துக்களைப் பற்றிய மெய்யி யல் போன்றதொரு பாடத்தை ஐயம் திரிபின்றிக் கற்றல் முடி யும். 'மெய்யியல் - ஓர் அறிமுகம்' நூலின் சிறப்பு அது விடயத் தைக் கூறும் முறையில் புதியதொரு பாதையில் செல்வதே ஆகும்.

மிலிட்டஸ் நகரத்து தேலிஸ் (பொ.ஆ.மு. 580) மெய்யியல் வர லாற்றின் திருப்புமுனையாக அமைந்த சிந்தனையாளர். அனைத்திற்கும் அடிப்படையானது நீர், அதுவே பொருட்கள் யாவற்றின் உற்பத்திக்கும் ஆதாரமானது என்று தேலிஸ் கூறி னார். எல்லாம் நீரினால் ஆகின்றன என்ற தேலிஸ் தத்துவம் தவறானது என்பது தெளிவு. எனினும் மனித சிந்தனை வர லாற்றில் அவரது கருத்து மிகப் பெரியதொரு பாய்ச்சல் ஆகும். ஏனெனில் 'தேலிஸ் பிரச்சினையின் தீர்வை இயற் கைக்கு அப்பாற் தேடாது இயற்கைக்கு உட்பட்ட ஒன்றை விடையாகத் தேட முயன்றார். அவரின் இத்தகைய சிந்த னைப்பாங்கே அவருக்கு முற்பட்ட புராணக் காலத்து தொன் மச் சிந்தனை முறைமையில் இருந்து தேலிசை வேறுபடுத்தும் அடிப்படை' என நூலாசிரியர் விளக்கம் தருகிறார்.

இவ்விதம் தொன்மச் சிந்தனை / விஞ்ஞானப் பாங்கான சிந் தனை என்ற பாகுபாட்டினை விளக்கிய பின்னர் விஞ்ஞான சிந்தனையும் மெய்யியலும் ஒத்த இயல்பினவா? என்றே கேள் வியை முன்வைக்கிறார். மெய்யியல் பிரச்சினைகள் யாவற் றிற்கும் விஞ்ஞானத்தால் விடை தர முடியாது; மனிதன் மீண் டும் மீண்டும் பௌதீகவதீதவாதத்தின் துணையுடன் மெய்யி யல் பிரச்சினைகளுக்கு விடை தேடுகிறான் என்பதை தேலி- ஸின் மாணவர் அனக்சிமாந்தரின் கருத்துக்களை உதாரணம் காட்டி விளக்குகிறார். இவ்விதம் தேலிஸில் ஆரம்பித்து 20-ம் நூற்றாண்டின் விக்கன்ஸ்டைன் வரையான மெய்யியலாளர்க ளின் கருத்துக்களின் வளர்ச்சியை எடுத்துக் காட்டி மெய்யிய லின் வரைவிலக்கணத்தை தெளிவுபடுத்துகிறார்.

## அறிவாராய்ச்சியியல் –<br>நியாவாதமும் அனுபவவாதமும்:

நூலின் 2-ம், 3-ம் அத்தியாயங்கள் முறையே நியாயவாதம், அனுபவவாதம் என்னும் அறிவாராய்ச்சியல் கோட்பாடுகளை விபரிப்பவையாக உள்ளன. அறிவாராய்சியியல் என்றால் என்ன என்பதை ஆசிரியர் பின்வருமாறு அறிமுகம் செய்கி றார்:

அறிவாராய்ச்சியியல் என்பது அறிவு பற்றிய கொள்கையா கும். அறிவு என்றால் என்ன? அறிவிற்கும் அபிப்பிரயாத்திற் கும் இடையிலான வேறுபாடு யாது? நிச்சயத்தன்மை அறி வின் இன்றியமையாப் பண்பாகுமா? அறிவின் வரையறைகள் யாவை? அறிவைப் பெறுதல் சாத்தியமாகுமா? என்பன போன்ற பிரச்சினைகளைப் பற்றி அறிவாராய்ச்சியியல் ஆராய்கிறது. (பக் 21)

அறிவின் தோற்றுவாய் மனிதனின் பகுத்தறிவே என்று கூறு வது நியாயவாதம் (Rationalism). நியாயவாதத்திற்கு மாறாக அனுபவவாதம் (Empricism) புலனுணர்வுகளின் வழிப்பெறும் அனுபவமே அறிவின் ஆதாரம் என்று கூறியது. இதனைப் பட் டறிவியம் என்றும் கூறலாம். நவீன மெய்யியலில் நியாயவா தம், அனுபவவாதம் என்ற இருவேறு சிந்தனைப் போக்குகள் உள்ளன. நவீன மெய்யியலின் ஊற்றுக் கண்களைக் கிரேக்க

மெய்யியலில் காணுதல் முடியும். நியாயவாதத்தின் மூலவர் பிளேட்டோ ஆவர், அனுபவவாதத்தின் மூலவர் அரிஸ்டாட்டில் ஆவர். டெக்கார்டுடன் ஆரம்பிக்கும் நவீன நியாயவாதத்தை பிளேட்டோவுடனும், பிரித்தானிய அனுபவவாதச் சிந்தனையாளரான லொக்குடன் ஆரம்பிக்கும் நவீன அனுபவவாதத்தை அரிஸ்டாட்டிலுடனும் தொடர்படுத்தி விளக்கியிருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

நியாயவாதம் என்ற பகுதியில் பிளேட்டோ, டெக்கார்ட் என்ற இரு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் தெளிவாக விளக்கப்படுகின்றன. அனுபவவாதம் பற்றிக் கூறுகையில் அரிஸ்ரோட்டில், லொக், பார்க்ஸி, டேவிட் ஹியும் ஆகிய நான்கு சிந்தனையாளர்களின் கருத்துகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. டேவிட் ஹியுமினது மெய்யியல் கருத்துக்கள் 20-ம் நூற்றாண்டின் தருக்கப் புலனறிவாதத்திற்கு (Logical Positivism) மெய்யியல் அடிப்படையை வகுத்துள்ளதெனக் கூறி 3-வது அத்தியாயத்தின் இறுதியில் தருக்கப் புலனறிவாதம் பற்றிச் சுருக்கமாக விளக்குகின்றார். அறிவாராய்ச்சியியல் என்னும் விரிந்த பொருளை 2-ம் 3-ம் அத்தியாயங்களில் 21 முதல் 59 வரையான 39 பக்கங்களில் சுருக்கமாக, ஆனால் ஆழம் மிக்கதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## உள்பொருளியல்:

'மெய்மை பற்றிய கொள்கை அல்லது உள்ளது பற்றிய கொள்கை என உள்பொருளியியலை நாம் வரையறை செய்யலாம்' என்று தொடங்கும் இவ்வத்தியாயத்தில் உள்பொருளியியல் பற்றிய கோட்பாடுகள் யாவற்றையும் நான்கு வகையாகப் பிரிக்கலாம் என்று கூறி அந்நான்கு வகைகளையும் குறிப்பிடுவதன் மூலம் கற்போரை உள்பொருளியியல் பற்றிய ஆய்வின் அடிப்படைகளுக்கு நேராக நூலாசிரியர் அழைத்துச் செல்கிறார். அக்கோட்பாடுகளாவன:

- ஒருமைவாதம் (Monism): உள்ளதெல்லாம் ஒன்றே ஒன்று; அதுவே மெய்மை என்பது ஒருமைவாதமாகும்.
- இருமைவாதம் (Dualism): உள்பொருள் இருவகையானது. இரண்டும் மெய்மையாகும்.
- பன்மைவாதம் (Pluralism): உள்பொருள் பல்வகை மெய்பொருள்களால் ஆனது.
- சூனியவாதம் (Nihilism): மெய்யானது எதுவுமே இல்லை.

இந்நூலின் மிகச் சிறந்த பகுதியாக நாலாம் அத்தியாயம் விளங்குகிறது. உள்ளம் பற்றிய மெய்யியல் (Philosophy of Mind) என்னும் விடயத்தை டெக்கார்ட்டின் இருமைவாதம் மூலம் அறிமுகம் செய்தபின் நூலாசிரியர் சடப்பொருள் ஒருமைவாதம் (Materialist Monism) என்னும் கோட்பாட்டை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறார். சடப்பொருள் ஒருமைவாதம்.

- நடத்தைவாதம் (Behaviourism)
- உளத்தை மூளையுடன் முற்றொருமைப்படுத்தும் கொள்கை

என்று இருவகைப்படும் என்றும், இவற்றுள் நடத்தைவாதத்தை பின்வரும் மூன்று பிரிவுகளாக பிரித்து நோக்கலாம் என்றும் கூறுகிறார்:

- கடுங்கோட்பாட்டாளர்களின் நடத்தைவாதம்
- மென்மைக் கோட்பாட்டாளர்களின் நடத்தைவாதம்
- தருக்க நடத்தை வாதம்

இவ்வாறான வகைப்பாடு உடல் - உள்ளம் பற்றிய நவீன மெய்யியல் கோட்பாடுகளை புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. யோன் வேட்சன் (1878-1958), ஸ்கின்னர் (Skinner) ஆகியோரின் உளவியல் கோட்பாடுகள் நடத்தைவாதம் என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. மெய்யியலும், நவீன உளவியலும் சங்கமிப்பதை இங்கே காண்கின்றோம்.

## சமய மெய்யியல்:

உள்பொருளியலின் பகுதியாக அமையும் இன்னோர் விடயம் இறை இருப்பு பற்றியதாகும். கடவுளின் இருப்பு அல்லது இருப்பின்மையை நம்புவதற்கு ஏற்ற வலிதான நியாயங்கள் எவையேனும் உளதா ? கடவுள் எத்தகையவர் ? அல்லது அத்தகையவர் எவரும் இல்லை எனலாமா ? என்ற கேள்விகளுடன் ஆரம்பிக்கும் இக்கட்டுரை கடவுளின் இருப்பு இருப்பின்மை பற்றிய நான்கு கோட்பாடுகளை அல்லது வாதங்களைப் பரிசீலிக்கிறது.

- அன்சலத்தின் (Anselm) உள்பொருளியல் நிரூபணங்கள் (Theological Arguments),
- காண்டினுடைய அண்டவியல் நிரூபணங்கள் (Cosmological Arguments),
- இறை இருப்புத் தொடர்பான நோக்கக் கொள்கை,
- இறை மறுப்புவாதம் (Atheism)

என்பன விளக்கப்பட்டுள்ளன. சமய மெய்யியலின் பகுதியாக அமையும் கடவுளின் இருப்பு, இருப்பின்மை பற்றிய மேற்குறித்த வாதங்கள் யாவும் மத்தியகால மெய்யியலில் விரிவாகப் பேசப்பட்டவை. மத்திய கால மெய்யியல் பற்றிய பாடநூல் எதுவும் இன்று தமிழிற் கிடைப்பதாயில்லை. இப்பின்னணியில் சமய மெய்யியல் என்னும் 5-வது அத்தியாயம் மாணவருக்கு மிக்க பயனுடையது. இந்து நாகரிகம் என்னும் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் இறை இருப்புப் பற்றிய உண்மை - பொய் பற்றிய விவாதங்களை சைவசித்தாந்தம் போன்ற வைதீக தத்துவங்களின் நோக்கில் 'பரபக்க உலோ-கயுதம்' என்ற வகையிலேயே கற்கும் வழமை உள்ளது. ஐரோப்பிய சமய மெய்யியலின் ஊடான இறை இருப்பு, இறை மறுப்பு வாதங்கள் இந்து நாகரிகம் கற்கும் மாணவர்களுக்கு பயனுடையதாக அமையும் எனக் கருதுகிறேன். கிறிஸ்தவ நாகரிகத்தைத் தமிழில் பயிலும் மாணவர்கள் தமது பாடப் பரப்புள் அமையும் விடயம் ஒன்றைப் பற்றி இந்நூலாசிரியர் எழுதியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவர். இந்நூல் அவர்களிற்கும் பயன் உடையதாக இருக்கும்.




### சுதந்திரம் (Freedom):


உள்பொருளியல், அறவியல் (Ethics), அரசியல் மெய்யியல் ஆகிய வெவ்வேறு மெய்யியல் பிரிவுகளில் விவாதிக்கப்படும் சுதந்திரம் என்னும் எண்ணக்கரு பற்றி இறுதியாக அமையும் 6-வது அத்தியாயம் ஆராய்கிறது. சுதந்திரம் பற்றி உள்பொருள் மெய்யியல் பின்வரும் வினாக்களை அடிப்படையாகக் கொண்டது:

- சுதந்திரம் என்ற சொல்லால் நாம் கருதுவது யாது?
- உண்மையில் சுதந்திரம் இருக்கிறதா? அல்லது அது கட்டாயப்படுத்துவது மட்டுமா?
- இயற்கை விதிகளின் படி இயங்கும் உலகில் சுதந்திரம் சாத்தியமாகுமா?
- சுதந்திரம் உளதென எப்பொழுதாயினும் நாம் அறிந்துள்ளோமா?
- 'சுதந்திரம் உளது' என்ற வாக்கியம் ஒரு விபரிப்பு எடுப்போ அல்லது அதில் தர வேறுபாடுகள் உளதோ, சுதந்திரம் உண்டென்பது ஒரு வெளிப்படை உண்மையோ?
- இவையெல்லாம் நடைமுறை சார்ந்த பிரச்சினைகளோ அல்லது புலமைத்துவ ஆர்வம் கொண்டனவோ. (பக்.89)


நிர்ணயவாதம் (Determinism), நிர்ணயமில்வாதம், சுயாதீன வாதம் ஆகிய கோட்பாடுகளின் பின்னணியில் மேற்குறித்த பிரச்சினைகளைக் கட்டுரை ஆராய்கிறது. உள்ளம் உடல் - உறவு பற்றி ஆராய்ந்த பொழுது நவீன உளவியல் கோட்பாடுகளின் துணையுடன் விளக்கங்களைக் கூறியிருப்பது போன்று இப்பகுதியிலும் ஸ்கின்னர், சிக்மன்ட் பிராய்ட் போன்ற நவீன உளவியலாளர்களின் கருத்துக்களையும் நூலாசிரியர் எடுத்தாள்கிறார்.

### முடிவுரை:

மெய்யியல் என்னும் கல்வித்துறை சூச்சுமமான கருத்துகள், கருத்தாக்கங்கள் என்பனவற்றுடன் தொடர்புடையது. மெய்யியல் தொடர்பான பொய்மைகள், தப்பெண்ணங்கள் பல தமிழ்ச் சூழலில் இருந்து வந்துள்ளன. ஆகவே இத்துறை பற்றிய பாடநூல் ஒன்றின் பணியினை மருட்சி நீக்கம் (Demystification) என்று கூறலாம். 'மிஸ்ரிபை' (Mystify) என்ற சொல்லிற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில - தமிழ் அகராதி பின்வரும் அர்த்தங்களைத் தருகிறது: நம்பவைத்து ஏய்த்தல், கோமாளியாக்கு, மருட்சிக்கு ஆளாக்கு, திகைக் கவை, புதிரிடு, புதை மறைவு செய், புரியாததாக்கு என்பனவே இந்த அர்த்தங்கள். மேற்குறித்த குற்றங்கள் எதுவும் இல்லாத சிறந்த நூல் ஒன்றைக் காலம் சென்ற பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா எமக்கு தந்திருக்கிறார். இந்நூல் தமிழ் அறிவு உலகில் அவருக்கு நிலையான இடத்தை வழங்கும் என்பதில் ஐயமில்லை.



shanmugalingam@thaiveedu.com




## காலனித்துவச் சமூக வரலாற்று ஆவணப்பதிவு

## தமிழ்நதியின் "தங்க மயில்வாகனம்"

- சின்னராஜா விமலன் -

தமிழ் இலக்கிய உலகில் கவனிப்புக்குரிய ஒருவராக விளங்குபவர் தமிழ்நதி. சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, விமர்சனம் என எழுத்தின் பல்வகைமைகளிலும் தன்னை நிரூபித்தவர். அவரது சிறுகதைத் தொகுப்புக்களாக நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது, மாயக்குதிரை ஆகிய நூல்களும், கவிதைத் தொகுப்புக்களாக சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி ஆகிய நூல்களும் கட்டுரைத் தொகுப்பாக ஈழம்: தேவதைகளும் கைவிட்ட தேசம் என்ற நூலும் இவற்றோடு கானல் வரி என்ற குறுநாவலும், பார்த்தீனியம் என்ற நாவலும் இதுவரை வெளிவந்துள்ளன. அவரது படைப்புகள் ஈழத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் பரவலான கவனத்தைப் பெற்றவை. ஓர் எழுத்தாளர் என்பதற்கப்பால் நூல்கள் மீது அவர் வெளிப்படுத்தும் வாசக நேசம் எனக்குப் பிடித்தமானது. தமிழ்நதி ஈழம், தமிழகம், கனடா என்று வாழ்ந்ததனால் அந்த வாழ்க்கை அனுபவங்கள் திரிவேணி சங்கமம் போல படைப்புக்களில் சுவறிக்கிடக்கின்றன. அவரது அண்மையில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புத்தான் தங்க மயில்வாகனம். தமிழினி வெளியீடாக வெளிவந்த இந்தச் சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக நான் சிறுகதைத் தொகுதிகளையும் கவிதைத் தொகுதிகளையும் படிக்கும் பொழுது தலைப்புக்குச் சூட்டப்பட்டுள்ள பெயரில் சிறுகதையோ, கவிதையோ நூலில் இடம் பெற்றிருந்தால் முதலில் அதனையே வாசிப்பதுண்டு. அந்தவகையில் தங்க மயில்வாகனம் சிறுகதைத் தொகுப்பின் மகுடக் கதையையே முதலில் வாசித்தேன். அந்த வாசிப்பனுபவம் தந்த அருட்டுணர்வே சமூகவியல் பார்வையிலான இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டியது எனலாம். ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் காலனித்துவ காலத்தைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகள் அரிதாகவே வெளிவந்துள்ளன. அதிகம் பேசப்படாத அந்தக் காலப்பகுதியை களமாகக் கொண்டே இந்தச் சிறுகதை எழுதப்பட்டுள்ளது. அதாவது ஆறுமுகநாவலர் மறைந்த பின்னரான காலப்பகுதியான 1886-ம் ஆண்டு கதை நிகழ்வதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையை மேலே எழுதிச் செல்வதற்கு முன்னர் கதைச் சுருக்கத்தை முதலில் பதிவு செய்வது அவசியமாகின்றது.

உயர் சாதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளையின் வீட்டில் அடிமைக் குடிகளுள் ஒருவனாகிய முத்தனின் மகள் தங்கம் தொட்டாட்டு வேலைகள் செய்து வருகின்றாள். சிறிது காலத்தின் பின்னர் மிசனரிமார் நடத்திய பாடசாலையில் கல்வி கற்பதற்காகத் தங்கம் செய்யும் வேலையை விட்டுச் செல்கின்றாள். கணபதிப்பிள்ளையின் மகன் மயில்வாகனம் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறி வட்டுக்கோட்டை கல்லூரியில் பணி புரிகின்றான். தங்கத்தை அவள் சிறுமியாக, தங்கள் வீட்டில் வேலை செய்யும் போதே அவன் அறிந்திருந்தான். அப்போது வீட்டுக்காரர்களால் கடைப்பிடிக்கப்படும் சாதியக் கட்டுப்பாடுகளையும் மீறி அவளுக்கு, அவர்கள் அறியாமல் உதவியும் செய்கிறான். வீட்டுக்கு அவள் வராமல் விட்டபின் நீண்ட காலம் அவளைக் காணாமல் இருந்தவன், மானிப்பாயில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் மதம் மாறிய அவளைக் கண்டதும் காதல் வசப்படுகின்றான். தங்கம் அப்போது மிசனரியில் சிறுபிள்ளைகளுக்கு பைபிள் கற்பித்துக் கொண்டிருந்தாள். காதலில் விழுந்த மயில்வாகனம் தங்கத்தை திருமணம் செய்ய விரும்புகின்றான். தங்கத்திற்கும் மயில்வாகனம் மீது விருப்பம் இருந்தாலும் சாதித் திமிர் பிடித்த கணபதிப்பிள்ளையால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் ஆபத்து வரலாம் என்பதைக் குறிப்பிட்டு திருமணத்திற்கு மறுத்து விடுகின்றாள். மயில்வாகனமும் தங்கம் கூறியதன் யதார்த்தத்தைப் புரிந்தவனாய் தந்தையை எதிர்த்து தன்னாலும் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்கிறான். தங்கத்தை மறக்க முடியாமல் அவளின் நினைவேக்கத்துடனேயே வாழ முடிவு செய்து ஊரை விட்டு விலகி, மிசனரிமாரோடு இங்கிலாந்து செல்கிறான்.

அந்தவகையில் 19-ம் நூற்றாண்டு காலனித்துவ காலம் தொடர்பாக ஏற்கனவே வெளிவந்த புனைவுசாரா நூல்களின் பின்னணியில் அந்தக் காலனித்துவ காலத்தைப் புனைகள மாக்கிய தமிழ்நதியின் 'தங்க மயில்வாகனம்' சிறுகதையை ஒப்புநோக்கி ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வரலாற்றில் எப்போதும் நிகழாத வகையில் சமூக மாற்றங்களும் சமய வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தன. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் உள்நுழைந்த வெஸ்லியன், அமெரிக்க மிசன் முதலான புரட்டஸ்தாந்து மிசனரிகள் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே இருந்த பாரம்பரிய சமூகக் கட்டமைப்புக்குச் சவாலாக




இருந்தன. அவற்றின் மதமாற்ற முயற்சிகள், சைவம் தொடர்பாக அவர்களால் முன்வைக்கப்பட்ட மாற்றுக்கருத்துகள் சுதேசிகளின் மனநிலையில் தாக்கத்தைச் செலுத்தி இருந்தன. கோல்புறாக் சீர்திருத்தத்தின் பயனாக 1833-ல் ஆங்கிலக் கல்வி வலியுறுத்தப்பட்டதனால் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை யாழ்ப்பாணத்தவர்கள் உணர்ந்தார்கள். ஆனாலும் அதனை மிசனரிமார்களின் கல்வி நிறுவனங்கள் ஊடாகவே பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏனென்றால், அன்றைய யாழ்ப்பாணத்தில் நவீன கல்வியானது மிசனரிமார்களின் கைகளிலேயே இருந்தது.

'கிறிஸ்தவ மதத்திற்கு கவரும் பொருட்டு, செமினறியில் இலவசமாகவே கல்வி கற்பித்தனர். அமெரிக்காவில் வசிக்கும் செல்வந்தர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் பொறுப்பெடுத்து அவர்களின் கல்விச் செலவு, உணவு, உறையுள் செலவுகள் யாவற்றையும் பொறுப்பெடுத்துக் கொண்டனர். அப்படி அவர்கள் பொறுப்பெடுக்கும் போது, அவ்வாறு பொறுப்பெடுத்தவர்களால் தமது மதப் பெயர்களை, அந்தந்தப் படிப்பின் நிதி உதவியைப் பெறுபவர்கள் தமது பெயர்களுக்கு முன்னால் சூட்டிக் கொள்ள வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக இருந்தது. இதன் காரணமாகவே கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய சி.வை. தாமோதரம்பிள்ளை, கறோல் விசுவநாத பிள்ளை ஆகிய இருவரும் பெயரை மாற்றிக் கொண்டனர். தாமோதரம்பிள்ளை அவர்களின் இயற்பெயர் வைரவநாதர் தாமோதரம் என்பது மட்டுமே. இவரது கிறிஸ்தவப் பெயர் சாள்ஸ் வின்சுலோ தாமோதரம் என்று தனக்கு நிதி உதவி செய்யும் அமெரிக்கக் குடும்பத்தின் பெயரையும் சேர்த்து அமைத்துக் கொண்டார்'[1]

கிறிஸ்தவப் பெயர் சூட்டப்பட்ட விடயத்தை தமிழ்நதி கதையில்...

'மயில்வாகனத்தின் அண்ணருக்குத் தாளமுடியாத வெப்பியாரம். அவருக்கு ஆங்கிலேய ஆட்சி பிடிக்கவில்லை. ஆங்கிலேயர்களது ஆட்சி மட்டுமென்றில்லை போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகிய அந்நியர்கள் இத்தீவினுள் நுழைந்ததும் முத்து, யானை இன்னபிற வளங்களை எல்லாம் வாரியள்ளிக் கப்பல்களில் ஏற்றித் தமது நாடுகளுக்கு அனுப்பியதும் அவர் தம் பரப்புரைகளினால் ஈர்க்கப்பட்டு, யாழ்ப்பாணத்தில் பலபேரும் கிறிஸ்தவர்களாக மதம் மாறியதும் கூடப் பிடிக்கவில்லை. மயில்வாகனமும் மதம் மாறி மயில்வாகனம் என்ற பெயருக்கு முன்னால் 'கிங்ஸ்லி' என்றொரு முன்னொட்டைப் போட்டுக் கொண்டது அவருக்கு அறவே பிடிக்கவில்லை' (பக்கம்: 65, 66).

கதையில் மயில்வாகனத்தின் தந்தையார் கணபதிப்பிள்ளை, மயில்வாகனத்தை கிறிஸ்தவத்திற்கு மதம் மாற ஏன் அனுமதித்தார் என்பதை...

'சாதி, சமயத்தில் பெரும் பற்றுள்ளவரென யாழ்ப்பாணப் பட்டினம் முழுவதும் அறியப்பட்டவராகிய கணபதிப்பிள்ளை, தனது மகன் மயில்வாகனத்தை கிறிஸ்தவத்துக்கு மதம் மாறவும் மிசனரியால் நடத்தப்படும் கல்லூரியிலே கல்வி கற்கவும் அனுமதித்ததற்கு ஒரேயொரு காரணம் தான் இருந்தது. ஆங்கிலக் கல்வியினால் மகனுக்கு உயர் பதவி கிட்டுமெனில் அவனை நல்லதோர் விலைக்கு விற்றுவிடலாம் என்பதவர் கனவு. பரம்பரை பரம்பரையாகக் கிட்டிய காணிகளோடுகூட சீதனமாக மேலும் காணிகள், வீடுகள், காசு பணம் இவற்றி

னால் உண்டாகும் அந்தஸ்து இன்னபிற வரவுகளை முன் னிட்டு சற்றே மனமிளகி தன் மகன் வேதக்காரனாக மாற அனு மதித்தார் கணபதிப்பிள்ளை' (பக்கம்: 72).

இந்த விடயத்தில் நாவலரது நிலைப்பாடு ஆங்கில ஆட் சியை வரவேற்கும் அதேவேளை, மிசனரிகளின் தேவையை யும் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டு ஆங்கிலம் கற்க வருபவர் மீது கிறிஸ்தவ மதக் கருத்துக்களைத் திணிக்கக் கூடாது என் பதாகவே இருந்தது. நாவலரைப் பொறுத்தவரையில் அந்தக் கல்வியைப் பெறும் வரையில் தான் அவர்கள் மிசனரிமார் சொல்வதை ஏற்றுக் கொள்கிறார்கள். கல்வி முடிந்த பின்னர், அதற்குக் கிஞ்சித்தேனும் மதிப்புக் கொடுக்கவில்லை.

இது குறித்து பேராசிரியர் கா. சிவத்தம்பி 'ஆங்கில ஆட்சி வழங்கிய மத அநுட்டான சுதந்திரத்தைப் பயன்படுத்தி தாம் படிக்கும் பொழுது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களான நிலை மையில் இருந்து பின்னர் தம்மை விடுவித்துக் கொண்டவர் கள் பலர். ஆறுமுகநாவலரின் இயக்கமும் அதற்கு உதவி இருக்கும். ஆனால் பெரும்பாலானவர்கள் பஞ்சத்து ஆண்டி களே. மிசனரிப் பாடசாலைகள் வழங்கிய கல்வி வாய்ப்பைப் பயன்படுத்தி மேல்நிலை எய்திய பின்னர் மீண்டும் தமது சம யத்திற்குத் திரும்பினர். சி.டி. வேலுப்பிள்ளை குறிப்பிடுவது போன்று பெரும்பான்மையும் 'மாரீசக் கிறித்தவர்களாக' இருந் தனர் என்பதும் வரலாற்று உண்மையாகும் என்று குறிப்பிடு கின்றார்'[2]

அதேவேளை இந்த விடயத்தில் சமயச் சீர்திருத்தவாதிகளி டம் ஏளனப் பார்வையே இருந்ததை...

'யாழ்ப்பாணத்தின் சமய சீர்திருத்தவாதிகள், மிசனரிகள் சாதிக் கட்டுப்பாட்டு விதிகளை மீறுவதாகக் குற்றம் சாட்டியது டன் தங்கள் பிள்ளைகளை மிசனரிப் பாடசாலைக ளுக்கு ஆங்கிலம் கற்பதற்கு அனுப்பிய பெற்றோர்களைக் கேலி செய்தனர். மிசனரிப் பாடசாலைகளுக்குச் சென்று ஆங் கிலம் கற்றோர் தம்மை உயர் சாதியினர் என்று கூறிக் கொள்ள அருகதையற்றோர் எனவும் அவர்கள் கண்டனம் செய்தனர்'[3]

அதேவேளை, 'தாழ்த்தப்பட்ட தமிழர்களிற் பெரும்பான்மையி னர் அன்றும் இன்றும் இந்துக்களாகவே வாழ்ந்து வருகின்ற னர். மத மாற்றத்திற்கான மிசனரிமார்களின் பலத்த பிரச்சாரத் தின் மத்தியிலும் வேளாள ஆதிக்கத்தின் நிராகரிப்பின் கீழும் ஏகப் பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட தமிழர்கள் தொடர்ந்தும் இந்துக்களாகவே வாழ்ந்து வந்தனர். அவர்கள் தம்மை இந்துக்கள் அல்லது சைவ சமயத்தவர்கள் என்று கூறிக்கொண்டு வாழ்ந்த போதிலும் அம்மத நடைமுறைகள் அம்மக்களுக்கு இரண்டாந்தர நிலையையும் அவமானம் மிக்க புறக்கணிப்புக்களையுமே வழங்கியது. இந்துக் கோவில்களுக்குள் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை'[4]

அந்தவகையில் ஒடுக்கப்பட்ட சாதியினர் ஏன் மதம் மாறினார் கள் என்பதை கதையில்...

'எங்கடையாக்கள் ஏன் மதம் மாறினவை. எங்களை இழிசனங் களெண்டு கோயில்களுக்குள்ளையும் வீடுகளுக்குள்ளையும் நுழையவிடாத, சபை சந்திக்கு அடுக்காத, தீட்டெண்டும் துடக்கெண்டும் தள்ளி வைச்ச அநியாயத்தைப் பொறுக்கா மத்தானே வேதத்துக்கு மாறினவை' (பக்கம்: 68, 69).

ஆனாலும் கதையின் இன்னோர் இடத்தில் தமிழ்நதி கீழ்வரு மாறு குறிப்பிட்டிருப்பார்...

'வேதக் கோயிலுகளுக்குள்ள போறதுக்கும் சரிசமனாயிருந்து கும்பிடுறதுக்கும் வெள்ளைக்காரற்றை மதம் தடை போடேல் லையே' (பக்கம்: 69).

ஆனாலும், இந்த வரிகள் விமர்சனத்திற்குரியது. ஏனென்றால் வெகுஜனன், இராவணா எழுதிய 'இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்' நூலில்...

'வெளிப்பார்வைக்கு சமத்துவமும் தாராளப் போக்கும் ஆண் டவன் தேவாலயத்தில் அனைவரும் சமம் என்றவிதமான தோற்றமும் காணப்படினும் உட்சென்று பார்த்தால் அங்கு சாதியினதும், தீண்டாமையினதும் அம்சங்கள் நிலைத்து இருப்பதையும் காணமுடியும். கிறிஸ்தவத் தேவாலயங்களில் உள்ள இருக்கைகளில் வித்தியாசம் காட்டப்பட்டன. உயர் வேளாள கிறிஸ்தவர்கள் பாவிக்கும் ஆசனங்களைத் தாழ்த் தப்பட்ட கிறிஸ்தவர்கள் பாவிக்க முடியாது. இந்துக் கோவில் களில் வெளிவீதிகளில் கட்டப்பட்டிருக்கும் 'கயிறுகள்' கிறிஸ் தவத் தேவாலயங்களில் உள்மண்டபங்களில் கட்டப்பட்டிருந் தன என்றால் எவ்வளவிற்கு சாதி அமைப்பின் தாக்கம் கிறிஸ் தவ மதத்தின் மத்தியில் ஊடுருவி இருந்தது என்பதைக் காண முடியும்'[5]. எனக் குறிப்பிட்டிருப்பது அதனைக் கேள் விக்குட்படுத்துகின்றது.

மேலும் மிசனரிமார்களின் மதமாற்றப் பணிக்கு சாதிய ரீதி யாக ஏற்பட்ட அழுத்தங்களை காலப்போக்கில் அவர்கள் எவ் வாறு கையாண்டார்கள் என்பதனை...

'மிசனரிகளில் மதம் மாற்றும் பணிக்குச் சாதியமைப்புத் தடை யாகவும் இருந்தது. ஆரம்பகட்டத்தில் மிசனரிகள் உயர் சாதி யினரின் நிர்ப்பந்தங்களுக்கும் அழுத்தங்களுக்கும் விட்டுக் கொடுத்தனர். ஆயினும் மிக விரைவிலேயே அவர்கள் தாம் அத்தகைய போக்கைத் தொடர மாட்டோம், சாதீயத்தை சகித்துக் கொள்ளப் போவதில்லை என்பதை வெளிப்படுத்தி னர்'[6]. என்பதன் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

இதனைக் கதையில்...

'மிசனரிக்கும் ஊருக்குள் இருக்கும் சாதிமான்களுக்கும் இடையில் ஏற்கனவே பகை முட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே இவ்விடயத்திற் தலையிட மிசனரி விரும்பாது' (பக்கம்: 81).

மிசனரிகளால் மதம் மாறியவர்களுக்கு வழங்கப்பட்ட பணிக ளையும் கதையில் இருந்து அறிய முடிகிறது.

‘சிறுபிள்ளைகளுக்கு பைபிள் கற்பிப்பதற்காக மானிப்பாய் மிசனரிக்கு தங்கம் வந்து செல்வதை அவன் எங்ஙனமோ அறிந்து கொண்டான். பைபிள் விற்கும் பணியைத் தானே இழுத்துப் போட்டுக் கொண்டான். வரவாகும் பணத்தை மானிப்பாய் மிசனரியில் இருந்த ஈவ்லின் அம்மாவிடம் கைய ளித்தல் வேண்டும்’ (பக்கம்: 65).

சிறுபிள்ளைகளுக்கு பைபிள் கற்பிப்பதாகக் கதையில் குறிப் பிட்டாலும்...

‘இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் கிறிஸ்தவ சமயத்தை தழுவிக் கொண்டால் அவர்கள் மூலமாகத் தென்னிந்தியா வில் உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு கிறிஸ்தவத் தைப் போதிக்கலாம்’[7] என்பதும் மிசனரிமார்களின் எண்ண மாக இருந்தது.

அமெரிக்க மிசனரிமார் அமைத்த பாடசாலைகளில் காணப்பட்ட இன்னொரு சிறப்பு பெண் கல்வியாகும்.

‘அமெரிக்க மிசனரிமார் வரும் வரையில் யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி கவனிக்காது விடப்பட்டிருந்தது. பல ஆண்டு காலமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இயங்கி வந்த போதிலும் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவே இருந்தார் கள். பெண்களின் கல்வியில் அக்கறை கொண்டிருந்த அமெ ரிக்க மிசனரிமார் பலத்த எதிர்ப்பின் மத்தியில் பெண்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டி இருந்தது. இந்துக்கள் பல பள் ளிகளை ஆரம்பித்து திறம்பட நடத்திய போதிலும் அவர்கள் பெண்களுக்கு கற்பிப்பதனை விரும்பவேயில்லை’[8]

இதனைக் கதையில்...

‘உனக்கிண்டைக்கு என்ன நடந்ததடி பெட்டை? கிணத்துக்கட் டிலை பிள்ளையை இருத்திப் போட்டு வந்தாப் போலை பறதி பறதியாய் வேலை செய்யிறாய்?’ ஆச்சி வினவினார்.

பள்ளிக்கூடத்துக்குப் போகோணும் நாச்சியார்.

அவளது பதில் ஆச்சிக்கு மட்டுமில்லை... மயில்வாகனத்துக் கும் வியப்பளித்தது.

அங்கை போய் நீயென்னெய்யப் போறாயடி.

பற்களெல்லாம் விழுந்து உள்ளடங்கிப் போன மோவாயில் ஆச்சரியத்தோடு கை வைத்தபடிதான் ஆச்சி அந்தக் கேள் வியைக் கேட்டிருக்க வேண்டும்.

வெள்ளைக்கார அம்மாமார் எங்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தருகினம் நாச்சியார்’ (பக்கம் : 63).

மேலிருந்து வரும் சமூகச் சலுகைகளை அடிநிலைக்குச் சுவற விடாது தமது நிலையினுள் அமைத்துக் கொள்வது யாழ்ப்பாணத்து சமூக மேலாண்மை மரபின் ஒரு பண்பாகக் காணப்பட்டதை, கதையில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

‘கேட்டியளே கதையை உவன் முத்தன்ரை பெட்டை படிக்க வெல்லோ போறாளாம்!

உதென்ன விண்ணாணக் கதை சொல்லுறியள்? என்ரை பிள் ளையாரப்பா இனி என்னெல்லாம் நடக்கப் போகுதோ? இடி விழுந்தாற் போலொரு குரல் அங்கலாய்க்கும்.

இந்த எளிய சாதியள் நாளைக்கு எங்களை மதிக்குமே பொரு மலோடொரு குரல் ஒலிக்கும்.

இவ்வண்ணமாக தங்கத்தின் வித்தியாரம்பம் ஊரார் கண் களை உறுத்தத் தொடங்கியது’ (பக்கம்: 63).

‘கொலனிய சக்திகளின் மொழி, மத, கலாசார ஊடுரு வல்களை எதிர்த்து ஆறுமுகநாவலர் தனது காலத்தில் தமி ழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிச் சென்றார் என்பது துலக்கப்படும் அதேவேளை, தமிழர் சமூகத்திலே பெரும் பிளவாக இருந்து வந்த சாதி அமைப்பை நியாயப்ப டுத்தி, சாதியாசாரத்தை வற்புறுத்திச் சென்றார் என்பதும் மறைக்கக் கூடியதொன்றல்ல’[9]

அந்தவகையில் அன்றைய காலகட்டத்தில் சாதியக் கட்டுப் பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதைக் கதையில்...

‘தங்கம், மயில்வாகனத்தின் வீட்டில் தொட்டாட்டு வேலைகள் செய்து கொண்டிருந்தவள். பெரும்பாலும் மாட்டுப் பட்டியை யும் பின் வளவையும் துப்பரவு செய்வது அவளது வேலை. தீட்டுப்படும் என்றஞ்சி மயில்வாகனத்தின் தகப்பனாரும் அவ னுடைய ஆச்சியும் தங்கத்தை வீட்டுக்குள் ஏற்றுவதில்லை. தவறியும் அவள் கிணற்றில் தண்ணீர் அள்ளிவிடக் கூடாதே யென்று வாளியை அவிழ்த்துக் கொண்டு போய் குசினிக்குள் பத்திரமாக வைத்து விடுவர்’ (பக்கம்: 62).

அடிமை முறை நீக்கப்பட்ட பின்பும் தேச வழமைச்சட்டம் என் பதன் கீழ் தொடர்ந்தும் சாதியம் இறுக்கமாகப் பின்பற்றப் பட்டு வந்ததால் நிலைமையில் முன்னேற்றம் இருக்கவில்லை.

‘அடிமை முறை சட்டப்படி ஒழிக்கப்பட்ட போதும் தாழ்த்தப் பட்ட வகுப்பினரில் பெருந்தொகையினர் தமது எஜமானர்க ளின் அடிமைகளாக இருந்தனர். பொருளாதாரக் காரணங்க ளால் அவர்களால் அடிமை நிலையில் இருந்து விடுபட முடிய வில்லை’[10]

இதனைக் கதையில்...

‘எங்களுக்குப் படியளக்கிற நயினார்மார்களுக்கு சேவகஞ் செய்யிறதெண்டிறது காலாகாலமாக நடந்து வாற வழமை தானே? அதையேன் மாத்தோணும்... அவலச் சா சாகோ ணும்?’ (பக்கம்: 68)

என்றவாறாகச் சித்திரித்தாலும் இளந்தலைமுறையினரிடத்தில் ஏற்படும் மாற்றத்தை...

'இந்தக் கிழங்கட்டைக்கு ஒரு மண்ணும் விளங்காது. கடைசி வரைக்கும் அடிமையாக இருந்து அப்படியே செத்தொழிஞ்சு போறது தான் அதுகளுக்குச் சந்தோசம்' (பக்கம்: 69), எனப் பதிவு செய்திருப்பார்.

இதனையே க. அருமைநாயகம்...

'தாழ்ந்த சாதியினர் இடையிடையே தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தினர் எனினும், தம்மை ஓரணியில் திரட்டிக் கொண்டு சாதிப் பாரபட்சத்திற்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடக் கூடிய திறத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதாவது உயர் சாதியினருக்கு எதிராகக் கிளர்ந்தெழவில்லை. இருந்த போதும், சாதி முறைமையில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஒன்று ஏற்பட்டிருந்தது'[11]... எனக் குறிப்பிட்டிருந்தார்.

'1844-ல் தான் இருபதாம் கட்டளைச் சட்டத்தின் படி அடிமை முறை நீக்கப்பட்டது. இதனை மேற்கொள்ள ஆறுமுகநாவலர் தமது பிரபந்தத் திரட்டு மூலமாக மனுவின் நால்வருணக் கோட்பாட்டின் இறுதியில் உள்ள சூத்திரரை சூத்திரர் என்றும் அசல் சூத்திரர் என்றும் பிரித்து சூத்திரரின் உயர்வுக் கொள்கையை வலியுறுத்தி அசல் சூத்திரராகக் குறித்த பஞ்சமரை அடிமைப்படுத்த வழிவகை செய்தார்'[12.]

அந்தவகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை வாழ்வை கதையில்...

'நாங்களும் மனுசர்தானே! ஆனால், நாய் நாலு காலிலை நடக்குது. நாங்கள் ரெண்டு காலிலை நடக்கிறம் எண்டதைத் தவிர நாய்களுக்கும் எங்களுக்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லையே!' (பக்கம்: 68) என்றவாறாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

'கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து கல்வி பயில்வதைத் தடுப்பதற்காகவே சில உயர் சாதியினர் பஞ்சமரில் சிலரைப் பிடித்துக் கொண்டு அவர்களுக்கென பாடசாலைகளை உருவாக்க முனைந்தனர் எனலாம். இப்படியே விட்டுவிட்டால் பஞ்சமர் அனைவரும் கிறிஸ்தவராகி முன்னேறி விடுவார்களே என்ற அச்சம் தான் பெரும்பாலும் இதற்குக் காரணமாக இருந்திருக்க முடியும். அப்படி இல்லாது விடின் முதலிலேயே அதாவது கிறிஸ்தவ அருட்தொண்டர் வரும் முன்னரே இப்படியான பாடசாலைகளை உருவாக்கி இருக்கலாமல்லவா ?'[13]

அந்தவகையில் ஒடுக்கப்பட்டவர்களின் பொருளாதார எழுச்சி உயர்சாதியினருக்கு எத்தகைய மனக் கொதிப்பை ஏற்படுத்தியது என்பதை கதையில் இவ்வாறு பதிவாகி இருக்கும்.

'மயில்வாகனத்தின் அண்ணருக்கு எல்லாவற்றையும்விட அந்நியர் வரவால் தாழ்ந்த சாதியினரிடத்தில் காசு புழங்கத் தொடங்கி அவர்தம் பொருளாதாரம் மேம்பட்டதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவரளவில் ஆறுமுக நாவலர்தான் இரட்சகர். நல்லைநகர் நாவலர் இல்லையேல் சைவமும் தமிழும் அன்றைக்கே உயிர் விட்டிருக்கும் என்பதே அவனுடைய அண்ணரின் அபிப்பிராயமும்' (பக்கம்: 66).

சாதிமான்களை எதிர்த்ததால், உயிரை விட்ட ஒடுக்கப்பட்டவர்களின் வரலாறும் கதையில் பதிவாகி உள்ளது.

'ஆண்டைகளுக்கு அடங்க மறுத்த ஆதன் என்ற இளைஞன் பாழுங் கிணறொன்றில் நாட்பட்ட பிணமாக ஊறிக்கிடந்து கண்டு பிடிக்கப்பட்டதை அந்தப் பெரியவர் நினைவூட்டினார்' (பக்கம் : 68).

'சங்கிலியின் உடலில் இருந்த கண்டற் காயங்களில் தனது தமையனாருக்கும் தகப்பனாருக்கும்கூடப் பங்கிருந்ததென்பதில் மயில்வாகனத்திற்கு எள்ளளவும் ஐயமில்லை. ஐயோ! கொலை பாதகரே!' (பக்கம் : 70).

'உயர் சாதியினர் தம்மை 'ஐயா' என அழைக்க வேண்டுமென்பது அவர்களது பரம்பரையினரின் எழுதாத சட்டமாகும். அதேசமயம் உயர் சாதியைச் சார்ந்த சிறுபையன்கள் பஞ்சம சாதியினரின் முதியவர்களைக் கூப்பிடும் பொழுது இந்தா கந்தா இங்கை ஒருக்கா வந்திட்டுப் போகட்டாம், அல்லது இஞ்சேர் முத்தன் வீட்டை வரட்டாம் உன்னை என அழைப்பர். இப்படித்தான் தமது இளந்தலைமுறையை உயர்சாதியின் கடந்த காலத்தவர்கள் பழக்கம் பண்ணி வைத்திருக்கின்றனர். இது தங்கள் குலத்திற்குப் பெருமை எனக்கருதி அதைக் கவனமாகக் கடைப்பிடிப்பர்'[14.]

இந்தப் போக்கினை கதையில் மயில்வாகனம், தங்கத்திடம் உரையாடும் போது அவதானிக்கலாம்.

'முத்தன் வீட்டிலை இல்லையா ? '

'முத்தன் வந்ததும் வீட்டிற்கொருக்கா வரச்சொல். ஆச்சி வரச்சொன்னவ தேங்காய் பிடுங்க வேணுமாம்' (பக்கம்: 75).

ஆனாலும், பிற்பட காதல் வசப்பட்ட மயில்வாகனம் அது குறித்துக் கழிவிரக்கப்படுவதையும் கதையில் காண முடிகின்றது.

'மிசனரிமாரோடு தொடர்பேற்படுவதற்கு முன்னால் நானுங் கூட நாக்கூசாமல் அவர்களை அப்படித்தானே அழைத்துக் கொண்டிருந்தேன். வயதானவர்கள் எனினும் சாதியில் தாழ்ந்தோரெனில் அவர்களை மூத்தோரெனக் கருதி மரியாதை கொடுத்ததில்லையே. நயினாரென விழிக்கத் தவறியதற்காக தண்டனை அடைந்தோருமுண்டே' (பக்கம்: 76).

'அறிந்தோ அறியாமலோ பஞ்சமர் யாராவது உயர் சாதியினரில் ஒருவரைக் காதலித்து விட்டால் அல்லது பஞ்சம ஆணொருவர் உயர் சாதிப் பெண்ணுடன் உடலுறவு கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டால், பஞ்சமர் வாழும் குடிசைகள் எரிக்கப்பட.., தொழில்கள் நாசமாக்கப்படுவதற்கும் இரகசிய பரகசிய கொலைகள் நடப்பதற்கும் காரணமாய் அமைந்துவிடும். உயர்சாதிப் பையன் குறைந்த சாதிப் பெண்ணை

விரும்பி மணம் முடித்தால் தகப்பனின் சம்மதத்துடன் உயர் சாதிப் பையன் கொலை செய்யப்படுவான். உயர்சாதிப் பெண் பிள்ளை இப்படியாக நடந்தால் கொலை செய்யப்படுவது அப்பாவி பஞ்சமர் இளைஞர் தான்'[15]

இவ்வாறானதொரு பதிவை 'தங்க மயில்வாகனம்' கதையில், தான் தங்கத்தை காதலிக்கும் விடயம் தந்தைக்குத் தெரிந்தால் அவர் என்ன செய்யக்கூடும் என்பதாகச் சித்திரித்திருப்பார்.

'ஐயா இனி சன்னதங்கொண்டெழுவார். முத்தனை அவருடைய மனைவி, பிள்ளைகள், சட்டி பானைகளோடு பனை வளவில் இருந்து வெளியேற்றி விடுவார். அல்லது ஏதொரு பொருளையும் எடுக்கவும் அனுமதியாமல் விரட்டி விடவுங் கூடும். அந்தக் குடிசைக்கு நெருப்பு வைக்கமாட்டார் என்பதற்கு ஓர் உத்தரவாதமும் இல்லை' (பக்கம்: 80).

ஸ்யோன்ஸ் பெர்க் என்ற வெளிநாட்டு ஆய்வாளர்...,

'உயர்சாதி ஆண்கள் தாழ்ந்த சாதியினருடன் சமபந்தி போசனம் செய்வதை நினைத்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். அதே வேளை, ஒரு தாழ்ந்த சாதிப் பெண்ணுடன் உடலுறவு கொள்ள உயர் சாதியினரில் எத்தனையோ பேர் பகீரதப் பிரயத்தனம் செய்வர். இப்படி நடைபெறும் உறவு, இருவரில் ஒருவரின் அந்தஸ்தையும் பாதிக்காது'[16.]

இத்தகைய பதிவொன்று கதையில் இவ்வாறு வரும்.

'சித்தங்கேணிக்குப் போகும் வழியில் உள்ள புகையிலைத் தோட்டத்தினுள்ளும் மயில்வாகனத்தின் ஐயா அவ்வப்போது ஒதுங்குவதுண்டு. அங்கேயொரு குடும்பத்தை வேலைக்கென குடியமர்த்தி இருக்கிறார். காமத்திற்குத் தீட்டேது? துடக்குத் தான் ஏது?' (பக்கம்: 74).

'தாழ்த்தப்பட்ட மக்கள் என அழைக்கப்படும் மக்கள், உயர்த் தப்பட்டோர் பின்பற்றும் கலாசார நடைமுறைகளைப் பின்பற்ற அறவே அனுமதிக்கப்படவில்லை. நடை, உடை, பாவனை என்று சொல்லப்படும் எதிலும் அவர்கள் சமத்துவமாக நடந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அத்தகைய நடைமுறைகளை மீறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் மீது கொடிய அடக்குமுறை ஏவப்பட்டது. பெண்கள் மேற்சட்டை அணிய முற்பட்ட போதும் ஆண்கள் சேட்டும் கால் முட்ட வேட்டியும் அணிந்த போது, செருப்பு, குடை பாவித்த போது, சைக்கிள், மோட்டார்கார் பிரயாணம் மேற்கொள்ள எத்தனித்த போது எல்லாம், சாதி வெறியர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகினர்'[17]

இது சார்ந்த பதிவொன்று கதையில்...

'செருப்பு அணிந்து குடை பிடித்துக் கொண்டு அவள் மிசனரிப் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வடிவின் முன், அவன் வீழ்ந்தே போனான். அவனுக்கு வடிவாகத் தோன்றிய காட்சி ஏனையோரது கண்களுக்கு சாதி பங்கமாகத் தோன்றிற்றுப் போலும்' (பக்கம்: 77).

ஒடுக்கப்பட்டவர்களது கலைகள் குறித்து பேராசிரியர் கா.- சிவத்தம்பி:

'கலைகளைக் கருத்திற்கொள்ளும் போது இன்ன இன்ன சாதியினர் இன்ன இன்ன கூத்துக்களை ஆடுவர் என்ற வன்மையான மரபு இருந்தது. தமிழக - இலங்கை உறவுகள் காரணமாக யாழ்ப்பாணத்திற்கும் பார்ஸி மரபு வழி வந்த விசேட நாடக மரபு வந்த பொழுது அதனைப் பின்பற்றி நாடகம் போடுவதற்கான சமூக ஒருமைப்பாட்டு பயிற்சிக்களம் தாழ்த் தப்பட்டோர் நிலையிலேயே காணப்பட்டது'[18,] எனக் குறிப்பிடுகின்றார்.

இக்கலை நிகழ்வுகளின் ஊடே யாழ்ப்பாணத்தின் சமூக வரலாறு பளிச்சிடுவதோடு நமது சமூகத்தின் அழகும் அவலட்சணமும்கூடத் தெரிய வருகின்றன.

இதனைக் கதையில்...

'ஊருக்குள் சும்மா திரிந்த இளவட்டங்களுள் சிலரைச் சேர்த்துக் கொண்டு நாடகங்கள் போடத் தொடங்கினார் பூச்சாண்டி. சமதளத்தில் இருந்து ஐந்தாறு படிகள் உயரத்தில் இருந்த அந்த வீட்டின் விறாந்தைதான் மேடை. பின்னேரமானதும் அவர் தங்கி இருந்த வீட்டுக்கு முன்னால் சனங்கள் கூடத் தொடங்கி விடுவர். சனங்கள் என்றால் அடிமைக் குடிகளைச் சேர்ந்தவர்கள்தான்.

பனையோலையை இடுப்பில் கட்டிக் கொண்டு பயந்தாற் போல பாவனை செய்த படி விறாந்தையின் இருபுறமும் மாறி மாறி நடப்பார் பூச்சாண்டி. பனையோலை அவருக்குப் பின்னால் சரசரத்தபடி இழுபடும். தனது கணீரென்ற குரலை உயர்த்திப் பாடவும் செய்வார்.

***'இருண்டபிறகே எங்களுக்குப் பகல் என்பார்***
***பாதையில் எமைக்காணில் மருண்டடித்து ஓடுவார்***
***சுருண்டு கிடந்து கால் நக்கியிவர்க்கு சேவை செய்யாது விடில்***
***வெகுண்டெழுந்து எம்மை வைவார் வதைகள் பல செய்வார்'***

(பக்கம் : 67)

அமெரிக்க மிசனரிமார்களால் 1816-ம் ஆண்டு அமைக்கப்பட்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி தான் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ஆண்கள் விடுதிப் பாடசாலையாகும். அதுபோல 1820-ல் அமைக்கப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரி தான் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பெண்கள் விடுதிப் பாடசாலையாக விளங்குகிறது. அந்த வரிசையில்...

'1871-ல் யாழ்ப்பாணக் கல்லூரி எனும் பெயரில் விடுதியுடன் கூடிய ஒரு கலவன் பாடசாலையையும் தோற்றுவித்திருந்தனர். ஆண் மாணவர்களுக்கும் பெண் மாணவிகளுக்கும் தனித்தனி விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாகவும் ஆங்கிலக் கல்வி காரணமாகவும் அமெரிக்கர்களிடம் படிக்கும் நோக்குடனும் சிங்கள மாணவர்கள், முஸ்லிம் மாணவர்கள், மலேசிய நாட்டு மாணவர்கள், ஆபிரிக்க நாட்டு

மாணவர்கள் பிற்காலத்தே மலைநாட்டு மாணவர்கள், வன்னிப்பகுதி மாணவர்கள் எனப் பலரும் குடாநாட்டுக்குத் தமிழ் மாணவர்களுடன் சேர்ந்து படிக்கலாயினர்'[19]

அந்தவகையில் மயில்வாகனம் வட்டுக்கோட்டை கல்லூரி விடுதியில் தங்கி இருந்தமை பற்றிய பதிவு, கதையில்...

'கல்லூரி விடுதியின் ஓரறையின் மேசையில் விளக்கொன்று சுடர்ந்து கொண்டிருந்தது... மேசையின் மீது மயில்வாகனம் தலை சாய்த்திருந்தான். சக பேராசிரியரும் மயில்வாகனத்தின் அறைத் தோழனுமாகிய ஆர்னோல்ட் விடுமுறையில் சென்று விட்டிருந்தான்' (பக்கம்: 61) எனவும், அன்றைய காலனித்துவ காலத்தில் அமைக்கப்பட்ட மரபான வீடமைப்பு குறித்த பதிவு...

'அடிமை குடிமைகள் வந்து போவதற்கென தனியானதோர் வாசல் வீட்டின் வடக்குப் பகுதி வேலியை ஒட்டியிருந்தது. மயில்வாகனம் படுத்திருந்த அறையின் யன்னல் அந்த வாசலைப் பார்த்துத் திறந்திருக்கும்' (பக்கம்: 62, 63) எனவும் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

இலக்கியங்கள் காலத்தின் ஆவணப்பதிவாக விளங்குவதனால் அவற்றின் வகிபங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அவை காலங்கடந்தும் நிலைத்து நிற்பவை. தமிழ்நதி மொழிநடையில் செலுத்தும் தனித்துவத்திற்கு இந்தச் சிறுகதையும் விதிவிலக்கல்ல. தங்க மயில்வாகனம் சிறுகதையை வெறும் சாதியம் குறித்த ஒற்றைப் பரிமாணமாகக் கதையாகக் கருத முடியவில்லை. இந்தக் கதை 1886-ம் ஆண்டு காலப்பகுதிய காலனித்துவ யாழ்ப்பாணத்தின் வெட்டு முகத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஒப்பீட்டளவில் சிறுகதையை விட நாவலிலேயே குறிப்பிட்டதொரு காலகட்டத்தின் முழுமையைப் பதிவு செய்ய முடியும் என்றாலும், தமிழ்நதி காலனித்துவ காலத்தில் நிலவிய சாதிய அடுக்கமைவுகள், அவை உருவாக்கிய பாரபட்சங்கள், சமூக ஊடாட்டங்கள், யாழ்ப்பாண வழக்காறுகள், பண்பாட்டம்சங்கள், மரபான வீடமைப்பு போன்ற முக்கிய விடயங்களோடு கிறிஸ்தவ மிசனரிமார்களின் மதமாற்ற நடவடிக்கைகள், அவர்களது சமூகவியல் பங்களிப்புகள் என சமூக அசைவியக்கத்தின் பல்வேறு கூறுகளையும் தங்க மயில்வாகனம் சிறுகதை ஊடாகச் சிறப்பாக ஆவணப்படுத்தி உள்ளார்.

**அடிக்குறிப்புகள்:**

1. முருகேசு பாக்கியநாதன் - கல்விக் கண் திறந்த கோவில்கள் - இலக்கியா வெளியீட்டகம், கனடா - முதற்பதிப்பு : ஒக்ரோபர் 2018, பக்கம்: 192, 193

2. கார்த்திகேசு சிவத்தம்பி - தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் - மக்கள் வெளியீடு - மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2001, பக்கம்: 78

3. அருமைநாயகம்.க - யாழ்ப்பாணத்தின் சாதிமுறை : 19ம் 20ம் நூற்றாண்டுகள் - குமரன் புத்தக இல்லம் - முதற்பதிப்பு: 2017, பக்கம் : 17, 18

4. வெகுஜனன், இராவணா - இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - சவுத் விசன் வெளியீடு - இரண்டாம் பதிப்பு: டிசெம்பர் 2007, பக்கம்: 77

5. மேற்குறித்த நூல் - பக்கம்: 85

6. அருமைநாயகம்.க - யாழ்ப்பாணத்தின் சாதிமுறை : 19ம் 20ம் நூற்றாண்டுகள் - குமரன் புத்தக இல்லம் - முதற்பதிப்பு: 2017, பக்கம்: 15

7. பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் - இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் அமெரிக்கன் மிசனும் - குமரன் புத்தக இல்லம் - மீளச்சு: 2007, பக்கம்: 8

8. மேற்குறித்த நூல் - பக்கம்: 35

9. வெகுஜனன், இராவணா - இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - சவுத் விசன் வெளியீடு - இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2007. பக்கம்: 78

10. அருமைநாயகம்.க - யாழ்ப்பாணத்தின் சாதிமுறை: 19ம் 20ஆம் நூற்றாண்டுகள் - குமரன் புத்தக இல்லம் - முதற்பதிப்பு: 2017, பக்கம்: 44

11. மேற்குறித்த நூல் - பக்கம்: 21

12. அருட்திரு பென்ஜமின் ஜெயராஜா - பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும் - முதற்பதிப்பு: மார்ச் 2004, பக்கம்: 81

13. மேற்குறித்த நூல் - பக்கம்: 114

14. மேற்குறித்த நூல் - பக்கம்: 70

15. டானியல்.கே - பஞ்சமர் - அடையாளம் - முதற்பதிப்பு: 2006, பக்கம்: 28

16. அருட்திரு பென்ஜமின் ஜெயராஜா - பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும் - முதற்பதிப்பு: மார்ச் 2004, பக்கம்: 77

17. வெகுஜனன், இராவணா - இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - சவுத் விசன் வெளியீடு - இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2007. பக்கம்: 79

18. கார்த்திகேசு சிவத்தம்பி - யாழ்ப்பாணம் : சமூகம், பண்பாடு, கருத்துநிலை - குமரன் புத்தக இல்லம் - முதல் பதிப்பு: ஓகஸ்ட் 2000, பக்கம்: 119

19. முருகேசு பாக்கியநாதன் - கல்விக் கண் திறந்த கோவில்கள் - இலக்கியா வெளியீட்டகம், கனடா - முதற்பதிப்பு: ஒக்ரோபர் 2018, பக்கம்: 196

20. தமிழ்நதி - தங்க மயில்வாகனம் - தமிழினி - முதற் பதிப்பு: டிசம்பர் 2023



sinnaraja.vimalan@thaiveedu.com




**எம்**.எஸ். கல்யாணசுந்தரம் மூத்தத் தலைமுறைப் படைப் பாளி. கு.ப.ரா, ந.பி. காலத்தவர். சி.சு. செல்லப்பா எழுத்து இதழில் இவரின் படைப்பை விரிவாக மதிப்பிட்டிருக்கிறார். சி.சு. செல்லப்பா சொல்லும் 'மனிதாபிமான உணர்ச்சிதான்' இவரின் கதைநோக்கு என்பது உண்மைதான். ஆனால் இவர் கதையை முடிக்கிற இடத்தைவிட கதைக்குள் சாகசங்கள் செய்கிறார். அதுதான் படைப்பாளியை இனங்காட்டக்கூடியது. இது ஒரு நல்ல அம்சம். ந. பிச்சமூர்த்தியின் கதைகளின் முடி வில் கருணைக்காக முழுக் கதையையும் பிசைந்து உரு வாக்கி இருப்பது வெளிப்படையாகத் தெரியும்.

எம்.எஸ். கல்யாணசுந்தரத்தின் கதைகளின் கடைசி பந்தி நன் னெறி சொல்வதற்காக நழுவிப்போகும் மனித மாந்தத்தை மீட்டெடுக்க திசைதிருப்புவதாக இருக்கின்றன. அந்தப் பந்தி களை எடிட் செய்தால் நல்ல நவீனக் கதைகளாகிவிடும்.

சிறுகதை அதிர்ச்சி தரும் முடிவிலோ, திடீர் திருப்பத்திலோ மட்டும் உயிரைத் தக்கவைத்துக்கொள்ளும் என்பது 'பே'கா லம். அதிர்ச்சிக்காகவோ திடீர் திருப்பத்திற்காகவோ இல்லா மல் வாழ்வின் போக்கே இப்படி தற்செயல்களைக் கொண்டி ருப்பதாகப் படைக்கப்பட்டால் மட்டுமே உயிர்வாழும். அதற் கான காரண காரியங்களோ, இடப் பின்னணிகளோ வந்தும் படைப்பாளி செத்த பாம்பைத் தூக்கிக் காட்டுவதாக மாறி பல்லிளிப்பதும் உண்டு. இவற்றைப் பொருட்படுத்தாதுபோல பின்னிக்கொண்டு படைத்த படைப்பு உயிரோடு கையில் பட மெடுத்து ஆடவும் கூடும். இதில் காரண காரியங்கள், பின்ன ணியில் கதையை நடத்துவதற்காக வராமல் அது கதையின் பகுதியாக வந்திருக்கும்.

எம்.எஸ். கல்யாணசுந்தரத்தின் படைப்புகள் சம்பவத் தொகுப்புகளை சிறுகதைகளாக இனம் காட்டுபவை அல்ல. படைப்பாளிக்கே உரிய புனைவியல் தொழிற்பட்டிருக்கிறது. எம்.எஸ்.சின் கதை முடிவுகளை விட்டுவிடலாம். கதைக்குள் கொண்டு வரும் எதிர் எதிர் உலகங்களின் மோதல் என்பது படைப்பாளியின் தேர்வு சார்ந்த விடயம். இவரின் கதை முடிவு களைவிட இந்த அம்சம் படைப்பிற்குரிய லட்சணமாக அமைந்திருக்கிறது.

கதைக்குள் சாகசங்கள் செய்வதே நல்ல படைப்பின் அம்சம். அப்படி நகர்த்திக்கொண்டே வாழ்வின் மீதான விமர்சனமாக முடிவு அமையாமல் சிறந்த கதையாக அமைந்துவிட வாய்ப் புண்டு. கதையைக் காமாசோமா என்று நகர்த்திப்போய் அபா ரமான முடிவில் நிறுத்திவிட்டால் சிறந்த படைப்பாகிவிடாது. அது உண்மையில் இதுவரை படைப்பாளிகள் பார்க்காத வாழ்வின் இடைவெளிகள், கரும்புள்ளிகள், சூட்சுமங்கள் எது வாக இருந்தாலும் பிடறி சிலிர்த்திடாது. கதை அதன் முதல் வரி யிலிருந்தே சதைத்துடிப்போடு தொடங்குகிறது. ஜீவராசி களின் எந்த அங்கமும் பயன்பாட்டிற்குரியதாக பயன்பட்டிருப் பதுபோல முழுக்கதையுமே உயிரியாக அமையவேண்டும்.

'செயற்கைக் களம்' கதை ஆன்மீகத்தை அறிந்து கொள்வ தற்கு எழுதப்பட்ட கதை. அருவியிலிருந்து மின்சாரம் எடுப்ப தற்கும் மனிதனிலிருந்து ஆன்மீகத்தைப் பெறுவதற்குமான ஒப்பீடான செயற்பாடுகளை குரு சொல்கிறார். இரண்டும் எத் தனையோ உருமாற்றங்களின் பின் உருவாகும் வித்தையை இரு இணைகோடுகள்போல் சொல்லி முடிக்கிறார்.

'மந்திரமும் மகா மந்திரமும்' கதை ஒரு நாட்டுப்புற நம் பிக்கை சார்ந்த கதை. அலாவுதீனும் அற்புத விளக்கும் போல. குப்பையில் கிடைத்த பேய் மோதிரம் இட்ட கட்டளை யைச் செய்யக்கூடியது. அதைத் தேய்த்து எந்தக் கட்டளை யிட்டாலும் செய்யும். கிழவியின் மகன் மூக்கையா கண்டெ டுத்தது. சாமான்ய ஜனத்திற்கும் அரசனுக்கும் நடக்கும் போராட்டமாக மாறுகிறது. பஞ்சத்தால் ஏற்படும் கள்ள மார்க் கெட்காரருக்கும் கிழவிக்கும் நடக்கும் மோதலாக கதை உரு மாறுகிறது. கிழவி மோதிரத்தை வைத்து பஞ்சத்தைத் தீர்த்து விடுவாளோ என்று பதுக்கல்காரர்கள் அரசனோடு சேர்ந்து மடக்கப்பார்க்கின்றனர். அதாவது அந்த மாய மோதிரத்தை வைத்து பஞ்ச காலத்தில் இன்னும் இன்னும் சம்பாதிக்கலாம் எனத் திட்டம் போடுகின்றனர். அவள் தனக்கு உழைக்கக்கூ டிய வலுவைத் திடமாக அருளச் சொல்லி யாருக்கும் கிடைக்

காதபடி தூக்கி எறிந்துவிடுகிறாள். எம்.எஸ். இரு உலகங்கள் களின் (கற்பனையான உலகங்கள்) மோதல் வழி இன்றைய சமூகத்தின் மீதான விமர்சனமாகப் படைத்துக் காட்டுகிறார். புனைவிற்குள் ஒரு தேர்வு, தேர்விற்குள் ஒரு புனைவு என்று படைப்பியக்கம் நிகழ்கிறது. படைப்பாளியின் வித்தியாசமான பார்வை வழி சிறுகதை உருவாக்கம் என்று இதனை அழைக்கலாம்.

‘கண்ணீர் சிகிச்சை’ யில் மானசீகமாக மூன்று நான்கு முறை அழ முடியுமானால் குருடான கண் பார்வை பெறும் என்கிறான் பண்டாரன். இதுதான் கதையில் வித்து. ஒரு கண் பார்வை போன குருடன் இறுதியில் காணும் ஒரு மனிதாபிமான நிகழ்ச்சியைப் பார்த்து அழுகிறான். குருட்டுப் பிச்சைக்காரிக்கு இன்னொரு பிச்சைக்காரி உணவு படைக்கும் நிகழ்ச்சி அது. கண் ஒளி கிடைக்கிறது. சுமாரான கதைதான். ஆனால் படைப்பாளியின் புனைவில் தேர்வு என்ற அம்சம் இவருக்குள் ஊற்றெடுப்பதை எடுத்திருப்பதை எவரும் சுட்டிக்காட்டவில்லை. நாம் புதுமைப்பித்தனை மட்டும் பேசியதோடு நின்றுவிட்டோம். எம்.எஸ். கல்யாணசுந்தரத்திற்கு அக்காலத்தில் எந்த விமர்சகனாவது தொடர்ந்து உற்சாகப்படுத்தியிருந்தால் அக்காலத்திலேயே இவர் புதிய போக்கைத் தோற்றுவித்திருக்கக்கூடும். நாம்தான் பாராட்ட மனமற்ற தமிழ் பிறப்புக்குணம் படைத்தவர்களாயிற்றே.

‘ஒட்டாத உறவு’ கதையில் மனைவியோடு கூடுவதற்காக சனிக்கிழமை தோறும் வரும் கணவனைப் பற்றிய கதை. அவனுக்கு அந்த மாமனார் வீட்டுப் பெண்களிடம் ‘சனிக்கிழமை பிராமணன்’ எனப் பட்டப்பெயர் உலவுவது தெரியாது. சனிக்கிழமைதான் தபால் அலுவலகத்திற்கு விடுமுறை நாள். அவன் வேறு கிழமைகளில் வர முயற்சித்தும் பட்டப்பெயர் மறையவில்லை. படைப்பாளி, சனிக்கிழமைகளில் யாருமற்ற நிராதரவான நோயாளிகளை மருத்துவமனையில் சந்தித்து வருவதை மனைவி பார்த்துப் பரவசப்பட்டு சேர்ந்து வாழ வேறு வீடு பார்க்கச் சொல்வதாக அமைக்கும் இடம் அது எம்.எஸ்.கவிற்கே உரியது. ‘சனிக்கிழமை’ என்ற துஷ்டநாள் (சனிப்பிணம் - சனீஸ்வரன்) என்ற தேர்வில் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழலவிட்டுப் பார்க்கும் பார்வையைத்தான் இங்கு முக்கியமாகக் கருதுகிறேன். படைப்பாளியும் வாழ்க்கையை மேடையேற்றி நடிக்கத்தான் வைக்கிறான். அவனும் ஒரு பார்வையாளனாக நின்று பார்க்கும் உத்தி இவரின் கதைப்பாணி. முற்போக்கின் அசலான பாணி. தமிழ்ச் சிறுகதை வரலாறு இவரிடமிருந்தே கலாப்பூர்வமாகத் தொடர்கிறது. நம் முற்போக்குவாதிகள் இவரை அறிந்திருப்பதாக ஒரு தடயத்தையும் எங்கும் இதுவரை வெளிப்படுத்தியதாகக் காண முடியவில்லை.

அறிவியலின் வளர்ச்சி மனிதனின் சுகபோகத்திற்கான ஏகக் குத்தகையாக மாறிக்கிடக்கும் நிலையைப் பெரும் கவலையோடு சொல்கிறது ‘பொன்மணல்’. இயற்கையை நாசம் செய்து பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள மனிதமனம் தவியாய்த் தவிக்கிறது. இயற்கைக்கும் செயற்கைக்குமான இரு உலகங்களை முன்நிறுத்தி ஏற்படும் அழிவுகளை இக்கதை சொல்கிறது. மண்ணை நாசமாக்காது மக்களை அநாதைகளாக திரிய வைக்காது, தன் மரபிற்கு இன்னும் இன்னுமாய் கொடுப்பினையைத் தேக்கி வைத்திருக்கும் இயற்கைக்கு முன் அறிவியலின் நுகர்வுத் தன்மையைத் தூக்கி எறிகிறார். ஐம்பதாண்டுகளுக்கு முன்னமே கல்யாணசுந்தரம் இன்றைய இழிநிலையை மண்ணுக்கு நேர்ந்து கொண்டிருக்கிற அவலத்தைச் சொல்லிச் சென்றுள்ளார். மனிதனைவிட படைப்பாளியிடம் தோன்றும் ஆழமான பார்வை என்பது இதுதான்.

எவற்றிற்கும் பாதிப்பில்லாத விவசாய உற்பத்தியை ஒரு பொன் விளைச்சலாகக் காட்டி சுரங்கத் தொழில், மின்சாரம், பாறை குடைவு என விவசாயிகளைத் துரத்திவிட்டு நிலங்களை ஆக்கிரமிக்கிற செயல் எல்லாம் பொன் விளைச்சல் அல்ல. வருங்காலச் சந்ததிகளையே அழித்து வெறும் வரண்ட வாழ்க்கையாகக் கிடக்கப்போவதை இக்கதை படம் பிடித்துக் காட்டுகிறது. நவீனம் உலகெங்கும் பாய்ந்து ஊடுருவியது. அதன் பாதிப்பு அழிவின் செயலாக ஆகிப்போனதை 50 ஆண்டுகளுக்கு முன்னமே கல்யாணசுந்தரம் சுட்டிக் காட்டியிருப்பது ஆச்சரியம்தான். இப்படி அறிவியலை எதிர்கொண்ட கதைகள் தமிழில் குறைவு. இதனுடைய பலா பலன்களை நாம் இன்று ஒவ்வொரு நொடியும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். கதை சுபமான முடிவு நோக்கி சென்றிருந்தாலும் நேசம் மிக்க மிகச்சிலர் பூமியில் இருக்கத்தானே செய்கிறார்கள். நாம் கதை முரண்களை வைத்து நவீனக் கதை என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது கல்யாணசுந்தரம் அறிவியல் யுகத்தின் வரவால் நிகழும் வாழ்க்கைச் சீரழிவைக் கதைப்பரப்பில் முரணாக வைத்து (முடிவில் அல்ல) சாதித்திருக்கிறார். இக்கதை, கதைக்கு வெளியே உள்ள அறிவியல் மூளையைப் போற்றுகின்ற கொள்ளைக்கூட்டத்தை நம் வாழ்க்கைக்கு முரணாக வைத்திருக்கிறார் என்பதாகத்தான் அமைந்திருக்கிறது.

‘.... குழியும் பறித்ததாம்’ திருடு கொடுக்கப்பட்டவரின் கதை போல தோன்றி திருடினவனின் கதையாக முடிகிறது. பிய்ந்து போன மணிபர்சைத் தூக்கியெறியாமல் பயன்படுத்தி வருகிறார் ஒருவர். ஜேப்படி திருடனால் பறிபோகிறது. தன் அறுபதாண்டுக் கால வாழ்வில் எதையும் பறிகொடுக்காதவன் என்று பெருமை அடித்துக் கொள்கிறவரின் தகுதியைப் பறிக்கிற சம்பவமாக அமைந்தாலும், பறிகொடுத்த தகுதி உனக்கு இல்லை என்று ஒரே போடாக போட்டுடைக்கிறது திருடனின் பார்சல். திருடப்பட்ட பொருளைத் திருப்பி அனுப்புகிறான். சில தபால் தலைகள், சீசன்டிக்கெட், விலாசம் இவைகள்தான் திருடுபோனவையும். அவன் ஏன் திருப்பி அனுப்ப வேண்டும்? ஒருக்கால் பசிக்காகத் திருடியிருப்பானா? அவனின் தேவைக்குரிய பொருள் அங்கில்லை என்பதால் திருப்பி அனுப்புகிறானா? திருடனுக்குள் ஒரு தார்மீக அறம் எழுவதால்தான் அனுப்புகிறான் என்று பார்க்கவும் முடியும். மற்றொரு கோணத்தில் தன் குடும்பத்தாரிடம் இவரடிக்கும் ஐம்பம் கருமித்தனமானது என்பதை திருடன் மூலம் உணர்த்துகிறார் எனலாம். இதற்கு முன் இவர் திருடக் கொடுத்திருந்தாலும் என்னத்தைப் பெரிதாக பறிகொடுத்திருப்பார்? இதே பிய்ந்துபோன மணிபர்சு போல வேறொன்று. இதிலென்ன ஐம்பம் வேண்டிக்கிடக்கிறது? திருடு போதல் என்பதற்குப் பொருள் இதுதானா? இது இல்லை மகனே என அவரின் அறுபதாண்டுகாலக் கருமித்தனமான வாழ்வையும் கிண்டலடிக்கி

றது. அதைத்தான் கதையின் தலைப்பும் சொல்கிறது. '....குழியும் பறித்ததாம்.'

அறிவியல் உலகுடன் ஆன்மீக உலகை மோதவிடுவது இவரின் படைப்புக் குணம். இலட்சிய நோக்கை நம்பிய ஒரு படைப்பாளி. காந்தியின் ஆன்மீக செயல்திட்டத்தின் மீது நம்



பிக்கை கொண்டவர். மரபின் செழுமையான பகுதிகளையும் அறிவியல் யுகத்தின் பாதகமான பகுதிகளையும் பல சமயம் படைப்பில் மோதவிடுகிறார். சுந்தரராமசாமியிடம் நவீனத்தின் வரவால் நிகழும் சீர்கேடுகளைச் சொன்னால், 'நீங்கள் அதனைப் பயன்படுத்தாமல் இருக்க முடிகிறதா? அதன் வழி அதிக சம்பாத்தியம் பெற முடிந்திருக்கிறதல்லவா' என்று சொல்வார். இது ஒரு வியாபார மனம்தான். கல்யாணசுந்தரம் தான் விரும்பிய செயலில் ஈடுபட்ட ஒரு மனிதர். சமூக நிர்ப்பந்தத்திற்கு உகந்து பழக்கப்பட்ட வாழ்க்கையில் தன்னை ஒடுக்கிக்கொண்டவர் அல்லர். எனவே அவரின் கதைகளில் வெளிப்படும் கவலைகள். மாற்று முடிவுகள் எல்லாம் நன்மை சார்ந்ததாக அமைகின்றன. நவீனக் கதையாளர்களின் நம்பிக்கை வறட்சியைக் காட்டுவதற்கு மாறாக நம்பிக்கையின் பக்கம் திருப்புகின்றன. இவ்விடத்தில் தமிழ்ச் சூழலில் நிகழும் ஒன்றை நினைவு கூரலாம். பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் நின்று எழுதும் படைப்பாளிகளின் படைப்பில் இருக்கும் கருத்தியலுக்கும் காந்தியத்தின் நோக்கங்களை ஈர்த்துக் கொண்டு படைத்திருக்கும் கல்யாணசுந்தரத்தின் கதையில் இருக்கும் கருத்தியலுக்கும் உள்ள வேறுபாட்டை பகுத்துப் பார்க்கலாம். இரண்டும் வாழ்வை செழுமையாக்கவே முனைகின்றன என்றாலும் ஒன்றில் கருத்தின் அந்நியத்தன்மையும் ஒன்றில் மண்ணின் செழுமையையும் குறிப்பதாகப் பிரித்துப் பார்க்கமுடியும்.

இங்கு, படைப்பாளியின் அனுபவமும் அதன்வழி சொல்லப்படும் முறைமையும் படைப்பிற்கு அழுத்தமான ஒரு கருத்துலகத்தைத் தோற்றுவிக்கின்றன. 'பொன்மணல்' கதையில் தங்கப்படிவம் இருப்பதை உலகிற்கு அறிவிப்பதால் நன்மையடையப் போகிறவர்களின் கூட்டம் இயற்கைக்கும், மண்ணின் மைந்தர்களுக்கும் ஏற்படுத்தப்போகும் பெரும் துயரத்தை முன் வைக்கிறார். கதை சொல்லிக்குள் ஒரு கணம் தனக்குக் கிடைக்கப்போகும் லாபம் என்ற கரியமேகம் பரவுகிறது. லட்சிய நோக்கு அதே உள்ளத்துள் தோன்றி கரைக்கிறது கருமையை. இப்படி சுயத்திற்குள் நிகழும் சலனத்தையும் சேர்த்துச் சொல்லும் கலை நுட்பத்தைக் கற்றிருக்கிறார். மார்க்சியப் படைப்பாளிகள் அப்படி ஒரு கண் பார்க்கப்படுதலை நிராகரிப்பதால் அதனைப் படைப்புக் குறைவாகவே பார்க்கிறோம்.

சோதனைகளை அல்ல இவர் எழுதுவது. உள்ளத்தை ஒரு சோதனைக்குள் நிறுத்தி தனது நம்பிக்கையின் பக்கம் திருப்புகிறார். எடுத்துக்கொண்ட சத்தியத்திற்கு மன ரீதியாக பொருள் ரீதியாக, மரபு ரீதியாக சோதனைகள் வரும் அதனைக் கடப்பதுதான் சத்தியசோதனை. இது இங்கு இலக்கியக் கொள்கையாக நிகழ்கிறது. 'மீன் சாமியார்' அப்படிப்பட்ட கதைகளுள் ஒன்று. 'சாமியார்' வடிவம் என்பது முற்றிலும் ஏமாற்றுத்தனம் என்று நம்புகிற ஒருவர் தன் வேலையைத் துறந்து 'போலிச் சாமியார்'களை மக்கள் முன் தோலுரித்துக் காட்டத் தானே அவ்வடிவத்தை ஏற்கிறார். மீனவ குடிமக்கள் இவரின் உள்நோக்கம் அறியாதவர்கள். தங்கள் பகுதிக்கு வந்த ஞானவானாகவே பார்க்கின்றனர். மனிதர்களின் நம்பிக்கைக்குள்தான் கடவுள் உறைவதைக் காண்கிறார். அந்த நம்பிக்கை மக்களுக்கு எவ்வளவோ முறைகளில் பயன்படுவதை உணர்கிறார். மார்க்ஸ் சொன்னது போல 'ஆன்மா அற்ற உலகின் ஆன்மா. அபின் போல ஒரு வலி நிவாரணி.' கடவுள் நம்பிக்கை அற்ற ஒருவர் கடவுளின் தேவை என்பதை ஒரு ஆனந்தமிக்க நேசத்தை அம் மக்களுக்கு அளிப்பதைக் காண்கிறார். நல்ல நோக்கத்திற்கு 'போலிச்சாமியார்' வேஷம் இருப்பதில் தவறில்லை என்பதை அழகாக எடுத்துரைக்கிறது கதை.

கல்யாணசுந்தரத்தின் இலக்கியப் பார்வை காந்தியத்தின் சாராம்சக் குணத்திலிருந்து
பிறக்கிறதெனக் கொள்ளலாம்.



venugopal@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம் :

# ஆசிரிய – வெளியீட்டாளருக்கான கைந்நூல்

**– என். செல்வராஜா**

இலங்கையில் நூல்வெளியீட்டுத் துறையில் அரச நிறுவ னங்களினதும், தனியார் நிறுவனங்களினதும், அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளினதும் பங்களிப்பை நாம் அறிவோம். கல்வித்துறையில் அரச நிறுவனமான கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது கல்வி நிறுவனங்களின் பாடநூல் வெளி யீட்டின் பிரதான பங்காளராகத் திகழ்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழகங்களும் தத்தம் துறைசார்ந்த பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றன. பாடசாலைகளும் தத்தம் பாடசா லைகளுக்குரிய ஆண்டு மலர்களையும், சிறப்பு மலர்களை யும் வெளியிடுகின்றன. இலங்கை மத்திய வங்கியானது, இலங்கைக்குரிய பொருளாதார அறிக்கைகளையும், நிதி அறிக்கைகளையும் வெளியிடுவதில் முதன்மை வகிக்கின் றது. இவ்வாறே சகல அரச திணைக்களங்களும் தாம் சார்ந்த துறையின் வெளியீடுகளை அன்றாடம் வாரி வழங்கி இலங் கையின் நூல் வெளியீட்டுத் துறைக்கு காத்திரமான பங்களிப் பினை நல்கி வருகின்றன.

சைவ, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய நிறுவனங்க ளும் காலத்திற்குக் காலம் பக்தி இலக்கியங்களையும் சமயப் பிரசுரங்களையும் ஆண்டிதழ்களையும் சிறப்பு மலர்களையும் வெளியிட்டு, ஈழத்தின் தமிழ்ப் பதிப்புலகிற்கு புதுக் குருதி யைப் பாய்ச்சி வருகின்றன. குறிப்பாக, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் நூல் வெளியீட்டுப் பணியும் விதந்து குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய இவ்வமைப்புகளுக்கு இணை யாக அரச சார்பற்ற (NGO) நிறுவனங்களான ஐக்கிய நாடு கள் ஸ்தாபனத்தின் முகவர்களும், தனியார் ஆய்வு நிறுவனங் களும் தத்தம் தேவைகளுக்கேற்ப ஆய்வு நூல் வெளியீடுக ளில் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நிறுவன ரீதியான பங்களிப்புகளுக்கு அப் பால், ஈழத்துத் தமிழ் வெளியீட்டுத்துறையில், தமிழ் இலக்கிய வாதிகளும் துறைசார் வல்லுநர்களான அறிவுஜீவிகளும் ஆசிரிய வெளியீட்டாளர்களாக இயங்கி, தனிமனித நிறுவன மாகச் செயற்பட்டு பெருமளவு நூல்களை எழுதித் தாமே பதிப்பித்து, தமது செலவிலேயே வெளியிட்டும் வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாகவும் ஊக்குசக்திகளாகவும் தனிம னித வெளியீட்டு அமைப்புகளும் இயங்குகின்றன. இவர் களை ஆசிரிய-வெளியீட்டாளர்கள் (Author-Publishers) என்ற வகைக்குள் நாம் அடக்குகின்றோம்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் தமது நூல்களை எழுதித் தாமே அதனை அச்சிட்டு வெளியிட்டுவரும் நிலையில், அவர் களுக்கான வெளியீட்டுப் பணியையும் விநியோகப் பணியை யும் பொறுப்பேற்று, அவர்களது பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையில் மேலைத்தேய நாடுகளைப் போன்று எம்மிடையே வர்த்தக ரீதியான வெளியீட்டு / விநியோக நிறுவ

> **ஒவ்வொரு படைப்பாளியும் தனது நூலை எழுதுவதிலிருந்து, அதனைத் தானே தேடிக் கண்டடைந்த அச்சக மொன்றில் அச்சிடப்பெற்று, ஒரு வெளியீட்டு விழாவை ஒழுங்குசெய்து, அதன்மூலம் தனது நூலை சுற்றத்தார், நண்பர்களிடையே விற்பனை செய்து, தான் முதலீடு செய்த பணத்தில் சிறு பங்கை மீளப்பெற்றுக்கொள்ளும் நடைமுறையே இன்றும் எம்மிடையே காணப்படுகின்றது.**

னங்கள் எதுவுமே இன்று இல்லை. முன்னர், வீரகேசரி நிறுவ னம் குறுகிய காலத்தில் 76 நூல்களை வெளியிட்டு, அவற் றைத் தனது பத்திரிகை விநியோக வலையமைப்பின் மூலம் இலங்கை முழுவதும் வெற்றிகரமாக விநியோகித்து வரலாற் றுச் சாதனை படைத்திருந்தது. அதன் பணியும் 1977-ம் ஆண் டின் இனக்கலவரத்துடன் ஓய்ந்துவிட்டது. பின்னாளில் எந்த வொரு தமிழ்ப் பத்திரிகை நிறுவனமும் இத்தகையதொரு பாரிய முயற்சியை மேற்கொள்ளவில்லை.

ஒவ்வொரு படைப்பாளியும் தனது நூலை எழுதுவதிலிருந்து, அதனைத் தானே தேடிக் கண்டடைந்த அச்சகமொன்றில் அச்சிடப்பெற்று, ஒரு வெளியீட்டு விழாவை ஒழுங்குசெய்து, அதன்மூலம் தனது நூலை சுற்றத்தார், நண்பர்களிடையே விற்பனை செய்து, தான் முதலீடு செய்த பணத்தில் சிறு பங்கை மீளப்பெற்றுக்கொள்ளும் நடைமுறையே இன்றும் எம்மிடையே காணப்படுகின்றது.

இந்நிலையில், தான் எழுதும் கையெழுத்துப் பிரதியை தரமான நூலுருவில் வடிவமைத்து, அழகாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளும் வகையில் விரிவான பதிப்புத்துறைசார்ந்த அறிவைப் பெற்றவர்களாக, எம்மவர்களில் பெரும்பான்மையானோர் இருப்பதில்லை. அதன் விளைவாக இன்று நாம் காணும் ஈழத்தவரின் நூல்களில் பல அவற்றுக்கு இன்றியமையாத அடிப்படை நூலியல் தகவல்களெதுவும் இன்றியே அச்சிட்டு விநியோகிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலைமையை எனது கடந்தகால நூல்தேட்டப் பணிக்கான தேடலின் போது, அனுபவ ரீதியாகக் கண்டு வருந்தியுள்ளேன். ஒரு நூலகவியலாளனாக இதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வியே என்னிடம் நீண்டகாலம் தொக்கி நின்றது. ஒரு நூல் வெளியான பின்னர் அதிலுள்ள நூலியல் தவறுகளைக் கண்டறிந்து படைப்பாளிகளுக்குச் சொல்வதிலும் பார்க்க, அத் தவறினைச் செய்யாமல் ஓர் எழுத்தாளரைத் தடுப்பதற்குள்ள ஒரே வழி, ஒரு நூலுக்கான அடிப்படை நூலியல் பதிவுகள் பற்றிய அறிவை முடிந்தவரையில் முன்கூட்டியே ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கும், அவர்கள் நாடிச் செல்லும் நூல் பதிப்பாளர்களுக்கும் உதாரண விளக்கங்களுடன் வழங்குவதேயாகும் என்ற முடிவுக்கு வந்தேன்.

அவ்வகையில் ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கு உதவும் வகையிலேயே தாய்வீட்டில் இத்தொடரினை எழுத முன்வந்துள்ளேன். எமது படைப்பாளிகள் அனைவரும், வெளியீட்டுத் துறையின் நுணுக்கங்களைத் துறைபோகக் கற்று அறிந்திருப்பார்கள் என்று எண்ணுவது தவறான முடிவாகும். ஒரு நூல் எப்படி இருக்கவேண்டும் என்ற சில அடிப்படை வரையறைகள் உள்ளன. இவை எழுதாச் சட்டங்களாகவும், தேசிய நூலகத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்பவும், வேறும் பல்வேறு வழிகளிலும் எம்மிடையே புகுத்தப்பட்டவை. இவை பற்றிய அறிதலை இவ்வாக்கம் ஓரளவு உங்களுக்கு வழங்கும் என்று நான் நம்புகின்றேன்.

1992-லிருந்து லண்டனில் வாழும் நான், நூல்தேட்டம் தொகுப்புகளுக்குத் தேவையான நூல்களைத் தேடிப் பதிவுசெய்யும் நோக்கில் ஆண்டுதோறும் இலங்கைக்கு வருவதுண்டு. இலங்கையில் தங்கியிருக்கும் குறுகிய காலத்தில் இலங்கையில் எழுத்தாளர்களையும், நூல் வெளியீட்டாளர்களையும் அதிகமாகச் சந்திக்கும் வாய்ப்பினையும் நான் பெற்றுள்ளேன். எவ்விதமான இலக்கிய, கருத்தியல், அரசியல் வட்டங்களுக்குள்ளும் என்னைப் பொருத்திக்கொள்ளாமல் கடந்த இருபது ஆண்டுகளாக தனித்ததொரு பாதையில் எனது தேடல் பயணத்தை சுதந்திரமாக மேற்கொண்டு வருகின்றேன். என்னுடன் அனைத்துப் பிரிவினரும் மனம் திறந்து பேசிக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது.

ஒவ்வொரு தடவையும் இலங்கைக்குச் சென்றுவிட்டு லண்டன் திரும்பியதும், பிரித்தானியாவிலுள்ள எனது நட்பு வட்டாரத்திலிருந்து தொலைபேசி அழைப்புகள் வழமையாக வருவதுண்டு. ஈழத்துச் சமகால இலக்கிய முன்னெடுப்புகள், நூல் வெளியீடுகள், மக்களிடையே மாறிவரும் வாசிப்புப் போக்குகள், எழுத்தாளர் சந்திப்புகள், இலக்கிய-அரசியல் போக்குகள், என்று எமது உரையாடலின் விடயப் பரப்பு நேரத்திற்கேற்ப விரிவடையும். இது வழமையானதொரு விடயம்.

அண்மைக் காலத்தில் எனது இலங்கைப் பயணத்தின்போது, நான் அவதானித்த சில நூலியல் சார்ந்த விடயங்கள் எனது நட்பு வட்டத்துக்குள் மாத்திரம் பரிமாறிக்கொண்டு மட்டுப்படுத்தத் தக்கவையாக இருக்கவில்லை. இலங்கையின் நூலியல் மற்றும் பதிப்புலகச் சூழலில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள சில போக்குகள், நீண்டகால நோக்கில் ஈழத்தின் தமிழ்ப் பதிப்புலகத்தை மிகவும் பாதிப்படையச் செய்யும் என்பதை என் உள்ளுணர்வு எச்சரித்தது.

அவை பற்றிய எனது அவதானிப்புகளின் அடிப்படையில் முடிந்தவரையில் ஒரு விழிப்புணர்வினை எம்மவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என விரும்பியிருந்தேன். அதனை எனது இலக்கிய நண்பர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் அவர்களுடனான சந்திப்பொன்றில் குறிப்பிட்டிருந்தேன். அவர் தான் வெளியிடும் 'ஞானம்' கலை இலக்கிய மாத இதழில் எனது கருத்துக்களைத் தொடராக எழுதும்படி வலியுறுத்தியிருந்தார். அவரது வேண்டுகோளின் பேரிலே, முன்னர் ஒரு கட்டுரைத் தொடரினை 'ஈழத்தவரின் சமகால நூல்வெளியீடுகள்: ஒரு நூலியல் சார்ந்த பார்வை' என்ற தலைப்பில் ஓகஸ்ட் 2015 முதல் நவம்பர் 2016 வரை 16 இதழ்களில் தொடர்ந்திருந்தேன். இன்று 2024-ல் ஒன்பது வருடகால நிறைவில், ஏராளமான தொழில்நுட்ப வளர்ச்சிகளை, ஆசிரிய வெளியீட்டாளர்களிடையே பாரிய மனமாற்றங்களை, ஈழத்து நூல் வெளியீட்டுத்துறையில் காணக்கூடிதாக உள்ளது.

இத்தொடரில் நான் குறிப்பிட்டிருந்த சம்பவங்கள் தனிப்பட்ட எவரையும் நேரடியாகச் சாடுவதற்காகவோ, குற்றம்காண விழைவதற்காகவோ சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆரோக்கியமானதொரு நூலியல் மற்றும் பதிப்புலகத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாகவே அவை அமையவேண்டும் என்பது எனது பிரதான நோக்கமாக இருந்தது. தவறுகள் அனைவருக்கும் பொதுவானவை என்ற வகையில், குற்றம் நீக்கி குறைகளைந்து, எதிர்காலத்தில் சர்வதேச தரத்தில் பெருமை கொள்ளவைக்கும் நூல்களை உருவாக்கித்தர முனையும் பல்துறைசார் எழுத்தாளர்களுக்கும், ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கும் என்னாலான ஆதரவினை நல்கும் உளப்பூர்வமானதொரு பெரு நோக்கமே இக்கட்டுரைத் தொடரினை எழுதத் தூண்டியிருக்கின்றது.

அண்மையில் எனது இலங்கை விஜயத்தின் போது நான் கண்ட மிக முக்கியமான ஆரோக்கியமான மாற்றம், தமிழில் அதிக அளவிலான அறிமுக எழுத்தாளர்களின் புதிய நூல்களின் வருகையாகும். விகிதாசாரத்தில், கவிதைகள் முதலிடத்திலும், சிறுகதைகள் இரண்டாமிடத்திலும் இருந்த போதிலும், புனைவிலக்கியம் சாராத பிற துறைசார் நூல்கள் பலவும் கணிசமான அளவில் வெளிவந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வருடாந்த புத்தகச் சந்தை

களையும், பாடசாலைகளின் பொதுப் பரீட்சைக் காலங்களையும், முன்வைத்து ஈழத்து நூல் வெளியீட்டுத்துறையில் பாய்ச்சல்கள் ஏற்படுவதையே இதுவரை காலமும் அவதானித்து வந்த எனக்கு அண்மைக் காலங்களில், வருடத்தின் பிற காலப்பகுதிகளிலும் தமிழ் நூல் வெளியீடுகள் தளராமல் வெளிவந்துள்ளதைத் துலக்கமாக அவதானிக்க முடிந்தது. தாராளமாக, முன்னைய நூல்களின் மீள்பதிப்புகளும் இவ்வாண்டில் இலங்கையில் மீள்பிரசுரம் கண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. பழைய நூல்களின் முக்கியமான முன்னுரைகளே தனிநூலாக வெளிவந்திருந்த அதிசயங்களும் நிகழ்ந்தவாறுள்ளது. புகலிடத்தில் வாழும் தனயர்களின் நிதிவளத்துடன் தாயகத்திலிருந்து முன்னனுபவம் ஏதுமற்ற தாய்-தந்தையர், தாமும் ஒருதரம் எழுதிப்பார்த்துவிடுவோமே என்ற உத்வேகத்திலும் சில நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதையும் காணமுடிந்தது.

அதே வேளை, நான் சந்தித்த மூத்த படைப்பாளிகள் சிலர், தமது உறவுகளின் வெளிநாட்டுத் தொடர்போ, உள்ளூர் பொருளாதார வளமோ வாய்ப்போ இன்றி நலிந்த நிலையில் இருப்பதையும், அவர்களது தரமான-அனுபவ வெளிப்பாடுகளாயமைந்த பல ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே கறையானுக்கும், இயற்கை அழிவுக்கும் இலக்காகி அழிந்துகொண்டிருப்பதையும், மற்றவர்களிடம் சொல்லவோ மெல்லவோ முடியாத இயலாமை அல்லது கௌரவப் பிரச்சினையால் அவர்களும் இவற்றைக் கண்முன்னே பறிகொடுத்துக்கொண்டு அவமே கிடப்பதையும் காணமுடிகின்றது.

இலங்கைக்குள் திட்டமிடப்படாத வகையில் அன்றாடம் பாய்ச்சப்படும் புலம்பெயர் தமிழர்களின் தனிப்பட்ட நிதிவளம், கடந்த முப்பதாண்டுகளாக தாயகத்தில் தனித்தனிக் குடும்பங்களின் வங்கிக் கணக்கில் போய்ச் சேர்ந்துள்ளன. கடந்த முப்பதாண்டுகளை பருந்துப் பார்வையில் அவதானிப்போமானால், இந்நிதிப் பங்களிப்பினால், பொதுவான பொருளாதார மேம்பாட்டுக்கான கிராமிய வளத்தைப் பேணும் திட்டமெதுவும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் இல்லை. மாறாக, தமிழ்ப் பிரதேசங்களில் நிலத்தின் விலையையும், வீடுகளின் விலையையும் ஆரோக்கியமற்றவகையில் பூதாகரமாக்கியிருப்பதையும் குடும்பங்களில் ஆடம்பரச் செலவினத்தை அதிகரித்து 'ஸ்மார்ட்' போனையும், ஐ-பாட்டையும், நவீன மோட்டார் வாகனங்களையும், கலாசாரச் சீரழிவுகளையும், போதைவஸ்துப் பாவனையையும் இளையோர் மத்தியில் கொண்டுசென்று சேர்த்திருப்பதையே காணமுடிகின்றது.


அதேவேளையில் எமது அறிவுச் செல்வத்தை வளர்க்கும் வாசிப்பை நேசிக்கும் ஒரு சமூகத்தை தாயகத்தில் வளர்த்தெடுக்க இந்தப் புலம்பெயர்ந்தோர் பொருளாதாரம் தவறிவிட்டது என்றே உணரமுடிகின்றது. இதற்கான அத்திவாரத்தை புலம்பெயர்ந்தோர்தான் இடவேண்டுமென்பதில் தாயகத்திலுள்ள புத்திஜீவிகள் இனிமேலும் கருதியிராமல் தாமாக முன்வந்து, பொதுமைப்பாடமைந்த நூல் வெளியீட்டு அமைப்பொன்றை உருவாக்க முன்வரவேண்டும். இதில் படைப்பிலக்கியங்கள் மாத்திரமன்றி அறிவுசார், துறைசார் நூல்களினதும், சிறுவர் நூல்களினதும், வளரிளம் பருவத்தினருக்கான (இதனை இளைஞர் இலக்கியம் என கலாநிதி சபா. ஜெய-ராஜா குறிப்பிடுகிறார்) வெளியீடுகள் சமமாக இடம்பெறச் செய்யவேண்டும். இதற்கான நிதிவளத்தை புகலிடத்தில் வாழும் அறிவுஜீவிகளிடமிருந்தும் வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். தரமான நூல்களை வெளியிடும் நோக்கில் பரிந்துரைக்காக ஒரு துறைசார் அறிவோர் குழுவினை இருசாராரும் உருவாக்க வேண்டும்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை, வட இலங்கை கூட்டுறவு தமிழ் நூல் பதிப்பு விற்பனைக் கழகம், கொழும்பு-எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், வீரகேசரி வெளியீடுகளை வழங்கிய எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனம், கொக்குவில் சோதிட விலாச புத்தகசாலை, நாவலர் அச்சுக்கூடம், யாழ். இலக்கிய வட்டம், போன்ற பல அமைப்புகள் எமது மண்ணில் தான் வேர் விட்டிருந்தன. அவ்வமைப்புகளையொத்த மேலும் பல வெளியீட்டகங்களாகச் செயற்பட்ட அச்சகங்களின் வரலாற்றுச் சுவடுகளையும் பட்டியலிடலாம். விரிவஞ்சி அவற்றை இங்கு பதிவுசெய்வதைத் தவிர்த்துக்கொள்கின்றேன். வரலாறாகிவிட்ட அத்தகைய பதிப்பகங்களின் கடந்துபோன அனுபவங்களை உள்வாங்கி நவீனத்துவமான வெளியீட்டுக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அத்தகையதொரு கட்டமைப்பு உருவாகுமிடத்து, நலிந்துகிடக்கும் எமது தரமான படைப்பாளிகளுக்கும், கிடைத்தற்கரிய பல நல்ல நூல்களின் மீள்பதிப்புக்கும், தரமான படைப்புகளை எழுதிவரும் எங்கள் புதிய தலைமுறையினருக்கும் அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இன்றும் தனிப்பட்டரீதியில் அல்வாய் ஜீவநதி, நல்லூர் எங்கட புத்தகங்கள், யாழ்ப்பாணம் தாயகம் வெளியீட்டகம், மல்லாகம் கலாலயம் பதிப்பகம் எனச் சில அமைப்புகள் இத்தகைய முயற்சிகளில் ஆக்க இலக்கியத்துறையை முன்வைத்து தனியார் நிதிவளத்துடன் இயங்கிவருகின்றன. இதனால் தான் இன்றளவில் ஈழத்து பதிப்புத்துறை ஓரளவாவது நின்று நிலைத்துவருகின்றது என்பேன். எனினும் இத்தகைய அமைப்புகளின் பின்புலத்தில் தனிமனிதர்களே இயங்கிவருவது ஆரோக்கியமானதல்ல. தனிமனிதரின் இயங்குநிலை தளரும் வேளையில் அவர் சார்ந்த அமைப்பும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றமை தவிர்க்கமுடியாததாகின்றது. இந்நிலையில் நீண்டகாலப் பொறிமுறையுடன் கூடிய வரையறுக்கப்பட்ட கூட்டுறவு முறையிலான வெளியீட்டகங்கள் பற்றியே நாம் கரிசனை கொள்வது பொருத்தமாகும்.

பொதுவான தமிழ் நூற் பதிப்பு நிதியமொன்றை உருவாக்கும் பணியினை புலம்பெயர்ந்து வாழும் இலக்கிய ஆர்வலர்களுடன் இணைந்து தொடர வேண்டும். பூனைக்கு மணிகட்டுவது யார் என்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிராமல், புகலிடத் தொடர்புள்ள, சமூகத்தில் மதிப்புள்ள, இலங்கையில் வாழும் எவராவது ஒருவர் அல்லது, எம்மிடையே மலிந்துபோயுள்ள பல்வேறு எழுத்தாளர் சங்கங்கள் நம்பிக்கையுடன் துணிந்து செயலில் இறங்குவார்களா என்ற எதிர்பார்ப்பு நம்மில் பலருக்கும் உண்டு. இவர்களிடையே ஆயிரம் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும், பதிப்புத்துறை என்ற ஒரு புள்ளியிலாவது இவர்கள் அனைவரும் அல்லது இவர்களில் ஒரு பகுதியினராவது முதலில் இணைந்தாகவேண்டும்.

(தொடரும்)



selvarajah.n@thaiveedu.com



# ஹோண்டுராஸ் கானகத்தை அழிக்கும் நார்கோஸ் கோக்கைன்

– சதீஸ் செல்வராஜா

கேங்ஸ்டர்கள் பற்றிய திரைப்படங்கள், சீரிஸ்களுக்கு உலகில் தனி இரசிகர் பட்டாளமே உண்டு. ஆக, நார்கோஸை பற்றி இவர்கள் அறிந்திருக்காவிட்டால் அது புதுமையானது. ஏனெனில், நெட்ஃப்ளிக்ஸ் தயாரிப்பில் வெளிவந்த நார்கோஸ் சீரிஸ் உலகின் பட்டித்தொட்டியெங்கும் சக்கைபோடு போட்டது. இத்தொடர்கதை ஆபத்தான போதைப்பொருள் வியாபாரிகள் பற்றியது. கோக்கைனுக்கு கோலமாவு எனும் புது அர்த்தம் பிறக்க வழிசெய்தவர்களும் இக்கும்பல்தான். நாம் பார்க்கப் போகும் ஹோண்டுராஸ் வனாந்திரத்தின் கதையிலும் கூட இவர்களது நீண்ட மூக்கு நுழைக்கப்பட்டுதான் இருக்கிறது. அதைப்போல, பெரும் விருட்சங்களின் வேர்களை கிளறி அறுக்கின்ற பணந்தின்னிப் பன்றிகளின் அட்டகாசமும் அடங்கியிருக்கிறது. இருளில் பதுங்கியிருந்த இந்தப் பேய்க்கதை இதோ வெளிச்சத்திற்கு வருகிறது.

## அந்நியர்களின் அத்துமீறல்:

ஹோண்டுராஸ் குடியரசு (Republic of Honduras) மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இதன் எல்லைகளாக மேற்கே குவாத்தமாலா, தென்மேற்கே எல் சால்வடோர், தென்கிழக்கே நிக்கராகுவா, தெற்கே ஃபொன்சேகா வளைகுடாவில் பசிபிக் பெருங்கடல், வடக்கே ஹோண்டுராஸ் வளைகுடாவில் கரிபியக் கடல் ஆகியன அமைந்துள்ளன. 1502 ஜூலை 30-ல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் ஹோண்டுராஸ் மண்ணில் கால்பதித்தான். அவன் வருவதற்கு முன்பு இங்கு மாயன்கள் (Mayans) பலம்பொருந்தியவர்களாக இருந்தார்கள். ஹோண்டுராஸின் மேற்கு-மத்திய பகுதியில் லென்காக்கள் (Lencas) வசித்து வந்தார்கள். இந்த தன்னாட்சிக் குழுக்களுக்கிடையில் தொடர் மோதல் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. அதேப்போல, இவர்கள் பனாமா, மெக்சிக்கோவில் வாழ்ந்த மக்களுடன் வணிக உறவுகளையும் பேணிவந்தனர். அவர்களது கலாசாரமும் கண்டுபிடிப்புகளும் வளர்ந்து கொண்டிருந்தன. ஆனால், கிறிஸ்டோபர் கொலம்பஸ் அரகொனின் ஃபேர்டினண்ட் (Ferdinand of Aragon) மற்றும் காஸ்டில் இராஜதானியின் இசபெல்லா (Isabella of Castile) ஆகியோரின் நாமத்தால் இந்தப் பிரதேசத்தை உரிமை கொண்டாடினான். அந்நிலப்பரப்பின் கடற்கரைக்கு அப்பாலிருந்த ஆழ் கடலுக்கு ஹோண்டுராஸ் என்று பெயரிட்டான். ஹோண்டுராஸ் என்றால் ஸ்பானிய மொழியில் ஆழம் என்று அர்த்தம். அதுவே, ஸ்பானியர்களின் துப்பாக்கி முனையில் அடிமைப்படுத்தப்பட்ட இந்நிலத்தின் பெயராகவும் மாறிப்போனது. அப்பூமியில் ஸ்பானியர்களின் அட்டூழியம் தலைவிரித்தாடியது; பழங்குடிகள் வதைக்கப்பட்டார்கள்; வளங்கள் சுரண்டியெடுக்கப்பட்டன; காடழிப்பும் அளவுகடந்தன.




அதற்கு முன்னர் 15-ம் நூற்றாண்டில் மாயன் விவசாயம் காடுகளை கணிசமாக அரித்திருந்தாலும் ஐரோப்பியர் வந்த சமயம் 90 சதவீத காடுகள் எஞ்சியிருந்தன. ஆனால், ஐரோப்பாவின் பொருளாதாரம் இலத்தின் அமெரிக்காவை வேகமாகச் சுரண்டியது. முதன்மைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தேவை உருவாக்கப்பட்டது. இந்த உற்பத்திக்குத் தேவையான பெரிய அளவிலான விவசாய நிலங்கள் காடுகளை அகற்றியதன் மூலம் பெறப்பட்டன. அந்த வெட்டவெளியில் பின்னர் இன்டிகோ, கரும்பு, கோப்பி, இறப்பர், வாழை போன்ற பணப்பயிர்கள் வளர்க்கப்பட்டன. இது இலத்தீன்

அமெரிக்காவில் அடிமை யுகத்தை தொடக்கி வைத்தது. காலங்கள் நகர தொழிலாளர்களை போலவே நிலமும் பலவீனமடைந்தது. நிலத்தின் ஈரமும் சத்தும், தொழிலாளர்களின் நுரையீரலும் திருடப்பட்டன. ஆனால், சுரண்டுவதற்கு புதிய நிலமும், அழிப்பதற்கு புதிய தொழிலாளர்களும் எப்போதும் இருந்தனர். ஒருகட்டத்தில் ஹோண்டுராஸின் காட்டு மரங்களின் இடத்தை வாழைமரங்கள் பறித்துக்கொண்டன. அதன் வருவாயை யுனைட்டட் ஃபுரூட் கம்பனியின் (United Fruit Company) கள்ளர்கள் வாரி எடுத்துக்கொண்டனர்.

## வாழைப்பழத்தில் வழுக்கி விழுந்த ஹோண்டுராஸ்:

1800 இறுதியளவில் பொஸ்டன் (Boston) நகரத்தை மையமாகக் கொண்ட யுனைட்டட் ஃபுரூட் கம்பனி தனது தந்திரமான



விளையாட்டின் மூலமாக ஸ்பானியர்களை தோற்கடித்து மத்திய அமெரிக்காவில் பலம்பொருந்திய சக்திகளில் ஒன்றாக தன்னை உறுதி செய்து கொண்டது. இக்கம்பனி வாழைப்பழ வர்த்தகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. ஏற்கனவே, ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் மக்கள் வாழைப்பழத்தை விரும்பி சாப்பிட ஆரம்பித்திருந்தனர். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகள் முழுவதும் ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இப்பகுதியின் வாழைப் பயிர்களின் முக்கிய இறக்குமதியாளர்களாக மாறிவிட்டன. இதனால் அதிக அளவில் இவற்றை உற்பத்தி செய்ய நிலத்தின் தேவை அதிகரித்தது. வாழைப்பழ வர்த்தகத்திற்கு ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. அதற்காக பரந்து விரிந்த ஹோண்டுராஸ் வனாந்தரத்தை அழிப்பதை யுனைட்டட் ஃபுரூட் கம்பனி நிரந்தரமாக்கியது.

வாழைப்பழங்கள் தென்கிழக்கு ஆசியாவின் வெப்பமண்டலப் பகுதிகளுக்குச் சொந்தமானவை. ஸ்பானிய காலனித்துவ காலத்தின் ஆரம்பத்தில் கரீபியன் தீவுகளுக்கு அவை முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. பொ.ஆ.மு(கி.மு.) 327-ல் அலெக்ஸாண்டர் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தபோது வாழைப்பழத்தை விரும்பிச் சாப்பிட்டுள்ளதாகவும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திரும்பிப் போகும்போது கிரேக்க நாட்டிலும் மேலைநாடுகளிலும் அவர் வாழைப்பழத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். அரேபியர்களும் கூட அடிமை வியாபாரத்துடன் சேர்த்து வாழைப்பழத்தை விற்பனை செய்திருக்கிறார்கள். அன்று ஆரம்பிக்கப்பட்ட வாழைப்பழ வியாபாரம் பின்னாளில் அமெரிக்காவின் கைத்துப்பாக்கிகளாக மாற்றப்பட்டன.

தற்போது மத்திய அமெரிக்க தோட்டங்களில் வளர்க்கப்படும் பெரிய வாழைக்குலைகளை விட ஆரம்பத்தில் பயிரிடப்பட்ட வாழைப்பழங்கள் மிகவும் சிறியதாக இருந்துள்ளன. 'விரல் அளவிலானது' என்பதற்கு அரேபிய மொழியில் பனானா என்று அர்த்தம். பின்னாளில் அதுவே அப்பழத்தின் பெயராகவும் மாறிப்போனது.

முதன்முதலில் பிரிட்டிஸ் ஹோண்டுராஸின் தெற்கு பகுதியில் 1860-களில் அமெரிக்க கூட்டமைப்பு வாழைமரங்களை வளர்த்ததாக ஹோண்டுராஸ் நாட்டு எழுத்தாளர் ஹெரி எஸ். பெரிசர் (Harry S. Pariser) குறிப்பிடுகிறார். ஆங்கிலேயர்களால் சிறிது காலத்திற்குப் பின்னர் அப்பகுதியில் அதிகமான வாழைத் தோட்டங்கள் தொடங்கப்பட்டன. ஸ்பானிய மொழி பேசும் மத்திய அமெரிக்காவில், 1870-களில் அமெரிக்க தொழிலதிபர் மைனர் கூப்பர் கீத் (Minor Cooper Keith) என்பவரால் கோஸ்டாரிகாவில் (Costa Rica) வணிக ரீதியாக வாழைப்பழங்கள் முதன்முதலில் வளர்க்கப்பட்டன. அவர் தனது உற்பத்தியை குவாத்தமாலா மற்றும் ஹோண்டுராஸ் ஆகிய நாடுகளில் விரிவுபடுத்தினார். 1880-களின் பிற்பகுதியில் பிரிட்டிஸ் ஹோண்டுராஸ் சிண்டிகேட் 14,301 ஏக்கர் தோட்டத்தில் வாழைப்பழங்களை பயிரிட்டது. 1889-ல் சக்தி வாய்ந்த யுனைட்டட் ஃபுரூட் கம்பனி தொழிலதிபர் கீத்தின் வர்த்தகத்தை உள்வாங்கிக் கொண்டு விஸ்வரூபம் எடுத்தது. அந்தக் கம்பனியின் துணைத்தலைவராக கீத் பதவியமர்த்தப்பட்டார். இந்த நிறுவனம் மத்திய அமெரிக்க வாழைத் தொழிலில் ஏகபோக உரிமையை தனதாக்கிக்கொண்டது.

1909-ம் ஆண்டில் காலனித்துவ அரசாங்கத்திற்கும் யுனைடெட் ஃப்ரூட் கம்பனிக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அதன்படி, ஒரு ஏக்கருக்கு ஒரு டொலர் என்ற அடிப்படையில் வாழை நடுகைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அதற்காக ஏறக்குறைய 2,500 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன. சொர்க்கத்தின் மரங்களில் ஒன்றாக வாழையை குர்ஆன் குறிப்பிடுகிறது. ஆனால், ஹோண்டுராஸ் நாட்டை வாழைப்பழ மயமாக்கியதானது அது ஒரு நரகத்தின் மரம் என கருத வைத்தது. ஹோண்டுராஸ் மட்டுமல்ல குவாதமாலா, கோஸ்டாரிகா, பனாமா, கொலம்பியா மற்றும் ஈக்குவடார் போன்ற நாடுகளின் நிலைமையும் இதுதான்.

வாழைப்பழ ஏற்றுமதியில் அமெரிக்க நிறுவனங்கள் தமது கட்டுப்பாட்டை ஹோண்டுராஸில் வைத்திருப்பதை உறுதிசெய்யவும், மக்களின் எழுச்சியை அடக்கவும் அமெரிக்க இராணுவத்தையும் கூலிப்படைகளையும் பயன்படுத்தி வந்தது. 1903-க்கும் 1925-க்கும் இடையேயான 22 ஆண்டுகளில் 7 முறை படையெடுக்கப்பட்டது. அச்சமயம் முக்கிய அளவில் வாழைப்பழமே ஹோண்டுராஸிற்கு அந்நிய நிதியை கொண்டு வந்தது. யுனைட்டட் ஃபுரூட் கம்பனி இதை தின்றுக் கொழுத்தது. 1929 வாக்கில் மத்திய அமெரிக்கா 38 மில்லியன் வாழைக் குலைகளை ஏற்றுமதி செய்தது. ஒவ்வொன்றின்

மீதும் யுனைட்டட் ஃபுரூட் கம்பனி ஹோண்டுராஸிற்கு ஒரு பென்னி பணம் வரியாகச் செலுத்தியது.

பின்னாளில் இந்தச் சிறியளவு வரி உயர்த்தப்பட்டாலும் எந்த வகையிலும் செலுத்தப்பட்டதாக தெரியவில்லை எனவும், இப் போதும் அறிய முடியவில்லை எனவும் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் எடுவார்டோ காலியானோ தனது எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளார். அரசின் சுங்க வரித் துறைக்கு வெளியே யுனைட்டட் ஃபுரூட் கம்பனி ஏற்றுமதியும் இறக்குமதியும் செய் தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவரது எழுத்துகள் பின்வருமாறு பதியப்பட்டுள்ளன. *'ஹோண்டுராஸ் நாட்டில் ஒரு உதவியாளரை விட கோவேறு கழுதையின் விலை அதிகமாகும். மேலும் மத்திய அமெ-ரிக்கா முழுவதும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் அந்நாடுக ளின் அதிபர்களை விட அதிகமாக அதிகாரம் செய்கின்றனர். வாழைப்பழ உற்பத்தி மற்றும் விற்பனையில் யுனைட்டட் ஃபுரூட் கம்பனி பிற நிறுவனங்களை விழுங்கி மத்திய அமெ ரிக்காவின் பெரிய நிலக்கிழாராக மாறியது. அதேசமயம், அதன் துணை நிறுவனங்கள் புகைவண்டி மற்றும் கடல் மார்க்க போக்குவரத்தை கவனித்துக் கொண்டன. துறைமு கங்களை அது தன்வசமாக்கிக் கொண்டு அதற்குரிய சுங்கம் மற்றும் காவல் நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டது. அதன்விளைவாக அமெரிக்க டொலரானது மத்திய அமெரிக் காவின் தேசிய நாணயமாக மாறியது.'*

யுனைட்டட் ஃபுரூட் கம்பனி 1930-இல் ஹோண்டுராஸ் அதிபர் ஆண்டினோவுக்கு அதிகாரத்தைப் பெற உதவி செய்துள் ளது. ஏனென்றால், கோக்கைன் போதைப்பொருளும் ஒரு




பெரிய வர்த்கமாக இருந்தது. இதனை ஹோண்டுராஸ் அதி பர் ஆண்டினோவும் யுனைட்டட் ஃபுரூட் கம்பனியும் இணைந்தே செய்துள்ளனர். 1970 - 1980-களில் கொக்கை னின் புகழ் அதிகரித்ததால், கொலம்பியா வட அமெரிக்கா வின் மிகப்பெரிய சப்ளையர் ஆனது. யுனைட்டட் ஃபுரூட் கம் பனி பின்னாளில் தனது பெயரை சிக்கிட்டா (Chiquita) என்று மாற்றிக்கொண்டு வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத் தது. 1997-ம் ஆண்டு இந்த சிக்கிடா நிறுவனத்தின் 7 கப்பல்க ளில் இருந்து ஒரு தொன் கொக்கைன் கைப்பற்றப்பட்டமை பதிவாகியிருக்கிறது. 1997-2004 காலப்பகுதியில் சிக்கிட்டா நிறுவனம் கொலம்பியாவின் பயங்கரவாத குழுவான ஐக்கிய தற்காப்பு படைக்கு (United Self-Defense Forces of Colombia) 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி செய்துள் ளது. இந்தப் படை இடதுசாரிகளின் எதிரியாகும். இக்கும்ப லுக்கு சிக்கிட்டா நிறுவனம் நிதியுதவி வழங்கியதை ஒப்புக் கொண்டு 2007-ம் ஆண்டு 25 மில்லியன் டொலர் அபராதம் செலுத்தியுள்ளது. வாழைப்பழ வளர்ப்பு எனும் பெயரில் அப் பாவி மக்களின் வாழ்விலும், வனாந்தரங்களின் இருப்பிலும் விளையாட்டுக்காட்டிக் கொண்டிருக்கிற இந்தக் கும்பல் கோக்கைன் போதைப்பொருள் வியாபாரத்தின் ஊடாகவும் தனது அழிக்கும் படலத்தை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

### காடுகளை பொசுக்கும் போதைப்பொருள் மாஃபியா:

ஹோண்டுராஸில் நார்கோஸ்கள் காடுகளை அழித்து வருவ தாகவும், இந்தப் பிரச்சினை மத்திய அமெரிக்கா முழுவதை யும் பாதிக்கிறது எனவும் பழங்குடி மக்கள் கொந்தளிக்கின்ற னர். சட்டவிரோதமாக பயிர்களை வளர்ப்பதற்கும் பிற நடவ டிக்கைகளுக்கும் 2021-ம் ஆண்டில் 90,000 ஹெக்டேர்க



ளுக்கு அதிகமான காடுகளுக்கு தீவைக்கப்பட்டுள்ளதாக ஹோண்டுராஸ் செய்திகள் தெரிவித்திருந்தன. இந்தக் குற்றச் செயலின் முக்கிய குற்றவாளிகளாக நார்கோஸ் இருக்கிறார் கள். ஏனெனில், கொக்கைன் உற்பத்திக்கு பயன்படும் கோகா (Coca) தாவரங்களின் வளர்ப்புக்காகவும், அவ்வியா பாரத்தை நடத்துவதற்கான இரகசிய விமான ஓடுபாதைகள், பண்ணைகள் மற்றும் மருந்து ஆய்வகங்களை உருவாக்குவ தற்காகவும் இவ்வாறு காடுகள் அழிக்கப்படுகின்றன. இந்தப் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் இரக்கமின்றி ஹோண்டுராஸ் வனாந்தரம் பொசுக்கப்படுகின்றது.

2020 மற்றும் 2021 ஆகிய இரு வருடங்களில் மாத்திரம் கோகா தாவர வளர்ப்பிற்காக 140 ஹெக்டேர் காடுகள் அழிக் கப்பட்டுள்ளன. 2020-ல் 525,000 கோகா செடிகளும் 5 ஆய்வ கங்களும் அழிக்கப்பட்டதாக ஸ்பெனிஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. கோகா வளர்ப்புக்காக மரங்கள் வெட்டி சாய்க்கப்படுவதில்லை எனவும் மாறாக முழு காட்டுக் கும் தீ வைத்து கொளுத்தப்படுகிறது எனவும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏறக்குறைய 10,000 கோகா

தாவரங்களை பயிரிடமுடியும். மத்திய அமெரிக்காவில் 30 சதவீதம் காடுகளை நார்கோஸ் கும்பல் அழித்திருக்கிறது. ஆக, அங்கு எந்தளவிற்கு கோகா வளர்ப்பும் கோக்கைன் வியாபாரமும் வேரூன்றியிருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

## ஹோண்டுராஸில் மடியும் மரங்களின் முனுமுனுப்பு:

112,492 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட ஹோண்டுராஸ் நாடு ஊசியிலை காடு (coniferous forest ), வெப்பமண்டல ஈரப்பதக் காடு (tropical humid forest), மேகக்காடு (cloud forest), சதுப்புநிலக் காடு (mangrove) மற்றும் வறண்ட காடு (dry forest) ஆகிய ஐந்து வகையான காடுகளை கொண்டுள்ளது.

தவிர, Texiguat, Pico Bonito, Nombre de Dios, Wamakklisinasta மற்றும் Truktsinasta ஆகிய பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளையும் கொண்டுள்ளன. இங்கு மலைத்தொடர் தேசிய பூங்கா மற்றும் வனவிலங்கு புகலிடங்கள் உள்ளன. Pico Bonito ஹோண்டுராஸில் உள்ள இரண்டாவது பெரிய தேசிய பூங்காவாகும். Texiguat, Pico Bonito மற்றும் Nombre de Dios ஆகியன இணைந்து 180,939 ஹெக்டேர்களுக்கும் அதிகமான பல்லுயிர் வன சுற்றுச்சூழல் அமைப்புகளின் இணைக்கப்பட்ட வனப்பகுதியை உருவாக்குகின்றன. இங்கு ஜாகுவார், அழிந்துவரும் பேர்ட்ஸ் டேபீர் (Baird’s Tapir), அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ள, உள்ளூரைச் சேர்ந்த ஹோண்டுரான் மரகத ரீங்கார பறவை (Honduran Emerald Hummingbird) மற்றும் குவெட்சல் பறவை (Quetzal) ஆகிய உள்ளன.

ஹோண்டுராஸ் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிக்கையின் படி, இந்நாட்டில் 7,524 பதிவு செய்யப்பட்ட கலன் தாவரங்கள் (Vascular plants), 718 வகையான பறவைகள், 228 வகையான பாலூட்டிகள், 211 வகையான ஊர்வன மற்றும் 111 நீர்வீழ்ச்சி உயிரினங்கள், 2,500 வகையான பூச்சிகள் மற்றும் 672 வகையான மீன் இனங்கள் உள்ளன. இவற்றில் 82 கலன் தாவரங்கள், 129 பறவை இனங்கள், 71 பாலூட்டி இனங்கள், 17 ஊர்வன மற்றும் நீர்வீழ்ச்சி உயிரினங்கள், 71 மீன் இனங்கள் IUCN சிவப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதுபோல, ரியோ பிளாட்டானோ உயிர்க்கோளக் காப்பகம் (Río Plátano Biosphere Reserve) என்பது ஹோண்டுராஸின் கரீபியன் கடற்கரையில் உள்ள லா மொஸ்கிடியா பகுதியில் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இது ஹோண்டுராஸ் நாட்டின் கிழக்குப் பகுதியில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளது. இதன் மொத்த பரப்பளவு 5,250 சதுர கிலோமீட்டர் ஆகும். இந்தக் காப்பகத்தில் பல அழிந்து வரும் உயிரினங்களும் மத்திய அமெரிக்காவில் உள்ள வெப்பமண்டல காடுகளின் மிகப்பெரிய எச்சங்களும் உள்ளன. இது 1982-ம் ஆண்டு முதல் உலக பாரம்பரிய தளமாகவும், உயிர்க்கோள காப்பகமாகவும் அறிவிக்கப்பட்டது. 2011-ம் ஆண்டில் யுனெஸ்கோ இந்தக் காப்பகத்தை ஆபத்தில் உள்ள உலக பாரம்பரிய பட்டியலில் சேர்த்தது. உலக பாரம்பரிய தளமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் யுனெஸ்கோ அறிவித்துள்ள போதிலும், ரியோ பிளாட்டானோ காடழிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. 2002 மற்றும் 2020-க்கு இடையில் இந்த உயிர்க்கோள காப்பகம் அதன் முதன்மை காடுகளில் 13 சதவீதத்தை இழந்துள்ளதாக செயற்கைக்கோள் தரவுகள் காட்டுகின்றன. மீண்டும் 2020-ல் காடழிப்பு அதிகரித்துள்ளது. அதாவது, 2019-ம் ஆண்டைக் காட்டிலும் காடழிப்பு ஏறக்குறைய இருமடங்காக அதிகரித்துள்ளது.

இப்பகுதியின் நிலத்தில் 50 சதவீதம் மிஸ்கிடோ (Miskito) மற்றும் பெச் (Beche) பழங்குடியின சமூகங்களிற்கு சொந்தமானது என்றும், இயற்கை வளங்களை சுரண்டுவதற்காக முறையற்ற விதத்தில் இந்நிலப்பகுதி அபகரிக்கப்படுவதாக பழங்குடியினச் சமூகம் தெரிவிக்கிறது. இங்கு இடம்பெறுகின்ற சட்டவிரோத நில ஆக்கிரமிப்பை எங்களால் மூடிமறைக்கவியலாது என்றும் கூறுகின்றனர். 2016 – 2020-இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் இப்பகுதியில் 39,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அதாவது, ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 54 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.



2011-ல் ஹோண்டுரான் வன அதிகாரிகளால் செய்யப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி, 2005-2009-ற்கு இடையில் காடழிப்பு விகிதம் ஆண்டுக்கு 28,395 ஹெக்டேர்களாக இருந்துள்ளது. அடுத்த இரு ஆண்டுகளில் காடழிப்பு விகிதம் ஆண்டுக்கு 34,385 ஹெக்டேர்களாக அதிகரித்துள்ளது. ஹோண்டுராஸில் 2000-2013 காலப்பகுதிக்குள் 28.6 சதவீத காடு இழக்கப்பட்டுள்ளது. 1.9 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் வியாபித்திருந்த ஊசியிலைக் காடுகள் 2015 - 2016-ற்கு இடையிலான காலப்பகுதியில் ஏறக்குறைய 500,000 ஹெக்டேர்களை இழந்துள்ளது.

2010 தொடக்கம் 2021-ற்கு இடையில் ஹோண்டுராஸ் அதன் 10 சதவீத காடுகளை இழந்திருக்கிறது. அதாவது, 696,562 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் 258 நகராட்சிகளில் 150-இற்கும் மேற்பட்ட தடவைகள் காடுகளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கால்நடை வளர்ப்பும் விவசாய பரவலாக்கமும் கூட காடழிப்பில் அதிகளவில் பங்குவகிக்கின்றன.

2000-ம் ஆண்டில் ஹோண்டுராஸின் புரூஸ் லகுனா நகராட்சி (Bruce Laguna) 368,000 ஹெக்டேர் காடுகளைக் கொண்டிருந்தது. அதாவது, அந்நகராட்சியல் 83 சதவீதம் வரை விரிவடைந்திருந்தது. ஆனால், 2020-ம் ஆண்டில் மட்டும் புரூஸ் லகுனா நகராட்சியில் 12,000 ஹெக்டேர் காடு அழிக்கப்பட்டுள்ளது. அதாவது, இக்காடு தனது 3.3 சதவீத மரப் பரப்பை இழந்துள்ளது. இந்தக் காடழிப்பினால் 4.67 மில்லியன் தொன் காபனீரொட்சைட்டு வளிமண்டலத்தில் சேர்ந்துள்ளது.

தவிர, ஜுவான் ஃபிரான்சிஸ்கோ புல்னஸ் நகராட்சி (Juan Francisco Bulnes) 2000-ஆம் ஆண்டில் 65,300 ஹெக்டேர் மரப் பரப்பைக் கொண்டிருந்தது. 2020-ல் அதில் 4 சதவீதத்தை இழந்துள்ளது. இதன்போது 1.04 மில்லியன் தொன் காபனீரொட்சைட்டு வெளியிட்டது. 2001-2020-க்கு இடையில் ஐரியோனா நகராட்சி (Iriona) அதன் மரங்களின் 25 சதவீதத்தை இழந்துள்ளதாக செயற்கைக்கோள் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஹோண்டுராஸ் காடுகள் கிராமப்புற சமூகங்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை வழங்குவதுடன், இந்தக் காடுகளின் மிக முக்கியமான சேவை, மலைகளில் இருந்து பாய்ந்துச் செல்லும் பல ஆறுகளுக்கு தண்ணீரை வழங்குவதாகும். இங்கு 30 நீர்நிலைகள் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனபோதும், இங்கு நிலவுகின்ற நீர் நெருக்கடி ஹோண்டுராஸின் தலையிடியாக இருக்கறது.

### நீர் நெருக்கடி எனும் மனிதாபிமான நெருக்கடி:

ஹோண்டுராஸில் நிலவுகின்ற காடழிப்பும் நீர் நெருக்கடியும் சமூக, சுற்றுச்சூழல் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன.



காடழிப்பின் காரணமாக அங்கு மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளது. நிலவுகின்ற காலநிலை மாற்றத்தின் காரணமாகவும் இந்நிலை மோசமடையும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதியில் ஹோண்டுராஸில் மழைப்பொழிவு 20 சதவீதம் குறைவடையும் என்றும், ஆறுகள், ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் 41 சதவீதம் நீர் குறைவடையும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தவிர, காடழிப்பு ஏற்கனவே நீர்நிலைகளை கடுமையாக பாதித்திருப்பதோடு, இந் நிலைமை ஹோண்டுராஸின் நீர் நெருக்கடியை மேலும் தீவிரமாக்கியுள்ளது. அதுமட்டுமன்றி, இங்கு நீர் மாசடைந்துள்ளமையும் சிக்கலாகவுள்ளது.

மனித சமூகம் தமது ஆரோக்கியத்திற்காக சுத்தமான தண்ணீரையே நம்பியிருக்கின்றது. சுத்தமான நீரை ஜீவராசிகளுக்கு வழங்கும்பொருட்டு சுத்திகரிக்கும் பணியை காடுகள் எவ்வித எதிர்பார்ப்புமின்றி நிறைவேற்றி வருகின்றன. ஆனால், காடழிப்பு மற்றும் விவசாயம் என்பன இயற்கை வடிகட்டியான வானந்தரங்களை இல்லாமலாக்கி வருகின்றன.

இப்பெரும் சிக்கலை ஹோண்டுராஸ் எவ்வாறு தீர்க்க முடியும்? காடுகளை மீட்டெடுப்பதிலும் பாதுகாப்பதிலும்தான் பதில் இருக்கிறது. ஏனென்றால், காடுகள் இயற்கையின் வடிகட்டிகளாகவும் நீரை சேமிக்கும் களஞ்சியசாலையாகவும் உள்ளன. மழை பெய்யும்போது அது மரங்களிலும் செடிகளிலும் கொடிகளிலும் பட்டுத் தெறித்து உடைந்து சேதமில்லாது நிலத்தில் குதிக்கும். இவ்வாறு வந்திறங்கும் நீரை நிலம் உறிஞ்சி எடுத்து சேமித்துக்கொள்ளும். அதுபோல நீர்நிலைகளை நிரப்பி ஆறுகள், ஓடைகள் வழியாக ஓடும் நீரின் ஓட்டத்தை காடுகள் ஒழுங்குப்படுத்தும். தவிர, தமது வேர்கள் மூலம் மண்ணை ஒன்றாக இணைத்து மண்ணரிப்பைத் தடுக்கும். வெள்ளத்தையும் வரட்சியையும் குறைக்கும். இதன் மூலம் விவசாயக் கிராமங்கள் செழிப்படைவதுடன், நீர் இருப்பும் உறுதி செய்யப்படுகிறது.

ஆனால், இவ்விடயத்தில் ஹோண்டுராஸ் கையறு நிலையிலேயே இருக்கிறது. நீர் நெருக்கடியானது சாதாரண மக்களை வாட்டியெடுக்கிறது. வறுமையையும் அதிகரிக்கிறது. ஆக, காடுகளை பாதுகாப்பதில்தான் தீர்வு அடங்கியிருக்கிறது. அவ்வாறு காடுகளை பாதுகாக்க வேண்டுமெனில் காடுகளை தின்று கொழுக்கின்ற பீடைகளை பூண்டோடு அழிக்கவேண்டும். இல்லையென்றால், கால்கட்டாவது போடவேண்டும்.

**உசாத்துணை:**


- Forests of the World in Honduras - https://www.forestsoftheworld.org/
- Here is how narcos are destroying Honduras' forests - https://resoilfoundation.org/en/environment/narcos-honduras-deforestation/
- Drugs and agriculture cause deforestation to skyrocket at Honduran UNESCO site - https://news.mongabay.com/
- When a Cavendish banana was enough to send US troops to invade nations! https://www.lankaweb.com/news/items/2023/02/12/when-a-cavendish-banana-was-enough-to-send-us-troops-to-invade-nations/
- United Fruit Company – Chronology
- Honduras Loses 10% of its Forests in Just 11 Years - https://ticotimes.net/
- Río Plátano Biosphere Reserve - https://whc.unesco.org/en/list/196/
- Honduras' Clean Water Struggle - By deborah.bensen in Clean Water, Donor Opportunities, Water Technology
- HOW FORESTS AND YOUNG PEOPLE SOLVE THE WATER CRISIS IN HONDURAS-Hailey S https://borgenproject.org/water-crisis-in-honduras/




sathees.selvarajah@thaiveedu.com



# நங்கை சானி

## த. ஜீவராஜ்

**தோ**ள்ப்பட்டையில் இருந்த கடுமையான வேதனையையும் பொருட்படுத்தாமல் ஆதினி தனது தலையை சற்றுத் தூக்கி வாசலினைப் பார்த்தாள். கூடி நின்ற கூட்டத்தின் கால்களுக்கு நடுவே தூரத்தில் ஒரு அழகிய இளம் பெண் வெள்ளை உடை அணிந்து வேகமாக வருவது தெரிந்தது.

தன் தந்தை கேசவனுக்கு உதவிய கிரமவித்தனின் மனைவி நங்கை சானி அம்மையார்தான் அவர் என்பதை கூட்டத்திலிருந்து கதைப்போரின் உரையாடல்கள் மூலம் ஆதினியால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர் நடந்து வந்த தோரணையும், அவரது கண்களில் இருந்து வீசிய ஒளியும், வெள்ளை நிற ஆடை அணிந்த அரசி ஒருவர் அதிகாரத் தோரணையோடு நடந்து வருவது போல் இருந்தது.

நீண்ட நேரம் தலையைத் தூக்கி வைத்திருக்க முடியாமல் ஆதினி தலையைச் சாய்க்கவும் அறிவாட்டியும், அவரைத் தொடர்ந்து வந்தவர்களும் அறைக்குள் வரவும் சரியாக இருந்தது. நங்கை சானி குழுவினர் வருவதற்கு ஏற்றவாறு கூடி இருந்தவர்கள் வழி விடுகிறார்கள் என்பதை அங்கு எழுந்த காலடிச் சத்தங்கள் ஆதினிக்கு அறிவுறுத்தியது. அதன் பின் அருகில் ஒரு சுகந்தமான வாசனை வீசத் தொடங்கியதை அவள் நுகர்ந்தாள். தலையைத் தூக்கி பார்க்க முயற்சித்த போதும் தோள்பட்டை வலி அதனைத் தடுத்துவிட்டது.

எழுந்து பார்க்க முடியாவிட்டாலும் தனக்கு அருகில் யாரோ நெருங்கி வருவது ஆதினிக்குப் புரிந்தது. அப்போது அறிவாட்டி எதையோ சொல்ல முயல்வதையும் அதற்கு முன் ஒரு இனிய குரல் கேசவனின் மகள் ஆதினி என்று அவளது பெயரை உச்சரிப்பதையும் ஆதினி கேட்டாள். அதனைத் தொடர்ந்து மிக மென்மையான ஒரு கை இலட்சனை பொறிக்கப்பட்ட தோளின் பகுதிகளை மிக மெதுவாகத் தடவி விட்டது. அந்தக் கணம் ஆதினிக்கு உடல் வலி எல்லாம் மறந்து மேலே பறப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. இனம் புரியாத ஒருவித குளிர்ச்சி அவள் உடலில் பரவியது. ஏன் நான் நங்கை சானியாகப் பிறந்திருக்கக் கூடாது என்று ஆதினி ஒரு கணம் நினைத்தாள். தனக்குள் ஏன் இப்படியான ஒரு விசித்திர எண்ணம் எழுகிறது என்று அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

நிலைமை தனக்குச் சாதகம் இல்லாமல் போவதை உணர்ந்த ஆளப்பிறந்தாள் தனது வீட்டிற்குள் சென்று மீண்டும் தாளிட்டுக் கொண்டாள் போலிருந்தது. நங்கை சானி அம்மையார் வந்தவுடன் அந்த இடத்தை விட்டு கூடி நின்றவர்கள் வெளியேறிச் சென்றபோது பேசிக்கொண்டவற்றிலிருந்து ஆதினி அதனைப் புரிந்து கொண்டாள். அறிவாட்டி ஆளப்பிறந்தாள் மேல் கோபமுடன் குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டு தேவகன்மிகளிடம் பேசிக் கொண்டிருப்பது புரிந்தது. கோதையின் தாயின் விம்மல் சத்தம் அவள் இன்னும் அங்கே ஏதோ ஓர் மூலையில் அழுது கொண்டிருக்கிறாள் என்பதைப் புரிய வைத்தது. முல்லை அழகியும் மற்றைய தேவரடியார்கள் இருவரும் நங்கை சானி அம்மையார் இடும் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அங்கு நடந்து கொண்டிருக்கும் உரையாடல்கள் ஆதினிக்கு அறியத்தந்தது.

ஆலய அறங்காவலரான தேவகன்மிகள் இது ஒரு பெரிய தவறில்லை என்ற கோணத்தில் நங்கை சானி அம்மையாருடன் விவாதித்துக் கொண்டிருந்தார். வயதில் இளமையாக இருந்தாலும் ஆளப்பிறந்தாள் செய்தது தவறு என்பதில் தெளிவாக இருந்த நங்கை சானி அம்மையார், தனது கட்டளையை மீறி திட்டமிட்டுப் புரிந்த குற்றம் தொடர்பில் முறையாக விசாரிக்க



வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பதை அவரது பேச்சு ஆதினிக்கு உணர்த்தியது. முல்லையழகி இடை புகுந்து ஏதோ கூற முற்பட்டபோது தன் குரலை உயர்த்தி தேவகன்மிகள் அதட்டியது ஆதினிக்குப் பயத்தினை உருவாக்கியது.

இந்த உரையாடல்களுக்கு இடையில் பரீட்சயமில்லாத ஒரு வயதான பெண்மணியின் குரலும் கேட்டுக் கொண்டிருந்தது. அநேகமாக அது நங்கை சானி அம்மையாருடன் கூட வந்திருந்தவரது குரலாக இருக்கும் என ஆதினி ஊகித்துக் கொண்டாள். நங்கை சானி அம்மையாரின் கணவர் கிரமவித்தன் மரணமானதைத் தொடர்ந்து அவர் நினைவாக உருவாக்கப்பட்ட அறக்கட்டளையின் ஒரு அங்கமான நந்தவனப் பராமரிப்பு, சந்தி விளக்கெரித்தல், தேவரடியார்கள் போன்ற விடயங்கள் விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காரர் படைப்பிரிவின் பராமரிப்பில் இருப்பதை அந்தப் பெண்மணி தேவகன்மிகளுக்கு ஞாபகப்படுத்தினார். எனவே இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு வேளைக்காரப் படை பிரிவினருக்கு உரியது என்பதை அந்தப் பெண்மணி நங்கை சானி அம்மையாருக்கு ஆலோசனையாக கூறினார். விடயம் வேளைக்கார படைப்பிரிவினரிடம் சென்றுவிடக் கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருந்த தேவகன்மிகள் கொஞ்சம் கடுமையான தொனியில் நங்கை சானி அம்மையாரோடு விவாதிப்பதையும் அது பயனளிக்காமல் நங்கை சானி அம்மையார் தான் எடுத்த முடிவில் உறுதியாக இருப்பதையும் ஆதினியால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. தன்னால் வழங்கப்பட்ட தானத்தில் ஏற்பட்ட இடர்பாடு தொடர்பில் வேளைக்காரப் படைப் பிரிவு முழுமையாக விசாரித்து விளக்கம் அளிக்குமாறு ஓலை எழுதி அந்த இடத்திலேயே நங்கை சானி அம்மையார் கையொப்பமிட்டது தேவகன்மிகளின் கோபத்தை உச்ச நிலைக்குக் கொண்டு சேர்த்திருக்கிறது என்பதை ஆதினி அங்கு எழுந்த சத்தங்களால் அச்சத்தோடு புரிந்துகொண்டாள்.

ஆரம்பக் கலந்துரையாடல்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அறிவாட்டிப் பாட்டியின் குரல் மெல்ல மெல்ல சுருதி குறைந்து செல்வதும், அவள் இறுதி நேரத்தில் சமரசம் ஒன்றுக்கு போவதற்கு முயற்சி எடுப்பதும், அறிவாட்டிப் பாட்டி எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கரிசனை கொண்டிருக்கிறாள் என்பதை ஆதினிக்கு உணர்த்தியது. அறிவாட்டியின் உரையாடல்களில் இருந்து அவள் ஆதினியினதும், கோதையினதும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மேலதிக விசாரணைகள் எதனையும் விரும்பவில்லை என்பதையும், அவள் இந்த விடயத்தை நங்கை சானி அம்மையாரிடம் மட்டுமே கொண்டு செல்ல விரும்பியிருக்கிறாள் என்பதையும் ஆதினியால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அறிவாட்டி தான் அவசரப்பட்டு பிரச்சினையைப் பெரிதாக்கிவிட்டேன் என்று வருத்தப்பட்டபடி கூறிய வார்த்தைகள் ஆதினியின் காதில் தெளிவாக வீழ்ந்தது.

அம்மா சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிப் பெருமக்கள் சபையின் உறுப்பினர் சிலர் வந்திருக்கிறார்கள். தங்களை அவர்கள் அழைக்கிறார்கள் என்று ஒரு தேவரடியார் வெளியில் இருந்து அறைக்குள் வந்து பயம் கலந்த குரலில் நங்கை சானி அம்மையாரிடம் தெரிவிப்பது ஆதினியின் இதயப் படபடப்பைக் கூட்டியது. அந்தப் பெண்மணி கூறியவற்றை உறுதிப்படுத்துவது போல் அறை வாசலில் பலரது காலடிச் சத்தங்கள் கேட்டபடி இருந்தது. தூரத்தில் கேட்ட குதிரை வண்டிச் சத்தங்களும், மாட்டு வண்டில் சத்தங்களும் விடயம் அறிந்து பல ஊர்ப் பெரியவர்கள் ஒன்றுகூடுகிறார்கள் என்பதை ஆதினிக்கு உணர்த்தியது.

நங்கை சானி அம்மையாரும், அவருக்கு துணையாக இருந்த பெண்மணியும் அவசர அவசரமாக வாசலை நோக்கி செல்வதையும், அதற்குப் பிறகு அறிவாட்டியும், முல்லையழகியும், கோதையின் தாயும் செல்வதையும் சிரமப்பட்டு தலை தூக்கிப் பார்த்த ஆதினியால் காணக்கூடியதாக இருந்தது. இவர்கள் அனைவருக்கும் முன்னமே தன் பருத்த தேகத்தை அவசரமாகத் தூக்கிக்கொண்டு தேவகன்மிகள் கூடியிருக்கும் பெரியவர்களிடம் முறையிடுவதற்காக சென்றுவிட்டார் என்பதை ஆதினி ஊகித்துக் கொண்டாள்.

தனித்து விடப்பட்ட அறையில் கோதையின் விசும்பலை அப்போதுதான் ஆதினி அவதானித்தாள். அவள் நீண்ட நேரமாக பயத்தில் அழுது கொண்டிருக்கக் கூடும் என்பதை புரிந்துகொண்டவளாக ஆறுதல் படுத்தும் சில வார்த்தைகளை அவளிடம் ஆதினி கூறினாள். ஆனால் நிலைமை அத்தனை தூரம் சாதகமானது அல்ல என்பதை வெளியில் கேட்டுக்கொண்டிருந்த குரல்கள் உறுதிப்படுத்தியது. அதிகாரத் தோரணையில் ஆண்களின் குரல்கள் மாறி மாறிக் கேட்டுக்கொண்டிருந்தது. அந்தக் குரல்களுக்கு நடுவில் நங்கை சானி அம்மையாரின் குரலை ஆதினி உன்னிப்பாக தேடிக்கொண்டிருந்தாள்.

தன்னைக் காப்பாற்றுவதற்காக கிரமவித்தன் ஊர்ச் சபைக்கு முன்னால் பெருமாள் அவதாரம் எடுத்ததுபோல் இருந்தார் என்று தந்தை கேசவன் அடிக்கடி சொல்வது ஆதினிக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் இன்று தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்டு கிரமவித்தனின் மனைவி நங்கை சானி அம்மையார் ஆண்கள் நிறைந்த ஊர்ப் பெரியவர்கள் கூட்டத்துக்கு நடுவில் தனக்காக நிற்கிறாள் என்பது ஆதினியின் கண்களின் ஓரத்தில் கண்ணீர்த் துளிகளை அரும்பச் செய்திருந்தது. சாத்திர, சம்பிரதாயங்களை மீறி கிரமவித்தன் தனது மனைவியை அரச காரியங்களிலும், சமூக விடயங்களிலும் ஈடுபடுத்தியதன் பலாபலனை தாங்கள் இப்போது அனுபவிப்பதாக ஓர் ஊர்ப் பெரியவர் ஆதங்கத்தோடு உரத்துக் கூறியது உள்ளே படுத்திருந்த இருவரது காதுகளிலும் மிகத் தெளிவாக கேட்டுக் கொண்டிருந்தது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



# குருந்தனூர் தொல்லியல் தடயங்கள் பற்றிய வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துகள்

- நெடுங்கேணி சானுஜன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் குமுழமுனைப் பிரதேசம் பல்வேறு வரலாறுகள், பாரம்பரியங்கள், மரபுகள், தொல்லியல் எச்சங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்தக் குமுழமுனைக் கிராமமானது இயற்கை அழகு சூழ்ந்த வளமான கிராமமாகக் காணப்படுகின்றது. இக்கிராமத்திலிருந்து 3.5 மைல் தொலைவில் தண்ணிமுறிப்புக் குளத்துக்கு இடப் பக்கமாகவும் புதுக்கண்டம் வயல்வெளி முடிவாகவும் குமுழமுனைக் கிராமத்தின் எல்லைகள் கொண்டமைந்த இடம்தான் குருந்தமலை. இன்று மருவி குருத்துமலையாகிவிட்டது. குருந்தமரம் எனும் ஒரு வகை மரம் அதிகளவில் இப்பகுதியில் காணப்பட்டமையால் ஒருவகை காரணப் பெயராக இது அமைந்துள்ளது. இங்கு பழமைவாய்ந்த சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இலங்கையில் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் நாகர் குல மன்னர்களின் செல்வாக்கு களனி, நாகதீபம் போன்ற பகுதிகளில் இடம்பெற்றதைப் போன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் அவர்களின் செல்வாக்கு இடம்பெற்றுள்ளதை ஆய்வுகள் மூலம் அறியலாம்.

1982-ம் ஆண்டு பேராசிரியர் சி. பத்மநாதன் குருந்தனூர் மலைக்குச் சென்று ஆலயச் சிதைவுகளைப் பார்வையிட்ட போது அங்கு ஓர் கற்தூணில் காணப்பட்ட பிராமி எழுத்தினை மொழிபெயர்ப்பு செய்தார். அதில், ‘வேள்நாகன் மகன் வேள் கண்ணன்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பதிவு செய்தார். மேலும் அண்மையில் குருந்தனூரில் மீட்கப்பட்ட சிவலிங்கம் 2300 ஆண்டுகளிற்கு முற்பட்டது என்பதைச் சின்னத்திலுள்ள தமிழ் பிராமி வரிவடிவ எழுத்துகள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்று தெரிவித்துள்ளார். இணையத்தளமொன்றிற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்தமையானது. ‘குருந்தூர் மலையிலுள்ள இப்பொழுது பேசப்படுகின்ற சின்னங்கள் சிலர் பல்லவர் காலத்துக்குரியன என்று சொல்கின்றனர். பல்லவர் காலத்துக்கும் இந்தச் சின்னங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. இவை அந்தக் காலத்துக்கு மிக முற்பட்டனவாகும். அங்கு செங்கற்களால் அமைக்கப்பட்ட ஒரு சிறிய கட்டடத்தின் இடிபாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. பார்ப்பவர்கள் எவருக்கும் இது புலனாகும். அந்தக் கட்டடத்தினுள் சற்று முன்புறமாக ஒரு வெள்ளைக் கல்லிலமைந்த ஓர் உருவம் தெரிகிறது. அதில் பௌத்த படிமம் போல எதுவும் காணப்படவில்லை.

ஆதி காலத்துத் தொல்பொருள் சின்னங்களில் அனேகமானவை நாகர்களோடு தொடர்புடையவையாகும். நாகர்கள் வழிபட்ட சிவலிங்க வடிவங்கள் பனங்காமம் தொடக்கம் ஓமந்தை போன்ற இடங்களில் பெருமளவிலே காணப்படுகின்றன. இங்கே காணப்படுவது சிவலிங்க வடிவம் என்று கொள்வது சாலவும் பொருந்தும். இதைத்தான் வேறு ஆய்வாளர்களும் சொல்லியுள்ளார்கள். அது சிறிய கட்டடத்தில் அமைந்திருப்பது இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது. அதில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. நாகர்களுடைய கடவுள் பெயர் அதிலே காணப்படுகின்றது. அந்த லிங்கத்திலே ‘மணி நாகன்’ என்ற பெயர் தெளிவாகத் தெரிகின்றது. அது மட்டுமன்றி ‘வேள் நாகன்’ என்ற பெயரும் அதிலே காணப்படுகின்றது. வழமையாகக் கடவுள் சின்னங்களிலும் கடவுள் பெயரை எழுதுவதோடு அதைத் தாபனம் பண்ணியவர்கள் அல்லது நன்கொடை செய்பவர்களுடைய பெயரை எழுதுவது வழமை. நாகர்களுடைய வழமைப்படி வேள் நாகன் என்றுதான் அது எழுதப்பட்டிருக்கிறது. வழிபாட்டுச் சின்னங்கள் எல்லாவற்றிலும் அவர்கள் கடவுள் பெயர்களைத் தமிழ்ப் பிராமி வடிவங்களிலே பொறித்தார்கள். சிவலிங்கம், புத்த படிமம், நந்தி, மயூ-ரம், பூசகம் முதலிய எல்லாவற்றிலும் இந்தக் கடவுள் பெயர் காணப்படும். சின்னத்தின் அடிப்படையிலேதான் அது எந்த வழிபாட்டு மரபுக்குரியதென்பது நிர்ணயிக்கப்படும். இங்கு காணப்படுவது சிவலிங்கம். அதிலே காணப்படுகின்ற எழுத்துகளைக் கொண்டு பார்க்குமிடத்து இது பொ.ஆ.மு(கி.மு.) 03-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கொள்ளத்தக்கது. சில சமயங்களில் இலங்கையில் வட்டெழுத்து மரபு பரவியிருக்காததனாலேயே தமிழ் பிராமி வரி வடிவங்கள் தொடர்ந்தும் சில நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்திருக்கின்றன. ஆனால், இந்த வடிவத்தைப் பொறுத்தவரையில் இது சர்ச்சைக்குரிய வடிவமன்று. உறுதியாகச் சொல்லக்கூடியது என்னவென்றால் இது ஒரு பழங்காலத்து லிங்க உருவம். லிங்க உருவத்தின் ஆரம்பகால வடிவமைப்பினைப் பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர்களின் கடவுள் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம் சைவசமயச் சின்னமாக அது அமைகின்றது.’ எனச் சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வன்னியில் அதிகளவில் இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டன. ஒல்லாந்த ஆட்சியாளன் கப்டன் நாகொல்லு வன்னி நிர்வாகத்தை நேரடியாக நடத்தினான். இவனது காலத்தில் வன்னிப் பிரதேசத்திலிருந்த அனைத்துச் சைவக் கோவில்களும் இடிக்கப்பட்டன. அதிலொன்று தான் குருந்தனூர் சிவாலயமாம். இதன் கோவில் எச்சங்கள் பலவும் மலையின் உச்சியில் காணப்படுகின்றது.

குருந்தனூர் மலைப் பகுதியில் ஆங்கிலேய ஆய்வாளர் எச்.-சி.பி. பெல் அவர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு அது பற்றிய விபரங்களை 1905-ம் ஆண்டு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் 'Archaelogical Survey of Ceylon-Annual Report - 1905' எனும் அறிக்கையில் ஆவணப்படுத்தியுள்ளார். அவ்வறிக்கையில் 'குருந்தன் குளத்தின் மேற்குப் பக்கத்தில், குருந்தூர் மலையின் தெற்குப்பக்கச் சரிவில் குருந்தனூர் எனும் நகரம் புதைந்து கிடக்கிறது. இப்பகுதி முழுவதும் அடர்ந்த காடாகக் காணப்படும் அதேவேளை, இப்பகுதியில் இதுவரை அகழ்வாராய்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை' எனவும் தெரிவித்தார். இவ்விடத்தில் மூன்று பக்கங்களும் மதிற் சுவரினாலும், ஒரு பக்கம் குளத்தின் அணையாலும் சூழப்பட்ட சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் கட்டட இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு கற்தூண்களும், ஏராளமான சிறிய கட்டடங்களின் சிதைவுகளும், சில பெரிய கட்டடங்களின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவற்றில் சிறிய தூபியொன்று உள்ளது. இதன் அருகில் பல கற்தூண்களும், அதிகளவில் சிதைவடைந்த நந்தி ஒன்றும் காணப்படுகிறது. இது அநேகமாக ஒரு சைவக் கோயிலாக இருக்கவேண்டும். இவ்விடத்தில் மூன்று அடி விட்டமுள்ள பெரிய ஆவுடையார் ஒன்று காணப்படுகிறது. இதன் நடுவில் ஒரு அடி விட்டமுள்ள குழியுள்ளது. இதன் அருகில் செங்கல்லில் கட்டப்பட்ட 04 அடி 06 அங்குலம் அகலமுள்ள கிணறு ஒன்றும் காணப்படுகிறது. 25 அடி ஆழமுள்ள இக்கிணற்றில் 20 அடி வரை செங்கற் கட்டுமானமும், அதன் கீழே 05 அடிக்குப் பாறையில் செதுக்கப்பட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம் உள்ளது. 02 அடி 06 அங்குல உயரம், ஒரு அடி 09 அங்குல அகலம் கொண்ட இது உட்கார்ந்து வணங்கிய வண்ணம் காணப்படும் மனித உருவமாகும். இங்கு பல நாக காவற்கற்களும் காணப்படுகின்றன. இங்குள்ள செங்கற் கட்டடம் ஒரு இந்துக் கோயிலாகும். இது இடிந்து விழுந்து மேடாகக் காணப்படுகிறது. மொத்தத்தில் இது பௌத்த, இந்துச் சிதைவுகளைக் கொண்ட பிரதேசமாகுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தனூர் மலைப் பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்ட ஆங்கிலேய ஆய்வாளர் ஜே.பி. லூயிஸ் அவர்கள் 1895-ம் ஆண்டு தனது 'Mannual of the Vanni Districts' (இலங்கையின் வன்னி மாவட்டங்கள்; ஒரு கையேடு) எனும் நூலில் அது பற்றிய விபரங்களை எழுதியுள்ளார். அந்நூலில் குருந்தனூர் மலையில் தலை உடைந்த நிலையில் ஒரு நந்தியின் சிலையும் வணங்கிய நிலையில் ஒருவர் இருக்கும் சிற்பமும் இருந்ததாகவும், இவை தமிழரின் படையெடுப்பின் பின் கட்டப்பட்ட ஓர் இந்துக் கோயிலுக்குரிய சின்னங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இங்கு ஐந்து தலை நாகத்தின் கற்சிலையுடன் கூடிய ஒரு பண்டைய கோயிலும் இருந்ததாகவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கோயில் பற்றிக் கலாமணி சி. தெய்வநாயகம் பிள்ளை 1982-ல் வரலாற்றாசிரியர், பேராசிரியர்களான இந்திரபாலா, ரகுபதி, சிற்றம்பலம் போன்றோருடன் அந்த மலைக்குச் சென்றதாகவும் இது மிகவும் வனப்புடன் காணப்பட்டதாகவும் மலையின் அடியிலிருந்து உச்சிவரை கருங்கற் படிகள்

காணப்பட்டதாகவும் மலையின் உச்சியில் அழிவுற்ற சிவன் கோவிலுக்கான கற்தூண், கோமுகி, கருங்கற் பலகையிலான பீடங்கள் போன்ற எச்சங்கள் காணப்பட்டதாகக் கூறுகின்றார்.

யாழ். பல்கலைகழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஸ்ட பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் அவர்கள் அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார். 'வன்னிப் பிரதேசத்திலுள்ள வரலாற்றுப் பழைமை வாய்ந்த முக்கிய வரலாற்று மையங்களில் குருந்தலூர் (குருந்தூர்) ஒன்றாகும். பாளி இலக்கியங்களில் இந்த இடம் குருந்த-



கம என்றும் தமிழில் இது குருந்தலூர் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தக் குருந்தலூர் என்பதே தொன்மைமையான தமிழ் பெயரென்பது ஒரு தொன்மையான ஆதாரமாகக் காணப்படுகின்றது. இந்தக் குருந்தலூரில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் குருந்தலூர் (தருந்தனூர்) அதன் சுற்றாடலிலும் ஆதி இரும்புக் காலத்துப் பெருங் கற்காலப் பண்பாடு இருந்துள்ளது. ஆகவே அந்தப் பண்பாட்டு மக்களில் ஒரு பிரிவினர் பௌத்த மதம் பரவிய பொழுது அந்த மதத்தையும் தழுவியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தக் குருந்தலூர் (குருந்தூர்) பொ.ஆ.பி. 13-ம் நூற்றாண்டில் கலிங்க மாகன் சாகவனுடைய ஆட்சியில் மிக முக்கிய ஒரு நகராக இருந்ததை சூளவம்சமும், இராஜாவெலிய என்ற சிங்கள இலக்கியமும் குறிப்பிடுகின்றன. எனவே இந்தக் குருந்தலூரில் பொ.ஆ.பி. 13-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தார்களென்பதற்குப் பாளி, சிங்கள இலக்கியங்களில் ஆதாரங்கள் உள்ளன. ஆகவே, இந்தக் குருந்தலூர் அகழ்வாய்வில் கிடைக்கும் தொல்பொருற் சான்றுகளை வைத்துக்கொண்டுதான் அது பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்ற உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தலாம்' எனவும் தெரிவித்தார்.

1982-ல் குருந்தனூர் கோயில் இலங்கை இந்து கலாசாரத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இடப்பெயர்வின் முன் வன்னி வாழ் மக்களின் சுற்றுலாத் தளமாகவும் இது விளங்கியது. ஆனால் இன்று போரின் பின் ஆலயத்தின் சிதைவுகள் மலையின் பின் சிதறிக் காணப்படுவதுடன் ஆலயத்தின் தொன்மங்கள் சிலவும் திருடப்பட்டுள்ளன. அதாவது ஆலயத்தின் உச்சியில் குழிகள் தோண்டப்பட்டுப் புதையல்கள் எடுக்கப்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள், தொல்பொருட்கள் அழிந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

அண்மையில் குருந்தூர் மலைப் பகுதியில் மக்களது பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் ஜனவரி 18, 2021 அன்று தொல்பொருள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுமார் ஒருவார காலத்திற்குப் பின்னர் அப்பகுதிக்கு வருகை தந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் இராணுவத்தினரையும் இணைத்து அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்கின்றவர்கள் தொடர்ச்சியாக அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குருந்தனூரில் அகழாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து சில நாட்களில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழகப் பௌத்தபீட விரிவுரையாளர் பேராசிரியர் மெத-கொட அபயதிஸ்ஸ தேரர் முல்லைத்தீவு மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படும் குருந்தூர் மலைக்குப் பௌத்த மதகுருமார்கள், படை அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார். பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அபயதிஸ்ஸ தேரர், 'மகாவம்சம் மற்றும் எமது இதிகாசங்களில் சொல்லப்பட்ட குருந்து விகாரை, குருந்தாசோக விகாரை ஆகியவற்றைப் பார்க்கவே வந்துள்ளோம். அங்கு ஒரு விகாரை இருந்தது, பின்னர் அழிவடைந்துவிட்டது. அந்த இடங்களில் அதன் சிதைவுகள் உள்ளன. சந்திரவட்டக்கல் போன்ற விகாரைக்குரிய சின்னங்கள் அங்கு சிதைவடைந்த நிலையிலுள்ளன. சிங்களத்திலுள்ள எட்டு இதிகாசங்களில் இரண்டு பாளி மொழியிலுள்ளன. ஏனையவை சிங்களத்திலுள்ளன. இதிலொன்று குருந்தி இதிகாசமாகும். இது இந்த இடத்தில் வைத்தே எழுதப்பட்டது. குருந்தகாசரியோ என்ற விகாராதிபதியினாலேயே இந்த இடம் உருவானது. இலங்கையில் எல்லாச் சமூகமும் வர்க்க பேதமின்றி அவரவர்கள் தத்தமது இடங்களை உரிமை கொண்டாட முடியும். இந்த இடம் இலங்கையின் முக்கியமான இடம். அதனாலேயே இவ்விடத்தைப் பார்வையிட வந்தோ'மெனக் கூறினார்.

குறித்த குருந்தூர் மலைப் பகுதியிலே லிங்க வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான பல்வேறு ஆதாரங்கள் இருப்பதாகக் குறித்த பகுதியில் பல மூத்தவர்கள் கருத்துத் தெரிவித்த நிலையில் இதனை உறுதிப்படுத்தும் முகமாகக் குருந்தூர் மலைப் பகுதியில் இடம்பெறும் அகழாய்வுப் பணிகளின் போது ஆதிலிங்கமெனக் கருதப்படும் லிங்க உருவத்தை ஒத்த சிலையொன்று வெளித் தோன்றியுள்ளது. இது தொடர்பாக பெப்பிரவரி 10, 2021 சிங்களப் பத்திரிகையானது வெளியிட்ட செய்தியில் குருந்தனூர் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சிவலிங்கத்தினையொத்த எட்டுப் பக்கங்களைக் கொண்ட தூணினைப் பௌத்த தூபியின் உச்சியில் வைக்கப்படும் யூப்ப கல என்னும் தூண் என்றும், அத்தொல்லியல் தடயங்கள் பொ.ஆ.பி 01 அல்லது பொ.ஆ.பி. 02 எனச் சுட்டிக் காட்டுகின்றது. குருந்தனூரில் தொடர்ந்தும் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெறுவதால் அது தொடர்பான மேலதிக தகவல்களைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



shanujan@thaiveedu.com





வட இலங்கை மீதான சோழரின் வெற்றி ஒற்றைத் தாக்குதலிலன்றி, அடுத்தடுத்து இடம்பெற்ற பல படையெடுப்புகளின் மூலமே நிறைவேறியது என்பதை இராசராசன் காலச் சோழக் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. மற்றைய வெற்றிகளை விட, இராசராசனே இலங்கை மீதான வெற்றியைச் சற்றுப் பெருமிதமாகக் கருதியிருக்கிறான். இலங்கையின் வெற்றியை எட்டுத் திசைகளும் புகழ்வதாக 'எண் திசை புகழ் தர ஈழமண்டலமும்' என்றும், முரடர்களாக இருந்த சிங்களரைத் தான் வென்றேன் என 'முரட்டொழில் சிங்களர்' என்றும் அவன் பொறித்துள்ள வரிகளே அதற்குச் சான்று.

இராசராசனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் திருக்கோணமலைப் பகுதி சோழரின் அமைதியான ஆட்சியை அனுபவித்துக்கொண்டிருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதற்கு ஆதாரம், தஞ்சைப் பெருங்கோயிலின் தெற்குச் சுவரிலுள்ள 92-ம் இலக்கமிடப்பட்ட இராசராசனின் கல்வெட்டு.

தஞ்சைப் பெருங்கோவிலுக்குக் காணிக்கை கொடுத்த கொட்டியாரப்பற்று, இந்தக் கல்வெட்டு சோழராட்சியின் கீழிருந்த சேர - பாண்டிய - இலங்கை மற்றும் தெலுங்கு - கன்னட நிருவாகப் பிரிவுகளிலிருந்து அக்கோவிலுக்கு வழங்கப்பட்ட திறைப் பொருட்களைப் பட்டியலிடுகிறது. தென் தமிழகத்தின் பாண்டிய நாட்டுப் பகுதியில் உருவாக்கப்பட்டிருந்த இராசராச மண்டலம், கேரளத்திலிருந்த மலைமண்டலம், வட தமிழகத்தின் தொண்டைநாட்டுப் பகுதியில் உருவாக்கப்பட்டிருந்த சயங்கொண்ட சோழ மண்டலம், ஆந்திர - கர்நாடக மாநிலங்களின் எல்லையில் கங்கபாடி - நுளம்பபாடிப் பகுதிகளிலிருந்த நிகரிலிச் சோழபாடி மண்டலம், ஈழத்திலிருந்த மும்முடிச்சோழ மண்டலம் ஆகிய ஐந்து மண்டலப் பிரிவுகளின் பதினாறு கிராமங்களிலிருந்து தஞ்சைப் பெருங்கோவிலுக்கு வர வேண்டிய நெல், பொன், என்பனவற்றின் அளவு இதில் குறிக்கப்பட்டுள்ளது.

சோழரின் நேரடி ஆட்சிக்கு வெளியே இப்பகுதிகளில் வசித்தோர் சோழரை எதிர்ப்பில்லாமல் ஏற்றுக்கொண்டிருந்தாலன்றி, இங்கெல்லாம் காணிக்கைப் பொருட்களைப் பெற்று எதிர்காலத்திலும் நீடிக்கும் வண்ணம் கல்லில் பொறிக்கும் எண்ணம் சோழருக்கு ஏற்பட்டிராது என்பது திண்ணம். எனவே இப்பகுதிகளில் சோழரின் அமைதியான ஆட்சி நீண்ட நாட்களாக நீடித்து வந்திருக்கிறது. ஆனால் ஏனைய நான்கு மண்டலங்களிலிருந்து நெல்லும் பொன்னும் பெறப்பட, ஈழமண்டல ஊர்களிலிருந்து மட்டும் நெல், காசு, இலுப்பைப் பால் எனும் மூன்று பொருட்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து மட்டும் ஏன் பொன்னுக்குப் பதில் காசும் இலுப்பைப் பாலும் எடுத்துவரப்படவேண்டும்? இலங்கையில்




புழக்கத்திலிருந்த காசு பொன்னாலானது என்பதும், அது சோழக் குறிப்புகளில் 'ஈழக்காசு' (ஈழம் என்ற சொல்லுக்குப் பொன் என்றும் பொருள்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதையும் இங்கு இணைத்துப் பார்க்கலாம். அது தமிழகத்தில் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டதால், தனியே பொன்னைப் பெறாமல்

**தஞ்சைப் பெருங்கோவில் கல்வெட்டில் கண்டபடி, ஈழமண்டல ஊர்களிலிருந்து அக்கோவிலுக்கு வழங்கப்பட்ட காணிக்கைகள்**

| நிருவாகப்பிரிவு | சோழப்பெயர் | ஊர் | நெல் | காசு | இலுப்பைப்பால் |
|---|---|---|---|---|---|
| **மாப்பிசும்பு கொட்டியாரம்** | இராசராச வளநாடு | தெளிவில்லை | 3,164.75 கலம், 2 நாழி | 12.5 | 2 கலம், ____ |
| **மாப்பிசும்பு கொட்டியாரம்** | இராசராச வளநாடு | தெளிவில்லை | 117.66 கலம், 3 குறுணி, 4 நாழி. | 22 | 3 கலம், 1 குறுணி, 4 நாழி |
| **மாப்பிசும்பு கொட்டியாரம்** | இராசராச வளநாடு | ..நட்டு..விட்டி | 183 கலம் | தெளிவில்லை | 4 கலம், 6 நாழி. |
| **கணக்கன் கொட்டியாரம்** | விக்கிரம சோழ வளநாடு | மாசார் | 458.75 கலம் | - | - |
| **கணக்கன் கொட்டியாரம்** | விக்கிரம சோழ வளநாடு | இ..ண..ல் | தெளிவில்லை | தெளிவில்லை | தெளிவில்லை |

பொற்காசான ஈழக்காசு இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இலுப்பை (Madhuca longifolia), கோவில்களில் விளக்கெரிப்பதற்கான எண்ணெய் பெறப்பட்ட முதன்மையான தாவரம். இலுப்பை வித்துகளிலிருந்து பெறப்பட்ட எண்ணையே இலுப்பைப் பால். இலங்கையில் எண்ணெய் வணிகம் பரவலாக இருந்ததாலோ, அல்லது இலுப்பை பெருமளவு விளைந்ததாலோ, இலுப்பைப்பால் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். எண்ணெய் வணிகரான 'சங்கரபாடியர்' மன்னார் மாதோட்டத்தில் செல்வாக்கோடு வசித்துவந்த குறிப்பு நமக்கு இன்னொரு கல்வெட்டின் வழியே கிடைக்கிறது. 18-ம் நூற்றாண்டுக் கோணேசர் கல்வெட்டின் படி, திருக்கோணேச்சரத்திலும் எண்ணெய் சேமிப்பதற்கான கிணறுகள் அமைக்கப்பட்டிருந்ததுடன், அதை நிருவகிக்க 'எண்ணெய் நாயகம்' எனும் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஏனைய நான்கு மண்டலங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட பொன்னுக்கும் நெல்லுக்கும் 'காராண்மை, மீய்க்காட்சி, மிகுதிக்குறைமை' ஆகிய வரிகள் அறவிடப்பட்டன. இலங்கையிலிருந்து பெறப்பட்ட நெல்லுக்கு மட்டும் 'பாயப் பாகாடி தறாண்டுவச் சால்' எனும் வரி அறவிடப்பட்டது. இவ்வரி இதுவரை ஆய்வாளர்களால் தெளிவாக விளக்கப்படவில்லை. இது இலங்கையில் மட்டும் தனித்துவமாக வழக்கிலிருந்த ஏதும் சிங்கள இறைவரியா என்பது ஆராயப்படவேண்டும்.

இலங்கையில் நெல்லும் காசும் இலுப்பைப் பாலும் அறவிடப்பட்ட கிராமங்களில், 'மாசார்' எனும் ஊரின் பெயர் மாத்திரமே கிடைத்திருக்கிறது. ஏனைய கிராமங்களின் பெயர்கள் கல்வெட்டில் சிதைந்தும் மறைந்தும் விட்டன. அந்தப் பட்டியல் கல்வெட்டில் கண்டபடி மேலேவருமாறு:

மாப்பிசும்புக் கொட்டியாரம், கணக்கன் கொட்டியாரம் என்ற நிருவாகப் பிரிவுகள் சோழராட்சிக்கு முன்னும் பின்னும் நீடித்து வந்தவை தான். மாப்பிசும்புக் கொட்டியாரம் என்ற பெயர், நிசங்கமல்ல மன்னனின் (1187-1196) சிங்களச் செப்பேடொன்றில் 'மாபிசம்பி கொத்தசார' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது இன்றுள்ள சேருவில் பிரதேசத்தின் வடக்கு எல்லையில் அமைந்துள்ள நீலாப்பளைக் கிராமத்தில் கிடைத்ததால், அவ்வூரைச் சூழ்ந்த பகுதியே மாப்பிசும்புக் கொட்டியாரம்.

கணக்கன் என்ற தமிழ்ச்சொல் சிங்களத்தில் 'கினிகம்' என்றாகும். சேருவில் பிரதேசத்தின் தெற்கு எல்லையில் திருமங்கலாய் (இன்றைய சிறீமங்களபுர) பகுதியில் கிடைத்த நான்காம் தப்புல மன்னனின் (924-935) சிங்களக் கல்வெட்டொன்றில் 'கினிகம் கொத்தசார' எனும் ஆட்சிப்பிரிவின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கணக்கன் கொட்டியாரம் அங்கு தான் அமைந்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில் அமைந்திருந்த மாசார் எனும் கிராமத்தின் அமைவிடத்தை இன்று தெளிவாக அறியக்கூடவில்லை.

திருமங்கலாய்க்கும் மேற்கே சேறுவில்லின் வானடிப்பாலம் எனுமிடத்தில் கிடைத்த இன்னொரு பத்தாம் நூற்றாண்டுச் சிங்களக் கல்வெட்டுக் 'களித்துறை' எனும் பகுதியில் அமைந்திருந்த 'மேண்டிய திகின்னரு கொத்தசார' எனும் நிருவாகப்பிரிவைப் பற்றிச் சொல்கிறது. சோழர் காலத்திலும் இந்த மேண்டிய திகினாறுக் கொட்டியாரம் நீடித்ததா என்று தெரியவில்லை. தஞ்சைக்கோவில் கல்வெட்டின் பின்பாகம் சிதைந்திருப்பதால் இதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. மாப்பிசும்பு, கணக்கன், மண்டுகத் திகினாறு ஆகிய மூன்று கொட்டியாரங்களும் இன்று திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், சேருவில், வெருகல் என்று மூன்று நிருவாகப் பிரிவுகளாக விளங்கும் பின்னாளையக் கொட்டியாரப் பற்றை முழுமையாகவோ பகுதியாகவோ உள்ளடக்கியிருந்திருக்கிறது.

திருகோணமலையில் திருக்கோணேச்சரமும், திருக்கரைசைச் சர்வதீர்த்த ஈச்சரமும், திருமங்கலாய் மற்றும் கொட்டியாரப்பற்றுக் காடுகளில் மறைந்துள்ள வேறு சிவாலயங்களும் இக்காலவேளையிலேயே அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அங்

கெல்லாம் சிதைந்த சோழர்காலக் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. சமயச் சமரச மனப்பான்மை கொண்டிருந்த இராசராசன் சைவத்துக்கு மாத்திரமன்றி, புத்த சமயத்துக்கும் பெருந் தொண்டாற்றினான். அதன் சான்று நாதனார் குளம் என்று அழைக்கப்பட்ட 'வெல்க வேரம்'. மகாயான புத்தபிரிவைச் சேர்ந்த அந்த விகாரம் திருத்தியமைக்கப்பட்டு 'இராசராசப் பெரும்பள்ளி' என்ற பெயரைப் பெற்றுக்கொண்டது.

## இராசேந்திர சோழன்:

இராசேந்திர சோழன், இராசராசனின் ஆட்சிக்காலத்திலேயே 1012-ம் ஆண்டு முடிசூட்டப்பட்டான். மூன்றாண்டுகளின் பின் 1015-ல் தந்தை இறந்ததும் அரியணையில் அமர்ந்தான். இவன் தன் தந்தையைப் போலவே தான் உயிருடன் இருக்கும் போதே 1018-ல் தனது மகன் இராசாதிராசனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அரசியலில் அவனும் பங்களிக்க இடமளித்தான்.

இராசேந்திர சோழன் 1017-1018 அளவில் முழு இலங்கையையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொணர்ந்தான். கங்கைப் படையெடுப்பைப் பொ.ஆ.பி 1021-ம் ஆண்டு நிகழ்த்திய போது கலிங்கம் (வட ஆந்திரம்), ஒட்டரம் (ஒடிசா), வங்கம் முதலிய நாடுகளை வென்றான். இராசேந்திரன் காலத்தில், அவன் தந்தை காலத்தில் கைப்பற்றப்பட்ட ஈழம், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் (மாலைதீவு), கடாரம் முதலிய கீழை நாடுகள் என்பவற்றைத் தொடர்ந்தும் சோழராட்சியின் கீழ் பேணுவதில் வலிமை வாய்ந்த சோழக் கடற்படை பெரும் பங்காற்றியது.

இலங்கை மீது வெவ்வேறு காலங்களில் அடுத்தடுத்து முற்றுகையிட்ட சோழப்படைகள் இராசேந்திரன் ஆட்சியில் பொ.ஆ.பி 1017-ம் ஆண்டு சிங்களப் படைகளைத் தோற்கடித்து முழு இலங்கையையும் தங்கள் வசமாக்கின. குறிப்பாகத் தென்னிலங்கையில் நீடித்த உரோகண அரசு சோழ அரசிடம் முற்றாக வீழ்ந்தது. ஆனால் இந்த உரோகணத்தின் மீதான வெற்றியும் படிப்படியாகத் தான் நிகழ்ந்திருக்கிறது.

சிங்களரை வெல்ல இதுவே தக்க தருணம் என்று குதிரை வணிகர் ஒருவர் சோழருக்கு ஒற்றுச்செய்தி வழங்கியதாக மகாவம்சம் சொல்கிறது. அதன் அடிப்படையிலேயே சோழர்கள் உரோகணத்தின் அப்போதைய தலைநகராக விளங்கிய 'கப்பகல்லக காமத்தை' முற்றுகையிட்டிருக்கிறார்கள். இந்த முற்றுகைக்குத் தலைமையேற்றவர் சோழப்படையின் அதிகாரத்தண்ட நாயகராக விளங்கிய 'சயங்கொண்ட சோழ மூவேந்த வேளான்' எனும் படைத்தலைவர்.

உரோகணத்தில் ஆட்சிபுரிந்த ஐந்தாம் மகிந்தன் தன் மகனுடனும் வேறு சில அமைச்சர்களுடனும் பின்வாங்கி ஓடிவிட்டான். அவனது அரண்மனையிலிருந்த மகிந்தனின் செல்வங்களும் அரசியும் மகளும் இன்னொரு மகனும் சோழப் படையினரால் சிறையெடுக்கப்பட்டனர். கருவூலத்திலிருந்த தேவர்களால் வழங்கப்பட்ட முத்துமாலை, மணிமகுடம், உடையாத வாள், புத்தபிரானின் ஆடைப்பட்டி, நகைகள், அரச செல்வங்கள் அத்தனையும் கைப்பற்றப்பட்டன.

அந்தச் செல்வங்களுள் பாண்டியர் ஒப்படைத்திருந்த மணி முடியும் இந்திரன் ஆரமும் காணப்பட்டதாலே இந்த ஈழ வெற்றி இராசேந்திரன் கல்வெட்டுகளில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது உரோகணத்தை வென்றபோது தற்செயலாகக் கிடைத்ததா, அல்லது பராந்தகன் காலத்திலிருந்து சோழர் தொடர்ந்த இடைவிடாத முயற்சியின் பலனாகக் கிடைத்ததா என்பது தெளிவில்லை. ஆனால், சோழக் கல்வெட்டுகள் மிதமிஞ்சிப் புகழ்வதால், இரண்டாவது காரணமே உண்மை போலத் தென்படுகிறது.

இந்த வெற்றியை, 'பொருகடல் ஈழத்து அரசர் தம் முடியும் ஆங்கு அவர் தேவியர் ஓங்கு எழில் முடியும் முன்னவர் பக்கம் தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரன் ஆரமும் தென் திரை ஈழ மண்டல முழுவதும்' கொண்டான் கோப்பரகேசரி வர்மன் என்று பாடுகிறது இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி.

ஆனால், அரசகுலப் பெண்டிரும் செல்வங்களும் கைப்பற்றப்பட்ட பின்னரும் மகிந்தன் உடனடியாகச் சிறைப்பிடிக்கப்படவில்லை. ஓரிரு வாரங்களோ மாதங்களோ கடந்தபின்னரே அது சாத்தியமாகியிருக்கிறது. மகாவம்சத்தின் படி, சமாதான உடன்படிக்கை ஒன்று செய்யப்போவதாகப் பொய்த் தூது அனுப்பித்தான் அவனைச் சோழர் சிறைசெய்தனர். அல்லது தூது உண்மையாக இருந்து அவன் உடன்படிக்கைக்கு மறுத்ததால் அவனைச் சோழப்படையினர் சிறை செய்திருக்கலாம். எது எப்படியோ மகிந்தனைக் கொல்லும் எண்ணம் சோழருக்கு இருக்கவில்லை என்பது வெளிப்படை.

அதிகாரத் தண்ட நாயகனான சயங்கொண்ட மூவேந்த வேளான்; மகிந்தனையும் கைப்பற்றிய மைந்தன், அரசமகளிர், செல்வங்களையும் சோழநாட்டுக்கு நாடு கடத்தினான். அங்கு மகிந்தன் இராசேந்திர சோழனைப் பணிந்து அவனது அதிகாரத்தை ஏற்றுக்கொண்டான். எனினும் மகிந்தன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவில்லை. அவன் சோழநாட்டிலேயே தன் எஞ்சிய நாட்களைக் கழித்து பதினொரு ஆண்டுகளில் அங்கேயே மறைந்தான். ஆனால் மகிந்தனின் மூத்த மகனான காசியப்பன் சோழரிடம் அகப்படவில்லை. அவன் உரோகணக் காடுகளில் சிங்கள அரச பிரதானிகளால் இரகசியமாக வளர்க்கப்பட்டான். சில ஆண்டுகளில் அவனே சோழருக்குத் தலையிடியாக மாறப்போவதைச் சோழர் சற்றுத் தாமதமாகவே உணர்ந்தார்கள்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் 'ஈழமண்டலம் முழுவதும்' ஆள்வதாக இராசேந்திரன் கல்வெட்டுகளில் பொறித்துக்கொண்டிருந்தாலும், அவன் சில ஆண்டுகளிலேயே உரோகணத்தைக் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது. இராசநாட்டிலிருந்து 'இறக்கபாசாணகந்த' மலை வரை மாத்திரமே சோழர் ஆதிக்கம் செலுத்தியதாக மகாவம்சம் சொல்லும். அந்த இடம் இன்று இனங்காணப்படவில்லை. சோழர் படை நிலைகொண்டிருந்த அதிதெற்குப் புள்ளி திருக்கோவிலுக்கு அருகே இருந்த சாகாமம் என்பதை இன்னோரிடத்தில் மகாவம்சம் கூறுகிறது. வட இலங்கையிலே போதுமான வணிக உற்பத்திகள் கிடைத்தமை, அல்லது தென்னிலங்கையில் எதிர்பார்த்த திறை கிடையாமை, அல்லது தொடர்ச்சியான உரோகண அரசியல் குழப்பங்கள், போன்ற ஒன்று அல்லது பல காரணங்கள், சோழர் உரோகணத்தை நெகிழவிட்டமைக்குக் காரணமாகக் கூடும்.

(தொடரும்...)



thulanchanan.v@thaiveedu.com





பெப்ரவரி 25 ஞாயிறு பிற்பகல் தாய்வீடு இதழ் பற்றிய கலந்துரையாடல், 'தாய்வீடு இதழ் உரையாடலும் விமர்சனமும் - 2024' எனும் தலைப்பில் யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தாய்வீடு வாசகர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு இல.128, டேவிட் வீதியில் அமைந்திருக்கும் 'கலைத்தூது அழகியல் கல்லூரி - கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


# யாழ்ப்பாணத்தில் தாய்வீடு கலந்துரையாடலும் விமர்சனமும் 2024





கொரோனாப் பெருந்தொற்றின் பின்னர் இலங்கையிலும் தாய்வீடு இதழ் அச்சாகி வெளிவருவதை அடையாளப்படுத்தியும், வாசகர்கள், பங்களிப்பாளர்களின் ஆக்கபூர்வமான கருத்துகள், விமர்சனங்களையும் குறிகாட்டும் நோக்கிலும் நடைபெற்ற இந் நிகழ்வில், யாழ்ப்பாணத்தில் உள்ள தாய்வீட்டின் வாசகர்களும் யாழ்ப்பாணத்தின் பல கலை, இலக்கியவாதிகளும் கலந்து கொண்டிருந்தனர். தாய்வீடு ஆலோசனைக்குழு உறுப்பினரான திரு பொன்னையா விவேகானந்தனும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

தாய்வீடு இதழ் தொடர்பில் பல்வேறு கருத்துகள் அரங்கில் பகிரப்பட்டதுடன், இலங்கையில் தாய்வீடு அச்சு இதழ் வெளியாவதையிட்டு மகிழ்ச்சியையும் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.





நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்ட திரு. ச. சத்தியதேவன் நிகழ்வின் ஆரம்ப உரையினையும் வரவேற்பினையும் நிகழ்த்தினார். கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாக அச்சு, இணைய இதழாக வெளிவருகின்ற தாய்வீடு கொரோனாப் பெருந்தொற்றுக் கால நெருக்கடியினை அடுத்து 3 ஆண்டுகளுக்கு மேலாக ஒலி இதழாகவும் வெளிவருகின்றதை குறிப்பிட்ட அவர், தமிழ் ஊடகப்பரப்பில் ஒலி இதழாக வெளிவந்த முதலாவது இதழ் தாய்வீடு என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதன் வழி, மாறிவரும் உலகின் சவால்களை தொழிநுட்பச் சாத்தியங்களின் துணையோடு தாய்வீடு எதிர் கொள்வதையும் வலியுறுத்தினார். ஒலி இதழாக மாறி







யதனூடு, புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மூத்த மற்றும் இரண்டாம் தலைமுறையினரோடும் தாய்வீடு ஊடாடுவதையும், இதுவரை சமகால இதழியல் உலகில் அரிதாகப் பங்கெடுக்கும் வாய்ப் புக்கொண்டிருந்த விழிப்புலனற்ற மாற்றுத் திறனாளிகளும் சமகால ஊடக உரையாடலில் பங் கேற்கும் வாய்ப்புகள் உருவாகியதையும் தனது உரையில் குறிப்பிட்டார்.

உலகளாவிய அளவில் நடக்கும் சமூக அரசியல் நிகழ்வுகளையும், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், இலக்கியம், ஆவணப்படுத்தல் சார்ந்த பல்வேறு விடயங்களையும் தமிழ்ச் சமூகத்தின் உரையாடற் பரப்புக்குள் கொண்டுவரும் கரிசனையோடு செயற்படுகின்ற தாய்வீடு இதழ், ஒரு பொறுப்புள்ள ஊடகம் என்ற வகையில் வாசகர்கள், அறிவுஜீவிகளின் விமர்சனங்களையும், கருத் துகளையும் உள்வாங்கிப் பயணிக்க வேண்டியது கடமை என்பதை நன்றாக புரிந்துகொண்டுள்ள தற்கமைய 'தாய்வீடு இதழ் உரையாடலும் விமர்சனமும் - 2024' நிகழ்வு இடம்பெறுவதாகவும் குறிப் பிட்டார்.



தொடர்ந்து, தாய்வீடு இதழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். தாய்வீட்டின் தோற்றம் மற்றும் இதன் இயங்குதல்கள் பற்றிய தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டதுடன், தாய்வீடு இதழினுடைய வெளியீட்டுக் கொள்கைகள் பற்றியும் அது பரந்துபட்ட பரப்பில் ஆற்றிவரும் பல்வேறு பணிகள் பற்றியும் குறிப்பிட்டார். தாய் வீட்டின் உள்ளடக்கங்கள் மற்றும் அதன் தாற்பரியங்கள், அறங்கள் தொடர்பிலும் விளக்கம ளித்தார்.



ஓரிதழ் இன்றைய காலகட்டத்தில் தொடர்ச்சியாக வெளிவருவதில் எதிர்நோக்கும் இடர்களையும் எடுத்துரைத்து, சமூகத்தின் தேவை கருதி இவ்விதழ் தொடர்ச்சியாக வெளிவருகின்றது, தொடர்ந்தும் வெளிவரும் என்பதையும் அவர் வலியுறுத்திப் பேசினார். சாதிய, இன, மொழி மற்றும் பிரதேச வாதங்களை எதுவிதமான சமரசங்களுமின்றித் தவிர்த்து, மிகக் கவனத்துடன் சமூகத்தின் முன்னேற்றம் நோக்கிய பொது மாற்றத்துக்குரிய செயற்பாடுகளுக்கான வெளியைத் தாய்வீடு இதழ் முன்னெடுப்பதை வலியுறுத்தியும், புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான களத்தை அமைத்துக் கொடுப்பதில் தாய்வீட்டின் விருப்புக் குறித்தும் உரையாற்றினார். எமது சமூகத்திலே பல்வேறு ஆளுமைகள் இன்னமும் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளை எவர் மேற்கொண்டாலும் அவர்களுக்கான களத்தைத் தாய்வீடு வழங்கும் என்பதையும் நூல் பதிப்பித்தல் துறையில் தீவிரமாக தாய்வீடு ஈடுபட்டு வருகின்றது என்பதையும் எடுத்துக்கூறினார்.



சிறப்புரையினை அடுத்து எழுத்தாளரும் சமூக ஆர்வலருமான திரு. வேதநாயகம் தபேந்திரன் அவர்கள் முன்னைய உரைகளில் சொல்லப்பட்ட கருத்துக்களை வழிமொழிந்து தனது கருத்து ரையினை நிகழ்த்தினார்.







அடுத்ததாக, புத்தகப் பண்பாட்டைப் பரவலாக்கி வளர்க்கும் நோக்குடன் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் மாதந்தோறும் நடைபெறும் 'புத்தக அரங்க விழாவின்' பிரதான ஏற்பாட்டாளரும், சமூக நீதிக்கான வெகுஜன இயக்கத்தின் யாழ்ப்பாண அமைப்பாளருமான திரு. சபா. தனுஜன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். தாய்வீடு இதழின் பிரசுர மற்றும் வடிவமைப்பு நேர்த்தியைப் பாராட்டியதோடு, தமிழ் அச்சிதழ்ப் பரப்பில் தலைமைத் தகுதியோடு இவ்விதழ் திகழ்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனது பெரும் அபிமானத்துக்குரிய தாய்வீடு இதழ் அச்சுவடிவில் வெளிவருவதன் ஊடாக தன்னுடைய பெருவிருப்பு நிறைவேறுவதாகக் குறிப்பிட்ட அவர், ஈழத்தில் அச்சிதழாக வெளிவருவதனூடாக தாய்வீட்டின் இலக்கின் ஒரு பகுதியை சரியான முறையில் நிறைவேற்றலாம் எனவும் குறிப்பிட்டார்

'அலை' இதழின் ஆசிரியரும் மூத்த எழுத்தாளரும் கவிஞருமான திரு. அ. யேசுராசா அவர்கள் கருத்துரையாற்றினார். தாய்வீடு இதழின் உள்ளடக்கக் கனதியைக் குறிப்பிட்ட அவர், இரு பக்கங்களில் வெளிவருகின்ற ஆக்கங்கள் முன்னைய இதழுடன் ஒப்பிடுகையில் அவற்றின் கனதி குறைந்துள்ளதாகவும் கூறினார். தாய்வீட்டின் சமநிலைத் தன்மையையும் அவர் அழுத்திக் கூறினார். தாய்வீடு இதழை முன்பு யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியவரான அவர், இதழ் பற்றிக் கூறும்போது, தாய்வீடு இதழுடனான தன் நீண்டகால உறவைக் குறிப்பிட்டுக் காத்திரமான பல கருத்துகளை முன்வைத்தார். இலங்கையில் அச்சு வடிவில் வெளிக்கொணரும் முயற்சி பாராட்டுக்குரியது எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்ததாக 'தாயகம்' இதழின் பிரதம ஆசிரியர் திரு. க. தணிகாசலம் கருத்துரை வழங்கினார். அதனையடுத்து ஆய்வாளரும் விமர்சகருமான திரு. சி. ரமேஷ் அவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். தாய்வீடு பல்வேறு விடயங்களையும் கொண்ட இதழாக உள்ளதை அவர் குறிப்பிட்டார். வெகுஜன வாசகர்க்கும் தீவிர வாசகர்க்கும் இடையில் இவ்விதழ் உள்ளதையும் சுட்டிக் காட்டிய அவர், இலங்கையின் எந்த நூலகத்திலும் தாய்வீடு இதழ் சேகரங்கள் இல்லை என்ற மனக்குறையையும் பகிர்ந்து கொண்டார். தாய் வீட்டின் தொடர்ச்சியான, நேர்த்தியான வருகையில், தாய்வீடு ஆசிரியரின் அர்ப்பணிப்பையும் அசாதாரண வேலைமுறைகளையும் அவர் மகிழ்ச்சியோடு முன்வைத்தார்.

அடுத்தாக உரையாற்றிய கவிஞர் திரு. சி. கருணாகரன், 17 ஆண்டுகளின் பின் தாய்வீடு இதழ் யாழ்ப்பாணத்தில் பேசப்படுவது தாமதமானது எனினும், இந்த முயற்சி வரவேற்கப்படவேண்டியது எனக் குறிப்பிட்டார். 'தீவிர இலக்கியப் பரப்பையும் வெகுஜன இலக்கியப் பரப்பையும் இணைக்கின்ற, இரண்டு தளத்























துக்கும் இடையேயான தன்மை கொண்ட இடைநிலை இதழ் தாய்வீடு' எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் 'இந்த இதழ் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களை, இலக்கியம், வாழ்வியல் ஊடாக இணைத்துச் சர்வதேசத் தமிழ் இதழ் என்கின்ற உலகளாவிய தன்மையைக் கொண்டிருக்கிறது' எனவும் தெரிவித்தார்.

மேலும் சமகாலத் தமிழக இதழ்களின் ஒவ்வொரு விடயத்திற்கும் ஒன்று என்பது போலல்லாது, தாய்வீடு ஒரு வீட்டுக்குரிய / குடும்பத்திற்குரிய அனைத்து விடயங்களையும் கொண்டதான ஒரு புதிய போக்கைத் திறக்கின்றது. குறிப்பாக, தற்போதைய பொருளாதார நெருக்கடிகாலப் புதிய இதழியலைக் கொண்டதாக இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரங்கியல் செயற்பாட்டாளர் திரு. யோ. யோன்சன் ராஜ்குமார் 'தாய்வீடு - அரங்கியல் விழா' தொடர்பாக தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

தொடர்ந்து கருத்துரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்கள் தாய்வீட்டின் பக்க வடிவமைப்பு, எழுத்துரு தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தார். புலப்படாது இருக்கின்ற ஈழத்து ஆளுமைகளை உலகளாவிய தமிழ்ப்பரப்புக்கு எடுத்துச் செல்லுகின்ற வாய்ப்பு தாய்வீடு இதழுக்கு உள்ளது. அதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்தார்.

அடுத்து ஆய்வாளரும் கவிஞருமான ந. குகபரன் அவர்கள் தாய்வீடு பதிப்பக வேலைகள் சார்ந்த கருத்துகளைத் பகிர்ந்துகொண்டார். சமூக உணர்வு சார்ந்த காலத்தை பதிவாக்க வேண்டிய சில நூல்களை ஆண்டுக்கு ஒன்றாகவேனும் வெளியிடுவதை ஒரு வேலைத்திட்டமாக முன்னெடுக்க வேண்டும். ஒரு நல்ல பரஸ்பர உரையாடல் வெளியை குறிப்பிட்ட கால இடைவெளியிலேனும் ஏற்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் தாய்வீடு ஒலிவழிப் பதிவுகள், ஆக்கம் எழுதியவரின் சொந்தக் குரலிலேயே வெளிவரவேண்டும் என்பதில் தாய்வீடு ஆசிரியர் காட்டுகின்ற கரிசனை முக்கியமானது எனவும் குறிப்பிட்டார்.

தொடந்து காயத்திரி ஸ்ரீதரன் தாய்வீடு இதழுடன் செவ்வை பார்ப்பவராகச் சேர்ந்தியங்கிய அனுபவங்களின் வழி தனது அனுபவங்களையும் தாய்வீட்டின் செவ்வை பார்ப்பு நேர்த்தியையும் பகிந்துகொண்டார்.

அடுத்து திரு. குமரிவேந்தன் அவர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

தாய்வீடு இதழ் இலங்கையில் அச்சில் வெளிவருவது குறித்த பல்வேறு மகிழ்ச்சியான கருத்துகளை ஏனையோரும் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் கலைமுகம் ஆசிரியர் திரு. செல்மர் எமில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு. பா. அகிலன், அ. ஆதிரை, எழுத்தாளர் மு. அநாதரட்சகன், செ. மேரி நிலைக்சனா, கலைஞர் அன்ரன் பீலிக்ஸ், திரு. வை. கருணைநாதன், திரு. நா. சிவசிதம்பரம், திரு. S. நற்குணலிங்கம், திரு. S. சிவபாலா, திரு. கலைதாசன் கௌதமன், திரு. சு. சிரஞ்சீவன், ச. டர்சன், ச. யோகேஸ்வரி, கவிஞர். வேலணையூர் தாஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்குத் தாய்வீடு இதழ்கள் வழங்கப்பட்டன.


ஒருங்கிணைப்பாளர் சத்தியதேவன் அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.



# சிங்களப் பண்பாட்டில் சிறுதெய்வ வழிபாட்டு மரபு பற்றிய சில குறிப்புகள்

- என். சரவணன்

சிங்களப் பௌத்தர்களின் பண்பாட்டு மரபில் சிறுதெய்வ வழிபாடு ஆழமாக ஊடுருவிய ஒன்று. இந்து, சைவக் கடவுள்களின் செல்வாக்கு இருப்பது போல, இந்தியாவில் காப்பிய இலக்கியப் பாத்திரங்கள் எவ்வாறு வழிபடும் தெய்வங்களா




னதோ அதுபோல, இலங்கையிலும் இந்தியக் காப்பியக் கதாபாத்திரங்களைக் கடவுளர்களாக வணங்கும் மரபு காணப்படுகிறது. இந்தியக் காப்பியங்கள் மட்டுமல்ல, இலங்கையின் அரசர்களும் இலங்கையின் சில இலக்கியங்களில் காணப்படுகின்ற கதாபாத்திரங்களும் தெய்வங்களாகிப் போன மரபை நாம் இனங்காண முடியும்.

இவற்றில் தமிழகம், கேரளம், ஆந்திரம் போன்ற பிரதேசங்களிலிருந்து வந்துசேர்ந்த பாத்திரங்களை நாம் அடையாளங் காண முடியும்.

இலங்கையின் பௌத்த விகாரைகள் அனைத்திலும் 'தேவாலய' என்கிற வழிபாட்டு மரபையும், கலாசாரத்தையும் எங்கெங்கும் காணலாம். ஐயனார் தொடங்கி கண்ணகி, கோவலன் வரை வியாபித்திருப்பதைக் காணலாம்.

அது மட்டுமல்ல இத்தகையத் தமிழ் பண்பாட்டுப் பின்னணியுடன் தொடர்புடைய சிறுதெய்வங்களை; தமிழர்களை விட மிக அதிகமாகச் சிங்களச் சமூகத்திலேயே வணங்கி வருகின்றார்கள் என்பதை அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். அதாவது இலங்கையில் பூர்வீகத் தமிழர்களான வடக்கு, கிழக்குத் தமிழர்கள் அல்லது இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஆகியோரை விட அதிகமாக இச்சிறுதெய்வ வழிபாடு இன்றும் பரவலாகவும், வியாபித்தும், ஆழமாகவும் இருப்பதைக் காணமுடியும். தமிழ்ப் பின்னணியைக் கொண்ட சிறுதெய்வங்கள் இல்லாத எந்த விகாரைகளும் இலங்கையிலில்லை. பல விகாரைகளில் 'தேவாலய' என்கிற பெயரில் விகாரையின் காணிக்குள்ளேயே தனியான வழிபாட்டுக் கோவில்கள் பேணப்படுகின்றன.

இந்த 'இஷ்ட தெய்வங்களுக்கு' பூஜைகள் செய்யும் பூசாரிகளாகக் 'கப்பு மாத்தையா' என்கிற ஒருவர் இருப்பார். பிக்குகள் இந்த பூஜைகளைப் பெரும்பாலும் செய்வதில்லை. அதாவது பெரும்பாலும் பௌத்த பிக்குமார் இந்தச் சிறுதெய்வங்களுக்கும் பக்தர்களுக்குமான தூதர்களாக இயங்குவதில்லை. ஆனால், சில பிக்குமார் இத்தெய்வங்களுக்குப் பூஜைகள் செய்வதையும் காணலாம். அவர்களின் வருமானம் பன்சலைகளை விட அதிகமாக இந்தச் சிறுதெய்வ நம்பிக்கையுள்ள பக்தர்களிடம் இருந்தே ஈட்டப்படுகின்றன.

- சுகமில்லாதவர்களைக் குணப்படுத்த வேண்டுதல்,
- குடும்பக் கஷ்டங்கள், இடர்கள் என்பவற்றுக்காக நேர்த்திக் கடன் வைத்தல்,

- ஒருவரை அல்லது ஒரு சக்தியை எதிர்த்துப் பழிவாங்க வேண்டுவது / சபிப்பது,
- தம்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள சூனியத்தை அகற்றக் கோரி வேண்டுவது,

என்பவற்றுக்கெல்லாம் புத்தரை வேண்டுவதை விட சிறு தெய்வங்களையே அதிகமாக நம்புகிற நெடுங்கால மரபைக் காண முடியும். அகிம்சையைப் போதிக்கும் புத்தரிடம் பழிவாங்கக் கோர முடிவதில்லை. பௌத்த விகாரைகளில் பௌத்த உபதேசங்களில் புத்தரால் இவற்றைத் தீர்த்துத்தர முடியும் என்கிற பாணியிலான நம்பிக்கைகள் போதிக்கப்படுவதில்லை. பிரச்சினைகளை யதார்த்தத்தின்பால் நின்று அணுகும் உத்திகளையும், மன வலிமையும் தான் போதிக்கப்படுகின்றன.

எனவே, ஒருவருக்குத் தண்டனை கொடுப்பது, தண்டனையிலிருந்து மீள்வது, இடர்களைக் கொடுப்பது, இடர்களிலிருந்து மீள்வது என்பவற்றைத் தாம் நம்பும் தெய்வத்துக்குத் தீபமேற்றித் தேங்காய் உடைப்பதன் மூலமோ, உண்டியலில் பணம் கொடுப்பதன் மூலமோ, பணத்தைத் தெய்வத்துக்குச் சேர்ப்பதாக எண்ணிப் பூசாரியிடம் கொடுப்பதோ, அல்லது பூசாரி



கச்சிதமாகத் தூது சொல்வார் என்கிற நம்பிக்கையில் அப்பணத்தை பூசாரியிடமே கொடுத்துவிடுவது, பூசாரியிடம் குறி கேட்பது, பூசாரியின் அறிவுறுத்தலின் பேரில் வேண்டுதல் நிறைவேற மேலதிக வலுவான - செலவு மிகுந்த பூசைகளை மேற்கொள்வது, வேண்டுதல் நிறைவேறினால் பணமாகவோ, பொருளாகவோ, அல்லது மொட்டையடித்தல், தீ மிதித்தல் போன்றவற்றைச் செய்வதாக உறுதிமொழியளித்தல் என்பவற்றை இத்தெய்வங்களுக்குத்தான் செய்து வருகிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் மத்தியில் மத வழிபாடுகளில் நவீன கடவுளர்களின் (சைவ, இந்துக் கடவுளர்களின் மீதான நவீனமயப்பட்ட தூய்மைவாத ஈர்ப்பு) மீதான ஈர்ப்பின் காரணமாகச் சிறுதெய்வ வழிபாட்டு மரபு வேகமாக வழக்கொழிந்து போவதைக் காணமுடியும். வடகிழக்கு சமூகத்தில் மாத்திரமல்ல இந்திய வம்சாவளிச் சமூகத்தினரிடமும் இந்தப் போக்கைக் காணமுடியும்.


2020-ம் ஆண்டு இலங்கையின் இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆலயத் தரவுப் பதிவுகளின்படி, இலங்கையிலுள்ள தற்போதைய மொத்த இந்து ஆலயங்களின் எண்ணிக்கை சுமார் 7,066 ஆகும் (Department of Hindu Religious and Cultural Affairs, 2020). வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 4,271 ஆலயங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் சிவன் ஆலயங்கள் 2 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள அனைத்துச் சிவன் கோவில்களின் எண்ணிக்கை பற்றித் தெளிவாக இனங்காண முடிகிறது. இதற்கு நேர்மாறாக, காளி, துர்க்கை, பத்தினியம்மன், மாரியம்மன், விநாயகர் அல்லது பிள்ளையார், முருகன் அல்லது சுப்பிரமணிக் கடவுள் போன்ற தெய்வங்களும் பெண் தெய்வங்களுக்கு அதிகமான கோவில்கள் இருப்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இலங்கையில் பௌத்தம் பற்றியும், புத்தர் பற்றியுமுள்ள வரலாற்றுக் கதைகள் இலங்கைக்கேயுரிய வகையில் திருப்புப் பெற்றிருப்பதை உணரலாம். உலகில் ஏனைய நாடுகளில் இருக்கின்ற திரிபீடகத்துக்கும், இலங்கையிலிருக்கிற திரிபீடகத்துக்கும் இடையிலேயுள்ள வேறுபாடுகள் இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

## விஷ்ணுவின் ஆதிக்கம்:

பௌத்தமானது சிங்களமயப்படுத்தப்பட்டது போலவே இந்துமயப்பட்ட, வைஷ்ணவமயப்பட்ட கலவை வடிவமாகிவிட்டதை நாம் உணர முடியும். இலங்கையின் உயர் நம்பிக்கை வடிவமாக இருக்கின்ற; புனித வரலாறாகக் கொள்ளப்படுகின்ற மகாவம்சத்தின் ஆரம்ப அத்தியாயங்களிலேயே இதற்கான பிராரம்ப ஆதாரங்களைக் காணமுடியும்.

விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றே புத்த அவதாரம் என்கிற நம்பிக்கை இன்றும் சிங்களப் பௌத்தர்களிடம் பரவலாகவுள்ளது. விஷ்ணு வழிபாடு இலங்கையில் பௌத்தர்கள் மத்தியில் புத்தருக்கு அடுத்ததாக முக்கிய தெய்வமாக வணங்கப்படுகிறது. விஷ்ணு இல்லாத விகாரைகளே இலங்கையில் இல்லை எனலாம். அதுவும் இந்துக் கடவுளர்களுக்கான தேவாலயம் விகாரையின் வளவுக்குள் இருக்கும்; ஆனால் விஷ்ணு சிலை விகாரையின் உள்ளேயே இருக்கும். இலங்கையின் சம்புத்த சாசனம் விஷ்ணுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதே சிங்களவர்களின் ஐதீகம். புத்தர் பரிநிர்வாண நிலையை அடைந்துகொண்டிருந்தபோது - உயிர் போய்க்கொண்டு இருக்கையில் - இந்திரனை அழைத்து (இந்திரனை ஷக்ரதேவேந்திரர் எனச் சிங்களத்தில் குறிப்பிடுவார்கள்) ‘சிங்கபாகுவின் மகன் விஜயன் என்பான் தனது எழுநூறு தோழர்களுடன் லாலா நாட்டிலிருந்து புறப்பட்டு இலங்கைக் கரையிலிறங்குகிறான். அந்த நாட்டில் எனது சமயம் கொழிக்கவிருப்பதால் அவனையும் அவனின் தோழர்களையும் அந்த நாட்டையும் பாதுகாக்குக’; அதாவது ‘பணிட்டத்து தேவிந்த லங்காய மம சாசனங்’ (‘පතිට්ඨතු දේවින්ද ලංකාය මම සාසනං’) என்றும், ‘இலங்கையில் புத்தசாசனத்தை நிறுவு வேன் அதைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்’ எனக் கேட்டுக் கொண்டாரென மகாவம்சத்தின் ஏழாவது அத்தியாயம் ஆரம்பமாகின்றது. இந்திரன் அந்தப் பணியை விஷ்ணுவிடம் ஒப்படைக்க, விஷ்ணு கடற்கரையில், ஒரு மரநிழலில் அமர்ந்தி




"சிங்கள தேவ புராணய" (සිංහල දේව පුරාණය) நூலின் இருந்து

ருந்த போது, கரையிறங்கிய விஜயனும் தோழர்களும் அவரிடம், 'இத் தீவு யாது?' என வினவினர். இதற்கு அவர், இது இலங்காபுரி' எனப் பதிலளித்ததோடு, மந்திர நீரை அவர்களுக்குத் தெளித்து ஆசீர்வதித்து, அவர்கள் ஒவ்வொருவரினதும் வலது கரத்தில் மந்திர நூலைக் கட்டிக் காப்பளித்தார். பின்னர் வானில் ஏகி மறைந்தார்'.

## இராமனா இராவணனா சிங்களத் தெரிவு:

இதனைக் கவனிக்கும் போது நீங்கள் ஒன்றை உணரலாம். இலங்கையில் பௌத்தம் நிலைபெறுமுன்னரே விஷ்ணுக் கடவுளின் வகிபாகம் வந்துவிட்டதாக மகாவம்சம் குறிப்பிடுவதைக் காணலாம். பௌத்தம் இலங்கை நாட்டில் நிலைக்கப்போவதையும், விஜயனுக்கூடாக அது நிகழப்போவதையும் அறிவித்ததும், ஆசீர்வதித்ததும் கூட விஷ்ணு பகவான் தான் என்கிறது மகாவம்சம். அதையே இன்னொரு விதத்தில் சொல்வதாயின் விஷ்ணு பௌத்தமே விஷ்ணு பகவான் அறிமுகப்படுத்தியது தான்.

இதில் இன்னொரு முரண்நகையான வேடிக்கையையும் இங்கே குறிப்பிடவேண்டும். விஷ்ணுவின் பத்து அவதாரங்களின் ஒன்றாகவே இராமனைச் சிங்களப் பௌத்த நம்பிக்கையாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இலங்கையை இராவணனின் நாடென்றும் சிங்களத் தலைவர் என்றும், சிங்களவர்களின் மூதாதையர் என்றும் நம்புகின்றனர். இந்த ஐதீகங்களின் படி; இராமனாகிய விஷ்ணுவைக் கொண்டாடினால் இராவணனை ஏற்றுக்கொள்ள முடியாது. அதுபோல இராவணனைக் கொண்டாடினால் இராமரைத் (விஷ்ணுவை) தமது கடவுளாக ஏற்க முடியாது. ஆனால் வசதியாக இந்தத் தர்க்கங்கள் ஒரு போதும் இவர்களைத் தீண்டுவதில்லை.

## எல்லாளனை வெல்ல துட்டகைமுனுவுக்குக் கந்தன் கொடுத்த வரம்:

துட்டகைமுனு மன்னன் எல்லாளனுக்கெதிராகப் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தபோது, கதிர்காமக் கந்தனிடம் நேர்த்திக்கடன் வைத்துவிட்டுப் போருக்குப் புறப்பட்டதாகவும் போரில் வென்ற பின்னர் கதிர்காமம் கோயிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. ஹியுநெவில் (Hugh Nevill) சிங்கள ஓலைச் சுவடுகளைக் கண்டுபிடித்துத் தொகுத்தபோது அதில் ஒரு பகுதியை பீ.ஈ.பீ. தெரணியகல தொகுத்தார். அதை இலங்கை நூதனசாலை பதிப்பிட்டது. மகாவம்சத்தின் கிளைக் கதைகள் பல அந்த நூலில் உள்ளடங்கியிருந்தன. கந்த மலை (Kanda Male) என்கிற தலைப்பில் ஒரு ஓலைச் சுவடியில் துட்டகைமுனுவுக்கும் கதிர்காமத்துக்குமுள்ள தொடர்புகள் பற்றிய மேற்படி விபரங்கள் கிடைக்கின்றன. 'கந்த மலை' காவியம் 15 அல்லது 16-ம் நூற்றாண்டுக்குரியதாக இருக்கலாம் என்பது ஹியு நெவிலின் கருத்து. எவ்வாறிருப்பினும் கதிர்காமமும், கந்த வழிபாடும் இலங்கையில் மிகப் பழமையான பாரம்பரிய வழிபாடாக இருந்திருக்கிறது என்பதும் அன்றே சிங்களவர்களால் வழிபடப்பட்ட தளம் என்பதும் தெளிவாகிறது.

'கதிர்காமக் கோவில் கட்டப்பட்டது பற்றியோ, வள்ளி பற்றிய

கதைகளுக்கான சரியான வரலாற்றுக் காலநிர்ணயம் பற்றியோ நமக்கு ஆதாரங்கள் கிடைத்ததில்லை. ஆனால், கதிர்காமக் கோவிலைக் கட்டியது துட்டகைமுனு மன்னன் என்று வாய்மொழிக் கதைகள் நிறைய உள்ளன. அவை ஓலைச் சுவடிகளில் பதிவு பெற்றுள்ளன. எனவே தான் இந்தத் திரைப்படத்தில் அந்தக் காட்சியை அமைத்தேன்' என்கிறார்.

மகாவம்சத்தின் பிரகாரம் எல்லாளன் தமிழ் மன்னர். எல்லாளனுடனான துட்டகைமுனுவின் போர் தமிழ் x சிங்களப் போராகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தமிழ் மன்னரை அழிக்கத் தமிழ்க் கடவுளிடம் ஆசிபெற்று அந்த முருகப் பெருமானின் ஆசியுடன் தமிழ் மன்னரை தோற்கடித்ததும், தோற்கடிக்க உதவியமைக்காக முருகக் கடவுளுக்கு வாக்குறுதியளித்தபடி நேர்த்திக்கடனாக (கையூட்டாக) கதிர்காமக் கோவிலைக் கட்டிக் கொடுத்ததாக மகாவம்சப் புனித காப்பியம் பதிவுசெய்து இருப்பதைக் கவனியுங்கள்.

## சிறுதெய்வ வழிபாட்டு வியாபகம்:

இலங்கையில் சிங்களவர் மத்தியில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளும், இந்து - சைவ வழிபாடுகளும் தோன்றி வளர்ந்த விதத்தைப் பற்றிய சிறந்த ஆய்வுகளில் ஒன்றாகக் கே.என்.ஓ. தர்மதாச, எச்.எம்.எஸ். துன்தேனிய ஆகியோர் எழுதிய 'சிங்கள தேவ புராணய' என்கிற நூலைப் பரிந்துரைக்கலாம். இதற்காக அவர் பயன்படுத்திய சிங்கள, ஆங்கில ஆய்வு நூல்களின் பட்டியலே ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கிறது.

பல்வேறு காலங்களில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்த இந்து - சைவ மற்றும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளின் தோற்றம் பற்றியும், பரவலாக்கம் பற்றியும் அவற்றின் பின்புலம் பற்றியும் விரிவாக ஆராயப்பட்ட நூலாக அதனைக் கொள்ளலாம்.

இரண்டாம் நூற்றாண்டில் கஜபாகு மன்னரின் காலத்தில் இந்தியாவிலிருந்து பன்னிரண்டாயிரம் சோழ நாட்டவர்களைச் சிறைப்பிடித்து கைதியாகக் கொண்டுவந்து குடியேற்றிய வேளை அவர்கள் வயப்பட்ட சிவன், விஷ்ணு, கார்த்திகேய, பத்தினி போன்ற தெய்வ வழிபாட்டு முறைகள் பரவியதையும் இந்த நூலில் குறிப்பிடத் தவறவில்லை.

மேலும் இலங்கையில் விஜயனின் வருகைக்கு முன்னர் இயக்கர்கள் வழிபட்ட வழிபாட்டுடன் விஜயனுடன் வந்தவர்கள் கொண்டுவந்து சேர்த்த வைதீக வழிபாட்டு முறைகளும் கலந்ததற்கு வாய்ப்புண்டு என அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதே நேரம்; சிங்கள அரசு அனுராதபுரத்தில் தோன்றி சுமார் ஆயிரம் ஆண்டுகள் வரை மூன்று கடவுளர்களின் வழிபாடே புழக்கத்தில் இருந்திருக்கிறது என்கிறார். உபுல்வன், சமன், கந்தகுமர (கந்தன்) ஆகியோரே அந்தக் கடவுளர்கள்.

### உபுல்வன்:

ஐயாயிரம் ஆண்டுகளாகப் புத்த சாசனம் இலங்கைத் தீவிலேயே நீண்டகாலத்துக்கு நிற்குமென்றும் அதைக் காக்கும் பொறுப்பைப் புத்தர் இந்திரனிடம் ஒப்படைத்ததாகவும். இந்திரன் அப்பொறுப்பை உபுல்வன் பெருமானிடம் ஒப்படைத்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது.

### கந்த குமர:

கந்தன், ஏழுமலையான் என்கிற முருகனைக் குறிக்கும்.

### சமன் தேவியோ:

சமன் கடவுள்; இலங்கையின் மிகப் பழமையான ஒரு கடவுளாக வணங்கப்படும் ஒரு கடவுள். சமன் கடவுளின் தோற்றம் பின்னணி பற்றிப் பல வித்தியாசமான கதைகள் உள்ளன. புத்தர் இலங்கை வந்து 'சிவனொளி பாதமலை'க்குச் சென்ற போது அந்த மலைக்குரிய அரசராகக் கொள்ளப்படுகிறார். சிவனொளி பாத மலையை 'சமனல கந்த' என்று இன்றும் அழைப்பதைக் காணலாம். இராமனோடு இலங்கைக்கு வந்த லக்ஷ்மன் தான் சமன் என்று இன்னொரு கதையுண்டு. இன்னும் பத்துக்கும் மேற்பட்ட வேறு கதைகளும் உள்ளன. உரு



வத்திலும் சற்று மாறுபட்ட வித்தியாசங்களைக் கொண்ட படங்களையும், சிலைகளையும் கூடக் காணலாம். சகல விகாரைகளிலுமுள்ள ஒரு கடவுளாகச் சமன் கடவுளை நாம் குறிப்பிட முடியும்.

சிங்களத்தில், இத்தகைய சைவ, இந்து, சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் அனைத்தையும் சேர்த்து 'தேவ வந்தனாவ' -தெய்வ வழிபாடு என்று பொதுவாக அழைப்பார்கள். பௌத்த வழிபாட்டு முறைகளிலிருந்தும், பௌத்த சித்தாந்தத்திலிருந்தும் வேறுபிரித்து இனங்காட்டுவதற்கு அப்பதத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

சிங்கள 'தேவ வந்தனாவ' வரிசையில் சுவாரசியமான ஒரு வழிபாட்டைச் சமீபத்தில் வாசித்த ஒரு நூலில் அறிந்தேன்.

2023 இறுதியில் வெளிவந்த அந்த நூலின் பெயர் 'கண்ணகி எனப்படுகிற பத்தினியும், கோவலன் எனப்படுகின்ற வீரமுண்டவும்' (කන්නකී හෙවත් පත්තිනි සහ කෝවලන් හෙවත් වීරමුණ්ඩ). பேராசிரியர் முதியான்சே திசநாயக்க என்பவரால் எழுதப்பட்ட இந்த ஆய்வு நூல் சுமார் ஐந்நூறு பக்கங்களைக் கொண்டது என்றால் எந்தளவு விபரங்களைப் பெறமுடியும் என்று உங்களால் ஊகிக்க முடியும்.

இலங்கையில் வீரமுண்ட கோவில்கள் அதிகமாக இல்லை

என்றபோதும், வீரமுண்ட பற்றிய பல ஐதீகக் கதைகள் உள்ளன. 'வீரமுண்ட' தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்ததாக ஒரு கதையுண்டு.

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலுள்ள சிங்களவர்கள் மத்தியிலுள்ள நம்பிக்கைகளின் படி அவர் இந்தியப் பின்புலத்தைச் சேர்ந்தவர். இந்தியாவின் மலை நாட்டு மன்னரின் மூன்று இளவரசர்களில் ஒருவரே வீரமுண்ட இளவரசர். இந்த ஐதீகக் கதைகளின் படி, இந்த இளவரசர்களின் மோசமான போக்குகளின் காரணமாக நாட்டு மக்கள் அவர்களுக்கெதிராக எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர். இதனால் தந்தையாகிய அரசர் ஆட்சிக்கே ஆபத்து ஏற்படும் நிலையை உணர்ந்ததால் அவர்களை ஒரு மரப் படகிலேற்றி நாட்டை விட்டு நாடுகடத்தி விட்டார்.

இந்த மூன்று இளவரசர்களையும் கொண்ட அந்தப் படகு முதன்முதலில் தேவேந்திர முனையை வந்தடைந்திருக்கிறது. ஆனால் தீவிலுள்ள மக்கள் அவர்கள் தரையிறங்குவது குறித்துத் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். அங்கு, இளவரசர்கள் தங்கள் பலத்தைப் பிரயோகித்துத் தரையிறங்கிக் கதிர்காமத்திற்குச் சென்றனர், இளவரசர் வீரமுண்ட அங்கே தனது வாளால் ஒரு பெரிய வீர மரத்தை வெட்டினார். இந்த வீரச் செயலால் தான் அவர் 'வீரமுண்ட' என்று அழைக்கப்பட்டார். மீண்டும் அவர் அவ்வாறு வீரதீர செயல்களைச் செய்தது பற்றிய குறிப்புகளின் வாய்மொழிக் கதைகள் ஓலைச் சுவடிகளில் இலக்கியங்களாக உள்ளன.

இதைவிட இன்னும் சில வேறு ஐதீகங்களும் உள்ளன. குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் வீரமுண்ட வழிபாடு அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த இரு மாவட்டங்களில் தான் இலங்கையின் ஐயனார் வழிபாடு, வீரமுண்ட, தெடிமுண்ட, கடவர, பண்டார போன்ற சிறுதெய்வ வாழிபாடுகள் அதிகமாகவுள்ள மாவட்டங்களாகும். அதுபோல பில்லி, சூனியம், செய்வினை போன்றவற்றைச் செய்வதும், அதைக் களைவதற்குமான சடங்குகள் அதிகமுள்ள மாவட்டமாகவும் கொள்ளப்படுகின்றன.

ஆனால் கம்பஹா மாவட்டத்தில் தான் றாகமவில் ஒரு பிரசித்தி பெற்ற வீரமுண்டக் கோவில் காணப்படுகிறது. கதுருகஹா குளத்துக்கருகில் இந்தக் கோவில் அமைந்துள்ளது. இதற்கு முன்னர் பல தடவைகள் அந்தக் குளத்தைக் கட்டுவதற்கோ, அல்லது புனரமைப்பதற்கோ எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தடைப்பட்டதற்குக் காரணம் 'வீரமுண்ட'வுக்குப் பிடிக்காமையால் தான் என்கிற ஐதீகம் இவர்கள் மத்தியிலுள்ளது. இதைக் கட்ட முயற்சித்த சில அதிகாரிகளின் கனவுகளில் 'எனக்காக ஒரு விளக்கை ஏற்றினால் இந்தக் குளத்தைக் கட்டுவிப்பதற்கு எந்தத் தடையும் ஏற்படாது' என்று ஒரு உருவம் தோன்றிக் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். அது நிச்சயம் 'வீரமுண்ட' கடவுள் தான் என்பது அவ்வூர் மக்களின் ஐதீகம். இன்றும் அந்தக் கோவிலின் வாசலில் பலரும் தீபமேற்றிவிட்டுச் செல்வது வாடிக்கை.

இந்தக் கோவில் வல்பொல ஸ்ரீ விமலரத்னாராம விகாரை வளவில்தான் அமைந்துள்ளது. வருடாந்த பொசன் பெரஹர ஊர்வலம் இலங்கையின் பிரசித்தி பெற்ற பெரிய பெரஹராக்களில் ஒன்று. 1928-லிருந்து வீரமுண்ட வழிபாட்டைத் தொடர்ந்து இந்தப் பெரஹர பயணிப்பதும், அந்தக் கோவிலின் வாசலில் அதற்குரிய மரியாதையையும், பூசைகளையும் நிகழ்த்திவிட்டுக் கடப்பதும் பாரம்பரிய வழக்கமாகியிருக்கிறது. இரவிரவாகப் பேய் விரட்டுகின்ற பூசைகள், தொவில் நடனங்கள், சூனியக் களைவுப் பூசைகள் என்பன வீரமுண்ட வழிபாட்டுடன் மேற்கொள்வதைப் பல இடங்களில் காணமுடியும். தொவில் செய்யும் போது வீரமுண்டக் கடவுளுக்குப் பாடவேண்டிய பாடல்கள் பற்றிய பழைய ஓலைச் சுவடிகள் உள்ளன. அவை நூல்களிலுமுள்ளன. இணையத் தளத்திலும் கிடைக்கின்றன.

வீரமுண்டக் கடவுள் பற்றிய 'மல்யஹன்' மற்றும் 'யாதினி' போன்ற பாடல்களில் அவரை மிகவும் அழகான இளைஞராகவும் வர்ணிக்கின்றது. மலைநாட்டு மக்களின் நம்பிக்கைகளின்படி, இந்தக் கடவுளுக்கான விசேட யாகம் (தொவில் முறை) செய்யும் போது பெண்கள் எந்த விதத்திலும் சம்பந்தப்படக்கூடாது என்றும், ஆண்களாலேயே அதற்கான தயாரிப்புகள் அனைத்தும் செய்யப்படவேண்டும் என்றும் அதை மீறினால் தெரிவு குற்றமாகிவிடும் என்கிற நம்பிக்கை கிராம மக்களிடம் உண்டு.

வீரமுண்ட பகவான் போர்த் தெய்வம் என்றும் அழைக்கப்படுகிறார். கையில் வாளையேந்தி ஒரு போர்வீரர் பாணியில் அவர் காணப்படுகிறார்.

சிங்களச் சூழலில் வீரமுண்ட என்கிற பெயர்கள் சமீப காலம் வரை கிராமங்களில் சூட்டப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் பெயர்களைக் கொண்டு சாதிகளை அறியும் வழக்கமுண்டு. சாதிப் பெயர்கள் சிங்களச் சமூகத்தில் சமீப காலம் வரை இருந்து வந்துள்ளன. அவை தமது குடும்ப வழக்கப் பெயர்களாக இருந்து வந்துள்ளன. அந்த வரிசையில் வீரமுண்ட பெயரைக் கரையார் சாதிப் பெயராக அடையாளம் காண்கின்றனர். உதாரணத்துக்கு ஆராச்சிகே என்கிற பெயருடன் சேர்ந்து வரும் இந்தப் பெயர் சாதிப் பட்டியலைப் பாருங்கள்.

ஜெயக்கொடி ஆராச்சிகே ஸ்ரீ படஹெல (கும்பல்),
தபோவா ஆராச்சிகே ஸ்ரீ நவன்தன்னா,
எடினப்புலி ஆராச்சிகே ஸ்ரீ ரந்தா,
செல்லப்புலி ஆராச்சிகே ஸ்ரீ துராவ,
பொன்னப்பெரும ஆராச்சிகே ஸ்ரீ கொவிகம (வெள்ளாளர்),
சிங்கக்குலய ஆராச்சிகே ஸ்ரீ கொவிகம (வெள்ளாளர்),
மோதர ஆராச்சிகே ஸ்ரீ நவந்தன்னா,
ராம விக்கிரமகம ஆராச்சிகே ஸ்ரீ துர (பன்ன),
வீரமுண்ட ஆராச்சிகே ஸ்ரீ கராவ,
செங்கொண்ட ஆராச்சிகே ஸ்ரீ (வெள்ளாளர்),
தலுகொட ஆராச்சிகே ஸ்ரீ துராவ.

இந்தத் 'தெய்வ வழிபாடு' பற்றிய நம்பிக்கை சார்ந்த நூல்களும், ஆய்வு ரீதியாக அணுகப்பட்ட நூல்களுமாக ஆயிரக்கணக்கான சிங்கள நூல்கள் உள்ளன. இலங்கையின் இனத்துவ, மதத்துவத் தேசியவாதப் போக்கை ஆழமாக ஆராய விழைபவர்கள்; குறிப்பாகத் தமிழில் ஆராய முயற்சிப்பவர்கள்; இந்த நூல்களைக் கையாண்டால்
நிச்சயம் புதிய வெளிச்சங்களைத்
தமிழுக்குப் பாய்ச்சலாம்.



sarawanan.n@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canadä
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml



STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272




- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8




உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது




ஜேர்மன் நாட்டின் தலைநகர் பெர்லினுக்கு 22 மைல் தொலைவிலிருப்பது ஸச்ஸசன் (Sachsenhausen) என்கின்ற அழகிய நகர். 1937-ம் ஆண்டு இந்த நகரிலிருந்த வீடுகளுக்கு முன் அமைக்கப்பட்ட அழகிய பூந்தோட்டங்களின் மேல் எரிக்கப்பட்ட பிணங்களின் சாம்பல்கள் காற்றில் கலந்துவந்து படிந்தன, அழகான வீட்டின் முன்படிகளில் படிந்தன, சிறுவர்கள் விளையாடும் பூங்காக்களில் பரவின. அந்த நகரில் வசித்தவர்களுக்குத் தெரியும் இந்தச் சாம்பல்களும், பிணவாடையும் பக்கத்தில் முள்ளுக் கம்பி வேலிகளுக்குப் பின்னால் அமைந்திருக்கும் யூதர்களைத் தடுத்து வைத்திருக்கும் வதை முகாம்களிலிருந்துதான் வருகின்றது என்பது. இருந்தும், அவர்கள் ஒன்றும் பேசவில்லை. அவர்களில் பலர் நல்ல கணவன்களாக, மனைவிகளாக, அம்மாக்களாக, அப்பாக்களாக என்று நல்ல சமுதாயமாக வாழ்ந்தார்கள், இருந்தும் பக்கத்தில் நடப்பதைப் பாராமல் இருந்தார்கள். காற்று வேகமாக வீசிச் சாம்பல்களையும், துர்நாற்றத்தையும் வீசிய போது அவர்கள் சிறுவர்களை வீட்டினுள் பூட்டிவைத்தனர். அப்போது முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பமான வானொலியினை நாசிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டனர். வானொலி மூலம் நாசிகள், அவர்களின் வீடுகளில் தேவைப்படும் போதெல்லாம் புகுந்து கொண்டனர். அந்த மக்களோ ஜேர்மன் தலைவர்களின் உணர்வுமிக்க உரைகளைக் கேட்டுப் பூரிப்படைந்திருந்தனர். Saline பைகளிலிருந்து சொட்டுச் சொட்டாக வடியும் மருந்து குருதியில் கலப்பது போல வானொலிப் பரப்புரைகள் அவர்களின் மனங்களில் வெறுப்பு விஷத்தை மெதுவாக ஏற்றி கொண்டிருந்தது. வதை முகாம் சிறிதாகத் தொடங்கியபோது அதனை ஒருவரும் எதிர்க்கவில்லை, வதை முகாம் மிகப் பெரிதாகி அந்த அழகிய நகரின் மீது சாம்பல்களையும் பிணவாடையினையும் அந்த மக்கள் பார்க்க மறுத்தாலும் அள்ளிக் கொட்டுகின்றது. இந்த நகரில் வாழ்ந்தவர்கள் ஒன்றுமட்டும் உறுதியாக நம்பினர். இந்த வதை முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் யூதர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள் (Homosexuals), கல்விமான்கள், அரசியல் விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைக்குக் குரல் கொடுப்போர் என எவருமே மனிதப் பிறப்புகளல்ல, விலங்குகளை விடக் கேவலமானவர்கள் என்பதே. அந்த நகருக்கு வதை முகாம் வருவதினை யாரும் வரவேற்கவில்லை. அதேவேளை அதனை எதிர்க்கவுமில்லை. இந்த வதை முகாமில்தான் புகழ்பெற்ற ஜேர்மன் மதகுரு Friedrich Gustav Emil Martin Niemöller தனிச் சிறையினில் அடைக்கப்பட்டிருந்தார். இவரது புகழ் பெற்ற உரைதான் 'முதலில் அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளைத் தேடிவந்தார்கள்...' என்று தொடங்கும் உரை.

ஒரு அற்புதமான பெரிய மரம். அமெரிக்காவின் தென் மாநிலங்களிலிருக்கும் பல நகர்களின் பிரதான தெருக்கள் ஒன்று கூடும் சந்தியில் ஒரு பெருமரம் எப்போதும் இருந்தது. அது ஓக்(oak) மரமாகவோ அல்லது எல்ம் (elm) மரமாகவோ அல்லது சைக்கமோர் (sycamore) மரமாகவோ இருக்கலாம். இந்த மரத்தடியோ ஒரு தனித்துவமான இடத்தினை இந்த நகர் மக்களின் மனங்களில் பிடித்திருக்கும். இந்த மரங்கள் இங்கு வீதிகள் வருவதற்கு முன்னரே உருவாகியிருந்தன. இந்த மரங்கள் சந்தியின் மத்தியில் இருப்பதினால் போக்குவரத்துக்கு மிகுந்த தடையாக இருந்தது, சந்தியின் நடுவிலிருக்கும் இந்த மரங்களினால் பல விபத்துகள் ஏற்பட்டன இருந்தும், இந்த மரங்களை ஒருவராலும் அகற்றமுடியாது ஏனெனில் இதுதான் உள்ளூர்த் தூக்குமரம் (Local lynching tree). இந்த மரம், நகரங்களில் வாழ்ந்த வெள்ளை இனத்தவரின் அதிகாரத்தினையும் உயர்தட்டுக்குடி என்கின்ற மமதையையும் உரக்கப் பிரதிபலித்தது, அதேவேளை அங்கு வாழ்ந்த தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்ட கறுப்பினமக்களின், அவர்களுக்கான சமூக அடிமட்டப் படிநிலைமையினை உறுதிப்படுத்தியது. அந்த மரத்தைக் கடந்து செல்லும் ஒவ்வொரு கறுப்பினத்தவரையும் இந்த மரம் தொடர்ந்து நினைவூட்டிக் கொள்ளும், யார் கடந்த தடவை அந்த மரத்தில் தொங்கவிடப்பட்டனர் என்பதனை. அதுமட்டுமல்லாமல், இனி அடுத்து எனது அப்பாவோ, தம்பியோ, கணவனோ, மச்சானோ, மாமனோ யார் ஏற்றப்படுவார்கள் என்கின்ற அச்சமும், பய

மும் அவர்களைத் தொடர்ந்து துரத்திக்கொண்டேயிருக்கும். கறுப்பின மக்களின் ஓலக் குரல்களை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த மரம், வெள்ளையின மக்களின் காது களில் சூட்சுமமாக ஏதோ கூறிக் கொண்டும் இருந்தது.

அது ஓர் இலையுதிர் காலம். ஆண்டு 1921. சூரியன் தொலைந்திருந்த ஒரு நாள், டெக்ஸஸ் (Texas) மாநிலத்தில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லீஸ்பேர்க் (Leesburg) நகரின் மத்தியில் அமைந்துள்ள மரத்தினடியில் ஒரு வண்டி நிறுத்தப்படுகின்றது. இந்த வண்டியிலிருந்து கைகளும் கால் களும் கட்டப்பட்ட நிலையில் 17 வயது கறுப்பின இளைஞன் Wylie McNeely இறக்கப்படுகின்றான். சுற்றியிருந்த கூட்டம் ஆரவாரப்பட்டது. இந்த இளைஞன் தூக்கில் வதைபட்டு நெருப்பில் வெந்து கருகுவதைப் பார்க்க வந்த மேல்தட்டுச் சாதி வெள்ளைக்காரர்கள் இவர்கள். இந்த நிகழ்வு நடைபெறு வதற்கு முன்னரே இந்த நிகழ்வு தொடர்பாக உள்ளூர்ப் பத்தி ரிகைகளில் விளம்பரங்கள் தொடங்கிவிட்டன. 500-க்கும் மேற் பட்டவர்கள் கூடிவிட்டனர். இந்தப் பையன் அப்படி என்ன தவறு செய்தான்? ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைத் தொந் தரவு செய்துவிட்டானாம்! அப்படியென்ன தொந்தரவு? ஏதா வது ஆதாரங்கள் இருக்கா? இந்தக் குற்றச்சாட்டுத் தொடர் பாக இந்தப் பையன் என்ன கூறுகின்றான்? அந்தப் பெண் உண்மை பேசுகின்றாளா? எந்த விசாரணைகளும் தேவை யில்லை கறுப்புப் பையனுக்கு என்ன திமிர்? ஏற்று கழுகிலே என்றது மேல்சாதி. கயிற்றுக்குக் கீழ் நெருப்பைப் பற்ற வைப் பதற்காக விறகுகள், சுள்ளி, தடிகள் போன்றவற்றைக் கூட்டி வைத்தாயிற்று. கயிற்றில் பையனை ஏற்றுவதுதான் பாக்கி. ஆனால், அதற்கு முதல் இந்த வேள்வியை அரங்கேற்றும் கனவான்கள் மத்தியில், யார் இறந்த உடலின் பாகங்களை வைத்திருப்பது என்பதில் இழுபறி. தூக்கிலிடப்படும் கறுப் பின மக்களின் உடற் பாகங்களை நினைவுப் பரிசாகத் தம் வீடுகளில் பெருமையாக வைத்துப் பறைசாற்றிக் கொண்டா டும் சாத்தான்கள் இவர்கள். இந்தச் சாத்தான்கள் விவாதங்க ளைத் தனது கடைசி மூச்சை சிறிது நேரத்தில் இழக்கப் போகும் McNeely-யும் கேட்டுக்கொண்டிருந்திருப்பான். இவர் களின் இழுபறியினால் சேர்ந்திருந்த கூட்டம் பொறுமையி ழந்து கூச்சல் போடத் தொடங்கிற்று. சாத்தான்கள் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தனர். நெருப்பைப் பற்றவைத்து McNeely-ஐ மரத்தில் ஏற்றினர்.

அந்தப் புகைபடத்திலிருக்கும் சிறுமிக்குப் பத்து வயது இருக்கலாம், அவள் யாரோ வளர்ந்த பெண்ணின் சட்டை யைப் பிடித்துக்கொண்டு அபூர்வமான ஒன்றைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருக்கின்றாள். அவளுக்குப் பக்கத் திலிருக்கும் சிறிய பெண்ணுக்கு சிறுமியை விட இரண்டு அல் லது மூன்று வயது கூட இருக்கலாம், இந்தச் சிறிய பெண் ணின் பார்வையில் ஒரு வகைப் பூரிப்பும் பெருமிதமும் குடி கொண்டிருந்தன. இவர்களுடன் வெள்ளை காற்சட்டை, வெள்ளை மேற்சட்டை மற்றும் வெள்ளை Cowboy தொப்பிய ணிந்த ஒரு பெரியவர் ஏதோ விருந்துபசாரத்துக்குப் போவது போல் அலங்கரித்து வெறுமையாகப் புன்னகைத்து நிற்கின் றார். இந்தப் படத்திலிருக்கும் வெள்ளையினச் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள், முதியோர்களென யாவரும் குதூகலமாகப் பார்க்கும் காட்சி வேறு ஒன்றுமில்லை ஒரு கறுப்பின மனிதனை ஊர் மரத்தில் தூக்கிலிடப்படும் கொடூ ரத்தை ரசிக்க வந்த கூட்டம்தான். புளோரிடா மாநிலத்தில் போர்ட் லாடேர்டல் (Fort Laterdal) நகரில் இருக்கும் பைன் வூட் (Pinewood) என்ற கிராமத்தில் 1935-ம் ஆண்டு ஜூலை பத்தொன்பதாம் திகதி ரூபன் ஸ்டேசி (Ruban Stacy) என் கின்ற கறுப்பின மனிதனின் தூக்கு வதையினைப் பார்க்கப் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வெள்ளையினத்தவர்கள் கூடியி ருந்தனர். Ruban Stacy செய்த மிகப்பெரும் தவறு ஒரு வெள் ளையினச் சீமாட்டியின் மனம் புண்படும்படி நடந்துகொண் டார், அதாவது கொச்சையான ஆங்கிலத்தில் திட்டிப்போட் டார். வெள்ளையின மாதுவை மரியாதை குறைவாகப் பேச லாமா? போடு தூக்கில் என்றது மேட்டுக்குடி. தூக்கு மரத்தில் கறுப்பின மனிதர்களை வதைக்கும் நிகழ்வு அந்த ஊர்களில் வாழும் வெள்ளையினத்தவருக்கு ஒரு களியாட்டம். இந்த நிகழ்வைப் படம் பிடிப்பதற்கு நூற்றுக்கணக்கான புகைப்பட மெடுக்கும் கலைஞர்கள் கூடியிருந்தனர். எடுக்கும் படங் களை உடனடியாகப் பதிப்பித்து postcard-ஆக விற்பனை செய்வதற்கெனத் தற்காலிகப் பதிப்பகங்கள் கூடாரமடித்து உருவாக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளுக்குப் போன சாட் சியாகத் தூக்கில் தொங்கும் இறந்த உடல்களின் முன்னால் நின்று படம் எடுத்துப் பெருமையாகத் தமது நண்பர்களுக் கும், உறவினர்களுக்கும் post card-ஆக அனுப்பும் வழக்கம் இவர்களுக்கு. 1918-ம் ஆண்டு டெக்சாஸ் (Texas) மாநிலத்தி லிருந்து இவ்வாறாகப் படமெடுத்து அனுப்பப்பட்ட Post card-ன் பின்புறத்தில் இவ்வாறாக எழுதப்பட்டிருந்தது.

***'Dear Mom,***
***Look, What we had for BBQ last night.***
***Love Son.'***

இப்படி எடுக்கப்படும் புகைப்படங்களைக் கொண்ட post card-களின் எண்ணிக்கை 1900 ஆண்டுகளின் தொடக்கத் தில் அமெரிக்காவின் தென் மாநிலங்களில் மிகப் பரவலாக இருந்தது. இந்த அசிங்கமான புகைப்படங்கள், அமெரிக்கா கட்டியெழுப்பிவரும் மிக நீண்ட கால ஜனநாயகத்தைக் கொண்ட நாடு என்ற விம்பத்துக்குச் சவாலாக இருந்தது. இத னால் அமெரிக்கத் தபால் திணைக்களம் இந்த வகையான post card-களுக்கு 1918-ம் ஆண்டு தடைவிதித்தது. இந்தத் தடைகளுக்குப் பின்னர் இப்படிப் படமெடுப்பதனை நிறுத்திக் கொண்டனரா? இல்லை, எடுத்த post card-களைக் கவருக் குள் போட்டு அனுப்பிக் கொண்டாடியது பிசாசுக் கூட்டம்.

இதுவரை மேலே எழுதியவை New York Times பத்திரிகை யின் ஆசிரியர் குழாமிலிருக்கும் இசபெல் விலகெர்சோன் (Isabel Wilkerson) அவர்களால் எழுதப்பட்ட Caste: The Origins of Our Discontents என்ற புத்தகத்திலிருக்கும் ஒரு அத் தியாயத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளிலிருந்து எழுதப் பட்டது. இந்தப் புத்தகத்தை நான் கடந்த கோடை விடுமுறை யின் போது வாசித்திருந்தேன். அண்மையில் நான் படித்த புத்

தகங்களில் என்னை மிகவும் பாதித்த புத்தகங்களில் இந்தப் புத்தகம் மிக முக்கியமானது.

Isabel Wilkerson ஒரு பெண் பத்திரிகையாளர். இவர் இந்தியாவிலிருக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்ட சாதியமைப்பு, இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் நீடித்த ஆபிரிக்க - அமெரிக்கவாழ் மக்களை அடிமைகளாக நடத்திய வெள்ளையின மேலாதிக்கம், இருபது ஆண்டுகளில் உருவாகி இலட்சக்கணக்கில் யூத இனத்தவரைக் கொன்றொழித்த நாசி அமைப்பு போன்றவற்றின் செயற்பாடுகள், எவ்வாறு சமாந்தரமாக ஒரே வடிவத்தில் இருந்தன என்பதை மிக விபரமாக எழுதியிருந்தார். அது மட்டுமல்லாமல், இந்த அமைப்புகள் தமது விரிவாக்கத்திற்காக ஒருவரிடமிருந்து ஒருவர் எவ்வாறு கற்றுக் கொண்டனர் என்பதனையும் ஆதாரபூர்வமாக விபரித்திருந்தார். இந்த நூல் தமிழில் முழுவதுமாக மொழிபெயர்க்கபட வேண்டிய நூல், தமிழ் மட்டுமல்லாமல் சிங்களம் மற்றும் இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டிய ஒரு புத்தகம். இந்தக் கட்டுரையினை எழுதுவதற்கு என்னைப் பாதித்த இன்னுமொரு காரணமும் இருக்கின்றது.

கடந்த மாதத் தொடக்கத்திலிருந்து இந்திய ஊடகங்களில் பிரதமர் மோடி இராமர் சிலையைத் தொடலாமா விடலாமா எனச் சங்கராச்சாரியார் உபதேசம் செய்து கொண்டிருக்கையில், தை மாதம் 16-ம் திகதி பிபிசி தமிழ் இணையத்தளத்தின் ஒரு மூலையில் ஒரு அதிர்ச்சியான செய்தி ஒன்று வெளிவந்திருந்தது. செய்தியின் சாரம் இதுதான்!

நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவரை வினாவுகின்றார்.



‘நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கின்றீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?’

குற்றம் சாட்டப்பட்டவர் பெருமையாகப் பதிலளித்தார்.

‘ஆம், ஓடிப்போன என் பெண்ணை மரத்திலேற்றிக் கழுத்தை நெரித்துக் கொலைசெய்த காரணத்துக்காக வந்திருக்கின்றேன்’ என்றார்.

ஒரு ஆணவக் கொலையில் ஈடுபட்ட சாதி வெறியர். ஒரு தந்தையால் இவ்வாறு ஒரு கொலையைச் செய்யமுடியும் என்கின்ற செய்தியினை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இந்த நிகழ்வு கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்

காவிலோ அல்லது 1930-களில் ஜெர்மனியிலோ நடக்க வில்லை. மாறாக, 2023-ம் ஆண்டு தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 23 கொலைகளும் இந்தியா முழுவதும் 207 கொலைகளும் சாதி மாறித் திருமணம் முடித்ததற்கான ஆணவக் கொலைகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கொலைகளைச் செய்தவர்கள், பெரும்பாலும் கொலை செய்யப்பட்டவரின் உறவினர்களாகவோ அல்லது சகோதரர்களாகவோ இருப்பார்கள். இதிலும்கூட ஒரு கொடுமை, இந்தக் கொலைகளில் மேல்சாதி என்று சொல்லப்படுகின்ற சாதியினைச் சார்ந்த பெண் தாழ்ந்த சாதி என்று சொல்லப்படுகின்ற சாதியினைச் சேர்ந்த பையனைத் திருமணம் முடிக்கும்போதுதான் அதிக கொலைகள் நடைபெறுகின்றன. இது சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஆணாதிக்கத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

அதிகாரத்திலிருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமக்குக் கீழ்மட்டத்திலிருப்பவர்களுக்கு அடையாளத்தை ஏற்படுத்தி இந்த அடையாளங்களுக்குப் பெயர்களுமிட்டு எந்தெந்த இடங்களில் இருக்கவேண்டும் என்பதை வரையறுத்து, அந்த அந்த இடங்களில் சமூகத்தில் வாழவிடுவார்கள். கிட்டதட்ட super market-இல் இருக்கும் தட்டுகளில் இருக்கும் பெட்டிகள் போல. குறிப்பிட்ட பெட்டிகளுக்கு ஒரு லேபெல் (label). இந்த லேபெலில் இருப்பவை இந்தத் தட்டில்தான் இருக்கவேண்டும். இதற்காக இவர்கள் கடவுள், மரபு, கலாசாரம், இனம், அது, இது எனச் சகலதையும் காரணம் காட்டுவார்கள். அதிகாரத்திலிருப்பவர்கள் சொல்லும் தட்டுகளில் இருக்கும்வரை ஒரு பிரச்சினையும் இல்லை. கீழ் மடத்திலிருப்பவர்கள் லேபெல்களைக் களைந்து, தட்டுகளை உடைத்தெறிந்து வெளிவரும் போதுதான் இங்கு கொலை வெறி தாண்டவம் ஆடுகின்றது.

நவீன மனிதர்கள் ஏறக்குறைய 200,000 வருடங்களுக்கு முன்னர் தென்னாப்பிரிக்காவில் உருவாகியிருக்கின்றார்கள். ஏறக்குறைய 70,000 ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவிலிருந்து வெளியேறி முதலில் மத்திய கிழக்கு நாடுகள், பின்னர் ஐரோப்பா அதன் பின்னர் ஆசியக் கண்டங்களுக்குப் பரவியிருக்கின்றனர் ஏறக்குறைய 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் நாடோடிகளாக வாழ்ந்த மனிதயினம், ஓர் இடத்தில் நிலை கொண்டு விவசாயச் சமூகமாக மாற்றமடைந்தது. இந்த மாற்றத்தைத் தொடர்ந்தே அரசு, இனம், தேசம் போன்ற பிரிவுகள் தோன்றின. இத்தோடு கூடி வளர்ந்தது சமூக ஏற்றத்தாழ்வுகள். இந்தச் சமூக ஏற்றத்தாழ்வுகள் சாதியமைப்புகளுக்கு அத்திவாரமிட்டன. இரு நூறாயிரம் வருடச் சரித்திரத்தைக் கொண்ட நவீன மனித இனத்தில் சாதியக் கட்டமைப்புகள் மிக அண்மையில்... கிட்டதட்ட 5000 வருடங்களுக்குள் சொத்துகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட ஒன்று. சாதி, இனம் என்பது மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பிரிவுகள். அறிவியல் ரீதியாக மனித இனங்களுக்கும் சாதிகளுக்கும் இடையில் எந்த வேறுபாடுகளுமில்லை. உயிரியல் ரீதியாக இன்று இந்த பூமியில் வாழும் சகல மனிதர்களும் மிக நெருங்கிய உறவினர்கள். எமது உடலிலிருக்கும் கலங்களுள் உள்ள உபகலங்களில் (organelles) ஒன்று mitochondria. இவற்றிலிருக்கும் மரபணுக்களை ஆராய்ந்ததன் மூலம் இன்று வாழும் சகல மனிதர்களும், அவர்கள் சீனாவில் பிறந்தவர்களாயினும் சரி, இந்தியாவில் பிறந்தவர்களாயினும் சரி, ஆப்பிரிக்காவிலோ அல்லது அமெரிக்காவிலோ பிறந்தவர்களாயினும் சரி, யாவரும் கிட்டத்தட்ட 170,000 முதல் 200,000 வருடங்களுக்கு முன்னிருந்த காலத்தில் வாழ்ந்த ஒரு தாயிலிருந்து உருவான பரம்பரையில் இருந்து வந்தவர்கள். எமக்கு இந்தத் தாய் எப்படி இருந்திருப்பார் என்று தெரியாது, அவர் உபயோகித்த கல்லாயுதங்களோ, பேசிய மொழியோ எமக்குத் தெரியாது, ஆனால் என்றும் அழியாத மரபணுக்களை அவர் எம்முடன் விட்டு சென்றுள்ளார். அவரது நெருங்கிய உறவினர் வழியில் வந்தவர்கள் இன்று நவீன உலகிலிருக்கும் போட்சுவானா அல்லது நபீபியா நாட்டிலிருக்கும் பூர்வீகக் குடிகளான சான் பூர்வீகக் குடிகளாகும். இந்த உண்மை அறிவியலில் 1990-ம் ஆண்டுகளிலேயே மரபணு ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த காலத்தில் படிமச் சான்றுகள், புவியியற் சான்றுகள், மொழிப் பரவல் சான்றுகள் எனப் பல்வகைப்பட்ட சான்றுகள் இந்த உண்மையினை உறுதிப்படுத்துகின்றன. இந்த அற்புதமான உண்மையினை நான் முதல் முதலாக Scientific America இதழில் வாசித்தபோது அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. நீங்கள் கறுப்பர்களாகவோ, சீனர்களாகவோ, வெள்ளையர்களாகவோ, மார்பை உயர்த்தும் மேல் சாதியினரோ... யாராக இருந்தாலும் சரி, எமக்கு நீங்கள் ஒரு தூரத்து உறவினர். அவ்வளவுதான்.

இன்று இந்தியாவில் அரசியல் பேசுபவர்களிலிருந்து ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள்வரை யாவரும் சாதி ஆதிக்கத்தைப்பற்றி எந்தவிதமான கூச்சமும் இல்லாமல் வெளிப்படையாகவே, பெருமையாகவே பேசிக்கொள்கின்றனர். இந்திய ஜனாதிபதி தாழ்ந்த சாதி எனச் சொல்லப்படும் சமூகத்திலிருந்து வந்தவர் என்பதால் அரசால் பகீரங்கமாகவே பொது நிகழ்வுகளில் பின்தள்ளப்படுகின்றார். இவரைப் போன்ற அரசியல்வாதிகள் போகும் இடங்கள் தீட்டு என்று கருதி அவை சுத்தம் செய்யப்படுகின்றன. சங்கராச்சாரியார் போன்றவர்கள் மிகத் துணிவாக நாட்டின் தலைவர் பிரதமருக்குக் கைதட்டவா நான் இருக்கின்றேன் என்று தேசியத் தொலைக்காட்சியில் கேட்கின்றார் ? இவர்களைப் போன்றவர்கள் தமது மோசமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தச் சம்பிரதாயம், மரபு, ஐதீகம், மதம் போன்றவற்றைத் துணைக்கு எடுக்கின்றனர். மரபோ, மதமோ, அரசோ சக மனிதர்களை மனிதர்களாக மதிக்காவிடின் அவற்றை உடைத்தெறியவேண்டியது சமூக முன்னேற்றத்துக்கு அவசியமானது. சாதி கடவுளினால் உருவாக்கப்பட்டிருந்தாலும்கூட அதனை அழிக்கவேண்டியது மனிதரின் கடமை. அப்படிக் கடவுள் நேராக வந்து நான் உருவாக்கிய சாதிமுறையினை ஏன் அழித்தீர்கள் என்று கேட்டால் நாம் துணிவாக அவரிடம் சொல்லிவிடலாம் 'சாமி நீங்கள் செய்தது தப்பு' என்று. அதனை அவர் கேட்காவிட்டால் அவர் கடவுள் இல்லை.



kugan.s@thaiveedu.com



# லெனினின் நூற்றாண்டை நோக்கி

## லெனினும் நூலகங்களும்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

உலக வரலாற்றில் நூலகங்கள், உழைக்கும் மக்களுக்கான மகத்தான பணியை ஆற்றமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியது சோவியத் யூனியனின் நூலகக் கட்டமைப்பாகும். உலகின் முதல் சோசலிச அரசான சோவியத் யூனியனில் உள்ள சோசலிச பொது நூலகங்களின் கோட்பாடு மற்றும் நடைமுறை என்பன எவ்வாறு அத்தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்காற்றின என்பது அதிக கவனம் பெறவில்லை. சோவியத் யூனியனில் பொது நூலக அமைப்பின் திட்டங்கள் மற்றும் முறைகள் ஆகியவற்றில் லெனினின் தடம் மிக ஆழமாகப் பதிந்துள்ளது. சோவியத்தின் பொது நூலக மாதிரிகள் ஒவ்வொரு மார்க்சிய-லெனினிச நூலகத் திட்டத்திற்கும் தத்துவார்த்த அடிப்படையாகச் செயற்படுகின்றன. குறிப்பாக கல்வியறிவை ஏற்படுத்தும் ஒரு அமைப்பாக, சோவியத் பொது நூலகங்களின் முக்கிய பங்கானது பிறநாட்டுப் பொதுநூலகங்களில் இருந்து சோவியத் பொது நூலகங்களை வேறுபடுத்துகின்றன.

பொதுக்கல்வியை வழங்குவதில் நூலகங்களின் தவிர்க்கவியலாத பங்கை லெனின் உணர்ந்திருந்தார். 1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நூலகங்கள், கருத்தியல் நிறுவனங்களாகக் கவனயீர்ப்பைச் செய்தன. அரசு அவற்றின் முழுமையான தலைமையை ஏற்றுக்கொண்டது. ஜார் மன்னர் கால ரஷ்யா-வின் நிறுவனங்கள் ஒழிக்கப்பட்டதால், தனியார் நூலகங்களின் உரிமையாளர்கள் புலம்பெயர்ந்த நிலையில், புத்திஜீவிகளின் புத்தக சேகரிப்புகளைத் தவிர, பொது மற்றும் தனியார் நூலகங்களின் நிலை மோசமாக இருந்தது. பெரும்பாலும் தன்னிச்சையான கோரிக்கைகளின் விளைவாக மதிப்புமிக்க புத்தக சேகரிப்புகள் அழிக்கப்பட்டன அல்லது திருடப்பட்டன. சேகரிப்புகளை சூறையாடுவதைத் தடுக்கவும், தேசியமயமாக்கப்பட்ட நூலகங்களின் பாதுகாப்பு மற்றும் விநியோகத்தை அமைக்கவும், புத்தகங்களின் செல்வத்தைப் பாதுகாக்க சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவத்தை சோவியத் அதிகாரிகளிற்கு வலியுறுத்தவும் நூலகங்களைப் பாதுகாப்பதற்கான ஆணையை லெனின் வழங்கினார்.

ஜூலை 17, 1918 அன்று, மாஸ்கோவில், விளாடிமிர் லெனின் தலைமையில் நடந்த மக்கள் ஆணையர்களின் கூட்டத்தில், சோவியத் அரசாங்கத்தின் முதல் நூலக ஆணைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'ரஷ்ய சோவியத் கூட்டமைப்பு சோசலிச குடியரசின் நூலகங்கள் மற்றும் புத்தக வைப்புத் தொகைகளைப் பாதுகாப்பது குறித்து' என்ற தலைப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணத்தின் கீழ், 'கலைக்கப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட்ட அனைத்து அரசு நிறுவனங்களினதும் சில சங்கங்களினதும் நூலகங்கள் பாதுகாக்கப்பட வேண்டியதோடு அனைத்தும் கல்விக்கான மக்கள் ஆணையத்தால் பதிவு செய்யப்பட வேண்டும்' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த ஆணையின்படி ஆகஸ்ட் 15, 1918 வரை, எந்த வகையான நூலகங்களையும் வைத்திருந்த அனைத்து நிறுவனங்களும் அமைப்புகளும், கல்விக்கான மக்கள் ஆணையத்தின் நூலகத் துறைக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தன. இந்த நூலகங்களின் நோக்கம், அவற்றின் விநியோகம், கையகப்படுத்தல், பொதுமக்களுக்கான அணுக்கம் ஆகியவற்றை இத்துறை வரையறுத்துள்ளது. இந்த உத்தரவுக்கு இணங்காதது புரட்சிகர சட்ட ஒழுங்கை மீறுவதாகவும், சட்டப் பொறுப்பு சம்பந்தப்பட்டதாகவும் கருதப்பட்டது.

நவம்பர் 1920-ல், லெனின் 'நூலகப் பணிகளை மையப்படுத்துவது' என்ற ஆணையில் கையெழுத்திட்டார். இந்த ஆணையின் கீழ், நாட்டில் உள்ள அனைத்து நூலகங்களும் பொது நூலகங்களாக அறிவிக்கப்பட்டு நாடு முழுவதும் ஒரே நூலக வலையமைப்பாக இணைக்கப்பட்டன. அனைத்து நூலகங்களுக்கும் தொடர்ந்து புதிய புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிரந்தர மற்றும் நகரும் நூலகங்கள் எல்லா இடங்களிலும் திறக்கப்பட்ட நிலையில், கல்வியறிவின்மைக்கு எதிராக நாடு ஒரு மாபெரும் போராட்டத்தைத் தொடங்கியது.

உள்நாட்டுப் போர் மற்றும் வெளிநாட்டு தலையீடுகளால் ஏற்பட்ட சிரமங்கள் இருந்தபோதிலும், சோவியத் அரசாங்கம் ஏற்கனவே உள்ள நூலகங்களைப் பாதுகாக்கவும், நிறைய புதிய நூலகங்களை அமைக்கவும் முயன்றது. 1923-ல் 'சிவப்பு நூலகர்' என்ற இதழ் வெளிவந்தது. அடுத்த ஆண்டு முதலாவது நூலக காங்கிரஸ் மற்றும் அறிவியல் நூலகங்களின் முதலாவது மாநாடு தொடங்கப்பட்டது. 1920-களின் பிற்பகுதியில் இருந்து தொழில்நுட்ப நூலகங்களின் வலையமைப்பு உரு

வாக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் பிராந்திய, பொது மற்றும் அறிவியல் நூலகங்கள் நாடு முழுவதும் விரிவடைகின்றன. இவ்வாறு கல்விப் புரட்சிக்கு நூலகங்கள் முக்கிய பணியாற்றின.

புரட்சியின் பின்னர் மிகவும் பின்தங்கிய ஒரு சமூகத்தைக் கொண்டிருந்த தேசத்தில் நூலகங்களின் முதன்மையான பங்கு எவ்வாறு சாத்தியமாகியது ? கல்விக்கான ஆதாரசுருதியாக நூலகங்கள் எவ்வாறு மாறின ? அதில் லெனினின் தலைமைப் பாத்திரம் என்ன ? ஆகிய வினாக்களை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

## புரட்சிக்கு பிந்தைய கலாசாரப் புரட்சியில் நூலகங்கள்:

ரஷ்யாவின் முக்கிய பிரச்சினை என்னவென்றால், அக்டோபர் புரட்சி ஒரு அரசியல் மற்றும் சமூகப் புரட்சியை ஏற்படுத்திய போதிலும், அது ஒரு பொருளாதார அல்லது பண்பாட்டுப் புரட்சியை மேற்கொள்ளவில்லை. மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் கணித்தபடி புரட்சியானது முன்னேறிய முதலாளித்துவ சமூகத்தில் நிகழவில்லை, மாறாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய, அரை-நிலப்பிரபுத்துவ, முக்கியமாக விவசாய சமூகத்தில் நடந்தது. விரைவான சோசலிச வளர்ச்சிக்கு பொருளாதார நிலைமைகள் சாதகமாக இல்லை. நாட்டின் பின்தங்கிய பொருளாதார நிலைக்கு ஒப்பானது அதன் பின்தங்கிய பண்பாட்டு நிலை. ரஷ்ய மக்களில் பெரும்பாலோர் படிப்பறிவில்லாதவர்கள், படிக்காதவர்கள், மூடநம்பிக்கை மற்றும் அதிக மதநம்பிக்கை சார்ந்த விவசாயிகள். புரட்சியின் முன்னணிப் படையான தொழிலாள வர்க்கம் சிறுபான்மையினரை உள்ளடக்கியது. நாட்டில் பொதுக் கல்வி நிறுவனங்கள் எதுவும் இல்லை. ஜார் அரசாங்கம் புரட்சிக்கு முன்பே பலவற்றை அழித்துவிட்டது. எனவே, லெனின், 'பண்பாட்டுப் புரட்சிக்கு முந்திய அரசியல் மற்றும் சமூகப் புரட்சி, அந்த பண்பாட்டுப் புரட்சியே இப்போது நம்மை எதிர்கொள்கிறது' என்றார்.

1919-ம் ஆண்டில், லெனின், 'மக்களுக்கு மீண்டும் கல்வி கற்பிக்கும் பணி, அமைப்பு மற்றும் அறிவுறுத்தல், அறிவைப் பரப்புதல், அறியாமை, பழமை, காட்டுமிராண்டித்தனம் ஆகியவற்றின் பாரம்பரியத்தை எதிர்த்துப் போராடுவது மிகவும் பெரியதும் அத்தியாவசியமானதும்' என்று குறிப்பிட்டார். மக்களின் கலாசார மட்டத்தை உயர்த்தும் பணி மகத்தானது. ஆட்சியின் அடிப்படையில் இந்த செயல்முறையை புதிதாக தொடங்க வேண்டும். பண்பாட்டுப் புரட்சி வெகுஜனங்களின் அரசியல் மற்றும் வர்க்க உணர்வை உயர்த்துவதற்கான ஒரு முன்நிபந்தனை மட்டுமல்ல, அதை உடனடியாகவும் செய்ய வேண்டியிருந்தது.

லெனின் கலாசாரத்தின் கருத்தியல் மையத்தில் தீவிர விழிப்புணர்வைக் காட்டினார், அதே போல் அதன் வளர்ச்சிக்காக அது உருவாக்கியுள்ள சிக்கல்களையும் காட்டினார். அரசியல் அல்லது இராணுவப் போராட்டங்களைப் போலல்லாமல், சரியான சக்திகள் மற்றும் அமைப்புடன் மிக விரைவாக வெற்றிபெற முடியும், கலாசாரப் போராட்டத்திற்கு சிந்தனைகளில் மாற்றம் தேவைப்பட்டது, வர்க்க உணர்வைப் பொறுத்தவரை அதைக் கட்டாயத்தினால் அடைய முடியாது. எவ்வாறாயினும், உழைக்கும் மக்களின் அரசியல் கல்விக்கு இத்தகைய மாற்றம் முக்கியமானது.

அரசியல் கல்விக்கான அடித்தளமாக கலாசார வளர்ச்சியை நிலைநிறுத்துவதன் மூலம், சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தை கட்டியெழுப்புவதில் கலாசாரத்தின் கருத்தியல் மற்றும் அரசியல் செயற்பாட்டை லெனின் முன்னிலைப்படுத்தினார். கம்யூனிஸ்ட் குடிமக்களை வடிவமைப்பதில் அரசின் எழுத்துப் பிரச்சாரம் திறம்பட செயற்பட வேண்டுமானால், அடிப்படைக் கருத்தியல் கருத்துக்களைப் படிக்கவும், எழுதவும், புரிந்துகொள்ளவும் தொழிலாளர்களுக்கு இயலுமானதாக வேண்டும் என்பதே அவரது அடிப்படைக் கருத்து. ஒரு படிப்பறிவற்ற விவசாயி, கட்சிக் கொள்கையின் நற்பண்புகளைப் பறைசாற்றும் துண்டுப் பிரசுரத்தில் சிறிய மதிப்பைக் காண்பார். அவர்களுக்காக எழுதப்பட்டதைப் புரிந்து கொள்ள முடிந்தால் மட்டுமே அவர்கள் காரணத்தில் உறுதியாக இருப்பார்கள். இந்தப் பணிகள் நாடு முழுவதும் உள்ள மக்களுக்குப் பரவலாகக் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக பின்தங்கிய விவசாயிகள் கூட்டாக கூட்டுறவு விவசாய சங்கங்கள் அமைப்பது மிகவும் அவசியம். இவை சோவியத் ரஷ்யாவில் சோசலிச பொருளாதார அமைப்பின் அடிப்படை அலகுகளாக இருக்கும். கூட்டமைப்பு முடிந்தவுடன், நாடு 'சோசலிசத்தின் மண்ணில் இரு கால்களையும் ஊன்றி நிற்கும்'. எவ்வாறாயினும், இந்த அமைப்பு வெற்றிபெற, அது கலாசாரத்தின் ஒரு தரநிலையை அடைய வேண்டும். துல்லியமாக விவசாயிகள் மத்தியில் மிகப்பெரும் வெகுஜனமாக அதைக் கட்டியெழுப்ப ஒரு கலாசாரப் புரட்சி தேவைப்பட்டது. சாராம்சத்தில், விவசாயிகள் தனிப்பட்ட விவசாய ஒதுக்கீடுகள் மீதான அவர்களின் குட்டி முதலாளித்துவ இணைப்புகளை நிராகரித்து, விவசாயம் மற்றும் வாழ்வின் வகுப்புவாத, கூட்டமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது தான் சோசலிசம் வலுப்பெறும் என்று லெனின் நம்பினார்.


வெளிப்படையாக, சோவியத் ரஷ்யா எதிர்கொள்ளும் கலாசார பணிகள் மகத்தானவை. கம்யூனிசத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்ப வேண்டுமென்றால் நாட்டிற்கு ஒரு கலாசார புரட்சி தேவைப்பட்டது. இருந்தபோதிலும், இந்தப் புரட்சி வெற்றியடையும் என்று லெனின் நம்பிக்கை கொண்டிருந்தார். ஏனெனில் மனித வரலாற்றில் முதன்முறையாக அரச அதிகாரம் தொழிலாள வர்க்கத்தின் கைகளில் இருந்தது. இந்த வர்க்கம் இயல்பாகவே புரட்சிகர மற்றும் உலகளாவிய வர்க்கமாக இருந்தது.

ரஷ்யாவில் வெகுஜன கல்வி நிறுவனங்கள் இல்லாததால், லெனின் பொது நூலகங்களை முடிந்தவரை விரைவாகவும் திறமையாகவும் மக்களுக்கு கல்வி கற்பதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகக் கருதினார். அவர்களால் மிகக் குறைந்த நேரத்தில் அதிக மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்றார். சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கும் கம்யூனிசத்திற்கு மாறுவதற்கும் ஒரு சோசலிச பொது நூலக சேவையின் வளர்ச்சி இன்றியமையாத நிபந்தனையாக இருந்தது. வெகுஜன கலாசார மட்டத்தை உயர்த்துவதில் முன்னணி சக்தியாக, முன்னணிப் படையாக, ஆசிரியராக நூலகங்கள் மாற வேண்டிய தேவை இருந்தது.

## பொதுக்கல்விக்கான திறவுகோலாக நூலகங்கள்:

நூலகம் தொடர்பான விடயங்களில் லெனினின் அறிக்கைகளைப் படிக்கும்போது, அவை எவ்வளவு முக்கியமானவை என்பதை உணரவியலும். 'நூலகம் தொடர்பான விடயங்கள் எப்போதுமே அவரது இதயத்திற்கு மிக அருகில் இருந்தன' என்று தனது நினைவுக் குறிப்புகளில் லெனினின் துணைவியார் என்.கே. க்ருப்ஸ்கயா குறிப்பிடுகிறார்.

லெனினின் கூற்றுப்படி, மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சியானது, தொழிலாள வர்க்கத்தின் சார்பாக புத்தகங்




கள், அறிவு மற்றும் தகவல்களை இலவசமாக அணுகுவதற்கான புறநிலை நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் பொது நூலகத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கியது. இந்த புதிய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளின் கீழ், பொது நூலகத்தின் பணிகளை மாற்றுவது சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் அமைந்தது.

சோசலிசப் புரட்சியைத் தொடர்ந்த காலப்பகுதியில், பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றம் வெகுஜனங்களின் அணுகுமுறையில் அதற்கேற்ப மாற்றத்தைக் கொண்டு வந்திருப்பதை லெனின் கவனித்தார். அவர்கள் படிக்கவும், கல்வி கற்கவும், புதியதை வளர்க்கவும் இன்னும் வலுவான விருப்பத்தை வளர்த்துக் கொண்டனர். இது ஒரு புதிய சோசலிச கலாசாரமாகும். புதிய பொது நூலகங்கள் கட்டப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே உள்ள நூலகங்களை மேம்படுத்த வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். அவரது இந்த வளர்ச்சிகளை அவதானித்த லெனின், பெருந்திரளான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடம் உள்ள அறிவுத் தாகம் அளப்பரியது, கல்வி மற்றும் நூலகங்களை நிறுவுவதற்கான முயற்சி வலிமையானது என்று குறிப்பிட்டார். புரட்சி நூலகங்களின் வளர்ச்சிக்கான புறநிலை மற்றும் அகநிலை ஆகிய இரண்டையும் உருவாக்கியது.

சோசலிச மாற்றம் 'அரசியல் மற்றும் சமூகப் புரட்சியை' சாத்தியமாக்கியிருந்தாலும், இது கம்யூனிசத்தை நோக்கிய வெற்றிகரமான மாற்றத்திற்கு உத்தரவாதம் என்று லெனின் நினைக்கவில்லை. அவர் தனது படைப்புகளில் விளக்கியது போல், வெகுஜனங்கள் தேவையான அரசியல் உணர்வை வளர்த்துக் கொள்ளவும், சோசலிச நோக்கத்திற்கான தங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும் தூண்டவும் படிப்பதற்கான நூல்களையும் கல்வியறிவு பெற்ற மக்களையும் கொண்டிருப்பது நல்லது. ஏனெனில் படிக்க எதுவும் இல்லை என்றால், சோசலிசத்தை நோக்கி முன்னேறும் நம்பிக்கை இல்லை. அதன்படி, ரஷ்யாவை முற்றிலும் சோசலிச நாடாக மாற்றுவதற்கு ஒரு 'கலாசாரப் புரட்சி' அவசியம் என்று லெனின் கருதினார்.

கல்வியறிவை வளர்ப்பதில் நூலகங்களின் பங்களிப்பு, வாசிப்பு எவ்வாறு சமூக மாற்றத்தை சாத்தியமாக்கும் ஆகியன தொடர்பில் இவ்வாறு லெனின் எழுதினார்:

'கல்வியறிவின்மையை ஒழிப்பது மட்டும் போதாது, சோவியத் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவசியம், அதற்காக கல்வியறிவு மட்டுமே நம்மை வெகுதூரம் கொண்டு செல்லாது. கலாசாரத்தை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்த வேண்டும். ஒரு மனிதன் தனது படிக்கும், எழுதும் திறனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் படிக்க ஏதாவது இருக்க வேண்டும், செய்தித்தாள்கள் மற்றும் பிரச்சார துண்டுப்பிரசுரங்கள் இருக்க வேண்டும், அவை முறையாக விநியோகிக்கப்பட வேண்டும் மற்றும் மக்களைச் சென்றடைய வேண்டும். நாம் அரசியல், கல்வி, கலாசாரத்தின் மட்டத்தை எப்படி வேண்டுமானாலும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தை இடைவிடாமல் பிரச்சாரம் செய்யவேண்டும். படிக்கும், எழுதும் திறன், கலாசார மட்டத்தை உயர்த்தும் நோக்கத்திற்காக செய்யப்பட வேண்டும், விவசாயிகள் தங்கள் பண்ணைகள் மற்றும் தேசத்தின் முன்னேற்றத்திற்காக எழுத படிக்கும் திறனைப் பயன்படுத்த வேண்டும்.'

சோவியத் ஒன்றியத்தில் நூலகக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து முக்கிய நபர்களும், சோவியத் அதிகாரத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே மக்களின் கல்வி, கலாசார மற்றும் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் மற்றும் வாசிப்பு ஆகியவற்றின் பணிகளை ஒழுங்கமைப்பதில் லெனின் மிகுந்த கவனம் செலுத்தினார் என்று வாதிடுகின்றனர். தொழி

லாளர்களுக்கு அரசியல் கல்வி, அறிவைப் பரப்புதல் மற்றும் மக்களின் கலாசார மற்றும் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துவதற்கான மிகப் பெரிய மற்றும் அணுகக்கூடிய மையங்களாக அவர் நூலகங்களைக் கருதினார் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். மிகவும் பொதுவாக, அவர் அவற்றை நாட்டின் கலாசார நிலையின் ஒரு குறிகாட்டியாகக் கருதினார்.

லெனினின் படைப்புகள், அறிக்கைகள், உரைகள், கட்சியினதும் மாநில அமைப்புகளினதும் குறிப்புகள், வரைவுத் தீர்மானங்கள் ஆகியன சோவியத் சோசலிச அமைப்பை மக்களுக்கான நூலக சேவைகளை உருவாக்குவதற்கான விரிவான திட்டத்தைக் கொண்டிருந்தன. இந்த ஆவணங்கள் அவற்றின் அமைப்பு மற்றும் மேம்பாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் தத்துவார்த்த மற்றும் நடைமுறை வழிகாட்டுதலை வழங்கின. 'பொதுக் கல்விக்காக என்ன செய்ய முடியும்' என்ற ஆவணத்தில், புரட்சிக்கு முந்தைய ரஷ்யா பற்றிய லெனினின் மார்க்சிச பகுப்பாய்வானது அக்காலப்பகுதியை இவ்வாறு விபரிக்கிறது:

'புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவில் நூற்றுக்கணக்கான சம்பிரதாயங்களையும் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கான தடைகளையும் கண்டுபிடித்து வைத்திருந்தார்கள். ஒரு டஜன் அரசு ஊழியர்களைக் கொண்ட ஒரு டஜன் குழுக்களால் விவாதிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட விதிமுறைகளை அடையாளம் கண்டார்கள். இவை சாதாரண மக்கள் நூல்களையும் நூலகங்களையும் நாடுவதைத் தடுத்தது. கூடுதலாக, நூறாயிரக்கணக்கான மற்றும் மில்லியன் கணக்கான நூற்தொகுதிகளைக் கொண்ட மிகப்பெரிய பொது நூலகங்கள் 'அறிஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற நிபுணர்களின் சங்கங்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன'. சோசலிசத்தின் கீழ், இது மாற வேண்டும்.'

பொது நூலகங்களை படிப்பறிவில்லாத கும்பலிடமிருந்து இன்னும் 'பாதுகாப்பது' அவசியம் என்ற நம்பிக்கையை அவர் நிராகரித்தார். இந்த பிரம்மாண்டமான, எல்லையில்லா நூலகங்கள் 'பொதுமக்களுக்கும், கூட்டத்துக்கும், கும்பலுக்கும்' கிடைக்க வேண்டும். சோவியத் அதிகாரம் குழந்தைகள் கூட பணக்கார சேகரிப்புகளைப் பயன்படுத்துவதைப் பார்க்க வேண்டும், வாசகர்கள் பொதுவான புத்தகங்களை வீட்டில் இருந்தபடியே படிக்கலாம். 'ரஷ்யாவில் உள்ள அனைத்து நூலகங்களும்' ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதன்மூலம் படிக்கத் தெரிந்தவர்களை திருப்திப்படுத்துவதற்கு போதுமான புத்தகங்கள் இருக்கும். அதேவேளை முடியாதவர்களுக்கு கற்பிக்கப் போதுமான வளங்களும் இருக்கும். இதை வெற்றிகரமாக சாத்தியமாக்க 'நூலகங்களின் உண்மையான ஒருங்கிணைந்த வலையமைப்பு' இருக்க வேண்டும் என்று லெனின் வாதிட்டார்.

சோசலிசப் புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே அவர் தேசக்கட்டுமானத்தில் நூலகங்களின் தவிர்க்கவியலாத பங்கை வலியுறுத்தினார். நூலகங்களின் உண்மையான ஒருங்கிணைந்த வலையமைப்பை உருவாக்குவதற்கான மிக முக்கியமான நிபந்தனையாக நான்கு விடயங்களை அவர் குறிப்பிட்டார்:

- கலாசார மற்றும் நூலக கட்டுமானத்தில் கட்சி மற்றும் அரசின் வழிகாட்டுதலின் கீழான விரிவான கொள்கை.
- கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் முன்னணிப் பாத்திரம் மற்றும் வழிநடத்தும் பங்கு.
- நூலகங்களின் விரிவான வலையமைப்பை உருவாக்குவதற்குத் தேவையான வளங்களை உறுதிசெய்தல்.
- நூலகப் புத்தகப் பங்குகளை பொதுப் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்வதற்கான நிதிகளை உறுதிப்படுத்தலும் பரவலாக்கலும்.

இந்த அடிப்படையில் நூலகங்களை அனைவருக்குமானதாக இருக்கும்படியான திட்டங்கள் வகுக்கப்பட்டன. வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் மையங்கள், புத்தகக் கடைகள், வாசக அறைகள், நூலகங்களும் அவற்றை ஒத்த நிறுவனங்கள் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட சோசலிச பாட்டாளி வர்க்கம் இந்த அனைத்து வேலைகளையும் கண்காணித்து, அதை முழுவதுமாக மேற்பார்வையிடுவதுடன் ஆரம்பம் முதல் இறுதி வரை, விதிவிலக்கு இல்லாமல், பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கை நீரோட்டத்தை அதில் புகுத்த வேண்டும். இதன் மூலம் அனைவருக்கும் வாசிப்பும் நூலகங்களும் சாத்தியப்படும்.

சோசலிச சமூகத்தின் பல்வேறு துறைகளை திறம்பட நிர்வகிப்பதற்கு வெகுஜனங்களுக்கு உயர் தொழில்நுட்ப அறிவும் அறிவியல் அறிவும் தேவை என்பதையும் அவை தொடர்பான விடயங்களைக் கற்றாலே அந்த அறிவைப் பெறமுடியும் என்பதையும் லெனின் உணர்ந்தார். அவர் சொன்னது போல், 'புத்திசாலித்தனம், நோக்கம் மற்றும் வெற்றியுடன் புரட்சியில் பங்கேற்க அறிவு தேவை. எனவே, சோசலிச மாற்றத்திற்கான அரச திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்களை இழுப்பதில் நூலகங்களின் பங்களிப்பு முக்கியமானது'. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தகவல்களைப் பரப்புதல், அத்துடன் மேம்பட்ட உற்பத்தி அனுபவத்தைப் பணிபுரிபவர்களிடையே பரப்புதல் போன்றவற்றில் நூலகங்களின் முதன்மையான பங்களிப்பு வலியுறுத்தப்பட்டது.

புரட்சியைத் தொடர்ந்து ரஷ்யா 'வறுமை நிலையில்' இருந்த போதும், லெனின், 'மக்களுக்கு 50,000 நூலகங்கள் மற்றும் வாசிகசாலைகள் மூலம், பரந்த அளவிலான கல்விப் பொருட்களை வழங்குவது' இன்றியமையாதது என்று வலியுறுத்தினார். முதலாவதாக, ஒவ்வொரு நூலகத்துக்கும் அரசுக்கு சொந்தமான தினசரி செய்தித்தாளின் பல பிரதிகளை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு நாளும் தீவிரமான மற்றும் மதிப்புமிக்க இலக்கிய விடயங்களையும் சிறந்த நவீன, பாரம்பரிய புனைகதைகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்ல முடியுமென்பதை அவர் குறிப்பிட்டார்.

இரண்டாவதாக, பொது நூலகங்கள் 'பொதுப் பாடங்கள்', 'உலகின் முக்கியமான செவ்விலக்கியங்கள், நவீன அறிவியல் மற்றும் பொறியியல் பற்றிய புத்தகங்கள்', 'விவசாயம் மற்றும் தொழிற்றுறை' போன்ற 'தேவையான அனைத்து பாடப் புத்தகங்களையும்' வழங்க வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார்.

மூன்றாவதாக, வெளிநாட்டு இராணுவத் தலையீடு மற்றும்

உள்நாட்டுப் போருக்குப் பிறகு, தேசியப் பொருளாதாரத்தின் மறுவாழ்வுக் காலத்தில், நூலகங்களின் பங்குகளை மேம்ப டுத்தவும், பொருளாதார மற்றும் மேலாண்மை நிறுவனங்க ளின் உற்பத்தி, கணக்குகள் மற்றும் அறிக்கைகள், அறிவி யல் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள் பற்றிய துண்டுப்பிர சுரங்களை வழங்கவும் லெனின் முறையாகப் பணியாற்றி னார். வெளியீடுகள் போன்ற ஆவணங்களின் நகல்களை ஒவ் வொரு நூலகத்திற்கும் வழங்குவதன் மூலம் மக்கள் தொகை யின் பரந்த மக்களுக்கு எடுத்துச்செல்லாம், இது 'பொருளா தார இயக்கத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் நம்பினார்.

அனைத்து நூலகங்களிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இலக்கியங்கள், உற்பத்தி தொடர்பான கேள்விகளைக் கையாளும் துண்டுப் பிரசுரங்கள், பொருளாதார நிறுவனங்க ளினதும் மாநாடுகளினதும் கணக்குகள் ஆகியவற்றின் முக்கி யத்துவத்தைக் குறிப்பிட்டு, லெனின் ஏப்ரல் 11, 1922-ல் இவ் வாறு எழுதினார்: 'இந்தச் செய்திகளை மக்கள் நூலகங்களில் சென்று வாசிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு மக் கள் வாசிக்காவிட்டால் இந்த அரைக் காட்டுமிராண்டித்தன மான நாட்டை பண்பாடும் சோசலிச நாடாக மாற்றுவது பற் றிப் பேசுவது பயனற்றது'.

நூலகங்கள் தாம் வைத்திருக்கும் புத்தகங்களை கட்டுப்ப டுத்த வேண்டும் என்ற கருத்தையும் லெனின் நிராகரித்தார். குறிப்பாக, சோசலிசத்திற்கு ஆதரவானவற்றை மட்டுமே வழங்க வேண்டும் என்ற கருத்தை அவர் எதிர்த்தார். எதிர்ப்பு ரட்சிகர முதலாளித்துவ சக்திகள் சோவியத் அரசை முற்று கையிட்டு அச்சுறுத்தியபோதும் லெனின் இந்த நிலைப் பாட்டை கடைப்பிடித்தார். மக்கள் அனைத்துக் கருத்துக்க ளையும் வாசிக்கவும் தெரிந்து கொள்ளவும் அதனடிப்படை யில் முடிவெடுக்கவும் தகுதியுடையவர்கள் என்று சொன்னார். எதிர் இலக்கியங்களையும் நூலகங்களில் அனுமதிக்க வேண் டும் என்று கோரினார்.

நூலகங்களின் சமூகத் தன்மை பற்றிய லெனினின் அறிக்கை கள், பரந்த மக்களைப் படிக்கப் பழக்கப்படுத்துதல், நூலகங் களில் தேவையான வசதிகளை உருவாக்குதல், பொது மக்க ளுக்கு நூலகங்களை அணுகக்கூடியதாக மாற்றுதல் மற்றும் நூலகத்தின் வடிவங்கள் மற்றும் முறைகளை ஜனநாயகப்ப டுத்துதல் ஆகியவற்றில் அவற்றின் செயற்பாட்டின் தரமான புதிய உள்ளடக்கத்தை தீர்மானித்தன. நூலகங்களின் பணி என்ன என்பது தொடர்பில் அவர் பின்வருமாறு எழுதினார்:

'பொது நூலகத்தின் பெருமையும் புகழும் அதில் உள்ள அபூர்வங்களின் எண்ணிக்கை, பதினாறாம் நூற்றாண்டு பதிப் புகள் அல்லது பத்தாம் நூற்றாண்டு கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக புத்தகங் கள் எந்த அளவிற்கு மக்களிடையே விநியோகிக்கப்படுகின் றன, புதிய வாசகர்களின் எண்ணிக்கை, வாசகர் தேடும் புத்த கம் எவ்வளவு விரைவாக அவரது கையைச் சேருகிறது, வீட் டில் படிக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை, வாசிப்பு மற்றும் நூலகத்தின் பயன்பாட்டிற்கு ஈர்க்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை போன்றவையே தீர்மானிக்கின்றன'

குறிப்பாக வீட்டில் வாசிப்பதன் முக்கியத்துவத்தை லெனின் வலியுறுத்தினார். ஏனெனில், சிலரே நூலகத்தைப் பார்வை யிட முடியும். வீட்டில் படிப்பதற்கான வாய்ப்புகள் பெருகும் போது அது சிந்தனையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும். எனவே நூலகக் கல்வித் துறையின் செயற்பாடு கள் வீட்டில் படிக்க வழங்கப்படும் புத்தகங்களின் எண்ணிக் கையைக் கொண்டு அளவிடப்பட வேண்டும். அவரது பார் வையில், இந்த அளவுகோல்களின்படி செயற்படும் ஒரு பொது நூலகம், வெகுஜனங்களின் எப்போதும் பெரிய பிரிவி னரை ஈர்க்கும் மற்றும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய் யும்.

லெனின் ஒவ்வொரு நூலகத்திலும் குழந்தைகளுக்கான சிறப்பு, மைய, வாசிப்பு அறை இருக்க வேண்டும் என்றும் 'நூலக அலுவலர்கள் குழந்தைகளின் வசதிக்காக எல்லாவற் றையும் செய்து அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்' என்றும் பரிந்துரைத்தார்.

பொது நூலகங்கள் பொதுமக்களிடம் நட்புடன் பழகும், அவர் களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். ஒரு நூலகர் தனிப்பட்ட விருப்பம் அல்லது தப்பெண்ணம் காரணமாக வாசகர்களைத் தவிர்த்தால் அவர்கள் தங்கள் வேலையில் தோல்வியடைகி றார்கள். குறிப்பாக, உழைக்கும் வாசகர்களையும், அவர்க ளின் குழந்தைகளையும் கீழ்நோக்கிக் குனிந்து பார்க்கும் நூலகர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று சொன்னார்.

அவரது பார்வையில், பொது அரச மற்றும் பிராந்திய நூலகங் களின் நிறுவனங்களையும் நூலகர்களின் எண்ணிக்கையை யும் அதிகரிப்பது கட்டாயமாக இருந்தது. 'நகரும் நூலகங் கள்' சரியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் சோசலிச நூலக சேவை தனது செல்வாக்கை அதிகரிக்க முடியும் என்று லெனின் நினைத்தார், ஏனெனில் இவை மிக அடிப்படையான கல்வி வசதிகள் கூட இல்லாத ரஷ்யாவின் தொலைதூர பகு திகளை அடைய முடியும். நீண்ட காலமாக, பொது நூலகத் தின் ஒரு கிளைகளை அனைத்து இடங்களிலும் அமைப்பதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். அவரது திட்டத்தின்படி ஒவ்வொரு குடிமகனும் வீட்டிலிருந்து நடந்து பத்து நிமிடங்க ளுக்குள் அடையக்கூடிய ஒரு கிளை நூலகம் உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் கிளை நூலகம் பொதுக் கல்விக்கான அனைத்து வகையான நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் மையமாக உள்ளது என்பதை அவர் தொடர்ச்சியாக வலியு றுத்தினார்.

நூலகக் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் 'புத்தகங்கள் பயன்ப டுத்தப்படுவதையும் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்வ தும், வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கக்கூடிய புத்தகங் களை பெற்றுக் கொள்வதை இலகுவாக்குவதும் முக்கியமான பணிகளாக இருந்தன. ஆனால் இத்தோடு கிளை நூலகங் கள் மாலை நேர விரிவுரைகள், பொதுக் கூட்டங்கள் மற்றும் பகுத்தறிவு நிகழ்வுகள் என்பவற்றுக்கும் உரியனவாக இருந் தன. அதேவேளை நூலகங்கள் பொழுதுபோக்கிற்கான இட மாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப் பட்டது. பொது நூலகத்தை வெகுஜனங்களுக்கு ஒரு சமூக மையமாகவும், தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு வகையான இரண்டாவது இல்லமாகவும் படிப்படியாக மாற்றுவது லெனி

னின் நோக்கமாக இருந்தது. மௌனமாக வாசிக்கும் இடமாக மட்டுமின்றி, 'எல்லா விதமான' சமூக, கல்விச் செயற்பாடுகளுக்கும் இடமளிக்கும் இடமாகவும் அது செயற்பட்டது. உழைக்கும் ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சந்திக்கவும், பேசவும், விவாதிக்கவும், தங்கள் விவகாரங்களை ஒழுங்கமைக்கவும் ஒரு இடத்தை வழங்க வேண்டும். அவரது பார்வையில், சிறந்த பொது நூலகங்கள் தொழிலாளர்கள் கோரும் செயற்பாடுகளை எளிதாக்குகின்றன.

உழைக்கும் மக்களிடையே வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்ற லெனினின் கோரிக்கைகளும் 'புத்தகம் படிக்கும் பழக்கத்தைப் பெற மக்களுக்கு போதிய பயிற்சி அளிக்க வேண்டும்', 'படிக்க ஆட்கள் இருக்க வேண்டும், படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும்' என்ற அரசின் நிலையான அக்கறையும் சோவியத் ஒன்றியத்தின் பணிபுரியும் நூலக சேவைகளின் உருவாக்கத்தைக் கொள்கையளவில் பாதித்தன.

முழு மக்களும் வாசிப்பதை ஒழுங்கமைத்தல், புத்தகங்களை அனைவருக்கும் சென்றடையச் செய்தல் ஆகிய இரண்டும் சோவியத் நூலகத்தின் ஒரு தனித்துவமான அம்சமாக, ஒரு புதிய, சோசலிச வகை நூலகமாக மாறியது. லெனினின் அறிவுறுத்தல்களால் வழிநடத்தப்பட்டு, சோவியத் நூலக அறிவியல் என்பது வாசிப்பின் கருத்தியல் உள்ளடக்கத்தின் சிக்கல்களை முன்னிலைக்குக் கொண்டு வந்தது. நூலகப் பணியை நாட்டை முன்னேற்றும் நோக்கமுள்ள செயல்முறையாகக் கருதியது. நூலகங்கள் கல்வியையும் கலாசாரத்தையும் உயர்த்துவதற்கான சக்திவாய்ந்த கருவியாகவும் உழைக்கும் மக்களின் தொழில்நுட்ப நிலையை மேம்படுத்தும் மையமாகவும் உருமாறின.

லெனின், சோசலிச பொது நூலகங்கள் ஒருபோதும் தங்களுடைய புகழ்ச்சியில் ஓய்வெடுக்கக் கூடாது என்றும், உழைக்கும் மக்களுக்குச் சிறந்த சேவையைச் செய்வதாக முடிவெடுக்கக் கூடாது என்றும் கூறினார். அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் சுயகல்வி மற்றும் தன்னிலை உணர்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதாக அவர்கள் ஒருபோதும் நம்பக்கூடாது. அவர்களின் சேவைகளை மேம்படுத்த தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். இதை உறுதி செய்வதற்கான முக்கிய வழிகளில் ஒன்று நூலகங்களுக்கு இடையேயான போட்டியை ஊக்குவிப்பதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நூலகங்கள், படிப்பகங்கள் குடிசைகள், முதலியன உட்பட, தனிப்பட்ட மாகாண நூலகங்கள், குழுக்கள், வாசிகசாலைகள் போன்றவற்றுக்கு இடையே போட்டி தேவைப்படுகிறது. இதற்காக நியமிக்கப்பட்ட மக்கள் ஆணையர்கள், மூன்று நோக்கங்களுக்காக பணியாற்ற வேண்டும்:

- சோவியத் அரசாங்கம் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் என்ன நடக்கிறது என்பது பற்றிய உண்மையான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குதல்.
- நூலகப் பணிகளில் பொதுமக்களை ஈடுபடுத்துதல்.
- நூலக ஊழியர்களிடையே போட்டியை ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள 'மூன்று நோக்கங்கள்' அதிகம் கவனம் செலுத்த வேண்டியவை. பொது நூலகங்கள் அவற்றின் செயல்பாடுகள் அனைத்திலும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்ற லெனினின் நம்பிக்கையை முதல் புள்ளி வெளிப்படுத்துகிறது. அவர்கள் திட்டமிட்டிருந்த எந்த முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்கும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கட்சி, மாநிலம் மற்றும் வெகுஜனங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அரசாங்கமும் வெகுஜனங்களும் தங்கள் அமைப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் அணுகியதால், நூலகங்கள் திறம்பட செயற்படவும், அவற்றின் நோக்கம் கொண்ட செயற்பாட்டை நிறைவேற்றவும் ஊக்குவிக்கப்பட்டன. இந் நடவடிக்கையானது நூலகங்கள் மக்களுக்குப் பொறுப்பாக இருப்பதை உறுதி செய்தது. கட்சியோ, அரசாங்கமோ அல்லது வெகுஜனமோ நூலகத்தின் பணியின் ஒரு அம்சத்தையோ மாற்றத்தையோ விரும்பவில்லை என்றால் தங்கள் கட்டுப்பாட்டு அதி




காரத்தைப் பயன்படுத்தி சிக்கலைத் தீர்க்க நூலகத்திற்கு அறிவுறுத்தலாம்.

இரண்டாவது நோக்கம், 'பொதுமக்களை நூலகப் பணியில் சேர்ப்பது' என்பது, லெனினின் சோசலிச ஜனநாயகத்தின் கருத்தாக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாகும், இது சமூகத்தின் நிர்வாகத்தில் பரந்த வெகுஜனங்களின் பங்களிப்பை அதிகரிக்க முயன்றது. அதன் மூலம் ஆட்சியாளர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான வேறுபாடு படிப்படியாக ஒழிக்கப்படும். பொது நூலகங்களின் மேலாண்மை, அமைப்பு மற்றும் மேம்பாட்டில் தொழிலாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கு கொள்கின்றனர். காலப்போக்கில் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டதால், இது நூலக ஊழியர்களுக்கும் வெகுஜனங்களுக்கும் இடையிலான வேலைப் பிரிவைக் குறைக்கும். மிகவும் பொதுவாக, இந்த வளர்ச்சியானது சோசலிச ஜனநாயகத்தின் நீண்ட கால இலக்கிற்கு பங்களிக்கும்.

மூன்றாவது நோக்கம், நூலக ஊழியர்களிடையே தோழமைப் போட்டியை ஊக்குவிப்பது, மக்களுக்குச் சிறந்த சேவையை உருவாக்க பாடுபட்டது. நூலக அமைப்பு மற்றும் சேவை வழங்கலின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒருவருக்கொருவர் போட்டியிடுவதன் மூலம், ஊழியர்கள் தங்கள் பணிகளை

மிகச் சிறந்த முறையில் செயற்படுத்த முயற்சிப்பார்கள். இது தொழிலாளர்கள் வெகுஜனங்களுக்கு எதிரான அவர்களின் அணுகுமுறையில் சோம்பேறிகளாகவோ, மனநிறைவோடு அல்லது தோழமையற்றவர்களாக மாறுவதற்கான வாய்ப்பைக் குறைப்பது மட்டுமல்லாமல், பொது நூலகத்தின் அடிப்படை நோக்கங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அல்லது நாசப்படுத்துவதற்கான சாத்தியமான முயற்சிகளுக்கு எதிராகவும் இது பாதுகாக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுடன் கூடுதலாக, பொது நூலகங்கள் பின்வரும் அளவுகோல்களின் நிறைவேற்றத்தை அளவிடுவதன் மூலம் அவற்றின் செயல்திறனை புறநிலையாக மதிப்பிடலாம் என்று லெனின் பரிந்துரைத்தார்:

- உங்கள் நூலகத்திலிருந்து அதிகமான புத்தகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்க துல்லியமான தகவலை வழங்க முடியுமா ?
- உங்கள் வாசிப்பு அறைக்கு எத்தனை பேர் வருகிறார்கள் ?
- மற்ற நூலகங்கள், வாசகசாலைகள் போன்றவற்றுடன் புத்தகம், செய்தித்தாள் பரிமாற்றம் இருக்கிறதா ?
- மையப் பட்டியலின் தொகுப்பு முழுமையானதா ?
- ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்ய முடியுமா ?
- மாலை நேரங்களில் வேலை செய்ய முடியுமா ?
- புதிய வாசகர்கள், பெண்கள், குழந்தைகள், ரஷ்யர்கள் அல்லாதவர்கள் போன்றவர்களை எவ்வாறு ஊக்குவிப்பது ?
- வாசகர்களின் குறிப்புகளின் திருப்தி உண்டா ?
- புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்களை சேமிப்பதற்கான எளிய மற்றும் நடைமுறை வழிமுறைகள் என்ன ?
- புத்தகத்தைப் பெற்று அதன் இடத்திற்குத் திரும்புவதற்கான பொறிமுறை என்ன ?
- ஒரு புத்தகத்தை கடன் கொடுப்பதா இல்லையா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது ?
- ஒரு புத்தகத்தை கடன் கொடுப்பதில் உத்தரவாதங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளனவா ?
- தபால் மூலம் இரவல் தரப்படும் புத்தகங்களை அனுப்புவதா ?

சோவியத் அரசாங்கத்தின் தலைவராக லெனின் மக்களுக்கான நூலக சேவையை மறுசீரமைப்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். அவர் வகுத்த திட்டம் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக புத்தகப் பங்குகளின் விநியோகம், பயன்பாட்டை மறுசீரமைத்தல் போன்றவற்றுக்கும் முழு நூலக அமைப்பையும் திட்டமிட்டு ஒழுங்கமைக்கவும் திட்டமிடப்பட்டது. ரஷ்யா மற்றும் பிற நாடுகளில் உள்ள நூலக அமைப்பின் நிலை மற்றும் அதன் வளர்ச்சியின் முக்கிய போக்குகள் பற்றிய விரிவான அறிவின் அடிப்படையில், லெனின் மக்களுக்கு நூலக சேவைக்கான ஒரு சோசலிச அமைப்பின் கொள்கைகளை வகுத்தார். அவர் கூறியது போல:

‘இந்த அமைப்பு ஒரு திட்டவட்டமான திட்டத்தின்படி செயற்பட வேண்டும், அடிப்படை வகை நூலகங்களைத் தீர்மானிக்க வேண்டும், நகரும் நூலகங்கள் மூலம் அவற்றை இணைக்க வேண்டும், நூலகங்களுக்கு இடையே புத்தகப் பரிமாற்றத்தை ஒழுங்கமைக்க வேண்டும், இதனால் புத்தகங்களை தொழிலாளி மற்றும் விவசாயிகளுக்கு நெருக்கமாக கொண்டுவர வேண்டும்.’

லெனினின் முன்முயற்சியின் பேரில் சோவியத் அரசாங்கம் சோசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் நூலக நடைமுறையை தீவிரமாக மறுசீரமைக்கும் நோக்கில் பல தீர்மானங்களையும் ஆணைகளையும் ஏற்றுக்கொண்டது. நூலக நிர்வாகத்தை மையப்படுத்துவதற்கும், அனைத்து நூலகங்களையும் நாடு தழுவிய அமைப்பில் ஒன்றிணைப்பதற்கும், இணையான, நகல் மற்றும் துறைசார் விலகலை நீக்குவதற்கும் லெனின் பெரும் முக்கியத்துவத்தை அளித்தார். நாடு முழுவதும் உள்ள நூலகங்களின் பகுத்தறிவு விநியோகத்தையும், ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பின் கொள்கைகளின் அடிப்படையில் அவற்றின் ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றோடொன்று செயற்படுவதையும் முன்னறிவிக்கும் விஞ்ஞான ரீதியாக வளர்ந்த தேசியத் திட்டத்தின் அடிப்படையில் சோவியத் நூலக அமைப்பை ஒழுங்கமைக்கும் செயல்முறையை நனவான மாற்றும் நோக்கத்துடன் நிர்வகிக்க லெனின் வலியுறுத்தினார். அப்போதுதான் உழைக்கும் மக்களை விரைவாக வாசிக்கும் பழக்கத்திற்கு கொண்டு வர நூலகங்கள் தீவிரமாகப் பங்களிக்க முடியும் என்று சொன்னார்.

தனியார் நூலகங்களையும் புத்தக இருப்புக்களையும் ஒழிப்பது மையப்படுத்துதல் செயல்முறையின் முக்கிய பகுதியாகும். நாட்டில் புத்தகங்களின் பொதுவான பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, லெனின் தனிப்பட்ட சேகரிப்பை பராமரிப்பதில் சிறிய நியாயத்தைக் கண்டார். அவரது பார்வையில், புத்தகங்களைப் பலர் அணுக வேண்டுமானால், அவர்கள் பொது நூலகங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

புத்தகங்களும் செய்தித்தாள்களும் நூலகங்கள் மற்றும் வாசிகசாலைகளுக்கு மட்டுமே இலவசமாக விநியோகிக்கப்படுவதை ஒரு முறையாக்கினார். இது முழு நாட்டிற்கும் மற்றும் ஒட்டுமொத்த தொழிலாளர்கள், வீரர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் இலவச வாசிப்பு சேவையை வழங்குகிறது. இது மக்களின் அறிவிற்கான ஆர்வமான தேடலை விரைவுபடுத்தும், தீவிரப்படுத்தும் மற்றும் மிகவும் பயனுள்ளதாக மாற்றமாக இருந்தது.

முதலாளித்துவ வர்க்கங்கள் தனியார் உடைமையின் புனிதத்தலத்தில் வழிபடும் முதலாளித்துவ சமூகத்தில் ‘தனியார்’ புத்தகத் தொகுப்புகள் அர்த்தமுள்ளதாக இருப்பதை லெனின் அங்கீகரித்த அதே வேளையில், அவை சோசலிசத்தின் பொருளாதார அடிப்படை மற்றும் சமூக நெறிமுறைகளுடன் பொருந்தாது என்று வாதிட்டார். புதிய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளின் கீழ், முழு சமூகத்தினரிடையேயும் கல்வி வளங்களைப் பகிர்ந்து கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எனவே, லெனின் தனது 1920-ம் ஆண்டு ‘புத்தகங்களையும் பிற அச்சிடப்பட்ட பொருட்களையும் தேசியமயமாக்கல் பற்றிய மக்கள் ஆணையில்’ தனியார் நூலகங்களும் தனியாருக்குச் சொந்தமான புத்தகங்களும் இப்போது அரசுக்குச் சொந்தமானது என்று அறிவித்தார். இந்த நடவடிக்கையின் நோக்கம் பொது நூலகங்களுக்கு அதிகமான புத்தகங்களை வழங்குவதாகும். இந்த ஆணையின்படி,

‘தனியார், தனிநபர்கள், கூட்டுறவு, பிற நிறுவனங்களுக்கு

சொந்தமான அனைத்து புத்தகங்களும் பிற அச்சிடப்பட்ட பொருட்களும் சோவியத்துகளால் நகராட்சி மயமாக்கப்பட்டவையும் அரசு சொத்தாக அறிவிக்கப்படுகின்றன (தேசியமயமாக்கப்பட்டன). புத்தகங்களினதும் கூட்டுறவு நிறுவனங்களினதும் உரிமையாளர்கள் புத்தகங்களையோ பிற அச்சிடப்பட்ட பொருட்களையோ மறைத்து வைத்திருந்தால் குற்றவாளிகள் என்று கருதப்பட்டு வழக்கு தொடரப்படும்'

லெனின் தனியார் புத்தக உரிமையிலிருந்து பொது உடைமைக்கு மாறுவதை முடிந்தவரை அமைதியாகவும் தன்னார்வ அடிப்படையில் நடப்பதாகவும் கொண்டுசெல்ல விரும்பினார். அனைத்து முன்னாள் தனியார் நூலகங்களின் முன்னாள் உரிமையாளர்கள் - முன்னாள் முதலாளித்துவ மற்றும் சமூகத்தின் செல்வந்தர்கள் - பெரிய வரலாற்று, அறிவியல் அல்லது இலக்கிய ஆர்வத்தை முன்வைக்கும் அனைத்து புத்தகங்களையும் ஒப்படைத்து அவற்றை பொதுமக்களின் அணுக்கத்தில் சிறப்புச் சேகரங்களாக பேணுமாறு கேட்டுக் கொண்டார். அதேநேரம் இந்த முன்னாள் உரிமையாளர்கள் இதனை ஏற்றுக்கொள்ளாதபோது அவர்களின் தனிப்பட்ட புத்தக சேகரிப்புகளை கைப்பற்றுவதற்கு சோவியத் அரசை ஊக்குவித்தார். இதன்மூலம் அவற்றைப் பொதுமக்களின் அணுக்கத்திற்குக் கொண்டுவரலாம் என்று அவர் எண்ணினார்.

சோசலிசப் புரட்சிக்கு ஒரு மாதத்திற்குப் பிறகு அவர் எழுதிய 'பெட்ரோகிராடில் உள்ள பொது நூலகத்தின் பணிகள்' என்ற கட்டுரையில் சில மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக சுவிட்சர்லாந்தில் நீண்டகாலமாக நடைமுறையில் உள்ள கொள்கைகளின் அடிப்படையில் பின்வரும் மாற்றங்கள் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் செய்யப்பட வேண்டும் என்று கோரினார்:

- பொது நூலகம் (முன்னாள் இம்பீரியல் நூலகம்) பெட்ரோகிராட் மற்றும் மாகாணங்களில் உள்ள அனைத்து பொது மற்றும் மாநில நூலகங்களுடனும், வெளிநாட்டு நூலகங்களுடனும் (பின்லாந்து, ஸ்வீடன், முதலியன) உடனடியாக புத்தகப் பரிமாற்றத்தைத் தொடங்க வேண்டும்.
- புத்தகங்களை ஒரு நூலகத்திலிருந்து மற்றொரு நூலகத்திற்கு அனுப்புவது சட்டப்படி இலவசமாக செய்யப்பட வேண்டும்.
- ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களைத் தவிர்த்து தினசரி, காலை 8.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை நூலகத்தின் வாசிகசாலை திறந்திருக்க வேண்டும்.

லெனினது சிந்தனையின் இரண்டு அம்சங்கள் இன்றைய நூலகங்களின் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கு மிகவும் பொருத்தமானவை. முதலாவதாக, நூலகங்கள் 'வர்க்கம் சாராதவை' என்ற கட்டுக்கதையை லெனின் நிராகரிக்கிறார். நூலகம் எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத் தன்மையைக் கொண்டிருந்தது, எப்பொழுதும் கொண்டிருக்கும் என்பதே அவரது முக்கிய செய்தியாகும். இரண்டாவதாக, நூலகங்கள் சமூகம் சாராதவையாக, தனிநபர்கள் தனித்தனியாகவும் மௌனமாகவும் புத்தகங்களைப் படிக்கும் 'இடமாக மட்டுமே செயற்பட வேண்டும் என்ற தவறான கருத்தையும் லெனின் நிராகரிக்கிறார். அவர்களால் இதைவிட அதிகமாக செய்ய முடியும், செய்ய வேண்டும் என்பதை அவர் சரியாக அங்கீகரிக்கிறார். தகவல்களையும் அறிவையும் வழங்குவதைத் தவிர, நூலகங்கள் மிகவும் தேவைப்படுபவர்களுக்கு - உழைக்கும் வெகுஜனங்களுக்கு - சமூகமயமாக்கலுக்கும், கலந்துரையாடுவதற்கும் கலாசாரத்தை வளப்படுத்துவதற்கும் ஆன ஓரிடத்தை உருவாக்க வேண்டும். இதைச் செய்வதன் மூலம், நூலகங்கள் உழைக்கும் வர்க்கத்தின் சுயகல்வி, சுயவிடுதலை, சுயநிர்வாகம் ஆகியவற்றை அடைதற்கான ஆதார வளங்களை வழங்கமுடியும்.

## சோவியத் நூலகக் கட்டமைப்பில் க்ருப்ஸ்கயாவின் பங்கு:

சோவியத் நூலகக் கட்டமைப்பை உருவாக்குவதில் முக்கியமான பங்களிப்பு க்ருப்ஸ்கயாவினுடையது. கல்விக்கான மக்கள் ஆணையத்தின் துணைத்தலைவராக அவர் நூலகங்களை வழிநடத்தி ஒழுங்கமைப்பதில் பிரதான பாத்திரமேற்றார். ரஷ்யாவின் சிதறிய, ஒழுங்கமைக்கப்படாத, பெரும்பாலும் தனியார் நூலகங்களை மையப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட பொது நூலக அமைப்பாக மாற்றுவது முதலாளித்துவத்திலிருந்து சோசலிச பொது நூலகங்களுக்கு மாறியதன் ஒரு அம்சம் மட்டுமே. இரண்டாவது மாற்றம் நூலகர்களின் தன்மை மற்றும் பங்கு பற்றியது. மாற்றத்தின் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொது நூலகக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம், அவர்களின் உள் அமைப்பு, பணியாளர்கள் மற்றும் நூலகர்-புரவலர் உறவுகளில் மாற்றத்தைக் கோரியது.

சோவியத் யூனியன் 'ஒரு புதிய வகை நூலகத்தை' நிறுவ வேண்டியிருந்தது, அவர் 'உண்மையான கல்விப் பணியாளர்' மட்டுமல்ல, 'பிரதம கல்விப் பணியாளர்'. நூலகர்கள் 'மக்களை அறிவியல் மற்றும் கலாசாரத்துடன் இணைக்கும் அவசியமான இணைப்பாக' இருக்க வேண்டியிருந்தது. இது மற்றொரு பெரிய பணியாக இருந்தது. அக்டோபர் புரட்சிக்கு முன்னர், ரஷ்யாவின் நூலகர்களில் பலர் ஜார் ஆட்சி மற்றும் முதலாளித்துவத்தை ஆதரித்த பிற்போக்குவாதிகள். அவர்கள் பொதுவாக உழைக்கும் மக்களை அவமதிப்புடனும் வெறுப்புடனும் நடத்தினார்கள். எனவே, கல்விக்கான மக்கள் ஆணையத்தின் வசம் வைக்கப்பட்டு, பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெற்ற நூலகங்களின் முன்னாள் உரிமையாளர்களை, ஒரு பொது விதியாக நூலக நிர்வாகத்திலிருந்து நீக்குவது அவசியம் என்று லெனின் வாதிட்டார். பழைய பிற்போக்கு நூலகப் பணியாளர்களுக்குப் பதிலாக கல்வி அமைச்சின் புதிய பணியாளர்கள் தேவைப்பட்டனர். இந்த பணியாளர்கள் சோவியத் அரசினாலும் கட்சியாலும் பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், அவர்களின் சோசலிசம் மீதான சார்புத்தன்மையும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் நூலகர்களின் புதியபடை தேவை என்பதால், லெனின் ஒரு அனுபவமிக்க நூலகப் பணியாளரின் செயன்முறை ரீதியிலான வழிகாட்டுதலின் கீழ் பயிற்சியாளர்களுக்கான நிரந்தரப் பள்ளியை உருவாக்க முன்மொழிந்தார்.

சோசலிச பொது நூலகர்களின் பண்புகள், அணுகுமுறை, பணி நெறிமுறை, வகிபாகம் ஆகியவற்றில் க்ருப்ஸ்கயா குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தினார். ஓர் உண்மையான சோவியத் அமைப்பை உருவாக்குவதற்கு அவர்கள் தங்

களை அர்ப்பணிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார். அவர்களின் வாசகர்களை அறிந்து கொள்வதோடு அவர்களுக்கு ஒரு சேவை என்றளவில் நின்றுவிடாது சோசலிச சமுதாயத்தில் எதிர்பார்க்கப்படும் சேவையை வழங்கவும் முன்வரவேண்டும் என்றும் கோரினார்.

நூலகர்கள் அரசியல் மயக்கத்தில் இருக்க முடியாது என்று க்ருப்ஸ்கயா வலியுறுத்தினார். அவர்கள் அரசியல் ரீதியாக 'நடுநிலை' என்று காட்டிக்கொள்ள முனைய வேண்டிய அவசியமில்லை என்றார். அவர்கள் தொழிலில் பணியாற்றுவதற்கு முன்நிபந்தனையாக 'அடிப்படை மார்க்சியம்-லெனினிசத்தை அறிந்து கொள்ள வேண்டும்' என்று சொன்னார். பொது நூலகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்களை க்ருப்ஸ்கயா மேற்பார்வையிட்டார். நூலகக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவது, நூல்களை அனைத்து நூலகங்களுக்கும் கிடைக்கச் செய்வது உள்ளிட்ட முக்கியமான பணிகளை அவர் மேற்கொண்டார்.

1924-ல் லெனினின் மரணத்திற்குப் பிறகு, சோவியத் சோசலிச பொது நூலகங்களைத் தொடர்ந்து நிர்மாணிப்பதற்கான தத்துவார்த்த அடிப்படையாகக் கட்சியும் அரசும் அவரது கருத்துக்களைப் பயன்படுத்தின. டிசம்பர் 1936-ல், க்ருப்ஸ்கயா நூலக அறிவியல் மற்றும் நூலியல் பற்றிய தத்துவார்த்த கேள்விகள் குறித்து அனைத்து யூனியன் மாநாட்டில் ஓர் அறிமுக உரையை வழங்கினார். அவர் தனது தொடக்கக் குறிப்புகளில், 'நமது கலாசார முன்னணியின் நூலகத் துறையிலும் நூலக விஷயங்களிலும் எப்போதும் மிகுந்த அக்கறை காட்டிய விளாடிமிர் இலிச்சின் விரிவான அறிவுறுத்தல்களால் எங்கள் பணி மிகவும் எளிதாகிவிட்டது' என்று கூறினார். கட்சி அனைத்து முயற்சிகளையும் செய்கிறது. நாம் லெனினின் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்த வேண்டும். 1920-களோடு ஒப்பிடும் போது கலாசார அணிதிரட்டலுக்கான முன்னணிப் படையாக நூலகங்கள் இப்போது திகழுகின்றன. இதை நாம் இன்னும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் நூலக நிர்வாகத்தில் மேலும் முன்னேற்றங்கள் தேவை என்பதையும் வலியுத்தினார். தனது மறைவு வரை சோவியத் நூலகங்களை மேம்படுத்த அளப்பரிய பங்கை அவர் வழங்கினார்.

## நிறைவுக் குறிப்புகள்:

சோசலிச பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரம் மெதுமெதுவாக உயர்ந்ததால், பொது நூலக வலையமைப்பும் சேர்ந்து வளர்ந்தது. இதில் ஸ்டாலினின் பங்களிப்பு முதன்மையானது. பல்வேறு அறிவியல், தொழில்நுட்ப துறைகளில் வெகுஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதன் மூலம் அவர்கள் தொழில்மயமாக்கல் மற்றும் கூட்டுறவுமயமாக்கலுக்கு அதிக பங்களிப்பை வழங்கினர். பொது நூலகங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் அரசாங்கம் அதிக முதலீடு செய்தது. 1989 வாக்கில், சோவியத் யூனியனில் 5.6 பில்லியன் புத்தகங்களுடன் 360,000 நூலகங்கள் இருந்தன, இவை அனைத்தும் நவீன நிறுவன அமைப்பைக் கொண்டிருந்தன. 90 சதவீத நூலகங்கள் அரசுக்குச் சொந்தமானதாகவும் அரசால் நடத்தப்படுவதாயும் இருந்தன. மற்ற 10 சதவீதத்தைப் பொது அமைப்புகள் பராமரித்தன. வாசகர்களின் எண்ணிக்கை 234 மில்லியனை எட்டியது.

நகரங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிப்பதற்காக, கிராமப்புற நூலக வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கு அரசு குறிப்பிடத்தக்க வளங்களை அர்ப்பணித்தது. 1925-க்கும் 1930-க்கும் இடையில், அதிகளவில் புத்தகத் தட்டுப்பாடு நிலவிய கிராமப்புறங்களை மையமாகக் கொண்ட 'நூலக இயக்கத்தை' அது துவக்கியது. மக்கள் இதில் அமோக ஆதரவுடன் பங்கேற்றனர். தொழிற்சாலைத் தொழிலாளர்களும் அறிவுஜீவிகளும் மாணவர்களும் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் தங்கள் சொந்த புத்தகங்களை நன்கொடையாக வழங்கி கிராமப் பொது நூலகங்களை நிறுவினர். ஒவ்வொரு புதிய நூலகத்தின் திறப்பும் மக்கள் மத்தியில் கொண்டாட்டகரமானதாக இருந்தது. நூலக இயக்கம் அமோக வெற்றி பெற்றது. 1972 வாக்கில், நாட்டின் பொது நூலகங்களில் 75 சதவீதம் கிராமப்புறங்களில் இருந்தன. ஒவ்வொரு 2000 நகர்ப்புற குடிமக்களுக்கும் ஒவ்வொரு 1500 கிராமப்புற குடிமக்களுக்கும் ஒரு நூலகம் இருந்தது. 100 பேருக்கு 537 புத்தகங்கள் இருந்தன. ஜாரிசத்தின் கீழ் 3 மில்லியனாக இருந்த வாசகர்களின் எண்ணிக்கை 180 மில்லியனாக அதிகரித்தது. 90 சதவீதத்திற்கும் அதிகமான தொழிற்சாலை தொழிலாளர்கள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மற்றும் தொழிற்கல்வி மாணவர்கள் பொது நூலகங்களைப் பயன்படுத்தினர்.

ஜாரிசத்தின் கீழ், பேரினவாத ரஷ்யப் பேரரசு அதன் எல்லைக்குள் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளையும் தேசிய இனங்களையும் இரக்கமற்ற 'ரஷ்யமயமாக்கல்' செய்ய முனைந்தது. அதற்கான கலாசார ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை அவர்கள் மீது சுமத்தி ஒடுக்கியது. சோவியத் யூனியன் இந்த நாடுகளை ஒரு நாட்டின் கீழ் ஒன்றிணைத்ததுடன் பல்வேறு தேசிய கலாசாரங்களின் இணக்கமான வளர்ச்சியை மேற்பார்வையிடும் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தியது. சோவியத் அரசு பல்வேறு நாட்டினருக்கு அவர்களின் சொந்த மொழிகளில் புத்தகங்களைக் கொண்ட நூலகங்களை வழங்கியது. ஜாரிஸ காலத்திற்கு மாறாக, ரஷ்யாவில் நூலகங்கள் மையப்படுத்தப்பட்டபோது, சோசலிச அரசு தேசிய குடியரசுகளில் நூலகங்களைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்தது.

உதாரணமாக, புரட்சிக்கு முன்னர் தஜிகிஸ்தானில் நூலகங்களோ அவர்கள் தாய்மொழியில் புத்தகங்கள் அல்லது பத்திரிகைகளோ இருக்கவில்லை. 1972 வாக்கில் இந்தக் குடியரசில் 3000 நூலகங்கள் இருந்தன. புரட்சிக்கு முன், தொலைதூர சுகோட்கா தீபகற்பத்தில் படிக்க எதுவும் இல்லை, பூர்வீகவாசிகளுக்கு எழுத்து மொழி இல்லாததால் படிக்கக்கூடியவர்கள் யாரும் இல்லை. 1972 வாக்கில், ஒவ்வொரு கிராமத்திற்கும் அதன் சொந்த நூலகம் இருந்ததுடன் பல்வேறு தேசிய சிறுபான்மையினர் தங்கள் சொந்த தேசிய இலக்கியத்தை உருவாக்கினர். சன் பள்ளத்தாக்கில், பிராந்தியத்தின் பூர்வீக மக்களின் வரலாறு, இலக்கியம் மற்றும் தயாரிப்பு பற்றிய வெளியீடுகளைக் கொண்ட பொது நூலகங்கள் கட்டப்பட்டன. புத்தகங்கள், எலும்பு செதுக்குதல், எம்பிராய்டரி மற்றும் பிற உள்ளூர் கைவினைப் பொருட்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்திய கலாசார நிகழ்வுகளுக்கு இந்த நூலகங்கள் நிதியளித்தன. அவர்கள் பிராந்தியத்தின் பழங்குடியினரின் பேச்சு வழக்குகள் மற்றும் உள்ளூர் நாட்டுப்புற வரலாறு பற்றிய பேச்சுக்களை ஏற்பாடு செய்தனர். நூலகங்கள் பூர்வீக மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு இயக்கப்பட்ட நிகழ்வுகளை நடத்தின. இந்த நிகழ்வுகளில் உள்ளூர் கவிஞர்கள் மற்றும் கதைசொல்

லிகள் முக்கிய பங்கு வகித்தனர்.

புரட்சிக்கு முன்னர், வடக்கு காகசஸின் மலையக மக்கள் கல்வியறிவற்றவர்களாகவும், எழுத்து மொழி இல்லாதவர்களாகவும் இருந்தனர். அவர்களின் கலாசார வளர்ச்சியைத் தடுக்க ஜாரிஸ்ட் அரசாங்கம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தது. பொது நூலகங்களை கட்டுவதற்கான குடியிருப்பாளர்களின் கோரிக்கைகளை அதிகாரிகள் மறுத்தனர். 1972-ம் ஆண்டளவில் இப்பகுதியில் 20 நூலகங்கள் இருந்தன. அவை 80-க்கும் மேற்பட்ட சோவியத் விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பிற குறிப்பிடத்தக்கவர்களை உருவாக்கியது.

லெனினின் மரணத்திற்குப் பிறகு, சோவியத் சோசலிச நூலகங்கள் பொருளாதாரம், கலாசாரம், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் முன்னேற்றத்தை ஊக்குவித்து வந்தன. மனிதாபிமான இலட்சியங்கள், மனித உரிமைகள், இன்னும் நீடித்த அமைதி மற்றும் நீதிக்காக தீவிரமாகப் பாடுபடும் புதிய வகை நூலகங்களுக்கான பொதுக் கோரிக்கையை புரட்சி தூண்டியது. அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் தகவல்களை வழங்குவதன் மூலம், பொது நூலகங்கள் சுய கல்வியின் நோக்கத்திற்காக வாசிப்பது மிகவும் பயனுள்ள கல்வி வடிவங்களில் ஒன்றாக மாறுவதை உறுதி செய்தன.

வாசகர்கள் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், அலுமாரிகளுக்குச் செல்லவும், படிக்கும் புத்தகங்களிலிருந்து அதிகப் பலன்களைப் பெறவும் உதவுவதன் மூலம், நூலகர்கள் இந்தச் செயற்பாட்டில் ஒரு செயலில் பங்கு வகித்தனர். பல பகுதி நேர தன்னார்வலர்கள் உதவினர். அவர்களின் உதவி, நூலகங்கள் வாசகர்களுக்கு ‘அவர்களின் பல்வகைப்பட்ட மற்றும் பெருகிய முறையில் சிக்கலான செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும்’ வழங்குவதை உறுதிசெய்தது. மக்களின் கல்விக்கு தொடர்ந்து உதவுவதன் மூலம், பொது நூலகங்கள் ஒவ்வொரு தனிமனிதனையும் மேம்படுத்தவும், சமீபத்திய, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாசார வளர்ச்சிகளைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும் முயன்றன.

சோவியத் நூலகங்கள் 140 நாடுகளில் உள்ள 4000 நூலகங்கள், பதிப்பகங்கள் மற்றும் அறிவியல் மையங்களுடன் நூல்களைப் பரிமாறிக்கொண்டன. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் 1.2 மில்லியன் புத்தகங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள், அதே நேரத்தில் 900,000 புத்தகங்களைப் பெறுகிறார்கள். சராசரியாக, ஒவ்வொரு வாசகரும் ஆண்டுக்கு 22 புத்தகங்களைப் படிக்கிறார்கள். சோவியத் யூனியனின் குடியரசுகளில் இந்த விகிதம் ஒரே மாதிரியாக இருந்தது. இது நாட்டின் கலாசார நிலைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காட்டுகிறது. நூலகர்களில், 70 சதவீதம் பேர் உயர் அல்லது சிறப்பு இடைநிலைக் கல்வி பெற்றிருந்தனர். இது குறித்த மேலதிக விரிவான தகவல்களுக்கு 1972-ம் ஆண்டு ஓ.எஸ். சுபர்யனால் எழுதி வெளியான Libraries in the Soviet Union என்ற நூலை வாசிக்க.

நூலகத்தின் வரலாற்றில் நூலகவியல் பற்றிய ஆராய்ச்சியில் முதன்மையான இடம் சோவியத் யூனியனுடையது. 1990 வரை இத்துறை சார்ந்து சோவியத்தில் வெளியிடப்பட்ட ஆய்வுகள், கட்டுரைகள், மாநாடுகள், நூல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை இதை நிரூபிக்கிறது. ரஷ்ய நூலக வரலாற்றாசிரியர்களின் செயற்பாடுகள் நீண்ட காலமாக முன்னனி நாடுகளில் உள்ள அவர்களின் சக ஊழியர்களுடன் ஒப்பிடத்தக்கவை மட்டுமல்ல பலவற்றில் முன்னோடியானவை. ஆயினும் சோவியத் நூலகங்கள் பற்றிப் பேசும்போது நூலக ஆய்வுகளில் சோவியத்தின் முன்னோடிப் பாத்திரம் கவனம் கொள்ளப்படுவதில்லை.

சோவியத் சோசலிச பொது நூலக சேவையின் மணிமகுடம், மாஸ்கோவில் கிரெம்ளினுக்கு அருகில் அமைந்துள்ள லெனின் தேசிய நூலகமாகும். உலகின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக இது இருக்கிறது. 360 மொழிகளில் கிட்டத்தட்ட 50 மில்லியன் நூல்கள் இங்குண்டு. கலை, இலக்கியம், இசை, ஆய்வு என அனைத்துவகைப்பட்ட துறைகளுக்கும் தனித்தனியான பிரத்தியேகமான பகுதிகள், அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வளவு வளங்களையும் ஒன்றிணைத்து சாத்தியமாக்கியதில் சோவியத்தின் கொள்கை வகுப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் லெனினின் பங்கு முதன்மையானது.

உலகை உலுக்கிய பத்து நாட்களில் ஜோன் ரீட் இவ்வாறு எழுதுகிறார்:

‘முழு ரஷ்யாவும் வாசிக்கவும் கற்கவும் தொடங்கியது. மக்கள் அரசியல், பொருளாதாரம், கலை, வரலாறு என அனைத்தையும் படிக்கத் தொடங்கினார்கள். நீண்டகாலமாக மறுக்கப்பட்ட கல்வித் தாகத்தை புரட்சி தீர்த்து வைத்தது. பாலையும் தண்ணீரையும் பிரிக்க முடியாதது போல இனி கல்வியையும் ரஷ்யர்களையும் பிரிக்க முடியாது.’

உலகில் உள்ள மற்றைய சிந்தனையாளர்களையும் அரசியல்வாதிகளையும் விட லெனின் நூலகங்களிலும், நூலகம் தொடர்பான விடயங்களிலும் அதிக கவனம் செலுத்தினார். அவரது படைப்புகளில் நூலகம் தொடர்பில் 270-க்கும் மேற்பட்ட கட்டுரைகள், அறிக்கைகள், உரைகள், கடிதங்கள், தந்திகள், அரசாங்க முடிவுகளின் வரைவுகள், பிற ஆவணங்கள் ஆகியவற்றைக் காண முடிகிறது. ஒரு சோசலிச சமுதாயத்தில் நூலகங்கள் மக்களுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதைப் பரிந்துரைக்கும் கூட்டுத் திட்டத்தை அவர் முன்மொழிந்தார். நூலகத்தின் சமூகப் பங்கிற்கு அடிப்படையான கொள்கைகளைக் கூறுவதுடன், நூலக இருப்புப் பெருக்கம், அந்தப் பகுதியின் வேலை நேரம், புத்தகப் பரிமாற்றத்தின் முறைமை போன்ற அனைத்து விஷயங்களிலும் இந்த துறையில் லெனின் தவிர்த்துவிட்ட எந்த ஒரு முக்கிய அம்சமும் இல்லை எனுமளவுக்கு அவர் ஈடுபட்டார். இவை அனைத்தும் பொது நூலகங்களுக்கு பரந்த அணுகலைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக செய்யப்பட்டது. 1920-ஆம் ஆண்டில், நாட்டின் இக்கட்டான நெருக்கடிகளுக்கு மத்தியிலும், லெனின் 50,000 நூலகங்களையும் வாசிகசாலைகளையும் ஒழுங்கமைக்கும் பணியை செய்துகாட்டினார். இதன் பலன்களை இன்று உலகெங்கிலும் உள்ள மக்கள் அனுபவிக்கிறார்கள்.



meenilankco@thaiveedu.com




1908-ஆம் ஆண்டு புரட்சி வீரராய்ப் புதுவைக்குள் நுழைந்த பாரதி, 1918-ம் ஆண்டு ஞானச் சித்தராய்ப் புது வையை விட்டு வெளியேறுகிறார். கடலூரை நெருங்குகையில் பிரிட்டிஷ் காவலர்களால் கைதுசெய்யப்பட்டு, கடலூர்ச் சிறை யில் அடைக்கப்படுகிறார். அப்போது அவருக்கு வயது, 36.

தானே வலிய அமைத்துக் கொண்ட புதுவைச் சிறை வாழ்வு, பத்தாண்டுகள் என்றால், ஆங்கில அரசு தந்த கடலூர்ச் சிறை வாழ்வு, 25 நாட்கள் (1918 நவம்பர் 20 முதல் 1918 டிசம்பர் 14 வரை) அங்கிருந்து அவர் விடுதலை பெற்றுச் சென்று கடை யத்தில் வாழ்கிறார். அதுவும் ஒருவகையில் சிறைவாசம் போல் அமைந்தாலும், இடைப்பட்ட நாட்களில் அவர் எட்டயபு ரம், திருநெல்வேலி, காரைக்குடி, கானாடுகாத்தான், மதுரை, சென்னை எனத் தமிழகத்தின் சில ஊர்களுக்கும் செல்லும் வாய்ப்பினை வழங்கியது.

அக்காலக்கட்டத்தில், பாரதியார் அதுவரையில் எழுதிச் சேர்த்த தம் ஆக்கங்களைத் தொகுத்து, நூல்களாக வெளியி டும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் நினைத்தது செம்மையாக நிறைவேறவில்லை. பத்திரிகை தொடங்கும் முயற்சியும் பலன ளிக்கவில்லை. ஆயினும் சளைக்காத பாரதியார் தம் கருத் துக்களை அரங்கேறிச் சொற்பொழிவுகளாக வெளிப்படுத்தத் தொடங்கினார். விரிவான செய்திகளை, எனது சொற்பொழி வாளர் பாரதியார் நூலில் காணலாம். (சேதுபதி, 'சொற்பொழி வாளர் பாரதியார்', கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, டிசம்பர் 2007).

•

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், அவர் சென்னைக்கு மீள வந்தது, 1919-ம் ஆண்டுத் தொடக்கம். அங்கிருந்தவாறே, பாரதியார் புதுவைக்குக் கடிதம் எழுதுகிறார். அதன் முதற்பக் கம் மட்டுமே கிட்டியிருக்கிறது. அதில், தமது குருநாதராகிய குள்ளச்சாமியைச் சென்னைக்கு அனுப்பி வைக்கச் சொல் லிய செய்தி இடம்பெறுகிறது.

வழக்கமாக, 'ஓம் சக்தி' என்று சக்தி நாமமிட்டுத் தொடங்கும் அக்கடிதம், 89, ராமஸ்வாமி தெரு, முத்யால்பேட்டை, சென்ன பட்டணம் என்ற முகவரியில் இருந்து, புதுவையில் வாழும் கனகராஜாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 'கனகராஜா என்ப வர், புதுச்சேரியில் வாழ்ந்த பாரதிப் புரவலர் பொன்னு முரு கேசம்பிள்ளையின் புதல்வர். பாரதியாரின் மெய்க்காப்பாளர் களில் ஒருவராகத் திகழ்ந்தவர்' என்பது இக்கடிதத்தைக் கண்டு பதிவிட்ட, ரா.அ. பத்மநாபனின் குறிப்பு. (நன்றி சித்திர பாரதி)

•

சி. சுப்பிரமணிய பாரதி என்று தன் பெயரிட்டுத் தொடங்கிய அக்கடிதத்தில்,

'ஸ்ரீமான் - கனகராஜாவுக்கு நமஸ்காரம்,

தயவு செய்து இந்தக் கடிதம் கண்டவுடன் ஸ்ரீ குள்ளச்சாமியை கோவிந்தன் அல்லது வேணு சகிதமாக மேலே காட்டிய விலா சத்தில் ஸ்ரீ எஸ். துரைஸாமி அய்யர் எம்.ஏ.பி.எல், ஹைகோர்ட் வக்கீல் (Proffessor of Law College) வீட்டுக்கனுப்ப வேண் டும். செலவுப் பணம் முதலிய சகல சௌகர்யங்களும் இங்கே நடக்கும். புதுச்சேரியிலிருந்து இங்கு வர நீ பணம் கொடுத்த னுப்பு. மிகவும் முக்யமான காரியம். உன் கையில் பணம் கிடைக்காவிட்டால் யாரிடமேனும் வாங்கிக் கொடுத்தனுப்பு. இங்கு வேணு வந்து சேர்ந்தவுடன் உனக்குத் தந்தி மணியார் டர் மூலமாக அந்தத் தொகையை அனுப்பிவிடுகிறோம். மிக வும்...'

என்கிற பகுதி மட்டுமே கிடைத்திருக்கிறது.

அதன்படி குள்ளச்சாமி சென்னைக்கு வருகிறார். அவர் தானா கவே வந்தாரா? அல்லது பாரதியார் எழுதிய வண்ணம் அவரை கோவிந்தனோ, வேணுவோ கூட்டி வந்து விட்டுச் சென்றனரா தெரியவில்லை. அவர்கள் வந்து சேர்ந்த இடம், சென்னை, பிரம்பூரில் அப்போது வாசம் செய்துகொண்டி ருந்த வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் இல்லம். அதுபற் றிய மேற்பதிவு, வ.உ. சிதம்பரனாரிடமிருந்து நாம் அறியக் கிடைக்கிறது.

•

'பல வருஷங்களுக்குப் பின்னர் நான் சென்னையைச் சேர்ந்த பிரம்பூரில் வசித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் நான் திரு

வல்லிக்கேணி முதலான இடங்களுக்குப் போய்விட்டு இரவு சுமார் 10 மணிக்கு என் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். என் வீட்டுத் தார்சாவில் இருவர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். என் வீட்டுள் சென்று தார்சாவில் தூங்கும் இருவர் யார் என்று என் மனைவியிடம் உசாவினேன். 'உங்கள் மாமனார் பாரதியாரும் அவருடன் வந்துள்ள சாமியார் ஒருவரும்' என்றனள் என் மனையாள். 'எப்போது வந்தனர்?' என்றேன். 'இரவு 8 மணிக்கு வந்தனர்' என்றாள். 'இருவரும் சாப்பிட்டனரா?' என்றேன்.' வந்ததும் உங்களை எங்கே' என்றனர். 'பட்டணம் போயிருக்கிறார்கள்' என்றேன்.' எப்போது வருவார்கள்?' என்றனர். '10 மணிக்கு வருவார்கள்' என்றேன். 'எங்களுக்கு முந்திச் சோறுபோடு' என்றார். போட்டேன். இருவரும் சாப்பிட்டனர். நீங்கள் வந்தவுடன் தம்மை எழுப்பும்படி சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டனர்' என்றாள். நான் என் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தார்சாவுக்கு வந்து 'மாமா! மாமா!' என்றேன். இருவரும் எழுந்தனர். க்ஷேமம் விசாரித்தேன். க்ஷேமத்தையும் வந்த வரலாற்றையும் கூறினர் மாமா. புதுச்சேரியில் வசித்துக் கொண்டிருந்த இந்திய நண்பர்கள் பற்றி உசாவினேன். மாமா பதில் சொல்லினர். 'சுவாமிகள் யார்' என்றேன். 'ஒரு பெரியவர்' என்றார் மாமா. மாமா முகத்தில் ஒரு வேறுபாட்டைக் கண்டேன், பழைய உற்சாகத்தையும் மலர்ச்சியையும் கண்டிலேன். அவர் பேச்சும் ஒரு புது மாதிரியாயிருந்தது. அப்போது காரணம் தெரிந்திலேன். சில பேசிவிட்டுத் துயின்றோம்.'

●

வந்த வரலாறு வ.உ.சி. யிடம் பாரதி சொல்லியிருக்கிறார் என்பது மட்டும் இப்பதிவில் தெரிகிறதே தவிர, அவர் எங்ஙனம் வந்தார்? உடன் வந்தவர் யார் என்கிற ஏனைய விவரங்கள் தெரியவில்லை. அடுத்த பதிவு மறுநாள் நிகழ்வாக மலர்கிறது.

●

'மறுநாட் காலையில் நாங்கள் எழுந்தவுடன் பாரதியார் இந்த சாமியாருக்கு இன்று எண்ணெய் ஸ்நானம் செய்து வைத்து வேறு வேஸ்டி கொடுக்க வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டனர். அந்தச் சாமியார் கறுப்பு மேனியில் கால் அங்குல கனம் அழுக்குப் படித்திருக்கக் கண்டேன், காலைக் காப்பி சாப்பிட்ட பின் கௌபீனம் சுட்டிக்கொள்ளும்படி செய்து சாமியாரின் அரை வேஸ்டியைக் களைவித்தேன். அரைஞாணில் ரூபா முடிச்சுகள் பல இருந்தன. அவற்றையெல்லாம் அவிழ்ப்பித்து வைத்துக்கொண்டு வேலைக்காரர் இருவரால் அவருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்து அவர் ரூபாய்களுடன் வேறு வேஸ்டி கொடுத்தேன். மூவரும் சாப்பிட்டோம். சிரமபரிகாரத்தின் பொருட்டு மூவரும் படுத்துறங்கினோம். மாலை சுமார் 3 மணிக்கு அவர்களிருவதும் உல்லாசமாகப் பேசும் சத்தம் கேட்டு நான் கண் விழித்தேன். ஒரு தகர டப்பாவிலிருந்து ஒரு லேகியத்தில் ஆளுக்கு ஒரு எலுமிச்சங் காயளவு எடுத்து வாயில் போட்டனர். 'அது என்ன' என்றேன். 'அது மோக்ஷலோகத்திற்கு கொண்டு போகும் மருந்து' என்றார் மாமா. 'பாவிகளா! எலுமிச்சங் காயளவா?' என்றேன். 'உனக்குப் பயந்துதான் இச்சிறிய அளவு கொள்கின்றோம்' என்றனர் மாமா. மாமா முகத்தின் வேறுபாடுக்கு இம்மருந்துதான் காரணம் போலுமென்று கருதினேன். பல பேசியும் பல பாடியும் அன்று மாலையையும் இரவையும் மறுநாட் காலையையும் என் வீட்டில் கழித்தோம். சாமியார் சரீர கனத்திலும் லேகியம் தின்றதிலும் தவிர, மற்ற பேச்சு முதலியவற்றில் மக்காகவேயிருந்தார். அறிவில் மேதாவியாகிய நம் பாரதியாருக்கு இம்மக்கிடத்தில் எப்படிப் பற்றுண்டாயிற்றென்று அதிசயித்தேன்.'

●

இது இரண்டாம் நாள் பதிவு. இதில் குள்ளச்சாமியின் தோற்றமும், அவரின் செய்கையும் மட்டுமே பதிவாகியிருக்கின்றன. அவர் ஏதும் பேசினார் அல்லர். அடுத்தநாள் தான் கனகராஜா என்பவருக்கு, பாரதி எழுதிய வழக்கறிஞர் துரைச்சாமி அய்யரின் இல்லத்திற்குச் சென்றிருக்கின்றனர் என்பதும் இப்பதிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

●

'மறுநாள் மத்தியானச் சாப்பாட்டுக்கு மேல் பாரதியாரின் அத்தியந்த நண்பரான ஜார்ஜ் டவுனிலிருந்த வக்கீல் S. துரைச்-சாமி அய்யர் வீட்டுக்குச் சென்றோம். அய்யர் வீட்டில் இல்லை. நாங்கள் மூவரும் அய்யர் வீட்டு மாடியில் கிடந்த கட்டில்களில் படுத்துக் கண் துயின்றோம். மாலை 3 மணிச் சுமாருக்கு முதல் நாள் போலச் சாமியாரும் மாமாவும் உற்சாகமாகப் பேசும் சத்தம் கேட்டு நான் கண்விழித்தேன். முதல் நாள் போலவே இருவரும் தகர டப்பாவிலிருந்த லேகியத்தை எடுத்து வாயில் போட்டனர். மாலையில் வக்கீல் அய்யர் வந்து சேர்ந்தார். சிறிது நேரம் அவருடன் நான் வார்த்தையாடிக் கொண்டிருந்துவிட்டு மூவரிடமும் அனுமதி பெற்றுக்கொண்டு நான் பிரம்பூர் வந்து சேர்ந்தேன்.'

●

நிகழ்ந்ததன் சுருக்கப்பதிவு என்பதைக் கடந்து, அவர்கள் வார்த்தையாடிய செய்தி யாதெனத் தெரிந்துகொள்ள, இப்பதிவு போதிய வாய்ப்பளிக்கவில்லை. மேலும், அறிவில் மேதாவியான பாரதியாருக்கு இந்த அழுக்குச் சாமியாரின்மீது இருந்த மோகத்திற்கான காரணமும் அவருக்கு விளங்கியிருக்கவில்லை. அதற்கான வாய்ப்பினை, பாரதியார் வழங்கவில்லையா? அல்லது மோட்சலோகத்துக்குக் கொண்டுபோகும் மருந்து உண்பதைக் கண்ட மருட்சியா? என்பதும் விளங்கவில்லை. பாரதியார் சென்னைக்கு வந்த காரணமும், அங்கு, குள்ளச்சாமியைக் கூட்டி வரச் செய்த காரணமும், சுதேசமித்திரன் (14.3.1919) இதழ்ச் செய்தியில் இருந்து தெரிய வருகிறது.

●

'பிரம்ம ஸ்தாபனம்: புதுச்சேரியிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி, நாளது மார்ச்சு மாதம் 17-ம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 5:30 மணிக்கு அரமனைக்காரத் தெருவிலுள்ள கோகலே ஹாலில் 'பிரம்ம ஸ்தாபனம்' அல்லது 'நானே கடவுள்' என்ற விஷயத்தைக் குறித்து உபந்யாசம் செய்வார். பிரம்ம ஸ்வரூபியான மாங்கொட்டைச் சாமி அக்கிராசனம் வகிப்பார். பேர்வழி ஒன்றுக்கு 8 அணா வீதம் கட்டணம் கொடுக்க வேண்டும். சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் 4 அணா கட்டணம் பிரவேசக் கட்டணமாக வாங்கப்படும். டிக்கட்டு வேண்டுவோர், ஜார்ஜ்டவுன், ராமசாமிதெரு 89 நெ.-வீட்டிலுள்ள காரியதரிசி மிஸ்டர் க. அமிர்த சர்மாவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.'

●



நுழைவுச் சீட்டு வழங்கும் இடத்தின் முகவரி, புதுவை கனகரா ஜாவுக்கு எழுதிய கடித முகவரி என்பதோடு, அதில் குறிக்கப் பெற்றிருக்கும் காரியதரிசி க. அமிர்தசர்மா, வழக்கறிஞர் துரைசாமி அய்யரின் உதவியாளராக இருந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு.

கட்டணம் வசூலித்துச் சொற்பொழிவு நிகழ்த்தும் வழக்கம், முதன்முதலில் பாரதியாரால் நடைமுறைப்படுத்தப்பட்டதா? அல்லது அவருக்கு முன்பே, நடைமுறையில் இருந்ததா என் பது தெரியவில்லை. ஆனால், 'விடுதலையான பாரதி 1919 பிப்ரவரியில் முதன்முறையாகச் சென்னை சென்றபோது ஆங் கிலத்திலும் தமிழிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றினார். மார்ச் 2, மார்ச் 17, மார்ச் 21, ஏப்ரல் 3 ஆகிய தேதிகளில் நீதி பதி மணி ஐயர், மாங்கொட்டைச் சாமியார் என்னும் குள்ளச்-சாமி, சுதேசமித்திரன் ஆசிரியர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் தலை மையில் அவரது சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. பெரும் பாலான கூட்டங்கள் நுழைவுக் கட்டணம் வைக்கப்பட்டே நடந் திருக்கின்றன' என்று பாரதி ஆய்வாளர் ய. மணிகண்டன் குறிப்பிடுகின்றார். ('பாரதியின் புதிய முகம்', இந்து தமிழ் திசை' நாளிதழ்,
https://www.hindutamil.in/news/opinion/columns/178429-.html

•

அந்தக்காலக் கட்டத்தில் பாரதியாரின் தோற்றம் எப்படி இருந்தது என்பதை அப்போது அவரை நேரில் கண்டவர்க ளின் எழுத்தோவியமாகத்தான் காண முடிகிறது என்றாலும், அப்போது அவரது படம் வேறு எங்கேனும் காணக் கிடைக்கி றதா என்று பாரதியன்பர் ரா.அ. பத்மநாபன் தேடியபோது தெரிந்த செய்தியினைத் தனது 'சித்திரபாரதி'யில் பின்வரு மாறு எழுதியிருக்கிறார்.

'குள்ளச்சாமியைத் தருவித்த பாரதி, தமது சாகாமை தத்து வத்தைப் பற்றியும் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். 'நித் திய வாழ்வு' (Life Eternal) என்ற தலைப்பில் அவர் ஆங்கி லத்தில் பேசிய இக்கூட்டத்துக்கு நீதிபதி மணி ஐயர் (எஸ். சுப்பிரமணிய ஐயர்) தலைமை வகித்தார். கூட்டம் வி.பி. ஹா-லில் நடந்தது.

கூட்டத்துக்கு இரண்டு நாள் முன்பு பாரதி பிராட்வேயிலிருந்த ரத்னா கம்பெனி என்ற போட்டோ கடைக்குப் போனார். தாம் முக்கியமானதோர் பொதுக்கூட்டத்தை விளம்பரம் செய்யும் துண்டுப் பிரசுரம் வெளியிடப் போவதாயும், அதற்காகத் தம்மை நேர்த்தியான படம் எடுக்க வேண்டும் என்றும் சொன் னார். அவர் வந்த சமயம் கடையில் முதலாளி இல்லை. வி.எஸ். ஸர்மா என்ற பையனே இருந்தான். இவன் அப்போது

கடையில் 'கத்துக் குட்டி', தம் புகைப்படம் எடுக்கும் வேலையை ஒரு சிறுபையனிடம் ஒப்படைக்க பாரதி தயங்கினார்.அவசரம் ஒரு பக்கம், பையனின் தெம்பான பேச்சு ஒரு பக்கம். பாரதி போட்டோவுக்கு உட் கார்ந்தார். நெகடிவைக் கழுவிப் பார்த்துத் தம்மிடம் காட்டும் வரை பாரதி காத்திருந்தார். படம் அவருக்கு மிகவும் திருப்தியாகிவிட்டது. பாரதியால் புகழப்பெற்ற இந்தப் படம் இப்போது எங்கும் கிடைக்கவில்லை. இதே போல் குவளைக் கண்ணனுடன் சென்று இதே ரத்னா கம்பெனியில் எடுத்துக்கொண்ட மற்றொரு படமும் கிடைக்கவில்லை' என்கிறார். (சித்திரபாரதி, ப.169)

இந்தப் படத்தைத் தேடிக் கண்டுபிடித்து உலகறியத் தந்த பேராசிரியர் ய. மணிகண்டன், 'பாரதியின் பொதுவாழ்வில், அவரே விரும்பித் துண்டுப் பிரசுரத்தில் வெளியிட என எடுத்துக்கொண்ட இந்தப் படத்தை இதுவரை தமிழகம் கண்டதில்லை. இந்தப் படத்தைத் தாங்கிய சொற்பொழிவுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு அன்னிபெசன்ட் நடத்திய ஆங்கில நாளிதழான 'நியூ இந்தியா'வில் 1919 மார்ச் முதல் தேதி வெளிவந்துள்ளது. மார்ச் முதல் தேதியிலேயே பத்திரிகையில் வெளிவந்துள்ளதால் இந்தப் படம் சென்னையில் அதற்குச் சிலநாள் முன் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, பாரதியின் விடுதலைக்குப் பிந்தைய முதல் சென்னைப் பயணம் பிப்ரவரி இறுதியில் நடந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது' என்கிறார்.

மேலும், இதனை, 'பாரதியின் ஆறாவது படம்' என்று குறிப்பிடும் அவர், 'புதுவையில் வாழ்ந்தபோது எடுக்கப்பட்ட தாடியோடு கூடிய படங்களில் உள்ள தோற்றங்களில் இருந்து, இந்தப் படத்தில் உள்ள பாரதியின் தோற்றம் சற்றே மாறுபட்டுள்ளது. தன் வீட்டில் காந்தியின் முன்னிலையில் பாரதியைக் கண்ட ராஜாஜியின் 'பித்த சந்நியாசிபோல் இருந்தார்' என்ற சித்திரிப்பை உறுதி செய்வதாகவே இந்தப் படத்தின் தோற்றம் உள்ளது. எந்தச் சொற்பொழிவு நிகழ்ச்சிக்காக இந்தப் படம் எடுக்கப்பட்டதோ அந்தச் சொற்பொழிவு அன்னிபெசன்ட் நடத்திய நியூ இந்தியா பத்திரிகையிலும் 'தி இந்து' ஆங்கில நாளிதழிலும் முழுமையாக வெளிவந்திருந்தது. 'தி இந்து'வில் வெளிவந்திருந்த சொற்பொழிவுப் பதிவை முதன்முறையாக ஆ.இரா. வேங்கடாசலபதி கண்டுபிடித்து வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது' என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

இதற்குப் பின்னரே, குள்ளச்சாமி தலைமையிலான கூட்டம், நடைபெற்றிருக்கிறது. அதில், பாரதியார் ஆற்றிய உரைக் குறிப்பு, அந் நிகழ்வின் மறுநாள் சுதேசமித்திரன் (18.03.1919) இதழில் வெளிவந்திருக்கிறது. 'நானே கடவுள்' என்ற தலைப்பிலான அவ்வுரைக் குறிப்பு பின்வருமாறு.

•

'நேற்று மாலை கோகலே ஹாலில் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி 'நானே கடவுள்' என்ற விஷயத்தைப் பற்றி மானிடரின் புணர்ச்சியைக் கவரத்தக்க விதமாய் ஒரு பிரசங்கஞ் செய்தார். கடவுள் இவ்வுலகத்திலேயே இருக்கிறாரென்பதும் சகல ஜீவராசிகளிடத்தும் சகல வஸ்துக்களிடத்தும் கடவுள் பிரசன்னமாயிருக்கின்றாரென்பதும் அவருடைய சித்தாந்தமாகும். இந்த சித்தாந்தத்தை ஸ்தாபிக்க, பிரசங்கியானவர் வேதங்களிலிருந்தும் உபநிஷத்துகளிலிருந்தும் பிருக்ருதி சாஸ்திர ஆராய்ச்சியினால் பிரத்தியக்ஷமாக நிரூபிக்கப்பட்ட விஷயங்களிலிருந்தும் அநேக மேற்கோள்களை எடுத்துக் காட்டி, 'அகம் ப்ருமாஸ்மி' (நானே கடவுளாக இருக்கின்றேன்) 'தத்வமஸி' (நீயே கடவுளாக இருக்கிறாய்) என்று வேதங்களில் சொல்லியிருப்பதை நவீன சாஸ்திர ஆராய்ச்சியும் உறுதிப்படுத்த முற்பட்டிருப்பதை விபரித்துக் கூறி சகல ஜீவராசிகளையும் சகல வஸ்துக்களையும் கடவுளாகப் பாவித்து நடப்பதனாலேயே மனிதன் 'நானே கடவுள்' என்று உணரக்கூடிய நிலைமைக்கு வர முடியுமென்றும் சொன்னார். 'ஸர்வ ஜீவ பக்தி மதம்' என்ற ஒரு புதிய மதத்தை உலகத்திலுள்ள சகல ஜனங்களும் தழுவ வேண்டுமென்றும், அதனால்தான் உலகம் க்ஷேமமடைய வேண்டுமென்றும், இப் புதிய மதத்தைக் குறித்து தாம் இன்னும் பல பிரசங்கங்கள் இந்நகரில் செய்யப் போவதாகவும், சகல மதஸ்தர்களும் அங்கீகரிக்கக்கூடிய விஷயங்களையே தாம் அப்பிரசங்கங்களில் சித்தாந்தஞ் செய்யப்போவதாகவும் சொன்னார்.'

•

தான் கற்றதிலிருந்தும், புதுவையில் வாழ்ந்த காலத்தில் தான் சந்தித்த குருநாதர்களிடமிருந்து பெற்றதில் இருந்தும் அனுபவித்து உணர்ந்த உண்மைகளை அறுதியிட்டு உரைத்த பாரதியார், தனது, 'பாரதி அறுபத்தாறு' நூலின் நிறைவுக் கவிதையை இப்படித் தந்திருப்பார்.

***பூமியிலே வழங்கிவரும் மதத்துக் கெல்லாம்***
***பொருளினைநாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்:***
***சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே;***
***தத்வமஸி; தத்வமஸி; நீயே அஃதாம்;***
***பூமியிலே நீகடவு ளில்லை யென்று***
***புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை;***
***சாமிநீ அம் மாயை தன்னை நீக்கிச்***
***சதாகாலம் 'சிவோஹ'மென்று சாதிப் பாயே!***

இந்தக் கவிதை, பாரதியாரின் சொற்பொழிவுச் செய்தியின் அடிநாதமாக விளங்குவதை அவதானிக்க முடிகிறது. புதுவையில், 'கோவிந்தசாமி'யுடன் உரையாடிப் பெற்ற இந்த உண்மையினை, முன்னர் உணர்த்திய குள்ளச்சாமியின் முன்னிலையில் புலப்படுத்த வேண்டும் என்ற விருப்பினால் சென்னைக்கு அவரையும் அழைத்துவந்து அவர் தலைமையில் பாரதியார் உரை நிகழ்த்தியிருக்கிறார் போலும்.

•

பாரதியார் நிகழ்த்திய உரையின் குறிப்பு இதுவென்றால், இச்சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கிய குள்ளச்சாமி என்ன செய்தார்? அவர் பேசியது யாது? அவரை அவையினருக்குப் பாரதியார் எவ்வாறு அறிமுகப்படுத்தினார்? என்பதையெல்லாம் நேரில் கண்ட ஒருவர் தன் பதிவில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியிருப்பதோடு, மேல் விளக்கமாகச் சில நுண்ணிய தகவல்களையும் எழுதியிருக்கிறார். அது, மகான் குள்ளச்சாமிக்கும், மகாகவி பாரதியாருக்கும் உள்ள குரு-சீட உறவை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்திருக்கி றது.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் இராமாயணக் காப்பியத்தின் திருப்பு முனையான அயோத்தியா காண்டத்தின் மூன்றாவது படலமாகிய கைகேயி சூழ்வினைப் படலத்தின் முதற்பகுதியை எடுத்து வந்திருந்தேன். அங்கே கம்பரின் சொல்நயமும், பொருள்நயமும் கூடிய உணர்ச்சி வெள்ளம் பெருகச் செய்யும் செய்யுள்கள் வாயிலாகக் கைகேயி தன் மகன் பரதன் நாடாள வேண்டும், இராமன் காடேக வேண்டும் என இரண்டு வரங்களைத் தயரதனிடம் கேட்டுப் பெற்றதைப் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டோம். இந்த இதழில் அதன் தொடர்ச்சியாக நிகழ்வனவற்றைக் கூறும் கம்பரின் கவிநயம் மிக்க செய்யுள்களுள் சிலவற்றைத் தேர்ந்து எடுத்து உங்களுக்குத் தருகின்றேன்.

கைகேயி கேட்ட இரண்டு வரங்களையும் ஈந்த தயரதன் மீண்டும் மூர்ச்சித்து நிலத்தில் கிடக்கிறான். கைகேயியோ தனது எண்ணம் நிறைவேறியது என்னும் களிப்போடு துயில் கொள்வதற்குச் சென்றுவிடுகிறாள். அந்த இரவு கழிந்து காலை நேரம் புலர்கிறது.

***சேணுலாவிய நாளெலாமுயிர் ஒன்றுபோல்வன செய்துபின்***
***ஏணுலாவிய தோளினானிடர் எய்தவொன்றும் இரங்கிலா***
***வாணிலாநகை மாதராள்செயல் கண்டுமைந்தர்முன் நிற்கவும்***
***நாணினாளென வேகினாள்நளிர் கங்குலாகிய நங்கையே!***

- கம்ப. அயோத்தி. 233

இதுநாள் வரை வலிமை பொருந்திய தோள்களை உடையவனாகிய தனது கணவனுடன் ஈருடலும் ஓருயிருமாக இருந்து வாழ்ந்து வந்தவள் கைகேயி. ஒளிபொருந்திய நிலவைப் போன்ற புன்னகையுடைய கைகேயி இப்போது தன் கணவன் துன்பமடையும்படி சிறிதும் மனமிரங்காதவளாகச் செய்கின்ற செயலைக் கண்டு, ஆடவர் முன்னே நிற்பதற்கு வெட்கம் அடைந்தவளைப்போலக் குளிர்ந்த இரவாகிய நங்கை விலகிச் சென்றாள் என்கிறார் கம்பர்.

தனது கணவனது உயிர் பிரியக்கூடிய நிலையை அடைந்த போதும், கைகேயி சிறிதும் இரக்கமடையாதது குறித்துப் பெண்ணினத்துக்கே வசை ஏற்பட்டுவிட்டதே எனக் கருதி ஆடவர் முன்னே நிற்கவும் முடியாமல் வெட்கமடைந்தவளாகக் கங்குலாகிய நங்கை அகன்று ஏகினாள் என்பது கம்பரின் தற்குறிப்பேற்ற அணிநயம் மிக்க வருணனை. இயல்பாக நிகழும் ஒரு நிகழ்வைப் பாடும் புலவன் அச்செயல் இயல்பாக நிகழவில்லை, தான் கருதிய செயலுக்காகவே நிகழ்கிறது எனத் தனது குறிப்பை அதன்மேல் ஏற்றிப் பாடுதலே தற்குறிப்பேற்ற அணியாகும். இயல்பாகவே விடியும் இரவு, கைகேயியின் செயல் கண்டு நாணி விலகிற்று என்று தனது குறிப்பை அதில் ஏற்றி வருணனை செய்து, ஏதுத்தற்குறிப்பேற்ற அணிநயத்துடன் கம்பர் இச்செய்யுளைப் படைத்துள்ளார். கங்குலாகிய நங்கை என அவர் இரவைப் பெண்ணாக உருவகப்படுத்தியுள்ளதையும் இங்கே காணலாம்.

இரவு கழிகிறது. காலைப் பொழுதில் கோழி கூவுகின்றது. கம்பரின் மேலுமொரு தற்குறிப்பேற்றத்தின் சிறப்பையும் இங்கே சுவைக்கலாம்.

***எண்டருங்கடை சென்றயாமம் இயம்புகின்றன ஏழையால்***
***வண்டுதங்கிய தொங்கன் மார்பன் மயங்கவிம்மிய வாறெலாம்***
***கண்டுநெஞ்சு கலங்கியஞ்சிறை யானகாமர் துணைக்கரம்***
***கொண்டுதம்வயி றெற்றியெற்றி விழிப்பபோன்றன கோழியே***

- கம்ப. அயோத்தி. 234

அந்தக் கடைசி யாமத்தில் கோழிகள் கூவுதலுக்கும் கம்பர் ஒரு தற்குறிப்பேற்றத்தைக் கொடுக்கிறார். வண்டுகள் மொய்க்கின்ற மாலையணிந்த மார்பினையுடைய மன்னன் மதிமயங்கிப் புலம்பிய எல்லாவற்றையும் கண்டு நெஞ்சு கலங்கிச் சிறகுகளாகிய இரண்டு கைகளினாலும் தமது வயிற்றில் பலமுறை அடித்து அடித்து எல்லோரும் இத்துயரத்தைப் பாருங்கள் என அழைத்து அழுவதுபோலக் கோழிகள் கூவின என்று வருணிக்கின்றார் கம்பர்.

பொழுது விடிகையில் நிகழும் பலவகை நிகழ்ச்சிகளை வருணித்த கம்பர், ஒரு பெண்ணால் தயரதன் மதி திகைத்துப் புலம்பியவற்றைக் கண்ணால் கண்டதால் அத்துயரத்தை ஆற்றமாட்டாமல் தமது இறகுகளாகிய கைகளால் வயிற்றலடித்து அழுவதைப் போன்று யாமத்தில் கோழிகள் கூவின என்ற கம்பரின் தற்குறிப்பேற்ற வருணனை அவரின் கவித்துவத்தை மெருகூட்டுகின்றது. இவ்வேளையில், இவ்வருணனையை அப்படியே அடியொற்றி வரும் இன்னொரு புலவரின் செய்யுளையும் இங்கே பார்க்கலாம்.

***தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.***

- நளவெண்பா 293

நடு இரவில் நளன் தமையந்தியை விட்டுப் பிரிந்தபோது அவளடைந்த துயரத்தைத் தாங்கமாட்டாமல் அந்த இரவு விரைவாக விடிய வேண்டுமென்பதற்காகக் கதிரவனை விரைந்து வா என அழைப்பதாகக் கோழிகள் தமது இறகுகளாகிய கைகளால் வயிற்றிலடித்து கூவியழைப்பதாக நளவெண்பாவில் புகழேந்திப் புலவர் பாடியுள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கும்போது கம்பரின் வருணனையைப் புகழேந்திப் புலவர் திருடிக் கொண்டாரா என்ற கேள்வி எழுகிறது. 'வெண்பாவிற் புகழேந்தி' எனச் சிறப்புப் பெற்ற ஒரு மாபெரும் புலவரை அவ்வாறு தாழ்மைப்படுத்திவிட முடியுமா? கம்பரும், புகழேந்தி

'முன்னைய புலவர்களின் தாக்கம்
பின்னைய புலவர்களிடம்
இருப்பதும் இயல்பானதே.
சங்க இலக்கியம்,
சங்கம் மருவிய கால இலக்கியம்,
நீதி இலக்கியம், சமய இலக்கியம்
எனத் தொடர்ந்து வந்த
இலக்கியங்களில் ஒன்றன் தாக்கம்
மற்றொன்றில் இருப்பதும்
இயல்பாகவே காணப்படுகிறது.'

யும் ஒரே காலத்துப் புலவர்கள் என்றும் கூறப்படுகிறது. புலமையுள்ளோர் ஒரேமாதிரியாகச் சிந்திப்பதும், முன்னைய புலவர்களின் தாக்கம் பின்னைய புலவர்களிடம் இருப்பதும் இயல்பானதே. சங்க இலக்கியம், சங்கம் மருவிய கால இலக்கியம், நீதி இலக்கியம், சமய இலக்கியம் எனத் தொடர்ந்து வந்த இலக்கியங்களில் ஒன்றன் தாக்கம் மற்றொன்றில் இருப்பதும் இயல்பாகவே காணப்படுகிறது.

இப்படலத்தில் காலைப் பொழுது புலர்கையில் அயோத்தி மாநகரிலே நிகழும் இயற்கைக் காட்சிகளை இவ்வாறான வருணனைகளுடன் சந்தக்கலி விருத்தம் என்னும் வடிவத்தில் 16 செய்யுள்களில் கம்பர் சிறப்பாகவே படைத்து வைத்திருக்கிறார்.

கைகேயியின் மாளிகையில் நடந்தது எதையுமே அறிந்திராத அயோத்தியிலே இராமனின் முடிசூட்டு விழாவுக்கான ஆரவாரங்களுடன் அன்றைய காலைப் பொழுது புலர்கிறது.

***தழையொலித்தன வண்டொலித்தன தாரொலித்தன பேரியாம்
முழவொலித்தன தேரொலித்தன முத்தொலித்தன மல்குபேர்
இழையொலித்தன புள்ளொலித்தன யாழொலித்தன வெங்கணும்
மழையொலித்தன போல்கலித்த மனத்தின் முந்துறு வாசியே.***

- கம்ப. அயோத்தி. 245

எல்லாவிடத்திலும் பீலிக் குஞ்சங்கள் விளங்கின. வண்டுகள் ஒலித்தன. பூமாலைகள் அழகுற விளங்கின. பேரி என்னும் வாத்தியங்கள் முழங்கின. அங்குமிங்கும் செல்லும் தேர்களின் ஓசை பரவியது. அலங்காரமாகத் தொங்கவிடப்பட்ட முத்து மாலைகள் காற்றில் அசைந்து ஒலித்தன. ஆண்களும் பெண்களும் அணிந்திருந்த அணிகலன்களின் ஒலிகள் எழுந்தன. பறவைகள் ஒலித்தன. வீணைகள் ஒலித்தன. மனத்தின் வேகத்தை விட விரைந்தோடுகின்ற குதிரைகள் மழை மேகங்களைப் போலக் கர்ச்சித்தன. இவ்வாறாக அயோத்தி மாநகர் மகிழ்ச்சியில் ஆரவாரித்துக் கொண்டிருந்ததாகக் கம்பரின் அழகான சொல்நயம் மிக்க இச்செய்யுள் எடுத்து வருகிறது. இச்செய்யுளில் 'ஒலித்தன' என்னும் சொல் பலமுறை வந்து சொற்பின்வரு நிலையணி என்னும் அணிநயத்துடன் செய்யுளுக்கு அழகூட்டியுள்ளதைக் காணலாம்.

அந்நகரத்து மக்களடைந்த மகிழ்ச்சியைக் கம்பர் மேலும் வருணிக்கின்ற செய்யுள்களுள் இன்னொன்றைப் பார்க்கலாம்.

***மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வதிட்ட னொத்தார் வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்னா டிருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் தன்னை யொத்தார்***

- கம்ப. அயோத்தி. 253

இராமன் முடிசூடப்போவதை எண்ணி அந்நகரத்தில் வாழ்கின்ற மூத்த ஆண்மக்களெல்லாம் தமது மகன் முடி சூடப் போவதைப் போல் உணர்ந்ததால் தயரதனை ஒத்தார்கள். மூத்த மகளிர் எல்லோரும் தமது மைந்தன் முடிசூடப்போவதாக எண்ணி மகிழ்ந்ததால் கோசலையை ஒத்தார்கள். இளம் பெண்களெல்லாம் தமது கணவனே முடிசூடப் போவதுபோல் உணர்ந்ததால் அவர்கள் சீதையை ஒத்தார்கள். அந்நகரத்து வேதியர்கள் யாவரும் அரசவை முனிவனாகிய வசிட்ட முனிவனை ஒத்தார்கள் என்று அந்நாட்டு மக்கள் எல்லோரும் இராமன் முடிபுனையும் விழாவைத் தத்தமது இல்லங்களிலே நடைபெறும் விழாவாக எண்ணி மகிழ்ந்தார்கள் என்று அவர்களது மனோநிலையை இந்த அழகான செய்யுளால் எடுத்துக் காட்டுகிறார் கம்பர்.

அயோத்தி அரண்மனையில் வேதியர்களும் பன்னாட்டு அரசர்களும் வந்து கூடுகிறார்கள். வசிட்ட மாமுனிவனின் கட்டளைப்படி சுமந்திரன் தயரதனை அழைத்து வரச் செல்கிறான். கைகேயியினது அந்தப்புரத்தில் அரசன் இருப்பதாக அறிந்து அவன் அங்கே செல்லக் கைகேயி எதிர் வந்து இராமனை அழைத்து வருமாறு அவனிடம் சொல்கிறாள். சுமந்திரன் இராமனிடம் சென்று கைகேயி கூறியதைத் தெரிவித்து 'முடிசூட வருக' எனக் கைகேயியின் மாளிகைக்கு இராமனை அழைத்துச் செல்கிறான். இராமன் அங்கு வருவதை நோக்கிக் கைகேயி தான் பெற்ற வரத்தைச் சொல்வதற்காக முன்னே வருகின்றாள்.

***ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேறாத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்***

- கம்ப. அயோத்தி. 290

முடிசூட்டு விழா நடைபெறுவதற்காக இவையெல்லாம் நிகழும் நாளிலே தயரதன் அவனது அரண்மனையில் இல்லாததை அறிந்து மனம் சோர்ந்த இராமன் பின்னர் மனந்தெளிந்து தூயவனாகிய தன் தந்தை இருக்குமிடம் தேடி வருகிறான். அவனைப் பார்த்த கைகேயி தன் கணவன் அவனது வாயால் தான் பெற்ற வரத்தைச் சொல்ல மாட்டான். ஆதலால் அதனை நானே சொல்வேன் என எண்ணிக்கொண்டு தன்னையே தாயென்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இராமனின் முன்னால் ஒரு கொடுமையான கூற்றுவனைப் போல வந்து நின்றாள். அன்பும் அருளும் உடைய தாயின் நிலையில் இருந்த கைகேயி அப்போது உடலையும் உயிரையும் வேறுபிரித்துக் கூறுபடுத்தும் கூற்றுவனைப்போல வந்தாள் என்கிறார் கம்பர். தயரதனின் உயிராக இராமன் இருக்கின்றான் என்பதையும் இராமனைக் காடேகச் சொல்லி அவனைப் பிரித்துவிட்டால் தயரதனின் உயிரும் பிரிந்துவிடும் என்பதைக் கூறவே கம்பர் இங்கே ‘கூற்றெனத் தமியள் வந்தாள்' என்று உள்ளுறையாக வைத்துள்ளார். எதிரே வந்த கைகேயியை இராமன் தாள்பணிந்து வணங்கி நின்றபோது உன் தந்தை உன்னிடம் சொல்லுமாறு கூறிய செய்தி உண்டு எனக் கைகேயி இராமனிடம் இவ்வாறு சொல்லுவாள்.

***ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாளிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நல்கிப் புண்ணியப் புனல்க ளாடி
ஏழிரண் டாண்டில் வாவென் றியம்பினான் அரச னென்றாள்.***

- கம்ப. அயோத்தி. 294

கடல் சூழ்ந்த உலகம் அனைத்தையும் பரதனே ஆட்சி செலுத்த, நீ தாழ்ந்து தொங்கும் பெரிய சடைகளைத் தரித்து, அரிய தவவேடம் பூண்டு, புழுதியடைந்த வெம்மையுடைய காட்டை அடைந்து, தூய நதிகளிலே நீராடிப் பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு திரும்பி வருமாறு மன்னன் கட்டளையிட்டுள்ளான் என்கிறாள் கைகேயி. இந்தக் கடுமையான வார்த்தைகளைச் சொல்வதற்கு எவ்விதத் தயக்கமோ அச்சமோ கைகேயிக்கு இருந்ததில்லை என்பதை வெளிப்படுத்துவதாக, அவள் பூச்சு மெழுக்கு எதுவுமே இல்லாது சொல்ல வேண்டியதை நேரடியாகவும் அழுத்தமாகவும் சொன்னாள் என்பதாக இச் செய்யுளை அமைத்திருப்பது கம்பரின் புலமை ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

***இப்பொழுது எம்ம னோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பரும் குணத்தின் ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.***

- கம்ப. அயோத்தி. 295

எவராலும் சொல்லுதற் கரியதான பெருங்குணங்களையுடைய இராமனின் அழகிய திருமுகத்தைப் பார்த்தால் அதனை எவராலும் கற்பனை செய்துகூடச் சொல்ல இயலாது. கைகேயியினது வார்த்தைகளைக் காதால் கேட்டபோது இராமனின் முகம் அப்பொழுது விரிந்த செந்தாமரை மலரினது அழகைக் கூட வென்றுவிட்டது. என்பது கம்பரின் கூற்று.

எப்பொழுதுமே தாமரை மலரை ஒத்ததாக இருக்கும் இராமனது முகத்தின் தோற்றம் கைகேயியின் சொல்லைக் கேட்டவுடனேயே தந்தை இட்ட கட்டளையைத் தாயே உரைக்கக் கேட்டதைப் பெரும் பேறாகக் கருதியும், அரசாளும் சுமை நீங்கியது கருதியும் உண்டான பேருவகையை அவனது முகம் பிரதி பலித்ததாகக் கம்பர் ‘அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றம்மா' என்று கூறுகிறார். உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியை முகம் உடனடியாகவே வெளிப்படுத்திவிடும் என்பது உண்மையே. ‘அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' (திருக்குறள் 706) என்பது திருக்குறள். மணிமுடி புனையக் காத்திருந்த இராமனுக்குக் கைகேயி சொன்ன வார்த்தைகளைக் கேட்டபோது வெறுப்பும், சினமும்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். பதிலாக இரமனது மனத்தில் பெருமகிழ்ச்சிதான் ஏற்பட்டது என்பதை மிக அற்புதமாகக் கம்பர் எடுத்துக் கூறியுள்ளார். உடனே இராமன் கைகேயியிடம் இவ்வாறு கூறுவான்.

***மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதின் உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையும் கொண்டேன்.***

- கம்ப. அயோத்தி. 297

‘தந்தையிட்ட கட்டளை அல்லாது தாயே உமது கட்டளையாக இருந்தாலும் அதனைச் செய்ய மறுப்பேனா? என் பின்னவனாகிய பரதனுக்குக் கிடைத்த அரசாட்சி எனக்குக் கிடைத்தது போலல்லவா? பின்னர் இதனினும் மேலான நன்மை எனக்கு என்ன இருக்கப்போகிறது? இக்கட்டளையை நான் இப்பொழுதே தலைமேல் ஏற்றுக் கொண்டேன். மின்னல் போன்ற வெய்யில் ஒளிரும் காட்டிற்கு இப்பொழுதே செல்கின்றேன்' என்று கூறி அவளிடம் விடைபெறுகிறான் இராமன்.

மன்னன் கட்டளையிட வேண்டியதில்லை. தாயின் கட்டளையே போதும். எனது தம்பிக்கு அரசாட்சி கிடைத்தால் அது நான் அரசு பெற்றதைப் போலாகும். இவ்வாறு நானும் என் தம்பியும் நன்மை பெறுமாறு ஒன்று நிகழுமானால் அதனைவிட மேலான நன்மை பயப்பது வேறொன்றும் இல்லை. உமது பணியைத் தலைமேற் கொண்டேன் என இராமனுக்குப் பெற்றோர், உடன்பிறப்புகள் மேலுள்ள பாசப் பிணைப்பைக் கம்பர் இவ்வாறு வெளிப்படுத்துவார்.

கம்பரின் சொல்நயம், பொருள்நயம், அணிநயம் மிக்க உணர்ச்சி பொங்கும் செய்யுள்களோடு கைகேயி சூழ்வினைப் படலம் இத்துடன் நிறைவுறுகிறது. அடுத்து வரும் இதழில் இராமன் காடு செல்வது பற்றிய நகர் நீங்கு படலத்தில் நிகழ்வனவற்றைக் கம்பரின் கவி வண்ணத்தில் உள்ள செய்யுள்களோடு எடுத்து வருகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# தொன்மையைத் தேடி

# ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

இந்த ஆய்வின் கருதுகோள் - தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவருக்காக வகுக்கப்பட்ட ‘கவிதை மரபாகும்’ தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந்‘நூற்பாக்களில் பயின்று வரும்’ கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து ‘ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது’ என்பதை நிறுவுவது.

கடந்த 33 மாதங்களாக, ‘ஆதித் தமிழர் திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியது, விரிவாகியது’ என்பது பின்வரும் கோணங்களில் ஆராய்ந்து நிறுவப்பட்டது.

- தொல்காப்பியத்தில் திணைக் குடிகள், அவற்றின் வளர்ச்சி
- தொல்காப்பியம், புறத்திணையியல் வழி பண்டைய குடிகள், தொடக்க காலப் போர் முறைகள்
- தொல்காப்பியத்தில் மூவேந்தர் உருவாகி விட்டமை பற்றிய குறிப்புகள், நடுகல் வழிபாடு முதலிய தொல்லியல் தரவுகள்
- புறநானூறு 201-ம் பாடல் மூலம்  வேளிர் குடியின் தொன்மை பற்றிய குறிப்பு
- அசோகரின் கிர்னர் கல்வெட்டு, அதியமான் நெடுமான் அஞ்சியின் காலம், சங்க காலத்தின் ‘காலக்கணிப்பும் கிர்-னர் கல்வெட்டும்’
- பதிற்றுப்பத்து, அரச உருவாக்கம், சேர மன்னர் வரலாறு, காலம்
- தலையாலங்கானத்துப் போர், கல்வெட்டுச் சான்றுகள் முதலியன
- தமிழ் நாட்டு மன்னர்கள், புலவர்கள்
- வரலாற்றுக் காலம்

மேலே தரப்பட்ட ஆய்வுகளின் தொகுப்புரைகளும் வழங்கப்பட்டன.

## தமிழகத்தின் வரலாற்றுக் காலம்:

### தொகை நூல்கள் பற்றிய புரிந்துணர்வு:

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், ‘தொகை நூல்களின் காலமுறை’ என்னும் ஆய்வுக் கட்டுரையில், ‘குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, கலித்தொகை, பரிபாடல் என்ற வரிசைக் கிரமத்தில் தொகை நூல்கள் தோன்றியிருக்கக்கூடும் என்று குறித்துள்ளார்.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநானூற்றை முதலாகக் கொண்டு தொகை நூல்களை வரிசைப்படுத்துகின்றனர். இவ்விரு உரையாசிரியர்கள் கூற்றிலிருந்தும் தொகை நூல்கள் தலைச் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவை என்றும் அவை அகநானூறு முதலாக எண்ணப்பட்டன என்பதும் தெளிவு. பாவகையால் வேறுபட்ட கலித்தொகையையும் பரிபாடலையும் ஈற்றிலும் ஐங்குறுநூற்றையும் பதிற்றுப்பத்தையும் இடையேயும் கொண்டுள்ளமை புலனாகிறது.

எட்டுத்தொகை இலக்கியங்கள் பாடப்பட்ட காலம், தொகுக்கப்பட்ட காலம், அவை கூறும் இலக்கியக் கோட்பாடுகள், மொழிநடை, எடுத்துக் கூறும் வரலாற்று ஆதாரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தற்போதைக்குக் கீழ்க்காணும் முடிவுகளையே எடுக்கவேண்டியுள்ளது.

இவற்றின் காலத்தைத் திட்டவட்டமாக முடிவு செய்வதற்குரிய ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையிலேயே இருக்கின்றன. தொகை நூல்களில் நுண்ணிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றின் காலங்களை வரையறுப்பதற்கு, அவற்றின் ‘தொகையான தன்மை’ இடையூறாக இருப்பதால், ஆய்வுகள்,

தொகை நூல்களிலுள்ள பாடல்களைப் பாடிய புலவர்களை வரிசைப்படுத்துவதில் வெற்றி பெறலாம்.

இம் முயற்சியையே இந்த ஆய்வு முன்னெடுத்திருக்கிறது.

மேலே கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எட்டுத் தொகை நூல்களின் காலம் பற்றிக் கீழ்க் காணும் சில தகவல் களைக் குறித்துக் கொள்ளலாம்.

**எட்டுத்தொகை இலக்கியங்கள்:**

- எட்டுத்தொகை இலக்கியங்கள், தொல்காப்பியத்திற்குக் காலத்தால் மிகப் பிந்தியவை.
- நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய தொகை நூல்கள் ஏறத்தாழ சமகாலத்தவை.
- இவற்றிற்குக் காலத்தால் பிந்தியவை ஐங்குறுநூறு, கலித் தொகை, பரிபாடல் ஆகிய நூல்கள்.
- பதிற்றுப்பத்து, குறிப்பிட்ட 300 ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்த ஒரு குடி மன்னர்களைப் (சேர மன்னர்களை) பாடி யது.
- புறநானூறு, நீண்ட கால இடைவெளியில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு.

**பத்துப்பாட்டு இலக்கியங்கள்:**

எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் இலக்கிய தீபம் என்னும் நூலில் பத்துப்பாட்டின் காலமுறை பற்றிப் பின்வருமாறு கூறு கிறார்.

‘பத்துப்பாட்டு என்பது மிகப் பழைய பத்துச் செய்யுட்கள் அடங்கிய ஒரு தொகுதி. பத்துப்பாட்டு என்ற பெயரும் தொகுக்கப்பட்ட பின்னரே வழங்கத் தொடங்கியிருக்க வேண் டும். வழக்கு நிலைத்த பின்பே பன்னிரு பாட்டியலார், பத்துப் பாட்டுத் தொடர்பான நூற்பாக்களை அமைத்திருக்கிறார்’

- ஆற்றுப்படை இலக்கியங்கள் - பத்துப்பாட்டில் திருமுரு காற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப் படை) ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை இலக்கியங்களாகும்.
- ஒழுக்கம் சார்ந்தவை - பத்துப்பாட்டில், முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டி னப்பாலை ஆகிய இலக்கியங்கள் ஒழுக்கம் சார்ந்தவை.
- அகம் சார்ந்தவை - பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, நெடு நல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நான்கு நூல்களும் அகம் பற்றியன. நெடுநல்வாடை அகத் திணையில் பாடப்பட்டாலும் பாண்டிய மன்னனை மறைமு கமாகக் குறிப்பிடுவதால் அது அகத்துள் அடங்காது என் றும் அகப்புறமாகக் கொள்ளலாம் என்றும் கருதுவர்.

**பத்துப்பாட்டின் காலப்பிரிவு கீழ்க்காணும் வகையில் ஆராயப்படுகிறது:**

- பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் கரிகாற்பெரு வளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ண னாரே பெரும்பாணாற்றுப் படையையும் பாடினார். எனவே பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப் படை ஆகிய மூன்று நூல்களும் ஏறக்குறைய ஒரே காலத் தவை.
- மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் தலையானங்கா னத்துச் செருவென்ற பாண்டியனைப் பாட்டுடைத் தலைவ னாகக் கொண்டவை. எனவே இவை இரண்டும் ஒரே காலத் தவை.
- மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் மதுரைக்காஞ்சியில் (618-9) பாடப்படுகிறான். எனவே மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய மூன்றும் ஒரே காலத்தவையாகலாம். மலைபடுக டாம் காலத்தால் முந்தியதாக இருக்கலாம்.
- கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி யைப் பரணர் பாடியுள்ளார். பரணரது முதுமைக் காலத்தில் இளைஞராயிருந்தவர் கபிலர் என்பது பதிற்றுப்பத்தில் இவர்கள் பாட்டு வைப்பு முறையால் அறியலாம். எனவே கபிலரது குறிஞ்சிப்பாட்டு கரிகாலனது காலத்தில் தோன்றி யது எனக் கொண்டால் பொருநராற்றுப்படை, பெரும்பா ணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களோடு குறிஞ்சிப் பாட்டும் ஒத்தகாலத்ததாக இருக்கலாம்.
- புறம் 53-ம் பாடலில் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை ‘கபிலர் இன்றுளனாயின் நன்றுமன்’ எனப் பாடியி ருக்கிறார்.
- மதுரைக் காஞ்சியையும் நெடுநல்வாடையையும் பாடிய நக் கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரிலும் வேறானவர். திருமுருகாற்றுப்படை பொருளாலும் நடையாலும் வேறுபட் டது.

மேலே கூறப்பட்ட ஆதாரங்கள் வழி கீழ்க்காணும் முடிவு களை எடுக்க வேண்டியதாயுள்ளது:

- பண்டைக் காலத்தில், பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப் பட்ட தமிழவை ஒன்று தமிழ் நாட்டில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டளவில் இத் தமிழ்ச் சங்கம் வலுவிழந்து முடிவிற்கு வந்திருக்க வேண்டும்.
- முதற் சங்கம் பொ.ஆ.மு. 8-ம் நூற்றாண்டுக்கு முன்னைய தாகவும் இரண்டாம் சங்கம் பொ.ஆ.மு. 8-ம் நூற்றாண்டுக் குப் பின்னர் இருந்திருக்கலாம். மூன்றாம் சங்ககாலத்தின் இறுதிப்பகுதி மங்கலாகக் காட்சியளிக்கிறது.
- தமிழகம் முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள்,

கடையெழு வள்ளல்கள் என்று இப்படிப் பலர் தலைமையில் துண்டாடப்பட்டிருந்தாலும் தமிழர், தமிழ்நாடு என்னும் உணர்வு மட்டும் எவரிடமும் குன்றியிருக்கவில்லை.

- பாண்டியர் ஆட்சி மதுரையில் முடிவடையும் முன் ஐங்குறு நூறும் அகநானூறும் தொகுக்கப்பட்டுவிட்டன.
- சிலப்பதிகாரம் பொ.ஆ.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட கருத்து.
- திருக்குறள் சிலப்பதிகாரத்திற்குக் காலத்தால் முந்தியது. ஏறக்குறைய பொ.ஆ.பி. முதலாம் நூற்றாண்டில் திருக்குறள் எழுந்ததாகக் கொள்ளலாம். திருக்குறள், தொல்காப்பியத்தை அடியொற்றிச் செல்லும் ஒரு இலக்கியம். திருக்குறள், தன் காலத்து நாட்டு நிலையைப் பிரதிபலிப்பதுடன் பொருளளவில் சங்க இலக்கியத்திலிருந்தும் பெரிதும் மாறுபடுவதாயினும் சங்க இலக்கியத்தின் தொடர்பாகவே இதனைக் காணத்தக்க வகையில் அமைந்திருக்கிறது.
- சிலப்பதிகாரம், மணிமேகலை, கீழ்க்கணக்கு நூல்கள், தொகை நூல்களுக்கு நடையாலும் பொருளாலும் செய்யுள் அமைப்பாலும் பெரிதும் வேறுபட்டவை. காலத்தால் பிந்தியவை. சங்ககால இறுதிப் பகுதியில் நாடு சீர்குலைந் திருந்த நிலையைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்விலக்கியங்கள் சங்க இலக்கியங்களிலும் வேறானதொரு பண்பாட்டைக் காட்டுகின்றன.

## இலக்கணம், இலக்கியம் பற்றிய ஆய்வு:

‘இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்’ என்பது பொதுவிதி. இப்பொதுவிதி கொண்டே தொல்காப்பியம் என்னும் இலக்கணம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. தொல்காப்பியத்திற்கு முன்னமே பல நூற்றாண்டுகளாக வளர்த்தெடுக்கப்பட்ட இலக்கியங்கள் இருந்திருக்கின்றன. தொல்காப்பியர், தனக்கு முன்னிருந்த இலக்கியங்களுக்கே இலக்கணம் எழுதியிருக்கிறார்.

தொல்காப்பியம், தமிழ் இலக்கியத்தின் பல்வேறு வடிவங்கள் பற்றியும் அவற்றைப் பாடுகின்ற வேறுபட்ட செய்யுள் வகைகள் பற்றியும் அவற்றை அலங்கரிக்கும் மெய்ப்பாடுகள் பற்றியும், அணிகள் பற்றியும் விரிவாகக் விளக்குகின்றது.

இப்படிப்பட்ட பல விடயங்களை வைத்தும் காலத்தை அறிவியல் சார்ந்து நிர்ணயிக்கலாம்.

தொல்காப்பியத்தின் கட்டுக்கோப்பான தன்மையைப் பார்க்கையில் அது பல்வேறு காலப்பகுதியில் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறமுடியாது. அதற்கான அகச் சான்றுகளும் இல்லை, உரையாசிரியர்களுக்கும் அத்தகைய கருத்து இருந்ததற்கான சான்றுகளும் இல்லை.

## சங்கங்கள் பற்றிய புரிந்துணர்வு – இறையனார் அகப்பொருள்:

சங்கங்கள் பற்றிய அறிவு ‘இறையனார் அகப் பொருள்’ அல்லது ‘இறையனார் களவியலுரை’ என்று வழங்கப்படும் நூல் மூலமாகவும் அறியப்படுகிறது. (இறையனார் அகப்பொருள், சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பு). இந்நூலைக் கேட்டார், மதுரை உப்பூரிக்குடிக் கிழார் மகனான உருத்திரசருமன். உரை கண்ட வரலாறு பற்றி, இறையனார் அகப்பொருள் கூறுவதாவது,

*‘மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் தம் மகன் கீரங் கொற்றனாருக்கு உரைத்தார், அவர் தேனூர்க் கிழாருக்கு உரைத்தார், அவர் படியங் கொற்றனாருக்கு உரைத்தார், படியங் கொற்றனார் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார், அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனாருக்கு உரைத்தார், அவர் சொல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங் குமாரனாருக்கு உரைத்தார், அவர் திருக்குன்றத்து ஆசிரியருக்கு உரைத்தார், அவர் மாதளவனார் இளநாகனாருக்கு உரைத்தார், அவர் முசிறியாசிரியர் நீலகண்டனாருக்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை’.*

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் புலவர் பெருமக்கள் பெயர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை.

இந்நூல் தரும் தகவல்கள் பலவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாக இருந்த போதிலும் தமிழகத்தின் வரலாற்றுக் காலம் பற்றிய ஆய்வுக்கு இந் நூல் ஓரளவுக்குத் துணை புரிகிறது. இந் நூலால் பெறப்படும் சங்கம் சார்ந்த தகவல்கள் வருமாறு -

**தலைச் சங்கம் பற்றிய செய்தி:**

- தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்தன.
- இவற்றை நிறுவியவர்கள் பாண்டியர்.
- தலைச் சங்கம் இருந்தார் - அகத்தியர், விரிசடைக் கடவுள், முருகன், முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியிற் கிழவன் முதலிய 49 பேர்.
- இவர்கள் உள்ளிட்ட 4449 பேர் பாடல்கள் பாடினார்கள்.
- அவர்கள் பாடியவை பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியன.
- இவர்கள் 4440 ஆண்டுகள் சங்கம் இருந்தார்கள்.
- இவர்களைச் சங்கத்தில் இருத்தியவர்கள், காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 மன்னர்கள்.
- இம் மன்னர்களில் கவி அரங்கேற்றினார் எழுவர் பாண்டியர்.

- இவர்கள் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப் பட்ட மதுரை.
- அவர்களுக்கு நூல் அகத்தியம்.

இங்கு, சங்கம் என்னும் சொல் பிற்கால வழக்கு. அரசர் குடியில் பாண்டியரே தொன்மையானவர்கள், காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 பாண்டிய மன்னர்கள் என்று கூறப்பட்டிருப்பது சரியாக இருந்தால் (89*20-1780), இடைச் சங்கத்திற்கு முன்னர் வரலாறு ஏறக்குறைய 2000 ஆண்டு பயணித்திருக்க வேண்டும். அதாவது, தொல்காப்பியர் இடைச் சங்கக் காலத்தவர் என்பதை ஏற்றுக்கொண்டு, பொ.ஆ.மு. 711-க்கு முன்னர், பாண்டியர் ஆட்சி 2000 ஆண்டு நடைபெற்றிருக்கவேண்டும்.

தமிழகத்தின் வரலாற்றுக் காலம் பற்றிய ஆய்வில் சில மானிடவியலாளர் தொல்லியலாளர்களின் கருத்துகளையும் நோக்கலாம்.

### தொல் மானிடவியல்:

மக்ஸ் பிளாங்க் (Max Planck) என்னும் தொல் மானிடவியல், தொல்லியல் முதலிய அறிவியல் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் உலக அங்கீகாரம் பெற்ற தாபனம், திராவிட மொழிகளின் காலம் பற்றி, மார்ச் 21, 2018-ல் வெளியிட்ட ஆய்வறிக்கை -

'திராவிட மொழிகளின் காலத்தை 4500 ஆண்டுகளுக்கு முன்னயதாக, மார்ச் 21, 2018-ல் நிறுவியிருக்கிறது. (Max Planck Institutes of Geoanthropology - 'The origin of the Dravidian language family, consisting of about 80 varieties spoken by 220 million people across southern and central India and surrounding countries, can be dated to about 4,500 years ago.' Report dated March 21, 2018) என்னும் அறிக்கையைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இதன்படி வரலாறு பொ.ஆ.மு. 2500 ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

### தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில்...

- அகழாய்வில், ஆதிச்ச நல்லூரின் காலம் தற்போதைக்குக் பொ.ஆ.மு. 905 எனக் கரிமப் பரிசோதனையில் தீர்மானமாயிருக்கிறது. ஆய்வு நீளும் பொழுது காலமும் மாறலாம்.

### சங்க கால மன்னர்களும் சமகாலப் புலவர்களும்:

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' - (தொல்.பாயிரம்) என்னும் எல்லைகளுக்குட்பட்ட தமிழ்நாட்டைச் சங்ககாலத்தில்,

25 சேர மன்னர்களும்

21 சோழ மன்னர்களும்

25 பாண்டிய மன்னர்களும்

9 வள்ளல்களும்

குறுநில மன்னர்களும்

வேளிர் முதலாய 7 குடிகளும்

சிறப்புற ஆட்சி புரிந்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் சங்க இலக்கியத்தில் ஆதிச்ச நல்லூர் பற்றிய தகவல்கள் ஏதுமில்லை.

### தலையாலங்கானத்துப் போரால் அறியப்பட்ட மன்னர்கள்:

- சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, (பாடிய புலவர், குறுங்கோழியூர் கிழார், புறம் 17, 20, 22), பொருந்தில் இளங்கீரனார் (புறம் 53), பதிற்றுப் பத்து 10-ம் பத்து, இம் மன்னன் பெயரால் பாடப்பட்டிருக்கலாம். பாடியவர் பெயர் தெரியவில்லை.
- சோழன் கிள்ளிவளவன், (மாசாத்தனார் (புறம். 227), ஆலத்தூர் கிழார் (புறம் 34, 36, 69), வெள்ளைக்குடி நாகனார், (புறம் 35), மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 37, 39,) ஆவூர் மூலங் கிழார் (புறம். 38, 40), கோவூர் கிழார் (புறம் 41, 46, 70), இடைக்காடனார் (புறம். 42).
- திதியன், எழினி, எருமையூரன், இளங்கோ வேண்மான், பொருநன் ஆகிய வேளிர் பாண்டியன் நெடுஞ்செழியன், (பாடிய புலவர், நக்கீரர் (நெடுநல்வாடை), மாங்குடி மருதனார் (மதுரைக் காஞ்சி), குடபுலவியனார் (புறம் 18, 19), கல்லாடனார், (புறம். 23, 25), மாங்குடிக் கிழார் (24, 26), இடைக்குன்றூர் கிழார் (புறம். 76, 77, 78, 79) -

### தலையாலங்கானத்துப் போரால் அறியப்பட்ட புலவரும் அவர் அறிந்த பிறரும்:

- கடியலூர் உருத்திரங் கண்ணனார் - தொண்டைமான் இளந்திரையன் (பெரும்பாணாற்றுப்படை), கரிகாற்பெருவளத்தான் (பட்டினப்பாலை), இருங்கோவேள், திருமாவளவன். கருங்குழல் ஆதனார் (புறம் 7, 224).
- மாங்குடி மருதனார் - அகநானூறு 89, குறுந்தொகை 164, 173, 302, நற்றிணை 120, 123, புறநானூறு 24, 26, 313, 335, 372, 396, மதுரைக்காஞ்சி ஆகியவை இவரது ஆக்கங்கள்.
- உலோச்சனார் - இராசசூயம் வேற்ற பெருநற்கிள்ளி (புறம் 377).
- கல்லாடனார் - நெடுஞ்செழியன் (புறம் 23, 25, 371), அகுதை (அகம் 113), நன்னன், களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல், புல்லி, காரி, ஓரி, (அகம் 199, 209).
- முடமோசியார் - பெருநற்கிள்ளி, அற்துவஞ்சேரல் இரும்

பொறை (புறம் 13), ஆய் (புறம் 127, 128, 129, 130, 133, 134,135).

- மூலங்கிழார் - கிள்ளிவளவன் (புறம் 40).
- வெண்ணிக் குயத்தியார் - கரிகால் பெருவளத்தான் (புறம் 151).
- வெள்ளிவீதியார் - திதியன், அன்னி, ஆதிமந்தி, வானவரம்-பன் (அகம் 45).

**அதியமான் நெடுமான் அஞ்சி:**

அதியமான் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாக வும் அவன் தகடூரை ஆண்ட காலம் பொ.ஆ.மு. 245-203 என் றும் அறியப்பட்டிருக்கிறது. அவன் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு தலைநீர் நாடு என்று பெயர் பெற்றிருந்தது. அதியமா னது வீரமும் வளமும் அவனுக்குப் பகையை வளர்த்தது.

**அதியமான் நெடுமான் அஞ்சி வரலாற்றால் அறியலாகும் மன்னர்கள்:**

- தொண்டைமான்
- மலையமான் திருமுடிக்காரி
- ஓரி (வள்ளல்)
- எவ்வி ( அகநானூறு 266)
- இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி,
- சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, (தகடூர் யாத்திரை) அரிசில் கிழார்
- பொருட்டெழினி
- கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன் (5-ம் பத்தில் பரணர் பாடினார்)
- செல்வக்கடுங்கோ வாழி ஆதன் (7-ம் பத்தில் கபிலர் பாடி னார்)
- வையாவிக் கோப்பெரும் பேகன் (புறம் 146)
- மோசிக் கீரனார் - சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (புறம் 50, கொண்கானங் கிழான் (புறம் 156), நன்னன், ஆய்

**பிற புலவர்களும், மன்னர்களும்:**

- ஔவையார், பரணர் (புறம் 99), கபிலர், அரிசில் கிழார் (பதிற்றுப்பத்து 5-ம் பத்தில் கடல் பிறக்கு ஓட்டிய செங்குட் டுவனைப் பரணர் பாடினார், பதிற்றுப்பத்து 7-ம் பத்தில் செல்வக்கடுங்கோ வாழி ஆதனைக் கபிலர் பாடினார். பர ணரின் வயோதிப காலத்தில் கபிலர் இளைஞராய் இருந்தி ருக்கலாம்.
- ஔவையாரால் பாடப்பட்டோர் - நாஞ்சில் வள்ளுவன் (புறம் 140), வெள்ளிவீதியார், பரணர், சேரமான் மாரி வெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி (ஒருங்கிருந்த போது பாடினார் புறம் 367), பொறையன் (கொல்லி), பாரி, நாலூர் கோசர், எழினி, கிள்ளி (வெண்ணி) (நற்றிணை 390)
- நாஞ்சில் வள்ளுவனைப் பாடியோர் (வள்ளல்) - மருதன் இளநாகனார் (புறம் 138, 139), கருவூர்க் கதப்பிள்ளை (புறம் 380), ஒருசிறைப் பெரியனார் (புறம் 137)
- பிட்டங்கொற்றன் - (சேரமான் கோதையின் படைத்தலை வன், வள்ளல்) கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் (புறம் 168)
- சேரமான் கோக்கோதை மார்பன் - பொய்கையார் (புறம் 48)
- அரிசில் கிழார் - எழினி, அதியமான் (புறம் 230)
- கபிலரால் அறியப்பட்டவர்கள் - பாரி, பாரி மகளிர், காரி (புறம் 121, 122, 123, 124), வையாவிக் கோப்பெரும் பேகன் (புறம் 143), விச்சிக்கோன் (புறம் 200), இருங்கோவேள் (புறம் 201), ஆரிய அரசன் பிரகத்தனன் (குறிஞ்சிப் பாட்டு), நள்ளி (அகம் 238), ஓரி, காரி (நற்றிணை 320), நன் னன் ஐங்குறுநூறு 206), அன்றி, திதியன், கயமனார்.
- பரணரால் அறியப்பட்டவர்கள் - கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவன் (பதிற்றுப்பத்து 5-ம் பத்து), உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி (புறம் 4), சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேல் பல்தடக்கை பெருவிறற் கிள்ளி (புறம் 63), வையாவிக் கோப்பெரும்பேகன் (புறம் 141, 142, 144, 145), ஐயை, தித்தன் (அகம் 6), பொறையன் (அகம் 62), அஃதை, ஆதிமந்தி (அகம் 76), கரிகால் பெரு வளத்தான் (அகம் 125), நன்னன், மிஞிலி, அதிகன், மாந்த-ரஞ் சேரல் இரும்பொறை (அகம் 142), ஆஅய் எயினன் (அகம் 148), பசும்பூண் பாண்டியன், அழுந்தை, அன்னி மிஞிலி.
- நக்கீரர் - பாண்டியன் நெடுஞ்செழியன் (நெடுநல்வாடை, அகம் 36, 57, 78), கபிலன், பாரி, எவ்வி, திதியன், அன்னி, பெரும்பூட் கிள்ளி, தழும்பன், பசும்பூட் பாண்டியன், திரை யன், பழையன்மாறன், கிள்ளிவளவன், சிறுகுடி வாணன், பசும்பூண் வழுதி, சிறுகுடி அருமன்.
- நச்செள்ளையார் - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (பதிற் றுப்பத்து 6-ம் பத்து), குடக்கோ நெடுஞ்சேரலாதன்,
- பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன் (புறம் 67, 212), பாண்டியன் அறிவுடை நம்பி (புறம் 184),
- பூதப்பாண்டியன் - பரணர், கபிலர்,
- பெருஞ்சித்தனார் - அதியமான், குமணன், பாரி, காரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய் (புறம் 158),
- மருதன் இளநாகனார் - நன்மாறன் (பாண்டியன் இலவந்தி கைப் பள்ளித் துஞ்சிய, நாஞ்சில் வள்ளுவன் (புறம் 139),

- முடத்தாமக் கண்ணியார் - சோழன் கரிகால் பெருவளத் தான் (பொருநராற்றுப்படை) (உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி (புறம் 130),
- முடமோசியார் - பெருநற்கிள்ளி, அந்துவஞ்சேரல் இரும் பொறை (புறம் 13),
- நத்தத்தனார் - நல்லியன்கோடன் (சிறுபாணாற்றுப்படை), செழியன் (சி.பா.ஆ 65), தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் (82), பேகன் (87), பாரி (91), காரி (95), ஆய் (99), அதிகன் (103), நள்ளி (107), ஓரி (111),
- நப்பசலையார் - கிள்ளிவளவன், மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் (புறம் 174), கபிலன், காரி (புறம் 126), கபிலர்,
- நரிவெரூஉத் தலையார் - பெருஞ்சேரல் இரும்பொறை (புறம் 5).
- நல்லிறையனார் - குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (புறம் 393),
- நாகனார் (வெள்ளைக்குடி) - கிள்ளிவளவன்.
- நெட்டிமையார் - பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (புறம் 9, 12, 15),
- பேராலவாயார் - பூதப்பாண்டியன் தேவி கோப்பெரும் பெண்டு (புறம் 247, 246)

மன்னர், புலவர் முதலியோரை இவ்வாறு தொடர்புபடுத்தி இணைப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வாழ்ந்த மன்னர், புலவர் முதலியோரை இனங்கண்டு, வரலாற்றிலிருக்கும் தொய்வுகளைச் (தளர்வுகளை) சமன் செய்து வரலாற்றுக் காலத்தைக் கணக்கிடுவதற்குரிய ஒரு முயற்சி இது வாகும்.

## முடிவுரை:

தமிழ் மக்களின் தொன்மையை அறிந்து கொள்வதில் இன்று நாம் ஆர்வம் மிக்கவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு மனிதருக்கும் தமது அடையாளம் என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இக் கருத்தை மறுப்பவர்களும் இருக்கலாம். ஏதோ ஒரு மோகத்தில் இன்று பழமை பேசுபவர்களை, பழமையை அறிவதில் ஆர்வம் காட்டுபவர்களை எள்ளி நகையாடுவதை நாம் நாளாந்தம் காண்கிறோம். கனடியப் பல்கலாசார மண்ணில் வாழும்போது தான் அதனுடைய முக்கியத்துவமும் அருமையும் நன்றாகவே புரிகிறது. நான் கனடாவுக்கு 35 ஆண்டுகளுக்கு முன் வந்தபோது எம் இனத்தவரை யாரும் கண்டுகொள்வதில்லை. எம்மை அன்று விசித்திரமாகப் பார்த்தவர்கள் இன்று நிமிர்ந்து பார்க்கும்படியாக நாம் நிரூபித்திருக்கிறோம். தமிழர் மிகுந்த உழைப்பாளிகள், திறமைசாலிகள் என்னும் பெயரை, அபிப்பிராயத்தை நாம் ஈட்டுவதற்கு எமது, எமது சந்ததியினரது திறமையும் அயராத உழைப்புமே காரணமாகும். தன் அடியை உதறிவிட்டு வாழ நினைக்கும் ஒவ்வொரு மனிதனும் 'பெற்றாரற்ற அநாதை' போன்றதொரு நிலையை உணரவேண்டிய நிலை ஒன்று வரும்.

தமிழரின் தொன்மையை உலகிற்கு உரத்துச் சொல்வது மட்டுமல்ல எம் மக்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டிய கட்டாயமும் இருக்கிறது. ஆதிச்ச நல்லூர், பொருந்தல், கொடுமணல், அழகன்குளம், கீழடி இன்னும் இவை போன்ற பல தொல்லியல் தளங்கள் இந்த ஆய்வில் உள்வாங்கப்பட்டன. தமிழரின் தொன்மை தற்போதைக்கு விஞ்ஞான ஆய்வின்படி பொ.ஆ.மு. 905-ம் ஆண்டு (ஆதிச்ச நல்லூர்) என்று அறியப்பட்டிருக்கிறது. பெருங் கற்படைக் காலம் பொ.ஆ.மு. 1000 முதல் பொ.ஆ.பி. 1-ம் நூற்றாண்டு வரை நீண்டு காணப்படுவதாக, அகழாய்வில் இன்று முன்னிலையிலிருக்கும் பேரா. கா. ராஜன் கூறுகிறார். மக்ஸ் பிளாங்க் (Max Planck) என்னும் தொல் மானிடவியல், தொல்லியல் முதலிய அறிவியல் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் உலக அங்கீகாரம் பெற்ற தாபனம், 'திராவிட மொழிகளின் காலத்தை 4500 ஆண்டுகளுக்கு முன்னயதாக', மார்ச் 21, 2018-ல் நிறுவியிருக்கிறது.

ஆய்வுகள் இப்போது தானே தொடங்கியிருக்கின்றன. நாம் இப்போ கூறியவை மாற்றியமைக்கப்படலாம். காலம் தான் பதில் சொல்லும்.

கடந்த 34 மாதங்களாக 'தொன்மையைத் தேடி' என்னும் இத் தொடர் இந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தை, இலக்கியம், கல்வெட்டுகள், நாணயம், தொல்லியல், மானிடவியல் முதலியவற்றின் அடிப்படையில் ஆய முயன்றிருக்கிறது. அவ்வாறே, இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களது சமூகத்தை, அரசியலை, அரசர்களை, போர்களை என்று இன்னும் இவை போன்ற பல கோணங்களில் ஆராயும் முயற்சியில் இந்த ஆய்வு தொடர்ந்திருக்கிறது.

'தொன்மையைத் தேடி' என்னும் இந்த ஆய்வுத் தொடர் பல துணிகரமான முடிவுகளை அறிஞர் முன் வைத்திருக்கிறது. அவற்றிற்கு எதிரான மறுப்புகள் எதுவும் இதுவரை கிட்டவில்லை. பேசப்படவுமில்லை. இந்த ஆய்வு மிக விரைவில் நூல் வடிவம் பெறவுள்ளது. இத்துணை காலமும் எனது ஆய்வுகளைப் படித்து அபிப்பிராயமும் ஊக்கமும் கொடுத்த அன்பர்களுக்கும், 'தாய்வீடு' சஞ்சிகையில் வெளியிட்டு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த தலைமை ஆசிரியருக்கும், ஆசிரியர் குழாத்துக்கும் எனது மனமார்ந்த நன்றி.

(முற்றும்.)



selvanayaki.s@thaiveedu.com

**தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# தமிழ்வலை - 101


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-101 வினா

### இடமிருந்து வலம்

2 வேட்கை

4 இஸ்ரவேல் பிரதமர்

7 கிரேக்க காவியம்

8 வியாபாரம்

10 இலங்கை தொல்குடி மக்கள்

11 கொட்டில்

13 அபராதம்

14 திருதராட்டினனின் போர்க்கள செய்தியாளன்

17 காப்பு

18 கடுழிய மறியல் தண்டனை

### மேலிருந்து கீழ்

1 விரதம்

3 இளம்பெண்

4 வட இலங்கையில் ஓர் இடம்

5 இலங்கைப் பிரதமர்

6 நாங்கள்

9 ஓர் இந்திய மொழி

11 காளைகளுக்கான ஓர் அணிகலன்

12 துன்பம்

15 ஒருவகை மீன்

16 வேதம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
தொலைநகல்: **416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 100க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 1 அ | ■ | 2 உ | ■ | 3 கூ | னி | ■ | ■ |
| ■ | 4 கூ | வி | த் | த | மி | ழ் | ■ | ■ | 5 வா |
| 6 ப | ■ | ச | ■ | வு | ■ | ■ | 7 க | த | லி |
| ல | ■ | ப் | ■ | ■ | 8 ஏ | ■ | ண | ■ | ■ |
| 9 க | த | ரி | ன் | ■ | 10 வா | ர | ணா | சி | ■ |
| ணி | ■ | ■ | ■ | ■ | ன் | ■ | ம் | ■ | ■ |
| ■ | 11 வீ | ழ் | ச் | 12 சி | ■ | 13 வி | பூ | தி | ■ |
| ■ | ர | ■ | ■ | க் | ■ | ■ | ச் | ■ | ■ |
| 14 மோ | வா | ய் | ■ | கா | ■ | 15 க | சி | ப் | 16 பு |
| ■ | கு | ■ | 17 ப | கோ | டா | ■ | ■ | ■ | டை |

## தமிழ்வலை-100 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

எஸ். ஜெகதீசன், ரொறன்ரோ.
தவமணி கனகசிங்கம், பாரிஸ்.
சிவமணி பூரணம், ஸ்கார்பரோ
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்.
வி. தவமணிதேவி, இலங்கை.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
விநோதா வசீகரன், மார்க்கம்.
உமா கதிர், ஏஜக்ஸ்.
சண்முகநாதன் சபேசன், மார்க்கம்.
தேவதாஸ், நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**கம்ஷாகினி மகேந்திரா,**
மட்டக்களப்பு.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# வாழ்வுரிமை

## – மா. சித்திவிநாயகம்



யாழ்ப்பாணத்தில் வாடைக் காற்றுச் சுழன்றடித்துத் திமிர் பிடித்தாடியது. நெடிதுயர்ந்த பனை மரங்கள் காற்றின் வேகத் திற்கு காவோலை சரசரக்கச் சரசமாடின. இரவு முழுக்க மு-த் தவெளிச் சத்தம் முத்தர் எனப்படும் சரவணமுத்தரைப் படாத பாடு படுத்திக் கொண்டிருந்தது.

முத்தர் நாட்டுக் கூத்துக்காரர்.

தென்மோடி முத்தர் என்றால் மூலை முடுக்கெல்லாம் தெரி யும். பெருங்குரலில் ஒட்டு மீசை வைத்து துள்ளிப் பாடினா ரென்றால் அவரின் கணீரென்ற குரலில் நாலு தெருவும் நெஞ்சை நிமிர்த்திப் பெருமை கொள்ளும்.

முன்பெல்லாம் கோவில் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், உழவர் விழாக்கள் என்று எல்லாவற்றையும் நாட்டுக்கூத்து, நாடகம், கவியரங்கு, நாதஸ்வரம், தவில், சின்ன மேளங்கள் ஆக்கிரமித்திருந்த காலம்.

இன்றைக்கு அத்தனையும் அழிந்து பட்டுப்போயிற்று. படித் துப் பல்கலைக்கழகம் சென்ற பகுத்தறிவுவாதிகளும், மொழி யாய்வு, கலையாய்வு நடத்துகின்ற ‘மேன்மைமிகு’ பேராசிரியர் கள், ஆசிரியர்கள், அறிவார்ந்தவர்கள் கூட அழிந்துபோகும் தம் கலைகளை உயர்ப்பிக்க வேண்டுமென்று நினைப்பது மில்லை. அதற்காகப் பேசுவதுமில்லை.

உள்ளூர் கலைகளை அழிச்சுப் போட்டு ஆள் விழுங்கிக் கலைகள் வந்திறங்கிப் போச்சு...

முத்தவெளியில் இருந்து உச்சஸ்தாயியில் சினிமாப்பாட்டுப் பாடும் சத்தத்தைக் கேட்கக் கேட்க முத்தருக்கு பிரசர் ஏறி மயிரில்லா மண்டை வெடித்து இரத்தம் பாயும் போலிருந்தது.

‘காவாலியா காவாலியா’ முத்தருக்கு கோபம் கோபமாக வந் தது.

கேட்டியே நாயளின்ர பாட்டை... என்ன பாட்டு இது... இதில என்ன அர்த்தமும் எழுத்தும் இருக்கு...

இதைப் பாட எங்க இருந்தோ ஆள் பிடிச்சுக் கூட்டியந்திருக் கிறாங்கள்... உன்னைப் பிடி என்னைப் பிடியென இதைப் பார்க்க நாடே அள்ளுப்பட்டுப் போகுது. உங்க வீட்டுச்சனமா எங்க வீட்டுச் சனமா ?

ஒரு போதை மருந்து செய்கிற அதே வேலையை ஒரு போதை யேற்றுகிற கருத்தில்லாப் பாடல் செய்கிறதென்பதை இவர் கள் ஏன் வெளியில் சொல்லுறதில்லை.

அந்தப் பாட்டைப் பாடினவனுக்கு விருது, இசையமைச்சவ னுக்கு விருது, அதுக்கு ஆடினவளுக்கு விருது, என்ன பாட் டடா அது என்று கேட்டால், சொல்லத் தெரியேல்லை... அதுக்கு அர்த்தமும் புரியேல்லை...

அர்த்தம் புரியாத பாட்டுக்கு ஆலவட்டம் பிடிக்கிற இவனுக தான், விளங்கா இலக்கணமும், இலக்கியமும் கற்றுக்கொடுக் கிற பல்கலைக்கழகம் திறப்பானுகளாம்... கற்றுக் கொடுக்கிற பேராசான்களாம்... கலைத்துறை விற்பன்னர்களாம்... அதுல வந்து படிக்கோணுமாம். இந்தப் பாட்டைப் பார்க்கப் பாய்ஞ்சு பனையேறப் பண்ணி... மதிலை உடைக்கிற அளவிற்கு உசுப் பேத்தி... சும்மா கிடந்த இளசுகளுக்கு உணர்வேற்றி... எத் துணை பாய்ச்சம் காட்டுறாங்கள்... அவங்கள் புத்திசாலிகள்.

சனம், எய்தவன் இருக்க அம்பை நோகுதுகள்! காவாலிப் பாட்டைப் பாடியவர்கள் மகா கலைஞர்களாம், பார்க்க வந்த வர்கள் காவாலிகளாம்... கட் அவுட்டை வைச்சிற்று அதுக்கு பாலூத்த வைக்கிறவன் தலைவன். பாலை ஊத்துறவன் காவாலி. இந்த நடிகர்களின் நாயக வழிபாடே நமக்கு விட் டேந்தியான பல முதல்வர்களை ஜனநாயகமென்ற போர்வை யில் உருவாக்கி விட்டிருக்கின்றது. தேவர்களை, தேவதை களை நாளும் உருவாக்க நிற்கிறது. கதாநாயகன் என்பவன் கட்டாயம் வெற்றி பெற்றே தீருவான் என்ற விதியைப் போதிப் பதே இந்தச் சினிமா... வாழ்க்கை என்பது வெற்றியும் தோல்வி யும் மாறி மாறி வருவது என்கிற அடிப்படைக் கோட்பாட்டைக் கூட அது பரிசீலிப்பதில்லை.

மக்கள் காணாத தெய்வத்தை நடிகன் அளவுக்கு இறக்கிக் கொண்டுவந்து, நடிகனை தெய்வமாக்கி உயர்த்தி வைத்தி ருப்பது இந்திய சினிமா. இன்றைக்கு அதற்குக் குடை பிடிக்க



நிற்கிற இந்த ஊரில இனி எது மிஞ்சும்... அத்தனையையும் அழித்துச் செத்த சுடுகாடாக்கப் போறாங்களே? முத்தர் கரக ரத்த குரலில் புலம்பிக் கொண்டிருந்தார்.

உலா, பொடியடி, வீசாணம், எட்டு, நாலடி, குத்துமிதி, பாச்சல், ஒய்யாரம், தட்டடி, அடந்தை, குத்துநிலை என்றெல்லாம் ஆண், பெண் கூத்தின் அத்தனை தாளக்கட்டு வகைகளும்

கற்று, ஆண் பெண்ணிற்கு என்று அவற்றைத் தரம் பிரித்து, கூத்துக்கலை கண்ட முதியவரின் தார்மீக கோபம் அது.

நீராவியில் வேகவைத்து, பூச்சியண்டாத தைலங்கள் பூசி பதப்படுத்தப்பட்ட பனைச் சுவட்டோலைகள் இஞ்ச உள்ள வெயிலுக்குள்ளும் 500 ஆண்டுகளுக்கு மேலாயும் நிலைத்து நிற்கும் என்றறிந்து, இங்குள்ள கணிதம், வைத்தியம், கலைகளை ஓலையில் எழுதிப் பாதுகாத்தனர் முன்னோர். மறுபடியும் அதனைப் பிரதிபண்ணி பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினவங்கள் அதைப் பார்த்து பதிவெடுத்து எங்க சந்ததி வரைக்கும் அதைக் கொண்டு வந்தாங்கள். காலத்தால் முந்தியதென்கிற எகிப்திய, மொசப்பத்தேமிய 'பைபரஸ்' புல்லுச் சுவடிகளுக்கும், பௌத்த ஓலைச் சுவடிகளுக்கும் கூட இதே விதிதான்... கடல் அழித்தும், பூச்சி அரித்தும், எஞ்சியதை யாழ் நூலகத்தோடு எரிந்த 95 ஆயிரம் அரிய ஓலைச் சுவடிகளும் இதற்குள் அடக்கம். அதுக்குள்ளும் எத்தனை நாட்டுக் கூத்துப் பிரதிகள் அழிஞ்சுதோ யார் கண்டது...

கவலையோடு முனகினார் முத்தர்.

திண்ணையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கோபாலு... சும்மா அலட்டாத முத்தர்... பனை, தென்னை, மா, பலா, முருங்கை வளர்த்து நாட்டுக் கூத்தாடின எங்களின்ர அந்தக் கால மண்ணென்றும், மனிசரெண்டும் இப்பவும் உன்ர எண்ணம்... இங்குள்ள மண்ணும், மனிசரும் மாறிப் போய்க் கனகாலம் முத்தர்...

இது படங்காட்டிகளின்ர மண் கண்டியோ ?

'பனங்கொட்டை நாட்டிய மண்ணில் கறுவாக்கண்டும், லாவுளுக்கண்டும் தாறம் ஆளுக்கொண்டாய்க் கொண்டுபோய் வையுங்கோ என்கிற காலம் எல்லோ... அன்னியப் பயிரை நாட்டி நம்ம பூர்வீகப் பயிர்களை அழிக்கிற வேலையெல்லோ நடக்குது இங்கே நாளும்...

மூண்டு நாளில தக்காளி காய்த்துச் சொரியுது. ஒற்றை நாளில் அத்தனை முட்டையும் பொரிச்சிக் கோழியாகுது. பிஞ்சில அத்தனையும் பழுத்துப் போகுது... ஆளுக்கொரு ஸ்மார்ட போனோட உலகத்தைப் படம்பிடிப்போமெண்டு அலையுது சனம்... நீ உன்ர பழைய காலக் குப்பி விளக்க வைச்சுக் கொண்டு இன்னமும் ஓலைச் சுவடிக் கதையோட நிற்கிறாய். ஜேர்மானிய குட்டன் பேர்கின்ர அச்சுயந்திரத்தையும் தூக்கி யெறிஞ்சுபோட்டு ஆளுக்காள் வீட்டிலேயே டிஜிட்டல் புத்தகம் அடிக்கின்றாங்கள் நம்மாளு... செத்தால் உயிர்ப்பிக்கத் தெரியாதே தவிர, மிச்சம் அத்தனை திருகுதாளமும் செய்யிற இவங்களை நீ இனித் திருத்தேலுமோ... புலம்பிஎதை எடுப்பாய்... எண்டான் கோபாலு.

முத்தருக்கு கடும் கேந்தி...

முத்தர் வீட்டிற்கு முன்னுக்குள்ளவன் கோபாலு... மனைவி இறந்த பின் தன் வயதாகிய ஒற்றைக் கழுதையோடு தனித்து விடப்பட்டவன். அவன் எப்பவும் முத்தரின் திண்ணையில்தான் இருப்பான். ஒரு காலத்தில், இந்தப்பகுதி மக்களின் சுகாதாரப் பிரதிநிதி அவன் தான்.

அவன் வெழுத்து, அயன்பண்ணி மடித்து வாற உடுப்பைத் தான் இங்குள்ளவர்கள் மகிழ்வோடு அணிந்த காலம் உண்டு. அவன் ஊரெல்லாம் திரிந்து தன் கழுதையில் அவற்றைச் சுமந்து, சண்ணாங்குளத்து நீரில் வெழுத்து, மடித்து, அவற்றிற்கு ஒவ்வோர் வீட்டிற்கும் ஒவ்வோர் குறியிட்டு வைப்பான்.

அந்தச் சாதி, இந்தச் சாதி, அந்த மதம், இந்த மதம் என்று எந்தப் பிரிவுமற்று எல்லோர் உடுப்பையும் ஒன்றாய்த் தோய்த்து, ஒரே கறைக் கொட்டையால் அடையாளம் வைத்தவன் கோபாலு. அது மின்சாரமில்லாக் காலம். சிரட்டைக் கரியில் இஸ்திரி போட்ட உழைப்பாளி. தூரத் தொலைந்து போன சிறுவர்களை, முதியவர்களைக்கூட எந்த வீட்டின் பிள்ளை இவன் என்று அவர்கள் போட்டிருந்த உடையில் கண்டு பிடிக்க கோபாலு போட்டிருந்த குறியீடுகள் உதவிய சம்பவங்கள் உண்டு... இன்றைய நவீனக் கணினியின் குறியீடாக ஒருகாலத்தில் இவன் குறிதான் இருந்தது. இன்றைக்கு அனைத்தும் அழிந்து பட்டுப் போயிற்று. நவீனம் அனைத்தையும் விழுங்கிக் கொண்டிருந்தது. இயற்கை விவசாயத்தை, கலைகளை, தொழிலை, வாழ்வியலை, மந்தை வளர்ப்பை என அனைத்தையும் அது புரட்டிப் போட்டிருந்தது.

உனக்கு ஒண்ணு தெரியுமோ முத்தர். இந்த முத்தவெளிப் பாட்டுக்கு வந்து ஆடுற பெட்டையோட நிண்டு போட்டோ எடுக்க 30 ஆயிரமாம். நேற்றுப் பொடியள் கதைச்சுக் கொண்டு போனாங்கள்.

முப்பதாயிரமோ... முத்தருக்குத் தலை சுற்றியது. அவரின் காலத்தில் அது 3 பிள்ளையளின்ர சீதனம்.

மானிட குலத்தை மிகப் பெரு அச்சுறுத்தலாகி வருகிறது சுற்றுச்சூழல் நெருக்கடி. காடுகள், நிலம், நீர் மற்றும் மரபணு வளங்கள் போன்ற இயற்கை வளங்களை தொடர்ந்து அழிப்பதால் ஏற்படும் உயிர்ப் பேராபத்து மானிட உயிர்ப்பை அச்சுறுத்துகிறது.

வழி வழியாக வந்த சமூக கட்டமைப்புகள் தகர்ந்து, கலைகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள் சீரழிந்து அடையாளங்கள் அத்தனையும் அழிந்து படும் அவலம்.

இதனால் வருவதாகச் சொல்லப்படுகிற நவீனப் பன்முகத் தன்மை நல்லதா ? கெட்டதா ?. பழங்காலக் கோபாலுகளுக்கும், முத்தர்களுக்கும் புரியாப் புதிராக இருக்கிறது.

கோபாலு வளவுள் படுத்திருந்த கழுதைக்குப் பொறி தட்டியது.

தன் காதில் யாரோ வந்து தன் உன்னத சங்கீதத்தை இசைப்பது போலவும், தன்னை இந்திரலோகத்திற்கு இழுத்துச் செல்வது போலவுமுணர்ந்தது அது.

சாம்பல் நிறம், கத்தையாய் வெட்டப்படாத சடா முடி, காலைத்தூக்கி நடனமாடக்கூடிய நர்த்தனக் குளம்புகள். தாளம் தப்பா தன் குரலிசையைப் போற்றி மகா தேவர்களின் கூட்டம் வெளியே முண்டியடிப்பதாக கனவு கண்டது கழுதை.

தன்னை ஆரத்தழுவி அரவணைக்க காத்துக் கிடக்கிற அந்த ஞானப் பெருவெளிக்குள் கலந்து விடச் சொன்னது உள்ளுணர்வு. உணர்வே எம்மை உலுக்குவது. வாழச் சொல்வது. சும்மாவா சொன்னார்கள் ‘கண்ணின் கடைப்பார்வை கன்னியர்கள் காட்டி விட்டால் மண்ணிற் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்’. மலையிலும் மரத்திலும் என்னைப் பார்க்க எங்கும் நிறைகிறது கூட்டம்.

நித்திரையில் கழுதை விறு விறென்று எழுந்து நடந்தது. தன்னை வரவேற்கச் சத்தம் வந்த திசை நோக்கி மகிழ்வோடு தள்ளாடித் தள்ளாடி ஓடியது.

படித்தவன், படிக்காதவன், ஆண், பெண், சிறுவன், சிறுமி, அந்த மதம், இந்த மதம் என்ற எந்தப் பேதமுமில்லாமல் தன்னை இருகரம் தட்டி வரவேற்க முண்டியடித்துக் கத்துவதாக கழுதை கற்பனையோடு நடந்தது. இற்றைவரை எதுக்கெடுத்தாலும் ஆளுக்காள் முரண்பட்டு அடிச்சுக்கொண்டு சாகின்ற மூதேவியள் இதுக்கு மட்டும் எப்படியடா ஒண்ணாச் சேர்ந்தாங்க... கழுதைக்குப் பிடிபடவில்லை.

உலகத்தைப் படைத்தவனின் இசையும், நடனமும் தன்னோடு பொருந்தியிருப்பதாக அவர்கள் தீர்மானம் பண்ணிவிட்டார்கள்... கழுதைக்குப் பெருமிதம்...

நடனத்தின் அத்தனை நுணுக்கமும் தெரியுமா இந்தக் கழுதைக்கு?

பக்கத்தில் நின்றவன் கேட்ட கேள்விக்கு பனை மரத்தில் ஏறி நின்று பார்க்கத் தயாரானவன் பதிலளித்தான்... வாறது சொர்க்கமடா... அந்த இறை தான் இந்த இறை... இதன் இசை தான் உலகத்தின் முதல் இசை...

கழுதைக்கு தலைகால் புரியவில்லை. கருடா சௌக்கியமா என்று கேட்ட பரமசிவன் கழுத்தில் இருக்கிற பாம்பாய் போனது தன்னிலை மறந்த கழுதை.

சூடை, மத்தி, கவல, மொதக்கொண்ட, கீரைமீன் என்று ஒரே மாதிரியாய் தெரிகிற மீன்களுக்கே வகை பிரிச்சு வேடிக்கை பார்க்கிற மனிதப் பசாசுகள் தன் இசைக்கு மயங்கி ஒன்றாகி விட்டார்களா?

இங்கு கூடிய அத்தனை மூடர்களும் புகழ்கிற அளவிற்கு அரும் இசையா என் கத்தல்?

***டங்கா மாறி ஊதாரி, புட்டுகின்ன நீ நாறி..!***

***தமிழ் இஸ் மை மதர் டங்கு,***

***ஆலுமா டோலுமா ஐசாலக்கடி மாலுமா,***

இப்ப கடைசியா இங்க நான் பாடப் போகிற எழுத்தில்லா அனுருத்தின் பாடலான காவலியா காவாலா... என்னே பாடல்கள்... எத்துணை ரசிப்பு. இந்த மேடைகளும் சினிமாவும் வெறும் காட்சியை மட்டும் உற்பத்தியாக்குவதல்ல... உயிர்க்கனவையும், உணர்வு வெறியையும் உற்பத்தியாக்குவது. அதனால்த்தான் கழுதையான எனக்குக்கூட தமிழ்ப் பேரறிஞர்களே விருது கொடுத்துக் கொண்டாடும் பெரும் பேறு.

கழுதை ‘உச்சு’ கொட்டியது. காலம் கலிகாலம் தான்...

முத்தவெளிக்கு வந்து விட்டது கழுதை.

ஒரே ஓர் நொடி... கண்மூடித் திறப்பதற்குள் ஏக கலவரமாகி நாலாபுறமும் சனக்கூட்டம் பாய்ந்து திசை மாறி ஓடியதில் கழுதை நசிபட்டு வீழ்ந்தது.

எல்லோரும் அதை மிதித்தபடி ஓடிக்கொண்டிருந்தார்கள். அத்தனை கனவுகளும் பொய்த்துப் போய்... கழுதை மயங்கிப் போனது.

போர் நடந்த பூமிபோல முத்தவெளி அலங்கோலப்பட்டுக் கிடந்தது. ஒழுங்கற்றுக் கிடந்த கதிரைகளும், விசிறி எறியப்பட்ட துண்டு பிரசுரங்களுமாய் நிலை குலைந்து கிடந்தது அது. தடுமாறியோடிய மக்களின் செருப்புக்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. அயலில் உயிர்விடும் தறுவாயில் கிடந்த கழுதையை கண்டு ஓடோடி வந்து தூக்கியவள் கிளிநொச்சி விலங்குப் பண்ணைச் ஸ்ரெவ்வனி.

நல்லகாலம்... கழுதைக்கா? அவளுக்கா? என்று தெரியவில்லை.

தன் விலங்குப் பண்ணை வாகனத்தில் கழுதையை ஏற்றினாள்.

‘சொர்க்கத்திற்கு ட்ராகன் இறைச்சி பூலோகத்திற்கு கழுதை இறைச்சி’ என்றொரு சீனப் பழமொழி உண்டு. பூமியில் முறுக்கோடு வாழ கழுதை இறைச்சி நல்லதாம்.

ஸ்ரெவ்வனியின் இத்தாலியில் சிசிலியன் கழுதைச் சலாமி என்பது தேடக் கிடைக்காத அரிய உணவு... கழுதை இறைச்சியை உப்புக் காற்றுப்படும் கடற்கரை வெயிலில் உலர்த்திக் காயவிட்டுக் மசாலாக்கள் சேர்த்துப் பதமாக்கித் தயாரிக்கப்படும் தொத்திறைச்சி... பூலோகத்து ஔடதம். நினைக்கவே நாவூறியது அவளுக்கு!

-தொடரும்-



sithivinayagam@thaiveedu.com

# இடம்

– உஷாதீபன்

'தொடர்பு கொள்ள முடியாத தூரத்தில் அங்கே வீடுகள் இருந்தன. அப்படித் தனித்தனியாக ஒற்றையாக அவை நிற்பது அவனுக்குள் திகிலை ஏற்படுத்தியது. தொலை தூரத்தில் ஒரு மாடு மேய்வதுபோல் தெரிந்தது. இன்னும் சற்றுத் தள்ளி ஒன்றிரண்டு ஆடுகள் படலங்களாய்... மேய்ப்பன் எங்கே என்று அவன் கண்கள் தேடின.

வீடுகளுக்கு அப்பால் பரந்து விரிந்து கிடந்தது ஒரு பெருங்கரடு. இன்னொரு பக்கம் அடர்ந்து தொடர் கொண்ட ஒரு மலை. கீழே வெவ்வேறு விதமான வடிவங்களில் வீடுகள். தனித்த ஆளரவமற்ற ஒற்றை வீடுகள். ஊய் ஊய் என்று காற்று மோதி மோதித் திரும்பும் வெளி. சுற்றிலும் பாதைகளற்று கருவேலையும், முட்செடிகளும், புதர்களும், மண்டிக் கிடக்க அவைகளுக்கு நடுவே நடந்து கடப்பது சிரமமாயிருந்தது. முக்கிய தார்ச் சாலையிலிருந்து வெகு உள்ளே தள்ளித் தள்ளித் தனித்து இருந்தன அவ்வீடுகள். பகலில் வெளிச்சத்தோடு வந்தால்தான்! இரவினில் இறங்க வேண்டிய இடம் இல்லை அது. வீடுகளுக்கான வண்ணம் அங்கே வெள்ளையாகவே இருந்தது. சிலவை பூச்சுக்களுக்காகக் காத்திருந்தன. முழுமையானது எதுவும் இருக்குமா என்று அவன் கண்கள் தேட ஆரம்பித்தன.

எந்தச் சத்தமுமின்றி அந்த மலைகளுக்கு அடிமையாய்க் கிடக்கும் வீடுகள். அவை அவற்றை அமுக்கிப் பிடித்திருப்பதுபோல் நினைத்துக் கொண்டான். மலையின் பக்கவாட்டிலிருந்து ஒரு பெரிய கை தோன்றி அப்படியே அந்த வீடுகளை அடியோடு பெயர்த்து எடுத்துத் தள்ளித் தள்ளி வைத்திருப்பது போல் தோன்றியது அவனுக்கு.

உச்சியில் துருத்திக் கொண்டிருக்கும் ஒரு பெரும் பாறை கீழே உருண்டால் எந்த வீடு அல்லது வீடுகள் துவம்சமாகும் என்று அவன் கண்கள் தேட ஆரம்பித்தன. அந்த வீடுகளில் உள்ளவர்களுக்கு அந்த மலையே தெய்வம். வெளியே வந்து இரு கைகளையும் பரந்து நீட்டி அவைகளை கண்மூடி வணங்கினால் போதும். பின்புறமிருந்து இரு மலைகளுக்கும் நடுவே நுழையும் காற்று ஒன்று குவிந்து அவ்வீடுகளைத் தாக்குவதாய்த் தோன்றியது.

வந்ததிலிருந்து அந்தத் தனித்த வீடுகளின் இருப்பு பெருத்த மனத் தொந்தரவுக்கு அவனை ஆளாக்கியிருப்பதாய் உணர்ந்தான். உடன் வந்த மனைவியிடம் அவன் அதைச் சொன்ன போது, அவள் அதை எப்படிப் புரிந்து கொண்டாள் என்பதை அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. தான் மட்டும் தனியே வந்திருக்கலாம் என்று தோன்றியது.

அவர்கள் பேருந்தை விட்டு இறங்கிய இடத்திலிருந்து அந்த இடத்திற்குப் பாதைகள் இல்லை. குறிப்பிட்டு இந்த இடம் என்று தெரியாமல்தான் இறங்கினார்கள். சாலைக்கு இத்தனை தூரத்தில் அங்கே எப்படி வீடுகள் அமைந்தன என்று வியப்பாய் இருந்தது. மலைக்கு அந்தப் புறத்தில் ஒரு கிராமம் இருப்பதாய்ச் சொன்னார்கள். ஒரு வேளை வழி அங்கிருந்து தோன்றியிருக்குமோ என்பதாகச் சந்தேகம் வந்தது.

இப்போது அங்கங்கே கற்கள் பதித்திருப்பது தெரிந்தது. அவற்றில் எண்கள் இடப்பட்டிருந்தன. சிவப்பும் வெள்ளையுமாய் பெயின்ட் பூசி, கறுப்பில் எண்கள். தன் சட்டைப் பையிலிருந்து அந்த வரைபடத்தை எடுத்தான் அவன். எதுவுமே புரியாமல் இருந்தது. ஊன்றியிருக்கும் கற்களை, அந்த இடத்தை அதில் தேடினான். இதெல்லாம் உரிமையுள்ளவர்கள் வந்து காண்பிக்க வேண்டியது என்று சலித்தது மனம்.

இப்படி ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டால் எப்படியிருக்கும் என்று நினைத்தான். அதை அவளிடம் சொன்னபோது பதிலுக்கு அவள் ஏதோ மந்திரத்தை உச்சரிப்பது தெரிந்தது.

வெயில் தாழக் கிளம்பியது. அந்த இடத்திற்கு வந்து சேரவே பொழுது சாய்ந்து விட்டது. யாரும் இருக்கிறார்களா இல்லையா என்று அறிய முடியாத வீடுகள். அவர்களோடு இடம் வாங்கிய ஒருவர் அங்கு வீடு கட்டிக் குடியிருப்பதாகக் கேள்வி. தனித்த வீடுகள் இருக்கும் சூழலே அச்சமூட்டுவதாக இருக்கும்போது அவர் எப்போது வந்திருக்கக் கூடும் என்று அவன் நினைக்க ஆரம்பித்தான். எந்த வீடு அவருடையதாக இருக்கும்? அவரே அங்கிருந்து அடையாளம் கண்டு அழைத்தால்தான் உண்டு. அப்படி அழைத்தால் அவர்



வீட்டை அடைவது எப்படி என்பதற்கும் அவரே வழி சொன்னால்தான் முடியும் என்று நினைத்துக் கொண்டான்.

'நீங்க கவலைப் படாதீங்க... நா பார்த்துக்கிறேன் எடத்தை...' என்றோ அவர் சொன்னது இன்று அவருக்கு ஞாபகம் இருக்கக் கூடுமா... சொல்ல முடியாது. நம்மையே மறந்தும் கூட இருக்கலாம். அப்படியே கண்டாலும் அவர் தனித்திருக்கும் அந்த வீட்டுக்குள் போகலாமா என்று சிந்தனை போனது. மர்ம முடிச்சுகளாய் நிற்கும் வீடுகள். அந்தத் தனித்த வீடுகளெல்லாம் திடீரென்று ஒன்று சேர்ந்து கொள்வதுபோல் தோன்றியது.

அவனின் பழைய வீடு தனித்த வீடு. அந்தப் பழைய வாழ்க்கை.

'என் முகத்துலயே முழிக்காத இனிமே...' விரட்டிவிட்ட தந்தை.

'ஏங்க இன்னைலர்ந்து கிச்சன்ல படுத்துப்பமே...'

'எது ? கிச்சன்லயா ?'

'ஆமா, அங்கதான் குளுமையா இருக்கும்... அந்த எடம் எனக்குப் பிடிச்சிருக்கு...'

பக்கத்தில் படுத்திருந்தவள் நடுச்சாமத்தில் பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்தாள்.

‘திவ்யா... திவ்யா... ஏய் திவ்யா...’

‘ஏய்... என்னத் தொந்தரவு செய்யாத, நா சிரிக்கணும்...’

‘என்னது சிரிக்கணுமா ? ஏய், என்ன உளர்றே ?’

‘...போடா அந்தப் பக்கம்...’

கதி கலங்கிப் போனான் அவன். பதட்டத்தில் எழுந்து லைட்டைப் போட்டான்.

அட! என்னாச்சு ? கரன்ட் போச்சா ? மேலே காற்றாடி நின்றிருந்தது.

உடம்பு வியர்த்தது. தலை கலைந்து பரத்தியிருந்தது திவ்யாவுக்கு. வாடிய மல்லிகைச் சரம் உதிரி உதிரியாய். என்ன வாசனை இது ? அடச்சீ! அவளை ஒரு புரட்டுப் புரட்டினான்.

குப்புறப் புரண்டவள் திரும்ப நிமிர்ந்து அவனைப் பிடித்தாள். அந்தக் கைகளின் இறுக்கம் அவனை அதிர வைத்தது. இருட்டுக்குள் அவள் முகத்தைத் தேடினான் அவன். பொட்டு வெளிச்சம் இல்லை. அவளை அப்படியே மடியில் எடுத்துப் போட்டுக் கொள்ள நினைத்து சம்மணமிட்டு அமர்ந்தான். அவள் கால்களை அணைத்துத் தூக்கப் போனான். புடவை மேல்வரை விலகியிருப்பது கண்டு இழுத்து விட்டான். அவள் பிடி இன்னும் தளராதது இவனை அச்சப்படுத்தியது. விசுவிசுவென்று அவளிடமிருந்து பெருமூச்சு.

எழுந்தால்தான் தீப்பெட்டி தேடலாம். விட்டால்தானே ?

‘திவ்யா...ஏய் திவ்யா...’ – பதிலில்லை. இனம் புரியாத உளறல்கள் அவளிடமிருந்து.

விடுபட்ட வாழ்க்கை. ஈடேறாத ஒருத்தி.

‘நாம இப்போ வீடு கட்டினா தனியாத்தான் இருக்கணும்...’

தனியான வீடுகள் அவனைத் தடுக்கின்றன.

‘உங்களுக்குப் பிடிக்கலையா ?’

அவன் பதில் சொல்லவில்லை.

அவன் அலுவலகம் சென்ற பிறகு அவள் தனியாய்த்தான் இருக்கிறாள். வாசல் கேட்டைப் பூட்டு, பிறகு திண்ணை கேட்டைப் பூட்டு என்பான். கொல்லைப்புறம் கிரில் கேட், உட்கதவு தனித்தனியாகப் பூட்டியிருக்கிறதா என்று பார்ப்பான். வியூவர் வைத்தான் உறால் கதவுக்கு. அது வழியே அவள் பார்க்க வேண்டுமாம். அது அவன் செலவு. வாடகை வீட்டுக்கு அவன் செய்த வசதி.

தனிமை அவனை மருள வைத்ததுபோல் எண்ணி அவளுக்கும் அதுதான் என்று கவலை கொண்டான். தனித்த வீடுகள் அவனை விரட்டின. மனிதர் தனித்திருப்பதில்லை. பலரோடு உறவாடிக் கொண்டிருக்கிறார்கள் மனதில். நான் தனியனில்லை. அவன் சொல்லிக் கொண்டான்.

‘கிளம்பிட்டேன்... நீ வீட்லதான இருக்க...’ கேட்டுக் கொள்வான். அந்தத் தனித்த வீட்டின் ஒன்றிலிருந்து திவ்யா வருவது போல் தோன்றியது இவனுக்கு.

‘நா இங்கதான் இருக்கேன்... வாங்களேன்...’

‘என்ன வேகமாப் போறீங்க... ?’

தன்னுணர்வு பெற்றான். திரும்பிப் பார்த்தான். அவள் தள்ளி வந்து கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் கவனித்தான். காலிலும் செருப்பிலும் சகதி அப்பியிருந்தது.

சீ! இது எப்படிப் பட்டது ? அப்படியே நின்றான்.

‘நா கூப்டுட்டே இருக்கன்... நீங்க பாட்டுக்குப் போறீங்க... இங்க அடிக்கிற காத்துல கேட்கல போலிருக்குன்னுதான் கத்தினே...’

கண்கள் எதையோ தேடின. ‘போதும் வா போவோம்...’ அவன் திரும்பி நடந்தான்.

‘எடம் பார்க்கலையா ?’ – ஏதுமறியாமல் கேட்டாள் அவள்.

‘இங்கதான் ஏதோ ஒண்ணு... வா போவோம்...’

சாலையை ஒட்டியிருந்த ஓடையில் கை கால் முகம் கழுவிக் கொண்டான் அவன். சற்றுப் பொறுத்து வந்த பேருந்தில் ஏறிக் கொண்டார்கள் அவர்கள்.

அவன் பார்வை அந்தத் தனித்த வீடுகளின் பக்கமே இருந்தது. அவை அவன் கூடவே வந்து கொண்டிருந்தன. நீண்ட வயல்களினூடே தூரம் விலக்கி நின்றாலும் பார்வையிலிருந்து அவை மறைய மறுத்தன.

ஒரு ஒற்றைப் பனை தென்பட்டது அப்போது. குனிந்து அதன் உயரத்தை நோக்க முற்பட்டபோது அதன் நேர் கூற்றில் தனித்த அந்த வீடு... அதிலிருந்துதான் அவள் அழைத்தாள்.

அவன் தன் மனைவியின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான்.

பொது இடத்தில் அவனின் செய்கை
அவளுக்கு வியப்பாயிருந்தது!



ushadeepan@thaiveedu.com

# அரசன்

**- அ. கந்தசாமி**




திருநாவுக்கரசுக்கு இன்றைய பொழுதைப் போக்குவது பெருஞ்சிரமமாயிருந்தது. அவன் மண்டைக்குள் தானாகவே தகவமைத்த மணிக்கூடு விடியப்புறம் நாலுமணிக்கு மேல் அவனைக் கண் மூட அனுமதிப்பதில்லை.

வெள்ளிக்கிழமைகளில் தோய்ந்த தலை ஈரத்தைக் கூடத் துவட்டாமல் அம்மாவைக் கூட்டிக்கொண்டு நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் சில கிலோமீட்டர் நடைப்பயணம். இது வாரந்தோறும் பழக்கப்பட்ட பயணந்தான் என்றாலும், வயது ஏற ஏற இந்த நடை மீது பிடிமானம் குறைந்துதான் போயிற்று.

நடைப்பயண பாதையில் அம்மாவோடு எதைத்தான் கதைப்பது? அம்மாவுக்கு வேண்டுமானால் அவனிடம் சொல்லியழ ஆயிரம் விடயங்கள் இருக்கக்கூடும்.

எட்டாம் வகுப்போடு, அழிச்சாட்டியம் பண்ணிப் பள்ளி செல்ல மாட்டேன் என முன் வாசற்படியை விட்டு அசைய மறுத்தவன் திருநாவுக்கரசு.

அவனால் படிக்க முடியாது என்றில்லை, அவனுக்கு அது படியவில்லை. என்ன செய்வது? வாத்திமார்தான் இவனைக் காணும்போதெல்லாம் பன்றியின் தரிசனம் பெற்ற 'முசல்மான்'களாக உருமாறிவிடுகிறார்களே. பள்ளி தரும் இடர்களையெல்லாம் அம்மாவிடம் சொல்ல அவனுக்குத் துணிவும் இல்லை. பவ்வியமாக எடுத்து விளக்கத்தக்க அறிவும் இல்லை.

அம்மா... மற்றவர்கள் உதவி இன்றித் தன்னந் தனியாளாய் இவனை வளர்த்தெடுத்தவள். இவனைத் 'தகப்பனைத் தின்னி' எண்டும் சொல்லேலாது.

இவன் பிறந்து சில மாதங்களிலேயே ஏதோ முக்கிய வேலை என்று கொழும்புக் கோச்சியில் தொத்தினவர்தான், அவரை ஏற்றிச்சென்ற கோச்சி இன்றுவரை வந்துபோய்க்கொண்டுதான் இருக்கிறது, ஆனால் அவர் வரவேயில்லை.

பிறர் திருநாவுக்கரசனின் பெயரை அவரவரின் அந்தந்த நேர வசதி கருதி மூன்று துண்டுகளாக்கி ஒரு துண்டைத்தான் உச்சரிப்பார்கள். அம்மா எப்போதுமே வாய் நிறைய 'திரு' என்றுதான் கூப்பிடுவாள்.

இவனுக்கு, அவ இன்னுமொருக்கா அப்பிடிக் கூப்பிடமாட்டாவா? என்றிருக்கும்.

பிள்ளையார் கோயில் ஐயர் மட்டும் 'திருநாமம்' என்று அழைப்பார். உழவாரத் தொண்டிலிருந்து மடப்பள்ளிச் சமையல்வரை யாவுமே திருநாமம் செய்தால்தான் ஐயருக்குத் திருப்தி.

கோயில் காண்டாமணியின் கயிற்றில் வேறொரு கை படக் கூடாது. என்ன மாயமோ இவன் கயிற்றில் தொங்கித் தொங்கி இழுத்தால்தான் மணியின் ஒலியில் ஒரு தனி நாதமே பிறக்கும் என்பது ஐயரின் நம்பிக்கை.

விடிய நாலரை மணிக்கு மேல் படுக்கையில் கிடந்தால் வியர்த்து ஒழுகும். நுளம்புக்கும் இவன்ரை இரத்தச்சுவையில் அலாதிப்பிரியம். தூங்க விடாது. எப்படியும் எழுப்பிவிடும்.

பின்வளவுக் கிணற்றிலிருந்து முதல் வாளியை றாஞ்சித் தலையில் ஊற்றும்போது குளிரும்தான். எனினும், அடுத்தடுத்த வாளிகள் அதைத் தாக்காட்டி விடும்.

கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் அரைக்களிசானுள்ளும் சேட்டினுள்ளும் அரைகுறையாய்த் தன்னைத் திணித்துக் கொண்டு பிள்ளையார் வாசலுக்குச் செல்வான். அப்போதுதான் ஐயர் சைக்கிளைச் சுவரில் சாத்திவிட்டு கதவைத் திறந்துகொண்டிருப்பார்.

ஐயருக்குப் பல சோலிகள்.

அவருக்கு அய்யனார் கோயிலடியில் வீட்டோடு சேர்த்துச் சிறிய அச்சகம் ஒன்று இருக்கின்றது. அது அவருக்கான உபரி வருமானம். அதைவிடச் சாதகம் பார்ப்பார், பிணிகளைப் போக்க திருநீறு மந்திரிப்பார், சர்வரோக தோஷங்களையும் திருநீற்றால் கீசுவார்.

வயசுபோன சிலதுகள், தோளில் இருக்கின்ற சால்வையை

எடுத்து இவருக்கு வணக்கம் வைப்பதும் உண்டு.

'நாசமாப் போனதுகள். இதுகளெல்லாம் இப்ப சால்வை சுத்திக்கொண்டு திரியுதுகள். 'கலிகாலத்திலை சாதி சனம் பாக்காமல், தலை எங்கை தங்குது, வாலெங்கே தொங்குது எண்டு தெரியாமல், மண்ணுண்ணிப் பாம்புகள் போல மனிதர்கள் வாழ்வார்கள்' எண்டு எங்கடை வேதத்திலை எழுதிவச்சது எப்படிப் பொய்யாகும்? கலி முத்திப்போச்சு.' என்று முணுமுணுத்தபடி, தொட்டாச் சிணுங்கிச் செடியைப்போல் மனம் கலையும்வேளை அவர் மூக்கு மென்மேலும் சிவப்பாகும். ஐயர் கருதும் முத்திப்போன கலி இந்த நிமிடம் வரை பழுக்கவேயில்லை.

ஐயர், இவனோடு நான் பெரிசு, நீ பொடிசு என்றெல்லாம் பேதம் பேசுவதில்லை. பேசினாலும் இதெல்லாம் அவனுக்குப் புரியாது என்று அவருக்குத் தெரியும். கோவிலைப் பட்டுப் போல நடத்திச்செல்ல இவனைப் போன்ற முக்கால் மடையனை இனிப் பிடிக்கிறது கடினம் என்பதும் அவருக்குத் தெரியும். இப்படித் திருவால் கிடைக்கும் பயன்களைக் கணக்கிட்டு, அவர் கண்ணை மூடிக்கொண்டு அவனை மடப்பள்ளிக்குள்ளும் விட்டு அவல், சுண்டல், வெள்ளைச்சாதம், சக்கரைப்பொங்கல் போன்ற இன்னபிற படையலுக்கு வேண்டிய அயிற்றங்களையெல்லாம் சுவைசொட்டச் சமைக்கப் படிப்பித்தார்.

திருநாமத்துக்குக் கையில் பிரம்பு பிடித்த வாத்திகளைதான் கண்ணில் காட்ட இயலாது. அவனைப் பொறுத்தவரை பூநூலால் முதுகைச் சொறியும் ஐயர் நல்ல மனிசர்.

இன்று கோவில் எல்லைக்குள்ளிருக்கும் ஒரு வீட்டில் யாரோ செத்துப் போனார்கள். பிரேதம் எடுக்கும் வரைக்கும் பிள்ளையார் செம பட்டினி. திருநாமத்துக்கும் வேலையில்லை. வாசற்படியில் குந்தியிருந்து ரோட்டால் போவோர் வருவோரை விடுப்புப் பார்த்துக் கண்கள் வியர்த்துப் போயின.

அம்மாவுக்குத் தவராசாவைக் கண்ணில் காட்ட இயலாது.

மடித்த சாக்கொன்றை கமக்கட்டுக்குள் இடுக்கியபடி ஒன்றைக் காலால் விந்தி விந்தி நடந்துவரும் இவனது ஒரே சிநேகிதன் தவராசாதான்.

'டேய் நீ பிறக்கிராசியாற்ரை மருமகனெல்லே... இப்பிடிக் கண்டதுகளோடை சுத்தித் திரிஞ்சா ஆரெடா மதிக்கப் போகினம். உன்னைப் பழுதாக்கிறது இந்த நொண்டியன்தான்ரா. அண்டை அயலிலை உன்ரை வயசொட்டைப் பொடியள் எத்தினை இருக்கிதுகள். ஒண்டோடையாவது கதைக்கிறியோ, பிழங்கிறியோ.'

அம்மாவின் தம்பி, திருநாமத்தின் மாமன் சுப்பிரமணியன் ஒரு வழக்கறிஞர். அவருடைய பழைய கிராமபோனின் கீறல் விழுந்த றெக்கோட் மாதிரி அம்மாவின் இந்த வார்த்தைத் தொடர் அவனுக்குப் பழகிவிட்டது. மனம் மௌனமாக இருக்கக் கற்றுக்கொண்டது.

இவனும் தாயும் குடியிருப்பது சுப்பிரமணியப் பிறக்கிறாசியர் என்று பிரக்கியாதி பெற்ற மாமனார் வீட்டில்தான். மேல் மாடியோடு பிரகாசமாய் நிமிர்ந்து நிற்கும் அந்தக் கட்டடத்தில் சட்டப்படி இவர்களுக்கும் சரிபாதிக்குப் பங்கு உண்டு. அதனால் தான் வெளியே கக்கூசுக்கும் கிணத்தடிக்கும் போகின்ற புறம் போக்கில் ஒரு குச்சறையையும் பழஞ்சாமான்கள் போட்டு வைக்கிற விறாந்தையையும் கொண்டதொரு இடத்தில் 'துலையுது சனியன்கள்' எனப் பெரிய மனதோடு தங்க அனுமதித்திருக்கிறார். அவருடைய குடும்பத்தார், உறவுகள் திருநாமத்தை இலையான்களுக்கு இணையாகத் தன்னும் ஏற்பதில்லை. பிறகிறாசியாற்ரை மருமகன் என்ற உறவு காற்றோடு கலைந்து கனகாலம் ஆகிவிட்டது.

இன்றும் இவனை 'அரசன்' என்று கூப்பிட்டுக்கொண்டு ஒரு சீவன் ஊரில் ஊசாடித் திரிகிறது என்றால் அது தவராசாதான். அவன்தான் தன் சொத்திக் காலால் தத்தித் தாண்டி, இவனுடைய சுண்டுவிரல் பிடித்து வெளியுலகுக்கு இழுத்து வந்தான்.

வெளியுலகு என்பதை பெரிதாகக் கற்பனை செய்திருப்பீர்களேயாயின் அது உங்கள் பிழை.

நாவலர் றோட்டால் குறுக்காக விழுந்து குறிப்பிட்ட குச்சொழுங்கைகளுக்குள் நுழைந்தால் முற்றவெளியில் மிதக்கலாம். கொஞ்சம் நல்ல காற்றை அனுபவித்துக்கொண்டு புல்லுக் குளத்தைச் சுற்றி வந்தால் ஆங்கிலப்படங்கள் ஓடும் ரீகல் மடுவம் தெரியும்.

இத்தோடு இவர்களின் வெளி உலகம் முற்றுப்புள்ளி எய்தும்.

தமிழே இவர்கள் வாயில் 'பய்லா' ஆடும் சீத்துவக்கேட்டில் இங்கிலீஸ் படங்கள் கண்ணைக் கட்டிக் காரிருள் இருத்தின. அனேகமாக மெட்னிக் காட்சிகளுக்குத்தான் போவார்கள். தலைக்கு முப்பத்தைந்து சதம். சாக்குப்போக்குச் சொல்லி அம்மாவிடம் காசு வாங்கிக் கொள்வான்.

தியேட்டரில் முன்வரிசையில் கலரி எனப்பட்ட வாங்குகள் இருக்கும். பகிடிக்கும் சாய இயலாது.

கொஞ்சம் நேரத்தோடு போனால் பின் வாங்குகளில் இடம் பிடிக்கலாம். திரைக்குக் கிட்டவாக இருந்தால் அண்ணாந்து பார்ப்பதில் கழுத்து சுளுக்கும். பிடரியில் படம் ஓடும். எங்கிருந்தாலென்ன மூட்டைப் பூச்சிகள் தொடைகளிரண்டையும் சுவை பார்த்துப் பிச்சு உதறும்.

பொதுவாகவே தவராசா கையில் நல்ல காசு புழங்கும். கில்லனர் லேன் சுவாமிநாதனின் நாதஸ்வரக் கோஸ்டியில் தவராசாவும் இருந்தான். அத்தோடு கந்தப் பூட்டாச்சிக்குத் தொண்டு துரவுகள் செய்வான். அதனால் அவனுக்குப் பணத்துக்குத் தட்டுப்பாடு வருவது குறைவு.

இந்த இடத்தில் ஒரு விளக்கத்தைத் தரவில்லை என்றால் நீங்கள் தொலைந்து விட வாய்ப்புண்டு.

ஒரு காலத்தில் வண்ணார்பண்ணை வட்டாரத்தில் பிரசித்தி பெற்றிருந்த சுவாமிநாதர், சின்னத்தம்பி மேளக்கோஷ்டி,



காலப்போக்கில் கலர் மங்கி கோயில் மேளமான போது, நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியக் கருவிகளைக் காவிக் கொண்டு மேடையேறி, அவரவர் இடங்களில் பத்திரமாய் வைத்து, மேடையில் ஓர் ஓரமாகத் தானும் தொற்றிக் கொண்டு, நாதஸ்வர உருவிலுள்ள ஊது குழலை வாயில் கவ்வி கன்னங்களிரண்டும் கொழுக்கட்டை கணியத்தில் வீங்கி, கண்களிரண்டும் பிதுங்கி வழிய அல்லாடுவதற்குப் பெயர்தான் 'ஒத்து' ஊதுதல்.

திருநாமம் எவ்வளவு நேரம்தான் முன் வெய்யில் மூஞ்சையைக் காந்த, வாசலில் குந்தியிருக்க முடியும். நாரி வலிக்கத் தொடங்கியது.

தவராசா வாறமாதிரித் தெரியவில்லை. தொலைவில் கத்தப் பூட்டாச்சி வருவது போல் தெரிந்தது.

பெயரைக் கேட்டதும் ஏதோ பூச்சி, வெட்டை என்று எண்ணத் தோன்றும். அவர் ‘கந்தர் வீட்டு ஆச்சி’. அதுதான் பல்லாயிரம் வாய்களுக்குள் சப்பிச் சொதப்பி..., இலக்கியமா சொன்னா... இப்ப இப்பிடி மருவிப் போய்விட்டது.

கந்தப் பூட்டாச்சியின் வீட்டுத் திண்ணதான் தவராசாவின் வசிப்பிடம். ஆச்சி அவனிடம் வாடகை ஒன்றும் கேட்ப தில்லை. பின்காணிக்குள் விழுந்து கிடக்கிற தென்னோலை, குரும்பை, பன்னாடை எனத் தென்னையின் பல பயன்பாடுக ளைச் சேர்த்துக் கட்டி ஆச்சியின் வாசலுக்கு இழுத்து வர வேண்டும். உச்சி வெய்யிலில் வேர்வையில் தோய்ந்து நிற்பவ னைப் பார்த்தால் பேயும் கண்கலங்கும்.

ஆச்சியும் ஒரு மனிசப்பிறவிதானே. இவனை விட்டா அவருக் கும் வேறு ஆட்கள் இல்லை. பாவம் பெடியன் என்று, சாயத்தை சற்றே அதிகம் விட்டு, தேத்தண்ணியோடு, கடிக்க ஒரு துண்டுப் பனங்கட்டியும் கொடுப்பாள். அது சிலமணி நேரத்துக்கு அவனைத் தாக்காட்டும்.

ஆச்சியின் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, கூரை யில் சொருகி வைத்திருந்த சாணிச் சாக்கை உதறிக் கமக்கட் டில் இடுக்கிக்கொண்டு, கட்டாக்காலி மாடுகள் திரியும் பிரதே சங்களை நோக்கி அவன் பயணப்படுவான். சுட்டெரிக்கும் சூரியன் தவராசாவுக்கு ஒரு பொருட்டே அல்ல.

தவராசாவை எதிர்பார்த்துக் காத்திருந்து எரிச்சலாகிப் போனான் திருநாமம். முகத்தை எரிக்கும் முன் வெய்யிலை நெற்றியில் குடைபிடித்து வலக்கையால் விசிறிக் கலைக்கவா முடியும்?

‘கிழவிதான் வருகிது. தவராசாவை காணோமே’ மனம் சற்றுப் பதைத்தது.

‘சாணி பொறுக்கப் போறதுக்கு இந்த ரோட்டாலை தான் போகோணும் எண்டு சட்டம் ஏதாவது இருக்கா... நிழலுக்காக ஒதுங்கி, எந்த மூத்திர ஒழுங்கையாலை போறானோ’.

திருநாமம் படியை விட்டு எழுந்து கால்சட்டையின் குண்டிப் பக்கத்தில் படிந்திருந்த புழுதியைத் தட்டி உதறினான்.

பிள்ளையார் கோயிலும் அவனுக்கு ஒரு வீடுதானே. ஆனால் இன்று கோயில் சாத்தியிருக்கும். இப்ப அங்கே போகேலாது.

எதிரில் கம்பீரமாகச் சடைத்து நின்று, பின்னாலுள்ள தியேட் டரை முற்றாக மறைத்திருக்கும் அரசமரம் கண்ணில்பட்டது. சில்லிடும் காற்றையும் நிலம் மறைக்கும் நிழலையும் பைசா செலவில்லாமல் தரும் இயற்கையின் கொடை அல்லவா இந் தக் குடை. அதன் கீழே ஒதுங்கிக்கொண்டான் திருநாமம்.

அந்த நிழலில் ஒண்டிக்கொண்ட பின்தான் அரசமரத்திற்கு வரப்போகும் பேராபத்து திருநாமத்துக்கு உறைக்கத் தொடங்கியது.

பாவம் அரசமரம்.

பிள்ளையாரைத் தவிர அரசமரத்தின் சூழலில் வதியும் சனங் களுக்கு அந்த மரத்தின்மீது படு கறள். என்றோ ஒரு நாள் அரசமரத்திலிருந்த பாவப்பட்ட காகம் ஒன்று சிந்திய எச்சம் முன் வழுக்கையில் சிதறி மூஞ்செங்கும் அபிஷேகமானதின் பின் அய்யருக்கு அரசமரத்தின் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை.

‘அலுத்துக் களைத்து, அந்தப் பக்கத்தால் வாற சில சனங்க ளும், மரத்து நிழலில் ஆற அமர இருந்திட்டு போகுதுகளே தவிர, தன்ரை தேத்தண்ணிக் கடையை எட்டிப் பாக்கிறதே யில்லை’ என்ற வெப்பியாரம் இலையான்களை விரட்டிக் கொண்டே தேநீர் ஆத்தும் செல்லர் அம்மானுக்கும் உண்டு.

மிக முக்கியமாக, மரத்தின் பின்னால் மறைந்திருக்கும் தியேட் டர் சொந்தக்காரருக்கு, அரசமரத்தைப் பார்க்கும் போதெல் லாம் பொச்சில்லாமலே பற்றி எரியும்.

தியேட்டருக்குச் சனம் வராமல் போனதற்கு வேறு பல கார ணங்கள் இருந்தாலும், தியேட்டர்காரருக்கு அரசமரம் முக்கிய மான காரணம் என்று மனதில் படிந்து விட்டதற்கு ஒரு காரண மும் உண்டு.

தியேட்டர்காரர் ஒரு பெரியவரைக் கண்டு, ‘இப்பிடி பெரிசாய்த் தியட்டரைக் கட்டியும் சனங்கள் வருகுதில்லையே? என ஆதங்கப்பட,

‘ஆக்கள் எப்படி வருவினம்? நீ போட்ட முதல் படமே மலை யாள டப்பிங் படம். பெயர் என்ன அது... பிச்சைக்காரி. அப்ப, தியட்டர் எப்பிடி காணும் விளங்கும்’ என்று அவர் பதில் சொல் லியிருக்கிறார்.

தியோட்டர்காரர், நினைத்த காரியம் சொல்வதில் பிரபல்ய மான நவிண்டில் கணபதிப்பிள்ளை சாத்திரியார் வீட்டுக்கு முதல் முழுவியளமாகப் போய்நின்று தலையைச் சொறிந்தி ருக்கிறார்.

இவரை ஏற இறங்கப் பார்த்துச் சிரித்த சாத்திரியார், ‘ஐயா உங்களைப் பென்னம்பெரிய நிழல் ஒண்டு மறைக்கிது. அதுக் குள்ளை மறையாமல் வெளியிலை வாங்கோ’ என்றிருக்கின் றார்.

சாத்திரியார் சொன்ன நிழல் வேறு, தியேட்டர்காரர் புத்தியில் உறைத்த நிழல் வேறு.

சாத்திரியார் வீட்டு வாசலில் சடைத்து நின்ற வாதநாராயணி மரத்திற்கு கீழ் நல்ல நிழல். தியேட்டர்காரர் அந்த நிழலுக் குள் ஒதுங்கிப் பவ்வியமாய் நின்றதைத்தான் கணபதிப் பிள்ளை குறிப்பிட்டார். ஆனால் அவருக்கோ கனவிலும் நினைவிலும் அந்தப் பாழாப்போன ஆலமரமே முன்வந்து நின்றது.

அன்றுமுதல், அரசமரத்தின் இடையூறுகள் பற்றி ஒரே கையெ ழுத்துடன் வந்த பல மொட்டைக் கடிதங்களால் திணறத் தொடங்கியது நகரசபை. மரத்தைத் தறிக்கப் போறாங்கள்

என்ற கதை அரசல் புரசலாகப் பரவத் தொடங்கியது. ஆனால் இன்றுவரை மரத்தின் தலை தப்பியிருக்கின்றது.

மடப்பள்ளிக்குள் கிடந்த பாத்திர பண்டங்களைக் கோயில் தீர்த்தக் கிணற்றடிக்கு எடுத்துச் சென்று, குழந்தையைக் குளிப்பாட்டும் வாகில் தென்னம் பொச்சால் தேய்த்துக் கொண்டிருந்தான் திருநாமம். பின்னால் தவராசா மூச்சி ளைக்க வந்து நின்றான்.

தன் கையில் பொத்தி வைத்திருந்த கசங்கிய நோட்டீஸ் ஒன்றை திருநாமத்திடம் நீட்டினான்.

திருவினால் எழுத்துக் கூட்டாமலே தமிழைத் தொடர்ச்சியாக வாசிக்க முடியும்.

‘கோவிலருகில் நிற்கும் இந்த வீணாய்ப்போன அரசமரத்தால் பத்தாம் வட்டாரச் சனங்கள் எல்லோரும் பெரும் துன்பமடை கின்றனர். இது பல வகையில் இடைஞ்சலாக இருக்கின்றது. தயவுசெய்து எவ்வளவு விரைவாகத் தறிக்க ஏலுமோ அவ்வ ளவு விரைவாகத் தறிப்போருக்கு எமது கோடானுகோடி நன்றி. இதைத் தறிப்பீர்களாயின் நகரசபையின் நாற்காலிக ளைத் தேய்ப்பவர்களுக்கு எமது பொன்னான வாக்குகள் என் றும் உறுதி’.

என்று எழுதப்பட்டிருந்த நோட்டீசில் முதல் கையெழுத்து ஐய ருடையதாக இருந்தது. அது ஒரு வரி தாண்டி மறு வரியின் பாதியில் சர்மா என முடிந்திருந்தது. இரண்டாம் கையெழுத்து தியேட்டர்காரருடையது. மொத்தம் பதினாறு கையெழுத்து.

திருநாமம் தேய்த்துக் கொண்டிருந்த பாத்திரங்களைக் காலால் தள்ளிக்கொண்டு எழுந்தான்.

‘ஐயர்’ என்ற அவனுடைய உரத்த குரல் சுவர்களின் தொடர் தெறிப்பில் கோயில் முழுவதும் வியாபித்தது.

எப்போதும் ‘ஐயா’ என்று அனுங்க ஒலிப்பவன், இன்று ஏன் இப்பிடி ‘ர்’ போட்டுக் கத்துறான்? கடுப்பும் வியப்பும் கொண்ட ஐயர் உட்பிரகாரத்திலிருந்து எட்டிப் பார்த்தார்.

அவர் பார்வையின் முதல் தரிசனம் தவராசாதான். தவராசா வைக் காணும் போதெல்லாம் ஐயருக்குச் சினம் சீறியெழும். ‘ஓ உந்த சனியனும் கூடவே நிக்குது’ அய்யர் மனசுக்குள் ஓங் காளித்தார்.

நெருங்கி வந்த திருநாமத்தின் குரல் அவ்வாறு ஒலித்து ஐயர் கேட்டதில்லை.

‘சர்மா... உம்மடை கோயிலுக்குள்ளை இப்ப பிள்ளையா ரில்லை. அவரெங்களோடை வெளியிலை வாறார். நானும் தவராசனும் அவருக்கெண்டு ஒரு கோயில் தனியாக் கட்டப் போறம்’.

கூறிக்கொண்டே வெளிவாசல் வரை வந்தவன் நிமிர்ந்து கோபுரத்தில் தொங்கிய ஆலயமணியைப் பார்த்தான். கண் கள் கலங்கின.

‘இனி உந்த மணியையும் நீரே இழுத்தாட்டும்’.

‘இவனுக்கு என்ன மூளை கீழை பிசகிப் போச்சோ’ என மிலாந்தினார் ஐயர்.

தவராசா பின்தொடரக் கோவிலைவிட்டு இருவரும் வெளியே வந்தார்கள். றோட்டைக் கடந்து அரசமரத்தடிக்குக் கீழ் சென் றமர்ந்தனர். இருவரும் நெடுநேரம் குறுக்கீடு ஏதுமின்றித் தீவி ரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பொழுது கறுக்கத் தொடங்க, ‘அம்மா தேடப்போறா’ என்டு திருநாமம் எழுந்து போனான்.

அரசமரத்தடியில் அடுத்த நாளும் விடிந்தது.

கோழிகள் கூவின. குருவிகள் இயம்பின. நாய்களும் குரைத்தன.

இருவரும் அரசமரத்தைப் பூச்சரங்களாலும், மலர் மாலைக ளாலும் முன்பு பிள்ளையார் கோயில் தொண்டனாக இருந்த போது பக்தர்கள் படைக்கத் தந்த பல வண்ண உத்தரியங்க ளாலும் சுற்றி அலங்கரித்திருந்தனர்.

திருநாமம் வெள்ளை அரைத்துண்டு இடுப்பில் கட்டி உடம் பெல்லாம் வீபூதி, சந்தன சமேதனாய், தெரிந்த தேவாரங் களை, புரிபடாத ராகங்களில் பாடியபடி, மரத்தைப் பலமுறை சுற்றி வந்தான். தவராசா மரத்தோடு ஒட்டி நின்று சேமகலத் தைத் தட்டிப் பிள்ளையார் கோவில் குருக்களை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

அரசமரத்தடியால் போன சனங்கள் கூப்பிய கரங்களோடு மரத்தை மும்முறை சுற்றி வந்து திருநாமத்தின் கைகளால் விபூதி, சந்தனம், குங்குமத்தை இடக்கை தாங்கிய வலக்கை யால் பெற்று கொண்டனர்.

தவராசா கொடுத்த செவ்வரத்தம் பூக்களைப் பெண்கள் பின் கொண்டையிலும் ஆண்கள் காதுமடல்களிலும் சொருகிக் கொண்டனர். கார்களில் போன சிலர் றோட்டோரத்தில் நிறுத் திவிட்டு வந்து மரத்தை மும்முறை சுற்றி வந்து ‘திருநாம அய் யர்’ கைகளால் விபூதிப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

சந்தடிகள் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்த தியேட்டர் முதலாளியை, நீண்ட வரிசையில் நின்ற சனங்கள் இழுத்து வந்து, மரியாதை கருதி முன்வரிசையில் நிறுத்தினர்.

பிள்ளையார் கோவில் முன்னாலேயே ஏலாவாளிகள் இருவரும் அரசமரப் பிள்ளையாருக்குக் குடமுழுக்கும் செய்துவிட்டனர்.

சோழகத் தென்றல் ஒன்று சுழன்றடித்தது. அரசமரம் தன் ஆயிரம் கரங்களை அகலவீசி ‘இனி என்னை வெட்டிப் பாருங் கடா’ என்று சன்னதம் ஆடியது.



kandasamy.a@thaiveedu.com




கிச்வேலெ வீதி இப்பொழுது உகுரு வீதி என்று அழைக்கப்படுகிறது. என்னுடைய இரண்டு சகோதரிகள் தங்கள் பள்ளிப் படிப்பை முடித்த பின் மணம் முடித்தார்கள். அவர்களைப் பிரிந்து என் அம்மா சிலவேளை இப்போதும் கவலைப்படுகிறார். மெஃறூனைப் பலர் மணம் முடிக்கக் கேட்டார்கள். கடைசியில் அவள் எங்கள் பாடசாலை கிறிக்கெற் விளையாட்டு அணியின் துவக்கத் துடுப்பாட்டக்காரரை மணந்தாள். அவள் இப்பொழுது நகரத்தில் வசிக்கிறாள். றாஷியா தங்கா என்ற இடத்தில் குடும்பப் பெண்ணாக வசதியாக வாழ்கிறாள். தங்கா கடற்கரை நகரம். அது டாரின் வடக்கே உள்ளது. ஃபிறோஸ், பள்ளிக் கடைசி ஆண்டில் பள்ளியை விட்டு நின்றான். அவன் பள்ளியில் அந்தளவுக்கு முன்னேறியதே ஆச்சரியமானது என்று எல்லோரும் சொன்னார்கள். ஒறியன்ரல் எம்போரியம் என்ற நிறுவனத்தில் அவன் உதவிக் கணக்காளராக இப்போது இருக்கிறான். சிலவேளை அவன் எழுதும் தாள்கள் முதலானவற்றை வீட்டுக்குக் கொண்டு வருவான்.

எங்கள் அம்மா கடைசிக் குழந்தைகளான எங்களில் நம்பிக்கை வைத்திருந்தார். அதாவது அலூவிலும் என்னிலும். எங்கள் கடையில் செய்யும் வேலைகளில் நாங்கள் கவனம் செலுத்தாமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார். ஒருநாள் மாலை அரை டசின் ஆமைப் பூட்டுகளை வாங்கி உறுதியான பலகைகளால் செய்த கதவுகளைப் பூட்டிய பின் கடையை விற்று விட்டார். இது நிகழ்ந்தது றாஷியா திருமணம் முடித்து, விருந்தினர் போய்ச் சேர்ந்து, சரியாக ஒரு கிழமைக்குப் பின். றாஷியா அழுதுகொண்டு அம்மாவைப் புழுதியெழும்பிய உகுரு வீதியில் விட்டுச் சென்றாள். அப்போது இது நிகழ்ந்தது.

உபங்கா என்ற குடியிருப்புப் பகுதிக்கு நாங்கள் வசிக்கச் சென்றோம். பரபரப்பாக இருக்கும் உகுரு வீதியுடன் ஒப்பிடும் போது எமது புதிய இடம் மிகவும் அமைதியானது போலத் தோன்றியது. பேருந்துகள், சைக்கிள்கள், கார்கள் போன்றவற்றின் அமளிதுமளிகளுக்குப் பதிலாகத் தவளைகள் கத்தும் சத்தங்களையும் பூச்சிகள் சிணுங்கும் சத்தங்களையும் கேட்டோம். இரவுகள் பயங்கரமாக, தனிமைப்பட்டதாக, காலியானதாக இருந்தன. அவற்றுக்கு நாங்கள் பழகுவதற்குச் சில காலம் எடுத்தது. உபங்காத் தெரு மாலை ஏழு மணிக்குப் பிறகு ஆளரவமற்றதாக இருந்தது. வீட்டுக்குப் பக்கத்தில் செல்லும் தெருக்கள் கடும் இருட்டாக இருந்தன. தெருக்களில் வெளிச்சமில்லை. அந்தப் பகுதியில் பல இடங்கள் குடியேற்றமில்லாமல் இருந்தன. வீடுகளுக்குப் பின்புறமுள்ள பகுதியில் புதர்கள் மண்டிக் கிடந்தன. அங்கே விசாலமான, பயங்கரமான ஆனைப் புளி மரங்கள், மாமரங்கள், தென்னைகள் வளர்ந்திருந்தன.

மாலை நேரத்தில் சில சமயம் என் அம்மா கவலையுடன் இருப்பார். அலூவும் நானும் அவருடன் இரண்டு, மூன்று, ஐந்து விளையாட்டு விளையாடுவோம். அது நாலு பேர் விளையாடும் விஸ்ற் விளையாட்டில் சில மாற்றங்கள் செய்து விளையாடும் ஒரு விளையாட்டு. அந்த நேரம் நான் பல்கலைக்கழகம் சென்று விட்டேன். வார இறுதிகளில் வீட்டுக்கு வருவேன். அலூவும் பள்ளி இறுதியாண்டில் படித்துக் கொண்டிருந்தான். அவன் படிப்பில் அசாதாரணமான திறமையுடன் இருந்தான். நாங்கள் நினைத்ததிலும் பார்க்க.

அந்த ஆண்டு திரு. டாட்டு எங்கள் பாடசாலைக்கு வந்தார். அவர் எங்கள் பாடசாலையின் பழைய மாணவர். அதோடு பழைய ஆசிரியரும் கூட. அமெரிக்காவிலிருந்து திரும்பியிருந்தார். அவர் பள்ளிக்கும் வருகை தந்திருந்தார். மாணவர்களுக்கு பிடித்த ஆசிரியர். அவர் வந்தபோது அவருக்கு ஆரவாரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அடுத்த சில நாட்கள் நகரத்தைச் சுற்றிப் பார்த்தார். அவரை மிகவும் விரும்பிய மாணவர்கள் அவருடன் கூடிச் சுற்றித் திரிந்தார்கள். அதில் அலூவும் ஒருத்தன்.

அவருடன் கூடித் திரிந்தபோது அலூ ஏதோ ஒருவகையில் ஊக்கம் பெற்று, அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் இடம் கிடைப்பது மட்டுமல்லாமல் புலமைப்பரிசிலும் கிடைக்கும் என்றும் நம்பிக்கை கொண்டான். அதனால் அவன் அந்த ஆண்டு முழுவதும் பல பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்தான். அவற்றின் பெயர்களை அமெரிக்கத் தகவல் சேவையிலிருந்த புத்தகங்களிலிருந்து பெற்றுக் கொண்டான். அந்தப் பெயர்களைச் சிலவேளை அவற்றின் பெயர்களின் ஓசைக்காகவும் சிலவேளை கண்ணை மூடிக் கொண்டும் தெரிவு செய்தான்.

இவனுடைய இந்த முயற்சிக்கெல்லாம் அவனுடைய தாயின் எதிர்வினை அவனை மகிழச் செய்விப்பது மட்டுமேயாக இருந்தது. அவர் சிரித்துக் கொண்டு, 'அமெரிக்காவிலுள்ள உன்னுடைய மாமாமார் ஆயிரக்கணக்கான ஷிலிங்குகளை உனக்கு அனுப்புவார்கள்' என்பார் பகிடியாக. அவன் தன் நேரத்தை வீணாக்குகிறான் என்றே உண்மையில் அவர்

நினைத்தார். ஆனால் அவர் தனக்கு ஆதரவு தருவார் என்ற எண்ணம் அவனுக்கு இருந்ததா என்று அவனால் சொல்ல முடியவில்லை.

சில கிழமைகளுக்குள்ளேயே அவன் விண்ணப்பித்ததற்குரிய பதில்கள் வர ஆரம்பித்தன. சில கடிதங்கள் ஒருவகையில் கவனமான ஊக்கத்தைக் கொடுப்பதாகவும் இருந்தன. படிப் படியாக எந்தப் பல்கலைக்கழகங்கள் தரமானவை என்பதை யும் அவற்றில் எவை உண்மையில் பெயர் பெற்றவை என்ப தையும் அறிந்து கொண்டான். சில பல்கலைக்கழகங்களின் பெயர்ப் பட்டியல்களும் வர ஆரம்பித்தன. எல்லாம் பார்வைக் குக் கவர்ச்சியாக இருந்தன. அவன் விண்ணப்பங்களை அனுப்பும் விடயத்தில் மூழ்க மூழ்க அமெரிக்கப் பல்கலைக் கழகத்திற்குப் போகும் எண்ணம் மேலும் மேலும் அவனைக் கவர்ந்திழுத்தது. புகழ்வாய்ந்த பல்கலைக்கழகங்களுக்குக் கூட அவன் விண்ணப்பித்தான். முன்னர் கேள்விப்படாத பாடங்களைப்பற்றி அறிந்து கொண்டான். மரபியல், அண்டவி யல், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றை முழு பிரபஞ்சமே அவன் முன்னால் அவனுக்காகக் காத்திருந்தது போலத் தோன்றியது. அதை அவனால் அடைய முடிந்தால்.. அதை அடைய முடியுமா? அதற்கு அவன் தகுதியானவனா? அத னால் சிலவேளை அவனுக்குத் தீவிர நம்பிக்கையும் சில வேளை நம்பிக்கையற்ற விரக்தியும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அலூவுக்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக் கும் என்பது நிச்சயம். ஆண்டு இறுதியில் உள்ளூர் பத்திரி கைகளில் தெரிவானவர்களின் பெயர்கள் வெளிவந்தபோது அவனுடைய பெயரும் இருந்தது. ஆனால் யாரோ அதிகாரத் திலிருந்த ஓர் ஊழல்காரர் செய்த குளறுபடியால் அலூவுக்கு அதிர்ச்சியூட்டும் செய்தியொன்று வந்து சேர்ந்தது. அவன் மருத்துவம் கற்க விண்ணப்பித்திருந்தான். ஆனால் அவ னுக்கு விவசாயப் பீடத்தில் இடங் கிடைத்திருந்தது. நாட்டுப் புற மாவட்டம் ஒன்றில் விவசாய அலுவலகராக வருவதற்கு அவன் விரும்பவில்லை. எப்படியான நாட்டுப் பற்றாளனாக அவன் இருந்தபோதிலும் அதை அவன் விரும்பவில்லை. அவன் ஒருபோதுமே நகரத்தை விட்டுச் சென்றவனல்ல. தேசி யப் பூங்காக்களுக்குப் பள்ளிக்கூடச் சுற்றுப்பயணத்தில் சென்ற பொழுதுகளைத் தவிர.

உதவித் தொகையுடன் இடமும் கிடைத்த கடிதம் கலிஃபோனி யாத் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வந்தபோது அதை அவன் நம்பவே மறுத்தான். அந்தக் கடிதத்தில் என்னவுள் ளது என்பதைத் திரும்பத் திரும்ப வாசித்தான். அதை வாசிக் கச் சொல்லி என்னிடமும் தந்தான். அதில் எந்தவிதத் தவறு மில்லை என்பதை அறிந்தவுடன் அவன் மிகவும் உற்சாகம டைந்தான்.

‘நானா விவசாயம் பாடம் படிப்பது?’ என்று சிரித்தான்.

முதலில் அம்மாவுடன் பேசி அவரைத் தன் பக்கம் திருப்ப வேண்டிய வேலை அவனுக்கு இருந்தது.

அவன் சொன்னதை அம்மா முதலில் நம்பவில்லை. ‘அங் கால போ... போ. சும்மா கதைச்சுக் கொண்டே இருக்காத. என்னைக் கேலி செய்யாதே,’ என்றார்.



எம்.ஜி. வசஞ்சி 1950 கென்யாவில் இந்தியப் பெற்றோருக்குப் பிறந்தவர். தங்கனிக்கா-வில் - தன்சானியாவில் வளர்ந்தவர். கனடிய எழுத்தாளர். நாவலாசிரியர், சிறுகதையா சிரியர், அபுனைவு எழுத்தாளர், ஆசிரியர். இவரின் படைப்புகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் 9 நாவல்கள், 2 சிறுகதைத் தொகுதிகள், 2 அபுனைவுகள் வெளியிட்டிருக்கிறார். பிறர் வரலாறு, இந்தியப் பயணக் குறிப்புகள் எழுதியுள்ளார். காலனித்துவ வரலாறு, குடி யேற்றம், புலப்பெயர்வு, இனத்துவவியல் போன்றவை அவற்றில் கையாளப்பட்டுள்ளன.

அமெரிக்க எம்.ஐ.ரி-யில் அணுக்கரு இயற்பியலில் சிறப்புப்பட்டம் பெற்ற இவர் பென்சில்வேனியாவிலும் கல்வி கற்றுள்ளார். கனடாவிற்கு மேல்முனைவர் பட்டப் படிப்புப் படிக்க வந்தார். 1980-1989-இல் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இணை ஆய்வாளராகச் சேர்ந்-தார். Toronto South Asian Review என்ற இலக்கிய சஞ்சிகையை இன்னொருவருடன் சேர்ந்து உருவாக்கி ஆசிரித்துவம் செய்தார். அங்கே படைப்பிலக்கியத்தி லும் ஈடுபட்டார். அவருடைய முதலாவது நாவல் The Gunny Sack. அதற்குப் பிரதேசப் பொதுநலவாய எழுத்தாளர் பரிசு 1990-இல் கிடைத்தது. The Book of Secrets என்ற நாவலுக்கு 1994-இல் கில்லர் பரிசு கிடைத்தது. 2003-இல் The In- Between World of Vikram Lall என்ற நாவலுக்கு கில்லர் பரிசு கிடைத்தது. இரண்டுமுறை கில்லர் பரிசு கிடைத்த ஒரே ஒருவர் அவரே. இறுதியில் கனடாவின் உயர்ந்த பரிசாகிய ‘Order of Canada’ கிடைத்துள்ளது.

‘வி.எஸ். நய்யரின் மிக்கேல் வீதி’ என்ற சிறுகதையால் ஊக்கம் பெற்று உகிறு ஸ்றீற் என்று சில கதைகளை எழுதினார். அதில் ஒரு சிறுகதையே இதில் வருவது.

‘இல்லை, அம்மா, இது உண்மை,’ என்று அவன் திரும்பவும் சொன்னான். ‘அவர்கள் எனக்கு உதவித் தொகையும் தருகி றார்கள்!’ என்றான்.

அப்போது நாங்கள் மூவரும் மேசையிலிருந்து சுடுதண்ணீர்ப் போத்தலிலிருந்து தேநீரை ஊற்றிக் குடித்துக் கொண்டிருந் தோம். எங்களுக்கு முன்னாலிருந்த அம்மா தன் தேநீர்க் கோப்பையைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தபின் தலையைத் தூக்கிப் பார்த்தார்.

‘அது உண்மையா?’ என்று என்னைக் கேட்டார்.

‘ஓம், உண்மை. அவனுக்குத் தேவை கைச்செலவுக்கு ஒரு நானூறு டொலர் மட்டுமே,’ என்றேன்.

‘அது எத்தனை ஷிலிங் வரும்?’

‘ஒரு மூவாயிரம் வரும்.’

‘அந்தளவு தொகையை நாங்கள் எங்கிருந்து எடுப்பது? நீ ஒரு லொத்தர் வாங்கியிருக்கிறாயா? அவன் போவதற்கு ரிக் கற்? அவர்கள் ரிக்கற்றும் அனுப்பப் போகிறார்களா?’



அவர் அவற்றைச் சொன்னபோது அலூவின் எதிர்பார்ப்புகள் குறைந்து கொண்டு போவது போலிருந்தன. அம்மா சொன்னது சரி. அலூவுக்குத் தேவையான பணம் அத்தனை எளிதாகப் பெறக் கூடியதல்ல.

‘கடன் பெற முடியாதா ? நான் அங்கே போய் வேலை செய்வேன். பரிசாரகனாக. ஆம், பரிசாரகனாகப் போய் அந்தக் காசை அனுப்புவேன்,’ என்றான்.

‘அங்கே யாராவது மாமாமார் இருப்பார்கள் உனக்கு உதவி செய்ய. இங்கே ஒருத்தரும் இல்லை,’ என்றார் அம்மா பகிடியாக.

அலூவின் தோள்கள் குன்ற அவன் தான் வைத்திருந்த கோப்பையைச் சுழற்றிக் கொண்டிருந்தான், அழுவது போல. அம்மா சோசரிலிருந்து தேநீரைக் குடித்துக் கொண்டிருந்தார், வாயை கோணியபடி. என் பின்னால் மாலை நேர ஒளி யன்னலால் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. அம்மாவின் மூக்குக் கண்ணாடியை அது பளிச்சிடச் செய்தது. இறுதியில் தன் சோசரைக் கீழே வைத்தார். அவர் கோபமாக இருந்தது. தெரிந்தது.

‘எங்களை விட்டு நீ ஏன் மிகவும் தூரப் போக விரும்புகிறாய் ? அதற்காகத் தான் நான் உங்களை வளர்த்தேனா ? என்னை விட்டு அந்நிய தேசம் போகவா ? நீ எங்களை விட்டுப் பிரிந்து கவலைப்படாமல் இருப்பாயா ? நாங்கள் அவ்வளவு தேவையற்றவர்களாகப் போனோமா ? ஏதாவது உனக்கு நடந்தால்...

அலூ அழுது கொண்டிருந்தான். ஒரு கண்ணீர்த் துளி கோப்பைக்குள் விழுந்தது. மூக்கில் நீர் ஒழுகியது. ‘எத்தனையோ இளைஞர்கள் போய்; திரும்பி வருகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை.. என்னை அனுப்ப விருப்பமில்லாவிட்டால் அப்போ ஏன் என்னை அவற்றுக்கு விண்ணப்பிக்க விட்டாய் ? என்னுடைய எதிர்பார்ப்புகளைக் கூட்டி விட்ட பின் அவற்றை ஏன் தகர்த்தெறிகிறாய் ? அவன் தன் குரலை உயர்த்திக் கதைத்தான். அதுவே அவன் அப்படிச் செய்தது முதல் தடவை. அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

அதன் பிறகு அந்தப் பிரச்சினையை அவன் எழுப்பவில்லை. அவன் விவசாயக் கல்லூரிக்குப் போக ஆயத்தமானான். கல்வித் தவணை துவங்குவதற்காகக் காத்திருந்தான். வீட்டிற்கு வந்தவுடன் சோபாவில் கிடந்து ஒரு நாளைக்கு ஒரு நாவல் என்று வாசித்து முடித்தான்.

கல்வித் திணைக்களத்திலிருந்த அந்த முகந்தெரியாத அதிகாரி தன்னிச்சையாக நடந்திராமல் இருந்திருந்தால் அலூ இப்படி மனமுடைந்து போயிருக்க மாட்டான். அம்மாவும் அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று முயன்றிருக்க மாட்டார்.

ஒரு சில நாட்களின் பின் ஒரு ஞாயிறு காலையில் அம்மா தையல் இயந்திரத்திலிருந்து தலையை உயர்த்தி எங்கள் இரண்டு பேருக்கும் சொன்னார். 'அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் திரு. வேல்ஜிக்குக் காட்டுவோம். அவர் இப்படியான விசயங்களில் அனுபவமுள்ளவர். அவருடைய அறிவுரையைக் கேட்போம்.'

திரு. வேல்ஜி எங்கள் பாடசாலையின் முன்னைய நிர்வாகி. முட்டையைப் போன்ற நீள்வட்டத் தலையும் சிறிய கச்சிதமான உடலமைப்பும் கொண்டவர். விசாலமான நெற்றி. பெரிய கறுத்த மூக்குக் கண்ணாடியில் அவரைப் பார்த்தால் தொல்கால ஞானியின் கேலிச் சித்திரம் போல இருக்கும். கூடவே அவர் நடந்து கொள்வதும் அப்படித்தான் இருக்கும். நாங்கள் மூவரும் அவருடைய வரவேற்பறைக் கதிரைகளில் உட்கார்ந்திருந்தோம், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது அவர் ஒரு பொம்மைப் படைவீரனைப் போல நடந்து எங்களை வரவேற்க வந்தார்.

'சகோதரியே எப்படி இருக்கிறாய்? உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்.

அவர் இருந்தபோது நானும் அலூவும் மரியாதையுடன் எழுந்து நின்றோம்.

'உங்களுடைய அறிவுரையைக் கேட்க வந்திருக்கிறோம்..' என்று அம்மா துவங்கினார்.

'அப்போ சொல்லுங்கள்,' என்று நட்புடன் சொல்லிவிட்டு சோபாவில் பின்னால் சாய்ந்து கைகளைத் தலைக்குப் பின்னால் கட்டிக் கொண்டார்.

அம்மா தன் வரலாற்றைச் சொல்லத் துவங்கினார். எந்தக் குடும்பத்தில் தான் பிறந்தார் என்றும், எந்தக் குடும்பத்தில் மணம் முடித்தார் என்றும், எங்கள் தந்தை இறந்த பின் அவர் எங்களை எப்படி வளர்த்தார் என்றும் சொன்னார். அப்போது நிர்வாகிக்கும் எங்களுக்கும் பொதுவான சில உறவினர்கள் இருப்பதையும் கண்டு பிடித்தார்கள். 'இங்கே இருக்கும் இவன்,' என்று என்னைக் காட்டி 'இங்கே உள்ள பல்கலைக்கழகத்தில் படிக்கிறான். அங்கே இருப்பவன் அமெரிக்காவுக்குப் போக விரும்புகிறான். அவருக்கு அந்த ஆவணங்களைக் காட்டு,' என்று அலூவுக்கு ஆணையிட்டார்.

அலூவும் சிறிது முயன்று சோபாவிலிருந்து எழுந்தான். பின் ஆவணங்களைத் திரு. வேல்ஜியின் கைகளில் கொடுத்தான். அந்த ஆவணங்களைப் பார்ப்பதற்கு முன் அவர் அலூவின் இறுதித் தேர்வின் பெறுபேறுகளைக் கேட்டார்.

அலூவின் பதிலைக் கேட்டு அவரின் கண்கள் விரிந்தன. 'ஓ, எல்லாவற்றிலும் ஏ யா?' என்றார்.
'ஓம், என்றான் அலூ, பணிவாக.

திரு. வேல்ஜி எல்லா ஆவணங்களையும் ஒவ்வொன்றாகத் தட்டிக்கொண்டு போனார். முதலில் மேலோட்டமாக. பிறகு அவற்றைக் கவனமாகப் பார்த்தார். நீண்ட வீசாப் படிவங்களையும் அவற்றிற்குப் பின்னால் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்த கார்பன் நகல்களையும் பார்த்தார். வெளிநாட்டு மாணவர் ஆலோசகரின் நட்பான கடிதத்தையும் வாசித்தார். சகோதரத்துவர்களின் வரவேற்புக் கடிதங்கள் அவரை வசீகரித்து விட்டன. இறுதியில் சற்றுத் தணிவாக எங்களைப் பார்த்தார். இவன் சொல்வது சரி. நல்ல பல்கலைக்கழகம். அவர்கள் இவனுக்கு ஊக்கத் தொகையும் கொடுக்கிறார்கள். உன்னை வாழ்த்துகிறேன்,' என்றார்.

'அப்போ நான் என்ன செய்வது?' என்றார் அம்மா. 'உங்களுடைய அறிவுரை என்ன? நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.'

'சரி. அவனுடைய கல்விக்கு இது நல்லது,' என்றார். தொண்டையைச் சரி செய்வதற்காக கையை உயர்த்தினார். பிறகு, சற்று மெதுவாக, 'அவனை அனுப்பினால் அவனை நீ இழந்து விடுவாய்,' என்றார்.

'அமெரிக்கா மிகவும் தூர இருக்கும் நாடு,' என்று சொல்லித் தன் கைகளைத் துடைத்துக் கொண்டார் வேலை முடிந்தது போல. 'இப்போ தேநீரா தோடம்பழச் சாறா குடிப்பீர்கள்,' என்று கேட்டார்.

அவருடைய மனைவி அவருடைய ஆணைகளை எடுப்பதற்காகத் திடீரெனத் தோன்றினார், மாயாஜாலம் செய்து தோன்றியது போல.

'பல பணக்கார இளைஞர்கள் ஒவ்வொரு ஆண்டும் அங்கே போகிறார்கள், அவர்கள் தொலைந்து போவதில்லை,' என்று அலூ வீட்டுக்கு நடந்து போய்க் கொண்டிருக்கும்போது தனக்குள் கசப்புடன் முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அம்மா அமைதியாக வந்தார்.

அன்றிரவு அவர் தையல் இயந்திரத்தில் தைத்துக் கொண்டிருந்தார். அலூ சோபாவில் வாசித்துக் கொண்டிருந்தான். வானொலி மெதுவாகக் குறைத்து வைக்கப்பட்டிருந்தது. திறந்திருந்த கதவால் வரவேற்பறையைக் குளிர்விக்கத் தென்றல் காற்று இதமாக வீசியது. நான் கதவடியில் நின்று கொண்டிருந்தேன். வாழை மரமும் அதன் குட்டிகளும் வெளியே சலசலத்தன. தெருவில் காரொன்று வேகமாக ஓடியது. அது அயல் வீட்டின் நிழல்களை எல்லா இடமும் விசிறி எறிந்தபடி சென்றன. நடந்து சென்றுகொண்டிருந்த ஒரு சோடி முணுமுணுத்தது. ஒழுங்கில்லாத வேலிக்கு மேலால் அவர்களின் உருவம் தெரிந்தது. சிறுவர்களும் சிறுமிகளும் இரவாவதற்கு முன்பு கலைந்து போய் விட்டிருந்தார்கள். அம்மாவின்

தையல் இயந்திரத்திலிருந்து இடைக்கிடை சத்தம் கேட்டது. நாங்கள் இருந்த இடத்திலிருந்து அடுத்த பக்கம் அவர் குந்தியிருந்தார். அந்த அறை சற்று இருட்டாக இருந்தது.

அவர் தன் தலையைத் தூக்கி உணர்ச்சியற்று, 'குறைந்தது, அந்தப் பல்கலைக்கழகம் எப்படியானது என்பதையாவது எனக்குக் காட்டு. அந்தப் புத்தகத்தைக் கொண்டு வா,' என்று அலூவுக்குச் சொன்னார்.

அம்மா அந்த ஏடுகளையோ கடிதங்களையோ அதற்கு முன் பார்த்ததேயில்லை. அதைப் பார்க்க விரும்பவில்லை. அலூ கட்டாயம் போக வேண்டும் என்று விரும்பிய அந்த இடத்தைப் பார்ப்பதற்கு அவர் எந்தவித ஆர்வத்தையும் காட்டவுமில்லை. இப்போது நாங்கள் மூவரும் ஒன்றாகக் கூடி அந்த ஏடுகளின் பளபளப்பான பக்கங்களையும் அதிலுள்ள படங்களையும் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தப் படங்களில் பழங்காலச் செவ்வியல் கட்டடங்கள், முகப்புகள், குவிமாடங்கள், மனிதர்களையும் விட உயரமான தூண்கள், மாணவர்கள் அவசர அவசரமாக நடந்து கொண்டிருப்பது, பசுந்தரைகளில் மர நிழல்களில் வகுப்புகள் நடப்பது என்று பல இருந்தன. அனைத்தும் அருமையாகவும் எங்களுக்கு அழைப்பு விடுவதாகவும் இருந்தன.

'எல்லாம் நல்லாயிருக்கிறது, இல்லையா?' என்று குசுகுசுத்தான் அலூ. தன் உற்சாகத்தை மறைக்க முடியாமல். 'அவர்கள் நூற்றுக் கணக்கான பாடங்களைக் கற்பிக்கிறார்கள். விண்கலங்களை வான்வெளிக்கும் அடுத்த கிரகங்களுக்கும் சந்திரனுக்கும் அனுப்புகிறார்கள்,' என்றான்.

'நீ சந்திரனுக்குப் போனால் எங்கள் நிலைமை என்ன, மகனே,' என்றார் அம்மா நகைச்சுவையுடன். எங்களைப் பார்த்தபோது அவருடைய கண்கள் ஒளிர்ந்தன.

அலூ தான் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வாசிக்கத் திரும்பவும் சோபாவுக்குச் சென்றான். அம்மா தையல் இயந்திரத்துக்குத் திரும்பிப் போனார்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு நான் அம்மாவைப் பார்த்தபோது அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். சோகமாகவும் இருந்தார். அவர் அடிக்கடி செய்வது போல கவனமில்லாமல் கன்னத்தை நுள்ளிக் கொண்டிருந்தார். இந்த முறை அவரை எங்கள் அம்மா என்றில்லாமல் ஒரு ஆளாகப் பார்த்தேன். அவர் தன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் எங்களை அவர் வளர்த்தெடுக்க என்னென்ன கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தார் என்பதையும் நினைத்தேன். எங்கள் அப்பா இறந்தபோது அம்மாவுக்கு வயது முப்பத்து மூன்றுதான். அவருக்குப் பல திருமணங்கள் பேசி வந்தபோதும் அவற்றை நிராகரித்துவிட்டார். காரணம், அப்படிச் செய்திருந்தால் எங்களை எல்லாம் 'விடுதிப் பள்ளி'க்குத்தான் அனுப்பியிருப்பார்கள். அதாவது அநாதைப் பள்ளிக்கு. அப்பா சாவதற்கு முன் எடுத்த நிழல் படங்களில் அம்மா குண்டாக இல்லாமல் கொழுகொழுவென அழகாக இருந்தார். அழகாக தலைமுடி உப்பி வைக்கப்பட்டிருந்தது. உயர்ந்த காலணிகள் அணிந்திருந்தார். ஒப்பனை செய்திருந்தார். ஒரு நிழற்படம் கலைக்கூடத்தில் எடுக்கப்பட்டிருந்தது. அதில் அப்பா மீசை, தலைமயிர் ஆகியவற்றில் மைபூசித் தன்னை மெருகூட்டியிருந்தார். கருப்புப் பின்னணியில் அப்படம் எடுக்கப்பட்டிருந்தது. ஒரு புத்தகத்தை நவநாகரிகமாக கையில் வைத்திருந்தார். அம்மா சாதுவான பச்சை நிற நைலோன் சேலை அணிந்திருந்தார். மடிப்புகள் நாகரீகமாக கீழே விழுந்திருந்தன. சேலை ஓரங்களில் சீக்குவின்கள் தைக்கப்பட்டிருந்தன. அம்மாவை அப்படி நான் பார்த்ததில்லை. நான் பார்த்ததெல்லாம் கண்டிப்பான முகம்தான். வயது போகப் போக முகத்தில் கோடுகள் நிரந்தரமாக விழ அவை மேலும் கண்டிப்பானதாக அவரைக் காட்டின. தலைமுடி ஐதாகியது. உடலும் மொத்தமாகியது. குரல் தடித்தது.

அவருடைய பெரிய கட்டிலில் நானும் அலூவும் சின்ன வயதில் அவருடன் மாறி மாறிப் படுத்து நித்திரை கொள்வதை நினைத்துப் பார்த்தேன். அவருடைய மொத்தத் தோள்களால் என்னை இறுக்கிப் பிடிப்பதையும் தன் நெஞ்சுடன் என்னைச் சேர்த்து அணைத்துப் பிடிப்பதையும் என்னால் மூச்சு விட முடியாதளவு சேர்த்துப் பிடிப்பதையும் நினைத்துப் பார்த்தேன். எப்போது அவர் என்னை மூச்சு விட அனுமதிப்பார் என்று நினைத்திருக்கிறேன்.

நான் அவரைப் பார்ப்பதை அவர் பார்த்தார். அப்போது அவர் அலூவைப் பார்த்து, 'நீ அங்கே போனால் ஒரு வெள்ளைக்காரிச்சியை மணம் முடிக்க மாட்டேன் என்று உறுதி மொழி அளிப்பாயா?' என்று கேட்டார்.

'அம்மா, நான் அப்படிச் செய்ய மாட்டேன்,' என்றான் அலூ.

'நீ புகை பிடிக்கவோ, மது குடிக்கவோ மாட்டேன் என்றும் எனக்கு உறுதி மொழி அளிப்பாயா?'


'நான் உறுதி மொழி அளிக்கிறேன், அம்மா!' என்றான். அவன் கண்ணீர் உகுப்பது போலக் காணப்பட்டான்.

அலூவின் முதல் கடிதம் அவன் போன அடுத்த வாரம் வந்தது லண்டனிலிருந்து. அங்கே அவன் தன் முன்னாள் வகுப்புத் தோழனைப் பார்க்கச் சென்றிருந்தான். கடிதத்தில் உற்சாகம் நிறைந்திருந்தது. 'எப்படி நான் விபரிப்பேன்? விமானத்திலிருந்து பார்க்கும் காட்சிகள்.. மைல் கணக்காக நீண்டு கிடக்கும் வயல்கள். கவனமாகச் சீராக உழப்பட்டிருந்தன... சதுரம் சதுரமாகப் பிரிக்கப்பட்ட பச்சை நிற வயல்கள். சுத்தமான மலைகள். அவையும் நாகரிகமாகவும் இருந்தன. லண்டன்.. ஓ, லண்டன்! அது எல்லையற்றதாக விரிந்து நீண்டு சென்றது. தொகுதி, தொகுதியாக வீடுகள். சதுக்கங்கள், பூங்காக்கள், நினைவுச் சின்னங்கள்.. அந்த நகரத்தை விட வேறு ஏதாவது நகரம் பெரியதாக இருக்க முடியுமா? எத்தனை தாரு -எஸ்-சலாம்களை அதற்குள் வைக்க முடியும்? இந்த அழகான நகரத்திற்குள்..

'ஒரு பறவை தன் சிறகுகளை அடித்துப் பறக்கின்றது,' என்றார் திரு. வேல்ஜி. ஞானவானைப் போல தலையாட்டிக் கொண்டு தன் நாற்காலியிலிருந்து கொண்டிருந்தார். அம்மா தொலைதூரத்தை உற்றுப் பார்த்தபடி இருந்தார்.



mahalingam.k@thaiveedu.com




# காலம் 60 ஆவது இதழ் வெளியீடு

“இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திமுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுகள்”

-மஹாகவி-

# வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி

மார்ச் 24, 2024 ஞாயிறுக்கிழமை

**Sunday March 24, 2024**

**3:00 P.M to 7:00 P.M**

**Scarborough Village CRC**

**3600 Kingston Road (@ Markham)**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

**For More Info: kalam@tamilbook.com, 416 731 1752**



BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
AATEK
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
416.629.9797
(905) 209 8080
Narasingham
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.

Amazon

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532

DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
Y&J Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner